வெளியீடு—30—6—1973]
Issued—30—6—1973]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

**சனிக்கிழமை 1973 மார்ச் 31**

**Saturday 31st March 1973**

தொகுதி XXXIX—எண் 1

**Volume XXXIX—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1973

GOVERNMENT OF TAMIL NADU
1973

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

31ST MARCH, 2ND, 3RD AND 5TH APRIL 1973.

*VOLUME* XXXIX (Nos. 1 *to* 4)

TABLE OF CONTENTS.

*Saturday, 31st March 1973.*


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. .. .. .. .. .. | vii |
| List of members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies .. .. ... | ix–xvi |
| Questions and Answers ... .. .. .. | 1–34 |
| Points of order— | |
| *a*) Signing of the attendance register by Thiru M. G. Ramachandran without attending the House | 35–40 |
| *b*) Convention followed in nomination of Chairmen to Committees .. .. .. .. .. | 39–72 |
| Privilege Matter— | |
| Statement of Thiru N. Ganapathi to the press regarding signing of attendance register by Thiru M. G. Ramachandran .. .. | 41–63 |
| Calling Attention— | |
| Court order re. eviction of traditional cultivating agriculturists in Sivanthipuram Panchayat .. .. .. .. .. .. .. | 63–67 |


A. 51—1

PAGES.

Announcements—cont.

(d) The Tamil Nadu Legal Aid and Advice Bill, 1973 (L.A. Bill No. 13 of 1973) .. .. 478

(e) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 15 of 1973) .. .. 483–489

(f) Statistics about the items of business transacted during the current session .. .. 669-671

8. Government Bills—

(a) The Tamil Nadu Legal Aid and Advice Bill, 1973 (L.A. Bill No. 13 of 1973) .. .. 480–481

(b) The Madras City Tenant's Protection (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 14 of 1973) .. .. .. .. .. 482–483

(c) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 15 of 1973) .. .. 484–502

(d) The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973 (L.A. Bill No. 3 of 1973) .. .. .. .. .. 502–594

9. Half-hour Debate—

Supply of essential commodities to the general public through fair price shops .. .. .. 594–613

10. Non-Official Business—

(i) Bill—

The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1972 (L.A. Bill No. 17 of 1972) .. .. .. 614-634

(ii) Resolutions—

(a) Age-limit for recruitment to Government service .. .. .. .. .. 635

(b) Condemnation of unconstitutional methods to bring into disrepute the Council of Ministers .. .. .. .. .. .. 639–669

11. Papers laid on the Table 671–673

## HOW TO USE THE INDEX

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s), 'Council(s), Corporation(s), etc.

Various subjects like Schools, Colleges, Conferences Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair'.

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad.Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B. O. H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. | .. | Calling Attention Statement. |
| Consid. | .. | Consideration stage of a Bill. This stage includes :— (i) Motion to refer to Select/Joint Select Committee. |

61614



PAGES

Announcements—

(a) Nomination of members to the business Advisory Committee .. .. .. 67–68

(b) Nomination of members to the Committee on Government Assurances .. .. 68–69

6. Personal explanation—

Statement by Minister for Agriculture on Treasury Officer, Madurai referrod to by Thiru K. Suppu .. .. .. .. .. 72–73

7. Presentation of reports—

Interim reports of the Commitee of Privileges on matters of privilege against certain Members who staged a walk-out just before the Governor's Address, Dr. H. V. Hande and Printer and Publisher of the daily 'Thennagam' .. .. .. .. .. 73–75

8. Government Bill—

The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1972 .. 75–132

9. Papers laid on the Table .. .. .. .. 133

*Monday, 2nd April 1973.*

1. Questions and Answers .. .. .. .. 137–176

2. Points of order—

(a) Unstarred questions .. .. .. .. 177–178

(b) Using of certian expressions against a Minister by a Member .. .. .. .. .. 210–216

3. Calling Attention—

Rise in grinding charges of mills due to power out .. .. .. .. .. .. 178–180



PAGES

4. Announcements—

(a) Election to the Committee of Privileges. 180–181.

(b) Nomination of Members to the Committee on Public Undertakings .. .. .. 181–182

(c) The Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owner's Rights) Bill, 1973 (L. A. Bill No. 11 of 1973) .. 219–279

5. Government Bills—

(a) The Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L. A. Bill No. 4 of 1973) .. .. .. .. .. 182–185

(b) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L. A. Bill No. 6 of 1973) .. 185–218

(c) The Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owner's Rights) Bill, 1973 (L. A. Bill No. 11 of 1973) .. .. .. 219–278

6. Papers laid on the Table .. .. .. .. 279–280

*Tuesday, 3rd April 1973.*

1. Questions and Answers .. .. .. .. 289–318

2. Privilege Matter—

Statement made by Minister for Harijan Welfare in the House on 19th March 1973. 319–326

3. Adjournment Motions—

(a) Clash at Kurichikotta polling station, Udumalpet taluk, resulting in shooting and consequent tense situation .. .. .. 326–330

(b) Clash in front of I. N. T. U. C. Office at Madras between workers of Addison and Company .. .. .. .. .. .. 330–334

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு.



13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், பால்வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH

***Members of the Council of Ministers.***

1. THE HON. DR. M. KARUNANIDHI, (Chief Minister)-in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations, Cinematograph Act, Newsprint control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, (Minister for Education and Local Administration)-in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, (Minister for Public Health)-in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, (Minister for Labour)-in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, (Minister for Harijan Welfare)-in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Service, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, (Minister for Revenue)-in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise.

7. THE HON. THIRU S. MADHAVAN, (Minister for Industries)-in-charge of Industries, Taxtiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, (Minister for Public works)-in-charge of Public Works, Minor irrigation including special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, (Minister for Co-operation)-in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, (Minister for Agriculture)-in-charge of Agriculture.

**11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY,** (Minister for Food)-in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, (Minister for Backward classes)-in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, (Minister for Electricity)-in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, (Minister for Transport)-in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, (Minister for Religious Endowments)-in-charge of Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan and Milk excluding Operation, Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.



## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ.,பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. பழனிவேல் ராஜன்.
திரு. என். கணபதி.
திரு. நா. வீராசாமி.
திரு. கே. ஏ. வகாப்.
திரு. ஏ. சுவாமிதாஸ்.
திரு. நா. காசிராமன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### கூட்டுச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்,

| | | |
|---|---|---|
| | (ii) | Amendment to refer to Select/Joint Select Committee. |
| | (iii) | Amendment to circulate. |
| | (iv) | Motion to consider as reported by Select/Joint Select Committee. |
| | (v) | Amendment to recommit to Select/Joint Committee, etc. |
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D. E. E. | .. | Demands for Excess Expenditure. |
| Dis. S. D. | .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D. S. G. | .. | Demands for Supplementary Grants. |
| G. A. | .. | Governor's Address. |
| G. D. | .. | General Discussion. |
| H. A. H. Dis./H. H. D. | .. | Half hour Discussion. |
| Int | .. | Introduction stage of a Bill. |
| L.A. | .. | Legislative Assembly. |
| L. C. | .. | Legislative Council. |
| M. | .. | Motion. |
| P.M. | .. | Privilege Motion. |
| R/Res. | .. | Resolution. |
| St. | .. | Statement. |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீன்வளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). .. .. | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. ஒ |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 25 இராசு, திரு. ஜெ. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.ஒ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 29 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 33 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 34 இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ) |
| 56 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | முதுகுளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 59 கார்த்திசன், திரு. வீ. | இராதாபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 60 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 78 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. | செம்பனார் கோவில். |
| 91 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 97 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 107 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம். |
| 108 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 109 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 110 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 111 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 112 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 113 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 114 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 116 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 119 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 120 ஜெயராமன், திரு. கி. | சேலம்-1. |
| 121 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 122 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 124 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 சோலையா, திரு. த. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 129 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 133 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 138 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 142 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நைனுமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. .. .. | முகையூர். |
| 160 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம். |
| 162 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. .. .. | பழனி (செ.வ.) |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 173 பன்னீர் செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ. வ.) |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. .. .. .. | செங்கம் (செ. வ.) |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. ஏ. .. .. .. | கௌச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஒ. .. .. | அவினாசி. |
| 180 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. ஏ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 183 பொன் சொக்கலிங்கம், திரு. பி. .. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. .. | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். .. | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 189 மதியழகன், திரு. கே.ஏ. .. .. | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ. வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி, திரு. பெ. .. .. .. | மேலூர் வடக்கு. |
| 193 மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமனாதபுரம் மாவட்டம்) |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. .. .. .. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம்.. |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. .. .. .. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. .. .. .. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். .. .. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 214 ரங்கனாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. .. .. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. ஏ. எம். .. .. | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு.மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 லத்தீப், திரு. எம். ஏ. .. .. .. | வாணியம்பாடி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 வகாப், திரு. கே. எ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. .. .. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் .. .. .. .. .. | கோயம்புத்தூர் (மேற்கு). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1973 மார்ச் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் இரண்டு வினாக்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தள்ளிவைக்கப் படுகின்றன.

### *Teachers' Council*

*583 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the Expert Committee which studied the service conditions of the teachers in aided schools has recommended to the Government for the formation of Teachers' Council on the lines of Medical and Bar Councils?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இது பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சில ஆண்டுகளாக டாக்டர்களுக்கு என்று மெடிகல் கவுன்சில் இருக்கிறது. இரண்டரை லட்சம் ஆசிரியர்கள் இருப்பதால் அவர்களுடைய கோட் ஆப் காண்டக்ட், தொழில் முன்னேற்றம் போன்றவற்றைக் கவனித்துக்கொள்வதற்கு டீச்சர்ஸ் கவுன்சில் இருப்பது அவசியம் இல்லையா? இது சர்க்காரின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பரிசீலனையில் இருக்கும் சட்டத்திலேயே இந்தக் கவுன்சில் அமைப்பதற்கும் வகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, டாக்டர் பால் குழுவினர் இதுபற்றிப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரை தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தருகிற சட்டம்தான் இப்பொழுது பொறுக்குக் குழுவின் ஆய்வில் இருந்து

வருகிறது. ஆகவே வழக்கறிஞர்களுக்கு பார் கவுன்சில் என்கிற அமைப்பு இருப்பதுபோன்று, டாக்டர்களுக்கு மெடிகல் கவுன்சில் இருப்பதுபோன்று ஆசிரியர்களுக்கும் அப்படியொரு கவுன்சில் வேண்டும் என்பதுதான் அந்தப் பரிந்துரை. அதுதான் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முடிவு செய்யப்பட்ட பிறகு அதற்கான தனி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஆசிரியர்களுடைய மாநாடு கோவையில் நடந்தபோது இதே கோரிக்கையை வற்புறுத்தியிருக்கிறார்கள். இதற்கு ஒரு மசோதா தேவையா அல்லது சர்க்கார் உத்தரவின் அடிப்படையிலேயே இப்படியொரு கவுன்சிலை அமைக்கலாம் அல்லவா? அப்படியானால் அரசு துரித நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்படியொரு கவுன்சில் அமைக்கலாம் என்கிற முடிவு எடுத்ததற்குப்பிறகு அதை எந்த வகையில் அமைப்பது என்பதைச் சட்டத் துறையைக் கலந்து ஆலோசித்துக்கொண்டு அதை உத்தரவின்மூலமாக நிறைவேற்றலாமா அல்லது தனி மசோதாவின்மூலமாக நிறைவேற்றலாமா என்பதை முடிவு செய்து கொள்ளலாம்.

**திரு. ஆ. பரத்தாமன் :** இப்படி அமையவிருக்கும் கவுன்சில் கல்லூரி ஆசிரியர்களைப் பற்றியும் ஆராயுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரி ஆசிரியர்களைப் பற்றி ஆராயாது துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்துத்தான் இந்தக் கவுன்சில் அமையும்.

**திரு. கே. எ. வகாப் :** இப்படி அமைப்பதாக இருக்கும் ஆசிரியர்கள் கவுன்சில் அமைக்கப்பட்டால், இப்பொழுது தனித்தனியாக ஆசிரியர்கள் சங்கங்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்களே அவற்றையெல்லாம் கலைத்து விடுவார்களா ? அல்லது, கலைத்துவிட அரசாங்கம் கோரிக்கை விடுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் தனித் தனிச் சங்கங்கள் வைத்திருப்பதன் நோக்கங்களும் குறிக்கோள்களும் வேறு வேறு. ஆசிரியர்களுடைய 'கோட் ஆப் காண்டக்ட்' எப்படி இருக்கவேண்டும் என்பதை ஆசிரியர்கள் கவுன்சில் வற்புறுத்தும். வழக்கறிஞர்களுக்கு பார் கவுன்சில் இருப்பதைப்போன்று, ஆசிரியர்களுக்கும் ஒரு கவுன்சில் இருக்கவேண்டும் என்பதுதான் இதனுடைய நோக்கம் ஆகும். ஆசிரியர் சங்கம் செய்கிற பணிகள் அத்தனையையும் இந்தக் கவுன்சில் செய்யும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை.



**திரு. நா. வெ. குருசாமி :** ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு ஐந்தாறு ஆண்டுகளாக வேலையில்லாமலிருக்கும் ஆசிரியர்களைக்கொண்டு வேலையில்லா ஆசிரியர் கழகம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதற்கென்று கழகம் ஏற்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகளைத்தான் நாம் காண வேண்டும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இம்மாதிரி ஆசிரியர் கவுன்சிலை அமைக்கும்போது ஆசிரியர்கள் சங்கங்களை கலந்து அதன் உறுப்பினர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பரிந்துரையில் இருப்பதால் முதலில் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டால் அதை எப்படி அமைப்பது என்று பிறகு யோசிக்க வேண்டிவரும். முதலில் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில்தான் இப்பொழுது பரிசீலனை நடைபெற்று வருகிறது.

## *Post of Selection Grade Teachers*

* 584 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the services rendered by the Grade II Graduate teachers of Government schools in private schools are also taken into account for purposes of promotion to selection grade posts in view of the fact that such posts have been sanctioned for private schools also ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** தனியார் பள்ளிகளில் பல ஆண்டுகள் வேலை பார்த்துவிட்டு பிறகு அவர்கள் அரசாங்கத் துறையில் புகுந்து விடுவார்கள். தனியார் பள்ளிகளில் வேலைபார்க்கும் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைப் பதவிகளை நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வாறே அரசுப்பள்ளிப் ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலைப் பதவி உயர்வு அளிக்கும்போது முன்பு தனியார் பள்ளிகளில் பணிபுரிந்த காலத்தையும் ஏற்றுக்கொண்டு வழிவகை செய்ய முற்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்படி அரசுப்பணியில் சேர்வதற்கு முன்னால் தனியார் பள்ளிகளில் பணி புரிந்த காலத்தையும் பதவி உயர்வுக்காகக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கில்லை.

ஏனென்றால், அரசுத் துறையில் பணியாற்றுகிறவர்கள் ஏற்கெனவே பெற்றிருக்கும் பணிமூப்புரிமை பாதிக்கப்படும். அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாக, தனியார் துறையிலிருந்து வருகிறவர்களுக்கு அந்தப் பணிக் காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வோமானால் ஏற்கெனவே அரசுப் பணியில் இருக்கிறவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவேதான் அந்தக் காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தனியார் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கெல்லாம் தேர்வுநிலைப் பதவி, முதல் கிரேடு, இரண்டாம் கிரேடு பதவிகளையெல்லாம் ஒழுங்குமுறைப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளில் வேலைசெய்கின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும் அதே அடிப்படையில் நாம் பதவி உயர்வு கொடுக்கவில்லை. அவர்களுக்கும் பதவி உயர்வு கொடுப்பதற்கு அரசு முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது தனியாகப் பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்று.

THIRU N. DENNIS: Regarding the ten year period required for selection grade, may I know whether the period is calculated from the date of appointment or from the date of regularisation or confirmation ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவர்களை ரெகுலரைசேஷன் செய்வதென்பது, சர்வீஸ் கமிஷன் எந்தத் தேதியிலிருந்து வரன்முறைப்படுத்தியதோ அதுதான் கணக்கில் எடுக்கப்படும். பதவியில் சேர்ந்த காலத்திலிருந்து என்று வைத்துவிட்டால் ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் பல பேர்கள் பாதிக்கப்படுவார்கள். காலத்தின் வரையறையைக் கணக்கெடுக்கும்போது வரன்முறை செய்யப்பட்ட காலத்தைத்தான் நாம் கணக்கில் எடுக்க முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த செலக்ஷன் கிரேடு, முதல் கிரேடு நிலை அளிப்பதில் என்ன என்ன விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன? என்ன ரேஷியோ மெயின்ட்டெயின் செய்யப்படுகிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பத்தாண்டுக் காலம் பணி புரிந்தவர்கள் அந்தப் பணிக் காலத்தின் அடிப்படையில் அவர்கள் தேர்வு நிலை பெறுவார்கள் என்று ஒரு துணைக் கேள்விக்கு விடை அளித்தேன். அது மாவட்ட அளவில்



மாநில அளவிலா என்பதைப்பற்றி நாம் யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றத் துறைகளில் மாவட்ட அளவில் இருக்கும்போது இதுவும் மாவட்ட அளவில் இருக்கவேண்டுமா என்பதும் யோசிக்கப்பட வேண்டும். 15, 16 ஆண்டுகள் பணியாற்றியும் தேர்வுநிலை பெறாதிருந்த நிலை இருந்தது. அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்காகத்தான் பத்து ஆண்டுகள் என்று போடப்பட்டிருக்கிறது. மற்றத் துறைகளிலெல்லாம் 10 சத விதம், 15 சத விதம் என்று வைத்திருக்கிறோம். ஆகவே, அந்த முறைகளை ஆராய்ந்து, மாவட்ட அளவில்தான் நாம் இப்பொழுது கணக்கெடுக்கிற அளவிலே இருக்கிறோம்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, பத்தாண்டுக்காலம் பணியாற்றிய பட்டதாரி ஆசிரியர்களுக்கு அண்மையில் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்பட்டுள்ளது. அதுபோல, தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றுகிற ஹையர் கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஆகியோருக்கும் பத்தாண்டுக் காலத்தில் செலக்ஷன் கிரேடு கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்துத்தான் இப்படிப்பட்ட முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றப் பிரிவினர்களுக்குத் தனியாகத்தான் யோசிக்கவேண்டும்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு அரசினர் உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற காரணத்தால் செலக்ஷன் கிரேட் மறுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பிட்டவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்ற காரணத்தை வைத்து ஈக்குவல் ஆப்பர்சூனிடிஸ் டு ஆல் என்பதை ஒப்புக்கொண்டிருக்கின்ற நாம் தனியார் துறையிலேயும் பணியாற்றுகின்றவர்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகளை அளிக்க மறுப்பது நியாயந்தானா? அவர்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசு உயர்நிலைப்பள்ளிகளிலே சேரவேண்டுமென்ற விருப்பத்தின் அடிப்படையிலே வந்தால் அவர்கள் இப்படிப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் பணியாற்ற வேண்டியிருக்கிறது. அல்லது அவர்கள் தொடர்ந்து தனியார் பள்ளிகளிலேயே பணியாற்ற வேண்டும். அங்கேயுள்ள சலுகைகளையும் பெற்றுக்கொண்டு இங்கே அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு வந்து இங்கேயும் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லும்பொழுதுதான் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் இப்படிப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் தனியார் துறையி

லிருந்து இங்கு வரவேண்டும். ஏற்கெனவே உள்ளவர்களின் நலன்களுக்குப் பாதகம் ஏற்படாத அளவுக்குத்தான் இப்படிப்பட்ட முறை வகுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, 10 ஆண்டு சர்வீஸ் முடிந்தவுடனேயே அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு தானாகவே செலக்ஷன் கிரேடு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட விதிமுறைகள் இப்பொழுது கையாளப்படுகின்றன. பத்து ஆண்டுகள் என்று வைக்கப்பட்டிருப்பதால் தேர்வுநிலை, செலக்ஷன் என்ற சொல் பொருந்திவராது. அவர்களுடைய சம்பள விகிதத்திலே மாறுதல் ஏற்படும் என்றுதான் பொருள்படும். செலக்ஷன் கிரேடு என்று வராது. 10 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்களுடைய சம்பள விகிதத்திலே அப்பொழுது மாறுதல் ஏற்படும் என்றுதான் பொருள்படும்.

MR. DEPUTY SPEAKER: The supplementary goes beyond the scope of the main question.

திரு. ஆ. பாத்தாமன்: தமிழ்நாட்டிலே ஆரம்பப் பள்ளிகளிலே பட்டதாரி ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமித்து இருக்கிறோம். அவர்களுக்கும் 10 ஆண்டுக்காலம் சர்வீஸ் இருந்தால் அவர்களுக்கும் இத்தகைய சலுகை, வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனியாகக் கேட்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்கள் போராட்டக் குழுவினர் செலக்ஷன் கிரேட் பணி முறைகளிலே ஏதாவது விதிமுறைகள் பற்றிச் சொல்லியிருக்கிறார்களா? காமன் சீனியாரிட்டி என்று வைத்தால் ஆங்காங்குள்ள சில ஆசிரியர்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அந்த அந்த மாவட்டத்திற்கென்று தனியாக சீனியாரிடி லிஸ்ட் வைத்து அதன்படி செலக்ஷன் கிரேட் பதவி அளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது மாவட்ட அளவிலேதான் சீனியாரிடித் தன்மைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கெஜட்டட் பதவி பெற்றதற்குப் பிறகுதான் மாநில அளவுக்குக் கொண்டு வருகிறோம். அவர்கள் அதுபற்றிய விதிமுறைகளைப்பற்றி வற்புறுத்தவில்லை. 10 ஆண்டுக் காலம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த விதிமுறைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்படி கல்வித் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.



திரு. எம். சுரேந்திரன்: பட்டதாரி ஆசிரியர்கள் 10 வருஷத்திற்குமேல் பணியாற்றினால் அவர்களுக்கு செலக்ஷன் கிரேட் கொடுப்பதைப்போல் ஆசிரியர்கள் என்றால் எல்லா ஆசிரியர்களையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு ஆசிரியர்கள் என்ற ஒரே தலைப்பிலே வருகிற எல்லோருக்குமே ஒரேமாதிரியான நியாயத்தை நிறைவேற்றக்கூடிய முறையிலே செலக்ஷன் கிரேட் சலுகையாக இருந்தாலும், வேறு எந்தச் சலுகைகளாக இருந்தாலும் ஒரேமாதிரியான நியாயம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பகுதிக்குப் பகுதி, கல்லூரி ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் என்பதிலே வேறுபாடுகள் இருந்து வருகின்றன. ஏனென்றால் அரசாங்கப் பள்ளிகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு 33 சதவிகிதம் செலக்ஷன் கிரேட் என்று இருந்தது. பட்டதாரி ஆசிரியர்களாக இருந்தால் அவர்களுக்கு 15 சதவிகிதம் செலக்ஷன் கிரேட் என்று இருந்தது. துவக்கப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தால் 10 சதவிகிதம் என்று இருந்தது. இவற்றையெல்லாம் பரிசீலிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் எல்லோரையும் ஒரே துறையிலே வைக்கமுடியாது. அந்தந்தத் துறைகளிலே என்ன என்ன தன்மைகள் இருக்கின்றன என்பதைக் கணக்கிட்டுத்தான் அந்தந்தத் துறைக்கு நாம் முடிவு எடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

### ஆசிரியர்களின் குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை

* 585 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—பாரா—

(அ) ஆசிரியர்களின் குழந்தைகட்கு ஸ்காலர்ஷிப் வழங்க வருமானத் தொகை விகிதத்தை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை ஆசிரியர் கூட்டணியிலிருந்து அரசுக்கு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இவ்வகைக் கோரிக்கை ஏதும் அரசிற்கு வரவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, பெரும் தொழில் செய்கிறவர்களும், பெரும் வசதி பெற்றிருக்கின்றவர்களும் இந்த ஸ்காலர்ஷிப் பெறுவதற்காகத் தங்களுடைய வருமானத்தைக் குறைத்துச் சொல்கிறார்கள். ஆசிரியர்கள் வாங்குகின்ற சம்பளம் குறைந்தபட்சச் சம்பளம் என்பதைக் கணக்கில்

கொண்டு அவர்களுடைய பிள்ளைகளுக்கு எல்லாம் இந்த ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு விதிமுறைகளை மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ள ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு அவர்களின் குழந்தைகள் தேவையான மதிப்பெண்களைப் பெற்றிருந்தால் இப்படிப்பட்ட உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்களாக ஆகிறார்கள் என்று இருக்கிறது. மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் வாங்கக்கூடிய ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு மதிப்பெண்கள் இருந்தால் இப்படிப்பட்ட சலுகைகள் தரப்படுகின்றன.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, சைனிக் பள்ளிகளிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு, மாதம் 400 ரூபாய்க்குக் குறைவாக அவர்களுடைய பெற்றோர்களுக்கு வருமானம் இருந்தால்தான் கிடைக்கிறது. மாதம் ரூ. 600-க்கு கீழே வாங்குகின்ற ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கும் தமிழக அரசு ஸ்காலர்ஷிப் வழங்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த சைனிக் ஸ்கூலைப் பொறுத்தவரையிலும் அகில இந்திய அடிப்படையிலே தேர்வு எழுதுகிறார்கள், தேர்வு எழுதி அதிலே தகுதி, திறமை காட்டியவர்களை ஒரு பட்டியலாக எடுக்கிறார்கள். அந்தப் பட்டியலை வைத்துக்கொண்டுதான் அவர்கள் நான்கு வகையான விதத்தில் வருமானத்தை வைத்து அவர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிற ஸ்காலர்ஷிப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 6,000 ரூபாய்க்குக் குறைவாக வருகிறவர்களின் பிள்ளைகள் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் லோன் ஸ்காலர்ஷிப்பைப்பற்றிச் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இப்பொழுது ஹையர் கிரேட் ஆகப் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு எல்லாம் ரூபாய் 2 ஆயிரத்திற்குமேல் வருமானம் வருகிறது என்று சொல்லி ஸ்காலர்ஷிப் மறுக்கப்படுகிறது. இதனால் அவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் கல்லூரிகளிலே படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. லோன் ஸ்காலர்ஷிப் என்று சொல்லப்படுவது மத்திய சர்க்காரிலிருந்து ஓரளவிற்கு ஒரு சிலருக்குத்தான் கிடைக்கிறது. எனவே 2,000 ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று இப்பொழுது வைத்திருப்பதை உயர்த்தி இப்படிச் சாதாரணமாகச் சம்பளம் வாங்கக்கூடியவர்களின் பிள்ளைகளுக்கும் சலுகைகள் கிடைக்கக்கூடிய முறையிலே விதிமுறைகளைத் தளர்த்த அரசாங்கம் முன்வருமா ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எல்லா ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கும் ஸ்காலர்ஷிப் தருவது என்று வைத்துக்கொண்டால் நிதிநிலை இடம் தராது. 6,000 ரூபாய் வருமானத்திற்குக் குறைவாகப் பெறுகின்றவர்களின் குழந்தைகளுக்கு போதுமான மதிப்பெண்கள் பெற்றிருந்தால் தரலாம் என்ற அடிப்படையிலேதான் இப்பொழுது வழங்கப்படுகின்றது. அவர்களுடைய வருமானத்தை வைத்துத்தான் கணக்கிடவேண்டும். ஏற்கனவே உயர்த்தியிருக்கிறோம். அதற்கு மேலும் போகுமானால் பல்வேறு துறையினரும் இதிலே வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். இதிலே வராத துறையினரே இல்லை என்ற நிலைமை வரும், ஆகவேதான் குறிப்பிட்ட அளவை நாம் நிர்ணயித்து இருக்கிறோம்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள், மலைஜாதி மக்கள் இவர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் ஆண்டு வருமானத்தை ரூபாய் 5 ஆயிரம் வரை என்றாவது உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கட்டாயமாக ஸ்காலர்ஷிப் வழங்கப்படுகிற முறையிலே வழங்கி அந்தக் குழந்தைகள் படித்துத் தேறி அவர்களுக்கு வேலை கிடைத்து வேலையில் அமர்ந்த பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிப் பெற்றுக்கொள்கின்ற முறையிலே அப்படிப்பட்ட வசதியை எல்லோருக்கும் வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதிலே பெரு நிதிச் செலவு ஏற்படும். இப்பொழுதே கடன் வசதிகள் இருக்கின்றன. பல்வேறு துறைகளிலே அப்படிப்பட்ட வசதிகள் உள்ளன. புகுமுக வகுப்பிலே இலவசக் கல்வி அளிக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்டோர் ஆகியவர்களுடைய குழந்தைகளுக்குப் பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதைத்தவிர இந்திய அரசினுடைய மெரிட் ஸ்காலர்ஷிப் இருக்கிறது. இத்தனையையும் பயன்படுத்துகின்ற முறையில் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் ஆகவேண்டும். ஸ்காலர்ஷிப் என்றால் எல்லோருக்கும் கொடுத்துவிடுவது என்று வைத்துக்கொண்டால் அதற்கான நிதி வசதிகள் போதுமானதாக இருக்காது.

**திரு. நா. வீராசாமி :** பெரும்பாலான ஆசிரியர்கள் தங்களுடைய குழந்தைகளைத் தாங்கள் பணியாற்றுகின்ற பள்ளிகளில் படிக்க வைப்பதில்லை. கான்வெண்டுகளில் அல்லது தனியார் பள்ளிகளில் சேர்த்துப் படிக்கவைக்கிறார்கள் . . . . . .

[1973 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உங்கள் பிள்ளைகளை எங்கே படிக்கவைக்கிறீர்கள்? ஆசிரியர்களைக் குறை சொல்லுகிறீர்களே?

**திரு. நா. வீராசாமி :** ஆகவே, அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க முடியவில்லை. அதனால் இப்படிப்பட்ட ஸ்காலர்ஷிப்புகள் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இன்ன இடத்தில்தான் படிக்கவைக்கவேண்டுமென்று வற்புறுத்த முடியாது. பல பேருக்கு அமெரிக்காவுக்குக்கூட அனுப்பிப் படிக்கவைக்க வேண்டுமென்று ஆசை இருக்கும். இங்கிலாந்துக்கு அனுப்பிப் படிக்கவைக்க வேண்டுமென்ற ஆசை இருக்கும். அந்த வசதிகளை எல்லாம் செய்துகொடுக்க வேண்டுமென்றால் அது இயலாத ஒன்று.

**திரு. ப. முத்துசாமி :** ஆசிரியர்களில் பல பேர் ஆசிரியர் தொழில்தவிர வேறு எந்தவிதமான சொத்தோ, வருமானமோ இல்லாத நிலைமையில் இருக்கிறார்களே அவர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகை கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பல்வேறு வகைகளில் உதவிச் சம்பளம் பெற வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. மெரிட் ஸ்காலர்ஷிப்பும் இருக்கிறது. பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கும்படியான உதவிச் சம்பளங்களும் இருக்கின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதையும் மீறி வருகிறவர்களுக்கெல்லாம் தரவேண்டுமென்றால், இவ்வளவு பிரிவும் தேவையில்லை, ஒரே வரியில் எல்லோருக்கும் கொடுத்துவிடலாம் என்று சொல்லிவிடலாம்.

**திரு. கே. கந்தசாமி :** ஆசிரியர்களுக்கு 6,000 ரூபாய் வரை வருட வருமானம் உள்ளவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் அளிப்பதாகச் சொன்னார்கள். கடைநிலை ஊழியர்களில் ரூ. 2,000-க்குமேல் வருட வருமானம் பெறுபவர்கள் இருக்கிறார்கள். ரூ. 2,000-க்குமேல் போய்விட்டால் அவர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகைகள் கிடைப்பதில்லை. ஆந்திர மாநிலத்தில் 5,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குச் சலுகை அளிக்கிறார்கள். ஆகவே, அதேபோன்று, ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபோன்று இவர்களுக்கும் 2,000 ரூபாய்க்குமேல் போனாலும் இந்தச் சலுகைகளை வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்களைக் கூறலாம்.



1973 மார்ச் 31]

**திரு. சோ. அழகர்சாமி :** ரூபாய் 2,000-க்கு உள்ளாக வருமானம் இருக்கக் கூடியவர்களுக்கு உதவிச் சலுகைகளும், 6,000 ரூபாய்வரை உள்ள வருமானம் இருக்கக்கூடியவர்களுக்கு வேறு விதச் சலுகைகள் இருப்பதாகவும் சொன்னார்கள். அந்தச் சலுகைகள் ஒரு சிலருக்குத்தான் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. மெரிட் ஸ்காலர்ஷிப் பெறவேண்டுமென்றால் 75 சதவீதம் மார்க் பெற வேண்டியிருக்கிறது. அப்போதுதான் மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் கிடைக்கிறது. ஆகவே நம்முடைய அரசிலிருந்து 50 சதவிகிதம் எடுத்தவர்களுக்கெல்லாம் கடனாவது கொடுக்க அரசு முன்வருமா? இவர்கள் எல்லாம் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்து எடுக்க முடியாத நிலையில் இப்படிப்பட்டவர்களுக்குக் கடன் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போதே கடன் வழங்குகின்ற முறை இருந்துகொண்டிருக்கிறது. எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்றால் பெருந்தொகை ஒதுக்க வேண்டும். அதுபற்றித் தனியாகத்தான் பரிசீலிக்க வேண்டும்.

**திரு. கோ. செபமாலை :** ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப் மேலும் உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேட்கிற கேள்வி மொட்டையாக இருக்கிறது. திருப்பிக் கேளுங்கள்.

**திரு. கோ. செபமாலை :** இந்த ஸ்காலர்ஷிப்பை மேலும் உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒதுக்கப்படுகின்ற தொகையின் அடிப்படையில்தான் எண்ணிக்கை வரையறுக்கப்படுகிறது. குறிப்பிட்ட அளவுக்குத்தான் ஸ்காலர்ஷிப் தரமுடியும். மதிப்பெண்கள் வரிசைப்படிதான் அளிக்க இயலும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கேள்வி ஸ்காலர்ஷிப்பற்றியது, அமைச்சர் அவர்கள் லோன் ஸ்காலர்ஷிப்பற்றியே பதில்சொல்லிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே பல நேரங்களில் நம்முடைய அவையில் துணைக் கேள்விகள் கேட்கும்போது 50 சதவிகிதத்திற்குமேல் மூலக் கேள்விக்கு அப்பாற்பட்டதாகத்தான் இருக்கிறது. வேறாகத்தான் இருக்கிறது. இதுபற்றி நான் அடிக்கடி நினைவுபடுத்துகிறேன். அமைச்சர்கள் பதில்சொல்லுகிறார்கள். அமைச்சர்கள் பதில்சொல்லாவிட்டால்

பிரிவிலேஜ்ஆகக்கூடக் கொடுக்கலாம். அமைச்சரிடம் பதில் இருக்கிறது, கூறுகிறார். எதைக் கேட்டாலும் அமைச்சர்கள் விரும்பினால் பதில் கூறலாம். அணு குண்டு தயாரிப்பது எப்படி என்றுகூடப் பதில் சொல்லக் கூடிய திறமை அமைச்சருக்கு இருக்கலாம். அதைப்பற்றியெல்லாம் கேட்க வேண்டிய நேரம் இடத்தைப்பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** லோன் ஸ்காலர்ஷிப்புக்குத்தான் 6,000 ரூபாய் வரை லிமிட் இருக்கிறது. அதைப்பற்றியே சொல்லிக்கொண்டிருப்பதால்தான் இவ்வளவு குழப்பம் வருகிறது. கேட்ட கேள்விக்கு, ஸ்காலர்ஷிப்பற்றிப் பதில் சொல்லாமல் லோன் ஸ்காலர்ஷிப்பற்றியே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைக் கேள்விகளைத் தொடர்ந்து லோன் ஸ்காலர்ஷிப் ஆறாயிரம் ரூபாய் வருட வருமானம் வரக் கூடிய பெற்றோர்களின் குழந்தைகளுக்குத் தரப்படுகிறது என்ற விவரங்களைக் கூறினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சொன்னது it applies to loan scholarship. ஆசிரியர்களின் குழந்தைகட்கு ஸ்காலர்ஷிப் வழங்க வருமானத் தொகை விகிதம் உயர்த்தப்படுமா என்று கேட்டதற்கு 'இல்லை' என்று பதில்சொல்லிவிட்டுப் பிறகு லோன் ஸ்காலர்ஷிப் பற்றிச் சொல்லி விட்டீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆசிரியர் கூட்டணியிலிருந்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை இதுபற்றி வந்துள்ளதா என்று கேட்டதற்கு மூலக் கேள்விக்கு 'கோரிக்கை வரவில்லை' என்று கூறினேன். துணைக் கேள்விக்கு வருகிறபோது இந்தப் பதிலை அளித்தேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, some of our students are studying outside the State, that is, at Bangalore and Hyderabad. May I know from the Hon. Minister whether such people will get scholarship from our State Government?

MR. DEPUTY SPEAKER: The hon. Member may kindly put a separate question. This does not relate to the main question.

**திரு. கே. ஏ. வகாப்:** நம்முடைய நாட்டில் ஆசிரியர்கள் பிள்ளைகள் அவ்வளவு புத்திசாலிகளாக இருப்பதில்லை என்று சொல்லும் பழமொழி இருக்கிறது. . . .





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எவ்வளவோ பழமொழிகள் இருக்கின்றன. உங்களுக்குத் தெரிந்த பழமொழிகளை எல்லாம் பேரவையிலே சொல்லி விடக் கூடாது. அது பிறகு பெரிய பிரச்சினையாகிவிடும் வெளியிலே. ஆசிரியர்கள் பிள்ளைகள் புத்திசாலிகள் இல்லையென்று சொல்லுவதுபோல் எம். எல். ஏக்கள் பிள்ளைகளைப்பற்றிச் சொன்னால் எப்படி இருக்கும்?

**திரு. கே. ஏ. வகாப்:** அதற்கென்று பழமொழிகள் இருந்தால் சொல்லட்டும். பரிதாபத்திற்குரிய அந்த ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு அந்த ஆசிரியர்களுடைய வருமானம் 2,000-க்கு அதிகமாக இருப்பதால் ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஆகவே, அவர்களுக்கு லோன் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பு அளவுக்கு சாதாரண ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்தத் தொகையை உயர்த்துவதற்குத்தனியாகத்தான் பரிசீலிக்க வேண்டும். நிதிநிலையைப் பொறுத்துத் தான் முடிவுகட்ட வேண்டிவரும்.

*Reading Room and Bus stand run by Tiruchirappalli Municipality.*

*586 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Tiruchirappalli Municipal Council sought the permission of the Government to name its library and bus stop in memory of Mr. Francis and Lourdusamy respectively and:

(b) if so, the action taken, thereon?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி நகரத்தில் 26-வது தொகுதியில் நகராட்சியால் கட்டப்பட்டிருக்கும் படிப்பகத்திற்கு "திரு. பிரான்சிஸ் நினைவுப் படிப்பகம்" என்று பெயரிட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பேருந்து நிலையத்திற்கு முன்னாள் சேர்மன் ஏ. எஸ். ஜி. லூர்துசாமி பிள்ளை பேருந்து நிலையம் எனப் பெயர் வைக்கக் கோரி வந்துள்ள நகர மன்றத் தீர்மானம் பரிசீலனையில் உள்ளது.

THIRU N. DENNIS: May I know whether the Government would come forward to permit the local bodies to fix the names according to their choice?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போது இருக்கிற விதி முறையின்படி நகராட்சிகள் பெயர் மாற்றத்தைப்பற்றித் தீர்மானம்போட முடியுமேதவிர அவர்களாகவே மாற்றிக்கொள்ள முடியாது. அது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கிறது. என்றாலும்கூட நகராட்சி மன்றத்தில் ஏகமனதாகவோ மற்ற வகைகளிலோ தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் அதைக் கண்டறிந்து நியாயத்தின் அடிப்படையில் அரசு முடிவுசெய்து அறிவித்து வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இதுசம்பந்தமாக ஐ.எல்.பி. அவர்கள் பரிந்துரைகள், ரிமார்க்ஸ் அனுப்பி இருக்கிறார்களா? விவரங்களை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்படிப்பட்ட தீர்மானங்கள் வருகிறபோது கூடுமானவரை ஏகோபித்ததாக இருக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. யாரேனும் ஆட்சேபனை தெரிவித்தால் அதுபற்றிய விளக்கங்களைக் கேட்டு அது வந்த பிறகு அரசு தக்க முடிவு எடுக்கும்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** இம்மாதிரித் தனி நபர்கள் பெயர்களை வைப்பதில்
மு.ப. 9-30 விவகாரங்கள் எல்லாம் ஏற்பட்டு பேருந்து நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள் எல்லாம் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே இதையெல்லாம் உத்தேசித்துத் தனி நபர்கள் பெயர்களை எதற்கும் வைக்கக்கூடாது என்று அரசு சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அறிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படி ஒரு ஆணை பிறப்பிப்பதற்கு இல்லை. ஏனெனில் பல்வேறு வகைகளில் அது மேற்கொள்ளப்படுகிறது. தேசியத் தலைவர்கள் என்ற முறையில் பல்வேறு பெயர்கள் வைக்கப்படுகின்றன. கூடுமானவரை அந்தந்த நகராட்சித் தலைவர்களாக இருக்கின்றவர்களின் பெயர்களை அங்கு வைக்கக்கூடாது என்றும் கூடுமான வரையில், இருப்பவர்களுடைய பெயர்களை வைக்கக்கூடாது என்றும் ஒரு முறை இருந்து வருகிறது. அதுவும் ஒரு மரபேதவிர சட்டதிட்டத்தின் அடிப்படையில் அல்ல. அதைக் கடைபிடிக்கவேண்டும் என்ற தன்மையைத்தான் வலியுறுத்தி வருகிறோம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** பதவியில் இருந்த நகராட்சித் தலைவர்கள் அல்லது உறுப்பினர்கள் பெயர்களை வைக்கிறார்கள். அவைகளை நீக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைச் சட்டதிட்டத்தின்கீழ் நீக்க வழியில்லை. வேண்டுமானால் கேட்டுக் கொள்ளலாமே தவிர சட்டத்தின் அடிப்படையில் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.





**திரு. எம். சுரேந்திரன்:** வாசகசாலைகள், பேருந்துநிலையங்கள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் போன்றவைகளுக்கு எல்லாம் குறைந்தபட்சம் உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை வைக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அது ஒரு கொள்கைப் பிரச்னை. ஏகோபித்து முடிவு எடுக்கவேண்டிய ஒன்று. இப்போதுள்ள நிலைமையில் சட்டதிட்டத்தின் அடிப்படையில் வற்புறுத்த இயலாது. அப்படி ஒரு முறையைக் கையாள்வது நன்றாக இருக்கும் என்று வேண்டுமானால் சொல்லி வரலாம்.

### தொழிலாளர் நலன்பற்றிய கல்வி நிலையம்

* 587 வினா—திரு. கே. ஏ. வகாப்:
திரு. என். டென்னிஸ்: } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நலன் பற்றிய கல்வி நிலையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்விடத்தில்?

(உ) அதன் நோக்கம் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நலன்பற்றிய கல்வி நிலையம் சென்னையில் 29—3—1973-ம் நாளன்று துவக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப்:** தொழிலாளர் நலன்பற்றிய கல்வி நிலையம் அமைப்பது வரவேற்கத்தக்கது. "தொழிலாளர் துறை அதிகாரிகளுக்கு முறையாகப் பயிற்சி அளிப்பது, தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைமையை ஏற்று நடத்த தங்களுக்குள்ளாகவே ஒருவரைத் தயாரிப்பதற்கு தொழிலாளர் குறித்த சட்டங்கள்பற்றியும், தொழிலுறவு குறித்தும் தொழிலாளர்களுக்கு வகுப்பு நடத்திப் பயிற்றுவிப்பது" என்று கூறியிருக்கிறார்கள். இது எல்லா விதமான தொழில்களுக்கும் சம்பந்தப்பட்டதா? அல்லது குறிப்பிட்ட தொழில்களுக்குத்தானா? நெசவுத் தொழில், பீடித் தொழில் போன்ற பல தொழில்கள் உள்ளன. அப்படிப்பட்ட தொழில்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் இதில் வாய்ப்பளிக்கப்படுமா?

---

* (134-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது)

[1973 மார்ச்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்களும் அந்தமாதிரி அறிக்கை கொடுத்தால் எப்படி? கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே. ஏ. வகாப் :** வெளி நாடுகளில் இருந்து யோசனைகளைப் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்படுகிற நேரத்தில் அமெரிக்கா போன்ற தொழிலாளர் நலன்களைக் காக்கும் இடங்களிலிருந்தும், ரஷ்யா போன்ற வேலைநிறுத்தம் இல்லாத இடங்களிலிருந்தும் யோசனைகள் பெறப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இந்த நிறுவனத்தின் பணிகள் எந்தளவிற்கு விரிவடைகின்றனவோ அதற்கேற்றபடி சந்தர்ப்பம் ஏற்படும் பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசிலனை செய்யப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தப் பயிற்சி எந்த அளவிற்கு என்ற விவரத்தையும், எவ்வளவு மாணவர்கள் அல்லது அதிகாரிகள் பயில்கிறார்கள் என்ற விவரத்தையும் அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இப்போதுதான் துவக்கப்பட்டிருக்கிறது. அதன் நடைமுறைகள் பற்றி விரிவாக இப்போதே விவரம் அளிப்பது இயலாதது ஆகும். எனினும் இந்த நிறுவனத்தின் கடமைகள் விரிவடையும் போது அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்தப் பள்ளியில் எவ்வளவு மாணவர்கள் பயில்கிறார்கள் ? இந்த மாணவர்கள் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? இவர்களுக்கு ஏதாவது அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** 29-ம் தேதிதான் துவக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு பேர்கள் சேருவார்கள், எவ்வளவு பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்பது நடைமுறையில் வரும்போது தெரிவிக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தக் கூடிய இந்தப் பயிற்சிக்கூடத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள், நிர்வாகத்தை நடத்தக் கூடிய ஆபீசர்கள், நிர்வாகிகளின் பிரதிநிதிகள் இப்படி மூன்று தரப்பினரையும் சேர்த்து பயிற்சி கொடுத்தால் சிக்கல்கள் எங்கெங்கிருந்து எப்படி எப்படி வருகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வாய்ப்பாகயிருக்கும். எனவே தொழிலாளர்கள் மட்டும் என்றில்லாமல் மேற்சொன்ன மூன்று இனத்தவரையும் சேர்த்து பயிற்சி அளிக்க இந்த அரசாங்கம் முன்வருமா ?



1973 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** உறுப்பினர் அவர்களுடைய யோசனையும் நினைவில் கொள்ளப்படும்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** தொழிலாளர்களுக்கான கல்விக் கூடங்கள் மாவட்டந்தோறும் துவக்கப்படுமா ? அந்தத் தொழிலாளர்களுக்கான கல்விக் கூடங்களில் எல்லாத் தொழிற்சாலைகளிலிருந்தும் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுக்குச் சரியாகப் போதிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தற்போது சென்னையில் மட்டும்தான் இந்த கல்விக் கூடம் தொடங்கப்படுகிறது. இது விரிவடையும் நிலை வரும்போது உறுப்பினர் அவர்களின் யோசனையை நினைவில்கொண்டு ஆவன செய்ய முயற்சிக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** அரசு நல்லெண்ணத்தோடு துவக்கியிருக்கிற இந்தக் கல்வி நிலையத்தில், தொழில் அதிபர்கள் தொழிலாளர்களை அனுப்புவதற்குத் தயங்குகிறார்கள். ஆகவே எல்லாத் தொழில் அதிபர்களும் இந்த வகுப்புகளுக்கு வரும் தொழிலாளர்களுக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறை தருவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏற்கனவே உள்ள கல்வி நிலையத்திற்கு பயிற்சிக்கு வரும்போது தொழில் அதிபர்கள் சில சலுகைகளைச் செய்திருக்கிறார்கள். அது தொடர்ந்து செய்யப்படும் என்று நம்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தொழிலாளர் கல்விக்கான பாடதிட்டம் எப்படி வகுக்கப்பட்டிருக்கிறது? அது தொழிற்சங்கத் தலைவர்களோடு கலந்து வகுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது அதிகாரிகள் மட்டும் அதை வகுத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** துவங்கி இரண்டு நாட்கள்தான் ஆகின்றன. இதற்குள்ளாக நிறைய விவரங்கள் கேட்கிறார்கள். அது நடைமுறைக்கு வந்த பின்னர்தான், எப்படி இன்னும் விரிவடையச் செய்வது என்று யோசிக்கப்படும்.

**திரு. கா. காளிமுத்து :** வெளி மாநிலங்களிலிருந்து தொழிலாளர்களுடைய புள்ளிவிவரங்களைத் தாங்கி வரக்கூடிய மாத இதழ்கள் மிகுந்த காலதாமதமாக வருவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அவ்விதமான ஒரு குறிப்பு அரசுக்கு வரவில்லை.

[1973 மார்ச் 31

**திரு. வை. பாலசுந்தரம் :** இந்தத் தொழிலாளர் நலன் பற்றிய கல்வி நிலையத்தில் அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் இல்லாமல் பார்த்துக்கொள்ளுமா அரசு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அரசின் கொள்கை, தொழிலாளர்கள் பிரச்னைகளில் அரசியல் கலக்கக்கூடாது என்பதுதான். அதுகுறித்து மற்றவர்களும் துணை செய்தால் உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் நிறைவேறும்.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து இந்த நிலையத்தில் எவ்வளவு பேர்கள் கற்றுக்கொள்கிறார்கள், என்னமாதிரியான பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன, யார் யார் பயிற்சி அளிப்பார்கள் இது போன்ற விவரங்கள் எல்லாம் தெரியவில்லை என்று கூறினார்கள். ஒரு கல்வி நிலையத்தை ஆரம்பிக்கும்போது இதுசம்பந்தமான ஒரு திட்டவட்டமான கருத்து உருவாக்கப்பட்டதற்குப் பின்னால்தானே ஒரு நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன்னமேயே ஆரம்பித்துவிட்டு அது சம்பந்தமாக எப்படி நடக்கிறது, என்ன நடக்கிறது என்று கேட்கிறபோது தெரியவில்லை என்று அவர்கள் சொல்வது வருத்தமாகயிருக்கிறது. ஆகவே இது சம்பந்தமான முழு விவரப் பட்டியலையும் இந்தச் சபை முன் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் தயாராகயிருப்பார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இதுகுறித்து துவக்ககாலத்திலேயே கனம் உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு எல்லாம் தெரிந்ததைப்போல பதில் அளிப்பதைவிட தெரியாது என்று கூறுவது பாதுகாப்பாக இருக்கிறது. தெரியும் என்பதை விட தெரியாது என்று சொல்வதில் பாதுகாப்பு இருக்கிறது. உள்ளபடியே நாம் விவரங்களை அறிய முடிகிறது. உறுப்பினர் அவர்கள் கோரியபடி இதற்கான முழு விவரங்கள் சமயம் வரும்போது இந்த மன்றத்தில் வைக்கப்படும்.

## கைத்தறித் துணிகளுக்கு விலை

* 588 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிகளுக்கு விலை நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.



1973 மார்ச் 31]

**திரு. மே. சி. தூயமணி :** கைத்தறித் துணியின் விலை நிர்ணயம் செய்யப்படும்போது, சாதாரணமாக நூலை அதிக விலை கொடுத்து வாங்கிச் செய்கிறார்கள், சொஸைட்டீஸ் தவிர மற்ற கைத்தறியாளர்கள் அதிக விலை கொடுத்து நூல் வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே அந்தக் கைத்தறியாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நூல் பிரச்னை பற்றி ஏற்கனவே இங்கு விளக்கிச் சொல்லியிருக்கிறேன். அதன் விலை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** சில கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது விலையை அதிகமாகக் கூட்டி வைப்பதால், விலையேற்றம் காரணமாக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது வெளிநாடுகளில் இந்தக் கைத்தறித் துணிகளுக்கு கிராக்கி குறைந்து வருகிறது. ஆகவே ஒரு கண்ட்ரோல் விலை நிர்ணயம் செய்தால் இப்படி இவற்றின் விலைகள் ஏறுவதற்கு இடம் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கேள்வி என்ன ?

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** எனவே, கைத்தறித் துணிகளுக்கு ஒரு கட்டுப்பாடு விலை, ஒரு கண்ட்ரோல் விலையை நிர்ணயம் செய்வது நல்லது என்பதை அரசாங்கம் உணருகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வது மத்திய அரசின் பொறுப்பாகும்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** சமீபத்தில் இந்த நூலின் விலை மிகவும் ஏறியிருக்கிறது. கைத்தறியாளர்கள் இந்த விலை ஏற்றம் காரணமாக பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். நூலின் விலையை நிர்ணயிப்பதற்கான அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளதால், பஞ்சின் விலை, ப்ரொடக்ஷன் காஸ்ட், கூலி இவற்றை எல்லாம் கணக்கில் கொண்டு நூலின் விலையை நிர்ணயிப்பதற்கு ஒரு குழு அமைத்து அவர்கள் அந்த அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும். இப்போது மாநில அரசும், மத்திய அரசும் போட்டி போட்டு விலையை அதிகமாகக் கொடுத்து வாங்கவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே மேற்படி சொன்னதைப்போல் விலை நிர்ணயம் செய்வதற்கு மாநில அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நூல் விலையைப் பொறுத்தவரையில் நிரந்தரமாக கைத்தறி நெசவாளர்களுக்கு இது ஒரு பிரச்னையாக இருந்து

வருகிறது. ஆகவே. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் திட்டவட்டமான முறையில் நியாய விலையில் தொடர்ந்து கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க, மாநில அரசே அதை வாங்கி வினியோகிக்க வேண்டும். அதற்கான அதிகாரத்தை மாநில அரசுக்குத் தரவேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் பிரதம அமைச்சருக்கு எழுதி இருக்கிறார்கள். இதுபற்றி அவர்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை.

இப்போது ஏற்பட்டிருக்கிற விலை உயர்வுக்குக் காரணம் உற்பத்திக் குறைவு தான். மின்சாரக் கட்டுப்பாட்டின் காரணமாக விலையேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. முன்னாலே நாமே ஒப்பந்தம் செய்து வாங்கியிருக்கிறோம். அப்படி வாங்கக் கூடாது என்று மத்திய அரசு நிறுத்தி விட்டது. மத்திய அரசாங்கம் போட்ட விலையின் அடிப்படையில் நாம் இப்போது வாங்கவேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the fact that Tamil Nadu is the biggest manufacturer of handloom cloth—although the price fixation is left to the Central Government—whether the State Government would exercise their influence and pressure to see that the prices are properly fixed for yarn ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது அவர்கள் நிர்ணயித்து இருக்கும் விலை மிக அதிகம் என்று சொல்ல முடியாது. நமக்கு இருக்கும் சங்கடம் எல்லாம் உற்பத்திக் குறைவு என்ற காரணமே தவிர விலை அதிகம் என்று சொல்ல முடியாது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, நூல் விலை உறபத்திச் செலவுக்கு மேலே 5 சதவிகிதம் வைத்து விற்கவேண்டுமென்று நெசவாளர்கள் கோருகிறார்களே, அந்தக் கோரிக்கையை இந்த அரசு எற்றுக்கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கொள்கைப் பிரச்னை கேள்வி நேரத்தில் கூடாது. நம்முடைய பிரச்னை, மத்திய அரசு விலை நிர்ணயித்து அதை வாங்கக் கூடிய அதிகாரத்தை நமக்குத் தரவேண்டுமென்று கேட்கிறோம். அந்த அடிப்படையில் வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. கந்தப்பன்: துணைத் தலைவரவர்களே, மத்திய அரசு இது போல் கைத்தறி பற்றிய பிரச்னைகள் மீது முடிவு எடுக்கிறபோது அகில இந்திய கைத்தறி வாரியத்தைக் கலந்து கொண்டு தான் முடிவு செய்கிறது. அந்த அகில இந்திய கைத்தறி வாரியத்தின் தலைமை அலுவலகம் கைத்தறிக்குப் போட்டியான சூழ்நிலை இருக்கும் பம்பாயில் இருக்கிற காரணத்தால், அந்த அலுவலகத்தை சென்னைக்கு மாற்ற முயற்சி எடுக்கப்படுமா?



மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது தனிப் பிரச்னை. மத்திய அரசாங்கம் யாரைக் கலந்து கொண்டு விலை நிர்ணயம் செய்கிறார்கள் என்கிற கவலை நமக்கில்லை. இப்போது இருக்கிற நிலைமை, ரூ. 4 கோடி அளவிற்கு 18,000 பேல்ஸ் வாங்குவார் அற்று ஆலைகளில் இருக்கிறது. நூல் இல்லாது நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நேற்று கூட முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு 'டெலக்ஸ்' மெசேஜ் போய் இருக்கிறது, உடனடியாக அந்த அனுமதியைத் தரவேண்டுமென்று கேட்டு.

திரு. இரா. இராமலிங்கம்: கூட்டுறவுத் துறைக்கு மாநில அரசு விலை நிர்ணயிக்குமா அல்லது அதுவும் மத்திய அரசின் நூல் விலை அடிப்படையில் தான் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கட்டுப்பாடு இல்லாத காலத்தில் நாமே முடிவு செய்கிறோம். நாம் முடிவு செய்யும் விலை நம்முடைய நூற்பு ஆலைகளில் மார்க்கெட் விலையை விடக்குறைவாக இருக்கிறது. கட்டுப்பாடு வந்ததற்குப் பின்னாலே மத்திய அரசு தான் நிர்ணயிக்கவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த நூலை அங்கே வினியோகிக்கும் போது, கூட்டுறவுச் சங்கத்தில் 5 சதவிகிதம் வினியோகச் செலவு வைத்து விற்கிறார்கள் என்றும், தனியார் 1 சதவிகிதம் வினியோகச் செலவு வைத்து விற்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறதே, அந்த வினியோகச் செலவைக் குறைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நெசவாளர்களுக்கு இருக்கும் கோரிக்கையே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு எப்படி குறைந்த விலைக்கு விற்கிறார்களோ, அதேபோல் தங்களுக்கும் விற்கவேண்டுமென்பதாகும். நாம் குறைவாகத்தான் கொடுக்கிறோம். நாம் கேட்டிருக்கும் அதிகாரத்தில் நாமே வாங்கி நம்முடைய சொசைடி மூலமாக வினியோகம் செய்யக் கேட்கிறோம். 'யார்ன் மர்சன்ட்ஸ் அசோசியேஷன்', அதன் தொடர்பாக வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் எங்களுக்கும் அந்த விலைக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது.

### *Export of Mushrooms*

* 589 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Export Market for Mushrooms have been explored by the Tamil Nadu Small Industries Development Corporation Limited ; and

(b) if so, the details thereof ?

THE HON. THIRU S. MADHAVAN : (a) No Sir.

(b) Does not arise.

THIRU N. DENNIS : Sir, in view of the large amount of foreign exchange likely to be earned, may I know whether the Government would take steps for the exploration of these Mushrooms ?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, we are not doing any export business. The Government of India have been doing it. In 1969–70 it was to the tune of Rs. 38 lakhs and odd and in 1971–72 Rs. 30 lakhs and odd.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் காளான் உற்பத்தி மிகச் சிறப்பாக இருக்கிறது. அங்கே அரசுத் துறையில் ஒரு தொழிற்சாலை நிறுவி, அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட செயற்குறிப்பு இருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தனிப்பட்ட நபர்கள் காளானை மிகப்பெரும் அளவில் பயிர் செய்கிறார்கள் என்பதாகத் தகவல் இருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் காளான் உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதால் அந்த இடத்தில் ஒரு மாதிரிப் பண்ணை வைத்து, காளான் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்கு ஏற்கெனவே பதில் சொன்னேன்.

### வக்கீல் குமாஸ்தாக்களிடமிருந்து முறையீடு

*** 590 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வக்கீல் குமாஸ்தாக்களுக்குக் கட்சிக்காரர்கள் கொடுக்கும் பீஸை கோர்ட்டு செலவுத்தொகையில் சேர்க்க வேண்டும் என்று வக்கீல் குமாஸ்தா சங்கங்களிலிருந்து மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. THIRU S. MADHAVAN : (a) and (b) Such representations have been made from time to time by associations of vakil gumasthas, either to Government or to the High Court. The



substance of their representation has been that the cost awarded in civil suits should also include the fee payable to registered vakil clerks. Provision has, therefore, been made in the Civil Rules of Practice for including in the cost of a suit, the cost of making copies of pleading, applications, etc. This would cover the fee of the registered clerks of the pleaders and there is therefore no need to provide for the payment of a separate fee to the clerk.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, இன்று கட்சிக்காரர்களுக்கு குமாஸ்தாக்கள் அதிக பொறுப்பு எடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அரசினரால் இருப்பதாகத் தெரியவில்லை. வக்கீல் குமாஸ்தாக்களுக்கு என்று தனிச் சட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வக்கீல்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள்.

(விடை இல்லை)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த கோர்ட் செலவானது இப்போது குறைவாக இருக்கிறது. ஆதலால் இதை இன்னும் திருத்தியமைக்க வேண்டும், கூட்டவேண்டுமென்று கருத்து இருக்கிறது. ஏனென்றால் கோர்டில் ஏற்படும் செலவிற்கும் அனுமதிக்கிற செலவிற்கும் இடைவெளி அதிகமாக இருக்கிறது. அது புனர்பரிசீலனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இன்னும் அதிகமாகப் போட்டால் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள். இதுகுறித்து உயர்நீதிமன்றம் என்ன முடிவு செய்கிறதோ அதை ஏற்றுக்கொள்கிறோம்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, வழக்கறிஞர்களின் ஷெட்யூல் பீஸை உயர்த்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுகூட உயர்நீதி மன்றம் அல்லது பார் கவுன்சில் முடிவு எடுக்கலாம். அதைப்பற்றி பரிசீலிக்கலாம். நாமே அதுபற்றி செய்வது சரியல்ல.

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, எத்தனையோ ஏழை எளியவர்களுக்கு உதவி செய்கிற அரசு, அதிகம் வருமானம் இல்லாத வக்கீல்களிடம் இருக்கும் குமாஸ்தாக்களுக்கு—அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்—ஏதாவது அரசின் மூலமாக உதவி செய்யப்படுமா ?

[1973 மார்ச் 31

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது அரசாங்க உதவியைப் பற்றி அல்ல. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பணத்தை பொதுமக்களிடமிருந்து வசூலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்று கேள்வி. ஆகவேதான், அதை உயர்நீதி மன்றத்தின் முடிவுக்கு விடவேண்டுமென்று சொன்னேன்.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, ரிஜிஸ்டர் செய்யப்பட்ட வக்கீல் குமாஸ்தாக்களுக்கு அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்க அரசிடம் யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ் : சார், வக்கீல்களுக்கு கட்சிக்காரர்கள் கொடுக்கிற தொகையை விட சில குமாஸ்தாக்கள் அதிகம் பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகையையும் கோர்ட் செலவில் சேர்த்துக்கொண்டால் கட்சிக்காரர்களுக்கு அது திரும்பிக்கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த அடிப்படையில் கணக்கில் அவர்கள் பெரும் தொகையையும் சேர்த்துக் கொள்ள முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வக்கீல்களையெல்லாம் கேவலப்படுத்துவது சரியல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, வக்கீல்களுக்கு கட்சிக் காரர்கள் கொடுக்கிற ஊதியத்தை விட குமாஸ்தாக்கள் அதிகமாகப் பெறுகிறார்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டது. பொதுவாக நல்ல வக்கீல் களுக்கு இந்தமாதிரி தகாராறு ஏற்படாது. ஆதலால் அந்தமாதிரி கேள்வி தேவையில்லை என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுவாமிதாஸ் வழக்கறிஞர் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) ஆசிரியரா, அப்படியானால் அடுத்த துறையைப் பற்றி நீங்கள் இவ்வளவுதூரம்' சொல்லக் கூடாது

## ஆயுள் தண்டனை கைதிகள்

* 591 வினா—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மத்திய சிறைகளில் தற்பொழுது உள்ள ஆயுள் தண்டனை கைதிகள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுள் மூன்றில் ஒரு பங்கு தண்டனையை அனுபவித்துள்ளவர்களை விடுதலை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?



1973 மார்ச் 31]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 10—8—1972 அன்று தமிழ்நாட்டில் மத்திய சிறைகளில் இருந்த ஆயுள் தண்டனை கைதிகளின் எண்ணிக்கை 2,179.

(இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், 10—8—72 தகவல் தான் கொடுத்திருக் கிறார்கள். அதற்குப் பின்னால் வெள்ளிவிழாவின்போது அவர்களுடைய தண்டனைக் காலம் குறைக்கப்பட்டிருக்கிறதே, அந்த வெள்ளிவிழாவின்போது குறைக்கப்பட்டதன் அடிப்படையில் எத்தனை ஜன்மக் கைதிகள் விடுதலையாகி இருக்கிறார்கள், எப்போது குறைக்கப்பட்டது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கேரளத்திலே 7 ஆண்டு முடிந்த வுடன் ஆயுள் கைதிகளை விடுதலை செய்கிறார்கள். அதைப்போல இங்கும் செய்ய அரசாங்கம் ஏதேனும் செயற்குறிப்பை வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த மூலக்கேள்வியே இன்றைக்கு தமிழ்நாட்டிலுள்ள மத்திய சிறைகளில் எத்தனை ஆயுள் கைதிகள் இருக்கிறார்கள் என்பது. அமைச்சரவர்கள் 10—8—72-ல் உள்ள விபரத்தை மட்டும் சொன்னார்கள். அதன் பிறகு எத்தனை ஆயுள் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டார்கள் ? எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதை சொல்லவில்லை. ஆகவே, இப்போது இருக்கிற நிலைமையைப்பற்றி விவரங்கள் உண்டா இல்லையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி கேட்ட தேதியின் அடிப்படையிலே விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த விவரம் கிடைக்கப்பெற்றப் பின்னால் மத்திய அரசின் உத்தரவின்பேரில் பலரை விடுதலை செய்திருக்கிறோம். ஆனால் எத்தனை பேர் என்ற விவரம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கைதிகளின் தண்டனையைக் குறைக்கும்போது சிறையிலே நடந்துகொள்ளும் ஒழுக்க முறைகளைப் பார்த்து தண்டனை குறைக்கப்படுகிறதா அல்லது அவர்கள் செய்த குற்றத்தைப் பார்த்து தண்டனை குறைக்கப்படுகிறதா? அல்லது அதற்கு முன்னால் அவர்கள் இருந்த நிலைமையைப் பார்த்து தண்டனை குறைக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சிறையிலே நடந்துகொள்ளும் முறை, குற்றத்தின் தன்மை இவைகளை எல்லாம் கணக்கிலே எடுத்து, தண்டனைக் குறைக்கப்படுகிறது.

*Loans advanced to State Land Development Bank*

*592 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the amount advanced as loan by the World Bank under the Scheme of International Development Agency for the year 1972 has been fully utilised by the Tamil Nadu State Land Development Bank; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கால அளவு 2½ ஆண்டு காலம். அது 1—11—1971-லிருந்து தொடங்கப்பட்டிருக்கிறது. 1972-ம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி 2.44 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கியிருக்கிறது. உலக வங்கி விதித்திருந்த சில கட்டுப்பாடுகளின் காரணமாக இவ்வளவு குறைவாகச் செலவழிக்க முடிந்திருக்கிறது. இப்போது கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டதால் வேகமாக பெருமளவில் செலவிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, ஏறத்தாழ 28 கோடி ரூபாய் உலக வங்கியிடமிருந்து பெற்றிருக்கிறோம். ஆனால் அவர்கள் விதித்திருந்த நிபந்தனைகளால் அந்தத் தொகை முழுவதையும் செலவிட முடியவில்லை. ஆகவே செலவழிக்கப்பட்ட தொகைக்கு மட்டும் வட்டி கட்ட மத்திய அரசின் மூலமாக உலக வங்கியைக் கேட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, உலக வங்கியிடம் நாம் தெரிவித்த யோசனைகளின்பேரில் அவர்கள் பல விளக்கங்களைக் கேட்டு, நாம் விளக்கம் கொடுத்திருக்கிறோம். அதன் காரணமாக நடைமுறை விதிகள் யாவும் தளர்த்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, மேற்கொண்டு கடன் உதவி பெறுவதில் கஷ்டமும் இல்லை; தடங்கலும் இல்லை. இப்போது வேகமாக கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஓராண்டிற்குள் 26 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு முடிந்துவிடும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்

**திரு. அ. ஆறுமுகம்:** தலைவரவர்களே, நாம் உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கும்போது அவர்கள் பல நிபந்தனைகளை விதித்துத்தான் கடன்



தருகிறார்கள். அந்த நிபந்தனைகளில் ஒன்று, ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் 400 அடி இடைவெளி இருக்கவேண்டும் என்பது. அப்படிப் பார்க்கும்போது நம்முடைய தமிழ்நாட்டில் பரவலாக இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது. ஆகவே, இந்த நிபந்தனையைத் தளர்த்தி 100 அடி இடைவெளியில் கிணறு வெட்டுவதற்குக் கடன் வழங்க அரசு சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இப்போது அப்படிப்பட்ட நிபந்தனை இல்லை. 800 அடி, 400 அடி, 200 அடி அல்லது 100 அடி என்றுகூட நிபந்தனை இல்லை. இப்போது இருக்கிற ஒரே ஒரே நிபந்தனை, ஒரு கிணற்றில் பம்புசெட் வைத்து தண்ணீர் இறைக்கும்போது அடுத்த கிணறு பாதிக்கப் படாது என்று நமது எஞ்சினியர்கள் சான்றிதழ் கொடுக்க வேண்டும். அந்தச் சான்றிதழும் மத்திய அரசைச் சேர்ந்த எஞ்சினியர்கள் கொடுக்க வேண்டுமென்று அல்ல; நமது எஞ்சினியர்களே கொடுத்தால் போதும் என்றுதான் இருக்கிறது. எஞ்சினீயர்கள் பம்பாயிலிருந்தோ அல்லது உலக வங்கியிலிருந்தோ வர வேண்டும் என்றில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் கூட ஒரு நிலவள வங்கித் தலைவர். இம்மாதிரியான தடங்கல் எங்காவது இருக்கிறது என்று தெரிவித்தால் அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக 4, 5 வட்டங்களில் இந்த உலக வங்கி உதவி நிதியிலிருந்து விவசாயிகளுக்கு கிணற்று லோனும் வாங்கமுடியவில்லை; மோட்டார் லோனும் வாங்க முடியவில்லை. எனவே அந்த வட்டங்களில் இருக்கின்ற தடையை மாற்றி கடனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் ஏற்கனவே சொன்னது போல நிபந்தனைகள் எல்லாம் தளர்த்தப்பட்டுவிட்டன. இப்போது இருக்கக் கூடிய ஒரே ஒரு நிபந்தனை—அதுவும் விவசாயிகளின் நன்மைக்காக இருக்கின்ற நிபந்தனை—ஒரு கிணற்றில் தண்ணீர் இறைக்கும்போது அடுத்த கிணறு பாதிக்கப்படக்கூடாது என்பதுதான். இந்த விவரங்களை பிப்ரவரி மாதத்தில் அரசு எல்லா வங்கிகளுக்கும் அறிவித்திருக்கிறது.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன்:** கிணறு வெட்டுவதற்கு நமது எஞ்சினீயர்கள் சான்றிதழ் கொடுத்தால் போதும் என்ற அளவுக்கு விதிகள் தளர்த்தப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது தனியார்களுக்கு கிணறு வெட்ட உலக வங்கிக் கடன் உதவி இல்லை. ஆகவே, தனியார்களுக்கும் இந்த விதிப்படி கொடுப்பதுபற்றி யோசிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தனிப்பட்டவர்களுக்கு சட்டம் கொண்டுவரவேண்டுமென்று மத்திய அரசு பிடாரிசு செய்திருக்கிறது. அவர்கள் கிணறு வெட்டும்பொழுது பக்கத்துக் கிணறு பாதிக்காத அளவுக்கு தடை செய்ய வேண்டுமென்று மத்திய அரசு சட்டம் கொண்டுவந்திருக்கிறது. நாம் அந்தச் சட்டத்தை இன்னும் கொண்டுவரவில்லை. புதிதாக கிணறு வெட்டும் போது பக்கத்துக் கிணறு பாதிக்காது என்று நமது எஞ்சினியர்கள் சான்றிதழ் கொடுத்தால் போதும் என்ற அளவுக்கு விதிமுறைகள் தளர்த்தப் பட்டிருக்கின்றன.

**திரு. துரைமுருகன் :** விதிகள் எல்லாம் தளர்த்தப்பட்டிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பல பஞ்சாயத்து ஒன்றியங்களிலே இன்னும் நிலவள வங்கிக் கிளைகள் கூட இல்லை. குறிப்பாக எங்கள் பகுதியைச் சேர்ந்த சோளிங்கர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் நிலவள வங்கி இல்லை. ஆகவே, ஒரு நிலவள வங்கிக் கிளையாவது உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எல்லா வட்டாரங்களிலும் நிலவள வங்கிக் கிளையாவது திறக்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அதன்படி நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. எந்த ஒன்றியத்திலாவது இல்லாமல் இருந்தால் அங்கு உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த மாநில நிலவள வங்கி 1972-ம் ஆண்டில் 2.44 கோடி ரூபாய்தான் செலவழித்திருக்கிறது. மீதி கிட்டத்தட்ட 24 கோடி ரூபாய் செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். அதைச் செலவழிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமா? அதிலே ஏதாவது தடை இருக்கிறதா ? கிணறு வெட்டுவதற்கு மட்டும்தான் கடன் கொடுக்கப்படுமா ? அல்லது வேறு பல திட்டங்களுக்கும் கடன் கொடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த நிதி இரண்டு, மூன்று பகுதி களாக இருக்கிறது. துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிகாரிகள் அதிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சுலபமான முறையிலே கடனைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துணைக் கேள்விகள் கேட்கும் போது புரிந்துகொள்ளும்படி ஒவ்வொரு கேள்வியாகக் கேட்கவேண்டும். எழுந்த உடனேயே வேகமாக 3, 4 கேள்விகளைக் கேட்டால், புரிந்த கொண்ட வரைக்கும்தான் பதில் அளிப்பார்கள்.



**திரு. சோ. அழகர்சாமி :** எல்லா நிபந்தனைகளையும் தளர்த்திவிட்டோம் என்று சொல்கிறார்கள். இரண்டு கோடி தான் இதுவரை செலவழிக்கப்பட் டிருக்கிறது. இன்னும் 26 கோடி செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று நினைக்கிறேன். இப்படி கொடுக்கமுடியாமல் பணத்தை வைத்திருப்பதால், விவசாயிகள் நம்முடைய அரசாங்கத்திடம் இருந்து பெற்ற கடன்களைத் திருப் பிச் செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்களே, அந்தக் கடன்களை ஈடு செய் வதற்கு உலக வங்கி நிதியிலிருந்து கடன் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** முதல் பகுதியிலே 2 கோடிதான் கொடுத்திருக்கிறீர்கள், இன்னும் 26 கோடியை எப்படிக் கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாகக் கொடுக்க முடியும். இப்போது விதிமுறைகள் எல்லாம் தளர்த்தப்பட்டிருப்பதனால் கொடுக்க முடியும். ஒரு மூன்று மாதம் கழித்து இதே கேள்வியைக் கேட்டால் 10, 15 கோடி. கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலை ஏற்படும். பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு இந்த நிதியிலிருந்து கடன் கொடுக்கப்படுமா என்று இரண்டாவது பகுதியில் கேட்டிருக்கிறார்கள். விவ சாய காரியங்களுக்காகக் கடன் பெற்றிருந்தால் அதைத் திருப்பிச் செலுத்த கடன் கொடுக்கலாம். ஆனால் திருமணத்திற்கு, வீடு கட்டுவதற்கு, படிப்புச் செலவுக்கு போன்ற சொந்தக் காரியங்களுக்காக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு நிலவள வங்கியிலிருந்து கடன் கொடுக்க முடியாது.

**திரு. கி. ஓ. பெரியசாமி :** தலைவரவர்களே, உலக வங்கியிலிருந்து குறைந்த வட்டிக்கு கடனைப் பெற்று, விவசாயிகளுக்கு அதிகமான வட்டிக்குக் கொடுக்கப் படுகிறது என்று பிரச்சாரம் செய்யப்படுகிறதே. அதைப்பற்றி அமைச்சர வர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, உலக வங்கியி லிருந்து கடன் கொடுக்கப்படுவது இந்திய அரசுக்கு—அதாவது மத்திய அரசுக்கு. மத்திய அரசுக்கு ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாக முக்கால் சதவிகித வட்டிக்கு 50 ஆண்டு காலத்திற்குக் கொடுக்கிறார்கள். மத்திய அரசு அதைப் பெற்று நமக்கு கொடுக்கின்றபோது 6½ சதவிகிதம் வட்டிக்கு 12 ஆண்டு காலத்திற்கு கொடுக்கிறது. ஆகையால் வட்டி விகிதம் ஏறிவிடுகிறது.

### *Branch Land Development Banks*

* 593 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there are proposals under the consideration of the Government to open branches for

Land Development Banks in Kanyakumari district to assist small farmers ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

10-00 மு.ப. **திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் ஏரியாவில் லேண்டு டெவலப்மெண்டு பாங்கின் கிளை இல்லாத குறை இருக்கிறது. உடனே அங்கு ஒரு கிளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கிள்ளியூரில் கிளை திறக்கப்பட்டிருக்கிறது. தக்கலை நிலவள வங்கியின் கிளையாகத் திறக்கப்பட்டு விட்டது என்று எனது குறிப்பு இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, தக்கலையானது வேறு ஒரு தாலுகாவிலும். வேறு ஒரு ஒன்றியத்திலும் இருக்கிறது. கிள்ளியூர் விளவங்கோடு தாலுகாவில் இருக்கிறது. இதைப் புனர்பரிசிலனை செய்து கிள்ளியூரில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கிள்ளியூரில் ஒரு நிலவள வங்கிக் கிளை இருக்கிறது. கிள்ளியூர் கிளையை விளவங்கோட்டில் இருக்கப்பட்ட அந்த வங்கியோடு சேர்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, கிள்ளியூர் யூனியன் ஏரியாப் பகுதியில் அவ்விதமான கிளை திறக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் திறக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இப்போது கிள்ளியூர் யூனியன் ஏரியாப் பகுதியில் அவ்விதமான கிளை திறக்கப்படவில்லை. கிள்ளியூரில் கிளை திறக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இங்கே இருக்கிற குறிப்பின்படி கிள்ளியூரில்தான்

one each for Killiyur and Malapuram have been started

என்று இருக்கிறது. கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் அல்லாமல் வேறு எந்தப் பகுதியில் இருக்கிறது என்று கேட்கிறேன். கிள்ளியூர் கிளை அது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** தலைவரவர்களே, இங்கே கேள்வி கேட்ட உறுப்பினர் கிள்ளியூர் ஒன்றியத் தலைவராவார்கள். அவர் சொல்கிறார், அந்த



எல்லைக்குள்ளே அந்த வங்கி திறக்கப்படவில்லையென்று. அவர் சொல்வது உண்மையா? அல்லது அமைச்சரவர்கள் கிளை இருக்கிறது என்று சொல்கிற தகவல் உண்மையா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, நான் சொன்னது கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் ஒரு நில வள வங்கியின் கிளை திறக்கப்பட்டிருக்கிறது. அதை உறுப்பினர் அவர்கள் மறுக்கிறார்களாவென்று கேட்கிறேன். அதை எழுதி வேண்டுமானாலும் அனுப்ப முடியும். கிள்ளியூர் ஒன்றியத்தின் ஒரு பகுதியில் ஒரு கிளை திறக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, கிள்ளியூர் யூனியன் விளவங்கோடு தாலுகாவில் இருக்கிறது. தக்கலை கல்குளம் தாலுகாவில் இருக்கிறது. கிளை கிள்ளியூர் யூனியன் பகுதியில் திறக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு வேளை கிளைக்கும், பிரதம வங்கிக்கும் உள்ள வித்தியாசம் தெரியாத குழப்பத்தில் கேட்கிறார் என்று நினைக்கிறேன். கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் கிளை திறக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிளை இப்போது தக்கலை கிளையாக இருக்கிறது. தக்கலை கல்குளம் வட்டத்தில் உள்ளது என்று தெரியும். கிள்ளியூர் ஒன்றியப் பகுதியில் திறக்கப்பட்டிருக்கிறது. அதை விளவங்கோட்டில் உள்ள அந்த வங்கியோடு சேர்க்கவேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டதா?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, நிலவள வங்கிகளைத் தொடங்கும் போது அந்தப் பிரதேசத்திலுள்ள சட்டமன்ற . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த ஊருக்கெல்லாம் போக வேண்டாம். அப்புறம் எல்லோரும் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

### ஓட்டல் தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள்

* 594 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஓட்டல்களில் பணியாற்றும் குறைந்த வருவாய் உடைய தொழிலாளர் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தரும் சிறப்புத் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, லட்சக் கணக்கான ரூபாயில் ஓட்டல்களைக் கட்டுகிற முதலாளிகள் ஓட்டல் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் அமைத்துத் தருவதற்கென ஓட்டல் முதலாளிகள் சங்கத்தினரை அழைத்துப் பேசி ஓட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்த வருவாயில் உள்ளவர்களுக்கு, மாதாமாதம் சம்பளத்தில் பிடித்துக் கொள்கிற வகையில் வீடு கட்டித் தர ஒரு சிறப்புத் திட்டம் அமைக்கப்படுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தற்போது வீட்டு வசதி வாரியம் பல்வேறு திட்டங்களை வைத்துக்கொண்டிருப்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அதிலே ஒரு ரூபாய் தினசரி சேமித்து 5 ஆண்டு காலம் சேமித்தால் கூட வீடு கட்டித்தருகிற திட்டம் இருக்கிறது. அந்த வகையிலாவது அல்லது தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலமாக வீடு கட்ட முடியும். இப்படி வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும் பல்வேறு திட்டங்களும் இருக்கின்றன. இவைகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தினால் இந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரலாம். குறிப்பாக ஓட்டல் தொழிலாளர்கள் தினசரி பக்ஷீஸ் பெறுகிற தொழிலாளர்கள், அவர்கள் தினசரி ஒரு ரூபாய் சேமிப்பது என்பது சுலபம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, அவ்வாறு ஓட்டல் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு முன்னாலே முதலாளிகள் அவர்களை ஓட்டல்களில் தங்குவதற்கு இடம் தர மாட்டேன் என்று சொல்லி அவர்கள் பிளாட்ஃபாரங்களில் தூங்கவேண்டிய அவல நிலைமை இருக்கிறது. ஓட்டல் தொழிலாளர்கள் எங்கெங்கே அதிகமாக வசிக்கிறார்களோ அங்கே மொத்தமாக அவர்கள் தங்க கட்டிடத்தை ஹவுசிங் போர்டு குறைந்த வாடகையில் கட்டித்தர முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் அவர்களுக்குச் சொந்தத்திலே வீடு கட்டவேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். ஓட்டல் தொழிலாளர்கள், மற்ற தொழிலாளர்கள் அவரவர்கள் தாங்கள் வேலை செய்கிற பகுதிகளின் பக்கத்தில் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஓட்டல்கள் ஜன நெருக்கடியான பகுதிகளில் இருக்கின்றன. அவைகளுக்குப் பக்கத்தில் அவர்களுக்கு வீடு கட்டித் தருவது என்பது கூடுமான காரியமல்ல. அவர்கள் கொஞ்சம் தூரம் சென்று வீடுகள் கட்டிக் கொள்ளத் தயாராக இருந்தால் அதைச் செய்து தர அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ஓட்டல் தொழிலாளர்கள் பக்ஷீஸ் பெறுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பக்ஷீஸ் பெறுகிற பழக்கம் சில மேல் நாடுகளில் எப்படியிருக்கிறது என்று கேட்டால் ஓட்டல்காரர்கள் அதை உணவோடு சேர்த்து வசூல் செய்து விடுகிறார்கள். அதற்கு ஒத்த முறையிலே நம்முடைய சுற்றுலா வாரியத்தின் மூலம் நடத்தப்படுகிற ஓட்டல்களில் அப்படி ஏற்பாடு செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மேல் நாட்டைப் போலவே இந்த நாட்டிலேயும் தனிப்பட்டவர்களிடத்திலிருந்து வசூல் செய்து கொடுக்கிற பழக்கம் ஸ்டார் ஓட்டல்களில் இருக்கிறது. எல்லா நாடுகளிலேயும் ஒரே மாதிரியான நிலைமைதான். மற்ற ஓட்டல்களில் அவர்களாகவே தந்து விட்டுப் போவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

### வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்குக் குடியிருப்பு

* 595 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் அலுவலர்களுக்கு வாரியத்தின் மூலம் வாடகைக்கு வீடு கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டு வசதி வாரிய அலுவலர்களுக்கு வாடகைக்கு வீடு கட்டித்தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் அலுவலர்களுக்கென தனியாக எந்த ஒரு திட்டமும் இல்லை.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, is the Government aware that for the houses allotted on rental basis the employees of the Housing Board are charged rent much higher than the rent for the same type of houses by the public ? If the public paid Rs. 10 for a house the Housing Board employee for a similar house has to pay Rs. 25. Is the Government aware of this ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, என்னிடத்தில் இது பற்றிய குறிப்பு இல்லை. இருந்தாலும் அவர் சொல்கிறபடி வாடகை வாரியத்தில் அதிகமாக வசூலிப்பதாக எந்தவிதமான தகவலும் எனக்கு இல்லை.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தால் தீட்டப்பட்டுள்ள திட்டங்கள் நகரப் பகுதிகளிலே இருப்பவர்களுக்குப் பயன்

தாக்கூடிய அளவிலே இருக்கிறது. ஆகவே, கிராமப் பகுதியிலுள்ள தாழ்த்தப் பட்டவர்களாக, விவசாயக் கூலிகளாக இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தை அரசு ஏற்க முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கிராமங்களிலும் வீடுகள் கட்டித் தருவதற்கு வீட்டு வசதி வாரியம் முன் வந்திருக்கிறது. நேற்றுகூட புழல், கதிர்வேடு கிராமங்களில் 2,500 ரூபாயில் மாடல் வீடுகளை வீட்டு வசதி வாரியம் கட்டிக் காட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த வீடு கட்டும் வாரி யத்தில் இருக்கிற அலுவலர்கள் தங்களுக்கு ஹையர் பர்சேஸ் மூலமாக வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று ரெப்ரசென்டேஷன் கொடுத்திருக்கிறார்களா, அப்படியானால் அரசாங்கம் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வாரியத்திலிருந்து அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் இல்லை. எல்லோருக்கும் தருவது போல அவர்களையும் இந்தத் தவணை முறைத் திட்டங்களில் சேர்த்துக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: When the public is given subsidised rent of Rs. 10 the employees of the Housing Board and Slum Clearance Board, etc., are charged on the basis of house rent allowance, etc., which is much more than the subsidised rent. Is the Government aware of that?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சப்சிடைஸ்டு ரெண்டு என்பது குடிசை மாற்று வாரியத்தில் இருப்பவர்களுக்குத் தரப்பட்டிருக் கிறது. வீட்டு வசதி வாரியத்தில் இருக்கிற, சம்பளம் பெறுகிற அலுவலர் களுக்குத் தர முடியும் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட் டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]



(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) பேரவை உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பேரவைக்குள் வராமல் லாபியில் இருந்த வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டுச் சென்றது குறித்து.

THIRU N. VEERASAMI: Sir, on a point of order: Rule 14 of the Legislative Assembly Rules says—

'The Secretary shall keep a list showing the attendance of each member at every sitting and such list shall be made available to members for inspection.'

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

Article 190 of the Constitution of India, in sub-clause (4) says:

'If for a period of sixty days a member of a House of the Legislature of a State is without permission of the House absent from all meetings thereof, the House may declare his seat vacant.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் இவ்வளவு நீளமாகப் போகக் கூடாது.

திரு. நா. வீராசாமி: துணைத் தலைவரவர்களே, விதி முறைகளைப் படித்தால் நல்லதாக இருக்கும் என்று படித்தேன். இந்த மன்ற உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நேற்று இந்த மன்றத்திற்கு வரவில்லை. ஆனால். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது சம்பந்தமாக ஒரு பிரிவிலேஜ் இஷ்யூ வருகிறது. அப்பொழுது பேசலாம். உங்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கப் படும்.

திரு. நா. வீராசாமி: துணைத் தலைவரவர்களே, திரு. எம். ஜி. இராமச் சந்திரன் அவர்கள் இங்கு வரவில்லை. அங்கு லாபியில் வைத்திருக்கும் அட் டென்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டு அப்படியே போய் விட்டார். லாபி இந்த மன்றத்தின் பகுதியல்ல. ஜனநாயகப் பணிகளை ஆற்ற வேண்டியவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அவர்களுக்காக இந்த மன்றத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடத்திற்கு வராமல், இந்த மன்றத்திற் குள்ளேயே வராமல் வெளியே இருக்கக்கூடிய அட்டென்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டுச் சென்றால் அது சபைக்கு அட்டென்ட் செய்தது போல் ஆகாது. 'பிரசன்ட்' என்பதற்கும் தெளிவாக விளக்கம் சொல்லப்பட

டிருக்கிறது. எதற்காக ஒரு மன்றத்தில் இடம், பெயர் என்றெல்லாம் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சி, ஆளும் கட்சி, அமைச்சர்கள் என்று இடம் ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். அங்கே வந்து உட்காராமல் லாபியில் வைத்திருக்கின்ற அட்டெண்டன்ஸ் ரிஜிஸடரில் கையெழுத்துப் போட்டுவிட்டு அப்படியே ஒரு உறுப்பினர் போனால் அது முறைதானா, அது சட்ட விதிமுறைக்குட்பட்ட செயல்தானா என்று அறிய விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Now the hon. Member has mentioned about the hon. Member Thiru M. G. Ramachandran signing the register at the Lobby. Similarly I do not find another hon. Member Pulavar Govindan coming into the House at all. He is also signing the register like this either in the lobby or in the Speaker's room. I would like to have a clarification.

(*Voices*.—No, no.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திரு. வீராசாமி அவர்கள் நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன். அவர்கள் ஒரு கட்சியினுடைய தலைவராக இருந்து கொண்டு உள்ளே வாராமல் வெளியிலேயே அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார் என்று குறிப்பிட்டார். அம்மையார் அவர்கள் புலவர் கோவிந்தன் கூட அப்படித்தான் என்று சொன்னார். புலவர் கோவிந்தன் பலமுறை மன்றத்திற்கு வந்திருக்கிறார். அப்படியே போகாமல் உள்ளே வந்து அமர்ந்து ஓட்டும் செய்திருக்கிறார். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது எந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களாகவிருந்தாலும் சபைக்குள் வந்து உட்காராமல் வெளியே இருந்தபடியே அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்திட்டுவிட்டுப் போவது ஜனநாயகக் கடைமையை, தேர்ந்தெடுத்த மக்களுக்குச் செய்வதாகக் கருதப்படமாட்டாது; என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் இது பொருந்தும். (ஆரவாரம்).

*THIRU K. M. SUBRAMANIAM: I want to point out whether it is right to keep the attendance register outside. It is not in the Legislature. It is outside. Everybody has been signing it at the lobbies. It should be brought in. If this is strictly to be followed the attendance register should be kept inside.

Secondly, coming to the lobbies cannot be questioned. So many come like that. Of coure, just because it is Thiru M. G.



Ramachandran this question has now come. Otherwise many people have been signing it and going away. Even leaders do like that. But particularly this point has been raised just to bring in unnecessary heat into the affairs of the Legislature.

A precedent has been there. I think Pulavar Govindan has been signing the attendance register even in his house, I am told, but I do not know how far it is true. So, there is the difference, I can understand.

டாக்டர் எச். வி. ஹாண்டே: துணைத் தலைவரவர்களே, கனம் இராமச்சந்திரன் அவர்கள் வெளியிலேயே உள்ள அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டுச் சென்றது தவறு என்று ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பப்புட்டிருக்கிறது. ஆனால் லோக் சபையில் இருக்கின்ற பிராக்டிஸ் 15 நாளைக்கு ஒரு முறை அட்டெண்டன்ஸ் போட்டால் மற்ற 15 நாளைக்குத் தொடர்ச்சியாகப் போட்டுக்கொள்கிறார்கள்.

இப்பொழுது கையெழுத்துப் போட்ட பிறகு மன்றத்திற்குள் வந்து பார்டிசிபேட் பண்ணிக் கொள்ளவேண்டுமா என்பதுதான் பிரச்னை. கையெழுத்துப் போடுவதென்ற முறை எல்லோருக்கும் இருக்கிறது. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன மாதிரி அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் இங்கே வைக்கப் படவில்லை. லாபியில்தான் இருக்கிறது. இங்கே வந்து அட்டெண்டன்ஸ் மார்க் பண்ணுவது என்ற வழக்கமில்லை. அந்த அளவுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டிருப்பதால் வெளியிலேயே எல்லோரும் கையெழுத்துப் போடலாம். அதற்குப் பிறகு இங்கே உள்ளே வந்து அமர்ந்து கொள்ள வேண்டுமா இல்லையா, இங்கே நடைபெறுகின்ற டிஸ்கஷனில் பார்டிசிபேட் பண்ண வேண்டுமா என்பதுதான் பிரச்னை. இதே மாதிரியாக புலவர் கோவிந்தன் அவர்கள் இங்கே வந்து பார்டிசிபேட் செய்து கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். ஆனால் அவர் ஓட்டு போட்டிருக்கிறார். ஆனால் ஒவ்வொருவரும் டிஸ்கஷனில் ஒவ்வொரு நாளும் பார்டிசிபேட் பண்ண வேண்டுமென்று சொன்னால், அது சபாநாயகருக்குத் தலைவலியாகப் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்னைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: துணைத் தலைவரவர்களே, எல்லோரும் ஒரே நாளில் பார்டிசிபேட் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் அது மக்களுக்குக் கஷ்டமாகவிருக்கும் என்றுதான் சொன்னேன்.

அந்தக் கட்சியின் சார்பாக மதிப்பிற்குரிய நண்பர் மதியழகன் அவர்கள் பார்டிசிபேட் பண்ணிக் கொண்டு வருகிறார். ஆகவே எல்லோரும் பார்டிசிபேட் பண்ண வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்ய வேண்டியதில்லை. 60 நாட்களுக்குள் வரவேண்டும் என்று விதி இருக்கிறது.

இப்பொழுது புலவர் கோவிந்தன் வந்தாலும் முதல் ஆண்டில் தொடர்ந்து வரவில்லை. 60-வது நாள் உள்ளே வாராமல் கையெழுத்துப் போட்டுவிட்டு போய் விட்டார், உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவர்கள் சொன்னதெல்லாம் போன ஆண்டைப் பற்றித்தான் என்று கருதுகிறேன். ஆகவே இதை ஒரு பெரிய பிரச்சனையாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(Thiru K. M. Subramaniam Rose).

THIRU N. GANAPATHY: One submission, Sir . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நம்முடைய விதியில், சேப்டர் 4-ஏ, 14-ல்

"The Secretary shall keep a list showing the attendance of each member at every sitting and such list shall be made available to members for inspection."

என்று இருக்கிறது. ஒவ்வொரு சிட்டிங்க்குக்கும் அட்டென்டன்ஸ்தான் இருக்கிறது. சிட்டிங்க் என்றால் உள்ளே வருவது, கலந்துகொள்வது என்று தான் அர்த்தம். வாரந்தாவோடு போய் விடுவது நல்லதல்ல. இது எல்லாக் கட்சியினருக்கும் பொருந்தும். ஆளும் கட்சியில் உள்ள உறுப்பினர்களுக்கும் சொல்வேன், எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்கும் சொல்வேன். அட்டென்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டாலே அவைக்கு வந்து கலந்து கொண்டதாகுமென்றால் அது ஜனநாயக மரபாகாது. ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் வகையிலும் அதற்கு மற்றவர்களுக்கும் வழி வகுத்துக் கொடுக்கும் வகையிலும் எல்லா உறுப்பினர்களும் நடந்து கொள்ள வேண்டுமென்ற என்னுடைய எண்ணத்தை, தீர்ப்பு அளிப்பதாக அல்ல, தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir, "precincts of the House" has been defined in our Rules thus:

(n) 'Precincts of the House' means—

(i) in the case of Members of the Legislative Assembly, the entire Secretariat Buildings in the Fort. St. George, Madras,



including the Assembly Chamber, and the rooms in which the associated offices are situated, the Ministers' rooms, the Library, the Canteen and the Lounge rooms, the Committee Room in the Old Legislators' Hostel and the Library in the Government Estate, Mount Road, and such other places or buildings as might be named by the Speaker from time to time together with the verandas and steps to these buildings and the pathways leading from the Assembly Chamber to the other aforesaid buildings, and shall be applicable only while the Assembly or any of its committees or sub-committees sits and one hour before and after such a sitting."

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பிரிவிலேஜுக்காகச் சொல்லப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இங்கே இருக்கின்ற முறை எல்லாம் வெளியே வைத்திருக்கின்ற அட்டென்டன்ஸ ரிஜிஸ்டரில் கையெழுத்து போட்டு விட்டு சில நேரத்தில் வெளியே வேலையிருந்தால் போய் விடுவது வழக்கம். அவசியமான வேலைகள் இருந்தால் அப்படித்தான் போகிறோம். ஆகவே பிரதிநிதிகள் இங்கே உள்ளேவந்து அவசியம் பேசியாக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. பேசாமல் போவது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றியதாக ஆகாது என்று கருதப்பட்டது. சிலர் நோய் வாய்ப்பட்டிருப்பார்கள், சிலருக்கு வேறு பல அசௌகரியங்கள் இருக்கலாம். ஆகவே வெளியே கையெழுத்துப் போடுவது தவறு என்று நான் சொல்லமாட்டேன். இந்த விஷயத்தைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்காமல், எல்லோருக்கும் முழு நேரமும் அவையில் இருக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தக் குறிப்பிட்ட விஷயத்தை ஒரு பெரிய பிரச்சினையாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதுபோல், உண்மையிலேயே இது ஒரு பெரிய விவகாரமில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கலாம். ஆக எல்லோரும் வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு பேரவை முடியும் வரையில் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும், கட்டாயமாகப் பேச வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. அது பெரிய பிரச்சினையை எனக்கு உண்டாக்கி விடும். உள்ளபடியினம் இந்தப் பிரச்சினை எழுந்ததற்குக் காரணம் எம். ஜி. ஆர் அவர்கள் ஒரு கட்சியினுடைய தலைவர். அவர் சாதாரணமாக நான் நம்முடைய

### பேரவை உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பேரவைக்குள் வாராமல் லாபியில் இருந்த வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு சென்றது குறித்து



கையெழுத்துப்போட்டுவிட்டுப் போயிருந்தால் யாரும் கேட்டிருக்க மாட்டார்கள். அது இவ்வளவு தூரம் ஒரு பிரச்சினையாகவும் வந்திருக்காது.

ஆனால் அவர் ‘சட்ட மன்றம் செத்து விட்டது, இனி அங்கே போக மாட்டேன்’ என்று வெளியிட்ட கருத்தின் அடிப்படையில்தான் இந்தப் பிரச்சனை இவ்வளவு பெரிதாக வந்திருக்கின்றது. கையெழுத்துப் போடுவது இந்தப் பேரவையில் வந்திருந்ததாக அர்த்தமாகலாம்.

ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியது போல ‘ஸிட்டிங்’ என்பதற்கு விளக்கம் இருக்கிறது.

"Sitting" means the meeting of the Members of the House for transaction of business on any day from its commencement till the House rises for the day".

எனவே, ‘ஸிட்டிங்’ என்பது ‘லாபி’ யில் உட்கார்ந்துவிட்டுச் செல்லுவதாகாது.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எழுப்பிய அந்த விதிமுறை உறுப்பினர் ஒருவரை போலீஸ் அரெஸ்டு செய்யும் காலத்தில் அந்த உறுப்பினருக்குள்ள உரிமைகளைப் பாதுகாப்புகளை வலியுறுத்தி இந்தப் பேரவை நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் கைது செய்யக் கூடாது என்பதற்காகப் போடப்பட்டுள்ள ஒன்றாகும்.

ஒரு கட்சியின் தலைவராக உள்ள திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ‘லாபி’ யில் வந்து கையெழுத்துப்போட்டு விட்டுப் போகிறார் என்றால் அதைப் பெரிய தவறாக எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் அவர் ‘இந்தப் பேரவை செத்துவிட்டது’ என்று சொல்லி அதற்குப் பிறகு அவர் வந்திருக்கிறார் என்றால், அதையொட்டித்தான் இந்தப் ‘பாயிண்ட் ஆஃப் ஆர்டர்’ உருவாகியிருக்கின்றது. என்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் கையெழுத்துப் போடுகின்றார் என்றால் பேரவையில் கலந்துகொண்டதாகத்தான் கருதவேண்டியிருக்கும். பொது மக்களும் அவ்வாறுதான் கருதுவார்கள். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்றாலும்கூட உறுப்பினர்கள் தயவுசெய்து இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று மட்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : ஸார், ஒரு க்ளாரிஃபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூலிங் கொடுத்தபிறகு க்ளாரிஃபிகேஷன் என்று கேட்கக் கூடாது. அடுத்து இதே பிரச்சினை வருகின்றது. அப்போது உங்களுக்கு வாய்ப்புத் தரப்படும்.



### (3) அவையுரிமைப் பிரச்சினை.

### திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சட்ட மன்றத்திற்கு வந்து கையெழுத்துப் போட்டுச் சென்றது பற்றி திரு. என். கணபதி பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கீழ்க்கண்ட உரிமை பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள் :

"சட்டப் பேரவை விதிகள், விதி எண் 184-ன் படி எழுப்பப்பட்டுள்ள அந்த உரிமைப் பிரச்சனையில்

30—3—1973 தேதியிட்ட அறிக்கை ஒன்றை பாபநாசம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் வெளியிட்டுள்ளார். இன்று காலை தினசரிப் பத்திரிகைகளில் அது வெளியாகியுள்ளது. அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது : ‘சட்ட மன்றம் செத்து விட்டது என்று அறிவித்திருந்த எம். ஜி. ஆர். இன்று சட்ட மன்றத்துக்கு வந்து கையெழுத்துப் போட்டுவிட்டுச் சென்று இருக்கின்றார். அதிலிருந்து அவர் கட்சிக்குக் கொள்கையில்லை. அவர் சொல்லுகிற வார்த்தைகளில் பொருள் இல்லை என்பது தெளிவாகிறது’

பரங்கி மலைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரை, எதிர்க் கட்சிகளில் ஒன்றான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரை, மிரட்டுவதாக அமைந்திருக்கின்றது. இது சபைக்குவரும் உரிமையைப் பாதிப்பதாகும்." என்று திரு. தங்கமணி அவர்கள் 184-வது விதியின்கீழ் இப்பிரச்சனையை எழுப்பியிருக்கின்றார்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இது எப்படி உரிமைப் பிரச்சனையாகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஸார், ஒரு குறிப்பிட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இந்த மன்றத்திற்கு வந்து கலந்து கொள்ளுவதற்கு அவருக்கு இன்றைக்கு உரிமையிருக்கிறது. அப்படிப்பட்ட உரிமைகளின் கீழ் பரங்கிமலைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இந்தச் சபையில் கலந்து கொள்ளுவதற்காக வந்து கையொப்பம் இட்டுவிட்டுப் போயிருக்கின்றார். இன்று இங்கே கிளப்பியிருக்கும் விஷயத்தைப் பார்த்தால் ‘அவர் ஏன் இங்கே வரவில்லை?’ என்று கேட்பது போல், அவர் கையெழுத்துப்போட்டது தவறு என்று சொல்லும் அளவிற்கு இன்றைக்கு இந்த அறிக்கை வந்திருக்கின்றது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1973 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது எந்தப் பத்திரிகையில் வந்திருக்கின்றது என்று சொல்லவில்லை. ஏதாவது ஒரு பத்திரிகையைக் கொடுக்க வேண்டாமா? இல்லையென்றால் 'ஸிம்பிளாக' திரு. கணபதி அவர்கள்கூட சொல்லிவிடலாம், 'நான் அப்படி பத்திரிகைக்கு ஒன்றும் கொடுக்க வில்லை' என்று.

**திரு. என். கணபதி :** நான் சொல்லிவிட்டு வாபஸ் வாங்குவதில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இதில் விஷயம் என்னவென்றால், நம்முடைய சட்ட மன்ற விதிகளின்படி ஒரு உறுப்பினர் 60 நாள் வரையில்கூட வராமல் இருக்கலாம். இப்போது அவர் 60 நாட்கள் ஆகிவிட்டன என்று இதைச் செய்திருக்கின்றார். இதே மாதிரி இதற்கு முன்புகூட, சென்ற ஆண்டு இங்கே முன்னாள் சபாநாயகராக இருந்த புலவர் கோவிந்தன் அவர்கள் 60 நாட்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது பிரச்சினையில்லை இப்போது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் அன்றைக்கு அவர் 60 நாட்கள் வராமல் இருந்து, வந்து கையெழுத்துப் போட்டுவிட்டுப்போனபோது, அது பற்றி யாரும் எதுவும் எழுப்பவில்லை அன்றைக்கு. அவருக்கு உரிமையிருக்கின்றது. அவர் வரலாம். வராமலும் இருக்கின்ற உரிமை யிருக்கின்றது. வராமல் இருந்தால் அந்தத் தொகுதி மக்கள் ஏன் போகவில்லை என்று கேட்பதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கின்றது.

அப்படி வந்த உறுப்பினர் ஒருவரை 'ஏன் வந்தீர்கள்' என்று கேட்கும் முறையில் ஒரு அறிக்கையை வெளியே யாராவது விட்டு இருந்தால்கூடப் பரவாயில்லை, ஆனால் ஒரு உறுப்பினரே கேட்டிருக்கின்றார் என்று சொல்லும் சமயத்தில், அப்படிக் கேட்பதானது அந்த உறுப்பினருடைய உரிமைகளை மீறக்கூடிய செயலாக இருக்கின்றது. இப்படி உரிமைகள் மீறப்படும்போது

"A member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised."

என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. அந்த முறையில்தான் இந்த நோட்டிஸைக் கொடுத்திருக்கிறேன்.

இது திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுடைய உரிமைகளைப் பாதிக்கின்றது என்பதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்று நான் நினைக்கிறேன். உதாரணமாக நாளைக்கே அவர் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள்



1973 மார்ச் 31] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வந்தார் என்றால், 'எதற்காகத் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் வந்தீர்கள்' என்றும் கேட்கலாம், இப்படிக் கேட்பது என்று ஆரம்பித்துவிட்டால் அல்லது தொடர்ந்து மூன்று நாட்கள் வரவில்லை அல்லது பதினைந்து நாட்கள் வரவில்லையென்றால், 'ஏன் வரவில்லை' என்று கேட்பதற்கும் இது வழி வகுக்கும். சில சமயம் வரமுடியும். சில சமயத்தில் வர முடியாமல் தடுக்கப்பட்டிருக்கக் கூடும். பிறகு வந்தால், 'ஏன் வந்தாய்'? என்று கேட்கும் நிலை வரும் இது இப்படியே போவது என்றால்.

ஆகவே ஒரு உறுப்பினர் முழுமையாக சட்ட சபைக்கு வருவதற்கும், வந்திருக்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கும் கையெழுத்துப் போட என்று இந்தக் குறிப்பேடு 'லாபி'யில் வைக்கப்பட்டிருக்கின்றது. உண்மையிலேயே 'லாபி' என்றால் அது இந்தச் சட்ட மன்றத்தின் ஒரு பகுதியாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 'லாபி', 'லைப்ரரி' போன்ற பகுதிகள் எல்லாம் இம்மன்றத்தின் பகுதிகள் என்று மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லுகின்றார்கள். ஆனால் சபையின் ஒரு பகுதிதான் என்று அங்கேயிருந்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர் இம்மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்குபெற முடியுமா?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 'லாபி' இந்த மன்றத்தின் ஒரு பகுதி என்ற முறையில் அங்கே ஒரு புத்தகத்தை வைத்திருக்கிறோம். அதில் கையெழுத்துப் போடுகிறோம், இப்போது அதில் போடுவது மட்டும் எப்படி முறையாகும், உள்ளே இருக்க வேண்டாமா என்பது போல ஒரு பிரச்சினையை எழுப்பினால் பிறகு என்ன செய்ய வேண்டும்? அந்த புஸ்தகத்தை சார்ஜெண்டிடம் கொடுத்து கையெழுத்துப் போட்டவர்கள் உள்ளே இருக்கின்றார்களா என்றுதான் பார்க்கவேண்டும். இது பள்ளிக்கூடத்தில்கூட ஏற்பட்டதில்லை. இது எனக்கே ஆச்சரியமாக இருந்தது, இப்படி ஒரு பிரச்சினையை எழுப்பியது.

இந்தப் பேரவையில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போனது ஒரு பெரிய தவறுமாதிரி ஆகி இதை ஒரு பெரிய ஒழுங்குப் பிரச்சனையாக எழுப்பப்பட்டுள்ளது ஆச்சரியமாக இருக்கின்றது. உறுப்பினர் கையெழுத்துப் போட்டுவிட்டார் என்றால் தீர்ந்தது. கையெழுத்துப்போட்டுவிட்டுப் போயிருக்கலாம். அவருக்கு வேறு ஜோலி இருந்திருக்கலாம். உள்ளே வந்து பங்கு எடுக்கலாம், எடுக்காமலும் இருக்கலாம்.

இன்றைக்கு நாம் எந்த ஒரு உறுப்பினரையும் கண்டிப்பாக 'நீங்கள் பங்கு எடுத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்' என்று சொல்ல முடியாது. ஆனால் சில

மரபுகள் இருக்கின்றன. இப்போது ஏதாவது 'காலிங் அடென்ஷன் நோட்டீஸ்' அவர் பெயரில் வந்திருந்தால், அவர் சபாநாயகரிடம் சொல்லலாம், 'இன்றைக்கு நான் வரமுடியாத நிலையில் இருக்கிறேன்' என்று. கேள்விகளில் கூட என்ன நிலை என்றால், நாடாளுமன்றத்தில்கூட கேள்வியைக் கேட்டிருக்கும் உறுப்பினர், எழுந்து 'ஐ புட் தி க்வெஸ்சன்' என்று சொல்ல வேண்டும். அதைக்கூட நாம் இங்கே நிர்ப்பந்திப்பதில்லை. இந்த நிலையில் வரக்கூடியவரைக் கூட வரக் கூடாது என்று ஒரு மிரட்டல் மாதிரி இது அமைந்திருக்கின்றது என்றுதான் நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது எந்த வகையில் அந்த உறுப்பினருடைய உரிமைகளைப் பாதிக்கின்றது என்று சொல்ல வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்போது இவர் பத்திரிகையில் விடுத்த அறிக்கையில், 'சட்ட மன்றம் செத்துவிட்டது என்று அறிவித்திருந்த எம். ஜி. ஆர். இன்று சட்ட மன்றத்திற்கு வந்து கையெழுத்துப்போட்டு விட்டுச் சென்று இருக்கின்றார்' என்று இருக்கின்றது.

Mr. DEPUTY SPEAKER : It may be. But what is the insinuation ?

Thiru K. T. K. THANGAMANI : The insinuation is that a person who said 'சட்ட மன்றம் செத்து விட்டது' என்று சொன்னவர் எப்படி சட்ட மன்றத்திற்கு வரலாம்? என்று கேட்பதுதான். வராமலிருந்து அவர் கடைசியில் இராஜினாமா செய்யவேண்டும் அல்லது 60 நாட்கள் வராமல் இருந்துவிட்டு பிறகு அவருடைய பெயர் நீக்கப்பட வேண்டும் என்பதுதான் அந்த அறிக்கை கொடுத்தவருடைய விருப்பம்... அவர் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் சொன்னார். சொன்னவர் இங்கே வந்திருக்கின்றார். வந்து கையெழுத்துப் போடுகின்றார். ஏன் கையெழுத்துப் போட்டார்? போட்டவர்
மு.ப. 10-30 இங்கே வந்திருக்க வேண்டாமா என்று கேட்பது போலத்தான் இருக்கின்றது இந்த அறிக்கை. குறிப்பிட்ட உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கலாம். அந்தக் கருத்தைச் சொன்னதனால் அவர் சட்டசபை உறுப்பினராகச் செயல்படக்கூடாது என்று சொல்வது எந்தவகையில் சரியாக இருக்கும்?' அந்த உறுப்பினருக்கு இருக்கக்கூடிய உரிமை சபைக்கு வருவது, சபைக்கு வராமல் இருப்பது—அந்தமுறையில் இது அந்த உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது என்கிற வகையில்தான் இதனை உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்திருக்கிறேன்.



இப்படி வருமானால் எந்த ஒரு உறுப்பினரைப்பற்றியும், வேறு எந்த ஒரு உறுப்பினரும், வந்தார், வரவில்லை என்பதாக எல்லாம் வெளியில் சொல்லக் கூடிய நிலைவரும். இதில் ப்ரைமாபசி கேஸ் இருக்கிறது. இதை உரிமைக் கமிட்டிக்குத்தான் விடவேண்டும் என்பது கூட இல்லை. தேவையானால் இந்தச் சபையே அதை விவாதிக்கலாம். அதைத் தங்கள் இஷ்டத்திற்கு விட்டுவிடுகிறேன். இதைப்பற்றி விவாதிக்க நீங்களே ஒரு தேதியை நிச்சயம் பண்ணலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir. I am surprised to note that an advocate like Thiru Ganapathi . . .

(Thiru K. Kandaswamy rose)

Thiru K. M. SUBRAMANIAM : Sir, I am speaking to you. I am surprised to note that such a statement has been made by an advocate.

Mr. DEPUTY SPEAKER : The hon. Member should not criticise or refer to the profession of a Member. Is it the way to express in the House ?

Thiru K. M. SUBRAMANIAM : I am sorry, Sir. You have not. . . .

Mr. DEPUTY SPEAKER : You are giving ' indirect meaning by referring to the Member as Advocate, learned member of a particular profession.

Thiru K. M. SUBRAMANIAM : In this connection, I would like to say that we should take into consideration the time, the circumstances and the place in which such a statement was made. It was not said recently, that சட்டசபை செத்துவிட்டது என்பது. கோர்ட்டிலே கேஸ் இருந்தபோது அப்படிச் சொல்லப்பட்டது. கோர்ட்டிலே ஒரு டெசிஷன் கொடுத்தாகி விட்டது. அந்தத் தீர்ப்பை மதித்து நடக்க வேண்டும் இல்லையா ?

We will respect the Court's decision at all times. The Court has decided on a particular issue and after the decision, they பண்ண ரெடியாக இருக்கிறோம்.

[1973 மார்ச் 31

**திரு. துரை முருகன் :** கோர்ட்டிலே கேஸ் இருந்தபோது சட்டசபை செத்துவிட்டது என்றார்கள். என்றால் கோர்ட்டிலே தீர்ப்பு வந்த பிறகு சட்டசபைக்கு உயிர்வந்துவிட்டது என்று சொன்னார்களா? அப்படிச் சொல்வது தானே.

THIRU K. M. SUBRAMANIAM : It is an attack on a person.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திரு. கே. எம். எஸ். அவர்கள் இது ப்ரிவிலேஜ் இல்லை என்று சொல்கிறார்கள். . .

THIRU K. M. SUBRAMANIAM : I definitely say that it is a privilege issue. I hold on to it.

MR. DEPUTY SPEAKER : The problem is this. The hon. Member's mind is always in the statement சட்டசபை செத்துவிட்டது

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** அப்படித்தான் இருக்கிறது. நான் சொல்ல வந்தது. . . கோர்ட்டிலே தீர்ப்பளிப்பதற்கு முன்னால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் நிற்கும்போது நீங்கள் உட்காருவதுதான் ஆர்டர். திருப்பித் திருப்பி கோர்ட் தீர்ப்பளித்ததற்கு முன்னால் சட்டசபை செத்துவிட்டது என்று சொன்னதாகவும், தீர்ப்புக்குப் பிறகு அதை மதித்து அப்படிச் சொல்லவில்லை என்பதாகச் சொல்கிறீர்கள். இந்தச் சட்டசபை உயிரோடு இருக்கிறதா, இல்லையா என்பதே இந்தப் பேரவையைப் பொறுத்தது. நீதி மன்றம் இந்தப் பேரவை செத்துவிட்டதாகவோ, உயிரோடு இருப்பதாகவோ சொல்ல முடியாது. இந்தப் பேரவையின் அங்க அவயவம் எப்படி இருக்கிறது என்று பேரவைக்கு வெளியிலே உள்ள எந்தச் சக்தியும் சொல்ல முடியாது. இந்த நான்கு சுவர்களுக்குள் அடங்கிய பேரவையைத் தவிர வேறு எந்தச் சக்திக்கும் அந்த அதிகாரம் கிடையாது. எந்த நபருக்கும் அந்த அதிகாரம் கிடையாது. இந்தப் பேரவையின் உயிர்த் தத்துவத்தை, ஜனநாயக உயிர்த் தத்துவத்தை, பேரவையின் தனித்தத்துவத்தை ஏற்றுக்கொள்ளாது, ஏதோ உங்களுக்குத் தடங்கல் இருக்கிறது, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு முன்னால் நீதிமன்றம் செத்துவிட்டதாகச் சொன்னோம். இப்போது நீதிமன்றத் தீர்ப்புக்கு 'ஓபே' பண்ணுகிறோம் என்று சொல்வதே இந்தப் பேரவையின் மீது நீங்கள் மதிப்பு வைத்திருப்பதாக நான் ஏற்றுக் கொள்ள முடியாது.



1973 மார்ச் 31]

THIRU K. KANDASWAMY : May I kindly be permitted to say Sir . . . .

MR. DEPUTY SPEAKER : I request the hon. Member to resume his seat.

THIRU K. M. SUBRAMANIAM : Am I to understand that the statement ' சட்டசபை செத்துவிட்டது என்பது அவர் சட்ட சபைக்கு வராததற்கு அர்த்தமா ?

MR. DEPUTY SPEAKER : The hon. Member can refer to the proceedings of the Assembly. I have personally extended an invitation to the hon. Member, Thiru M. G. Ramachandran, Leader of the Anna D.M.K. Party. That request was also set aside by the Member on the ground that the Assembly is not alive. I do not understand how the Court can say whether the Assembly is alive or not.

THIRU K. KANDASWAMY : Sir, I am standing for a long time to raise a point of order.

MR. DEPUTY SPEAKER : Please sit down.

THIRU R. PONNAPPA NADAR : Sir, the Court has not said . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கோர்ட் சொல்லவில்லை. பேரவையைப்பற்றி நீதிமன்றம் எப்படிச் சொல்ல முடியும்? அதனால்தான் சொன்னேன். நீதிமன்றத்தின் தீர்ப்பு பேரவைக்கு உயிரூட்டுகிறது என்று சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. நா. வீராசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் திரு. என். கணபதி அவர்கள் பேரவை செத்துவிட்டது என்று சொன்ன எம். ஜி. ஆர். லாபியில் வைத்திருந்த ரிஜிஸ்தரில் வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு, உள்ளே வராமல் சென்றுள்ளதுபற்றி கொடுத்த அறிக்கையின் மீது ப்ரிவிலேஜ் எழுப்பியிருக்கிறார்கள். முன்னேற்றக் கழக உறுப்பினர்களை ராஜிநாமாச் செய் என்று சொல்ல போராட்டம் நடத்தி, ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மறியல் நடத்தி கலவரம் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டது எல்லாம் ப்ரிவிலேஜ் ஆகவில்லை.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* ப்ரிவிலேஜ் மோஷன் யாரும் கொண்டு வரவில்லை. ஆகவே அவை பிரிவிலேஜ் ஆகவில்லை என்று சொல்ல முடியாது.

*திரு. நா. வீராசாமி :* அப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. ஆனால் கையெழுத்துப் போட வந்த உறுப்பினர் அவைக்கு வர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடே அவர் கொடுத்த அறிக்கை எப்படி ப்ரிவிலேஜ் ஆகும் என்று தெரியவில்லை. இது ப்ரிவிலேஜ் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. கந்தசாமி :* பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மிகத் தெளிவாக இந்த மாமன்றம் செத்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Is it not a privilege, Sir.

THIRU K. KANDASWAMY : It relates to a fact relating to a Member of the House.

அப்படி அவர் சட்டமன்றம் செத்துவிட்டது என்று சொன்ன பிறகு....

*திரு. கே. எம். சுப்பிரமணியம் :* அவர் செத்துவிட்டது என்று சொன்னது....

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. கந்தசாமி அவர்களும் சரி, திரு. கே. எம். எஸ்ஸும் சரி, வயது மிகுந்தவர்கள். செத்துவிட்டது, செத்துவிட்டது என்ற வார்த்தையை மீண்டும் மீண்டும் அவர்கள் உபயோகிக்க வேண்டாம். அதுவும் காலை நேரத்தில் அந்த வார்த்தை வரவேண்டாம். திரு. கந்தசாமி அவர்கள் இது ப்ரிவிலேஜா, இல்லையா என்பதற்கான பாயிண்டைச் சொன்னால் போதும்.

*திரு. கே. கந்தசாமி :* அதற்கான பாயிண்டுகளைத்தான் சொல்கிறேன். அப்படி ஒரு தனி நபர் இந்த மாமன்றத்தைப்பற்றியே சொல்லியிருக்கும்போது இந்த மாமன்றத்தைப்பற்றிக் கவலைப்படாமல் தனிப்பட்ட நபருக்காகப் பேசுவது சரியல்ல. இந்த மாமன்றத்தைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்துவிட்டு, அவரே இந்த மன்றத்திற்குள் வராமல் வெளியில் இருக்கும் ரிஜிஸ்தரில் கையொப்ப மிட்டுச்சென்றிருப்பது சொல்லுக்கும், செயலுக்கும் முரண்பாடாக



இருப்பதைத்தான் திரு. கணபதி அவர்கள் தம் அறிக்கையில் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

He is in consistent, equivocal in his political statement

என்று குறிப்பிட்டுள்ளார்களே தவிர, இந்த மன்றத்திற்கு அவர் வரக்கூடாது என்ற கருத்தை அவர் தெரிவிக்கவில்லை. அது ஒரு ப்ரிவிலேஜ் இஷ்யு ஆகவில்லை. இந்த மாமன்றத்தைப்பற்றிக் கவலைப்படாது, மாண்புமிகு உறுப்பினர் தனிப்பட்ட நபரைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. முனு ஆதி :* துணைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் வீராசாமி பேசுகிறபோது, இந்த உரிமைப் பிரச்சினைப் பற்றி பேசுகிற நேரத்திலே வெளியிலே மக்கள் நேரடியாக உறுப்பினர்கள் இல்லங்களிலே கொடுத்து, கோரிக்கையைப்பற்றி, அதுவும் உரிமைப் பிரச்சினையில் வரும் என்று சொன்னார். அது எந்த அளவுக்குப் பொருந்தும் என்றும் தெரியவில்லை. தனிப்பட்ட மனிதர் என்று சொல்லி, அண்ணா தி. மு. கழகத்திலே நாங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறவர்கள் சட்டமன்றத்திலே ஒரு உறுப்பினர், இந்தச் சட்டசபை நடவடிக்கைகளைப் பற்றி தவறாகச் சொன்னால், சட்டமன்றத்தை பாதிக்கும். ஆகவே தனிப்பட்ட மனிதர் சொன்னது, எந்த விதத்திலே உரிமைப் பிரச்சினையானது என்று சொல்வது நியாயமாகும். அவர், முதலிலே செத்துவிட்டது என்று சொல்லியதை இன்னும்கூட நாங்கள் வலியுறுத்துகிறோம்...

(உறுப்பினர்கள் திரு. மு. சுருளிவேல், திரு. வி. சுப்பிரமணியம், திரு. நா. கணபதி மற்றும் சில உறுப்பினர்கள் இருக்கையில் எழுந்து நின்றனர்.)

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, இன்னமும் அப்படித்தான் சொல்லுகிறோம், செத்துவிட்டது, என்று சொல்லியதை வாபஸ் வாங்க வேண்டும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* திரு. முனு ஆதி அவர்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன். நீங்கள் இவ்வளவு பெரிய பேரவையைப் பற்றி இப்படிச் சொல்லியிருக்கிறீர்கள். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சொல்லும் பொழுது அது உரிமைப் பிரச்சினையாக வந்துவிட்டது. செத்துவிட்டதற்குப் பிறகு இங்கே பேசுவதில் அர்த்தம் இல்லை.

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, now there are two or three controversies including the new controversy which has been raised . . . .

MR. DEPUTY SPEAKER : I want to dispose of this matter first. This is a very serious matter, and it affects the whole House.

DR. H. V. HANDE : Sir, the hon. Member, Thiru Munu Adhi has again stated that the Assembly is dead and that is the main point. But we have mentioned in this House quite a number of times that we are very much alive and we are kicking also-figuratively speaking. In other words, we are quite active and we are engaged in the fight. Therefore the question of saying that the Assembly is dead does not arise at all. Apart from that yesterday . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வேண்டாம், அதை விட்டு விடுங்கள். நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். நான் என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள் . . .

DR. H. V. HANDE : I am confining myself only to one particular point. The fact that the hon. Member Thiru Ramachandran had come and signed yesterday . . .

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, I am sorry . . .

DR. H. V. HANDE : I am not going out of it.

The very fact that the hon. Member, Thiru Ramachandran has signed it shows that his party itself accepts that the Assembly is not dead. Therefore, why are you touchy about it when a privilege motion is raised.

திரு. முனு ஆதி: நான் சொல்ல வந்தது. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தைகளை வாபஸ் வாங்குங்கள்.

திரு. முனு ஆதி: அடுத்த வார்த்தைகளைத் தெரிவித்து விடுகிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து அமைதியாக இருக்க வேண்டும். இந்தப் பேரவையினுடைய மொத்த உரிமையைக் காப்பாற்றுகிற பொறுப்பு



உங்கள் அனைவருடைய சார்பிலே எனக்கு இருக்கிறது. முதலில், திரு. முனு ஆதி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன், அமைச்சரைப் பற்றியோ, ஒரு உறுப்பினரைப்பற்றியோ, ஆளும் கட்சியைப்பற்றியோ சொல்லப்பட்ட கருத்து அல்ல இது. இது இந்தப் பேரவையிலே இருக்கின்ற ஒவ்வொரு அணுவையும் சம்பந்தப்படுத்திய பிரச்சினை. 'பேரவை செத்து விட்டது' என்று சொன்னதை வாபஸ் வாங்க வேண்டும்.

திரு. முனு ஆதி: சட்டமன்றம் செத்துவிட்டது என்று இனிமேல் சொல்ல மாட்டோம். . .

(சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

டாக்டர் எச். வி. ஹாண்டே: எவ்வளவு நல்ல வகையிலே பெருந்தன்மையோடு சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுதான் பேரவை உயிரோடு இருக்கிறது என்பதற்கு அடையாளம்.

திரு. முனு ஆதி: பேசக் கூடாது என்று சொல்கிறார்களே, அதுதான் அடையாளமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு கட்சித் தலைவர், சட்டசபைக் கட்சித் தலைவர் சொல்வது, இங்கே. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் முனு ஆதி அவர்கள் பேசும்பொழுது இப்பொழுதும் சொல்கிறோம் என்றுதான் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். பிறகு வாபஸ் வாங்கவேண்டுமென்று சொன்னபிறகு, அதை இனிமேல் சொல்லமாட்டோம் என்று திருப்பிச் சொல்கிறார். அவ்வளவு பேருக்கும் காது இருக்கிறது. அவ்வளவு பேரும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதை வாபஸ் வாங்குவதுதான் முறை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவர் இனிமேல் சொல்ல மாட்டோம் என்று சொன்னதிலிருந்து, அவர் திரும்பப் பெற்றதாகப் பொருள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். அவர் இனிமேல் சொல்லமாட்டோம் என்று சொன்னதிலிருந்து அதை அழுத்தம் திருத்தமாக வாபஸ் வாங்கிக் கொண்டார் என்றே நான் கருதுகிறேன்.

திரு. முனு ஆதி: கனம் முதலமைச்சர் அந்த கருத்தைச் சொல்கிறார். தனிப்பட்ட முறையில் கூட இனிமேல் செத்து விட்டது என்று சொல்ல மாட்டோம், நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னால் (குறுக்கீடு) நான் சொல்வதற்குள் எல்லோரும் எழுந்து கொண்டு என்ன என்று கேட்டால்? பேசுவது ரைட்டா, தப்பா, ரூலிங் கொடுக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது திரு. கணபதி அவர்களுடையபேச்சை ஒருதடவைப் படித்து விடுகிறேன். படித்ததற்குப் பின்னாலே பேசுங்கள். திரு. கணபதி அவர்கள் கொடுத்த அறிக்கை 'தினத்தந்தி' என்ற பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதைத் திரு. தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். " கணபதி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:—சட்டமன்றம் செத்து விட்டது என்று அறிவித்து இருந்த எம். ஜி. ஆர். இன்று சட்டமன்றத்துக்கு வந்து கையெழுத்து போட்டு விட்டுச் சென்றிருக்கிறார். அதிலிருந்து அவர் கட்சிக்குக் கொள்கை இல்லை. அவர் சொல்கிற வார்த்தைகளில் பொருள் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது". இந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு நீங்கள் ஆர்க்யூ பண்ணுவது நல்லது.

DR. H. V. HANDE: Sir, coming to the subject proper, the hon. Member, Thiru Thangamani has brought forward a privilege motion against the hon. Member, Thiru N. Ganapathi. The fact of the case is that the hon. Member Thiru Ganapathi has given a statement that because the hon. Member, Thiru Ramachandran had mentioned earlier that the Assembly was dead, what business he had got to sign and why he should sign. . .

MR. DEPUTY SPEAKER: Dr. Hande, you should not main point. But we have mentioned in this House quite a numalready read out what Thiru Ganapathi had stated in his statement 'சட்டமன்றம் செத்துவிட்டது என்று அறிவித்திருந்த எம். ஜி. ஆர். இன்று சட்டமன்றத்துக்கு வந்து கையெழுத்துப் போட்டு விட்டுச் சென்று இருக்கிறார். அதிலிருந்து அவர் கட்சிக்குக் கொள்கை இல்லை. அவர் சொல்கிற வார்த்தைகளில் பொருள் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.' வரக் கூடாது, அல்லது இங்கே எப்படி உள்ளே நுழையலாம் என்ற 'இன்டென்ஷன்' இல்லை'.

THIRU K. KANDASWAMY: Sir, on a point of order Let the hon. Member, Dr. Hande speak in Tamil so that his interpretation may not be misunderstood.



டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆகவே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் கையெழுத்து . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வழக்கறிஞர் திரு. கந்தசாமி அவர்களுக்காகத் தமிழில் பேசுங்கள். (சிரிப்பு)

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. கந்தசாமி அவர்கள் சில சமயத்திலே இங்கிலீஷிலே பேசிக் குழப்புகிறார். அது. . .

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, குழப்புகிறார் என்று ஒரு அங்கத்தினரைப் பற்றி இன்னொருவர் சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரைமுருகன் இப்பொழுது தான் வழக்கறிஞராக வந்து கொண்டிருக்கிறார். குழப்புவது நம்முடைய வக்கீல்களுக்கு இப்பொழுது முக்கியமான வேலை. . . . (சிரிப்பு).

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, குழப்புவது வக்கீல்களுடைய உரிமை அல்ல. அவர்கள் அந்த மாதிரி செய்வார்களானால் அது தவறு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: I am also an advocate குழப்பினால்தான் தெளிவு வரும். அதைத்தான் நாம் செய்கிறோம். 4 வக்கீல்கள் ஆர்க்யூ பண்ணி, தெளிவு பிறக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: வழக்கறிஞர்கள் கோர்ட்டிலே வேண்டுமானால் குழப்பலாம். ஆனால் இது சட்டமன்றம், இங்கே குழப்பக் கூடாது.

திரு. கே. கந்தசாமி: தயவு கூர்ந்து துணைத்தலைவர் அவர்கள் நான் சொல்வதைக் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டம் என்பது ஒரு இருட்டறை, அதற்கு வக்கீல்கள் விளக்குப் போன்றவர்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் வக்கீல்கள் குழப்புகிறவர்கள் என்று இனிமேலாவது சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் என்ன சொன்னேன் என்பதைக் கவனிக்க வேண்டும். உண்மை, பொய் அத்தனையையும் ஒன்றாகக் குழப்பி, குழம்பாக்கிக் கடைசியிலேதான் உண்மையைக் கொண்டுவர வேண்டும்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 மார்ச் 31

அவர்கள் அறிக்கை கொடுத்திருப்பதின் காரணமாகத்தான் உரிமைப் பிரச்சினை இங்கே வந்திருக்கிறது என்று கருதுகிறேன். இந்தச் சின்ன விஷயத்திற்கு என்ன முடிவு என்றால் என்னைப் பொறுத்தவரையிலும்—முதலமைச்சர் அவர்கள் முன்னாலே சின்ன விஷயத்தை மன்னித்துவிடுவோம் என்று சொன்னார்கள்—அதைப்போன்று திரு. தங்கமணி அவர்கள், திரு. கணபதி அவர்கள் ஏற்படுத்திய சின்ன விஷயத்தை மன்னித்துவிடலாம் என்று கருதுகிறேன். எப்படி அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களோ, அதைப்போல திரு. தங்கமணி அவர்களும் கருதிக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள், தான் முடிவு சொல்வதற்கு முன்னதாக, அவர்களே முடிவு சொல்லித் தீர்ப்புச் சொல்வது முறையல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முறைதான். இந்த முறையை முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.
What the Hon. Chief Minister has done I am doing.
மன்னித்து விடலாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லையா ?

**திரு. எம். ஏ. லத்தீப் :** சார். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. லத்தீப் அவர்கள் மூன்று நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். இந்த மாதிரிப் பிரச்சினைகளுக்கு எல்லாம் கூட உரிமைப் பிரச்சினை கொண்டுவரலாம் என்ற ஒரு மரபைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. எம். ஜி. ஆர். அவர்கள் உறுப்பினர் என்ற முறையிலே அவர்களுடைய பணியை ஆற்றுவதைத் தடுக்கக்கூடிய வகையிலே அவர்களைப் பயமுறுத்தக்கூடிய வகையிலே திரு. கணபதி அவர்களுடைய அறிக்கை அமைந்திருக்கிறது என்ற அளவிலே உரிமைப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். திரு. கணபதி அவர்கள் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு உறுப்பினர் என்ற முறையிலே இங்கே ஆற்றுகின்ற பணிகள் தடைபடுகின்ற முறையிலே அவர்கள் சொல்லவில்லை, அவர்களுடைய கட்சிக்குக் கொள்கையிருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள்.



1973 மார்ச் 31] [திரு. எம். ஏ. லத்தீப்]

திரு. எம். ஜி. ஆர். அவர்கள் இந்த அவைக்கு வரக் கூடாது என்று எந்த இடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது? ஒரு கட்சி இன்னொரு கட்சியைச் சாடுவது, வர்ணிப்பது என்பது ஜனநாயகத்திலே அன்றாடம் நடக்கக்கூடியவைதான். அதுகூடச் செய்யக்கூடாது என்றால் வேறு எந்தவிதமான முறையிலே அரசியல் இந்த நாட்டிலே செயல்பட முடியும்? மிக நாகரீகமான முறையிலே தான் திரு. கணபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'அவை' என்பது என்ன என்பதைப்பற்றிக் கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டன. எந்தக் குறிப்பிட்ட இடத்தை 'அவை' என்று கருதுவது என்ற கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள். Whether lobby also is included within the meaning 'of the House என்ற அளவிற்கு இங்கே பேசப்பட்டது. என்னைப் பொறுத்தவரையிலும் 'லாபி' என்பது it is not part of the House என்ற அளவிலே தான் இருக்கிறது. அது அவையினுடைய ஒரு பாகம் என்று ஏற்றுக்கொள்ளப்படாது.

It is accessory to the House. An accessory cannot be a part of the House.

ஆகவே 'லாபி' என்பதை 'ஹவுஸ்' என்று ஏற்றுக்கொள்ள முடியாது. 'ஹவுஸ்' என்பது என்ன என்றால் இந்த அவைக்குள் உறுப்பினரல்லாதவர் ஒருவர் நுழைந்துவிட்டால் அதற்காக சில தண்டனைகளை, வரைமுறைகளை வைத்திருக்கிறோம். எந்த இடத்திலிருந்து அப்படிப்பட்ட தண்டனை ஆரம்பம் ஆகிறதோ, எந்த இடத்திற்குள் அன்னியர்கள் நுழைந்தால் தண்டனை ஆரம்பம் ஆகிறதோ அந்த இடத்திலிருந்துதான் 'ஹவுஸ்' ஆரம்பம் ஆகிறது. 'லாபி'யை 'ஹவுஸ்' என்று ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே லாபிக்கு மட்டும் வந்துவிட்டு கையெழுத்துப்போட்டுவிட்டுச் செல்வது நல்லதல்ல. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எம். ஜி. ஆர். நடவடிக்கை பற்றி ஒழுங்குப் பிரச்சினை கிடையாது, திரு. கணபதி அவர்கள் அறிக்கையைப் பற்றித்தான் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது, அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இங்கே எடுத்துச் சொன்னதால் நானும் எடுத்துச் சொல்கிறேன். இந்த அவையினுடைய உறுப்பினராக இருப்பதால்தான் நான் சொல்கிறேன். இந்த அவையே செத்துவிட்டது என்று சொன்ன பிறகு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உட்காருங்கள், அது வேண்டியதில்லை.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் :* இந்த இருட்டறையிலே வழக்கறிஞர்கள் எல்லாம் கண்தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது போல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சட்டமன்றம் ஒரு இருட்டறை என்று நினைப்பது மாதிரிச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது பேரவையைப்பற்றி அல்ல. பேறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்பற்றிச் சொன்னார்கள். சட்டம் என்பது ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் என்பது ஒரு விளக்கு என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கு அதைவிட பெரிய மரியாதையை நாம் செலுத்த முடியாது.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* நான் பேசலாமா? மதிப்பிற்குரிய உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் லாபியிலே கையெழுத்துப்போட்டார்கள். என்ற அந்த விஷயத்தை மையமாக வைத்துக்கொண்டு—செத்துவிட்டது என்று சொன்னவர்கள் கையெழுத்துப் போட்டார்கள், ஆகவே அவர்களுடைய கட்சிக்குக் கொள்கையில்லை என்று திரு. கணபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதலிலே நாம் ஒன்றைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். என்னை 5 நிமிடங்களுக்கு அனுமதித்தால், அமைதியாக இருந்தால் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிடுகிறேன்.

லாபியிலே வந்து உறுப்பினர்கள் கையெழுத்துப் போடுவதற்கு உரிமையிருக்கிறதா என்று கேட்டார்கள். அதற்கு லாபியிலே வந்து கையெழுத்துப் போடலாம் என்று துணைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். செத்துவிட்டது என்று சொன்னவர்கள் கையெழுத்துப் போட்டார்கள் என்று திரு. கணபதி அவர்கள் எடுத்துக் காட்டுவதின் மூலமாக கையெழுத்துப் போட்டவருக்கு கொள்கையில்லை எக்ஸெட்ரா என்று சொல்வதால் என்ன ஆகிறது என்றால் கையெழுத்துப் போடுவதற்கு ஒரு குந்தகமான நிலைமை ஏற்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து ஆகும். கையெழுத்துப் போடுகிற அந்தப் பணிக்கு, அந்தச் செயலுக்கு ஆபத்து வரக்கூடிய அளவில் அவர்கள் பயப்படக்கூடிய அளவில் கையெழுத்துப் போடுவதே ஆபத்து என்று தொனிக்கக்கூடிய அளவுக்கு மறைமுகமாக மிரட்டலாகத்தான் அமைந்திருக்கிறது. நீங்கள் மிரட்டுவதின் காரணமாக அவர்கள் சட்டசபைக்கு வரக்கூடிய செயலைச் செய்யமாட்டார்கள் என்று நினைக்கிறீர்கள், என்னை நீங்கள் மிரட்டினால் நான் செய்து கொண்டுதான் இருப்பேன். ஆனால் அவர்கள் என்ன செய்வார்களோ தெரியாது. அது எம். ஜி. ஆர். அவர்களுடைய பிரச்சினை.



திரு. கணபதி அவர்களாலே ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கருத்தை ஏற்படுத்தக்கூடிய முறையிலே—கையெழுத்துப் போட வேண்டுமா வேண்டாமா—போட்டால் என்ன நினைப்பார்கள் என்ற முறையிலே, அவர்கள் ஆன் எ செகண்ட் தாட் என்று நினைக்கக்கூடிய முறையிலே—ஒரு கவலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இரண்டாவதாக, ஒரு உரிமைப் பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது; அப்பொழுது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களும் அந்த விவாதத்திலே கலந்துகொண்டார்கள், அப்பொழுது கடைசியாக உரிமைப் பிரச்சினையாக அதை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்று அவர்கள் யோசனை சொன்னார்கள், துணைச் சபாநாயகராகிய தாங்கள் அதை ஏற்றுக்கொண்டீர்கள். செத்து விட்டது என்பது முடிந்துபோன விவகாரம். அதைப்பற்றி இப்பொழுது பேசத் தேவையில்லை.

பல விஷயங்கள் சொல்லியிருக்கலாம். மாற்றிக்கொள்ளலாம். எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய நேரத்திலே அவர்கள் போலீஸ் மானியத்திலே ஒரு விஷயத்தைச் சொல்லியிருப்பார்கள், ஆனால் முதலமைச்சராக வந்த நேரத்திலே அதை மாற்றிக்கொள்ளலாம், அவர்களுக்கு உரிமை இருக்கிறது. முன்னாலே அமைச்சராக இருந்த ஜோதி வெங்கிடாசலம் அவர்கள் அப்படி மாற்றிக் கொள்வதற்கும் உரிமை இருக்கிறது

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* நான் தலையிடுவதாக நீங்கள் நினைக்கக்கூடாது.

THIRUMATHI JOTHI VENKATACHELLUM : Sir, I want to make one clarification regarding the point raised by Dr. Hande Under any circumstances. . .
எந்தக் காரணத்தைக் கொண்டும் கட்சியிலேயிருந்தும் மாறமாட்டேன்; என்னுடைய கொள்கையையும் மாற்றிக்கொள்ளமாட்டேன்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* நான் அப்படிச் சொல்லவில்லை. நடைமுறையில் பல குறைபாடுகளை எடுத்துச் சொல்லலாம், அதைத்தான் சொன்னேன். ஆகவே அந்த முறையிலே அது முடிந்துபோன விவகாரம், அதை மீண்டும் எடுத்துப்பேச வேண்டிய தேவையில்லை. மூன்றாவதாக, இந்த சின்ன விஷயத்திற்காக, கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்ற சின்ன விஷயத்திற்காக இவ்வளவு பெரிய விஷயமாக அதை ஆக்கி மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் திரு. கணபதி அவர்கள் இவ்வளவு பெரிய அறிக்கை கொடுக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** வாபிக்கு மட்டும் வந்து கையெழுத்துப்போட்டு விட்ட காரணத்தினாலே அவர்கள் முன்னாலே சொன்னதற்கு அது மாறுபட்டதாக இருந்ததாலேதான் திரு. கணபதி அவர்கள் அவர்களுடைய கட்சியைப் பற்றிச் சொனார்களே தவிர, தனிப்பட்ட முறையிலே எந்தக் கருத்தையும் அறிக்கையிலே சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டு நிமிடங்களுக்குமேல் அனுமதிக்க மாட்டேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு கனம் அங்கத்தினர் திரு. கணபதி அவர்களின் அறிக்கையைப் பார்க்கும்போது, அன்றைக்கு ஒன்றைச் சொல்லிவிட்டார்கள் என்பதற்காகச் சட்ட சபைக்கு வரக் கூடாது என்று சொன்னால், சட்டசபை அங்கத்தினர் மனதுமாறி தன்னுடைய வேலையைச் செய்ய வேண்டுமென்று வந்தாலும் முட்டுக்கட்டை போடுவது மாதிரி இது இருக்கிறது.

இன்று சட்டசபையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்கிறோம், போய் கொஞ்ச நேரம் உட்கார்ந்து விட்டு அடுத்த நடவடிக்கைகளில் பங்கேற்க வருகிறோம். மீண்டும் எப்படி உள்ளே வரலாம், ஏதேனும் கொள்கை இருக்கிறதா என்று கேட்டால் சட்டசபையில் ஒழுங்காகப் பணிகளைச் செய்வதற்கு முட்டுக் கட்டைப் போடுவதாக இருக்கிறது.

எந்த காண்டக்ஸ்டிலே இப்படிச் சொன்னார் என்று பார்க்க வேண்டும். அதற்குத் தான் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தலாமே ஒழிய காண்டக்ஸ்டிலிருந்து பிரித்தெடுத்து அவ்வப்போது பயன்படுத்தி பயமுறுத்துவது என்பது நியாயம் கிடையாது, தர்மம் கிடையாது.

ஆகையினாலே, சட்டசபை அங்கத்தினர்கள் லட்சக்கணக்கான மக்களுக்குப் பதில் சொல்லவேண்டியவர்கள். தங்களுக்குப் பணியாற்றுவதற்காகச் சட்ட சபைக்கு அனுப்பினார்கள். மிரட்டல் மாதிரி அன்றைக்குச் சொன்னார்களே என்று சொல்லக் கூடாது.

பிரச்சினைகள் மாறும், நேரம் மாறும், காலம் மாறும், இந்த மாறுதல்களுக்கு உட்படுத்திக்கொண்டு தான் அங்கத்தினர்கள் பணி செய்யவேண்டும்.

இப்படிப்பட்ட பயமுறுத்தல் கட்டாயமாக உரிமைப் பிரச்சினையாகும். இப்படிப்பட்ட பயமுறுத்தல்—இந்தச் சட்டசபைக்கு அங்கத்தினர் வரக்கூடாது என்று சொல்வது—உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



**திரு. என். கணபதி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையில் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஏற்கெனவே சொல்லியதற்கு முரண்பட்ட முறையில் இங்கு வந்து கையெழுத்திட்டு சென்றிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

ஒரு அரசியல் கட்சியின் தலைவர், நாட்டு மக்களை வழி நடத்திச் செல்ல வேண்டுமென்று விரும்புவர், அடுத்த ஆளும் கட்சியாக வந்து நாட்டையாள வேண்டுமென்ற கனவுகளைக் கண்டு கொண்டிருக்கிறவர், எப்படி நடந்து கொள்கிறார் என்பதைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு அரசியல் வாதியைப் பற்றி விமரிசனம் செய்வதற்கு எனக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி, அவர் கையெழுத்திட்டுச் சென்றார் என்று வெளி உலகிற்கு அறிவித்தேன்.

இதில் உரிமைப் பிரச்சினை இருக்கிறதென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே இப்படிச் சொன்னவர்கள் ஏன் இங்கு வந்து கையெழுத்துப் போட்டார்கள் என்று விசாரணை செய்கிற மாதிரி என் அறிக்கை இருக்கிறது. இதற்கு அர்த்தம் கற்பித்து உரிமைப் பிரச்சினை இருப்பதாக நம்ப வைக்க முயன்றார்கள். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, என்ன நடைபெற்றதோ, அதை நான் சொன்னேன் தவிர, வேறு இல்லை. அவர் சட்ட மன்றம் செத்து விட்டது என்று சொன்னார். அவர் தான் கையெழுத்து போட்டுச் சென்றிருக்கிறார்.

இப்படி வந்து ஜனநாயகப் பணி செய்யவேண்டுமென்பது தான் இந்த நாட்டிலே இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் விரும்புகிற ஒரு செயலாகும். அதை விட்டு விட்டு அவர் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள 60 நாட்கள் முடிந்து விட்டது என்பதற்காகச் சட்ட மன்ற அவையில் உட்கார்ந்து தன்னுடைய பணிகளைச் செய்யாமல் வெளியிலே தான் இருந்ததற்கு அர்த்தம் கற்பிப்பதற்காக அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டரில் கையெழுத்துப்போட்டு போவது அரசியல் தலைவர்களுக்கு உகந்த காரியமல்ல என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இதில் ஏதோ நம்முடைய எம். ஜி. ஆர். அவர்கள் இங்கே சட்டமன்றத்தில் தங்களுக்கு உரிய பணியைச் செய்வதற்குத் தடங்கல் செய்தது மாதிரியும், மிரட்டல் செய்த மாதிரியும் இது அமையவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு ஒரேயொரு பிரச்சினையைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 190 (4) வது விதியிலே மீட்டிங்கிலிருந்து ஆப்சண்டு ஆனால் என்ன நிலைமை என்று பார்த்தால்,

[திரு. என். கணபதி] [1973 மார்ச் 31

உறுப்பினர் 60 நாட்கள் கூட்டத்திற்கு வராமல் இருந்தால் பதவி போகும் என்ற நிலைமை இருக்கிறது. சபைக்குள்ளே வராமல், வெளியே இருந்து அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுச் செல்வது எப்படி. அரசியல் அமைப்புச் சட்ட விதி முறைக்குட்பட்டது, அவர் கூட்டத்திற்கு வந்ததாக எப்படிக் கருதப்படும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த உரிமை பிரச்சினைத் தேவையில்லாத ஒன்று என்பது என்னுடைய கருத்தாகும்.

ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் தந்ததாகச் சொல்லப்படுகிற அறிக்கையிலும், தாங்கள் படித்துக் காட்டிய அறிக்கையிலும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அறிக்கையினுடைய வாசகங்களிலும் காணப்படுகிற வார்த்தைகளில் உறுப்பினர்களுடைய உரிமையை எந்த வகையிலும் பாதிக்கத் தருந்த வகையில் அமையவில்லை என்பது மிகத் தெளிவாக இருக்கிறது.

அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:

"சட்டமன்றம் செத்து விட்டது என்று அறிவித்திருந்த எம். ஜி. ஆர். இன்று சட்ட மன்றத்திற்கு வந்து கையெழுத்துப் போட்டு விட்டு சென்றிருக்கிறார்".

இது ஒரு செய்தி. முதலில் அவர் சொன்னதும் உண்மை. செத்து விட்டது என்று சொன்னார். அதை அவர் ஞாபகப்படுத்தியிருக்கிறார். "அவர் சட்ட மன்றத்திற்கு வந்து கையெழுத்துப் போட்டு சென்றிருக்கிறார்". இதுவும் உண்மை. அவர் சட்ட மன்றத்திற்கு வந்து கையெழுத்துப்போட்டிருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்தி இருக்கிறார். "அதிலிருந்து அவர் கட்சிக்கு கொள்கை இல்லை, அவர் சொல்கிற வார்த்தைகளில் பொருள் இல்லை என்று தெளிவாகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, எம். ஜி. ஆர். சட்ட மன்றத்திற்கு வர உரிமையில்லை என்று சொல்லப்படவில்லை. இந்த முரண்பட்ட வாதத்திலிருந்து, போக்கிலிருந்து கொள்கையில்லை என்று சொல்வதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. எங்களுடைய கட்சிக்குக் கொள்கை இல்லையென்று சொல்ல எதிர்க்கட்சிகளுக்கு உரிமை இருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்குக் கொள்கையில்லை என்று சொல்ல ஆளும் கட்சிக்கு உரிமை இருக்கிறது.

உரிமை இல்லையென்று சொல்கிற நேரத்தில் தான் பிரச்சினை உருவெடுக்கிறது. இதிலே அவர்களை மிரட்டுவதாக இந்த வாசகம் அமைந்திருப்பதாக திரு. தங்கமணி குறிப்பிட்டு இருப்பதை எந்த இடத்திலும் காண முடியவில்லை. அவர் மிரட்டப்படுகிறார், சபைக்கே வரக்கூடாது என்று அச்சுறுத்தப்படுகிறார்



1973 மார்ச் 31] [டாக்டர் மு. கருணாநிதி]

போன்ற வாசகம் இதிலே கிடையாது. நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் இங்கே வந்து விவாதத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்பதுதான் எங்கள் அனைவருடைய விருப்பமுமாகும்.

ஏனென்றால் வெளியிலிருந்து பல்வேறு பிரச்சினைகளை அவர் இந்த அரசுக்கு ஊறு தேடுகிற வகையிலே இந்த அரசாங்கத்தைப் பற்றி மக்களுக்குத் தவறான வகையில் கருத்துக்களைச் சொல்லாமல் இந்த அவையில் வந்து சொல்வார்களானால் அவரிடம் நாங்கள் விளக்கங்களைப் பெறவும், எங்கள் விளக்கங்களை அவர் பெறவும், இரண்டு பேருடைய விளக்கங்களை மக்கள் மன்றம் பெறவும் நிச்சயமாக வழி வகை ஏற்படும். ஆகவே அவர்கள் இந்த அவைக்கு வரவேண்டுமென்று பெரும் விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறோம். அவர் வராமல் இருப்பது அவருடைய விருப்பம். ஏன் வராமல் இருக்கிறீர்கள் என்று கேட்கிற அந்த உரிமை, அப்படிப்பட்ட அதிகாரம் நம்மிடத்திலே இல்லை.

ஆனால் ஏன் செல்லவில்லை என்று கேட்கிற அதிகாரம் தேர்ந்தெடுத்த மக்களுக்கு இருக்கிறது. அது வேறு விவகாரம். அதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஒரு உறுப்பினர் ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் அந்த ஜனநாயகக் கடமையைச் சரிவர சட்ட மன்றத்தில் ஆற்றினாரா, ஆற்றவில்லையா என்பதை ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் மக்களைச் சந்திக்கிற நேரத்தில் தொகுதியில் சென்று கூட நாம் எடுத்துக் கூறுகிறோம்.

ஆகவே அந்த உறுப்பினர்களைப் பற்றி சட்ட சபையில் சரியாகக் கடமையாற்றவில்லை என்பதைப் பற்றி தேர்தல் நேரங்களிலே குறிப்பிட்டதெல்லாம் உரிமைப் பிரச்சினையாகும் என்று எடுத்துக் கொண்டு வந்தால் உரிமைப் பிரச்சினை எண்ணற்ற அளவிற்குக் குவிந்து விடக்கூடும். எந்த அளவிலே பார்த்தாலும் இதில் எந்தவித மிரட்டலும் கிடையாது.

எதிர்க் கட்சித் தலைவர்களும், மற்ற கட்சியினரும் அமைச்சர்களை ராஜினாமா செய்யவேண்டும், வெளியேறவேண்டும், சட்டசபையில் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அவைகளெல்லாம் எங்களை மிரட்டுகிறதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் கட்சிக்கு சாதகமாக எடுத்தாளுகிற கருத்துக்களாக எடுத்துக்கொள்கிறோம். ஆகவே எந்த வகையிலும் "அதிலிருந்து அவர் கட்சிக்குக் கொள்கை இல்லை, அவர் சொல்கிற வார்த்தைகளில் பொருள் இல்லை என்று தெளிவாகிறது" என்று இப்படி நண்பர் கணபதி அவர்கள் எழுதியதில் எந்த வித மிரட்டலும் இல்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 31

திரு. ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அன்றைக்குக் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை, நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் இந்த அவை செத்து விட்டது என்று சொன்னதற்காகக் கொண்டு வரப்பட்ட உரிமைப் பிரச்சினை, விவாதித்து அதை நாம் மறப்போம், மன்னிப்போம் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப விட்டு விடலாம் என்று அன்றைக்கு எடுத்துச் சொன்னேன். அப்படிச் சொல்லும்போது, இது உரிமைப் பிரச்சினைக் குரியது. ஆயினும், மறப்போம், மன்னிப்போம் என்று அண்ணா அவர்களின் பொன் மொழிக்கேற்ப விட்டு விடலாம் என்று சொன்னேன்.

அது உரிமைப் பிரச்சினைக்குரியது, இந்த அவையிலுள்ள அத்தனை பேரும் செத்து விட்டார்கள், இந்த அவை செத்து விட்டது என்று ஆளும் கட்சியி லுள்ள எங்களை மாத்திரமல்ல, எல்லாக் கட்சியிலுள்ள உறுப்பினர்களின் உரி மையை பாதிக்கிற விஷயத்தைச் சொன்னார், என்ற காரணத்திற்காக உரிமைப் பிரச்சினை இருக்கிறது. இருந்தாலும் கூட மறப்போம், மன்னிப்போம் என்ற வாசகங்களுக்கேற்ப விட்டு விடலாம் என்று சொன்னேன்.

இன்றையதினம் திரு. தங்கமணி அவர்கள் கொண்டு வந்திருப்பதிலே உரி மைப் பிரச்சினை இல்லை. இல்லாத ஒன்றுக்கு மறப்போம், மன்னிப்போம் என்ற அவ்வளவு பெரிய கருத்தைப் பயன்படுத்துவது சரியல்ல என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொண்டு. இதிலே உரிமைப் பிரச்சினை கிளம்புகிற அளவிற்கு மிரட்டுகிற வாசகம் எங்கே இருக்கிறது? அவர் மிரண்டாரோ இல்லையோ, அவர் மிரளக் கூடியவர் அல்ல, ஆனால் தங்கமணி அவர்கள் இந்த அளவிற்கு மிரண் டிருக்கத் தேவையில்லை என்று கூறி உரிமைப் பிரச்சினைக்கு இடவேண்டிய அவசியமில்லையென்று எடுத்துக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏறத்தாழ 60, 70 நிமிடங்கள் இந்த உரிமைப் பிரச்சினைக்காக எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதிலே திரு. தங்கமணி அவர்கள் என்னிடம் அளித்திருக்கிற பத்திரிகையில் வந்த அறிக்கை யில், திரு. கணபதி அவர்கள் கொடுத்த அறிக்கையில், சட்ட மன்றம் செத்து விட்டது என்று அறிவித்து, இன்று சட்டமன்றத்திற்கு வந்து கையெழுத்துப் போட்டுச் சென்றிருக்கிறார், அதிலிருந்து அவர் கட்சிக்குக் கொள்கை இல்லை அவர் சொல்கிற வார்த்தைகளில் பொருள் இல்லை என்று மிக சுருக்கமாக இருக் கிறது.

ஆக, எம். ஜி. ஆர். அவர்கள் சட்ட மன்றத்திற்கு வந்து கையெழுத்துப் போட்டு விட்டுச் சென்றார், இப்படி போடக் கூடாது, அல்லது இன்னொரு தடவை வரக் கூடாது என்ற முறையில் பயமுறுத்துகிற வகையில் கருத்து இருப்பதாக திருமதி அனந்தநாயகி அவர்களும், உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்த திரு. தங்கமணி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.



1973 மார்ச் 31] [பேரவைத் துணைத் தலைவர்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியது போல் 'சட்ட மன்றத்திற்கு வரக் கூடாது, வர விடமாட்டோம்' என்ற தொனியில் அறிக்கை தரவில்லை. 'வந்திருக்கிறார்' என்று வருகையைக் குறிப்பிட்டிருக்கிறார். அவரு டைய வருகையைக் குறித்துக் கூட விமர்சனம் செய்யவில்லை. மாண்புமிகு உறுப்பினர் எம். ஜி. ஆர். அவர்கள் பங்கேற்கிற முறையைப் பற்றியோ, நடவடிக்கையைப் பற்றியோ கூட திரு. கணபதி அவர்கள் அறிக்கை விமர் சனம் செய்யவில்லை.

'சட்டமன்றத்திற்கு வரமாட்டேன் என்று சொன்னவர் வந்திருக்கிறார், எனவே அவர் கட்சிக்குக் கொள்கை இல்லை' என்ற அடிப்படையிலேதான் சொல்லியிருக்கிறாரே தவிர, தனிப்பட்ட முறையிலே பயமுறுத்தலோ, மிரட் டலோ இல்லை என்று கூறி, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இதிலே உரிமைப் பிரச்சினை எதுவும் இல்லை என்று தீர்ப்புக் கூறி திரு. தங்கமணி அவர் கள் கொண்டுவந்த உரிமைப் பிரச்சினையைத் தள்ளுபடி செய்கிறேன்.

## (4) கவன ஈர்ப்பு.

### சிவந்திபுரம் ஊராட்சிப் பகுதியில் பாரம்பரியமாகப் பயிரிடும் சில விவசாயிகளை வெளியேற்ற கோர்ட் உத்தரவிட்டுள்ளது குறித்து

**திரு. எஸ். சங்குமுத்து தேவர் :** துணைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத் திரம் தாலுகா, சிவந்திபுரம் பஞ்சாயத்துப் பகுதியில் பாரம்பரியமாகப் பயிரிடும் சுமார் 56 விவசாயிகளை 1972-ம் வருடம் ஏ. ஓ. கோர்ட்டு உத்தரவின் மூலம் வெளியேற்ற உத்தரவு பிறப்பித்ததன் காரணமாக அங்குள்ள விவசாயிகளின் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலைமைப் பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரி யத்தை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமத்தை அரசு, இனாம் கிராமமாகக் கருதி, அதனை தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரி மாற்றச்) சட்டத்தின்கீழ் 15—4—1965 அன்று அரசு தன்பொறுப்பில் முதன் முதலாக மேற்கொண்டது. இனாம்தார் திருவாவடுதுறை ஆதீனம் இச் சட்டத்தின் செல்திறனை எதிர்த்து சென்னை, உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. உயர்நீதிமன்றம் ரிட் மனுக்களைத் தள்ளுபடி

செய்துவிட்டது. பிறகு ஆதீனம் தலைமை உயர்நீதிமன்றத்தில் ரிட் அப்பீல்களைத் தாக்கல் செய்தது; அப்பீல்களும் 18—11—1970 அன்று தள்ளுபடி செய்யப்பட்டன. எனவே, 18—11—1970 முதற்கொண்டு மேற்படி கிராமம் அரசின் பொறுப்பில் வந்தது. ரிட் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு, இனாம்தாரர் மேற்சொன்ன கிராமத்தைச் சிறு இனாமாக அறிவிக்கக் கோரி மதுரை, நிலவரி ஏற்பாட்டு அதிகாரியிடம் தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரி மாற்றச்) சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 31/1963) மனு தாக்கல் செய்தது; ஆனால் நிலவரி ஏற்பாட்டு அதிகாரி மேற்சொன்ன கிராமம் "தற்போது உள்ள இனாம் எஸ்டேட்" என்று அறிவித்தார். மதுரை, நிலவரி ஏற்பாட்டு அதிகாரியின் ஆணையினால் துன்புற்ற ஆதீனம் திருநெல்வேலி, இனாம் ஒழிப்பு நடுவர் மன்றத்திடம் மேல் முறையீடு செய்து கொண்டது; இம் மேல்முறையீட்டின் மீது விசாரணை முடிவுறு நிலையிலுள்ளது. இதுகுறித்து மேற்கொண்டு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நடுவர் மன்றம் தடை விதித்தது. ஆகையால் நிலவரி ஏற்பாட்டு ஆய்வும் நடத்த முடியவில்லை; பட்டா பெற தகுதியுடைய நபர்களுக்குப் பட்டாவும் வழங்கப்பட முடியவில்லை.

இதற்கிடையில், திருவாவடுதுறை ஆதீனம் பயிரிடும் குத்தகைக்காரர்கள் 48 பேரை வெளியேற்ற தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 16/1968) 6-வது பிரிவின்கீழ் மனுக்களை தாக்கல் செய்தது; 20—4—1968-க்கு முந்தைய காலத்துக்கு குத்தகைக்காரர்களிடமிருந்து குத்தகைப் பாக்கி வரவேண்டியுள்ளது என்று இம் மனுக்களில் காரணம் காட்டப்பட்டது. மாவட்ட வருவாய் நீதிமன்றமாகச் செயல்பட்டுவரும் திருநெல்வேலி (நிலச்சீர்திருத்த), அதிகார உரிமை பெற்ற அதிகாரி இம்மனுவை விசாரணை செய்தார்; குத்தகைக்காரர்கள குத்தகைப் பாக்கியைச் செலுத்த வேண்டும் என்றும், 21—9—1971-க்கு முன் குத்தகைப் பாக்கிகளை வைப்பீடு செய்து விட்டு வைப்பீடு செய்ததற்கு சான்று காட்டும்படியும் கட்டளையிட்டு அதிகார உரிமை பெற்ற அதிகாரி 16—8—1971 அன்று தொடக்க ஆணைகளைப் பிறப்பித்தார். குத்தகைக்காரர்கள் குத்தகைப் பாக்கிகளை வைப்பீடு செய்யவில்லை; இது குறித்து மேல்முறையீடும் செய்து கொள்ளவில்லை. எனவே, திருநெல்வேலி (நிலச்சீர்திருத்த), அதிகார உரிமை பெற்ற அதிகாரி குத்தகைக்காரர்களை வெளியேற்ற 24—11—1971 அன்று இறுதி ஆணைகளைப் பிறப்பித்தார். 19—3—1972, 20—3—1972, ஆகிய நாட்களில் வெளியேற்று ஆணை நிறைவேற்றப்பட்டு திருவாவடுதுறை ஆதீனத்திடம் நிலத்தின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. திருநெல்வேலி (நிலச் சீர்திருத்த),



அதிகார உரிமை பெற்ற அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட வெளியேற்று ஆணையால் பாதிக்கப்பட்ட குத்தகைக்காரர்கள் மாவட்ட நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனுக்களைத் தாக்கல் செய்தனர். மாவட்ட நீதிமன்றத்தில் இம்மனுக்கள் விசாரணையில் உள்ளன.

இதற்கிடையில் அரசு தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்கள் குத்தகை பாக்கி (நிவாரணச் சட்டத்தை) (தமிழ்நாடு சட்டம் 21/1972) இயற்றியது. 1—7—1971 தொடங்கி 30—6—1972 அன்று முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை முழுவதையும் ஏற்கனவே செலுத்திவிட்டிருந்தால், அல்லது செலுத்திவிட்டதாகக் கருதப்பட்டால் அல்லது இச்சட்டம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாள்முதற்கொண்டு ஆறுமாத காலத்திற்குள் செலுத்தினால், நிலச் சொந்தக்காரருக்குப் பயிரிடும் குத்தகைதாரர் 30—6—1971 தேதியில் செலுத்தவேண்டிய குத்தகைப் பாக்கி முழுவதும் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ள குத்தகைப்பாக்கி செலுத்தப்பட்டதாகிவிடும் என்று குத்தகைதாரர்களுக்கு நிவாரணமளித்து மேற்சொன்ன சட்டத்தின் 3-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. 1—3—1972-ஆம் நாள் அல்லது அதற்குப் பிறகும், இச் சட்டம் வெளியிடப்பட்ட நாளான 11—8—1972-க்கு முன்னரும் குத்தகைப்பாக்கிக்காக வெளியேற்றப்பட்ட பயிரிடும் குத்தகைக்காரர்கள் 1—7—1971 அன்று தொடங்கி 30—6—1972 அன்று முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்குச் சேரவேண்டிய குத்தகையைக் குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தினால் அல்லது அத்தொகை அவர்களால் செலுத்தப்பட்டிருந்தால் அல்லது செலுத்தப்பட்டதாகக் கருதப்பட்டால் அவர்கள் வெளியேற்றப்பட்ட நிலத்தின் குத்தகை உரிமையை மீண்டும் பெறத் தகுதியுடையவராவார்கள் என்று மேற்சொன்ன சட்டத்தின் 7-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆதீனத்தால் வெளியேற்றப்பட்ட பயிரிடும் குத்தகைதாரர்களில் 23 பேர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் விதித்துறையையொட்டி 9—2—1973 அன்றும் 23—2—1973 அன்றும் தாம் வெளியேற்றப்பட்ட நிலத்தின் குத்தகை உரிமையை மீண்டும் தங்களுக்கு அளிக்கும்படி திருநெல்வேலி (நிலச்சீர்திருத்த), அதிகார உரிமை பெற்ற அதிகாரியிடம் விண்ணப்பித்துக் கொண்டுள்ளனர். குத்தகை உரிமையை மீண்டும் பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்ட மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. சட்டப்படி, அவை குறித்து முடிவு செய்யப்படும்.

நீதிமன்றத்திலும், நீதிமன்றம் போன்ற துறை சார்ந்த அதிகார மன்றங்களிலும் இவை விசாரணையில் உள்ளதால் இம்மன்றங்கள் தீர்ப்பு அளிக்கும் வரையில் இந்த குத்தகைதாரர்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** இதுமாதிரி இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்த கிராமங்களிலே ஏ. ஓ. கோர்ட்டு மூலம், 1971-ம் வருடம் பயிரிடும் விவசாயிகளை எவிக்ஷன் செய்து இருக்கிறார்கள். சட்டம் 28 (2) பிரிவுப்படி சாகுபடியாளர்களை வெளியேற்றக்கூடாது என்று இருந்தும் கூட வெளியேற்றம் செய்ய உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்தமாதிரி உத்தரவு பிறப்பித்ததன் காரணமாக விவசாயிகளும், இனாம்தார்களும் பணத்தைச் செலவு செய்து கொண்டு கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது மாதிரி உத்தரவு இருந்தும் அதிகாரிகள் அமல் நடத்த முடியாத நிலை இருக்கிறது. இதனால் விவசாயிகள் கோர்ட்டுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள் கோர்ட் மூலம் வெளியேற்றம் செய்த அந்த விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வண்ணம் உத்தரவு பிறப்பிக்கக் கூடிய அளவில் முடிவு செய்யுமா?

மேலும் சுமார் 6 மாதத்திற்கு முன்னதாக சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார்கள். அது போன்ற மசோதாவை அரசே கொண்டு வருவதாக அன்று அமைச்சர் அவர்கள்கூடத் தெரிவித்தார்கள். இந்தமாதிரி இனாம் கிராமங்களில் இருக்கக் கூடிய, நிலச் சீர்திருத்தச் சட்டங்களில் இருக்கக்கூடிய பல குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் அளவில் அமைச்சர் அவர்கள் சட்டம் கொண்டு வருவது எந்த அளவில் இருக்கிறது என்பதையும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் படிக்கும்போதே விளக்கமாகப் படித்தேன். குத்தகைதாரர்கள் எல்லாம் குத்தகை பாக்கி செலுத்தவில்லை என்று நீதி மன்றத்தில் மனுக் கொடுத்தார்கள். நிலவுடைமையாளர்களுக்குக் குத்தகை செலுத்தவில்லையா என்று விவசாயிகளைக் கேட்டபோது இவர்கள் மனு தாக்கல் செய்யவில்லை, குத்தகை பாக்கியையும் கொடுக்கவில்லை. எனவே, சட்டப்படி குத்தகைதாரர்களை வெளியேற்றுவதைத் தவிர வேறு வழி இல்லாது இருந்தது. அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் சென்ற பசலியோடு முடிவடையும் ஒரு நாளில் ஒரு பசலிக்குப் பாக்கியை மட்டும் கொடுத்து விடுவார்களானால் அவ்வளவு பசலிக்கும் பாக்கி இருக்குமானாலும் அவ்வளவும் தீர்ந்துவிட்டதாக ஆகும் என்ற முறையில் சொல்லி அப்படி ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி குறிப்பிட்ட நாளில் ஆறு மாத காலத்திற்குள் பாக்கியைக் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. குறிப்பிட்ட நாள் என்று போட்டதற்குக் காரணம் ஜனாதிபதியின் அங்கீகாரம் வரவேண்டியிருக்கிறது என்பதற்காகத்தான் அப்படிப் போட்டோம். ஆறு மாத காலத்திற்குள் பாக்கியைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.



அந்த ஆறு மாத காலத்தில் கொடுத்தார்களா இல்லையா என்ற விவரம் என்னிடம் இல்லை. அப்படிக் கொடுத்திருந்தால் மீண்டும் அந்த நிலத்தைக் குத்தகைக்குப் பெற உரிமை பெற்றவர்களாவார்கள். அப்படி ஆறு மாத காலத்தில் கொடுத்தார்களா இல்லையா என்ற விவரம் இல்லை. அதை விசாரித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தை நீட்டிக்க வேண்டுமென்றுதான் கேட்டார்கள். நீட்டிப்பதற்கு சட்டச் சிக்கல்கள் இருப்பதால் இப்போது நீட்டிப்பதற்கில்லை என்று முடிவு எடுத்திருக்கிறது அரசாங்கம். நீட்டிப்பதாக நான் சொல்லவில்லை என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** பல கோர்ட்களில் கேஸ்கள் இருக்கும்போது நில வெளியேற்றம் செய்யக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது, அதற்குப் பின்னால்தான் இந்தமாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தான் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதையும் தெளிவாகச் சொன்னேன். அரசைப் பொறுத்தவரையில் இனாம் எஸ்டேட் என்று சொல்லியிருக்கிறோம். நிலச்சொந்தக்காரர்கள் மைனர் இனாமாக டிக்ளேர் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். நாம் இனாம் எஸ்டேட் என்று வாதித்துக் கொண்டிருக்கிறோம். நம் வாதத்தை நீதிமன்றத்தில் நிச்சயமாக ஏற்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதில் வெற்றி பெற்று இனாம் எஸ்டேட்டாக்கப்பட்ட பிறகு யார் யார் உழுது கொண்டிருந்தார்களோ அவர்களுக்கு சட்டப்படி உள்ள உரிமைகளை வழங்க இருக்கிறோம். ஆனால் காலதாமதம் தவிர்க்க முடியாது, சட்டம் குறுக்கிடும் காரணத்தால்.

## (5) அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக் குழுவுக்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ் பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் 1973-74-ம் ஆண்டுக்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு முதல் அமைச்சர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

4. மாண்புமிகு தொழில் அமைச்சர்.

5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

6. திரு. து. ப. அழகமுத்து.

7. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.

8. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.

9. திரு. கே. டி. கே. தங்கமணி.

10. திரு. ஏ. ஆர். பெருமாள்.

11. திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்.

12. டாக்டர் எச். வி. ஹாண்டே.

13. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

14. திரு. இ. எஸ். தியாகராசன்.

பேரவையின் 193 (1) வது விதியின்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் இக் குழுவின் தலைவர் ஆவார்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1) வது விதியின்கீழ் 1973-74-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப்பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. திரு. இ. எஸ். தியாகராசன்.

2. திரு. கே. எஸ். கோதண்டராமையா.

3. திரு. என். கே. பழனிசாமி.

4. திரு. எல். அழகுத் தேவர்.

5. திரு. ஏ. சுவாமிதாஸ்.

6. திரு. துரை கோவிந்தராசன்.

7. திரு. நா. வெ. குருசாமி.

8. திருமதி வி. ப. பழனியம்மாள்.

9. திரு. எஸ். முருகையன்.



10. திரு. ந. முத்துவேல்.

11. திரு. எம். கோபால்.

12. திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்.

சட்டப் பேரவையில் 215 (1) வது விதியின்கீழ் திரு. இ. எஸ். தியாகராசன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) குழுக்களின் தலைவர்கள் நியமனத்தில் கடைப் பிடிக்கப்படும் மரபு குறித்து.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இக்குழுக்களுக்கு தலைவர்களை நியமிக்கிற விஷயத்தில் ஏதாவது கன்வென்ஷன்ஸ் உண்டா? உங்களுக்கு முழு அதிகாரமும் இருக்கிறது. குறிப்பிட்ட கமிட்டிக்கு இந்த ஆர்டர்படி என்று ஏதாவது உண்டா?

DR. H. V. HANDE: Sir, we would like to know the *Modus Operandi* adopted by the Hon. Deputy Speaker in the matter of appointment of Chairmen of these Committees. The Committee on Government Assurances point out the assurances given on behalf of the Government and prepare notes on that and so many things. We would like to be enlightened on the method adopted by the Hon. Deputy Speaker in selecting Chairman of this Committee. Of course he has the discretion. Last time it was from the Muslim League. The previous time it was I think from C.P.I., Mr. Manali was the Chairman. What is the method adopted?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்கிணங்க இந்தக் கமிட்டிகளின் தலைவர்களை நியமிக்கிற பொறுப்பு தங்களுக்கு இருந்தாலும் கூட இதற்கு ஏதாவது முறைகள் இருக்கின்றனவா? அதிலும் குறிப்பாக இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியாக விளங்குகிற ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் எல்லாம் ஏதாவது, ஒரு சலுகை இல்லை என்று சொன்னாலும் கூட முறையான உரிமைகளாவது இங்கு வழங்கப்படுகிறதா என்பதைத் தாங்கள் அறிவிக்கவேண்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதில், சாதாரணமாக நம்முடைய சம்பிரதாயம் என்னவென்றால் பி. எ. சி. க்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகப் போடுவது வழக்கம். அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியாக இருந்தால் எதிர்க்கட்சித் தலைவர்தான் பி. எ.சி. யின் சேர்மனாக இருப்பார்கள். மற்றக் கமிட்டிகளைப் பொறுத்தவரையில் பேரவைத் தலைவரின் டிஸ்க்ரிஷன் பொறுத்து நியமிப்பதுண்டு. இது உங்களுக்குத் தெரியும்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களிடம் சில விளக்கங்களைக் கேட்டார்கள். பொதுவாக, அங்கீரிக்கப்பட்ட எதிர்க்கட்சியாக இருந்தால் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சேர்மனாக அதன் தலைவரே வருவார்கள். அப்படி ஒரு அமைப்பு அமையாத காரணத்தால் இது ரொட்டேஷன் முறையில் கொடுத்துக்கொண்டு வரப்படுகிறது. முதல் ஆண்டு காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்தோம். அடுத்த ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கொடுத்தோம். இப்போது பார்வேர்ட் ப்ளாக் கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி வரிசையாக வரும். அப்படிப் பார்க்கிறபோது தமிழரசுக் கழகத்திற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்றால் கிடைக்காது நம் பதவின் காலத்திற்குள். ஆகவே அஷ்யூரன்ஸ் கமிட்டிக்கு போன தடவை லீகிற்குக் கொடுத்ததைப் போல் இந்தத் தடவை தமிழரசுக் கழகத்திற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதில் ஒன்றும் முறைகேடு இல்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி இல்லை என்றாலும் தோழமை எதிர்க்கட்சிகள் இருக்கின்றன. உண்மையான எதிர்க்கட்சிகளும் இருக்கின்றன.
Public Accounts Committee is a very important Committee இன்று பார்வேர்ட் ப்ளாக் அல்லது முஸ்லீம் லீக்-க்குக் கொடுப்பார்களேயானால் தோழமை எதிர்க்கட்சிக்குக் கொடுப்பார்களா அல்லது உண்மையான எதிர்க் கட்சிக்குக் கொடுப்பார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

THIRU M. A. LATHEEF : I take objection to that. What does she mean by that?

*(சில உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள் நாளைக்கு நீங்கள் கூட தோழமைக் கட்சியாகலாம்.





THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the Public Accounts Committee is a very important Committee. The Chairmanship of that Committee—you must give to a real Opposition Block.

MR. DEPUTY SPEAKER : It is not in my discretion to distinguish between real opposition and pseudo-opposition.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பி. எ.ஸி. பொறுத்தவரையில், முதலில் காங்கிரஸ்க்குக் கொடுத்த பிறகு அடுத்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுத்து, இப்போது பார்வேர்ட் ப்ளாக் கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வரிசையாக வரும். அந்த வகையில்தான் பி. எ. ஸி. பொறுத்தவரையில் முறை கையாளப்படுகிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எந்தக் கமிட்டி சேர்மன்ஷிப் பற்றியும் கவலைப்படவில்லை. கேட்கவில்லை. வேண்டாம். we do not bother about it. நாங்கள் கெஞ்சிக்கேட்கிறமாதிரி இல்லை. நமக்கு தேவை இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தேவையில்லை, அதைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றெல்லாம் சொல்வது நல்லதல்ல. ஏனென்றால், முதலில் திருவன காங்கிரஸ் கட்சியின் சார்பில் அவர்கள் தலைவராக இருந்து இருக்கிறார்கள், அடுத்தபடியாக இந்திய கம்யூனிஸ்ட்க் கட்சியின் சார்பில் தலைவராக இருந்திருக்கிறார்கள், இப்படி வரிசைப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்தது லீக், அடுத்தது சுதந்திரா வரலாம். அதற்குப் பிறகு ஆளும் காங்கிரஸ் கட்சி, பிறகு அ. தி. மு. க. வரலாம். இப்படி வரிசையாக ஒவ்வொரு கட்சிக்கும் கொடுக்கவேண்டுமென்று கொடுக்கிறோம். எதிர்க்கட்சிக்குத் தரக்கூடாது என்பதல்ல. முதலில் காங்கிரஸ், அடுத்து கம்யூனிஸ்ட் கட்சி, மூன்றாவதாக பார்வேர்ட் ப்ளாக் என்று தரப்படுகிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய கொறடா அவர்களிடத்திலும் கேட்டோம். அஷ்யூரன்ஸ் கமிட்டிக்கு முஸ்லீம் லீக்கிற்கு கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தடவை கேட்கலாம் என்றால் நாங்கள் உரிமையோடு கேட்கலாம். காரணம், தேர்தலில் நாங்களும், பொன்னப்ப நாடார் அவர்கள் கட்சியும் கட்சி ரீதியாக உங்களை எதிர்த்து, உதய சூரியனை எதிர்த்து நாங்கள் வந்திருக்கிறோம், 1971-ல். ஆகவே நாங்கள் கேட்கலாம். ஆனால் நாங்கள் வற்புறுத்தவில்லை. இதை ஒரு பெரிய இஷ்யூ ஆக ஆக்கவில்லை. நாங்கள்தான் அதையெல்லாம்

தட்டிக்கேட்கிறோம். 'அஷ்யூரன்ஸ்' என்றால் தட்டிக்கேட்பது என்று அர்த்தம். அரசாங்கம் அதை நிறைவேற்றிவிட்டதா என்று கேட்பதாக அர்த்தம். அதை எதிர்க்கட்சிகளுக்கு கொடுக்கவேண்டும். சில நேரங்களில் அது முடியாமல் போகலாம். பாராளுமன்றத்தில்கூட திரு. செழியன் அவர்களுக்கு பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி தலைவர் பதவி கொடுத்தார்கள். தோழமை கட்சி என்று இருந்தாலும் கொடுத்தார்கள். பொதுவாக, 'அன்டர்ஸ்டாண்டிங்' பேரில் தான் தருகிறீர்கள். எலெக்ஷன் என்று வைத்தால் எங்களுக்கு ஒரு சீட் கூட கிடைக்காது. அது தெரியும்.

We are only six. We are grateful to the ruling party for certain things.

நாங்கள் வற்புறுத்திக் கேட்கவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

### (6) தன்னிலை விளக்கம்.

### மதுரை டிரஷரி ஆபீசர் பற்றி திரு. சுப்பு கூறியது பற்றி—வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கம்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற 23—3—1973-ம் நாள் மாண்புமிகு கம்யூனிஸ்ட்டுக் கட்சி உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு பிரச்னையை இங்கே என்னைப் பற்றி எழுப்பியிருக்கிறார்கள். நான் அன்றைதினம் சபையில் இல்லாததால் என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சுப்பு பேசுகிறபோது என்னுடைய உறவினர் ஒருவர் மதுரையில் டிரஷரி ஆபீசராக இருக்கிறார் என்றும், அவருக்கு நான் அதிகச் சலுகை காட்டியிருப்பதாகவும் இங்கே பேசியிருக்கிறார்கள். அதை ஒட்டி "அமைச்சர் அன்பிலின் உறவினருக்குச் சலுகை, சுப்பு குற்றச்சாட்டு" என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. பொதுவாக அவர் சொல்லியிருக்கின்றார். திரு. ராமதாஸ் அவர்கள் உண்மையிலேயே என்னுடைய உறவினர் அல்ல. தெரிந்தவரும் அல்ல. எனக்குக் கிடைத்த விவரங்களிலிருந்து ஒன்று தெரிகிறது. அவர் மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையத்தில் மறவர் குலத்தைச் சார்ந்தவர் என்று தெரிகிறது. நண்பர் சுப்பு, அவர்கள் மறவர் குலத்தைச் சார்ந்தவர் என்பதால் எனக்கு உறவினர் என்று சொல்லியிருந்தால், அவர்கள் அத்தனை பேரும் எனக்குச் சொந்தக்காரர்கள் என்ற பொருளில் சொல்லி இருந்தால் உண்மையிலேயே பெருமையோடு அதை நான் ஏற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பேரறிஞர் அண்ணா அவர்கள், முக்குலத்தோரை மாத்திரமல்ல எங்களையெல்லாம் ஆளாக்குகிற நோக்கில் நாம் எல்லோரும் ஒரே தாயின் வயிற்றில் பிறப்பதற்கு, அந்தத் தாயின் வயிறு தாங்காது என்ற காரணத்தால் தனித் தனியே தாயின் வயிற்றில் பிறந்திருந்தாலும், நாமெல்லாம் ஒரேகுடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற குடும்ப பாசத்தை அரசியலில் வளர்த்தார்கள். அந்தப் பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைத்தான் சாரும்.

அந்த வகையில் நான் பெருமையோடு அதை எடுத்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நண்பர் சுப்பு அவர்கள் ஏதோ அமைச்சர் அன்பில் அவர்களுக்கு உறவினர் என்று சொல்லி அவர் ஏதோ சலுகை பெற்றுவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று அமைச்சர் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் கூட என்னிடத்தில் உறவினர்கள் என்று சொல்லி இருப்பதைப் பார்க்கிறோம்.

எனவே அவர் சாட்டியிருக்கின்ற குற்றச்சாட்டில் சொல்லப்பட்டவர் எனக்கு உறவினரும் அல்ல, சொந்தக்காரரும் அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். முக்குலத்தோரைச் சார்ந்தவர் என்ற முறையில் சொல்லியிருந்தால், பல பேர் இங்கேயே என் இனத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் என்னுடைய உறவினர் என்று கருதினால், அண்ணா அவர்களின் தத்துவத்தின் படி சுப்பு அவர்களையும் உறவினராக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அவர் சுட்டிக் காட்டியிருக்கும் அந்த நபருக்கும் எனக்கும் சொந்தமோ, பந்தமோ இல்லை என்பதை நான் இந்தச் சபைக்கு விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

### (7) அறிக்கை அளித்தல்.

**ஆளுநர் பேருரையின்போது வெளிநடப்புச் செய்த சில உறுப்பினர்கள் மீதும், டாக்டர் எச். வி. ஹாண்டே, தென்னகம் நாளிதழ் அச்சிடுவோர், வெளியிடுபவர் ஆகியோர் மீது கொண்டுவரப்பட்டுள்ள வழக்குகள் மீதான அவையுரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கை.**

MR. DEPUTY SPEAKER: The hon. Member Thiru M. A. Latheef will now present the Reports of the Committee of Privileges on behalf of the Chairman.

THIRU M. A. LATHEEF: Sir, on behalf of the Chairman of the Committee of Privileges, I present the Interim Reports on (i) the matter of privilege against certain Opposition Members who staged walk-out just before the Governor's Address on 2nd

February 1973 and (ii) the matter of privilege against Dr. H. V. Hande and Editor and Publisher and Printer of the Tamil Daily 'Thennagam'.

Sir, on behalf of the Chairman of the Committee of Privileges, I move—

"That under Rule 191 (b) of the Assembly Rules, the Reports of the Committee of Privileges presented to the Assembly today be taken into consideration."

The motion was put and carried and the reports were taken into consideration.

MR. DEPUTY SPEAKER: The hon. Member Thiru Latheef will now move that "the Assembly agrees with the recommendations contained in the reports."

THIRU M. A. LATHEF: Sir, on behalf of the Chairman of the Committee of Privileges, I move—

"That under Rule 191 (d) of the Assembly Rules, this Assembly agrees with the recommendations contained in these Reports."

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, there is no report at all placed on the table of the House.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தேடிப் பாருங்கள். அங்கே இருக்கும். நீங்கள் லேட்டாக வருகிறீர்கள். மற்ற உறுப்பினர்கள் உங்களுடையதை எடுத்துக்கொண்டிருப்பார்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Usually these reports used to be printed and circulated. This one is a typed copy . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I say something regarding this. Sir, now that the motion is before the House I would like to say a few words. So far as these instances are concerned, I think it is better that we drop the whole matter. That is my humble request. So far as walk-out is concerned, there are several instances in several legislatures where such things have happened . . .

MR. DEPUTY SPEAKER: We are sending these matters to the next Committee. That is all.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இது அடுத்த கமிட்டிக்குப் போகிறது. இன்னொரு கமிட்டிக்குப் போகிறது. அவ்வளவுதான்.



MR. DEPUTY SPEAKER: The hon. Members have got the right to discuss any motion brought before the House. But here, we are referring these matters to the next Committee.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அனுப்பாமலே விட்டாலும் ஒன்றும் இல்லை, நாம் பெருந்தன்மையாக இருப்பதால் ஒன்றும் நஷ்டமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அனுப்பாமல் விடலாம். முடிவு என்ன என்று தெரிந்து கொண்டு விடலாம் அல்லவா?

The motion moved by Thiru M. A. Latheef was put and carried.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று நம்முடைய பிசினெஸ் அட்வைசரிக் கமிட்டியில் 3 மசோதாக்களை எடுப்பது என்று முடிவு செய்து இருக்கிறோம்.

### (8) அரசினர் சட்ட முன்வடிவு.

**தமிழ் நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை, வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு.**

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு உள்ள தமிழ் நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை, வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (பேரவைச் சட்ட முன்வடிவு எண் 39/1972) ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்", என்று நான் கோருகிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

பேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவு அவையின் ஒப்புதலோடு கூட்டாய்வுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. கூட்டாய்வுக் குழுவில் பேரவை, மேலவை உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களுடைய விரிவான, விளக்கமான விவாதத்திற்குப் பின் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கமணி அவர்கள் தவிர

---

* 15—3—1973-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

ஏனைய அங்கத்தினர்கள் அனைவரும் தங்களுடைய ஒருமித்த கருத்தை தெரிவித்து அந்த ஒருமித்த கருத்துக்கிணங்க சட்டமுன்வடிவில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு இந்தப் பேரவையின் ஒப்புதலுக்கு தற்போது வந்துள்ளது. கூட்டாய்வுக் குழுவின் அறிக்கை மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையையும் மாண்புமிகு அங்கத்தினர்கள் படித்திருக்கின்றீர்கள்.

ஆய்வுக் குழுவின் மாற்றப்பட்ட இந்தத் திருத்த மசோதாபடி தற்காலிகமாக அப்போதைக்கப்போது ஆயுள் நீடிக்கப்பட்டு வந்த இந்த மூலச்சட்டம் நிரந்தரமான ஒரு சட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. மேலும் 1960-வரை கட்டப்பட்ட வீடுகளுக்கே முன்பு அமுலாக்கப்பட்டு வந்த இந்தச் சட்டம் தற்போது எல்லாக் கட்டடங்களுக்கும் அமுலாக்கப்பட்டிருக்கிறது.

கூட்டாய்வுக் குழு புதியதாக வீடுகள் கட்டுவதற்குண்டான வேகத்தைத் தடை செய்யக்கூடாது என எண்ணி புதியதாக கட்டப்படும் வீடுகளுக்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு விதிவிலக்கு அளிக்கக் கோரி, அதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும், ஆய்வுக்குழுவின் பரிந்துரைக்கேற்ப 250 ரூபாய்க்கு மேற்பட்ட குடியிருப்பு வீடுகளுக்கு இருந்த விதிவிலக்கு ரூபாய் 400 வரை உயர்த்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, அதிகப்படியான வீடுகள் சட்டத்தின் கீழ் கொணரப்பட இருக்கிறது.

மேலும் நியாய வாடகை நிர்ணயிப்பதில் அவை முன் முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவின் படி வீட்டைக்கட்டும் தேதியில் என்ன செலவாயிற்றோ அந்தச் செலவையும், வீட்டின் மனைக்கு 'மார்க்கெட் வேல்யூ' வையும் நிர்ணயித்து 'டிப்ரிசியேஷன்' கழித்து நியாய வாடகை குடியிருப்பு வீடுகளுக்கு 9 சதவிகிதம் என்றும், மற்றக் கட்டடங்களுக்கு 12 சதவிகிதம் என்றும் நிர்ணயிக்கலாம் என்று இருந்தது.

ஆனால் கூட்டாய்வுக் குழுவில் மாண்புமிகு திரு. தங்கமணி நீங்கலாக அனைவரும் நியாயவாடகை நிர்ணயிப்பதற்கு மனுச் செய்யும் காலத்தில் உள்ள 'காஸ்ட் ஆப் கன்ஸ்டிரக்ஷன்' என்ன என்பதைக் கண்டு அதில் 'டிப்ரிசியேஷன்' போக மீதியை அடிப்படையாகக்கொண்டு நியாயவாடகை நிர்ணயிக்கப்படவேண்டும் என்று தெரிவித்த ஒருமித்த கருத்துக்கேற்ப மசோதாவில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.



இன்னும் வீட்டின் சொந்தக்காரர், வாடகை கொடுப்பவர் அனுபவித்து வரும் எந்தவிதமான வசதியையும் நீக்கவோ குறைக்கவோ கூடாது என வகை செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 'மெம்பர் ஆப் தி பேமிலி; 'டெனன்ட்' என்கிற சொற்றொடர்களுக்கு விளக்கம் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய திருத்தங்களோடு மேலும் சட்டத்தை நடைமுறையில் நன்கு அமுலாக்குவதற்காகச் செய்யப்பட்ட சாதாரணத் திருத்தங்களும், கூட்டாய்வுக் குழுவில் பரிசீலிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு மாறுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த நேரத்தில் கூட்டாய்வுக் குழுவில் கலந்து கொண்டு நல்ல கருத்துக்கள் வழங்கிய மாண்புமிகு அங்கத்தினர்கள் அனைவருக்கும் என் நன்றியைக் கூறி, கூட்டாய்வுக் குழுவில் மாற்றியமைத்தபடி உள்ள இந்தச் சட்டமுன்வடிவை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment—

"The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 39 of 1972) as reported by the Joint Select Committee be recommitted to make suitable amendments in favour of tenants."

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா மறுபடியும் பொறுக்குக் கமிட்டிக்கும் போகவேண்டும், குடித்தனக்காரர்களுக்கு பாதுகாப்பு சரியாகவில்லை, அவர்களுக்குச் சரியானபடி பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இனதத் திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

இன்றையதினம் சுதந்திரமடைந்து பல வருஷங்களாகியும் நடைபாதைகளில் லட்சக்கணக்கான மக்கள் வாழ்கின்றார்கள். அதேபோல் கோடிக்கணக்கானோர் குடிசைகளில் வாழ்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் வீடு கொடுப்பதென்பதுதான் சோஷல் ஜஸ்டிஸ், சோஷல் லெஜிஸ்லேஷன் என்று சொல்லப்படுவதாகும். அது தான் நியாயத்தின் அடிப்படையில் எடுக்கப்படும் சட்டங்கள் ஆகும். அதே மாதிரி வீட்டு வாடகை ஏராளமாக ஏறிக்கொண்டிருக்கின்ற

இந்த நேரத்தில் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு நியாயமான முறையில், நியாயமான வாடகையில் வீடுகள் கிடைப்பதில்லை என்பதும் ஒரு சோஷல் லெஜிஸ்லேஷனாகும். ஆகவேதான் சட்டம் மேலும் மேலும் அந்த டெனன்டஸ்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்குப் பதிலாக இன்றையதினம் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு அதிகமான சலுகைகளைக் கொடுப்பதாகத்தான் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. ஆகவேதான் இதை மறுபடியும் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

இன்றையதினம் இந்த நகரத்தில் வாழாதவர்கள் பல பேர் வெளியூர்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள். கட்டடங்கள் பத்து இடத்தில் அவர்களுக்கு இருக்கும். யாருக்குச் சொந்தம் என்றாலே தெரியாது. கல்கத்தாவில் இருக்கிறார்கள், டெல்லியில் இருக்கிறார்கள் இந்த வீட்டின் சொந்தக்காரர்கள் என்றுதான் சொல்லத் தெரியும். இந்தமாதிரி ஏராளமானபேர்கள் கள்ளப்பணத்தை வைத்துக் கொண்டு வீடுகள் கட்டி இருக்கிறார்கள். அதிலே நல்ல நிரந்தரமான லாபம் வருகிறதென்ற காரணத்தால்தான் வீடுகள் வாடகைக்கு விடுகிறார்களே தவிர வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் அல்ல, அது மட்டுமல்ல, இன்றையதினம் 1 லட்சம், 1¼ லட்சம் என்று கொடுத்து வீடுகள் வாங்கி அவற்றை கொஞ்சம் ரிப்பேர் செய்து 2, 2½ லட்சத்திற்கு விற்கின்றார்கள். இது ஒரு பெரிய பிசினஸ். பெரிய வியாபாரம். அதோடு வேலை இல்லாத இன்ஜினீயர்களுக்கு வேலை கிடைக்கவும் ஒரு வாய்ப்பாக இருக்கிறது. இதற்கு ஒரு கட்டுப்பாடு செய்து, கள்ளப்பணத்தைக் குறைத்து, அந்த டெனன்ட்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்குப் பதிலாக இன்றையதினம் அந்தக் கேடுகளை வளர்ப்பதற்கு பச்சை விளக்கு காட்டுவதாக இந்த மசோதா அமைந்திருக்கிறது.

அடுத்தபடியாக வேல்யுவேஷன் எப்படி இருக்கிறது? 1940 ஆம் வருஷத்தில் வாடகைக்கு வந்த நபர் அவரும் வீட்டுக்காரரும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அந்த வீட்டுக்கு வாடகை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். 1960 ஆம் ஆண்டு சட்டத்தில் அந்தக் கட்டடமும் அந்த பிளிந்த் ஏரியாவின் மார்க்கெட் எந்த விலைக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு 6 சதவீதம் ரெசிடன்ஷியலுக்கும், 9 சதவீதம் நான்-ரெசிடன்ஷியலுக்கும் விதிக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் கொண்டு வந்திருக்கின்ற மசோதாவின்படி



பார்த்தால் மார்க்கெட் மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 6 சதவீதமிருந்ததை 9 சதவீதமாகவும், 9 சதவீதமிருந்ததை 12 சதவீதமாகவும் ஏற்றியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. 1960 ஆம் வருஷத்திய சட்டப்படி கட்டடத்திற்குரிய பிளிந்த் ஏரியாவுக்கான மார்க்கெட் மதிப்புதான் கணக்கிடப்பட்டது. இன்றையதினம் அதை ரீபிக்ஸ் பண்ணுகின்ற முறையில் இன்னும் அந்த கிரவுண்டுக்கு பாதிக்கு மார்க்கெட் மதிப்பு போட்டு, அதையும் சேர்த்து கட்டிடத்தின் மதிப்பை உயர்த்தும் அளவுக்கு இருக்கிறது. அது மட்டுமல்லாமல், டிப்ரிசியேஷன் இருக்கிறது.

டிப்ரிசியேஷன் முன்பு 6 சதவீதம் இப்பொழுது ஒரு சதவீதம் குறைத்திருக்கிறார்கள். ஒரு பத்து வருஷத்திற்கு முன்பு கட்டியிருந்தால் அதனுடைய மதிப்பு எவ்வளவு இப்பொழுது குறையும் என்று கேட்டால், ரூபாய் 200 தான். ஆகவே இதன் காரணமாக 100 ரூபாய் வாடகை இருந்த வீடுகளுக்கு 500, 600 என்று பல மடங்குப் பெருகிப் போகுமளவுக்கு நிலைமை மாறிவிடுகிறது. அதற்கு இந்த மசோதா வகை செய்கின்றது என்றால் இது சோஷலிச டிரெண்டுக்கே விரோதமாக இருக்கிறது. வாடகைக்காரர்களுக்குப் பாதகமாகயிருக்கிறது.

அடுத்தபடியாக, இதற்கு விலை நிர்ணயிக்கும் தன்மை ஸிட்டி டெனன்ட்ஸ் ப்ரொட்டெக்ஷன் ஆக்டில் இருக்கிறது. அது கோர்ட்டுக்கு வருகிறது. விலை நிர்ணயிப்பது, அந்தக் கட்டடத்திற்கு வாடகை எவ்வளவு என்பது போன்றவற்றை நிர்ணயிப்பதை கோர்ட்டுக்கே விடலாம். அது மட்டுமல்ல. 1969 ஆம் வருஷம் சுப்ரீம் கோர்ட்டில், ஒரு கட்டடம் கட்டிய சமயத்தில் என்ன மதிப்பு போடப்பட்டதோ அதன் மேல் 6 சதவீதம், 9 சதவீதம் நிர்ணயிக்க வேண்டுமே தவிர அதற்கு மேல் போடக்கூடாது என்று சொல்லியிருந்தும் இந்தமாதிரி பொறுக்குக் கமிட்டி அதிகம் போட்டிருப்பது சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் மறுபடியும் செல்லாது என்றுதான் சொல்வார்கள்.

அடுத்தபடியாக, ரீபிக்சேஷனுக்கு ஒரு பழைய கட்டடம் வருகிறதென்றால் 1929 லிருந்து 1973-க்கு கணக்கு போட்டால் 25 மடங்கு விலை ஏறியிருக்கிறது. 1949-க்கும் இன்றையதினத்திற்கும் உள்ள மதிப்பு வித்தியாசத்தைக் கணக்குப் போட்டால் 17 மடங்கு அதிகமாகியிருக்கிறது. 1960-க்கும் 1973-க்கும் கணக்குப் போட்டால் மூன்று மடங்கு அதிகமாகியிருக்கிறது. ஆகவே 1949 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடங்களின் மதிப்பு இன்றையதினம் 25 மடங்கு ஏறியிருக்கிறது. முன்பு ஒரு கட்டடத்திற்கு சதுர அடிக்கு இரண்டாயிரம் ரூபாய் என்றால் இப்பொழுது ஐம்பதாயிரம் ரூபாய் செலவாகிறது.

பழைய கட்டிடங்களை மதிப்பிடும்போது ரீபிக்ஸ் பண்ணலாம் என்று சொல்லப்பட்டதால் அந்தக் கட்டிடங்களின் மதிப்பு உயர்த்தப்பட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சாதாரணமாக, சென்னை நகரத்தில் ரூபாய் 150-க்குச் குறைவாக வாடகைக்கு இடம் கிடைக்காது. சாதாரணமாக இரண்டு ரூம் இருக்க வேண்டுமென்று விரும்பினால் அந்த வாடகை கொடுக்க வேண்டும். ஆகவே இந்தப் புதிய சூழ்நிலையினால் மேலும் வாடகை உயரும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே இதை ஒரு ரொம்ப மோசமான மசோதா என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த சீலிங்கை 250 லிருந்து 400-க்கு உயர்த்தியிருப்ப தாகச் சொன்னார்கள். இந்த சீலிங்க் அவசியம்தானா. லேண்ட் லார்டு லேண்ட் லார்டுதான். டெனன்ட் டெனன்ட்தான். அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. இந்த சீலிங்க் தேவைஇல்லை. அதை நீக்கி விட வேண்டும்.

அடுத்தபடியாக ஒரு கட்டிடத்திற்கு அது கட்டப்பட்ட ஐந்து வருஷ காலத் திற்கு கண்ட்ரோலுக்கு வாவேண்டியதில்லை என்றிருக்கிறது. எந்த அடிப்படை யில் இந்த விதி விலக்கு கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படவில்லை. 1960-ஆம் ஆண்டு சட்டத்தில் புதியதாகக் கட்டப்படுகின்ற கட்டிடங்களுக்கு எல்லாம் விதி விலக்கு பூராவும் இருக்கிறது. இப்பொழுது புதியதாக நிலைமை என்ன என்பதும், அதற்குக் காரணமென்ன என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட வில்லை. இது ஒரு நிரந்தரமான சட்டம். 1960 ஆம் ஆண்டுக்குப் பின்னால் கட்டப்பட்ட கட்டடங்களுக்குப் பொருந்துமா, கண்ட்ரோலில் வருமா வராதா என்று சொல்லப்படவில்லை. ஐந்து வருஷமென்று அந்த அளவுக்கு விதி விலக்கு இருக்க வேண்டிய அவசியமென்ன? கட்டடம் கட்டியவுடனேயே வாடகைக்குத்தானே விடுகிறார்கள். ஐந்து வருஷத்திற்கு யாரும் வரமாட்டார் களா? இந்து விதி விலக்குக்கு அவசியமென்ன என்று தெரியவில்லை. அடுத்த படியாக குடும்பம் (பேமிலி) என்றால் கணவன், மனைவி, (ஹஸ்பண்ட், ஒய்ப், டிபெண்டண்ட்ஸ்) மற்றும் தங்களையே நம்பியிருப்பவர்கள் என்று போடப்பட் டிருக்கிறது. இதன்படி பேமிலி-குடும்பம் என்று சொன்னால் யாரைவேண்டு மானாலும் சேர்க்கலாம், அதற்குப் பதிலாக லீகல் ஹேர்—சட்டப்படி வாரிசுகள் என்று இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சப்-டெனன்ட் பற்றி, சாதாரணமாக குடிசைகளில் இருக் கிறவர்களுக்கு சர்க்கார் வீடு கட்டிக்கொடுக்கிறது. 10 ரூபாய் வாடகை என்று நிர்ணயிக்கிறது. அவர்கள் 10 ரூபாய் வாடகையில் வீட்டைப்பெற்றுக் கொண்டு



அதை 30 ரூபாய்க்கு வேறு ஆட்களுக்கு வாடகைக்கு விடுகிறார்கள். அப்படி பெருவாரியானவர்கள் வீட்டை வாங்கி சப் டெனன்டுக்கு விடுகிறார்கள். அதை ஒரு வியாபாரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். சட்டப்படி அப்படிச் செய் யக்கூடாது என்று இருக்கிறது. ஆகவே, சப் டெனன்டையும் இந்த மசோதா வில் சேர்த்து, அவர்களும் லான்ட் லார்டுகளுக்கு வாடகை கொடுக்கக்கூடிய வகையில் மாற்றம் செய்யவேண்டும்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தில் கட்டிக்கொடுக்கின்ற வீடுகளை மற்றவர்களுக்கு வாடகைக்கு விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி ஒரு நிலை இருந்த காலம் உண்டு. ஆனால் இப்போது அப்படி இல்லை. இப்போது யாருக்கு கட்டிக்கொடுக்கப்பட் டிருக்கிறதோ, யார் லைசென்ஸ்தாரராக இருக்கிறாரோ அவர்தான் குடியிருக்க முடியும். மற்றவர்கள் யாரும் அந்த வீட்டில் குடியிருக்க முடியாது.

**திரு. என். கே. பழனிசாமி:** நான் அந்த மாதிரி சொல்லவில்லை. நீங்கள் அலாட் பண்ணிவிடுகிறீர்கள். ஆனால் வேறு ஆட்களுக்கு அவர்கள் சப் டெனன் டுக்கு வாடகைக்கு விடுகிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அப்படிச் செய்ய வில்லை என்றுதான் இப்போது அவர்கள் விளக்கம் அளித்தார்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** 10 ரூபாய் வாடகைக்குப் பெற்று, 30 ரூபாய், 40 ரூபாய்க்கு மற்றவர்களுக்கு வாடகைக்கு விடுகிறார்கள். அதை. . .

**திரு. இராம. அரங்கண்ணல்:** அப்படி ஒரு காலம் இருந்தது. ஏழை எளிய மக்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை மற்றவர்களுக்கு வாடகைக்கு விட்டிருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் குடிசை மாற்றுவாரியம் வந்தபிறகு யார் யார் எந்தெந்த குடியிருப்புகளில் இருக்கிறார்களோ, அவர்களின் புகைப்படம் எடுக்கப்பட்டு, அந்தந்த வீட்டில் அந்தந்த புகைப்படத்தில் இருப்பவர்கள் தான் இருக்கவேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம்.

ஒவ்வொரு மாதமும் வாடகை வசூல் செய்யப் போகும்போது அந்த புகைப் படத்தில் உள்ளவர்கள் அந்த வீட்டில் இல்லாமல் இருந்தால் உடனடியாக இழுத்து மூட அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க அந்த ஆணையின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது அந்தக் குறைபாடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: இது நிரந்தரமாள மசோதா. சர்க்கார் கட்டடங்கள் இதில் இடம் பெறவில்லை. ஹவுசிங் போர்டு கட்டடங்களுக்கு இதில் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

அதுமட்டுமல்ல. முன்னேற்றம் அடைந்து வருகின்ற இந்த நாளில் ஒருவர் அவருக்குத் தேவையான வீட்டை மட்டும்தான் கட்டிக்கொள்ள வேண்டும்; புதிதாக வீடு கட்டக்கூடாது என்ற முறையைக் கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்தால் வீடு இல்லாமல் இருக்கின்ற ஏராளமானவர்களின் குறை தீரும். 'கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் புரொட்டக்ஷன் ஆக்ட்' பிறப்பித்ததைப்போல இங்கும் 15, 20 வருஷ காலம் ஒருவர் ஒரே வீட்டில் குடியிருந்தால் அந்த வீட்டை லான்ட் லார்டிடம் இருந்து அந்த டெனன்ட் வாங்கக்கூடிய உரிமை இருக்க வேண்டும்.

ஆகவே, இந்த அம்சங்களை எல்லாம் இந்த மசோதாவில் சேர்ப்பதைப்பற்றி பரிசீலனை செய்ய இந்த மசோதாவை மீண்டும் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* Thiru K. M. SUBRAMANIAM: Sir, while supporting the amendment brought by the hon. Member Thiru N. K. Palaniswamy, I wish to speak a few words. The Bill when it came out from the Government looked as if it was a partially socialistic Bill. But after seeing the recommendations of the Select Committee I am inclined to feel that the Select Committee had converted it from a Lease and Rent Control Bill into a Rent Decontrol Bill or Accommodation Decontrol Bill. That is what I am inclined to feel when it came out of the Select Committee.

Sir, the Bill-drafters in the Government had certain ideas in their mind. They said 6 per cent and 9 per cent should be the basis of return rate that should be calculated in respect of houses for fair rent fixation. But when it came out from the Select



Committee I find from 6 per cent it has been increased to 9 per cent for residential buildings and from 9 per cent to 12 per cent for non-residential buildings. This Select Committee has obviously forgotton that investment on housing is quite different from investment on other profit-yielding securities or shares or business. There is a likelihood of loss there and profit there. But here there is no likelihood of any loss. The investment on house property was always considered as an investment on Government security in those days and nobody expected more than 5 per cent return on investment on house properties. However, it is too bad to think of a return of 6 per cent or 9 per cent on investment on house property, when normally you get only 7½ per cent even on co-operative investments and other things. I think this Bill has to go back to the Select Committee for reconsideration of one point, that is, the return or the calculation of fair rent on the basis of 9 per cent and 12 per cent instead of 6 per cent and 9 per cent.

Secondly, Sir, actually you calculate the rent on the basis of investment. Many houses in Madras city, you would find, are fetching a much lower rate of return than any other business. It has never been on the basis of return. When last time there was a revision, the revision was on the basis of a percentage increase and not on the basis of return. But now as the hon. Member Thiru N. K. Palaniswamy pointed out, suppose a house is constructed in 1921 and if you calculate the rent on the present market rate as the basis, that is on the basis of return on investment, what will be the difference in the rent? Many people who are paying a rent of Rs. 150 today or Rs. 200 today will have to pay Rs. 300 or Rs. 400 if this method is changed like this. I think the Select Committee has not gone seriously into this question at all. This is a permanent legislation. This is a legislation that is affecting the middle class more than any other class.

I think this has to be very seriously considered. I think the Ministry should take the subject seriously and see what will be the impact of this legislation on a society that is groaning under high prices today, groaning under various troubles. If the rents

are also to be increased on the basis of these recommendations under the excuse of fair rent, I think it is the most unfair action that the Select Committee can do, at least to Madras City.

Then, Sir, as Thiru N. K. Palaniswamy pointed out, where is the need for exemption limit. A tenant is a tenant whether he pays Rs. 20 or Rs. 400 or Rs. 4,000. The argument of the Select Committee or the argument of the Government will be that when it is a rent of Rs. 2,000, the man who can afford to pay is paying, why should he be exploited by the landlord or house- owner? But why should there be any exploitation by the landlord of a tenant who can afford to pay? What I say is, there is a lot of relationship between the controlled rent and uncontrolled rent. Suppose it is Rs. 400 there is control and if it is Rs. 401 there is no control. It is exempted. There is a lot of misreading of the situation and the result will be many exemption of houses will come up.

Now, Sir, another thing I find is, particularly in big cities the amenities provided are classified as separate from the investment made for house construction. That is, there is a house with furniture provided or with air-conditioning provided. Of course, today the law does not stipulate what will be the maximum amount allotted for amenities at least in this City, Sir. 15 per cent for residential houses and 25 per cent for non-residential houses—even this is wrong because an amenity provided to a house is a component condition of living in the house.

It is an execuse for people to avoid particularly property tax due to the Corporation. I find many people when they want to avoid property tax they just put two chairs here and two tables there, one air-conditioning plant whether working or not somewhere and claim for exemption. For the purpose of calculation of the value of the house all amenities should be included and there should not be any amenities left out.

I think there are various considerations. First is the percentage of return, then calculation of fair rent. It is all definitely wrong. The basis of calculation in respect of wealth tax is a differen thing.



In the case of wealth tax the man is required to pay from his wealth. But here the tenant pays the rent. The calculation on the basis of present market value or market value at the time when they party applies for fair rent is considered to be fair rent, but that will not be fair rent at all.

எதையோ பிடிக்கப்போய் எதுவோ ஆயிற்று

It will not be a fair rent. It will be only unfair rent. I am sure the Government will also agree with me when I make this suggestion. Even all the Ruling Party Members will also agree with me when I say his. If this legislation should have any meaning, if the Government claim to be socialistic Government, I feel this Bill should definitely go back to the Committee for reconsideration of very very important points. Otherwise, it will not be a Rent Control Act. It will be a Rent Decontrol Act. It will not be a Accommodation Control Act, it will be accommodation Decontrol Act

In the society, people are suffering very much due to high price in cost of living. The percentage now fixed will affect the middle class people. The 10 per cent was fixed in 1939. Today, if the same percentage is to be adopted, people may not get space to sleep even in a verandah. Therefore, I feel this legislation is very very outmoded, reactionary and completely out of date.

* திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மசோதாவினால் எந்த அளவிற்கு குடி போகின்றவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று யோசிக்கும்போது இது அவர்களுக்குப் பாதுகாப்பாக அமையவில்லை என்ற கருத்தினைத்தான் சொல்ல வேண்டியிருக்கின்றது. மாறாக, முதலீடு செய்து கட்டடங்களைக் கட்டி வாடகைக்கு விடும் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் ஒரு அம்சமாகத்தான் அமைந்திருக்கின்றது என்றுதான் நான் கருதுகிறேன். ஒரு மசோதா என்று கொண்டு வரும்போது, சமுதாயத்தில் கீழ்த் தட்டில் உள்ளவர்களுடைய நலன்களைக் கருத்தில் கொண்டுதான் மாற்றங்களைக் கொண்டுவர முன்வரவேண்டும்.

ஆனால் இந்த மசோதா முதலீடு செய்யும் வீட்டுச் சொந்தக்காரர்களுடைய நலன்களை மட்டுமே பாதுகாப்பதாக அமைந்திருக்கின்றது. அதுதான் இதில் பிரதான அம்சமாக இருக்கின்றது என்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

திற்கு அந்த நிபுணர் கமிட்டியின் டிராப்ட் ரிப்போர்ட்படி கால்குலேட் செய்தால் என்ன ரெண்ட் வரும், நமது பொறுக்குக் கமிட்டி திருத்தம் செய்துள்ள இந்த மசோதாபடி, கால்குலேட் செய்தால் என்ன ரெண்ட் வரும் என்று ஜாயின்ட் செக்ரடரியைக் கேட்டேன். இந்த விவரங்கள் எல்லாம் மன்றத்திற்குத் தெரிய வேண்டும், மன்றத்தின் மூலமாக மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பது என் ஆசை. க்ளாஸ் 6 திருத்தப்பட்டபடி, க்ளாஸ் 6 ஒரிஜனலில் உள்ளபடி எப்படி ஆகிறது என்று சொன்னால்,

'The Joint Secretary, Home Department said that he had worked out the rent as per the present amendment. For a building constructed in 1940, with 200 square metres of plinth area, the fair rent worked out to be Rs. 362 per mensem. But as per the original definition, the fair rent would be only Rs. 116.25.'

இதற்குமேலே வேறு என்ன முரண்பாடு வேண்டும்? நிபுணர்கள் தயாரித்த மசோதாவின்படி வாடகை 116.25 வரும் என்றால் இந்த மசோதாவின்படி ரூ. 362 வாடகை ஆகிறது. மூன்று மடங்கு. நாம் சோஷலிசம் பேசுகிறோம். முதலாளித்துவம் கூட இல்லை, ஏகபோக முதலாளித்துவத்திற்குப் போகிறோமோ என்று கேட்கிறேன். இதற்கு முன்னாலேயே ஒரு அனுபவம். கடன் நிவாரணச் சட்டம் ஏழைகளுக்காக என்று கொண்டுவந்தோம். அது பொறுக்குக் கமிட்டிக்குப் போய்வந்த பிறகு லேவாதேவிக்காரர்களுக்கு பாதுகாப்பு அளிக்கிற சட்டம் போலத்தான் வந்து விட்டது. சுப்ரீம் கோர்ட் கூட சோஷலிச அடிப்படையில் அன் யேர்ன்டு இன்கம் லாண்டு லார்டுக்குப் போக வேண்டாம் என்று தீர்ப்புக்கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நாம் இங்கே இந்த மசோதாவை இப்படி நிபுணர் கமிட்டி சொன்ன கருத்துக்களை ஏற்காமல் அதற்கு நேர் முரண்பாடாகக் கொண்டுவந்திருக்கிறோம் என்றால் அதை இந்தச் சபை ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்கவில்லை.

இதை திரும்ப செலக்ட் கமிட்டிக்கே அனுப்ப வேண்டும் என்றால் கூட சும்மா அனுப்பிப் பயன் இல்லை. அந்த நிபுணர் கமிட்டி மசோதாவின் அடிப் படையில் இது தயாரிக்கப்பட வேண்டும் என்பதாக டைரெக்ஷன் கொடுக்க வேண்டும். அப்போதுதான் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

இன்னொரு விஷயம். ரிப்போர்ட்டில் ஒன்று சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். தனிப்பட்ட யாரிடத்திலும் வெறுப்பு இல்லை. ஒரு பில்டிங்காரர் அதைப் புதுப்பித்துக்கட்டப்போவதாக இருக்கிறவர்களை



வெக்கேட் பண்ணுகிறார். மேலெழுந்தவாரியாக பத்து ஓடுகளைப் பிரித்து புதுப்பித்து விட்டதாகச் சொல்கிறார். இருந்தவர்களைக் காலி பண்ண வைக்க இந்த முறை. நாடு விடுதலை அடைந்தபோது நாங்கள் சொல்வோம், முதலாளித்துவ கொடுமைக்கு மேற்கு பாகிஸ்தான் இஸ்பகானிகள் என்போம். அதுபோன்ற நிலை. திரு. கிருஷ்ணமூர்த்திகூட யார் யாருக்கு சென்னையில் எவ்வளவு வீடுகள் இருக்கின்றன என்பதுபற்றிச் சொன்னார்கள். என்னிடமும் இருக்கிறது லிஸ்ட்—முப்பது வீடு, நாற்பது வீடு என்பதாக வைத்துக்கொண்டு இந்த வீடுகளின் மூலமாகவே பெரும் அளவு சம்பாதிக்கிறார்கள். இதற்கு நாம் உதவியாக இருப்பது மிகமிக வருந்தத்தக்க விஷயம். இந்த மசோதாபற்றி நான் எல்லாம் விவரமாகவே எழுதி வைத்திருக்கிறேன்.

In order to be precise, I have written it. I made a reference to Supreme Court. There was something in the year 1966.

அவர்களுக்குத் தெரியும், நான் அதைச் சொல்கிறேன்.

This Government accepted the recommendation of the Committee. I accept the amendment proposed by Government in the original Bill and oppose, with all vehemence, the Bill as drafted by the Select Committee. The Committee has torpedoed the progressive character of the Bill so completely and has acted as agents of the landlord. The principles and policies behind the two Bills are diametrically opposite.

அதனாலேதான் நான் சொன்னேன்.

It will be interesting to study how the Committee came to its conclusions, its notice therefor, its sources of inspiration.

The majority of members of the Committee belonged to the Ruling Party. The Hon'ble Minister who introduced the Bill in the Assembly was the Chairman of the Committee. Nevertheless, the Committee has rcommended for the promotion of the interests of the landlord which the Government Bill wanted to curtail. Probably there is no historical parallel for this double thinking, for this somersault.

வார்த்தைகளைக் கடுமையாக நான் வேண்டுமென்றேதான் போட்டிருக்கிறேன்.

It is without parallel. I have also come across Bills which have gone to Select Committees. But nowhere have I seen such reverses being made.

வாடகைப் படியினைக் கொடுக்க வேண்டி வரும், மத்தியதர வகுப்பினர் இதனால் பெரும் பாதகமடைவார்கள் என்ற காரணத்தினால், இதை இப்படியே நிறை வேற்றுவது தவறு, இதை மறுபடியும் ஆராய வேண்டும், பின்னர் நிறைவேற்ற வேண்டும் என்று கூறி என் உரையினை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த மசோதாவின் பேரிலே நான் ஏன் பேசுகிறேன் என்ற காரணத்தினை நான் முதலில் சொல்லவேண்டும். ஏன் என்றால், இந்த மசோதாவின் பொறுக்குக் குழுவில் நானும் உறுப்பினராக இருந்து, அந்தப் பொறுக்குக் குழுவின் விவாதங்களில் பூராவும் பங்கு எடுத்துக் கொண்டவன் நான். அந்தப் பொறுக்குக் குழுவில் இருந்தாலும்கூட, இந்த மசோதாவின் பேரிலே—சாதாரணமாக பொறுக்குக் குழுவின் இருந்தவர்கள் திருத்தங்களைக் கொடுப்பது கூடாது—நான் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஒரு விரிவான அளவிற்கு ஒரு 'டிஸ்சென்டிங் நோட்' கொடுத்து இருக்கின்றேன் அதில். அந்த 'டிஸ்சென்டிங் நோட்டை' அடிப்படையாக வைத்துக்கொண்டு சில அடிப்படையான விஷயங்களைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்ற முறையில் இதைச் சொல்ல விரும்புகிறேன். சில அடிப்படையான விஷயங்களை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற என் விருப்பத்தை இங்கே நிறைவேற்ற முடியும் என்று நினைக்கிறேன்.

முதலில் இந்த மசோதா பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்படுவதற்கு முன்னால் இங்கே வந்தபோது அதில் இருந்த ஆப்ஜெக்ட் அண்டு ரீசன்ஸ் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். அதை அப்படியே இங்கே படித்து விடுவதுகூட நல்லது என்று நினைக்கிறேன்.

'The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960, came into force on the 31st September 1960 and its life was extended from time to time. The life of the Act will expire on the 30th September 1972 and legislation has been undertaken to extend the life of the Act for a further period of nine months. In November 1969, the Government constituted a Committee of officials to examine the various provisions of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960, more particularly those relating to fixation of fair rent to buildings and suggest



suitable amendments. The Committee was also requested to examine the necessity for continuing the Act, including the provisions relating to accommodation control.

The Committee submitted its report to the Government on the 21st January 1971. The Committee suggested a number of amendments of a comprehensive nature. The amendments have been examined in detail and the Government have decided to accept most of the amendments suggested by the Committee.

The Bill seeks to give effect to the above decision.'

இதை முழுமையாக நான் வாசித்ததன் நோக்கம் 1939, 1949 காலத்தில் நமக்கு ஏற்பட்ட அனுபவங்களை எல்லாம் சேர்த்து வைத்து 1960-ம் ஆண்டிலே நாம் நிரந்தரமான சட்டத்தை நிறைவேற்றினோம். அப்படி ஒரு சட்டத்தை நிறை வேற்றிய காரணத்தினால் அதில் நமக்கு ஏற்படுகிற அனுபவத்தை ஆராய நாம் ஒரு நிபுணர் குழுவை அமைத்தோம்.

உண்மையில் அது ஒரு நிபுணர் குழுதான். ஹோம் செக்ரடரி இருந்தார். ரெண்ட் கண்டிரோல் துறையில் இருக்கக்கூடிய ஆட்கள், பில்டிங் துறையில் இருக்கக்கூடிய ஆட்கள் ஆகிய நிபுணர்கள் இந்தக் குழுவில் இருந்தார்கள். ஜாயின்ட் செலக்ட் கமிட்டிபோல அவர்கள் மிகத் திறமையாக இதனைப் பரிசீலித்து ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அந்த ரிப்போர்ட்டின் அடிப்படையிலேயே ஒரு டிராப்ட் பில்லையும் கடைசியில் கொடுத்திருக் கிறார்கள். அதன் அடிப்படையில்தான் நாம் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதை கவனத்தில் வைத்துக்கொண்டு பார்க்கிறபோது—அவர்களது மசோதா எப்படி இருக்கிறது, பொறுக்குக் கமிட்டியில் நாம் தயாரித்துள்ள மசோதா எப்படி இருக்கிறது என்பதை ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறேன்.

The Report of the Committee constituted to review the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960, has been completely reversed.

சுருக்கமாகச் சொன்னால், அந்தக் கமிட்டியினர் தயாரித்துக் கொடுத்துள்ள டிராப்ட் பில்லுக்கும், பொறுக்குக் கமிட்டியில் இருந்து வந்துள்ள பில்லுக்கும் அடிப்படையிலேயே வேற்றுமை இருக்கிறது. உதாரணத்திற்கு [illegible] ஒன்றை எடுத்துக்காட்டுகிறேன். செலெக்ட் கமிட்டி [illegible] பார்க்கவேண்டும். ஃபேர் ரெண்ட் பிக்சேஷன் சம்பந்தமாக ஒரு [illegible]

முதலீடு செய்து ஒருவர் கட்டிடத்தைக் கட்டுகின்றார் என்றால் அவருக்கு நியாயமான வருவாய் அதன்மூலம் கிடைக்க வேண்டியதுதான். ஆனால் அவருக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கும் முறையில் பெரும் வருவாயைத் தேடித்தரும் நிலையை நாம் உருவாக்கிவிடக் கூடாது. இதைத்தான் நான் இந்த நேரத்தில் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஒருவர் 1940-ல் ஒரு கட்டிடத்தின்பேரிலே என்ன முதலீடு செய்திருந்தாலும் அந்த முதலீட்டின் பேரிலே அவருக்கு வருவாய் கிடைக்க வேண்டியதுதான் நியாயம். ஆனால் அந்தக் கட்டிடத்திற்கு இன்றைய மார்கெட் வேல்யூ என்ன என்று அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதற்கு உரிய வருவாயைத் தேடித்தரும் முறையில் வாடகையை மாற்றியமைக்கத்தக்க விதத்தில் இந்த மசோதாவில் இடமேற்படுத்தியிருப்பதானது என்ன நியாயமாகும்?

உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் ஒருவர் 1940-ல் ஒரு குறிப்பிட்ட தொகையை, ரூபாய் ஐயாயிரத்தை வட்டிக்குப் போடுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். இதை 1972-ம் ஆண்டில் திரும்பிப் பெறப்போகும்போது அதன் முதல் ரூபாய் ஐயாயிரமாகத்தான் இருக்குமே தவிர, நாற்பது ஆண்டுகள் கழித்து வாங்கிக்கொள்ளுகின்றார், தொகையைப் பாங்கியில் போட்ட காலத்தில் இருந்ததற்கு இப்போது பணத்தின் மதிப்பு குறைந்து விட்டது என்று இப்போது முதலை அதிகப்படுத்திக் கொடுப்பார்களா? நிச்சயம் இல்லை. வட்டிதான் கிடைக்கும். அதுபோலவே ஒருவர் இருபது வருஷத்திற்கு முன்பு கொடுத்த கடனுக்காக இப்போது கோர்ட்டுக்குப் போவாரென்றால் முன்பு ரூ. 2,000 என்று கொடுத்திருந்தால் இப்போது ரூ. 4,000 என்று கொடுக்கும்படி உத்திரவிடுவார்கள்? ஆனால் இந்த மசோதாவை எடுத்துக் கொண்டால், 1940-ம் ஆண்டில் என்ன முதலீட்டைச் செய்தாரோ அதை இன்றைய மார்கெட் மதிப்பீட்டிற்கு அதிகப்படுத்தி வாடகையை நிர்ணயிக்கலாம் என்று இருந்தால் வாடகை கொடுப்பவர்கள் நிலை என்ன என்று யோசிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம், அதற்காகத்தான் ஆண்டொன்றுக்கு ஒரு சதவிகிதம் 'டிப்ரிசியேஷன்' போட்டு இருக்கிறோம் என்று. ஒரு கட்டிடத்திற்கு ஆண்டொன்றுக்கு ஒரு சதவிகிதம் டிப்ரிசியேஷன் என்பது சரிதானா என்று யோசிக்க வேண்டும். 100 வருஷத்திற்கு ஒரு கட்டிடம் இருக்கும் என்று சொல்ல முடியாது.



ஆக, எல்லா வகையிலும் கட்டிடச் சொந்தக்காரர்களின் நலன்களைப் பாதுகாக்கும் முறையில்தான் இது அமைந்திருக்கின்றது. வாடகையை 9 சதவீதத்திலிருந்து 12 சதவீதம் வரை உயர்த்தி, டிப்ரிசியேஷன் ஒரே ஒரு சதவிகிதம் என்று போட்டு கட்டிடத்தின் மார்கெட் வேல்யுவையும் பேசிஸ் ஆக வைத்துக் கொண்டு வாடகையை நிர்ணயம் செய்வது என்றால் எந்த அளவிற்கு அந்தக் கட்டிடத்தின் வாடகை உயரும் என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், அரசு அலுவலகங்களில் பணிபுரிகின்றவர்கள் இதனால் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுவார்கள் என்று கூர்ந்து பார்த்தால்தான் தெரியும். இதனால் பின்னால் அரசு ஊழியர்களுடைய வாடகைப் படியையும் அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை வந்தால், அரசின் பளுதானே அதிகரிக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது என் கடமையென்று கருதுகிறேன். எனவே, இந்த மசோதாவினை இந்த முறையில் கொண்டு வந்திருப்பதானது மிகமிக வருந்தத்தக்க ஒன்றாகும். வேண்டுமானால் இதுவரையில் கொடுத்துவரும் வாடகையில் பத்து சதவிகிதம் அதிகப்படுத்திக் கொள்ளலாம் என்று இருக்கலாம். ஆனால் கட்டிட மதிப்பீட்டை இன்றுள்ள மார்கெட் வேல்யுவிற்கு அதிகப்படுத்தி அதன் பேரில் வாடகையை நிர்ணயம் செய்வது என்பது பெருமளவிற்குப் பாதகத்தைதான் நடுத்தர சம்பளதாரர்களுக்கு ஏற்படுத்தும்.

சாதாரணமாக, காம்பாக இருந்த ஒரு நிலத்தை, செண்டு இரண்டு ரூபாய் கூடப் போகாத ஒரு நிலத்தை அரசு எடுத்துக்கொண்டு அதை சாலை வசதி, தண்ணீர் வசதி போன்ற எல்லா வசதிகளையும் ஏற்படுத்தி, அதைக் கிரௌண்டு ரூ. 5,000 என்று விற்றால் அது வேறு விஷயம். ஐயாயிரம் கொடுத்து வாங்கும் அந்த நபர் அந்த நிலத்தின் அபிவிருத்திக்காக எந்தக் காரியத்தையும் செய்யவில்லை. அரசாங்கம்தான் செய்தது. இப்படி சமுதாயம், அல்லது சமுதாயத்திற்காக அரசு ஒரு காரியத்தினைச் செய்து அதனால் விலை ஏறினால் அதனால் ஏற்படக்கூடிய நன்மையை சமுதாயம் பகிர்ந்து கொள்ளுவதால் விலை ஏறுகின்றதைப் பெரிதாகக் கருதவேண்டிய அவசியமில்லை. ஆனால் 40 ஆண்டுகளுக்கு ஒரு சிறு தொகையில் கட்டிடத்தைக் கட்டியவர்கள் அதை இன்றைய மார்க்கெட் மதிப்பீட்டிற்குக் கொண்டுவந்து, வாடகையை நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்று சொல்லுவது நியாயமாகாது.

The Government had followed the pattern of thought behind the Rent Control Acts all over India and as observed by the Supreme Court.

We accepted the theory of cost of construction in 1960. After a passage of 13 years we are now called upon to accept the value as on the date of application as the basis for calculating the rent. Wayback in 1960, we accepted 6% and 9% returns, depending on the residential or non-residential character of the tenancy, as reasonable. We are now called upon to accept 9% and 12% returns. This is rank reaction. This is only to favour landlords.

இந்த இடத்திலே ஒரு சின்ன விஷயத்தை நான் இடைமறித்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 1940-ம் வருஷத்திலே ஒரு கட்டிடம் ரூ. 30,000 என்று வைத்துக்கொள்ளுங்கள். பழையதற்கும் இதற்கும் வித்தியாசம் சொல்கிறேன். அப்படியென்றால், இன்றைக்கு அந்த கட்டிடத்தினுடைய மதிப்பு ரூ. 1 இலட்சம். நான் இடத்தை பற்றிச் சொல்லவில்லை. இப்பொழுது அந்த ரூ. 1 இலட்சத்திலிருந்து வருஷத்திற்கு 1 சதவிகிதம் குறைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இப்பொழுது 27 வருஷம் அல்லது 33 வருஷத்திற்கு ரூ. 33,000 குறைக்கிறோம். மீதி ரூ. 67,000. இந்த ரூ. 67,000-லே ஏற்கனவே இப்படி ஏதாவது குறைந்து போகுமென்று சொல்லி, 6 சதவிகிதம் என்று இருந்ததை, இப்பொழுது 9 சதவிகிதம் என்று ஆக்குவது என்று சொன்னால், இந்த மசோதாவின் அடிப்படையிலே பார்த்தால், இன்றைக்கு இருக்கிற 'காஸ்ட் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன்' அதையும் கவனிக்க வேண்டி இருக்கும். இன்றைக்கு என்ன விலை இருக்குமோ அதற்குப் பிறகு 9 சதவிகிதம் போடுவது என்ற நிலைக்கு வந்திருக்கிறது, சரியா?

அடுத்தது, இடம். ரூ. 1,000 வருமானமாக இருந்தால் 10 மடங்கு. அது ரூ. 10,000 இடத்தின்பேரிலே 30 சதவிகிதம் பெறுமானம் வரக்கூடிய நிலை இருக்கிறது. நாம் நிர்ணயித்ததைவிட 3 மடங்கு இன்றைக்கு அவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஏற்பாடாக இருக்கிறது. இது ரொம்ப வருந்தத்தக்கதாக இருக்கிறது. காரணம் இப்படி 1940-ம் வருஷம், 1950-ம் வருஷம், 1960-ம் வருஷம் என்று காஸ்ட் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன் எவ்வளவு இருக்கும் என்றெல்லாம் இருக்கும்போது, சிரமப்பட்டு நம்முடைய நிபுணர்களெல்லாம் தயாரித்த அந்த ஷெட்யூலையெல்லாம் தூக்கி எறிந்தாகிவிட்டது. அதற்கு வேலை



யில்லாமல் போய்விட்டது. இப்படி சிரமப்பட்டு தயாரித்ததை வேலையில்லாமல் போக்கக் கூடிய அளவுக்கு இது செயலுக்குக் கொண்டு வந்துள்ளது.

நான் ஒரு கணக்கு சொன்னேன், ரூ. 362 என்று.

I can imagine a worker drawing about Rs. 400 per month as salary paying a rent of Rs. 116.25 per month. What passes my comprehension is how you expect him to pay Rs. 362 per month as rent now. The landlords are all learned people. They know fully all the provisions of this Act. They will get the rent due.
சாதாரணமாக விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்ற முடியாது என்று சொன்னால், அந்தச் சட்டம் வந்து 4 வருஷத்திற்குப் பிறகுகூட, நிலச் சுவான்தார்கள் விவசாயிகளை வெளியேற்றிவிட, பிறகு சட்டத்தை அமல் நடத்துகிற நேரத்தில், லா அண்ட் ஆர்டர் பிராப்ளம் வரும். ஆனால், இங்கு ரூ. 116-ஆக இருந்ததை ரூ. 362 ஆக்கும்போது, இந்த அக்காமடேஷன் கண்ட்ரோல் என்ன செய்யப்போகிறதோ எனக்குத் தெரியாது. ஆக, எந்த அளவுக்கு இந்த அரசாங்க நிர்வாகத்தை சிர்குலைக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு சிர்குலைக்கின்ற வகையில் இது அமைந்திருக்கிறது என்பதைப் பற்றி மட்டும் நான் சொல்ல முற்படுகிறேன்.

It is against justice whether economic or social which our Constitution seeks to secure.

I need hardly state that the Bill is favouring unconscionable returns on unearned value. The owners need be assured of a return only for the money invested, by them. Letting houses is not business.

நாம் இப்பொழுது சோஷலிசத்தை நோக்கிப் போவதால், சில சோஷலிச நாடுகளிலே இருக்கக்கூடிய நடைமுறைகளைச் சொல்கிறேன். பணம் என்று சொன்னால், அது ஒரு மீன்ஸ் ஆப் எக்சேஞ் தான். ஒரு மதிப்பீடு நிர்ணயிப்பதற்காக கையிலே, பணம் ரூபாயாகக் கொடுக்க வேண்டுமென்ற பண்டமாற்று முறைக்கு அது ஒரு மீன்ஸ் ஆப் எக்சேஞ் தான்.
It is only means of exchange.
வேறல்ல. இன்றைக்கு ரூ. 1,000-ஐ வைத்துக்கொண்டு, அடுத்த மாதம் ரூ. 1,100, ரூ. 1,200 ஆவது என்றால், நம்முடைய சோஷலிச கருத்திற்கும் அதற்கும் விரோதமானது. ஆனால், நம்முடைய நாட்டில், ஒரு ஆள்

(b) To provide for a ceiling of 25 per cent above or below the existing rent at the time of fair rent fixation, as found in the Acts of every State, and as observed by the Supreme Court and requested for by Chambers of Commerce and other public bodies in our State ;

*அநேகமாகப் பல மாநிலங்களிலே உள்ள சட்டங்களை எங்களுக்குக் கொடுத்தார்கள். ஒவ்வொரு சட்டத்தையும் பார்த்தால், இங்கேயெல்லாம் காண்ட்ராக்ட் ரேட்டுக்கு 25 சதவிகிதம், 10 சதவிகிதத்துக்கு மேல் போகக் கூடாது என்று இருக்கிறது, அப்படியில்லாமல் இங்கே அவிழ்த்துவிட்ட மாதிரியாக, காட்டாறு மாதிரியாக இருக்கிறது. அது இருக்கக்கூடாது.*

(c) To make right of tenancy heritable in both residential and non-residential buildings;

(d) to prevent evicition on the excuse of demolition of the building by providing that the condition of the building need be looked into as the main factor while ordering eviction.

(e) To grant permanancy to tenants of more than 20 years' occupation as exists in other States.
*ஏனென்று சொன்னால் நானே இதை அங்கேயே கிளப்பினேன். அவர்கள் கூட அப்பொழுது கேட்டார்கள். நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்பது மாதிரி வீட்டிலே இருக்கிறவர்களுக்கு வீடு சொந்தமா என்று கேட்டார்கள். கேரளாவிலே இருக்கிற முறையைப்பற்றியும் நான் சொல்லிவிட விரும்புகிறேன். சாதாரணமாக, குடியிருக்கிறவர்களை வெளியேற்றக்கூடாது என்று அங்கே சொல்லி இருக்கிறார்கள். வாடகை மட்டும்தான் இருக்கவேண்டும். அந்தமாதிரி நிலைமைகள் இங்கும் ஏற்படவேண்டும்.*

(f) There is no need to raise percentage return on capital cost from the existing rate, namely 6 per cent and 9 per cent.
*அதைத்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன். ஆறு சதவிகிதம், 9 சதவிகிதமாக இருந்தது 9 சதவிகிதம், 12 சதவிகிதமாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்திலே மறுபடியும் 6 சதவிகிதம், 9 சதவிகிதமாகப் போடுவது நன்றாக இருக்கும் என்பதைத் திருப்பிச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.*



*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): சீக்கிரம் முடித்து விடுங்கள். இந்த பில்லையாவது இன்றைக்கு முடித்துவிடலாம்.*

*திரு. கே. டி. கே. தங்கமணி: சீக்கிரம் முடித்துவிடச் சொல்கிறீர்களா, முடித்துவிடுகிறேன். இந்த பில்லைப்பற்றி அதிகமாகச் சிந்தித்துக்கொண்டு தம்முடைய கருத்தை வலியுறுத்த வேண்டுமென்ற முறையிலே டிஸ்ஸெண்டிங் நோட்டிலே உள்ள சில பகுதிகளை வாசித்துவிடலாம் என்று நினைக்கிறேன், இந்த பாயின்டை தெளிவுபடுத்துவதற்காக.*

' Until 1949, the rents were fixed on the prevailing Municipal valuation as on 1939. After 1949, an increase of 25 per cent on residential and 50 per cent on non-residential buildings was allowed as maximum increase, giving up the Municipal Valuation as this and the rents chased each other. In 1960 Act, enacted for the first time and Legislature accepted that returns for the landlord must be based on the investment made by him as distinguished from the market value thereof and calculated on the basis of the cost of construction, i.e., the amount actually, spent by the owner for constructing the building, minus the depreciation for the building plus the market value of the land on the date of construction and a percentage for amenities. But the executive while framing the Rules destroyed the progressive character of the enactment and provided 1961 cost as the basis. *The Supreme Court rightly struck down the rules as* **ultra** vires *of the Act.*

Thereafter, the Government constituted a Review Committee of officials, etc.

The Review Committee and the Government Bill have raised the exemption limit from Rs. 250 to Rs. 400 on residential buildings with the hope of getting more premises under the Accommodation Control. It is obvious that this purpose will be defeated. Not only those houses above Rs. 250 rent now will not come under the Act, but also many with a rent below Rs. 250 will get out of the Act posing a problem for the Government servants. Such tremendous increase in rents have been solely due to re-introduction of Rule 12 of the Old Rules (with additional burdens) directly into the present Act, showing thereby

ரூ. 10,000 வைத்திருந்தால், 2 வருஷத்திலே இலட்சாதிபதி ஆகிவிடுவார். பிறகு, கோட்டீஸ்வரர் ஆகிவிடுவார். (குறுக்கீடு) வழி ரொம்ப இருக்கிறது. அதற்குத் தானே பப்ளிக் டெட் ரிலீப் ஆக்டைக் கொண்டு வந்தீர்கள். அதனால் சர்க்கார் சிப்பந்திகளுக்கும் எங்கள் பஞ்சாயத்து தொழிலாளிகளுக்கும் ஏராளவுக்கும் பிரயோஜனம் இல்லை. லேவாதேவிக்காரர்களுடைய pressure will be tremendous அதற்காகத்தான் fight. அதற்கு நீங்கள் மீண்டு செய்கிறீர்கள் என்பதுதான் குற்றம். அந்த லேவாதேவிக்காரர்களுடைய பிரஷருக்கு நாம் மீல்டாகி விட்டோம் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அப்படியென்றால், காரியம் செய்யமுடியாது. பணத்தை வைத்துக்கொண்டு, பணத்தை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

ஈட்டிக்காரனை கண்காணியுங்கள் என்று தங்களிடம் சொல்லலாம். இன்றைக்கு சிலபேர் இலட்சம் ரூபாய்க்கு கடன் கொடுக்கிறார்கள். நாங்கள் லிஸ்ட் கொடுக்கிறோம், நீங்கள் பிடியுங்கள். அந்த ஆள் என்ன செய்கிறான் என்றால், காசேதான் கடவுளப்பா என்று முன்பே சொன்னேன், அப்படியிருக்கின்றான். இதை வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. இதிலே உருவான நிலை இது. இதற்காக உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். ரிவெர்ஸ் போவது சரியல்ல. இப்பொழுது நாம் ரிவெர்சிலே போகிறோம்.

அடுத்து; வீட்டைப் பொறுத்தவரையில், வீடு தங்குவதற்காகத்தானே யொழிய, வீடு வாடகை விடுவதற்கா இருக்கிறது? இன்றைக்கு வீட்டை வைத்து, 10 வீடு கட்டி விட்டால், அந்த வாடகையை வைத்து பிழைப்பது, இன்றிருக்கிற தத்துவதத்திற்கு விரோதம். பணக்காரராக இருப்பது எனக்கு விரோதம் கிடையாது. ஆனால் தத்துவம். நான் கிளீன் ரெக்கார்டு வைத்துப் பேசுகிறேன். நான் வாடகைக்கு வீடு கொடுக்கவில்லை. வாடகை வீட்டில்தான் இருக்கிறேன். அந்த நிலைமையிலே வைத்துப் பார்க்கும்போது நான் யாரையும் தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை. எந்த ஒரு உறுப்பினருக்கும் 10 வீடு இருக்கிறது என்று சொன்னால், எப்படி ஒரிஜினல் பில்லை சப்போர்ட் பண்ணுவார்? இருபது வீடு இருந்தால் எப்படி சப்போர்ட் பண்ணுவார்? ஆகவே, அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. செ. கந்தப்பன்: ஒரு ஒழுங்குப் பிரச்சினையை நான் கிளப்ப விரும்புகிறேன். பொதுவாக, பொறுக்குக் குழுவிலே இருக்கிற உறுப்பினர்களைப் பற்றி [illegible] என்பது மாண்புமிகு தங்கமணி அவர்களுக்கு நன்றாகத்





தெரிந்திருக்கவேண்டும். ஏற்கனவே சொன்னதே கொஞ்சம் அதிகப்படியாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்பொழுது சொல்வது, சில உறுப்பினர் 10 வீடு, 20 வீடு வைத்திருந்தால், எப்படி ஒரிஜினல் பில்லை சப்போர்ட் பண்ணுவார்கள் என்று சொல்கிறார். அருள்கூர்ந்து அவை தவிர்க்கப்படவேண்டும். அவர் பெயரைச் சுட்டிக்காட்டிச் சொல்லவில்லையென்று சொன்னாலும், பொறுக்குக் குழு உறுப்பினர்களைப்பற்றிச் சொல்லலாம் என்பது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): திரு. கந்தப்பன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். பொறுக்குக் குழு உறுப்பினர்கள் மீது நோக்கம் கற்பிக்கக் கூடிய வகையிலே இந்த மன்றத்திலே கருத்துக்கள் தெரிவிக்கக் கூடாது என்று பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பொறுக்குக் குழுவிலே இருப்பவர்கள் மீது எந்த வித நோக்கமும் கற்பிக்காமல் மாண்புமிகு தங்கமணி அவர்கள் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பொறுக்குக்குழுவிலே பல முறைகள் திரு. தங்கமணி அவர்கள் பேசியிருக்கிறார்கள், கேட்டிருக்கிறார்கள். அந்தக் குழுவிலே உள்ளவர்கள், திரு. தங்கமணி உட்பட யாருக்குமே வீடுகள் இல்லை என்று அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே நோக்கம் கற்பிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் நோக்கம் கற்பிக்கவில்லை. இந்த மசோதா கோளாறாகவே வந்திருக்கிறது. இதிலே இருக்கக்கூடிய விஷயங்கள் எல்லாம் கோளாறாக இருப்பதாகச் சொல்வதிலே அதிலே வேண்டுமானால் கடுமையாக இருக்கலாம்.

In my dissenting note, I have said :

' While totally dissenting from the Joint Select Committee, I wish to recommend to the Legislature the following—

that ' the ghost of Rule 12 that is struck down by the Supreme Court is still haunting the minds of the present Lawmakers '. '

இன்னொன்றுகூட பொறுக்குக் குழுவிலே நான் சொன்னேன். புதிதாக இப்பொழுது வந்திருக்கக்கூடிய சட்டம் இருக்கிறதே, இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே தான் ஏற்கனவே உள்ள பெண்டிங் கேஸ்களைத் தீர்க்கவேண்டி இருக்கிறது. நான் உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால் விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போகின்றன. கூட்டுறவு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். விலைவாசி உயர்வு, விலை உயர்வு இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. விலைவாசிகள் உயர்வுக்கு இப்படிப்பட்ட சம்பவங்கள், சட்டங்கள் காரணமாக இருக்கின்றன. வெறும் மரமாக இருந்ததைக் கடையிலே கொண்டு வந்து வைத்தால் விலை, அதையே டேபிளாக ஆக்கி கொண்டுவந்து கடைகளிலே வைக்கும்போது விலை அதிகமாகிறது.

This is inevitable in capitalist economy. We must reduce it as far as possible

அந்த முறையிலே வாடகை அதிகமாகக்கூடிய நேரத்திலே விலைவாசிகளும் பொதுவாக அதிகமாக ஆகும். தொழிலாளர்களுக்காக விலைவாசிப் புள்ளி விவரங்கள் தயாரிக்கிறோம். அதிலே வீட்டு வாடகை இப்பொழுது மறைமுகமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. எவ்வளவுதான் சம்பள உயர்வு கொடுத்தாலும் வீட்டு வாடகை ஏறுகிற அளவிற்குச் சம்பள உயர்வு இருக்காது என்ற நிலைமையில் தான் இருக்கிறோம். தனியார்களுடைய வீடுகள் 1910-ஆம் வருஷத்திலே கட்டப்பட்டிருந்தாலும், அவைகளுக்கு எல்லாம் எவ்வளவோ வசதிகள் ஏற்படப்போகின்றன.

அரசே வீடுகளைக் கட்டுவதற்கான திட்டம் வந்து, தனியார்கள் தங்களுடைய வீடுகளையோ கடைகளையோ வாடகைக்கு விடுவதை டிஸ்கரேஜ் செய்யக்கூடிய முறையிலே இந்த மசோதாவிலே பல அம்சங்கள் இருக்கின்றன, உதாரணமாக விலைகள் எப்படிக் கூடிப்போகின்றன என்பதைப் பார்க்கவேண்டுமானால், அண்ணா நகரிலே 1970 ஆம் ஆண்டிலே ஒரு கிரவுண்ட் 5,000 ரூபாயாக இருந்தது இன்றைக்கு 15,000, 20,000 ரூபாய் என்ற அளவிற்கு வந்திருக்கிறது, இந்த பேஸிஸில் ரிட்டர்ன் கொடுக்கக்கூடிய நிலையில் 5 ஆண்டுகளில் 3 மடங்கு அதிகமாகப் போய் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதனால் விலைவாசிகள் அதிகமாகத்தான் ஆகும். நான் பொறுக்குக் குழுவிலே [illegible] சண்டை போட்டேன். அங்கேயுள்ள உறுப்பினர்களைப் புரிந்துகொள்ளு [illegible]



தான் சண்டை போட்டேன். நான் யாரையும் தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை. தத்துவம் இருக்கிறது. தனிப்பட்ட சொத்து உரிமையிலே வளர்ந்திருக்கிறோம், தனிப்பட்டவர்களின் சொத்துரிமையைப் பாதுகாப்பதற்கு முன்வரும்பொழுது ஏழைகளாக இருந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றவர்களை அதிகமாகப் பார்ப்பதும், வசதியாக உள்ளவர்களின் கஷ்டங்களைக் குறைத்துப் பார்ப்பதும் ஆன போக்கு வரவேண்டும். அந்தப் போக்கு இந்தச் சட்டத்திலே வரவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

தனியாக இந்தச் சென்னை நகரத்தில் யார் யாருக்கு எவ்வளவு வீடுகள் இருக்கின்றன என்று அமைச்சரவர்களைக் கேள்வி கேட்டால் விவரம் கொடுப்பார்கள். ஒரு கேள்வி போட்டால் விவரம் கொடுப்பார்கள். அந்தப் புள்ளிகள் பேரில் எச்சரிக்கையாக இருப்போம். அந்தப் புள்ளிகள் எப்படிச் செயல்படுகிறார்கள், எந்தக் காரியங்களைச் செய்கிறார்கள் என்று தெரியும். அவர்கள் யாரும் கமிட்டி உறுப்பினர்களிடம் வந்து இன்ப்ளுயன்ஸ் பண்ணிவிட்டார்கள் என்று சொல்லவில்லை.

This is parliamentary term. The landlord lobby has been very active. We have yielded to landlord lobby.

இதெல்லாம் சாதாரணமாக பார்லிமெண்டில் உபயோகப்படுத்தவேண்டியது. Tenant lobby ரொம்ப powerless ஆக இருக்கிறது. வாடகை கொடுத்து வாழக் கூடிய மக்களின் குரல் கம்மியாகப் போய்க் கொண்டிருக்கிறது, என்பதைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை செலக்ட் கமிட்டிக்குக் கொண்டு வந்த போது நான் வாதித்ததை மினிட்ஸில் பார்க்கலாம். ஒவ்வொரு உறுப்பினரும் அவ்வளவு சிரமப்பட்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது செலக்ட் கமிட்டியினுடைய முடிவை எதிர்த்துப்பேசுவது மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்ல.

செலக்ட் கமிட்டிக்கு அதிகமான அதிகாரம் இருக்கிறது என்ற கருத்திற்கு ஏற்றம் தந்து அதற்கு விட்டதன் நோக்கம், இந்த செலக்ட் கமிட்டியினர் ஒரு டிராஃப்ட் பில் கொடுத்திருக்கிறதே, அந்த சித்தாந்தத்தில் வைத்து அவர்கள் கவனிக்க வேண்டுமென்று சொன்னார்களோ, அதை அவர்கள் கவனிக்கவில்லை. சாதாரண மசோதாவாக அல்லாமல் [illegible] வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நாம் [illegible]

அப்படி ஆக்கக் கூடிய காலத்தில் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய சாதாரண வாடகைக்கு இருக்கக் கூடிய ஒருவர், சர்க்கார் ஊழியராக இருக்கலாம், அல்லது தொழிலாளராக இருக்கலாம், அல்லது தொழிலில் ஈடுபட்டவர்களாக இருக்கலாம், அவர்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்று சொன்னோம். ஆனால் என்ன செய்து வைத்திருக்கிறோம் என்று சொன்னால் ஒரு நிலப் பிரபுவிற்கும், வீடுகள் வைத்திருப்பவர்களுக்கும் நல்லது செய்திருக்கிறோம். அந்த வீட்டில் வாடகைக்கு இருப்பவர்களின் பிரச்னைக்கு அப்பால் போய், வீடு வைத்திருக்கிறவர்கள் தங்கள் சொந்தக்காரர்களுக்கு வேண்டுமானால் பர்செனல் அகாமடேஷன் என்று சொல்லி ஒரு ஃபேமிலி என்று போட்டு தன்னுடைய மகனுக்கு, சம்சாரத்திற்கு வேண்டுமென்று சொன்னால், அப்படிப் பிரச்னை ஆக்கப்பட்டது என்று சொல்லக் கூடிய சமயத்தில் அவர்களுக்கு உதவியாக அதை விரிவு படுத்தியிருக்கிறோம்.

சலுகைகள் ஜாஸ்தியாக லேண்டு லார்டுகளுக்குத் தான் போயிருக்கிறது. இந்த பில்லினுடைய நோக்கம் தெளிவாக இல்லாமல் இருக்கலாம். இந்த ரெவ்யூ கமிட்டி செய்த சிபாரிசுகளை அப்படியே ஏற்றுக் கொள்வார்கள் என்று அர்த்தம் அல்ல. இந்தச் சிறந்த கமிட்டி உட்கார்ந்து செய்ததை அவ்வளவு லேசாகப் புறக்கணித்து விடக் கூடாது. ஆனால் செலக்ட் கமிட்டி புறக்கணித்து விட்டார்கள். ஒன்று இதை செலக்ட் கமிட்டிக்குத் திருப்பியனுப்ப வேண்டும். அதற்கு இந்த சட்ட மன்றத்திற்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

இந்த மசோதாவின் பேரில் ஒவ்வொரு பிரிவிற்கும் வேண்டிய திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். நாங்கள் கொடுக்காமல் இருந்தால் கூட அரசு திருத்தங்களைத் தாங்களாகவே கொண்டு வந்து இந்த மசோதாவை இந்த நோக்கத்திற்காக நிறைவேற்றக் கூடிய அளவிற்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த முதல் ரீடிங்கிலே என் கருத்தை இதோடு நிறுத்திக் கொள்கிறேன். பின்னால் வேறு இரண்டு பிரிவுகளில் விரிவாகப் பேசுகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த மசோதாவிலே பல கருத்துக்களை மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையிலே இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகிற நேரத்திலேயே ஒரு குழப்பமாக இருந்தது என்று கருதுகிறேன். ஆனால் செலக்ட் கமிட்டியிலே சில யோசனைகளையெல்லாம் சொல்லித் திருத்தியதற்குப் பிறகும் அந்தக் குழப்பம் நீங்கக் கூடிய நிலைமை





6614

இல்லை என்று நான் வருத்தத்தோடு சொல்கிறேன். செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவதற்கு முன்னதாகவே பல கட்டங்களிலே இந்த விஷயமாக, இந்த மசோதாவைக் குறித்து பல இடங்களில் பேசியிருக்கிறார்கள். [illegible] இடங்களில் அறிக்கைகளையும் தயார் செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு இங்கு ஒரு ரிப்போர்ட் இருக்கிறது. Report of the Committee constituted to review the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960.

இந்த 60-ம் ஆண்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த மசோதாவின் மீது பல கருத்துக்கள் எல்லாம் ஏற்கெனவே இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிச் சொல்லப்பட்ட கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். ஏற்கெனவே இந்த மாதிரியாக இந்த 60-ம் ஆண்டு மசோதாவைச் சரியான வகையில் அமுல்படுத்தவில்லை என்றாலும் கூட அந்தக் கருத்துக்களைத் தெளிவாக ஆக்கியதற்குப் பிறகும் கூட திருத்த மசோதாவில் இந்தக் கருத்துக்கள், இந்த அம்சங்கள், இந்தப் புத்தகங்களில் இருக்கிற அம்சங்கள் இதிலே காணப்படவில்லை.

V211,31 N73
31N73.39

உண்மையாக இந்த மாதிரி இப்போது வந்திருக்கக்கூடிய மசோதா ஏழை. எளியவர்களுக்கு, குறிப்பாக பாட்டாளி மக்களுக்கு, அவர்களோ ரொம்பவும் கஷ்டமாக தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டு ஏதோ ஒரு நாளைக்கு 5, 6, 7, 10 ரூபாய் என்று ஊதியம் வாங்கக் கூடியவர்களே தவிர, அவர்களுக்கு நன்மை செய்திருக்கிறதா என்று இந்த மசோதாவைப் பார்த்தால் தெளிவாகச் சொல்கிறேன், இந்த மசோதாவின் மூலமாக லட்சக் கணக்கான பாட்டாளி மக்கள் தமிழகத்திலே எந்த விதமான பயனும் பெற முடியாத துர்ப்பாக்கியமான நிலைமையில் இருக்கிறார்கள் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், இன்னொரு சின்ன கோஷ்டி இருக்கிறது. சில வீட்டு சொந்தக்காரர்களிடம் பணக்கார டெனன்ட்ஸ் இருக்கிறார்கள். அவர்கள் கொழுத்த பணக்காரர்கள்.

டாக்டர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சில வீடுகளை வைத்துக் கொண்டு ஏராளமான பணத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். பம்பாயில் இப்படி நடந்து கொண்டிருக்கிறது. என் மேல் யாரும் குற்றம் சாட்ட முடியாது. ஆனால் பம்பாயில் இப்படி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. பகடி சிஸ்டம் என்ற முறையில் 25 ரூபாய் வாடகை கொடுத்துவிட்டு

கொண்டு 5 ஆயிரம் சம்பாதிக்கிற நிலைமை இருக்கிறது. டெனன்ட்ஸ்களாக அப்பேர்ப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இரண்டு சதவீதத்தினர் இப்படிப் பட்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் பெரும்பான்மையானவர்கள் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில்லை. ஆகவே இது ஏழை எளியவர்களாக இருக்கிற டெனன்ட்சுகளுக்கும் நன்மை செய்யவில்லை. சாதாரணமாக ஏழை எளியவர்கள் என்று சொல்லக் கூடிய ஒரு சின்ன வீட்டை வைத்துக் கொண்டிருக்கிற வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் நன்மை செய்யவில்லை.

Neither it has helped poor tenants nor it has helped poor landlords.
இப்படி இரண்டு வகையில் பார்க்கிற நேரத்தில் கூட பணக்காரர்களுக்குத் தான் நல்ல வசதி இருக்கக் கூடியவர்களுக்குத் தான் இந்த மசோதா நன்மை செய்திருக்கிறது என்று சொல்வதில் எந்த விதமான கருத்து வேறுபாடு இருக்க முடியாது என்று சொல்கிறேன்.

ஒரு மசோதாவைக் கொண்டு வருகிற நேரத்தில் சில கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கவேண்டும். அந்தக் கோட்பாடுகள் கடைபிடிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. 1960-ஆம் ஆண்டு மசோதாவிற்குப் பிறகு இந்தப் பிரச்னையை ஹைகோர்ட்டுக்கு எடுத்துக் கொண்டு போயிருந்தார்கள். ரென்ட் கன்ட்ரோல் கோர்ட்டுக்குக் கொண்டு போயிருந்தார்கள். அங்கே பலர் முறையிட்டு இருந்தார்கள். அந்த முறையீடுகளையெல்லாம் சம்பந்தப்பட்ட இலாக்காக்களிலே கவனிக்கவில்லை. உதாரணத்திற்குச் சில எடுத்துக்காட்டுகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சில நேரத்தில் இந்த விஷயங்கள் கோர்ட்டுக்குப் போவது நமக்குத் தெரியும்.

இந்த ரென்ட் கன்ட்ரோல் சரியான வகையில் இல்லை என்று கேஸ் போட்டிருக்கிறவர்கள் ஏராளமாக ரென்ட் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். வாடகையை குறைக்கவேண்டுமென்று கோர்ட்டுக்குச் சென்றார்கள் என்றாலும். கோர்ட்டுகளில் தீர்ப்புகள் வழங்கப்பட்டன. இந்தத் தீர்ப்புகள் டெனன்ட்களுக்குப் பாதகமான தீர்ப்புகள். வீட்டுக்காரர்களுக்குச் சாதகமாக



உதாரணமாக கோர்ட்டுக்குப் போனதற்குப் பிறகு என்ன தீர்ப்பு கொடுத்திருந்தார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். வீடு ஒன்றை எடுத்துச் சொல்கிறேன். ஒரு வீடு, 3369/61, 110, அங்கப்ப நாயக்கன் தெரு. இங்கே ஒரு வீட்டினுடைய வாடகை ஓரிஜனல் ரென்ட் 105 ரூபாய் என்று இருந்தது. ஃபேர் ரென்ட் பிக்சேஷன் செய்ததற்குப் பிறகு என்ன வாடகை என்றால் 413 ரூபாய். 19, சுங்குராம செட்டி தெரு வீட்டிற்கு ஃபேர் ரெண்டுக்கு முன்பு ஓரிஜனல் ரெண்டு கொடுத்துக் கொண்டு வந்ததை, சப்போஸ்டு டு பி அன்ஃபேர் ரெண்டு அட் தட் டைம் என்று 450 ரூபாயாக இருந்ததை சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு கோர்ட்டுக்குப் போனதற்குப் பிறகு 417 ரூபாயாக பயங்கரமாக உயர்ந்திருக்கிறது. திருவொற்றியூர் ஹை ரோடு, மெட்ராஸ், 21 எண் வீட்டிற்கு 85 ரூபாய் ஓரிஜனல் ரென்ட், இப்போது கோர்ட்டுக்குப் போனதற்குப் பிறகு 368 ரூபாய். எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது !

(திரு. என். கணபதி எழுந்திருந்தார்)

நான் முடித்து விடுகிறேன். நான் தெளிவாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். பிறகு நீங்கள் பேசலாம். நான் பழைய வரலாற்றை டிரேஸ் பண்ணிச் சொல்வது இந்த ஆட்சி மீது குற்றம் சுமத்துவதற்காகச் சொல்கிறேன் என்று கருதக் கூடாது. திரு. கணபதி அவர்கள் சட்ட மன்றத்திற்கு வருவதற்கு முன்னதாகவே, நான் வருவதற்கு முன்னதாகவே இது ஏற்பட்டது. என்னுடைய மெய்டன் ஸ்பீச்சில் இது சம்பந்தமாகச் சொல்லிக் கொண்டு வந்தேன்.

திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில் பேசியிருக்கிறேன். என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம், எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறோம் என்பது பொதுமக்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

உலகத்திலேயே புரட்சிகரமான மசோதாவைக் கொண்டு வந்து விட்டதைப் போல் யாரும் நினைத்துக் கொள்ள வேண்டாம். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் சாதாரண மசோதாதான் என்று கூறுகிறார்கள்.

38-பி, மவுண்ட்ரோடு—ஓரிஜினல் ரென்ட் 300 ரூபாய், இப்போது 900 ரூபாய். 278, என்.எஸ்.சி. போஸ் ரோடு, பழைய ரென்ட் 185 ரூபாய், இப்போது ஃபேர் ரென்ட் 1,081 ரூபாய். இவ்வளவு பயங்கரமாக ஏறி இருக்கிறது.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும், ஏழைகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நிலைமையைக் கொண்டுவர இந்த மசோதா முற்பட்டிருக்கிறதா என்று சொல்லுங்கள். திரு. கணபதி அவர்கள் அதற்குத்தான் வரவேண்டும். (குறுக்கீடு) திரு. கணபதி அவர்கள் என்னுடைய பழைய நண்பர். அவர் மனத்தில் என்ன இருக்கிறது, என்ன கிளாரிபிகேஷன் கேட்க வந்தார் என்று எனக்குத் தெரியும்.

THIRU N. GANAPATHY: The only clarification I want to seek is this. Old rents at some places situate in important localities in the City of Madras has been cited by Dr. H. V. Hande. When was that old rent fixed? For how long the tenant was enjoying the old rent? When was the new rent fixed? According to what rules it was fixed? All these things should be clarified, so that there may not be any misunderstanding.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ரொம்ப சந்தோஷம். அதைத்தான் சொல்ல வந்தேன். அம்மாதிரி பயங்கரமான சூழ்நிலை மாற்றியமைக்கப்பட்டதா என்றால் இல்லை. பல மாநிலங்களிலே இதுபற்றித் தெளிவாகச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை மதிப்பிற்குரிய கணபதி அவர்கள் அறிவார்கள் என்றே கருதுகிறேன். வாடகையை உயர்த்த வேண்டுமென்றாலும் இவ்வளவு பர்சன்டேஜுக்கு மேல் உயர்த்த முடியாது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட வாடகையாக இருந்தாலும் அதை உயர்த்த வேண்டுமென்றால் அதற்கு ஒரு வரம்பு இல்லையா? எவ்வளவு மடங்கு வேண்டுமானாலும் உயர்த்தலாமா? மகாராஷ்டிராவில் தெளிவாகச் சட்டம் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் பம்பாயில் நடப்பது வேறு வகையாக நடக்கிறது. பல மாநிலங்களில் இவ்வளவு பர்சண்டுக்கு மேல் உயர்த்தக்கூடாது என்று தெளிவாகச் சட்டம் போட்டிருக்கிறார்கள்.

The Supreme Court in Tamil Nadu Lease and Rent Control Appeal No. 2225/66, published in 1972 M.L.J.
—கணபதி அவர்கள் கேட்பார்கள் என்றுதான் வைத்துக் கொண்டிருக்கிறேன்.
has pointed out that every State in India has put a ceiling on fixation of rent either way, while Tamil Nadu has not done it.

தமிழ்நாடு செய்யவில்லை. அதை நான் சொல்லவில்லை, சுப்ரீம் கோர்ட் சொல்லியிருக்கிறது.



மாண்புமிகு திரு. க. இராசாராம்: சுப்ரீம் கோர்ட் தமிழ்நாட்டில் செய்யவில்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். புதிய சட்டம் இயற்றப்பட்டது அவற்றை எல்லாம் உத்தேசித்துத்தான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. கணபதி அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொன்னேன்.

I am thorough with facts and figures. But I do not want to waste the time of the House.

நான் இதற்காக 50 பக்கங்களுக்கு மேல் தஸ்தாவேஜுகள் எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன்.

The fair rent is fixed by the court.

ஒரு கமிட்டிக்குப் போயிருந்தேன். அதனால்தான் முன்னால் பேச முடியவில்லை. இப்போது என்ன பாயின்ட் என்றால்—

Section 4 of the Act limited the variation permissible in the existing rent for fixation of fair rent under the provision of section 4 of the Act, 1960. The then Government by passing section 4 of the Act in the form in which it did, instead of furthering the interests of tenants by preventing exorbitant increase in rent has as a matter of fact given its aid to landlords to enable them to enhance rents from 400 to 1,000 per cent over the existing rent, thus defeating the very purpose of introducing such a legislation.

அதுதான் பாயின்ட். இதைப்பற்றிப் பல தடவை நான் சொல்லியிருக்கிறேன். மதிப்பிற்குரிய அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்த போதே பேசியிருக்கிறேன். நோட்டிபிகேஷன் செய்து அரசாங்கத்தின் மூலமாக வீடுகள் கொடுக்கப்படுவது பற்றிச் சொன்னார்கள். அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக இருப்பவர்களுக்குத்தான் கொஞ்சம் வசதியாகக் கிடைக்கின்றது. எல்லோரும் செல்லப் பிள்ளைகளாக இருக்க முடியாது. இருக்கக்கூடிய பர்சன்டேஜ் ஆப் ஹவுஸ்சும் குறைவுதான். இன்று அக்காமடேஷன் கண்ட்ரோலுக்குப் போனால் என்ன நிலைமை? அந்த வீடுகளை வாங்க மேலிடத்திற்குச் சென்றுதான் வாங்க வேண்டும், அமைச்சரிடத்தில் போய்தான் வாங்க வேண்டும்: குற்றம் சாட்டவில்லை. பல ஆண்டுகளாக இப்படி இருக்கிறது. அக்காமடேஷன் கண்ட்ரோலர் கைகட்டிக் கொண்டுதான் இருக்கிறார். நான் ஒரு பர்டிகுலர் பர்சனைச் சொல்லவில்லை,

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 மார்ச் 31

அந்த இலாகாவைச் சொல்லுகிறேன். அவர்களுக்கே தெரியும், அவர்கள் முடிவு செய்ய முடியாது. Everything will come to Fort St. George செக்ரடேரியட்டுக்கு, அமைச்சரவைக்கு வந்து உத்தரவு போட வேண்டிய நிலைமையைப் பார்க்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் ஏழை எளியவர்கள் எப்படி வாழ முடியும்? அரசாங்கம் இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா? இந்த மசோதாவை வெறும் கண்துடைப்புக்காகத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏதோ செய்து விட்டோம், செய்து விட்டோம் என்று சொல்லுகின்றீர்களே, ஆணித்தரமான நடவடிக்கை என்ன எடுத்திருக்கின்றீர்கள்? அரசாங்கமே ஒருவகையில் முதலாளியாக இருந்து குடக்கூலியை உயர்த்தியிருக்கிறார்கள்.

ஸ்லம் போர்டு வீடுகளுக்கு 5 ரூபாய், 10 ரூபாய் என்று வாடகை இருந்ததை 40 ரூபாயாக ஆக்கி இருக்கிறீர்கள். மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருக்கக்கூடிய முறையில் நீங்களே வாடகையை உயர்த்தி இருக்கிறீர்கள். ஏழை ஜனங்கள், சாதாரண ஜனங்கள் எப்படி இதைத் தாங்க முடியும்? பயங்கரமான செலவில் கட்டிக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறீர்கள். நிலத்தின் விலையை எவ்வளவு பயங்கரமாக உயர்த்தி இருக்கிறீர்கள்? விலைவாசி உயர்வுக்கு மூல காரணம் நீங்கள்தானே. ஹவுசிங் போர்டு, அரசாங்கந்தானே காரணம். ஒரு கிரவுண்டுக்கு 20,000 ரூபாய் என்று விலையை நிர்ணயிக்கின்றீர்கள்.

ஒரு வேலையும் செய்யாமல் சிலர் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் நாள்தோறும் உழைத்தால்தான் சாப்பிட முடியும். ஏதோ ஒரு காலத்தில் 20 கிரவுண்டை வைத்திருந்தவன் இன்றைக்கு அறுவடை செய்கிறான். ஒரு காசு செலவு செய்யாமல் ஒரு வேலையும் செய்யாமல் இன்று அறுவடை செய்து கொண்டிருக்கிறான். அதைப் பார்த்தால் அவ்வளவு கோபம் வருகிறது எனக்கு. (சிரிப்பு) ஒவ்வொருவன் மாடாக உழைக்கிறான். இவன் [illegible] சம்பாதிக்கிறான் என்னும்போது எனக்குக் கோபம் வருகிறது.



1973 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான்கூடச் சிரித்தேன், உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறதே என்பதற்காகச் சிரித்தேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. ஆறுமுகம் அவர்களுக்குச் சொன்னேன். இந்தப் பயங்கரமான நிலைமையைப் பார்த்தால் கோபம் வருகிறது. சபாநாயகரை விட்டு விட்டேன். உங்களோடு சண்டை போட்டால் பேசவே முடியாது. மற்றவர்கள் சிரித்ததற்குக்குத்தான் ஆட்சேபனை சொல்லுகிறேன். சிலருக்குச் சிரிப்பாக இருக்கலாம். அழக்கூடிய நிலைமையில் நான் இருக்கிறேன். ஒரு பைசா செலவு இல்லாமல் இவ்வளவு லாபம்.

கடைசியில் எவ்வளவு நிலம் வேண்டுமென்று டால்ஸ்டாய் சொல்லுகிறார். ஆறு அடி நிலம்தான் வேண்டும். சல்லிக் காசு செலவு இல்லாமல் கிடைத்த நிலத்தைக் கொஞ்சம் கூட உழைக்காமல் இன்று விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பலமுறை சட்டசபையில் எழுப்பியிருக்கிறோம்.

பத்து லட்சம், 50 லட்சம் என்று கொடுப்பதுதான் இந்த விலைவாசி உயர்வுக்குக் காரணம். இந்தமாதிரி ரெண்டை உயர்த்தியதற்கு மூலக் குற்றவாளி யார்? அரசாங்கம், அமைச்சரவை, அமைச்சர், இலாகா, எல்லோரும் சேர்ந்து தமிழ்நாட்டில் பயங்கரமான அளவுக்குக் குடக்கூலியை உயர்த்தி இருக்கிறார்கள். தாங்க முடியாத அளவுக்குக் குடக்கூலி போய்க் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பயங்கரச் சூழ்நிலைக்கு மூலகாரணம் இந்த அரசாங்கம்தான்.

இந்த மசோதாவைக் கொண்டுவந்து விட்டோம் என்று நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அல்லது அரசாங்கம் தன்னையே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். இதைப் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டவேண்டியது என் கடமை என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் கொண்டு வந்திருக்கிற இந்த வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை ஆதரித்து நான் ஒருசில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

முதன்முதலாக இந்தச் சட்டத்தைப்பற்றிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இது ஏதோ குடித்தனக்காரர்களுக்குப் பெரும் அநியாயத்தைச் செய்துவிட்டதைப்போலவும், வீட்டுச் சொந்தக்காரர்களுக்குப் பெரும் நன்மையைச் செய்துவிட்டதைப் போலவும், இந்தச் [illegible]

இருந்தவர்களும், இந்த அரசும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு ஒரு இன்லென்டிவ் அளிக்கக்கூடிய வகையில் அவர்களுக்குச் சாதகமாக இந்தச் சட்டத்தைச் செய்துவிட்டது போலவும் இங்கு தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். எனக்குள்ள விந்தை எல்லாம் தனக்கென்று சொந்தமாக வீடு கட்டிக்கொண்டு சென்னையில் வாழ்ந்துகொண்டிருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகத் தீவிரமாக வீடு இல்லாதவர்களைப்பற்றிப் பேசியது எனக்கு மிக்க விந்தையாக இருந்தது. மிக முக்கியமாகச் சொல்லப் படுகிற நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, மௌண்ட் ரோடு, சங்குராம செட்டி தெரு, அங்கப்பநாய்க்கன் தெரு போன்ற தெருக்களை எல்லாம் எடுத்துக் காட்டி அங்கு குறைந்த வாடகைகளில் இருந்தவர்களுக்கெல்லாம் வாடகை 1960-ம் ஆண்டு சட்டம் வந்த பின்னர் அதிகமாக ஆக்கப்பட்டு விட்டது என்று எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால் நான் சொல்ல விரும்புவது அரசு பொதுவில் நின்று நம் செலக்ட் கமிட்டியைப் பொறுத்தவரையில் குடித்தனக்காரர்களுக்குத் தீமை இழைக்காமல், வீட்டுக்காரர்களுக்கும் தீமை இழைக்காமல் இரண்டுக்கும் பொதுவாக நின்று இரண்டு பேர்களுக்கும் பல நன்மைகளைச் செய்யக்கூடிய விதத்தில்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. இதைச் செய்வதற்கு முன்னால் நம்முடைய அரசாங்க வழக்குரைஞர்களைப் போன்ற முக்கிய செயலாளர்களைக் கொண்ட ஒரு குழு பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து ஒரு அறிக்கை கொடுத்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில் இந்தச் சட்டம் தயாரிக்கப் பட்டு நம் பொறுக்குக் குழுவின் வசம் வந்து ஒன்றிரண்டு திருத்தங்களுடன் இந்தச் சட்டம் நிறைவேற இருக்கிறது.

அவர்களின் முக்கியமான குற்றச்சாட்டு ஏதோ வாடகை அதிகமாக ஆகக் கூடிய விதத்தில் நாம் சட்டத்தை அமைத்துவிட்டதுபோல் சொல்கிறார்கள். ஆனால் நியாய உணர்வோடு இந்தச் சட்டத்தை அணுகும்போது சாதாரணமாக, ஒரு வீடு அல்லது இரண்டு வீடுகளை வைத்துக்கொண்டு அதை நம்பியே வாழ்க்கை நடத்தக்கூடிய மக்கள் நம்முடைய நாட்டில் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். பற்பல வீடுகளைப் பல இடங்களில் வைத்துக்கொண்டு, உதாரணமாக இதையே ஒரு தொழிலாக வைத்துக்கொண்டு நடத்தி வருகிறவர்களைப் பாதுகாக்கும் வகையில் நம் சட்டம் அமையவில்லை.

ஒன்று அல்லது இரண்டு வீடுகள் வைத்துக்கொண்டு வேறு ஆதரவோ அல்லது துணைக்கு ஆளோ இல்லாத நிலையில் பல்வேறு குடும்பங்கள் வாடகை வருமானத்தை மட்டுமே நம்பி வாழும் நிலையில் உள்ளன. அவர்களுக்கு நாம்



நாம் பாதுகாப்பு செய்தால்தான் நாம் நியாயமானவர்களாவோம் என்ற அடிப்படையில்தான் இந்த வாடகையை உயர்த்துவதுபற்றி நம் சட்டத்தில் தீவிரமாகப் பரிசீலனை செய்து அதில் குடித்தனக்காரர்களுக்கு தீமை இல்லாமல், அதே நேரத்தில் வீட்டுக்காரர்களுக்கும் நன்மை அதிகம் கிடைக்காத அளவிற்குச் சட்டத்தை அமைத்திருக்கிறோம்.

குடித்தனக்காரர்களுக்கு நாம் செய்திருக்கும் முக்கியமான நன்மை, 'வில்புல் டிபால்ட்' என்ற செக்ஷன் இருக்கிறது. அதைப் பொறுத்தவரையில் 'வில்புல் டிபால்ட்' என்றால் என்ன என்பது பழைய சட்டத்தில் இல்லை. நீதி மன்றங்கள் பலநேரங்களில் பல்வேறு கருத்துக்களை எடுத்து அதற்கு ஒரு வரையறுக்கப்பட்ட நிலைமையில்லாமல் ஒரு தீர்ப்பு வழங்கக்கூடிய நிலைமை இருந்தது. நியாயமான குடித்தனக்காரர்கள் சிலநேரங்களில் வீட்டை விட்டு வெளியேறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அநியாயமான குடித்தனக்காரர்கள் சில நேரங்களில் அந்த வீட்டில் இருந்துகொண்டு வீட்டுக்காரர்களுக்குத் தொல்லை தரும் நிலைமையும் இருந்தது. அதனால் அதை மாற்றி இப்போது குடித்தனக்காரர்கள் இரண்டு மாதங்கள் நோட்டீஸ் வந்த பிறகும் வாடகை கட்டவில்லை என்றால் அது 'வில்புல் டிபால்ட்' ஆகும் என்ற திருத்தத்தைச் செய்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் வீட்டுவாடகை கட்டமுடியாத நிலை இருந்தால் இரண்டு மாத வாய்ப்புக் கொடுத்து அந்த வீட்டில் இருக்கும் நிலையை உருவாக்கியிருக்கிறோம். அடுத்து, வசதிகளைப்பொறுத்து, நீதிமன்றம் சென்று வழக்குப் போட்டு உடனடியாக உத்தரவு வாங்கினாலும் அதை நிறைவேற்ற ஒருவார காலம் தவணையிருக்கிறது. அந்த ஒரு வார காலத்திற்குள் வீட்டுக்காரர் நிறைவேற்றிக் கொடுக்கவில்லை என்றால் குடித்தனக்காரர் அதைச் செய்துகொண்டு அந்தப் பணத்தை வீட்டுக்காரரிடம் இருந்து வசூலித்துக் கொள்ளலாம் என்ற ஒரு புதிய பகுதி சேர்க்கப் பட்டிருக்கிறது. ஆக, இப்படிப் பல்வேறு நிலையில் இந்த அரசு ஆராய்ந்து பொதுவான முறையில், நியாயமான முறையில் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

• திரு. எம். சுரேந்திரன் : உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு கொண்டு வந்திருக்கிற 'டமில் நாட் பில்டிங்க்ஸ் (லீஸ் ஆண்ட் ரெண்ட் கண்ட்ரோல்) செகண்ட் அமென்ட்மென்ட் பில்' சம்பந்தமாக ஒருசில கருத்துக்களை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவிற்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, அந்தத் திருத்தங்கள் காலத்திற்கேற்ற முறையில் கொண்டுவருவதற்கான வகையில் நம்முடைய அணுகு முறை, நம் பார்வை இருக்கவேண்டும் என்பது இந்தப்பில்லில் இருந்து குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த பில் வாடகைக்காரர்களுடைய நலன்களுக்காக உருவாக்கப் பட்டிருக்கிற ஒரு மசோதாவாகும். இப்படி ஏற்படுவதற்குக் காரணம் என்ன வென்று பார்க்கும்போது நகரங்களில் இருக்கிற வசதிகள் எல்லாம், தொழிற்சாலைகள், போக்குவரத்து, மற்றவைகள் எல்லாம் அபிவிருத்தி அடைய அடைய நகரங்களில் மக்கள் கூடிவிடுகிறார்கள். அப்படி நகரங்களில் மக்கள் தொகை கூடும்போது அவர்களுக்கு வேண்டிய குடியிருப்பு வசதிகளையும் வாய்ப்புகளையும் உண்டாக்கித் தருவது மிக அவசியமான ஒன்றாக ஆகி அதன் காரணமாக அதுவே, ஒரு தொழிலாக ஆரம்பிக்கப்படுகிறது என்பதிலிருந்து தான் இந்தச் சட்டம் தொடங்குகிறது.

ஆகவே, நகரங்களில் உள்ள வீடுகள் ஒரு தொழிலாக இருக்கலாமா என்பது பற்றி இப்போது ஆராயப்படவேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். காரணம், நிலங்களைப் பற்றிய நம் கருத்துக்களில் பெரிய மாற்றங்கள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன. நில உச்சவரம்பு இவ்வளவுதான் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நிலம் என்பது ஒரு தொழிலாக, மூலதனம்போட்டு லாபம் சம்பாதிக்கும் முறையில் ஒரு தொழிலாக அந்த முறையில் இருக்கக்கூடாது என்பது இப்போது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

நிலத்தில் அனுபவபாத்தியதை இருக்கிற குத்தகைதாரர்களுக்குக் கூட அந்த நிலத்தை வழங்கிவிடவேண்டும் என்ற எண்ணம் இப்போது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல் அரசாங்கம் வீடுகள் கட்டித் தருவது என்பது முன்பிருந்ததைவிட இப்போது அதிகப்படியான வீடுகளைக் கட்டி வீடு இல்லாதவர்களுக்கு வழங்கவேண்டுமென்ற நிலைமையை உருவாக்கியிருக் கிறது. இவற்றிலிருந்து, நம் நோக்கில், நம் பார்வையில் மாற்றம் ஏற்பட்டிருக் கிறது என்பதைத்தான் இவை எடுத்துக்காட்டுகின்றன.

இந்நிலையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது இந்த நல்லெண்ணத்துடன், இந்தப் பார்வையுடன் இந்தப் பிரச்சினையைப் பார்க்காமல் வேறுமாதிரி பார்க்கப்படுகிறது என்பதுதான் இந்த மசோதாவில் [illegible]



சொல்லவேண்டிய ஒரே ஒரு அம்சமாகும். ஏனெனில், இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிற நியாய வாடகை நிர்ணயிப்பதற்கான வழிமுறைகள் பற்றிச் சொல்லியிருக்கிற பிரச்சினையை எடுத்துக்கொண்டால் அது மிகவும் நியாயமற்றது என்பதை நன்றாக உணர முடியுமென்று இங்கு பேசியவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நிலம் என்றால் எப்போது வாங்கப்பட்ட நிலம்? அதற்கு எந்தச் செலவும் செய்யாமல் அதன் விலை மதிப்பீடு அதிகப்படுகிறது என்ற காரணத்தால் இன்றைய நிலையில் வைத்துக்கணக்கிட்டு அதற்கு வாடகை நிர்ணயிப்பது என்பது பழைய காலப் பழக்கவழக்கங்களில் வந்திருக்கிற சம்பிரதாயமே தவிர நவீன கால எண்ணங்களுக்கு, நவீன கால சித்தாந்தங்களுக்குப் பொருந்தியதல்ல என்பது என் முதல் ஆட்சேபனையாகும். இரண்டாவது விதிவிலக்கு. புதிய ஒரு கட்டடம் கட்டிய பிறகு ஐந்தாண்டுகள் என்று விதி விலக்கு இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? அதற்கு என்ன நியாயம் சொல்லப்படுகிறது என்று பார்த்தால் அதில் ஒருவித நியாயமும் தென்பட வில்லை. ஒருவிதக் காரணமும் தென்படவில்லை.

அதோடுகூட வீட்டிற்கு வசதி செய்வதற்காக என்று இவ்வளவு பர்செண்ட் லதில் கணக்கிடலாம் என்றிருக்கிறது. வீடு என்று சொன்னால் வசிப்பதற்குத் தகுதியாக இருப்பதைத்தான் வீடு என்கிறோம். வசிப்பதற்குத் தகுதியான அம்சங்கள் உடையனவே வீடுகள். ஆகவே, வசதிகள் செய்ய என்பதற்காக 10 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று சேர்த்துக்கொள்ளலாம் என்றால் வீடு என்று சொல்வதற்கான வியாக்கியானத்திற்கே அது தவறாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, வீடு என்று சொன்னால் எல்லா 'பில்டிங்'-களுக்கும் ஒரே மாதிரியான விதிகள் பொருந்தவேண்டும். அரசாங்கம் கட்டுகிற கட்டடங் களுக்கு இந்தப் பிரச்சினையில் இடம் இல்லை என்று சொல்வது சரியல்ல. அரசாங்கக் கட்டடங்களும் இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோன்று, நகரச் சொத்துக்கள் என்று சொல்கிறபோது, நகரச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்று ஒரு [illegible] மேலோங்கி வருகிறது. இந்த அரசாங்கம் இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்குச் செய்தாகவேண்டும். அப்படிச் செய்தாகவேண்டுமென்ற நிலைமை இருக்கிறபோது, அந்த வீடுகளைக் கட்டி, தனிப்பட்டவர்கள் தொழிலாக [illegible]

நடத்துவதற்கு மூலதனம் போட்டு, அதன் மூலம் பணத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்ற நிலையில் அனுமதிக்கலாமா?

அப்படி ஈடுபட்டு இருக்கிறவர்களுக்கு அதிக வசதிகளை உண்டாக்கிக் கொடுக்கலாமா, அவர்களை உற்சாகப்படுத்துகிற அளவிற்குச் செய்யலாமா—இது வரையில் அவர்களை உற்சாகப்படுத்துகிற வகையில் சட்டங்கள் செய்து இருக்கலாம், இனிமேல் அப்படிச் செய்வது நியாயமா—என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படியானால் நம்முடைய சர்க்காரிலே தற்போது ஏராளமாகப் பணத்தைப் போட்டு வீடுகள் கட்டவேண்டிய நிலைமைக்கு நாம் போகவேண்டுமா? அவர்களை உற்சாகப்படுத்தினால் அவர்கள் வீடுகள் கட்டிக் கொண்டேபோவார்கள். இதிலே என்ன சௌகர்யம் என்றால், கள்ளப் பணத்தை இதில் ஈடுபடுத்தி அந்த வீடுகள் கட்டுவதற்கு முடிகிறது.

பல கட்டடங்கள் புதிதாகத் தோன்றியிருக்கின்றன. இது அவ்வளவு போதும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு விஷயமாகும். இன்னொரு வகையில் இந்த விஷயத்தைப் பார்த்தாலும், 1960-ல் பாங்கில் 1 லட்சம் ரூபாய் போட்டிருந்தால் அந்தப் பாங்கியில் இருக்கும் பணத்தின் மதிப்பு ரூ. 80,000 என்று மதிப்புக் குறைந்து விடுகிறது என்று கணக்குச் சொல்கிறார்கள். அப்படியிருக்கும்போது இதிலே போடப்பட்ட பணம் இன்னும் மதிப்பு அதிகமாகியிருக்கும் நிலையில் இருக்கிறது என்பதையும் நாம் உணர வேண்டும்.

விலைவாசியைத் தடுப்பதற்கு வேண்டிய பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகிற வகையில் இந்தப் பிரச்னையையும் சிந்திக்கவேண்டும். ஒரு மசோதா கொண்டு வருகிறபோது அதனுடைய விளைவுகள் எப்படி இருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். இருப்பதை மாற்றியமைப்பது சோசலிசம் ஆகிவிடாது. எல்லா அம்சங்களையும், புதுப்புது அம்சமாக, மாறிவரும் சமுதாயத்திற்கு ஏற்ப நோக்க வேண்டும். பழைய காலத்தில் சட்ட இலாகா திருத்தத்தைக்கொண்டு வந்தால் முன்னாலே சட்டம் எப்படி இருந்தது, இப்போது அது எப்படி மாற்றியமைக்கப்படுகிறது என்று சொல்வார்கள்.

இன்றைய காலகட்டத்திற்கு அது பொருந்தி வராது என்பதை இந்த நேரத்தில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். இன்றைய நிலையில் மற்ற அம்சங்களை, நம்முடைய மனோபாவங்களை, மக்களுடைய மனோபாவங்களைச் சட்ட இலாகா புரிந்து கொண்டு, ஆளும் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள், எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்ற பாகுபாடு





இல்லாமல், யார் சொன்னாலும் அதில் நியாயம் இருந்தால் அதையேற்று திருத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் நான் சொல்லிய இந்தக் கருத்துக்களையும் எடுத்துக்கொண்டு, இந்த மசோதாவை இப்போதே நிறைவேற்றவேண்டுமென்று பிடிவாதம் பிடிக்காமல் இந்த மசோதாவைத் தள்ளி வைத்து, இதிலே செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்து, இன்றைய சமுதாய சூழ்நிலைக்கு அனுசரணையாக—யாருடைய தேவைகளுக்கு அனுசரணையாக இந்த அரசு இருக்கிறது என்பதைப் பிரதிபலிக்கிற வகையில் இந்தத் திருத்தத்தை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், இந்த மசோதா மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மசோதாவை வன்மையாக எதிர்த்துப் பல மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இதிலே பல சிக்கலான பிரச்னைகள் இருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்பாக இந்த 'பேர்-ரெண்ட்' எப்படி நிர்ணயிக்கலாம் என்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, சிறு வீடுகளில் வசிக்கிறவர்களுக்கு வீட்டுக்காரர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. இந்தச் சட்டமானது யார் உடைமையாளர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குப் பாதுகாப்பு அதிகமாக அளிக்கிறதோடல்லாமல், வாடகைக்கு இருப்பவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை என்ற கருத்து இருக்கிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

1960-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை இந்தச் சட்டமானது ஒரு நிலையான சட்டமாக 'பர்மனென்ட் லெஜிஸ்லேஷன்' என்ற முறையில் அமல் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்பதை நாம் சற்றுக் கவனிக்கவேண்டும். முன்பு இருந்த தேதியிலிருந்து வருமா, 'ரிட்ராஸ்பெக்டிவ்'-வாக இருக்குமா அல்லது 'பிராஸ்பெக்டிவ்'-வாக இருக்குமா என்ற கருத்தையெல்லாம் ஆராய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்திலே கூறியிருப்பது என்னவென்றால்

It shall come into force on such date the Government may by notification appoint

என்று இருக்கிறது. ஆனால் என்றைக்கு அரசாங்கம் தேதி நிர்ணயம் செய்கிறதோ அன்றிலிருந்து வரும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இப்போது இருக்கும் சட்டத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன. உயர் நீதி மன்றத்திலும், உச்ச நீதி மன்றத்திலும் பல தடவைகள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதே மாதிரியாக இந்த 'பேர்-ரென்ட் பிக்ஸ்' செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இன்று இருக்கின்ற விலைவாசிகளின் அடிப்படையில் இந்த வீட்டு உடைமையாளர்களுக்கு எல்லாம் அதிக வாடகை கொடுக்கவேண்டும் என்ற வாதம் இங்கே கொடுக்கப்பட்டு வந்தது. நான் ஒன்று கூற விரும்புகிறேன். இந்த வீட்டு உடைமையாளர்களுக்கு மாத்திரம் வாதாடுவோர்கள் என்று சொன்னால், குறைந்த வருவாய் உள்ள 'லிமிட் இன்கம் குரூப்பில்' உள்ளவர்களுக்கு எவ்வளவு கஷ்டமும் சிக்கலும் இருக்கிறது என்பதை அரசாங்கம் பரிவோடு உணரவேண்டும். இன்று பலரும் நிறைந்த வீடுகளை வைத்துக்கொண்டு, வாடகை விடுவதை ஒரு தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பம்பாயில் பகடி முறை இருக்கிறது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அதே போல் ஒரு நோய் நம்முடைய சென்னை நகரத்திலும் இருக்கிறது என்பதை நாம் மறந்து விடலாகாது. ஏனென்றால் இன்று பலரும் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு உடைமையாளர்களாக இருக்கிறார்கள். என்ன திட்டத்தின் அடிப்படையில் வைத்து இருக்கிறார்கள். இப்படி அதிகமாக வைத்திருப்பதால் வீட்டில் வசிக்கிறவர்களுக்கு இருக்கும் கஷ்டத்தையும் நாம் அனுதாப பூர்வமாக அணுகவேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிலத்திற்கு உச்சவரம்பு என்று கொண்டு வந்திருக்கிறபோது, கட்டிடங்களும் இத்தனை தான் வைத்துக்கொள்ளலாம் ஒரு குடும்பத்திற்கு என்று உச்சவரம்பு கொண்டுவருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால், பல முனிசிபாலிடிகளிலும், பல நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், பல செல்வந்தர்கள் அதிகமாகக் கட்டடங்களை வைத்து அதன் மூலம் நிறையப் பணம் சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்குச் சுகாதார வசதி கூடச் செய்து கொடுக்காமல் அவர்களிடமிருந்து அதிகமாக வாடகை பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அவல நிலையை அகற்றுவதற்குத் தான் ஒரு 'ஸ்டாகடரி டெனன்ஸி ரிலீப்' செய்வதற்கு உண்டாக்கப்பட்டது என்றால், இந்த நிலைமை என்ன என்பதை விளக்க வேண்டும். இந்த ஆய்வுரையைப் படித்துப் பார்க்கும்போது அதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. எப்படி இதில் 'பேர் ரெண்ட்' நிர்ணயம் செய்வது என்பதைப் பற்றி 'ஷெட்யூல் 2, செக்ஷன் 4-ல்' நமக்குத் தந்திருக்கும் ஆய்வுரையின் [illegible] பக்கத்தில் சில விவரங்களைத் தந்து இருக்கிறார்கள். ஒரு பர்சன்ட், 1½ பர்சன்ட், [illegible] பர்சன்ட், 4 பர்சன்ட் என்று சொல்லி, [illegible]





என்றால், 14 பர்சன்ட் 'நான்-ரிசிடென்சியல்' என்றால் இன்னும் அதிகமான சதவிகிதம் என்ற முறையில் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் நாம் பார்க்க வேண்டும். இந்த 'ரிசிடென்சியல் பில்டிங்கை'-ப் பொறுத்த வரையில் அந்த வீடுகளுக்கு 'பேர் ரெண்ட்' நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது கடினமாக இருக்கும். இது சாதாரண எளிய மக்களை அதிகமாகப் பாதிக்கும் என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். ஆகவே, இதைப் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இது பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கும்.

உடைமையாளர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடாது. வாடகைக்கு இருப்பவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். டாக்டர் ஹாண்டே இந்த வாடகை உயர்த்துவது பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏன் அரசாங்கம் தனிப்பட்ட முதலாளி மாதிரி இருக்க வேண்டும், தேவையில்லை. நாமெல்லாம் சமதர்மத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள். அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக்கழகம் விஞ்ஞான சோசலிசத்தைத் தீவிரமாக அமல்படுத்துகிறோம் என்று சொல்கிற நேரத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான அந்த வீடுகளுக்குக்கூட இப்படி வாடகையை உயர்த்திக்கொண்டே போனால், படிப்படியாக உயர்த்துகொண்டேயிருக்கிறது என்று சொன்னால், ஏழைகள்பால் எவ்வளவு பற்றும் பாசமும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நாமே நினைத்துப் பார்க்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தை நான் கூறவேண்டுமென்று விரும்புகிறேன். இதன் 59-ஆம் பக்கத்திலுள்ள விவரங்களைப் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதிலே தந்திருக்கின்ற புள்ளி விவரங்களைப் பார்த்தால், அவைகள் எவ்வளவு பாதகமாகவிருக்கின்றன, எவ்வளவு பயங்கரமாக இருக்கின்றன என்பது விளங்கும். இதிலே பிளின்த் ஏரியாவையும் கொடுத்து, முன்பிருந்த வாடகையையும், அதாவது 1940-லிருந்த வாடகையையும் கொடுத்து, இப்பொழுதுள்ள வாடகையையும் கொடுத்திருக்கிறார்கள். [illegible] [illegible] மேல் எத்திவிருக்கிறார்கள் என்றால் இவ்வளவு உயர்வில் வாடகை கொடுப்பதற்கு எப்படி [illegible] இருக்கிறதா என்று சிந்திக்க வேண்டும். இதே மாதிரி வில்பும் டிபார்ட் பற்றி எடுத்துக் கூறினார்கள். இரண்டு [illegible] நேரடியாகக் கொடுத்தால் போதுமென்ற கருத்தைச் சொன்னார்கள்.

ஆனால் நோட்டீஸ் எந்த முறையில் அமையவேண்டுமென்று டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்டி ஆக்ட் 106-ஆவது செக்ஷனில் கூறப்பட்டிருக்கிறது. அந்த நோட்டீஸ் எப்படி இருக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் கருத்துக்கள், தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஸ்டேசுடரி டெனன்ஸியை டெர்மினேட் செய்ய 106-ஆவது பிரிவின்படி சரியான நோட்டீஸ் இருக்க வேண்டுமென்று உச்ச நீதி மன்றம் பலதடவை வலியுறுத்திச் சொல்லி யிருக்கிறது. அதன் அடிப்படையில் நமது சென்னை உயர்நீதி மன்றமும் ஏற்றுக் கொண்டிருக்கிறதென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தச் சட்டத்தில் நோட்டீஸ் கொடுப்பதில் இரண்டு மாதம் என்றிருக்கிறது. ஒரு மாதம் என்ற கருத்தும் இருக்கிறது. நான் ஒரு வேளை நினைக்கிறேன். இது ஒரு ஸ்டேசுடரி டெனன்ஸியாக இருக்கின்ற காரணத்தால் அதாவது ஒரு சாதாரணமாகச் சட்டமாக இருக்கின்ற காரணத்தால், நோ ரைட் ஓவர் தி ஜெனரல் லா என்று நினைக்கிறேன். அந்தத் தீர்ப்புக்கும் இதற்கும் முரண்பாடு இருக்கிறதா, அல்லது சாதாரண சட்டத்திற்கு முரண்பாடு இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். அடுத்தபடியாக, இந்த டிபால்டைப் பற்றி நாம் சற்றுப் பரிவோடு இருக்க வேண்டும். எப்படி ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் பரிவு காட்டி வருகிறதோ அதே மாதிரி இந்த வாடகைக்காரர் களுக்கும் சற்றுப் பரிவு காட்ட வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

நான் நினைக்கிறேன், இந்தச் சட்டத்தை நிரந்தரமாக்குவதன் காரணமாக நாம் என்ன நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று நினைத்தோமோ அவை களுக்கு மாறாக விளைவுகள் இருப்பதையும், விரோதமாக இருப்பதையும் நாம் பார்க்கிறோம். இதை நான் வலியுறுத்திச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் இதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்தில் எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். இதிலே வேறு சில பிரச்சினைகளும் இருக்கின்றன. இந்த ரெண்ட் கண்ட்ரோல் சட்டப்படி சிவில் புரொசிஜர் கோடு முழுமையாகப் பயன்பட முடியாத நிலைமை இன்னும் இருந்துகொண்டு வருகிறது.

ஏனென்றால் ஒரு ரெஸ்டிரிக்டட் அப்ளிகேஷன்தான் இருக்கிறது. இப்பொழுது இது ஒரு சம்மரி என்குயரி மாதிரித்தான் நடக்கிறதே தவிர ஒரு சிவில் சூட் என்ற முறையில் நடக்கிறதா என்றால் இல்லை என்று [illegible] வழக்கறிஞர் என்ற முறையில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதிலே [illegible] உண்டு என்று போட்டு இருக்கிறார்கள். சிவிலில் செல்கின்ற



நேரத்தில் எவ்வளவு சட்ட சிக்கல் இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சாதாரணமாக பேக்ட்ஸ் என்றால் அதற்கு செல்வதில்லை. லீகாலிட்டி, புரொப்ரைட்டி என்ற ஒரு மாதிரி ரெஸ்டிரிக்டட் நிலைமையில் தான் இந்தச் சட்டப் பிரச்சினை எல்லாம் காணப்படுகிறது. ஆகையினால் இந்த மாதிரியான கஷ்டங்கள் இன்னும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்கின்றபோது இது மேலும் கஷ்டமான ஒரு சட்டமாகத்தான் தெரிகிறது.

குறிப்பாக இந்த பேர் ரெண்ட் பிக்ஸ்லேஷன் முறை அக்கிரமமாகவும், அநீதியாகவும் பொதுமக்களையும், ஏழைகளையும் பாதிக்கின்றதாக இருக்கிறது என்று கூறி இதை வன்மையாக எதிர்க்கின்றேன் என்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த விவாதத்தில் பல்வேறுபட்ட உறுப்பினர் பெருமக்கள் பலதரப்பட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் நான் உள்ளபடியே ஒரு புதிய சிந்தனையில், ஒரு புதிய எண்ணத்தில்தான் நிற்க வேண்டியவனாக இருக்கிறேன். செலக்ட் கமிட்டியில் பலர் இருந்தார்கள். ஒரு முறையல்ல, இரு முறையல்ல, ஒரு நாள் அல்ல, இரண்டு நாட்களல்ல, செலக்ட் கமிட்டியிலிருந்த உறுப்பினர் பெருமக்கள் எத்தனை நாட்களுக்கு விரும்பினார்களோ அத்தனை நாட்களுக்கு அந்த செலக்ட் கமிட்டி நடந்திருக்கிறது. ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் அவரவர்களுடைய எண்ணங்களை அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வாதப் பிரதிவாதங்களை இங்கு பேசுகின்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி பலவிதமான ஒத்துழைப்புகளை அந்த செலக்ட் கமிட்டிக்குத் தந்தார்கள்.

அப்படியெல்லாம் தந்த பிறகும் மீண்டும் நான் இங்கே ஒரு புதுமையைப் பார்க்கின்றேன். ஏனென்றால் எல்லா உறுப்பினர்களும் புது உணர்ச்சி பெற வேண்டும், புதிய சிந்தனை செய்ய வேண்டும், புதிய நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று பலவற்றைச் சொல்லிக்கொண்டே போனார்கள். ஆகவே புதிய மாதிரியாகப் பேச வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்களும் முடிவு செய்து விட்டாரோ என்னமோ தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி ஒருவர்தான் அந்தக் குழுவில் ஒரு டிஸன்டிங் நோட் தந்தவர். அவரைத் தவிர வேறு யாரும் தரவில்லை. இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள மசோதா நியாய வாடகைக் கட்டுப்பாடு மசோதாவே தவிர மலிவு வாடகைக் கட்டுப்பாடு மசோதா அல்ல. நியாயத்திற்கும் மலிவுக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கிறது. நியாயத்தின் அடிப்படையில்தான் ஒரு காரியத்தைச் செய்கின்றோம். மலிவுக்காகச் செய்வது என்பது வேறு. இந்தக் காரியத்தில் இந்த அரசு எவ்வளவோ செய்ய முயற்சித்து வருகிறதென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அந்த வகையில் பல நடவடிக்கைகளும் எடுத்து இருக்கிறோம் டாக்டர் ஹாண்டே அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே தங்கமணி எப்படிப் பேசினாரோ அதே முறையில் பேசினார். அவரே சோஷலிசப் பாணியில் பேசினார். ராஜாஜி அவர்கள் உயிரோடு இல்லையே என்று கருதிக் கொண்டிருந்தேன். சுதந்திராக் கட்சியினுடைய புதிய சிந்தனை இன்றையதினம் வெளிப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, நான் எப்பொழுதுமே இப்படித்தான் பேசிக்கொண்டு வருகிறேன்.

MR. DEPUTY SPEAKER: Please address the Chair.

டாக்டர் எச். வி. ஹாண்டே: துணைத் தலைவரவர்களே, என்னுடைய அரசியல் வாழ்க்கை ஆரம்பத்திலிருந்து, இந்த அவையில் நான் ஆற்றிய maiden ஸ்பீச்சிலிருந்து இன்று வரையில் இந்த மாதிரியாகத் தான் பேசி வருகிறேன். இனியும் அப்படித்தான் பேசுவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆகவே, இந்த மசோதாவை நல்ல முறையில் மறுபடியும் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே மிகுந்த அக்கறை காட்டி ஏழைகளுக்கு மலிவாக வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

உங்களை எல்லாம் மீண்டும் கடற்கரைப் பக்கம் அழைத்துச் செல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இந்தியாவிலேயே எங்குமில்லாத அளவுக்குத் தமிழ் நாட்டில் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அது சென்னையில் மட்டுமல்ல, சேலம், கோவை, கடலூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும் குடிசைகளில் வாழ்கின்ற மக்களை, அவர்களுக்கு வசதியான [illegible]



குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து, ரூ. 50 வாடகை பெறுமானமுள்ள வீடுகளை பதினைந்து ரூபாய்க்கு மலிவான வாடகைக்குக் கொடுத்திருக்கிறோம். ஆகையினால் இந்தச் சட்டத்தினால் எந்த ஒரு ஏழையும் பாதிக்கப்படப் போவதில்லை. வேறு எந்த மாநிலத்திலும் இதைப் பார்க்க முடியாது. இவ்வளவு சிறப்பாகச் செய்திருக்கின்ற ஒரு மாநில அரசு தமிழக அரசுதான்.

திரு. பழனிச்சாமி அவர்கள் இந்த மசோதா மீண்டும் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். வீட்டுச் சொந்தக்காரர்களுக்கே சலுகைகள் கிடைக்கின்றன என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர்கள் வீடுகளைக் கட்டுவதே லாபம் சம்பாதிப்பதற்கே என்றும் சொல்லியிருக்கிறார். அவருடைய தலைவர் தங்கமணி அவர்கள் வீடு கட்டுவதே குடியிருப்பதற்குத் தானே, வாடகைக்கு விடுவதற்குத் தானே என்று கேட்டார். நான் ஒரு பயணக் கட்டுரையைப் படித்தேன். ரஷ்ய நாட்டில் எப்படி இருக்கிறது என்று பார்த்த நோக்கில் அங்கு ஒரு குடும்பத்தில் 5 பேர் இருந்தால் ஐந்து பேர் இருப்பதற்கான வீடு, மூன்று பேர் இருந்தால் அவர்களுக்கேற்ற வகையில் வீடு, ஒருவர்தான் இருந்தால் அவருக்கு மட்டும் போதுமான அளவுக்கு வீடு என்று இருந்தது. இங்கே அப்படி இல்லை. கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டுள்ள சித்தாந்தத்தின்படி அங்கு கூட எல்லோருக்கும் வீடு இல்லை. அவர் அடிக்கடி ரஷ்யாவுக்குச் சென்றிருப்பார். நான் போனதில்லை. குருச்சேவ் பேசிய பேச்சு நினைவுக்கு வருகிறது. யுத்த பீதி ஒன்றுமட்டும் இல்லாமல் இருந்திருந்தால் 'நான்' ரஷ்யாவில் இருக்கின்ற ஒவ்வொரு குடி மகனுக்கும் ஒரு வீடு கொடுத்திருப்பேன். இது குருச்சேவ் சொன்னது. இன்று கூட ரஷ்யாவில் ஆளுக்கு ஒரு வீடு கிடையாது. ஆனால் அப்படிப்பட்ட புதிய சித்தாந்தங்கள், புதிய சிந்தனைகள், புதிய தத்துவங்கள் யாவும் கலைஞர் கருணாநிதி அவர்களுடைய ஆட்சியில் நடைமுறைக்கு வருகின்றன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டத்தில் கூறப்பட்டுள்ள மாற்றங்கள் நியாயமாக இருக்கின்றனவா இல்லையா என்பதுதான் பிரச்சினை. இதனால் யார் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே டெனன்டுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை. அங்கப்பநாயக்கன் தெரு, சுபாஷ் சந்திர போஸ் தெருவைப்பற்றியெல்லாம் டாக்டர் [illegible] பி.ப.
[illegible] எடுத்துக் காட்டினார்கள். வாடகையில் [illegible] இருக்கிறது என்று I—30

சொன்னார்கள். மாறுதல்கள் இருக்கலாம். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு வீட்டில் ஹைகோர்ட் ஜட்ஜ் ஒருவர் வாடகைக்கு இருக்கிறார். அந்த வீடு கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த—சர்ச்சுக்குச் சொந்தமானது. அதை 85 ரூபாய்க்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் இன்றைக்கு அந்த வீட்டை வேறு ஒருவருக்கு வாடகைக்கு விட்டால் 500, 600 ரூபாய் வாடகை கிடைக்கும். நான் அமைச்சராக இருந்தாலும் நான் இருக்கக் கூடிய வீட்டிற்கு 190 ரூபாய் வாடகை. டாக்டர் ஹாண்டே அவர்கள் வீட்டில் ஏதாவது போர்ஷனை வாடகைக்கு விட்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை. (குறுக்கீடு) இல்லை என்று சொல்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வாடகையைக் குறைக்கவேண்டும் என்று சொல்லும்போது வீடு கட்டியவர்களின் நிலைமையையும் பார்க்கவேண்டும். இன்றைக்கு சிமிண்ட் விலை ஏறியிருக்கிறது; செங்கல் விலை ஏறியிருக்கிறது; கூலி உயர்ந்திருக்கிறது; நிலத்தின் விலை ஏறியிருக்கிறது. அதையெல்லாம் பார்க்க வேண்டும். பொன்னப்ப நாடார் அவர்கள் ட்ரஸ்டுகளைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு சில குடும்பங்கள் வீட்டைக் கட்டி, ஒரு பகுதியை வாடகைக்கு விட்டுவிட்டு, அவர்கள் ஒரு பகுதியிலே இருந்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் நிரந்தரமான சட்டம்; மாறுதலே செய்ய முடியாத சட்டம்; காலாகாலத்துக்கும் இந்தச் சட்டம்தான் இருக்குமென்று நான் கருதவில்லை. இந்தச் சட்டம் அப்படி இல்லை என்பதை என்னைவிட திரு. தங்கமணி அவர்கள் நன்றாக அறிவார்கள். ஏனென்றால் நாங்கள் எல்லாம் நாடாளுமன்றத்திலே இருந்திருக்கிறோம். அரசியல் சட்டம் புனிதமானது, அதைத் திருத்த முடியாது என்று ஒரு காலத்திலே சொல்லிக்கொண்டிருந்தார்கள். தங்கமணி அவர்கள் நாடாளுமன்றத்திலே இருந்த காலத்தில் 4, 5 முறை அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. நான் நாடாளுமன்றத்தில் இருந்த காலத்தில் 22-வது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. இப்போது 25-வது திருத்தம் வந்திருக்கிறது. ஆகவே, எந்தச் சட்டமும் நிரந்தரமானது, திருத்த முடியாது என்று யாரும் கருதத் தேவையில்லை. காலத்திற்கேற்றவாறு அவ்வப்போது இருக்கின்ற சூழ்நிலைக்கேற்றவாறு எந்தச் சட்டமும் திருத்தப்படலாம். எந்தச் சட்டமும் மாற்றங்களுக்கு உட்பட்டது தான். அந்தந்தக் காலங்களிலே வருகின்ற சட்டமன்றம் மாற்றும் என்பதில் ஐயமில்லை.





ஆனால், இந்தச் சட்டத்தில் நாம் 5 ஆண்டுக் காலத்திற்கு சொந்தக்காரர்களுக்கு விதிவிலக்கு வைத்திருக்கிறோம். இதற்கு முன்னாலே இருந்த சட்டத்தில், 1960-க்கு மேலே கட்டப்பட்ட வீடுகள் இந்தச் சட்டத்தில் வராத நிலைமை இருந்தது. அதற்கு மாறாக, நாம் 5 ஆண்டு காலத்திற்குத்தான் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். அதைப் பாராட்டுவார்கள் என்று நினைத்தேன்; யாரும் பாராட்டவில்லை. அந்தவகையிலே யாருக்கும் சலுகை அளிக்கும் நிலையில் நாம் இல்லை; சலுகை அளிக்கவேண்டிய தேவையும் இல்லை.

என்னை ஒரு முதலாளி என்று ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். வீட்டு வசதி வாரியத்திற்கு நான் தலைவராக இருப்பதால் என்னை ஒரு முதலாளி என்று முதலிலே தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை விட வேறு பெரிய வார்த்தை கிடைக்கவில்லையாதலால் ஹாண்டே அவர்களும் அதே வார்த்தையில் என்னை ஒரு முதலாளி என்று சொன்னார்கள். அரசு மக்களுக்குச் சொந்தம். ஆகவே, மக்களுக்குச் செய்யவேண்டிய சேவையை நாங்கள் பல்வேறு கோணங்களில் செய்துகொண்டிருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சர்க்கார் அதிகமாக வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். முதலாளி என்று சொல்லவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நாங்கள் எல்லாம் பொறுக்கு கமிட்டியிலே இருந்திருக்கிறோம். திரு. கே. டி. கே. அவர்களும் இருந்தார்கள். இதை எப்படி முடிவு செய்யலாம் என்று 2, 3 நாட்கள் மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டிருந்தோம். அப்போது 'காஸ்ட் ஆஃப் கன்ஸ்ட்ரக்ஷன்' பற்றியெல்லாம் யோசித்தோம். கடைசியில்தான் பொறுக்குக் கமிட்டி அங்கத்தினர்கள் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்தோம். 'ஃபேர் ரென்ட் இஸ் அவர் டிசிஷன்'. நியாயமான வாடகை இருக்கவேண்டுமென்று யோசித்து இந்த முடிவுக்கு வந்தோம். 'ஃபேர் ரென்ட்' என்பது 7 சதவிகிதம் ரிட்டர்ன் வருமென்று யோசித்து இப்படி ஒரு முடிவுக்கு வந்தோம். ஆகவே, எங்களை முதலாளிகளின் கையாள் என்று சித்தரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் இப்போது சொன்ன இந்த விளக்கம் அமைச்சரவர்களின் பதிலைப் பொறுத்திருப்பது என்று அல்ல. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அம்மையார் அவர்கள்

சொன்ன கருத்தாகப் பத்திரிகையாளர்கள் திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வீட்டுக்கு வாடகை நிர்ணயிப்பதுபற்றி 1959 ஆம் ஆண்டு இதே மன்றத்தில் ஒரு விவாதம் நடைபெற்றிருக்கிறது. அப்போது காங்கிரஸ் கட்சி நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

'If we give due allowance for different kinds of construction, the cost of construction would be with reference to the present rate of construction and not the rate obtaining at the time of construction of the buildings, whether it was constructed seven years or two years before.'

என்று அழுத்தம் திருத்தமாக சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை இப்போது வேண்டுமானால் பொன்னப்ப நாடார் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயங்கலாம்; அப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலத்தில் மாரிமுத்து அவர்களும் அம்மையார் அவர்களும் அதை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், இங்கே பேசியபோது மாரிமுத்து அவர்களும் சுரேந்திரன் அவர்களும் சில சித்தாந்தங்களைப்பற்றி—புதிய சித்தாந்தங்களைப்பற்றி பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்காக சி. சுப்பிரமணியம் அவர்கள் அப்போதே பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்வதை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், சுப்பிரமணியம் அவர்களின் கருத்தை—அவர்கள் இப்போது ஆளும் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள்—அப்போது நிறுவன காங்கிரசில் இருந்தார்கள்—ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சி. சுப்பிரமணியம் அவர்கள் அப்பொழுது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதால் அது நிலையானது அல்ல. இப்போது அந்தக் கருத்து மாறலாம் அல்லவா!

THIRU K. M. SUBRAMANIAM : In which year?

The Hon. Thiru K. RAJARAM : 1959.

THIRU K. M. SUBRAMANIAM : Now it is 1973. A lot of things have changed since 1959.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சுரேந்திரன் அவர்கள் திரு. சுப்பிரமணியத்தின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னார்கள். அப்படியானால், அனந்தநாயகி அம்மையாரின் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்களா?

**திரு. எம். சுரேந்திரன் :** சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது 1959-ம் வருஷத்திய விஷயம். ஒவ்வொரு வருஷமும் கருத்துக்கள் மாறிக்கொண்டே இருக்கலாம். ஆகவே, அப்போது அவர்கள் சொன்ன கருத்தை இப்போது மாற்றிக்கொண்டிருக்கலாம். அதை மேற்கோள் காட்டுவது சரியல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 1959-ம் வருடத்திய கருத்துக்களை இப்போது மேற்கோள் காட்டக்கூடாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், 5 நிமிடங்களுக்கு முன்னால் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதை மேற்கோள் காட்டலாம் அல்லவா!

**திரு. எம். சுரேந்திரன் :** இங்கே ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். அது அவர்களுடைய கருத்து. நாங்கள் குறிப்பிட்டது ஒரு சித்தாந்தம் இல்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். சித்தாந்தம் என்பது ஏதோ ஒரு சமயத்தில் நிலவுகின்ற சூழ்நிலைகளின்பேரில் வெளியிடுகின்ற ஒரு கருத்து. அது அவ்வப்போது நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாறிக்கொண்டே இருக்கும். அதில் தவறு இல்லை. அது சமுதாயத்திலே நிகழ்கின்ற காரியம்தான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் ஒரு விளக்கத்தைச் சொன்னேன். அமைச்சரவர்கள் குறிப்பிட்டதற்கு என்னுடைய தன்னிலை விளக்கத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இதிலே திரு. தங்கமணி அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் 'ஆக்சுவல் காஸ்ட்டை' பார்த்து முடிவு செய்ய வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். தயவுசெய்து நான் சொல்வதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே அப்படிச் சொல்லப்படவில்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு என்னவென்றால் விதி 12 செல்லத்தக்கது அல்ல என்பதுதான். ஆகவே, இந்தச் சட்டம் சுப்பிரமணியம் அவர்களுக்கு ஒரு பதிலாக அமைந்திருக்கிறது. அதிலே மாறுதல் இல்லை. எதையும் மீறி காரியங்களைச் செய்கிறோம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் அதிகமாகிவிட்டது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, the Hon. Minister was saying about the increase in the Corporation Tax. There is not only increase in the Corporation Tax but there is also an unfair increase in the annual valuation. In 1958, the total income of the Corporation was Rs. $3\frac{1}{2}$ crores and to-day it is Rs. 15 crores. My point is that under any system 6 per cent return is a fair return for the housing property and not nine per cent.

The amendment of Thiru N. K. Palaniswamy was put and lost.

அரசினர் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

Clause 2 was put and carried.

*Clause* 3.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That clause 3 do stand part of the Bill.'

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendments:—

'In new clause (6-A), for the words "spouse, son, daughter, grandchild or dependent parent", *substitute* the words "legal heirs".'

'In the clause (8), for the word "tenant", *substitute* the words "tenant or sub-tenant" wherever it occurs.'

THIRU K. T. K. THANGAMANI: Sir, I second the amendments.

The amendments were put and lost.

Clause 3 was put and carried.

Clauses 4 and 5 were put and carried.



*Clause* 6.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That clause 6 do stand part of the Bill.'

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment:—

'In the proposed new Section 4 of the Principal Act—

(i) in sub-clause (2), for the words "nine per cent", *substitute* the words "six per cent".

(ii) in sub-clause (3), for the words "twelve per cent", *substitute* the words "nine per cent".

(iii) (*a*) in sub-clause (4), for the words "the market value of the site", *substitute* the words "the cost of site at the time of construction'.

(*b*) delete the words beginning with "and the cost of provision of any one or more .... fair rent".

(*c*) delete the first proviso.

(iv) in sub-clause (5) (*a*), for the words 'thirty per cent", *substitute* the words "ten per cent".'

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I move the following amendments:—

"For section 4 of the Principal Act, the following shall be substituted namely,

4. *Fixation of fair rent*:

(1) The Controller shall. on application made by the tenant or the landlord of a building and after holding such enquiry as he thinks fit, fix the fair rent for such building in accordance with the principles set out in the following sub-sections:

(2) The fair rent for any residential building shall [illegible] nine per cent of the gross return per year on the capital cost such building.

(3) The fair rent for any non-residential building shall be twelve per cent of the gross return per year on the capital cost of such building.

(4) The capital cost referred to in sub-section (2) and sub-section (3) shall consist of :

(*a*) the cost of construction, which in the case of :

(i) the classes of buildings constructed in or after 1940 and specified in Schedule I shall be calculated in accordance with the rates specified in Schedule II :

Provided that while calculating the cost of construction under the sub-clause, the Controller may, in appropriate cases, allow or disallow an amount not exceeding thirty per cent of the cost of construction having regard to the nature of construction of the building, and

(ii) any building constructed before 1940 shall be determined by the Controller on the basis of the evidence let in at the enquiry :

Provided that the cost of construction calculated on the basis of such enquiry shall not be higher than the cost of construction of a building of a comparable nature constructed in or after 1940 as calculated in the manner specified in sub-clause (1) ;

(*b*) the market value of the site during the year of construction of the building :

Provided that the Controller, shall, while calculating the market value under this clause, take into account only such area of open space as on the basis of the evidence let in, is found to be absolutely necessary for the use of the tenant; and

(*c*) such allowance as may be made for the amenities specified in Schedule III ;

Provided that such allowance shall not exceed :

(i) in the case of any residential building, fifteen per cent; and



(ii) in the case of any non-residential building twenty-five per cent

of the cost of construction as calculated in the manner specified in Sub Clause (i) of Clause (*a*) or sub-clause (ii) thereof, as the case may be.

*Explanation*.—For the purpose of this section, ' year of construction ' shall mean the year during which the construction of the building is completed and notified to the local authority concerned.

The amendments were duly seconded.

The amendments were put and lost.

Clause 6 was put and carried.

*Clause 7.*

MR. DEPUTY SPEAKER : The question is—

" That clause 7 do stand part of the Bill. "

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

' Delete the proposed sub-section (3) to section 5 of the Principal Act. '

The amendment was duly seconded.

The amendment was put and lost.

Clause 7 was put and carried.

Clauses 8, 9, 10 and 11 were put and carried.

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

"In the proposed new sub-section (2) the words "cease to" and "for a period of five years" shall be deleted.

The amendment was duly seconded.

The amendment was put and lost.

Clause 12 was put and carried.

*Clause* 13.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Clause 13 do stand part of the Bill."

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

"In the proposed new sub-section (2) of section 16 of the Principal Act, the words "cease to" and "for a period of five years" shall be deleted."

The amendment was put and lost.

Clause 13 was put and carried.

Clause 14 to 19 were put and carried.

*Clause* 20.

MR. DEPUTY SPEAKER : The question is :—

"That Clause 20 do stand part of the Bill."

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

In clause (ii) of section 30 of the Principal Act, for the words "four hundred rupees", substitute the words "six hundred rupees".

The amendment was put and lost.

Clause 20 was put and carried.

Clauses 21 to 28 were put and carried.



*New Clause* 29

THE HON. THIRU K. RAJARAM : Sir, I move the following :—

"In the said Bill, after clause 28 and before Schedule I, insert the following, namely :—

29. Insertion of new Schedules in the Tamil Nadu Act 18 of 1960.

In the Principal Act, the following Schedule shall be added at the end, namely."

New Clause 29 was put and carried.

அட்டவணைகள் 1-ம் 2-ம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப் படவேண்டும்" எனக் கோருகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி ; இது மிக அவசியம் என்ற முறையில் இந்தச் சபையில் இந்த மசோதா அப்படியே சட்டமாக நிறைவேற்றப்பட இருக் கிறது. அமலாக்கப்படவும் இருக்கிறது. இதனால் ஒவ்வொரு நாளும் பல பேர் கஷ்டப்பட இருக்கிறார்கள். இது தவறான முறையில் செயல்படப் போகிறது என்பதை இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : சிமிண்ட் விலை உயர்ந்துவிட்டது, அதனால் வாடகை உயர்ந்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப் போது சிமிண்ட் விலை உயர்வதற்கும் 1920-ல் கட்டப்பட்ட வீடுகளுக்கும் என்ன சம்பந்தம்? இந்தச் சட்டம் வீட்டுக்காரர்களுக்கு அனுகூலம் செய்வதாகத் தான் இருக்கிறது. நடுத்தர மக்கள் எல்லோரும் பாதிக்கப்படக்கூடிய நிலை

தான் இருக்கிறது. சட்டம் என்னவோ ரெண்ட் கண்ட்ரோல் ஆக்ட்தான். ஆனால் இது வாடகையை உயர்த்துவதற்குத்தான் பயன்படும். இது ஏழை, நடுத்தர மக்களுக்குப் பயன்படும் என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இது குத்தகை, வாடகைக் கட்டுப்பாடு சட்டமே தவிர வாடகைக் குறைப்புச் சட்டம் இல்லை. நியாய வாடகைக் கட்டுப்பாடு சட்டம் என்றும் இல்லை. சிமிண்ட் விலைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்றார்கள். நான் அப்போதே சொன்னேன். 1920-ல் கட்டப்பட்ட வீடுகள் என்றாலும் இன்றையதினம் கார்ப்பரேஷன் டாக்ஸ்கள் எல்லாம் உயர்ந்துவிட்டன. திரு. சுப்பிரமணியமும் சொன்னார்கள். நாம் வாங்குகிற கடனுக்கே மத்திய சர்க்காரின்கீழ் இருக்கிற எல்.ஐ.சி.யிடம் இருந்து ஆறே முக்கால் சதவிகிதம் வட்டி கொடுக்கிறோம். ஆகவே இன்றைக்கு இருக்கிற நிலைமைகளைப் பார்த்து இருசாராருக்கும் பாதுகாப்பாக இருக்கிற அளவில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. இதை அவை ஏற்று நிறைவேற்றித்தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, திருத்தப்பட்டபடி, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள மசோதாக்கள் இரண்டும் திங்கட்கிழமை 2—4—1973 அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் பேரவை 2—4—1973 அன்று காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.41 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.



(9) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

91. Notification issued with G.O. Ms. No. 50, Excise and Prohibition, dated the 17th February 1973, in regard to empowering the Commissioner of Excise and all the Collectors to exercise the powers under section 76 of the Tamil Nadu Excise Act, 1971. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

B. *Reports, Notifications and Other Papers*

@ 153. Report of the Joint Select Committee on the Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973 (L.A. Bill No. 3 of 1973).

@ 154. Report of the Joint Select Committee on the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 39 of 1972). (Tamil).

@ Laid on the Table of the House on 30th March 1973.

என்றல்ல. விதி 12 "எக்செஸிவ் டெலிகேஷன்" என்று தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. சட்டத்தின் 4-வது பிரிவு நியாயமான வாடகையை நிர்ணயித்தல் என்று இருக்கிறது. நியாயமான வாடகை என்பது எப்போதும் ஒரு நிரந்தரமான வாடகையாக இருக்கவேண்டும் என்பது நியாயமல்ல; நேர்மையல்ல. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியும். கார்ப்பரேஷன் டாக்ஸ் மாறுகிறது. இன்கம் டாக்ஸ் மாறுகிறது. இப்படி பல வரிகள் மாறுகின்றன. ஆனால், இந்த வாடகை நிர்ணயம் மட்டும் ஒரே முறையில் இருக்க வேண்டுமென்று சொல்வது எப்படிச் சரியாகும்?

ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1960-ம் வருடத்திலே 20,000 ரூபாய்க்குக் கட்டப்பட்ட ஒரு வீட்டை இன்றைக்கு 30,000 ரூபாய்க்கு ஒருவர் வாங்குகிறார் என்றால் அதற்கு வாடகை எப்படி நிர்ணயம் செய்வது? 20,000 ரூபாய்க்குக் கட்டப்பட்டபோது இருந்த வாடகையையே இப்போதும் நிர்ணயிக்க முடியுமா? அப்படிச் செய்வது நியாயமா?

ஒன்பது சதவிகிதம் ஃபேர் ரென்ட் என்று வைத்திருக்கிறோம். இது ரொம்ப அதிகமான வாடகை; அதிகாரிகள் சொன்னதை மீறி பொறுக்குக் குழுவிலே தவறு நடந்துவிட்டது என்ற கருத்துப்படப் பேசுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வீட்டுவசதி வாரியம் எல்.ஐ.சி.-யிலிருந்து கடன் வாங்குகிறது. எல்.ஐ.சி. பொதுமக்களுக்குச் சொந்தம்; மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. எல்.ஐ.சி.யிடமிருந்து 6¾ சதவிகிதத்திற்கு வாங்கி, 9¾ சதவிகிதத்திற்குக் கொடுக்கிறோம். இந்த அளவிலே மத்திய அரசிலிருந்து வாங்கி மாநில அரசு வழங்கும்போது 6 சதவிகிதம் வாடகை வாங்கவேண்டுமென்று சொல்வது எந்த வகையில் சோஷலிச சித்தாந்தம் என்பதுதான் புரியவில்லை. இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அரசாங்கத்திற்கு ஒரு தன்மை இருக்கிறது. ஒரு பக்கத்திலே வீடு கட்டியவர்களைப் பாதுகாக்கவேண்டும், இன்னொரு பக்கத்திலே வீட்டில் குடியிருப்பவர்களைப் பாதுகாக்க வேண்டும். இரண்டு சதவிகிதம் வாடகை என்றுகூட வைத்து விடலாம். புதிதாக வீடுகள் கட்டாமல் இருந்தால், மக்கள் தொகையும் பெருகாமல் இருந்தால் அப்படி வைத்துவிடலாம். மக்கள் தொகையும் பெருகிக்கொண்டே இருந்து, புதிதாக வீடுகளும் கட்டப்பட்டுக்கொண்டே இருந்தால் அப்படிச் செய்வது இயலாத காரியம். அரசு மட்டும் வீடுகளைக் கட்டிக் கொடுக்கக்கூடிய நிலையிலும் இல்லை. அந்த நிலை வந்துவிட்டால் இந்தச் சட்டம்கூடத் தேவையில்லை. இந்த ஆண்டோடு



வீட்டு வசதி வாரியம் மிக வேகமாக வீடுகளைக் கட்டத் தொடங்கியிருக்கின்றது. சென்ற ஆண்டைப்போல, இரண்டு மடங்கு பட்ஜெட்டைப் போட்டு இருக்கிறோம் இந்த ஆண்டு. ஏறத்தாழ ரூ. 11 கோடிச் செலவில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் வீடுகளைக் கட்டவேண்டும் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறோம். அப்படி வேகமாகக் கட்டப்படுமானால் இந்தச் சட்டத்திற்குக் கூட அன்று தேவையில்லாது போய்விடக்கூடும்.

ஆகவே, இந்தச் சட்டம் ஏதோ ஒரு பெரிய பயங்கரமான சட்டம், பல இன்னல்களை ஏற்படுத்திவிடும் என்று கருதாமல் இது மிகச் சாதாரணமான சட்டம், டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல ஒரு பெரும் புரட்சிகரமான சட்டம் என்று கருதாமல் வீட்டின் சொந்தக்காரர்களுக்கும் குடியிருப்பவர்களுக்கும், ஆக இருவருக்குமே பாதுகாப்பளிக்கக்கூடிய சட்டம் என்று எண்ணி, திருத்தப் பிரேரணைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு இதற்கு நல்லாதரவு தரவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலில் இன்கம் டாக்ஸ், கார்ப்பொரேஷன் டாக்ஸ் ஆகியவையெல்லாம் அதிகப்படுகிறது என்று கூறினார்கள். ஆனால், அப்படி அதிகப்படும் பளுவானது நில உடமையாளர்கள் மீதுதான் போகின்றதே தவிர குடியிருப்பவர்கள் மீது அல்ல. மேலும், 6¾ சதவிகிதம் என்ற அளவில் எல்.ஐ.சி.-யிடமிருந்து வாங்கி ஒன்பது சதவிகிதத்திற்குக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது இப்போதுள்ள நிலைமையானால் 1960-ல் வாங்கிய நிலத்திற்கு 1973-ல் உள்ள மதிப்பீட்டைக் கொடுப்பது எப்படிச் சரியானதாகும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, உதாரணமாக ரூ. 20 ஆயிரத்திற்கு இருந்த வீட்டை இப்போது ரூ. 30 ஆயிரத்திற்கு வாங்கினால் அதற்கு ஏற்றபடி கார்ப்பரேஷன் டாக்ஸ் மாறுகிறது. வீட்டுச் சொந்தக்காரன் ரூ. 30 ஆயிரம் கொடுக்கும்போது அதற்குத்தக்க வட்டி அவருக்குக் கிடைக்க வேண்டாமா? ஒரு வீட்டின் மதிப்பின் அடிப்படையில், அவருக்குச் சாதாரண வட்டி அளவிற்குக் கூட வாடகை கிடைக்கவில்லை என்றால் அது எப்படி நியாயமாகும்? கம்யூனிஸ சித்தாந்தத்தில் வேண்டுமானால் அது முறையாக இருக்கலாம். ஆனால், எனக்குத் தெரிந்த சோஷலிச சித்தாந்தத்தில் அப்படியில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, only one sentence,

## இணைப்பு I.

15-ம் பக்கத்தில் வெளிக்குறிப்பிட்ட வினா எண் 587-க்கான விடையைக் காண்க.

*A.*—(*a*) and (*b*) The Government have sanctioned the setting up of an Institute of Labour Studies in Madras in this State.

(*c*) (1) The objects of the Institute of Labour Studies are as follows :—

(i) to equip properly the officers of the Labour Depart- the workers to study the various aspects of Labour Legislation and Industrial Relations with a view to develop internal leader- ship to man the trade unions.

(ii) to provide a well designed one year course to enable the workers to study the various aspects of Labour Legislation and Labour Economics and also to enable them to exchange views with other workers.

(iii) to provide one year residential course for workers to become shop floor leaders and for a shorter duration for higher level leaders.

2. The aim and scope of the Labour Cell which forms part of the Institute are as follows :—

(i) to compile important monthly statistical data having a bearing on labour matters pertaining to other States and foreign countries in a comparative way and submit a monthly report to Government.

(ii) to scrutinise important labour items appearing in the daily papers issued in the State which are likely to invite criticism of Government and bring them pointedly to the notice of the Commissioner of Labour and the Government for suitable action in time ; and

(iii) to study the comparative labour problems and labour trend in the country and abroad.



(அ) &(இ) : இம்மாநிலத்தில் சென்னையில் தொழிலாளர் நலன் பற்றிய கல்வி நிலையம் அமைக்கப்படுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(உ) 1. இந்தக் கல்வி நிலையத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(i) தொழிலாளர் துறை அதிகாரிகளுக்கு முறையாகப் பயிற்சி அளிப்பது, தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைமையை ஏற்று நடத்தத் தங்களுக்குள்ளாகவே ஒருவரைத் தயாரிப்பதற்குத் தொழிலாளர் குறித்த சட்டங்கள் பற்றியும், தொழிலுறவு குறித்தும், தொழிலாளர்களுக்கு வகுப்பு நடத்திப் பயிற்றுவிப்பது ;

(ii) தொழிலாளர் சட்டம் பற்றியும், தொழிலாளர் பொருளாதாரம் குறித்தும் பல்வேறு கூறுகளை அறிந்து தங்கள் கருத்துக்களைச் சக தொழிலாளர்களுடன் பகிர்ந்துகொள்ள இயலும் பொருட்டு நன்கு வகுக்கப்பட்ட ஓராண்டு வகுப்பு நடத்துதல் ;

(iii) தொழிலாளர்களை வேலையிடத்துத் தலைவர்களாகத் தயார்ப் படுத்துவதற்கு ஓராண்டு அவர் தம் வீட்டிலேயே வகுப்பு நடத்துதல்; உயர்மட்டத் தொழிலாளர் தலைவர்களுக்குக் குறுகிய கால வகுப்பு நடத்துதல்.

2. இந்த நிறுவனத்தின் ஒரு பகுதியாக அமையும் தொழிலாளர் நலப் பிரிவின் (Labour Cell) நோக்கமும், பணியும் பின்வருமாறு :—

(i) பிற மாநிலங்களிலும் வெளி நாடுகளிலும் நடைபெறும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட விஷயங்களை மையமாகக்கொண்ட முக்கியமான புள்ளி விவரங்களை ஒப்பிட்டு முறையே மாதந்தோறும் தொகுத்து அரசுக்கு மாத அறிக்கை ஒன்றை அனுப்புதல்.

(ii) இம்மாநிலத்தில் வெளியாகும் நாளிதழ்களில், அரசைக் குறை கூறுவதாய் இருக்கக்கூடிய தொழிலாளர் பற்றிய முக்கியமான செய்தி இனங்களை ஆய்ந்து, உரிய காலத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்குக் குறிப்பாக தொழிலாளர் ஆணையாளரின் கவனத்திற்கும் அரசுக்கும் உரிய காலத்தில் அனுப்பி வைத்தல்.

(iii) இந்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள தொழிலாளர் பிரச்சினைகளையும், தொழிலாளர் மனப்போக்குகளையும் ஒப்பிட்டு ஆய்ந்தறிதல்.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

## திங்கட்கிழமை, 1973 ஏப்ரல் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Research Centre in Printing Technology*

* 596 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Research Centre in Printing is to be located in this State by the Central Government; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கு முகத்தான், மைய அரசினரால் அமைக்கப்பட்ட அச்சுத் தொழில் நுட்ப இயல் குழு, தனது அச்சுத் தொழில் நுட்ப இயல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் ஒன்றை சென்னையில் நிறுவலாம் எனப் பரிந்துரைத்துள்ளது. இச் செயற்குறிப்பின் மீதான தனது ஒப்புதலை மைய அரசு வழங்குவதைச் சார்ந்து தொடர் நடவடிக்கை அமையும்.

THIRU N. DENNIS: Sir, may I know the amount invested for this centre?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் எல்லாம் இல்லை. அப்படி ஒரு ஆராய்ச்சி நிலையம் சென்னையிலே அமையலாம் என்று அந்தக் குழுவினர் சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 19-ஆம் தேதி இங்கே வந்து கூறினார்கள். அந்தக் குழுவினர் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதன்மீது மத்திய அரசு ஒப்புதல் தரவேண்டும் அதற்குப் பிறகுதான் அதுபற்றிய முழு விவரங்களும் நமக்குக் கிடைக்கும்.

[1973 ஏப்ரல் 2

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அந்தக் குழுவினரின் பரிந்துரைகளில் முக்கியமானவை என்னென்ன இருக்கின்றன? எப்போது வேலை துவங்கும் என்று மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறதா? அப்படியென்றால், அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** Establishment of Research and Development Centre in Printing Technology என்று அப்படி சென்னையிலே ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நிறுவலாம் என்று குழு பரிந்துரைக்கின்றது. அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, அதுபற்றிய செலவீடுகள், மதிப்பீட்டுச் செலவு, தொடரும் செலவு, தொடராச் செலவுபற்றி கணக்கிடப் படவேண்டும்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, இப்படி அமைய இருக்கிற அச்சுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்திற்கு எப்படிப்பட்ட மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்? அந்தத் தொழிலிலேயே ஈடுபட்டவர்கள் இதிலே சேர்க்கப்பட இருக்கிறார்களா? அல்லது புதிதாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் அமைய வேண்டுமென்ற விருப்பம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று மத்திய அரசு ஒப்புதல் அளிக்குமானால், வல்லுநர் கூடி ஆராய்ந்து இந்த வழிவகைகளை எல்லாம் முடிவு செய்வார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, அமைய இருக்கிற இந்த ஆராய்ச்சி நிலையமானது சென்னையில் அமைக்கப்படுமா? அல்லது இந்த அச்சுத் தொழிலில் மிகச் சிறந்து விளங்குகின்ற சிவகாசியில் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழகத்தில் சென்னையில் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய ஒப்புதல் குறிப்பு வந்ததற்குப் பிறகு, எங்கே நிறுவப்பெறுவது எல்லா வகையிலும் பொருத்தமாக இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகிறார்களோ, அதனையொட்டி, நாம் திட்டங்கள் தீட்டலாம்.



1973 ஏப்ரல் 2]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Education whether such a Research Centre in Printing Technology has been established in other States? If so, have our Government made any study about it?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. அநேகமாக தென்னக மாநிலங்களுக்கெல்லாம் சேர்ந்து இங்கே, சென்னையிலே வைக்கப்பட வேண்டுமென்பதுதான் அந்தக் குழுவினுடைய விருப்பம்.

**திரு. கே. என். குமாரசாமி:** துணைத் தலைவர் அவர்களே, அச்சுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் எந்த அடிப்படையிலே, யார் யாரைக் கொண்டு, அச்சுத் தொழிலிலே வெளிநாட்டு தொழில் நுட்பம் தெரிந்தவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட இருக்கிறதா? அல்லது நம்முடைய நாட்டிலே தொழில் நுட்பம் தெரிந்தவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** Board of Technical Studies என்று இருக்கிறது. அந்தக் குழுவினர் அவ்வாறு பரிந்துரைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு ஆராய்ச்சி நிலையம், அச்சுத் தொழிலைப்பற்றித் தொழில் நுட்ப வகையில், ஆராய்ச்சி நிலையம் நிறுவவேண்டுமென்றிருக்கிறது. அது சென்னையிலே நிறுவப்படலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு ஏற்று உதவி செய்ய முன்வரும்போது, எந்த இடத்திலே நிறுவுவது, யார் யாரைப் பணியாற்ற வைக்கலாம் என்பதைப்பற்றி, பிறகுதான் முடிவு செய்யலாம்.

**திரு. கே. எ. வகாப்:** ஏற்பட இருக்கும் இந்தத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் மத்திய அரசாங்கத்தினுடைய முழுப் பொறுப்புடன் ஆரம்பிக்கப்பட இருக்கிறதா? அதில் மாநில அரசாங்கமும் பங்கேற்கிறதா? அப்படியென்றால், அதனுடைய பங்கு எந்த அளவுக்கு இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவைபற்றிய விவரங்கள் எல்லாம் இப்பொழுது கிடைக்கப்பெறவில்லை. மத்திய அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, அவர்கள் என்ன நிபந்தனை விதிக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அதுபற்றி நாம் முடிவு செய்ய முடியும்.

## Marine Sciences Centre

* 597 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open a Marine Sciences Centre at Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** *(அ) & (இ) மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரையின் பேரில் "கடல் பொறியியல் மற்றும் நாவாய் அறிவியல் பயிற்சி தொடங்குவதற்கான திட்டம்" ஒன்று தயாரிக்கப்பட்டு ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தினை நாடும் முன் வரைவுத் தாளில் சேர்க்க மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது, ஐந்து ஆண்டுகளுக்குமாக இத்திட்டத்திற்கான மொத்த தொடராச் செலவினம் ரூ. 18 லட்சம், தொடர் செலவினம் ரூ. 25 லட்சம். மைய அரசினர் அனுமதி வழங்குவதைப் பொறுத்து இப்பயிற்சி துவக்கப் பெறும்.*

THIRU N. DENNIS : Sir, may I know the time when it is likely to be opened?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவரவர்களே, இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் துவக்கப்பட வேண்டுமென்பது கோரிக்கை. மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் துவக்கப்பட வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமானால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்கப்படும்போதே, இதையும் துவங்குவதற்கு வசதிகள் ஏற்படும்.*

***திரு. கே. எ. வகாப் :*** *தலைவரவர்களே, கடல் சார்ந்த அறிவியல் நிலையம் ஏற்படுத்துவதை, புகழ்பெற்ற பூம்புகாரில் பண்டைக் காலத்தில் துறைமுகங்கள் இருந்திருக்கின்றன. அங்கு அமைப்பதற்கு அரசாங்கம் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** Centre of Ocean Engineering and Marine Sciences *என்ற அந்தக் கல்வி சொல்லிக்கொடுப்பதற்கு என்ன என்ன சூழ்நிலைகள்*



*என்பதைப் பார்க்கவேண்டும். பண்டைய வரலாற்றுச் சிறப்புகள் கொண்ட பெருமைபெற்ற துறைமுகம் என்பதால், அங்கு கொண்டுபோய் வைத்துவிட முடியாது. ஏனென்றால், இது மேல் பட்டப்படிப்புக்காகவும், அறிவுக்காகவும் பயன்படுகின்ற ஒன்று. எந்த இடத்திலே இடம் பெற்றால், அதனுடைய நோக்கங்கள் நிறைவேறும் என்பதைப்பற்றி வல்லுநர்கள் கருத்தைக் கண்டறிந்து, அதன்பிறகு இதுபற்றி அரசு முடிவு செய்யும்.*

***திரு. கோ. இளங்கோவன் :*** *மரைன் எம்.எஸ்ஸி. படித்தவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இந்த அறிவியல் நிலையம் துவக்கப்பட்டால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவர் அவர்களே, முதலில் பிள்ளை பிறக்கவேண்டும். பிறகுதான் மற்றவைகளைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால், மத்திய அரசாங்கத்தினிடத்தில் செயற்குறிப்பு இருக்கிறது. அதை ஏற்றுக்கொண்ட பிறகு, எப்படிப்பட்டவர்களை எடுத்துக்கொள்வது, எப்படிப்பட்டவர்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்வது, எப்படிப்பட்டவர்களை மாணவர்களாகச் சேர்ப்பது, என்பதுபற்றியெல்லாம் முடிவு செய்யவேண்டியிருக்கும்.*

***திரு. ஏ. எம். இராஜா :*** *தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இந்த மரைன் சையன்ஸ் சென்டர் துவங்கும்போது, இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருக்கிற ஒரு பிரிவான 'மரைன் பாத்தலாஜி' வகுப்பை இத்தோடு இணைப்பதற்கான திட்டம் இருக்கிறதா? இந்த 'மரைன் சையன்ஸ் சென்டர்' உருவாகும்போது, இதை ஏற்பட இருக்கும் டெக்னிக்கல் யூனிவர்சிட்டியின்கீழ் இணைத்து, இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இருக்கிற துறை இத்தோடு இணைக்கப்பட மாட்டாது. தொழில் நுட்பத் துறையோடு தான் இது இணைக்கப்பட இருக்கிறது. மேல்பட்ட படிப்பு என்ற வகையிலே மட்டும் அல்லாமல்* Ocean Engineering and Marine Sciences *என்ற தனிப் பிரிவின்கீழ் இது அமையும்.*

[1973 ஏப்ரல் 2

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, கடல் விஞ்ஞானத்தைப்பற்றி மேலைநாடுகளில் எல்லாம் நல்ல ஆராய்ச்சிகள் செய்து வெற்றிகண்டு அவர்கள் பணத்தைக் குவித்திருக்கிறார்கள். ஆகவே இதன் அவசியத்தை உணர்ந்து மத்திய அரசிடம் வற்புறுத்தி அனுமதி தந்து, நிதி ஒதுக்கீட்டை விரைவிலே தரவேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு கேட்டுக்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த வகையிலே தான் அதற்கான செயற்குறிப்புகள் மற்றவை எல்லாம் தயாரிக்கப் பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. மத்திய அரசின் அறிக்கையை விரைவிலே எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நீண்ட நெடிய கடற்கரை நம்முடைய நாட்டிலேயே தமிழகத்திலேதான் இருக்கிறது. இப்படிப்பட்ட கடற்கரை வட மாநிலங்களிலே இருந்திருந்தால், இந்நேரம் அவர்கள் இந்த மெரைன் சயின்ஸ் கொண்டுவந்து துவங்கியிருப்பார்கள். நம்முடைய மாநிலத்திலே இருப்பதால், மத்திய அரசு ஐந்தாண்டுத் திட்டம் என்று எல்லாம் சொல்லிக்கொண்டிருக்காமல் உடனடியாகத் துவங்குவதற்கு மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே 640 மைல் நீளமுள்ள கடற்கரை இருக்கிறது. அதையெண்ணித்தான் கடல் பொறியியல் மற்றும் நாவாய் அறிவியல் பயிற்சி நிலையம் தொடங்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசாங்கமும், திட்டக் குழுவும் அனுமதியளித்தால், அதைத் துவங்குவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கலாம்.

## தொழில் வரி

*598 வினா—**திரு. கி. செயராமன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரமன்றங்கள் தொழில் வரி விதிப்பினின்று மாதம் ரூ. 300 வரைக்கும் வருமானம் உள்ளவர்களுக்கு விலக்கு அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?



1973 ஏப்ரல் 2]

(இ) இது குறித்து நகரமன்றங்களிடமிருந்து அரசுக்குத் தீர்மானங்கள் எவையேனும் வந்துள்ளனவா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஆம். நகர மன்றங்களிடமிருந்து அரசுக்குத் தீர்மானங்கள் வந்துள்ளன.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இப்பொழுது தொழில் வரி என்று சொல்வது சுயமாகத் தொழில் செய்கிறவர்களுக்கு வரிவிதிப்பது தான், ஆனால் இப்பொழுது தொழிலாளர்களுக்கு வரிகள் விதிக்கப் படுகின்றனவே, அது தொழில் சுயமாகச் செய்கின்றவர்களுக்கு விதிப்பது என்பதற்கு முரணாக இருக்கிறதே, அதை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தொழில் செய்து வருமானம் பெறுகின்ற அத்தனைப் பேர்களுக்கும் தொழில் வரி விதிக்கப்படுகிறது. அந்த வரி குறைந்த அளவுக்கு இருக்கவேண்டு மென்ற முறையிலேதான் அதைக்குறைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே அடிமட்டத்திலே உள்ளவர்களுக்குத் தொழில்வரி வசூலிப்பது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆறு மாதங்களுக்கு 1,800 ரூபாய்க்குக்கீழே வருமானம் வரக்கூடியவர் களுக்குத் தொழில் வரியை நீக்கிவிடவேண்டுமென்று சொல் கிறார்கள். இப்பொழுது ரூபாய் 1,200, அதாவது மாதம் 200-க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்குத் தொழில் வரியில்லை என்று சென்னை மாநகராட்சியிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பிற நகராட்சி மன்றங்களும் மாதம் ரூபாய் 300-க்குக்கீழே வருமானம் பெறக்கூடியவர்களுக்குத் தொழில் வரி விதிக்கக்கூடாது என்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இவ்வாறு விலக்குகள் அளிக்கப்படவேண்டுமானால், தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு நகராட்சிச் சட்டம், சென்னை மாநகராட்சிச் சட்டம், மதுரை மாநகராட்சிச் சட்டம் ஆகியவை இந்த வகையிலே திருத்தப்பட வேண்டியிருக்கும்.

**திரு. எம். சுரேந்திரன் :** வருமானத்தை அடிப்படையாக வைத்து வரி என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் கூறுவது எல்லாம் தொழிலாளர்கள் இன்னொருவரிடத்திலே வேலை செய்யும்பொழுது . . .

[1973 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த வரிக்கு நீங்கள் வேறு அர்த்தம் நினைத்துக்கொண்டு கேட்கிறீர்கள். அது டாக்ஸ் ஆன் இண்டஸ்ட்ரீஸ் பற்றியது அல்ல, இட் ஈஸ் எ டாக்ஸ் ஆன் புரஃபஷன் ஆப் எ பெர்சன். அந்த அடிப்படையிலே கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** 1,200 ரூபாய்க்குக்கீழே வருமானம் உள்ளவர்களுக்கு அந்த வரி இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1,200 ரூபாய் என்பது இந்தக் காலத்திலே குறைவான தொகைதான் சாதாரணமாகத் தொழிலாளர்கள் அதிகச் சம்பளம் பெறவேண்டிய நிலைமை இருக்கிறது, எனவே குறைந்த பட்சம் தொழிலாளர்களுக்காவது அந்த வரியை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மாதம் ரூபாய் 200 வருமானத்திற்குக்கீழே உள்ளவர்களுக்குத் தொழில் வரி இல்லை என்று தள்ளப்பட்டிருக்கிறது. ரூபாய் 600 முதல் 1,200 வருமானம் வருகிறவர்களுக்கு ரூபாய் 3 வரி விதிக்கப்படுகிறது. 1,200-லிருந்து 1,800 ரூபாய் வரையில் வருமானம் வருகிறவர்களிடத்திலே 6 ரூபாய் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. தொழில் புரிவோர்கள் அத்தனை பேர்களுக்கும் தொழில் வரி என்ற முறையிலேதான் இந்த வரி வசூலிக்கப்படுகிறது. 1,800 ரூபாய்க்குக்கீழே வருமானம் வருகிறவர்களுக்கு வரியை எடுத்துவிடவேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. அதுதான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையுள்ள அரையாண்டிலிருந்து அந்த வரி விலக்கை அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது பரிசீலனையில் இருக்கிறது. அதற்காகச் சட்டம் திருத்தியாகவேண்டும். சட்டத்தினைத் திருத்தியதற்குப் பிறகுதான் அமலுக்கு வரும்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, சிறு தொழில் செய்யக் கூடியவர்கள் தங்கள் கணக்குகளைக் காட்டி வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. உத்தியோகத்திலே இருக்கிறவர்களுக்கும் அப்படித் தானே செய்யவேண்டும். ஒரு வரம்பு வைத்திருப்பது நல்லதுதான்.



1973 ஏப்ரல் 2]

நகராட்சிகள் எல்லாம் சைக்கிளுக்கு வரி இல்லை என்று சொல்லியிருக்கின்றன. ஆனால் அரசாங்கத்தை எழுதிக் கேட்டால் வரி விதிக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதற்கும் சைக்கிள் வரிக்கும் என்ன சம்பந்தம் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்காக சொல்கிறேன். சிலபல நகராட்சிகளில் சைக்கிள் வரி இல்லாமல் இருந்தது. எல்லா நகராட்சிகளிலும் சைக்கிள் வரி 1—4-1973 முதல் விதிக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக்கேள்விக்கும் நீங்கள் கேட்பதற்கும் தொடர்பு இல்லை. அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லியிருக்க வேண்டாம். அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள், நீங்கள் அதை வைத்துக்கொண்டு இன்னும் ஒரு சப்ளிமெண்டரி போடவேண்டுமா ?

**திரு. எஸ். வடிவேல் :** 1,200 ரூபாய் வைத்துள்ளதை 3,000 ரூபாயாக மாற்ற அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் கேட்பது எல்லாம் 1,800 வரையிலும் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் வரையிலும் வருமானம் பெறுகின்றவர்களுக்குத் தொழில் வரி விதிக்கக்கூடாது என்பதுதான். 1,200 ரூபாயிலிருந்து 1,800 ரூபாய் வரையில் வருமானம் பெறுகின்றவர்களுக்கு இப்பொழுது ஆறு ரூபாய் வரி விதிக்கப்படுகிறது. அதற்கு விலக்குத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது 100 ரூபாய் விதிவிலக்குத் தருகிறோம், 200 ரூபாய் விதிவிலக்குத் தருவதா அல்லது 300 ரூபாய் விதிவிலக்குத் தருவதா என்பது பரிசீலிக்கப்படவேண்டும். இவையெல்லாம் அந்தந்த நகராட்சிகளின் வருமானத்தைக் கணக்கிட்டுத்தான் செய்யப்படவேண்டியிருக்கிறது. நகராட்சிகள் வருமானத்தை இழந்துவிட்டால் அவற்றினுடைய வளர்ச்சிப் பணிகள் இவற்றிற்குப் பணம் கிடைக்காத நிலையில் கடினமாக இருக்கும். பரிசீலனையில் இருந்து வருகிறது. பரிசீலனை செய்ததற்குப் பிறகுதான் அரசாங்கம் முடிவு செய்யவேண்டும்.

[1973 ஏப்ரல் 2

**திரு. நா. வீராசாமி:** வசதிகள் பெருகவேண்டுமென்று சொல்கிற ஒரு சமுதாயத்தில் வரிகளைக் குறைக்கவேண்டுமென்று சொல்லுகின்ற கொள்கை அவ்வளவு நல்லதல்ல. நகராட்சிகள் சைக்கிள் வரியை எடுத்துவிட்டன, இப்படியே எல்லா வரிகளையும் எடுத்துவிட்டால், நல்ல திட்டங்கள் ஆங்காங்கே உருவாக முடியாது. ஆகவே இப்படி வருமானம் பெறக்கூடியவர்கள் நிச்சயமாக வரிச் செலுத்தவேண்டுமென்ற கொள்கையை நம்முடைய அரசாங்கம் நகர மன்றங்களுக்குத் தெரிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பல்வேறு வகைகளிலே வருகின்ற வரிகளைக்கொண்டு வருகின்ற வருமானத்திலே நகராட்சிகள் பணியாற்றவேண்டியிருக்கின்றன. இரண்டு ரூபாய், ஒரு ரூபாய் என்ற அளவிலே வரியை வசூலிப்பதற்காக நியமிக்கப்படும் ஆட்களுக்கு ஆகின்ற செலவுகள், வசூலிப்பதற்கு எடுக்கின்ற முறைகளும், வசூலிக்கப்படுகின்ற தொகையையும் கணக்கிலே எடுத்துப் பார்த்தால் நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு வசூலிக்கமுடியவில்லை. வசூலிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்ற முறைகள், குடிதப்போக்குவரத்து, பணியாளர்கள் சென்று வருவது எல்லாம் பார்த்தால் வசூலிப்பதற்கும் செலவுக்கும் போக ஒன்றும் இருக்காது என்ற நிலைமை இருப்பதால், அவர்கள் இப்படிக் கூறுகிறார்கள். கடைசி மட்டத்திலே உள்ளவர்களுக்கு இதை எடுத்துவிடலாம் என்று சில நகராட்சிகள் கோரியிருக்கிறார்கள். அப்படி எடுத்து விடுவதால் ஏற்கனவே உள்ள பணியாளர்கள் குறைக்கப்படுவார்களா, அல்லது இந்தத் துறையிலிருந்து வேறு எந்தத் துறைக்கு மாற்றப்படுவார்கள் என்ற விளக்கங்களையெல்லாம் நாம் கேட்டிருக்கிறோம். விளக்கங்கள் பெற்றதற்குப்பிறகுதான் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது.

**திரு. சி. ஆறுமுகம்:** அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது ஆறு மாதத்திற்கு ரூ. 1,800 வரை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், துணை சபாநாயகர் அவர்கள் ஆகிய எல்லோருக்கும் இந்த வரிப் போடுகிறார்கள். இவைகளைப்பற்றியாவது அரசு யோசிப்பதற்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வரிசையாக, படிப்படியாக, ஆறு மாதங்களுக்கு, ரூ. 1,800-ல் இருந்து ரூ. 3,000 வரை 9 ரூபாய், ரூ. 3,000–4,800 வரை ரூ. 18, 4,800–6,000 வரை



1973 ஏப்ரல் 2]

ரூ. 30–50, 6,000–9,000 வரை ரூ. 50, 9,000–12,000 வரை ரூ. 75, ரூ. 12,000–15,000 வரை ரூ. 100, ரூ. 15,000-க்கு மேற்கொண்டு ரூ. 125 என்று மேலே வருமானம் போகபோக அதிகமாக ஏற்றப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்களுக்குக் கணக்கிடுகிறவகையில் இந்தக் கட்டத்தில் எதற்குக்கீழ் வருமானம் அடங்குகிறதோ, அதன் பிரகாரம் விதிக்கப்படுகிறது. ஒருசாராருக்கு விலக்கு, மற்றொரு சாராருக்கு வரி விதிப்பு என்று இருக்கமுடியாது. உச்சவரம்பு எந்த அளவிற்கு நிர்ணயிக்கலாம் என்பதில், 1,600 என்பதை 1,800 ஆக மாற்றவேண்டுமென்று பல்வேறு நகராட்சி மன்றங்களில் இருந்து கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன.

**திரு. கே. என். குமாரசாமி:** ரூ. 300 வருமானம் உள்ளவர்களுக்குத் தொழில் வரி போடவேண்டுமென்று அரசு கருதுகிறது. ரூ. 300 வருமானம் உள்ளவர்கள் சைக்கிள் வரி, வீட்டு வரி, வாட்டர் டாக்ஸ், தொழில் வரி என்று இப்படி நான்குவிதமான வரிகள் ரூ. 300 வருமானம் உள்ளவர்கள் செலுத்தவேண்டியிருக்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு வரியாகக் குறிப்பிட்டதொரு தொகையை வசூலிப்பதற்கான ஏற்பாட்டினை அரசாங்கம் செய்யுமா? நான்கு தினிசாக வரிவசூல் செய்வதால் பெரும் தொகையை தொழிலாளர்கள் இழக்கவேண்டியிருக்கிறது என்பதால் இது மறுபரிசீலனை செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்படி நான்கு விதமான வரிகளை எல்லோரும் ஒருமித்துச் செலுத்துகிறார்கள் என்று சொல்ல முடியாது. சிலபல வரிகளைச் சிலபல பேர்கள் செலுத்தாமல் இருக்கக்கூடும். ஆகவே தனித்தனியாகக் கணக்கிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த வரி விதிப்பில்கூட சென்னை மாநகராட்சிச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 1919-ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் அமைந்த ஒன்று. நகராட்சிமன்றங்கள் பொறுத்து 1920-ம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையில் இருக்கிற ஒன்று. அங்கு ரூ. 100-க்கு மேல் வருமானமுள்ளவர்கள் என்று இருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்து 200 வரை எடுத்துவிட்டோம். 300 ஆகத் தூக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வேறு பல நகராட்சிமன்றங்களில் இருந்து ரூ. 300-க்குகீழே உள்ளவர்களுக்கு வரி விதிப்புக் கூடாது என்பது கோரிக்கை. அதுதான் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

*[1973 ஏப்ரல் 2*

***திரு. ஜே. ஜேம்ஸ் :*** பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்குக்கூட இந்தத் தொழில் வரி விதிக்கப்படுகிறது. ஆகவே, பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் செய்வது தொழில் அல்ல என்று கணக்கெடுத்து அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** பொதுவாக இது தொழில் வரி என்று இருந்தாலும் தொழில் வரி பெறப்படுவது வருமானத்தின்மீது நிர்ணயிக்கப்படுகிற ஒன்றாகத்தான் கொள்ளப் பட்டு வருகிறது. எது தொழில், யார் செய்கிறார்கள் என்ற விவரங்களுக்குப்போனால் பல தொல்லைகள் வரும். நகரமன்றம், மாநகராட்சிமன்றம் இவற்றினால் ஏற்படுகிற வசதிகளை எல்லோரும் அனுபவிப்பதால், இந்த வரிவிதிப்பிற்கு அடங்கவேண்டியவர் களாக இருக்கிறார்கள்.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :*** சட்டமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்கள் இந்தமாதிரி வரிக்கு ஆளாக்கப் படுகிறார்கள். ஆதலால் இதை உடனடியாக மாற்றியமைக்கவேண்டு மென்று முனிசிபல் அதிகாரிகளுக்கு வேண்டிய தாக்கீதை இந்த அரசாங்கம் நல்குமா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** இந்தப் பிரிவுகளை மாற்றியமைப்பதற்கான நிலை இல்லை. இவ்வளவு உச்சவரம்புதான், எந்த அளவிற்கு அதை அமைக்கலாம் என்பதை அரசு யோசித்துக் கொண்டு வருகிறது.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** வழக்கறிஞர்களைச் சேர்த்துக்கொண்டதால் உங்கள் கேஸ் வீக்காகப் போய்விட்டது.

### வந்தவாசிப் பேரூராட்சிக்கு சாலை மானியம்

* 599 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி பேரூராட்சிக்கு 1971-72-ம் ஆண்டுக்குத் தார் சாலை போட அரசு மானியம் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** (அ) ஆம்.

(இ) ரூ. 11,127.



*1973 ஏப்ரல் 2]*

***திரு. கே. எ. வகாப் :*** வந்தவாசியில் உள்ள சாலைகளைப் போட நாங்கள் அதிகமானத் தொகை கேட்டிருந்தோம். ஆனால் ஒரு அளவை வைத்து ஒவ்வொரு பேரூராட்சிக்கும் கொடுக்கிறார்கள். சில பேரூராட்சிகள் அதைப் போடுவதில்லை. ஆகவே சாலைகளைப் போடுகிற பேரூராட்சிகளுக்கு அதிகமாகக் கொடுக்கலாம். ஆகவே அந்த வகையில் சிலவற்றிற்கு மேலே கொடுக்கலாம் என்று அரசு உத்தரவிடுமா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** அரசு கொடுக்கிற மானியத்திற்கு ஒரு வரையறை உண்டு. ரூ. 10,000 கொடுக்கலாம் என்பது அந்த வரையறை. மீதமுள்ளதை யூனியனும் அல்லது நகராட்சிமன்றம் தன் நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும். வந்தவாசிக்கு ரூ. 11,127 கொடுத்திருக்கிறோம். ஆக ரூ. 1,127 அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் ராட்டிபிக்கேஷன் செய்ய கேட்டிருக்கிறார்கள். அது அரசுக்கு வந்திருக்கிறது. வழங்கப்படவேண்டுமென்று விதித்த அளவைவிட இதற்கு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது.

### உப்பனாற்றின் குறுக்கே பாலம்

* 600 வினா—**திரு. டி. வி. சம்பத் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி வட்டம், திருநகரிக்கும், வருசபத்து எடமணல் ரோட்டிற்கும் இடையில் உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** ஆம்.

***திரு. கோ. இளங்கோவன் :*** கட்டப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். எவ்வளவு காலத்தில் கட்டப்படும் ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** கட்டப்பட இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா என்பது கேள்வி. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டேன். திருநகரிக்கும் வருசபத்து எடமணல் ரோட்டிற்கும் இடையில் உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டுவது 51 சாலைப் பணிகளின்

திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டு லட்சம் ரூபாய் செலவில் அரசு அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளார்கள். ரெயில்வே செம்மை நிதியில் இருந்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள். சாலைப் பணிகள் நிதியைப் பயன்படுத்திக் கொள்ள அரசின் அங்கீகாரம் பெறவேண்டுமென்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து இங்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றிய முடிவை அரசு விரைவில் எடுக்கும்.

### செங்கற்பட்டு மாவட்டத்தில் மீனளத் திட்டங்கள்.

*** 601 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள உள்நாட்டுப் பகுதி மீனளத் திட்டங்களின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பேரவைமுன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** ஏரிகள் நிறைந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் 37 ஏரிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு மீனளத் துறை வளர்ச்சி அதிகாரியை நியமித்து முழுக்க முழுக்க அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள அரசினால் ஒரு சிறப்புத் திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சிறப்புத் திட்டமாகத்தான், நான்காண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இத்திட்டத்தின் முடிவான மொத்தச் செலவு ரூ. 2,00,800 தொடர்செலவும், ரூ. 28,40,000 தொடராச் செலவுமாகும். 1973-74-ல் தொடர்செலவும் தொடரா இனச் செலவும் சேர்ந்து ரூ. 39,800 ஆகும். ஓடுநீர் மீன்வளர்ப்பு, சுற்றோட்ட நீரில் மீன்வளர்ப்பு, அன்னிய இன மீன்களை வளர்த்தல்: மலைப் பகுதிகளில் மீனள வளர்ச்சி, சாக்கடை நீரில் மீன் வளர்ப்பு. நெல்வயல்களில் மீன் வளர்ப்பு என்றெல்லாம் இருக்கின்றன. இவை நிச்சயமாகச் செயல்படுத்தப்படும்.

---

@ 281–287-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



**திரு. எஸ். ஆறுமுகம் :** கடல் மீனைவிட ஏரி மீன்கள் நல்ல ருசியாக இருக்கிறது. ஆனால் ஏரிகளில் மீனின் உற்பத்தி நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. ஆகவே ஹார்மோன் மூலம் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வது அவை ஏரிகளில் பிழைப்பதில்லை. ஆகவே ஹார்மோன் ஊசிமூலம் உற்பத்தி செய்யப்படுகிற மீன் குஞ்சுகள் ஏரிகளில் நல்ல முறையில் உற்பத்தியாவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஊசிமூலம் உற்பத்தியாகிற குஞ்சுகள் சரியாக வளரவில்லை என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. ஆனால் ஒன்று. ஐந்து லட்சம் சினைகள் ஏற்பட்டால் 2½ லட்சம் அளவிற்குத்தான் சிறிய குஞ்சுகள் கிடைக்கின்றன. விரல் கன அளவிற்கு வருவது ஒரு லட்சம் வரையில் மீன் கிடைக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேலான குஞ்சுகளை உற்பத்தி செய்யமுடியுமென்று இயக்குநர் கருதுகிறார்கள். தற்போது மீன்குஞ்சுகள் 40 லட்சம்கூட இல்லை என்று இயக்குநர் சொல்கிறார்கள். நம் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள 127 லட்சம் தேவை. ஊசிபோட்டு அதிகப்படியான சினைகளை உற்பத்தி செய்வதால் செய்யமுடியும் என்ற நம்பிக்கை துறைக்கு இருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிற எங்களுக்குத் தேவைப்படுகிற மீன் 40,000 டன். ஆனால் எங்கள் ஏரிகளின் வாயிலாக கிடைப்பது ஆயிரம் டன்தான். ஆகவே மேற்கொண்டு அதிகப்படியான ஏரிகளை ப்ரொவின்ஷியலைஸ் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 12 புதிய இடங்களில் மீன் பண்ணைகளையும், மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளையும் அமைக்கும் பணி இச்செயற்குறிப்பின் கீழ்வரும் இதற்கென 1973-74-ல் முன்நடவடிக்கையாக மனைகளைத் தெரிந்தெடுத்தல் வரைப்படங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்தல் ஆகிய பணிகள் முடிக்கப்படவேண்டும். தொடரா இனச் செலவில் 24 மீன் வளர்ப்புப் பண்ணைகள், மீன் குஞ்சு பொறிக்கும் குளங்கள், மீன் வளர்ப்புக் குட்டைகள், ஒவ்வொரு அலுவலகத்துக்கும் பண்ட சேமிப்பு அறை, காவலாளி கொட்டகை, ஓர் அலுவலகம்,

ஆகியவற்றைக் கட்டும் பணி அடங்கும். பல்வேறு இடங்களில் பண்ணைகள் வைக்கவேண்டுமென்றுதான் துறை செயற்குறிப்பு இருக்கிறது.

**திரு. சி ஆறுமுகம்:** ஏரி மீன்கள்பற்றிய புள்ளிவிவரங்களை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்தில் மதுராந்தகம் ஏரிதான் கடல் போல் உள்ளது. எனவே, அங்கு விசேஷ கவனம் செலுத்தி அங்கு மீன் வளர்க்கும் திட்டத்தை, சென்னையில் உள்ளதைப்போல், நடைமுறையில் கொண்டு வருவதற்கு அரசுக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** செங்கற்பட்டு மாவட்டத்தில் போதுமான ஏரிகள், குளங்கள் உள்ளன. அவர்கள் செம்பரம்பாக்கம் ஏரிபற்றிக் குறிப்பிடுகிறார்கள். அதுவும் அவற்றில் ஒன்றுதான்.

**திரு. மு. பழனிவேலன்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிடும்போது, மீன் வளர்ப்புத் திட்டத்திற்காக ரூ. 30 லட்சத்திற்கு மேல் செலவு செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். அதனால் வருவாய் எவ்வளவு வருகிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தற்சமயம் தகவல் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** துணைத் தலைவரவர்களே, மீன் வளர்ப்புத் திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். ஒருபுறம் மீன் வளர்ப்பு செய்து கொண்டிருக்கிறபோது, இன்னொரு புறத்தில் ரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து கழிவு நீரை விட்டு, பல இடங்களில் மீனைச் சாகடித்துக்கொண்டிருக்கிறார்களே, அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அதற்கும் உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

**திரு. கா. வேழவேந்தன்:** துணைத் தலைவரவர்களே, இப்போது ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அதைக் கவனிக்கும் பொறுப்பு ஈ.ஓ. (ஏ.எச்.) அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.





அதற்குப் பதிலாக, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மீன் வளர்ப்பு இலாகா அதிகாரி ஒருவரை நியமித்து, இந்தத் திட்டத்தை முழுக்க அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மீன் உற்பத்திக்கான திட்டத்தைப்பற்றிச் சொன்னேன். இந்த உற்பத்தி செய்யும் திட்டம் மீனளத் துறையில் இருக்கும். அதிகாரிகள் மூலம்தான் செய்யப்படுகிறது. அந்தக் குஞ்சுகளையெல்லாம் உற்பத்தி செய்து, பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றிய ஏரிகளில், குளங்களில் விடப்படுகிறது. அதைப் பாதுகாக்கும் பொறுப்புத்தான் அந்தத் துறை அதிகாரிகளிடத்தில் விடப்பட்டிருக்கிறது. எனவே, அந்த மீன் குஞ்சுகளைப் பொறிப்பது, வளர்ப்பது போன்றவற்றை மீனளத்துறைதான் பொறுப்பேற்று நடத்துகிறது.

**திரு. எம். தேவராசன்:** தலைவரவர்களே, 'ட்ரௌட்' வகை மீன்களைப் பெருக்கத் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அந்த 'ட்ரௌட்' மீன்களை நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி என்ற பகுதியில் பெருக்கிக்கொண்டு வருகிறோம்.

*Fishing Harbour at Chinnamuttom*

* 602 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the United Nations Development Project have undertaken any pre-investment survey of berthing facilities under fisheries development scheme at Chinnamuttom near Cape Comorin; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பெங்களூரிலுள்ள முன்னோடி முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டம் என்ற இடத்தில் நில ஆய்வு நடத்தி அங்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு மீன் பிடி துறைமுகம் கட்டுவதற்கான அறிக்கையை சென்னை மீனளத் துறை இயக்குநருக்கு அனுப்பியிருக்கிறது. பொதுப்பணித் துறையிடமிருந்து வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளை மீனளத் துறை இயக்குநர் எதிர்நோக்கியுள்ளார்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, இது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** பொதுப்பணித் துறையிலிருந்து அனைத்து விவரங்களும் தரப்பட்டு இருக்கின்றன. அதை மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம். அங்கேயிருந்து ஒப்புதல் வரவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த சின்ன முட்டம் ஒரு 'ஆல்-டைம் போர்ட்' ஆகவும், ஒரு 'ஃபிஷ்ஷிங் கிரௌண்ட்' ஆகவும் இருக்கிறது என்று ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது என்று சொல்கிறார்கள். அதைத் துரிதப்படுத்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான் முதலிலே கூறியது போல இந்தத் திட்டத்தை ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பெங்களூரிலுள்ள முன்னோடி முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் ஆய்வு நடத்தி அறிக்கை அனுப்பியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், அங்கே சிறிய துறைமுகம் அமைக்க வசதி இருக்கிறது. கிட்டத்தட்ட 65 படகுகள் விட முடியும் என்ற அளவுக்கு வாய்ப்பு இருக்கிறது என்றும், நீர்ப் பணித் தொட்டி, உலர வைக்கும் கருவி, மீன்பிடித் தொழிற்சாலை இத்தனையும் வைப்பதற்கு வசதி வாய்ப்பு இருக்கிறது என்றும் அறிக்கைகொடுத்து இருக்கிறார்கள். மத்திய அரசு ஒப்புதல் கிடைத்தபிறகு, பொதுப்பணித் துறை ஒத்துழைப்போடு, மீனளத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே ஒரு கோடி ரூபாய் செலவில் அந்த மீன்பிடி துறைமுகம் கட்டப்படவிருக்கிறது. அந்தச் செலவு செய்யும் அளவுக்கு மீன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா? அதற்குரிய ரிட்டர்ன்ஸ் அதிலே கிடைக்குமா என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான் ஏற்கெனவே கூறியதுபோல், அந்த ஐக்கிய நாட்டு நிறுவனம் இவைகளையெல்லாம் மனதில்வைத்து ஆராய்ச்சி செய்வது லாபகரமாக இருக்கும் என்று சொல்லித்தான் இந்தத் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள்.





*Subway near Moore Market*

* 603 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to construct any subway near the Moore Market in Madras; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா:** (அ) ஆம்

(இ) ரூ. 11.50 லட்சம் மதிப்பீட்டில் 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அந்த வேலைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் அந்த வேலைக்கு ஒப்பந்தப்புள்ளிக் கோரியிருக்கிறார்.

*Teynampet-Parrys Corner traffic study*

* 604 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Highways Research Station, Madras has undertaken any study for the formation of an express way between Teynampet and Parrys; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்;

(இ) அண்ணா சாலையில் செனடோப் ரோடுக்கும் வாலாஜா கேட்டுக்குமிடையே வாகனப் போக்குவரத்து குறித்து விரிவான போக்குவரத்துக் கணக்கெடுப்பு வேலைகள் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மேற்கொள்ளப்பட்டது. அண்ணா சாலையில் இருந்து பிரிந்து செல்லும் அல்லது இணைகின்ற சாலைகளில் செல்லுகின்ற வாகனங்களின் கணக்கெடுப்பு வேலையும் சாலையின் அமைப்பு, சீர்படுத்தும் வேலைகள் போக்குவரத்திற்கேற்றவாறு மேம்பாட்டு வேலைகள் மேற்கொள்ளல் போன்ற கருத்துக்களை நினைவில் கொண்டு விரிவான ஆராய்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி ஆராய்ச்சிக் குறிப்புகளை ஆய்வுசெய்து பார்க்குமிடத்து வாகனப் போக்குவரத்து நாள்தோறும் பெருகிவருகின்றது. இனி 20 ஆண்டுகளில் வாகனப் போக்குவரத்து பல மடங்கு அதிகமாகப்

பெருகிவிடுமெனவும் தற்போதுள்ள சாலை வசதிகள் வருங்காலப் போக்குவரத்துத் தேவைகளை ஈடேற்றப் போதுமானவையல்ல என்றும் தெரிய வருகின்றது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கை யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்த வரைவின் அடிப்படையில், வாகனப் பெருக்கம் காரணமாக 'சப்டேரனியன்' திட்டத்தை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். தலைமைப் பொறியாளரால் அனுப்பப்பட்ட அந்தத் திட்டம் அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசமாக ரூ. 120 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்த வாகன நெருக்கடியைத் தீர்ப்பதற்காக—சென்னை-அண்ணா சாலை வழியாக வரும் பெரிய லாரிகள், பஸ்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கிறது—சப்-வேக்கள் அமைத்து, பை-பாஸ் ரோடுகள் அமைக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா? அப்படியானால் அந்தத் திட்டத்தை எப்போது அமல்செய்ய அரசு முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சென்னையில் 'பை-பாஸ் ரோடு' ஒன்றைத் தேசிய நெடுஞ்சாலை மூலமாக அமைக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படி சென்னையில் அந்த பை-பாஸ் ரோடு திட்டம் நிறைவேற்றப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரிப் போக்குவரத்து நெருக்கடி தீரும்.

**திரு. ஆ. பரந்தமான் :** தலைவரவர்களே, அண்ணா சாலையிலிருந்து பாரிமுனைக்கு நாளுக்கு நாள் போக்குவரத்து அதிகமாகி வருவதால், அதை முன்னிட்டு, உடனடியாக மத்திய அரசோடு தொடர்புகொண்டு, அண்ணாச் சாலையிலிருந்து-பாரிமுனைக்கு சுரங்கப்பாதை அமைக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். அதற்கு ஆகக்கூடிய செலவு ரொம்ப அதிகமாக இருக்கிறது என்றாலும், இந்த 'சப்டேரனியன்' திட்டத்தில் அதுவும் சேரும் என்று நினைக்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், சென்னை நகரப் பாதைகளையெல்லாம் ஒவ்வொரு 10 வருஷத்திற்கு ஒரு முறை விரிவு படுத்தவும், பை-பாஸ் ரோடு, சுரங்கப்பாதை அமைப்பதும் மிகவும் அவசியமானது என்ற முறையில் இந்தப் பிரச்சினை ஆராயப் பட்டிருக்கிறதா ; அப்படி ஆராயப்பட்டிருக்குமானால் எந்தெந்த நகரங்களில், இம்மாதிரியான விரிவுபடுத்தும் பாதைகள், சுரங்கப் பாதைகள் அமைப்பது ஆகியவற்றைச் செய்ய அரசு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்த '-பை-பாஸ் ரோடுகளைப்' பொறுத்தவரையில் பெரிய நகரங்களில் சில இடங்களில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சில இடங்களில் பரிசீலிக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போது நான் சொல்லி இருக்கும் திட்டம் சென்னை நகரைப் பொறுத்தவரையில் மவுண்ட் ரோடிலிருந்து தேனாம்பேட்டை வரை, தேனாம்பேட்டையிலிருந்து பாரீஸ் வரையில் ஒரு 'சப்டேரனியன் எக்ஸ்பிரஸ் வே' போடுவது என்ற திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிசீலிக்கப்பட்ட பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் இத்தகைய நெருக்கடிப் பிரச்சினைகளை நல்ல முறையில் தீர்த்து இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய இன்ஜினியர்களையெல்லாம் அங்கே அனுப்பி, அங்கேயுள்ள நடைமுறையைக் கண்டறிந்து வர அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நம்முடைய பொறியாளர்கள் ஜப்பானுக்குப் போய் வந்திருக்கிறார்கள். உலக அமைப்பின்மூலமாக நம்முடைய தலைமைப் பொறியாளர் ஜப்பானுக்குப் போய் வந்திருக்கிறார்கள்.

### Bye-pass road at Hosur

* 605 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal pending with the Government to form a bye-pass road at Hosur in Dharmapuri district; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (*a*) Yes.

(*b*) The formation of bye-pass at Hosur in Dharmapuri district is part of the scheme for improvements to National Highways 7, i.e. Mysore Border Krishnagiri-Salem section under 'International Development Association Programme'. The scheme is estimated to cost Rs. 64.96 lakhs. The estimate for the work has been sanctioned by the Government of India. The tender proposals are under the consideration of the Government.

THIRU B. VENKATASWAMY : From Madurai, Tiruchirappalli and Coimbatore if people want to go to Bangalore, they will have to pass through Hosur. The present road at Hosur is small. Will this Government press on the Centre to erect this road urgently including it in national highway?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The main question is about bye-pass road. I have said that Government has already approved a scheme of Rs. 64.96 lakhs of rupees. As soon as tenders are settled, the work will commence. All steps will be taken to expedite the work.

THIRU K. S. KOTHANDARAMIAH : The land required for the construction of this road was taken up nearly 10 years back. The road has not yet taken shape. May I know whether Government will reiterate that this work should be taken up early?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : As I have already stated, this forms part of the National Highways No. 7. The Government of India have given the necessary permission for bye-pass road and all steps are being taken to widen and improve the pathway and we are expecting certain orders from Government of India. As soon as the orders are received, the execution of work will take place.



திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த பை-பாஸ் பாதை அமைப்பதற்காக டெண்டர் கோரப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது எந்த ஆண்டில் முடிவு பெறும் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போல பை-பாஸ் பாதை சேலத்திலகூடப் போடப்படுவதாக முன்பு டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டு, நிலம் ஆர்ஜிதமும் செய்யப் பட்டது. ஆனால் அந்தப் பாதை இன்னும் நிறைவு பெறாமல் இருக் கிறது. இப்படிப்பட்ட திட்டங்களை உடனடியாகச் செய்து முடிப்பதற்கு அரசு ஒரு காலவரையறையை நிர்ணயம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத் திற்கு 4.56 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த வேலை முடிந்துவிடும். இந்த நிலம் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டவுடன் ஏற்கெனவே கோரப்பட்ட டெண் டர்களை முடிவுசெய்து, உடனடியாக வேலை தொடங்கப்படும். வேலை தொடங்கி ஓராண்டு காலத்திற்குள் முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, அரசாங்கம் சென்னை மாநகரினுடைய போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து வருவதாக அமைச்சர வர்கள் சொன்னார்கள். அதேமாதிரி இந்த பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி இவைகளின் மூலமாகவும் போக்குவரத்து நெருக் கடியைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, காலப்போக்கில் கூவம் ஆற்றிலும், பக்கிங்காம் கால்வாயிலும் போக்குவரத்து வசதி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மதுராந்தகம் ஏரியில் தூர் எடுத்தல்

* 606 வினா—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் ஏரி தூர் வாருவது குறித்து அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, 1968-ம் ஆண்டு தமிழகத்திலே வறண்ட நிலை இருந்தபோது நம்முடைய அமைச்சரவர்கள் மத்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களைத் தமிழகத்திற்கு அழைத்து வந்து மதுராந்தகம் ஏரியை மட்டுமே காட்டினார்கள். ஆனால் அப்படிப்பட்ட அந்த ஏரியைச் செப்பனிட ஒதுக்கப்பட்ட தொகை ஒரு லட்சம் ரூபாய் தான். சாதாரண ஏரிகளுக்கெல்லாம் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படும்போது, மதுராந்தகம் ஏரிக்கு மட்டும் அதிகம் செலவு செய்ய அரசுக்கு மனம் இல்லையா அல்லது திட்டங்களை பொறியாளர்கள் தயாரித்து அரசுக்கு அனுப்ப வில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மனமும் இருக்கிறது; மார்க்கமும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு காண்பித்த பிறகு, அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு அதைப் பரிசிலனை செய்ய பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். பொறியாளரின் அறிக்கை வந்தவுடன் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, நம்முடைய அரசு பதவியேற்றபோது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள்—எந்த அமைச்சரும் ஏறி பார்க்காத ஏரியை—அந்த ஏரியைச் சுற்றி நடந்து, முழுவதுமாகப்





பார்த்தார்கள். அப்போது அந்த ஏரிக்கு அதிகத் தொகை செலவு செய்ய வேண்டுமென்று அனுப்பிய குறிப்புகள் அரசிடம் இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்தக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether desilting programme for the entire State is there with Government. If not, may I know whether this Government will press on the Central Government to allot funds for desilting of all tanks in the entire State?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: It is a very big question. The hon. Member may put a separate question and I can then give a detailed answer.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நம்பப்படுகிறது என்றும் சொன்னார்கள். ஆகவே, அதை நம்பலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கு சந்தேகம் வந்திருக்கிறது. ஆனால் மதுராந்தகம் ஆறுமுகத்திற்கு சந்தேகம் வரவில்லை. அவர் நம்புகிறார்.

**திரு. த. சோலையா:** தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரி தமிழ் நாட்டிலேயே பெரிய ஏரி என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் அடுத்தபடியாக இருக்கக்கூடிய பெரிய ஏரி எது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தமிழ் நாட்டிலே பெரிய ஏரிகள் பல இருக்கின்றன. இராமநாதபுரத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலே செம்பரம்பாக்கம் ஏரி இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் வரிசைப்படுத்தி தகவல் கொடுக்கலாம்.

**திரு. சி. க. வடிவேலு :** தலைவரவர்களே, பழுதடைந்து இருக்கின்ற ஏரிகளின் "வரத்து வாய்க்கால்" வேலைகளைச் செய்வதற்கு குடிமராமத்து மூலமாகச் செய்ய வேண்டுமென்ற ஒரு உத்தரவு இருப்பதால் நல்ல முறையில் அவை செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் அந்த வேலைகளுக்கு அதிக நிதி உதவி செய்யவோ அல்லது அரசாங்கமே நேரடியாக மராமத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போது இருக்கின்ற சட்டப்படி குடி மராமத்து மூலமாகத் தான் வரத்து வாய்க்கால் வேலைகள் செய்யப்படும். அந்த வேலைகளை பி.டபிள்யூ.டி. மூலம் செய்யலாமா என்ற ஒரு குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் இருக்கிறது. அதைப்பற்றி விரைவாக ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*New tank at Thoppanpatti*

* 607 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals to undertake the construction of a tank across the Aranmanai Odai in Thoppanpatti village in Dindigul; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தினால் 70.75 ஏக்கர் பாசன வசதி பெறுவதோடு 150 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப்படும். இதனால் 142 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

*Radial bus services*

* 608 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the Radial Bus Services to be introduced in Madras City by the Pallavan Transport Corporation during the year 1973?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சிறப்பு அதிகாரியின் பரிந்துரைகளைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதெனப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது.



தொடக்க நிலையில் சைதாப்பேட்டை போன்ற சேருமிடங்களை இணைக்கும் துணை வழித் தடங்கள் ( Feeder Routes ) கொண்டு வரப்படும். இச்சோதனையின் முதல் நிலை, 1973, மே திங்கள் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, பேராசிரியர் ஐயாசாமி அவர்களின் அறிக்கையை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சென்னை மாநகரில் பேருந்துக் கட்டணம் சம்பந்தமாக ஏதேனும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா? மேலை நாடுகளில் இருப்பதைப்போன்று இங்கேயும் எந்த வழித்தடத்தில் சென்றாலும் ஒரே கட்டணம் என்று திருத்தி அமைக்க குறிப்பு இருக்கிறதா ? அவைகளை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பேராசிரியர் ஐயாசாமி அவர்கள் கிட்டத்தட்ட 25 பரிந்துரைகளை அளித்திருக்கிறார்கள். சென்னை மாநகரில் உள்ள வழித்தடங்களை நேர் வழித்தடங்கள் (ரேடியல் ரூட்ஸ்) என்றும், வட்ட வழித் தடங்கள் (சர்க்குலர் ரூட்ஸ்) என்றும், துணை வழித்தடங்கள் (ஃபீடர் ரூட்ஸ்) என்றும் மூன்று வகையாகப் பிரித்து இருக்கிறார்கள். ஃபீடர் ரூட்டுகளில் 10 பைசா கட்டணம் என்றும், நேரடியாகச் செல்லும் வழித்தடங்களில் ஒரே பஸ்ஸில் ஏறி இறங்கினால் 20 பைசா கட்டணம் என்றும், இரண்டு பஸ்களில் பயணம் செய்தால் 30 பைசா கட்டணம் என்றும் கட்டணத்தைத் திருத்தி அமைக்கலாம் என்ற ஒரு பரிந்துரையையும் தந்திருக்கிறார்கள். அது அரசின் ஆலோசனையில் இருக்கிறதே தவிர ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலை நாடுகளில் இருக்கின்ற கட்டணத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே ஒரு நகரில் எங்கே இருந்து அந்த நகரின் இன்னொரு இடத்திற்குச் சென்றாலும் ஒரே கட்டணம் என்ற நிலையை அவர்கள் எட்டிப் பிடித்திருக்கிறார்கள். நாம் அந்த அளவுக்கு இன்னும் முன்னேறவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த ஐயாசாமி திட்டம் சென்னை போக்குவரத்துத் திட்டத்திற்கு நல்ல விஞ்ஞான முறையில் அமைந்த திட்டமாக இருக்கிறது. அது ஆரம்பித்து

வைக்கப்படும் என்று ஏற்கெனவே அமைச்சரவர்கள் சொல்லி யிருந்தார்கள். சில ரூட்டுகளிலாவது மே ஒன்றாம் தேதி அந்த முறை ஆரம்பித்து வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** முதல் கட்டமாக சைதாப்பேட்டை—பாரிஸ் என்ற வழித்தடத்தை மே மாதத்தில் தொடங்குவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் சொன்னதுபோல் வைத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் சொன்ன மாற்றங்கள் போக்குவரத்துத் துறையில் மே திங்களில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். இதை எப்படி எல்லாம் சீர்திருத்தப் போகிறோம் என்பதை மக்கள் நன்றாக அறிந்து கொள்ளும் அளவுக்கு, அதை அறிந்து மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்கு விளம்பரங்கள் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நல்ல யோசனையை அரசு ஏற்றுக் கொள்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** சென்னை நகரில் ஒரே பஸ் நாலைந்து மைல் தூரமுள்ள ரூட்டில் செல்ல வேண்டியிருப்பதை மாற்றி அதிலே இரண்டு பஸ்களை விட வேண்டுமென்று பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறாரா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சென்னை மாநகரில் வழித் தடங்கள் விஞ்ஞான ரீதியில் அமைக்கப்படவில்லை. எங்கிருந்து எங்கு செல்ல வேண்டுமென்றாலும் சுற்றிச் சுற்றிச் செல்லுகின்ற 117 வழித் தடங்கள் இருக்கின்றன. பேராசிரியர் அய்யாசாமி சென்னை மாநகரத்தின் சாலைகளின் அமைப்பைப் பார்வையிட்டு நேரடி வழித் தடங்களாகவும், வட்ட வழித் தடங்களாகவும் மாற்றியமைப்பதன் மூலம் இப்போது இருப்பதை 40 வழித் தடங்கள் என்ற முறையிலே குறைக்க முடியும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படிக் குறைப்பதன் மூலம் அதிகமான பேருந்துகளை விட முடியும். அதனால் போக்குவரத்திலே வசதிகள்





அதிகரிக்கும். ஐந்து மைல், ஆறு மைல், ஏழு மைல் என்று சுற்றிச் சுற்றிச் செல்லுகின்ற அந்த நிலைமைகள் இனி வராது என்று அரசு கருதுகிறது.

**திரு. த. சோலையா :** பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் திட்டத்தின்படி முதல் முதலாக அப்படி பேருந்துகளை விடுகின்ற நாளில் மக்கள் அதிலே ஓசியாகப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப் பட்டால் அதுவே ஒரு விளம்பரமாக அமையும். அரசு அதைச் செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஓசிப் பயணம் எங்கு எப்போது நடந்தாலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்று.

### பிராட்வேயிலிருந்து பேருந்துகள்

* 609 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 92-ஐ பிராட்வே வரை நீட்டிக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** 22—1—1973 ஆம் நாள் முதல் வழித்தடம் எண் 92 (தங்கசாலை—ஊத்துக்கோட்டை) தங்கசாலையிலிருந்து பிராட்வே வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** நீட்டித்ததற்கு நன்றி சொல்லுகிற அதே நேரத்தில் அந்த வழித் தடங்களில் தற்போது ஓடிக் கொண்டிருக்கின்ற பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளாக விட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பழையதை முற்றிலும் மறந்து விட வேண்டியதில்லை.

* 610 வினா—**திரு. கா வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 90 (சுண்ணாம்புக்குளம்—தங்கசாலை) பேருந்துகளை சென்னை உயர்நீதி மன்றம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) ஆம். வழித்தடம் எண் 90 (தங்கசாலை—சுண்ணாம்புக்குளம்) பேருந்துகளை சென்னை உயர் நீதிமன்றம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** அதிலே விவசாயிகளும், மற்றவர்களும் பூ, காய்கறிகள் போன்றவற்றை கொத்தவால் சாவடிக்குக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, பரிசீலனையில் இருக்கிற அந்தச் செயற்குறிப்பை விரைவில் நிறைவேற்றித் தர, அந்த வழித் தடத்தை உயர்நீதி மன்றம் வரை நீட்டிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### வெள்ளிக்குறியிடப்படாத வினாக்கள்.

### இனாம் நிலங்கள் குறித்த வழக்குகள்

1. வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு உயர்நீதி மன்றத்திலும், சுப்ரீம் கோர்ட்டிலும் தேங்கியுள்ள இனாம் வழக்குகள் எத்தனை ?

(இ) அரசாங்கத்தால் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(உ) தனியாரால் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(எ) இவ்வழக்குகளை விரைவில் முடிக்க எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

விடை—

| | உயர்நீதி மன்றம் | சுப்ரீம் கோர்ட்டு |
|---|---|---|
| (அ) | 147 | 31 |
| (இ) | 8 | — |
| (உ) | 139 | 31 |

(எ) மேற்குறித்த வழக்குகளை விரைவில் முடிவு செய்வதற்கான துரித நடவடிக்கைகளை எடுக்கும்படி அரசு வழக்குரைஞரும், தலைமை நீதிமன்ற தமிழ் நாடு அரசு வழக்குரைஞரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.





### Primary School at Alavidangan

2. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are giving any aid to the "காந்திஜி நினைவு எஸ். வி. உடையார் ஆரம்பப் பள்ளி, அளவிடங்கன்" at திருகுகள்ளி, கல்லடித்திடல் அஞ்சல், வழி சருகனி, இராமநாதபுரம் மாவட்டம் ; and

(b) if so, the details thereof?

A.—(a) No.

(b) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### Assistance for production of wax models

3. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any financial assistance was given to the producers of Wax Models in this State during the Calendar years 1971-72; and

(b) if so, the details thereof, district-wise?

A.—(a) No.

(b) Does not arise.

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### Film shows conducted at Children's Theatre, Vellore.

4. Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether film shows conducted at the Children's Theatre are being advertised in the press; and

(b) if so, the details thereof?

A.

(a) and (b) : The Programmes of Anna Kalai Arangam, Vellore is at present advertised in Vellore Murasu. The expenditure during 1971-72 on this account came to Rs. 1,978.40.

(அ) & (இ) : வேலூரில் உள்ள அண்ணா கலை அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சிகள் "வேலூர் முரசு" இதழில் விளம்பரப் படுத்தப்படுகின்றன. 1971-72 ஆம் ஆண்டில் இவற்றிற்கான செலவு ரூ. 1,978.40 ஆகும்.

### நெய்க்காரப்பட்டி—பெருமாள்புதூர் சாலை

5 வினா—புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனி வட்டத்தைச் சேர்ந்த நெய்க்காரப்பட்டியிலிருந்து பெருமாள்புதூருக்குச் சாலை அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) & (இ) : நெய்க்காரப்பட்டி—பெருமாள்புதூர் சாலையை (கிலோ மீட்டர் 0/0-லிருந்து 4/8 வரை) ரூ. 3 லட்சம் செலவில் மேம்பாடு செய்வதற்கு கிராமப் பகுதிச் சாலைகளை 1972–73-ம் ஆண்டில் மேம்பாடு செய்து பேருந்து செல்லும் சாலையாக மாற்றும் திட்டத்தின் கீழ் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(a) and (b) : The Government have sanctioned an expenditure of Rs. 3 lakhs for effecting improvements to the road from Neikarapatti to Perumalpudur (K. M. O./O. to 4/8) during 1972-73 under the scheme for the upgrading of Rural roads into bus route roads.

### *Cloth produced in Central Jails*

6. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the quantity of white drill cloth produced in the Central Jails in this State during the Calendar year 1972; and

(*b*) if so, the details thereof, jail-wise?

A.—

(*a*) & (*b*) : 31,085.75 metres in the Central Jail, Coimbatore. There are no Weaving Mills in other Jails in this State.



### *Research on Conjunctivitis virus*

7. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Pasteur Institute, Coonoor has conducted research into the conjunctivitis virus in the year 1971; and

(*b*) if so, the details thereof ?

*A.*—(*a*) Yes.

(*b*) The studies conducted at the Pasteur Institute, Coonoor, show that the actiology of conjunctivitis met with in 1971 in epidemic form in the State is associated with type 7 adenovirus infection.

(அ) ஆம்.

(இ) 1971 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் தொற்றும் தன்மையுள்ள கண் நோய் "அடினோவைரஸ்" 7 ஆம் வகையைச் சேர்ந்த நச்சுக் கிருமிகளினால் ஏற்பட்டதென்று குன்னூரிலுள்ள பாஸ்டர் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரிய வருகிறது.

### தலைமைச் செயலகத்தில் முறையீட்டுப் பிரிவு

8 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க தலைமைச் செயலகத்தில் புகார் பிரிவு (Complaints Cell) என்று ஒன்று இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அது செயல்படும் முறை யாது ?

(உ) 1972 ஆம் ஆண்டில் எத்தனை புகார்கள் வந்தன ?

(எ) எத்தனை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிந்துள்ளன ?

விடை—

(அ) அரசாங்க தலைமைச் செயலகத்தில் 1964-லிருந்து முறையீட்டுக் குழுத் துறை இயங்கி வருகின்றது.

(இ) இத் துறையில் பொது மக்களால் அனுப்பப்படும் முறையீடுகளில் அரசு அலுவலகங்களில் ஏற்படும் காலத் தாழ்வை தவிர்ப்பதற்காக உரிய அலுவலர்களோடு தொடர்பு கொள்ளப்பட்டு

அம்முறையீடுகளின் மீது முடிவான தீர்வு கண்டு மனுதாரருக்கு அறிவிக்கும் வரை தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகின்றது. இது மட்டுமன்றி, அரசு ஊழியர்கள் அனுப்பும் முறையீடுகளில் கீழ்க்கண்ட முறையீடுகள் பொது (முறையீட்டுக் குழு)த் துறையில் கவனிக்கப்படுகின்றது :—

(1) ஊதியம், படிகள் கொடுக்காமை அல்லது கொடுப்பதில் காலத் தாழ்வு குறித்த முறையீடுகள் ;

(2) பதவிகளில் வேலை உறுதிப்படுத்தப்படாமலேயே நீண்ட காலமாகத் தற்காலிகமாகத் தொடர்ந்து பணியாற்று பவர்கள் பற்றிய முறையீடுகள் ;

(3) ஊதியம் வரையறுத்தல் குறித்த முறையீடுகள் ; மற்றும்

(4) ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவற்றை முடிவு செய்வதில் காலத் தாழ்வு குறித்த முறையீடுகள்.

மேலே குறிப்பிட்ட பொருள் கொண்ட முறையீடுகள் பொது (முறையீட்டுக் குழு)த் துறைக்கு வரப்பெற்றதும், செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கும், துறைத் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் முதலியவர்களுக்கும் அனுப்பப்பட்டு முறையீடுகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் வரையில் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகின்றது. அவற்றின் மீது எடுக்கப்பட்ட இறுதி முடிவு பற்றி மனுதாரருக்கு அறிவிக்கப் படுகின்றது. இத்துறைக்கு அனுப்பப்படும் முறையீடுகள் காலத் தாழ்வின்றி தீர்க்கப்படுகின்றதா என்பதைக் கவனிப்பதைத் தவிர அம்முறையீடுகளின் மீது எடுக்கப்படும் முடிவின் தன்மை இத்துறையைப் பொறுத்ததல்ல.

மேலே குறிப்பிட்டுள்ள பொருளன்றி வருகின்ற மற்ற முறையீடுகள் தலைமைச் செயலகத்தில் உரிய துறைக்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்படுகின்றது.

(உ) 1972-ம் ஆண்டில் 3,717 முறையீடுகள் வரப்பெற்றன.

(ஏ) மேலே குறிப்பிட்ட 3,717-ல் 2,655 முறையீடுகள் இத்துறைக்குத் தொடர்பில்லாத பொருள் பற்றி இருந்ததால் செயலகத்தின் மற்ற துறைகளுக்கு மாற்றப்பட்டு விட்டன. 1,062 முறையீடுகளின் மீது இத்துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு 1—2—1973 வரை 410 முறையீடுகள் முடிவு பெற்றுள்ளன. மீதமுள்ள முறையீடுகள் பல்வேறு துறையிலிருந்து முடிவான அறிக்கையை எதிர்பார்த்து முடிவுறாமல் உள்ளன. இவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக எல்லாத் துறைத் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கப் பெற்றுள்ளது.



(a) A "Complaints Cell" is functioning in the Secretariat from 1964.

(b) The complaints received from the general Public against the delay in administration are referred to the various authorities and the matter is pursued till a final disposal is given to the complaint and the complainant is informed of the final orders passed in the matter. Besides, the representations of the following nature received from the Government servants are also being looked into in the Complaints Cell :

(1) cases of non-payment or delay in payment of salaries and allowances;

(2) cases in which persons are permitted to continue temporarily for long periods in posts without confirmation :

(3) cases of fixation of pay; and

(4) cases of delay in finalisation of pension and gratuity. The complaint cases of the above nature received in Public (Complaints Cell) Department are referred to the various Departments of Secretariat, Heads of Departments and District Collectors and other authorities concerned and pursued till a final decision is reached and the petitioner is informed of the position. The Complaints Cell confines itself to the avoidance of delay in disposal of complaint cases and does not interfere on the merits or demerits of the orders passed thereon. The Complaint cases, which do not come within the purview of the "Complaints Cell" are transferred to the concerned Departments in the Secretariat for necessary action.

(c) During the year 1972, 3717 complaint cases were received.

(d) Out of the 3717 cases received, 2655 were transferred to other Departments in Secretariat, as they did not relate to Public (Complaints Cell) Department. Out of 1062 cases referred to various authorities, 410 cases were finally disposed of upto 1st February 1973. The remaining cases are still pending, awaiting

final reports from various Offices. Instructions have been issued to all Heads of Departments to take prompt action in the disposal of the Complaint cases.

### *Repatriates from Burma*

9. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether a large number of repatriates from Burma are stationed in this State;

(b) if so, the total number of them; and

(c) the places where they are stationed in this State?

A.—(a) and (b): Upto December 1972, a total of 1,24,430 repatriates from Burma have arrived in the State.

(c) The repatriates fall into two categories, viz., those having roots (relatives) in India and those who are not having roots. On disembarkation at Madras harbour the first category of repatriates are sent to their home towns/villages or rehabilitation sites and the others are accommodated in the Transit Camp at Gummudipoondi. In the camp, cash doles (maintenance allowance) ranging from Rs. 30 to Rs. 75 per mensem, according to the size of the family, are paid to the repatriate families for a maximum period of seven months. Within this period, they are provided with rehabilitation assistance to which they are eligible and sent out of the camp. Sick and aged persons who have no adult member to support them are allowed to stay in the camp and are paid cash doles beyond 7 months. Unattached women among the repatriates and who are upto 30 years of age are sent to the Special Home for Women at Mathur in Tiruchirappalli District where they are looked after, fed and accommodated free of charge. In the Special Home, they are given training in any one of the trades like tailoring, mat-weaving, basket making, etc. After they acquire proficiency in a trade and are capable of earing a living by themselves they are sent out of the Special Home after getting a consent letter from them and giving a business loan of Rs. 800 to carry on a profession. At present there are 230 such



repatriate women in the Special Home. The bulk of the repatriates from Burma are settled in Madras, Chingleput, Thanjavur, Tiruchirappalli and Ramanathapuram districts. In the other districts, they scattered.

### *Cases relating to Religious Institutions.*

10. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the total number of cases filed before the Deputy Commissioner, Hindu Religious and Charitable Endowments, Madras during the calendar years 1968, 1969, 1970, 1971 and 1972;

(b) the number of them so far disposed of;

(c) the number still pending; and

(d) the reasons therefor?

விடை:

(அ), (இ) & (உ): சென்னை துணை ஆணையாளர் முன்பாக உள்ள வழக்குகள் பட்டியல் பின்வருமாறு:

| ஆண்டு. | வருட துவக்கத்தில் நிலுவை | தாக்கல் செய்யப் பட்ட வழக்குகள். | மொத்தம். | துணை ஆணையாளரால் முடிவு செய்யப் பட்டது. | மற்ற துணை ஆணை யருக்கு மாற்றப் பட்டவை. | நிலுவை. |
|---|---|---|---|---|---|---|
| 1968 | 333 | 288 | 621 | 93 | 25 | 503 |
| 1969 | 503 | 181 | 684 | 117 | 287 | 280 |
| 1970 | 280 | 129 | 409 | 112 | 152 | 145 |
| 1971 | 145 | 132 | 277 | 112 | 45 | 120 |
| 1972 | 120 | 197 | 317 | 210 | 6 | 101 |

(எ) 1972-ம் ஆண்டு முடிவில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 101. இவற்றில், சிலவற்றில் உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாலும் சில வழக்குகளுக்கான அறிக்கைகள் உதவி ஆணையர்களிடமிருந்து கிடைக்கப் பெறாமையாலும் மற்றும் சில

வழக்குகளில் மனுதாரர்கள் வழக்குகளை நடத்துவதற்கு முன் வராததாலும் மேற்படி வழக்குகள் நிலுவையில் உள்ளதாய் துணை ஆணையர் தனது அறிக்கையில் கூறியுள்ளார். மேலும் ஒரு வழக்கு தாக்கல் செய்த உடன் சட்டப் பிரிவுகளில் உள்ள நடைமுறைகளை அனுசரித்து விசாரணைக்கு வர ஆறு மாதங்கள் ஆகின்றன என்றும், 1972-ம் ஆண்டு உள்ள நிலுவை அவ் வாண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் பாதியை முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

*Office building for Ambattur Township*

11. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the new office building for the Ambattur Municipal Township has been completed; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) Yes.

(*b*) The new office building for Ambattur Township has been constructed at an estimated cost of Rs. 1,54,500. It was completed in September 1972.

(அ) ஆம்.

(இ) அம்பத்தூர் நகரியத்திற்கு ரூ. 1,54,500 மதிப்புள்ள புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அவ் வேலை 1972 செப்டம்பர் திங்களில் முடிவு பெற்றது.

*Advertisements for Raffle Schemes in Radio*

12 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether advertisements are being made through the All India Rdaio by the State Raffle authorities; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) Yes.

(*b*) The details are furnished in the Annexure.

(அ) ஆம்.

(இ) விவரங்கள் பிற்சேர்க்கையில்@ கொடுக்கப்பட்டுள்ளன.

@ 287–288-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.



*Purchase of timber by Housing Board*

13 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the State Housing Board have been purchasing its requirements of Timber for the Calendar years 1969–70–71–72 from the Central Timber Depots and the State Forest Department; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) and (*b*) No purchase was made from the State Forest Department in the year 1969–70, 71–72. During 1971, 300 Cfts. of country wood and during 1972, 17,930 Cft. of country wood have been purchased from the Central Timber Depot. of the Andaman Government.

(அ) & (இ) தமிழ் நாடு காட்டிலாக்காப் பிரிவிடமிருந்து தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மரங்களை Timber 1969-70, 1971-72-ஆம் ஆண்டுகளில் வாங்கவில்லை. 1971-ஆம் ஆண்டில் 300 கன அடி நாட்டு மரமும், 1972-ஆம் ஆண்டில் 17,930 கன அடி நாட்டு மரமும் அந்தமான் அரசுக்குச் சொந்தமான மத்திய மரக்கிடங்கிலிருந்து வாங்கப்பட்டது.

**பிராட்வே—முக்காம்பாக்கம் பேருந்துகள்**

14 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வழித்தடம் எண். 137 (பிராட்வே—முக்காம்பாக்கம்) பேருந்துகள் அடிக்கடி பழுதடைந்து நின்று போய் விடுவது உண்மையா?

(இ) இப் பேருந்துகளை குறித்த நேரத்தில் ஓட்ட மேற்கொண்டிருக்கும் சிறப்பு நடவடிக்கைகள் யாவை?

விடை: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

## தஞ்சை மாவட்டத்தில் தாமிரபத்திர விருது பெற்றவர்கள்

15 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சுதந்திர தின வெள்ளி விழாவின்போது தஞ்சை மாவட்டத்தில் தியாகிகளுக்கான தாமிர பத்திரம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை :

15—8—72 அன்று டில்லியில் தாமிர பத்திரம் விருது பெற்றவர்கள்—6.

26—1—73 அன்று தஞ்சை மாவட்ட தலைநகரில் விருது பெற்றவர்கள்—142.

## கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வடார்க்காடு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள்

16 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராம வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் இதுவரை வடார்க்காடு மாவட்டத்தில் எத்தனை இணைப்புச் சாலைகள் (Link Roads) உருவாக்கப்பட்டுள்ளன ?

(இ) இவற்றின் நீளம் என்ன ?

விடை :

(அ) & (இ) : கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்தின் கீழ் இதுவரை வடார்க்காடு மாவட்டத்தில் 264 இணைப்புச் சாலைகள் ( Link Roads ) போடப்பட்டுள்ளன. அந்தச் சாலைகளின் நீளம் 349.42 கி.மீ. ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].



## (2) நடைமுறைக் கேள்விகள்

### (அ) வெள்ளிக்குறியிடப்படாத வினாக்கள் குறித்து

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இன்றையதினம் அன்ஸ்டார்டு குவெஸ்டியன்ஸ் என்று சொல்லி 16 கேள்விகளையும் அதற்கான விடைகளையும் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற விதிகள் 36 (ஏ)ல்—

" Questions requiring long statement or statistics shall not be starred "

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதிலே கொடுக்கப்பட்டிருப்பதில் நம்முடைய அரசாங்கம் பல லட்சக்கணக்காகச் செலவழித்து நிறைவேற்றிய திட்டங்களைப் பற்றியெல்லாம் ஒரு வரி, இரண்டு வரிகளில் விடைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி மேற்கொண்டு அமைச்சர்களிடம் கேள்வி கேட்டு அறிந்து மக்களுக்கு அதுபற்றித் தெளிவுபடுத்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே, எதிர்காலத்திலாவது இப்படிப்பட்ட வாய்ப்புக்களைத் தரும் வகையில் நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சில மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேள்வியைக் கொடுக்கும்போதே அன்ஸ்டார்டு குவெஸ்டியன்லாகத் தருகிறார்கள். எழுத்து மூலம் பதில் வந்தால் போதும் என்ற அளவிலே தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் முக்கியமான கேள்விகளை, எல்லா உறுப்பினர்களும் ஆர்வம் காட்டக்கூடிய கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தரும்போதே ஸ்டார்டு குவெஸ்டியன்லாகத் தரும்படி ஏற்பாடு செய்கிறேன்.

**திரு. க. உசா. எட்மண்ட் :** ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். கடந்த திங்கட்கிழமை ஒரு உரிமைப் பிரச்சினையைத் தங்களிடம் கொடுத்தேன். எட்டு நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பல தடவை கூறியிருக்கிறேன். உரிமைப் பிரச்சினைகள், அட்ஜர்ன்மென்ட் மோஷன்கள் பற்றி இந்தப் பேரவையில் கேள்விகளாகக் கிளப்பக்

கூடாது. தனிப்பட்ட முறையில் பேரவைத் தலைவரின் அறையில் கேட்க வேண்டும்.

அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### (3) கவன ஈர்ப்பு

### மின்வெட்டின் காரணமாக மில்களின் அரவைக் கட்டண உயர்வு குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, சட்டப் பேரவை விதிகள் 41-ன் கீழ் திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**THIRU K. T. K. THANGAMANI:** Sir, we have given notice of some adjournment motions. The usual practice of rejecting the motions also has not taken place. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கொடுக்கிறீர்கள். அமைச்சருக்கு அனுப்பி இலாக்காவுக்குப் போய் வர வேண்டும். . .

**DR. H. V. HANDE:** Sir, may I make a request? For another two days only we will be able to raise such matters. Therefore I request whatever adjournment motions are given, they may be treated slightly more liberally by the Hon. Deputy Speaker.

**MR. DEPUTY SPEAKER:** The problem is this. Every small problem is brought in. Ordinary problems should not be brought under Rule 42.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, 75 சதவிகித மின்சார வெட்டின் காரணமாக சென்னையில் உள்ள அரவை மில்களில் அரவைக் கட்டணம் 300 சதவிகிதம் வரை உயர்த்தப் பட்டுள்ளது பற்றியும், கோதுமை போன்ற தானியங்களை அரைப்பதில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைப் பற்றியுமான அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, 15—2—73 முதல் தொழில் நிறுவனங்களுக்கு மின்வெட்டு 75 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இந்த உத்தரவின்படி நெல் அரவை மில்களுக்கும் உருளை மாவு மில்களுக்கும் மற்ற சிறு மாவு மில்களுக்கும் 75 சதவிகித மின்வெட்டு அமுலாக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு இதனால் ஏற்படும் அசௌகரியத்தின் காரணமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன.

(அ) நவீன நெல் அரவை மில்களுக்கு (Modern Rice Mills) முற்றிலும் விதிவிலக்கு.

(ஆ) தனியார் துறை நெல் அரவை மில்களுக்கு 25 சதவிகித வெட்டு.

(இ) உருளை மாவு மில்களுக்கு (Roller Flour Mills) 25 சதவிகித வெட்டு.

இந்த மாற்றங்கள் 22—2—1973 முதல் அமுலில் இருந்து வருகின்றன.

தற்போது உள்ள மின்சார இருப்பு, மேலும் சலுகைகள் அளித்திடுவதற்குச் சாதகமாய் இல்லை. மின்சார இருப்பு நிலையில் முன்னேற்றம் காணப்பட்டவுடன் இந்த மாவு மில்களுக்குச் சலுகைகள் அளிப்பது பற்றி அரசு கவனிக்கும். இதற்கிடையே அரவைக் கட்டணங்களை சட்ட ரீதியாக நியாயமான அளவில் நிர்ணயிக்கும் சாத்தியக் கூறுகளை உணவுத் துறை ஆராய்ந்து ஆவன செய்யும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சீயக்காய், மிளகாய் ஆகியவற்றை அரைக்க சாதாரண மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஒரு கிலோ சீயக்காயின் விலை 3 ரூபாய் என்றால் அதை அரைக்க 6 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. மிளகாய்க்கு கிலோவுக்கு 2½ ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி சிறு சிறு அரவை மில்களில் அரைப்பதற்காக அநியாய விலை வாங்குவதைத் தடுக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

[1973 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஏற்கனவே, இந்தக் குறைகள் சொல்லப்பட்டுத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சற்று சலுகை காட்ட வேண்டுமென்று இந்த நெருக்கடியான நிலைமையிலும் 25 சதவிகிதம் வெட்டு என்ற முறையில் சில பிரிவுகளை ஆக்கி இருக்கிறார்கள். சிறிது முன்னேற்றம் ஏற்பட்டாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய தெல்லாம் கவனிக்கப்படும்.

## (4) அறிவிப்புகள்

### (அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1973-74-ம் ஆண்டுக் கான அவையுரிமைக் குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :

1. திரு. என். இராசாங்கம்
2. திரு. என். கணபதி
3. திரு. டி. கணபதி
4. திரு. க. உரொ. எட்மண்ட்
5. திரு. மா. சுப்பிரமணியம்
6. திரு. எம். சுரேந்திரன்
7. திரு. மு. சின்னசாமி
8. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
9. திரு. கே. டி. கே. தங்கமணி
10. திரு. என். தர்மலிங்கம்
11. திருமதி ஜோதி வெங்கடாசலம்
12. திரு. கே. ஏ. வகாப்
13. திரு. பி. வெங்கடசாமி
14. திரு. கா. வேழவேந்தன்





நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1973-74-ம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக நான் அறிவிக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக் குழுவின் தலைவராக இருப்பார்.

### (ஆ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்கு நியமனம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1973-74-ம் ஆண்டிற்கான பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன் :—

1. திரு. என். கணபதி
2. திரு. கே. நாகராசன்
3. திரு. என். இராசாங்கம்
4. திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்
5. திரு. கு. காமாட்சி
6. திரு. ஆலடி அருணா
7. டாக்டர் எஸ். எம். பழனியப்பன்
8. திரு. மா. பா. சாரதி
9. திரு. ஜே. ஜேம்ஸ்
10. திரு. கே. எம். சுப்பிரமணியம்
11. திரு. ஆ. கு. சுப்பையா
12. திரு. கே. கந்தசாமி
13. திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்
14. டாக்டர் எச். வி. ஹாண்டே
15. திரு. எம். சுரேந்திரன்
16. திரு. கோவை செழியன்

திரு. என். கணபதி அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) 1973-ம் ஆண்டு சிறுவழக்கு மாநகர் நீதிமன்றங்கள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/73)

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Deputy Speaker, Sir, I beg to move that the Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, * 1973 (L.A. Bill No. 4 of 1973), be taken into consideration.

Section 72-B of the Presidency Small Cause Courts Act, 1882, as amended by Tamil Nadu Act XII of 1955, provides for the payment of court fee at the rate of one-half of the fee payable on the plaint in a suit for similar relief, on applications for new trial filed under Section 38 of the said Act. There is no provision in the Act for exempting the applications filed by pauper applicants under Section 38 of the said Act from payment of the court fee.

The High Court has recommended that a provision may be made for exempting pauper applicants from payment of court fees on applications filed under Section 38 of the said Act. The Government have examined the High Court's recommendation and they have decided to amend Section 74 of the said Act to enable the Court to receive applications from paupers under Section 38 without payment or on part payment of fees mentioned in Section 72-B. It is proposed to extend similar concession in respect of the fee payable by pauper applicants under Section 72-A of the said Act also.

Under Section 75 of the Presidency Small Cause Courts Act, 1882, the State Government have power to vary the amount of fees payable under Sections 71 and 72. Section 72-A of the said Act as amended by Tamil Nadu Act XII of 1955 provides for the payment of fees prescribed in the Fifth Schedule to the Act on documents of any kind specified in the said Schedule.

---

* Published in the Tamil Nadu Government Gazette Extraordinary dated 20th March 1973.



Article 6 of the said Schedule prescribes the fee on Vakalathnama or any paper signed by an Advocate signifying or intimating that he is retained for a party, including a memorandum of appearance, except where the party is a member of any of the Armed Forces of the Union not in civil employment.

According to sub-rule (6) of rule 4 of Order III of the Code of Civil Procedure, 1908, no Government Pleader or other Pleader appearing on behalf of the Government or on behalf of any public servant sued in his official capacity shall be required to present any document empowering him to act. In the absence of similar provision in the Presidency Small Cause Courts Act, 1882, difficulty is being experienced by Advocates appearing on behalf of Government, as such advocates have to file Vakalathnama with the requisite fee.

It has, therefore, been decided to amend Section 75 of the Presidency Small Cause Courts Act, 1882, suitably so as to empower the State Government also to remit the fee payable under Section 72-A of the said Act. It is also proposed to take power to remit or vary the fees, payable under Section 72-B of the said Act.

The Bill seeks to give effect to the above decisions.

Sir, I request the House to accept the motion.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I would like to offer a few general remarks so far as the amendment to Section 74 of the Presidency Small Cause Courts Act is concerned *Informa pauperis* has been allowed so far as civil suits which are triable under the Civil Procedure Code are concerned. Similar provision is now incorporated in the Presidency Small Cause Courts Act. I think that it is a commendable legislation which has been put forward by the Government. There are many people who are unable to pay court fee. So, it is a welcome measure and those litigants would be helped to the utmost. What is obtaining in the other suits, in the regular suits, will have to be applied to the Small Cause suits as well, even though there is a specific bar that the whole procedure as contemplated in the Civil Procedure Code will not be generally made applicable to the trial of Small Cause suits.

But, Sir, so far as the *informa pauperis* application is concerned, the matter waits in the Courts for a long time for want of a report from the Government Pleader because the Government will have to file a report that the applicant is not possessed of sufficient means to pay the fees. Such a procedure is even now prevalent and to obviate all those delays I think some steps should be taken and some protection may be given in that regard as well. As regards *informa pauperis*, there is a provision so far as the Civil Procedure Code is concerned. The appeal should be filed within 30 days from the date of the decree or order. Now, Sir, so far as these small cause decrees are concerned, there is no provision for any appeal. It is only a revision. Whether this would be applicable for filing a revision is also to be clarified. I think even for the matter of filing revision, there should be a specific provision. That is the point which I am raising

Another point which I want to say is regarding the usual difficulty experienced by the litigants. That is, in case an *ex parte* decree has been passed, now the Courts insist that the entire amount should be deposited if he wants to file an application to set aside the *ex parte* decree passed against him and that is a hard thing. I think a provision for insisting upon security for the performance of the decree may be insisted upon, instead of asking for cash deposits. These two matters may kindly be looked into. With these general observations I think it is a welcome measure so far as the people who are unable to pay Court fees are concerned. I think this Bill can be accepted without any further amendment. I commend the Bill for the acceptance of the House.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1973-ம் ஆண்டு சிறு வழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.





பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** "1973-ம் ஆண்டு சிறு வழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/73)" சட்டமகா நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 6/73).**

* **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 6/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

சமய நிறுவனங்களில் உண்டியல்களையும், அத்தகைய ஏனைய பெட்டகங்களையும் வைத்துப் பராமரிப்பதற்குப் பொருந்துகிற விதிகள் தற்போது எதுவுமில்லை. மேற்சொன்ன நோக்கத்திற்காக விதிகள் இயற்றுவதற்கு தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) வெளிப்படையான விதித்துறையும் இல்லை. இது குறித்து ஒரே சீரான நடைமுறையைப் பின்பற்றுவது அவசியமெனக் கருதப் படுகிறது. எனவே சமய நிறுவனங்களில் உண்டியல்களையும் அத்தகைய ஏனைய பெட்டகங்களையும் வைத்துப் பராமரிப்பதற்கு விதிகள் இயற்ற அரசுக்கு அதிகாரமளித்து, மேற்சொன்ன சட்டத்தின் 116-வது பிரிவைத் திருத்துவதென்று முடிவு செய்யப் பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் அளிக்கிறது.

---

@21—3—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.

இம்மன்றம் இதனை ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த இலாக்காவிலே பல இடங்களிலேயும் அதிகமாக இந்த மாதிரியாக வசூல் நடந்து கொண்டிருக்கின்றது. இதை முறைப் படுத்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்திலே வேறு சில அம்சங்களையும் சேர்த்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் சில ஆலயங்களில் லட்சக்கணக்கான ரூபாய்கள் பெருமான பித்தளை, வெங்கலப் பாத்திரங்கள் உபயோகப்படுத்தப்படாமல் கிடக்கின்றன என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கன்னியாகுமரியில் தேவஸ்வம் போர்டின் கீழ் இருக்கின்ற பல ஆலயங்களில், முன்பு, அந்தணர்களுக்கு இலவசமாக சாப்பாடு போடுவது என்ற முறை மன்னர்கள் காலத்தில் இருந்திருக் கின்றது. அதற்காகப் பல இடங்களிலேயும் பெரிய பெரிய பித்தளை, வெண்கலப் பாத்திரங்களை வாங்கி வைத்திருந்தார்கள்.

திருவெட்டார் என்ற ஊரில் ஆதிகேசவப் பெருமாள் ஆலயம் இருக்கிறது. இந்தப் பாத்திரங்களைப் பாதுகாப்பதே கஷ்டமாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் பெருமான இந்தப் பாத்திரங்கள் உபயோகமற்ற நிலையில் இருக்கின்றன. இப்போது அந்த இலவசமாக சாப்பாடு போடுகின்ற முறை இல்லை—அது மன்னர்கள் ஆட்சி காலத்திலேயே கைவிடப்பட்டு விட்டது. அந்தப் பாத்திரங்கள் மாத்திரம் இன்னும் இருந்து கொண்டே இருக்கின்றன. அந்தப் பாத்திரங்கள் இப்போது நல்ல விலை கொடுக்கக் கூடியனவாக இருக்கின்றன. எனவே, அவற்றை ஏலம் விட்டு விற்று அந்தப் பணத்தை கோயிலின் வருவாயோடு சேர்த்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருது கின்றேன்.

சுசீந்திரம் திருவெட்டார் கோயில்களில் இப்படிப்பட்ட பாத்திரங்கள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் இந்த முறையில் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். அது மாத்திரமல்ல, இந்த





நல்ல காரியத்திலிருந்து கிடைக்கின்ற பணத்தை கல்விக்காக அதிகமாகச் செலவழிக்க, வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்ற ஆலோசனையையும் இந்தச் சந்தர்ப் பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பல இடங்களில் கல்லூரிகள் இருக்கின்றன. பெண்கள் கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை இருக்கின்றன. இதற் கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற வகையில் இந்தப் பணத்தைச் செலவழிப்பது சாலச்சிறந்ததாக இருக்குமென்ற ஆலோசனையும் கூறிக் கொண்டு, இந்தச் சட்டம் வரவேற்கக் கூடிய ஒன்று என்று கூறி, அமைகின்றேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I entirely welcome the amendment that is proposed to plug the loopholes in the matter of collection of amount in hundis and also wastage in the collection of money from hundis. Sir, I would further suggest one more thing for the kind consideration of the Hon. the Minister for Religious Endowments.

Now, I find that whenever these hundis moneys are counted, there are a lot of malpractices. I think the Government should bring forward a legislation to see that all the moneys that are collected through hundies are deposited in a bank. It should not be stopped only with the money that is collected through hundis, but also the money collected through 'Laksharchana' or 'Sahasranamarchana' or in connection with any other function should be deposited in a bank.

Whatever amount that is derived by the temples should be deposited in a Bank and the money that is required by the temple to incur expenditure should be drawn from the bank. Now there is terrible misappropriation of funds taking place in many temples. While I welcome this move, I would like to suggest that depositing of money in banks should be insisted upon in all the temples, whether they are big or small.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவை ஆதரித்து நானும் ஒரு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் இந்தக் கோயில்களை முறைப்படுத்துவதன்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1973 ஏப்ரல் 2

மூலம் பல லட்சக் கணக்கான ரூபாய்களை நாம் பெற முடியும். அது மாத்திரமல்ல. இன்றையதினம் நாட்டில் என்ன நடக்கின்றது என்றால், சில கோயில்களின் வருமானம் கணக்கெடுக்கப்பட்டு வரையறை செய்யப்பட்டு, நம்முடைய அரசாங்கத்தின் பொறுப்பின் கீழ் இருக்கின்றன. சில கோயில்களில் தர்மகர்த்தாக்களை நியமனம் செய்து, வகைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தமாதிரி வகைப்படுத்தப்படாத கோயில்கள் லட்சக் கணக்கில் இருக்கின்றன. திடீர் என்று சில கோயில்கள் தோன்றுகின்றன. அவற்றில் உண்டியல் வசூல் செய்கிறார்கள். எந்தவிதமான கணக்கு வழக்கும் இல்லை. இவற்றையெல்லாம் அரசாங்கம் கண்காணிக்க வேண்டும்.

சில கோயில்களில் சொத்தே இல்லை என்று சொல்வார்கள். ஆனால், திடீரென்று திருவிழாக்களைச் செய்வார்கள், அப்போது உண்டியல் வைத்துப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்வார்கள். இதைப்போன்ற சம்பவங்கள் நிறைய தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றை வகை செய்யக்கூடிய முறையில் அரசு கண்காணிக்க வேண்டும். திருவிழாக் காலங்களில் உண்டியல் வசூலை கண்காணிக்கின்ற முறையில் அரசு நடவடிக்கையின் மூலமாக இவற்றை வகைப்படுத்த முடியும் என்பது எனது அபிப்பிராயம். மேலும், இரும்புப் பெட்டிகளைக் கொண்டு உண்டியலை ஏற்படுத்தக் கூடிய முறையைக் கையாள வேண்டும்.

அந்த உண்டியலை உடைக்கின்றபோது தர்மகர்த்தாக்கள் இருக்க வேண்டுமென்ற விதி இருக்கின்றது. இந்த விதியைச் சரியான முறையில் கடைபிடிப்பதன் மூலம் உண்டியல் வசூலில் பலவிதமான சீர்கேடுகள் இல்லாமல் தடுக்க முடியும். அந்த வகையில் அரசு செயல்பட்டு, உண்டியல் வசூலை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இந்த அறநிலையங்களிலே உண்டியல்களைச் சீரமைப்பதற்கும், உடைக்கும்போது சில முறைகளைக் கையாளுவதற்கும் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பல கோயில்களிலே இன்றைக்கும் உண்டியலை உடைக்கும்போது தவறான முறைகளை அனுசரித்து வருகிறார்கள். இதில் வரையறை இல்லை என்ற சூழ்நிலை



1973 ஏப்ரல் 2] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இருப்பதால் இந்த இலாக்காவில் உண்டியலை உடைக்கும்போது ஒருசில முறைகளைக் கையாள வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சில கோயில்களில், எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் சொன்ன மாதிரி, திடீரென்று திருவிழா நடத்தும்போது வசூல் கணக்கை அறங்காவலர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்ற நிலை இருக்கிற காரணத்தால், கணக்கைக் கொடுப்பதில்லை. அதே சமயத்தில் பொதுமக்களே விரும்பி சில ஆலயங்களில் நல்ல பணிகளைச் செய்ய வேண்டுமென்று செய்கிறபோது, அவர்கள் அறங்காவலர்களையும் மற்றவர்களையும் கேட்டுக் கொண்டு தான் நன்கொடை செய்ய வேண்டுமென்று சொல்லக் கூடிய சூழ்நிலை இருக்குமானால், பல அறநிலையச் சங்கங்கள் செய்யக் கூடிய பணிகளைத் தடுத்துவிட நேரிடும்.

ஆகவே, எல்லாவற்றையும் அறங்காவலர்களின் கீழ், அவர்களைக் கேட்டுக்கொண்டு தான் செய்ய வேண்டுமென்பது தவறு. பொது மக்களாகச் சேர்ந்துகொண்டு நான்கு பேர்கள் சேர்ந்து கொண்டு திருவிழா நடத்துகிறார்கள் என்றால், அந்த நான்கு பேர்களுக்குள்ளேயே கணக்குக் காட்ட வேண்டிய நிலையில் இருப்பார்கள். இந்த முறையில் சில சங்கங்கள் நல்ல முறையில் அறநிலையப் பணிகளைச் செய்து கொண்டு வருகின்றன. அதைத் தடுக்காமல், இப்படிப்பட்ட சங்கங்களில் அறங்காவலர்கள் தலையிடாமல் இருப்பது நல்லது. அதேசமயத்தில் எங்கேயாவது புகார்கள் வருமேயானால் இதே வேலையாக இருப்பார்களேயானால், கணக்குக் கொடுக்கத் தவறினால் அந்த இடங்களிலே அறங்காவலர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுப்பது தான் நியாயமானது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கோயில்களில் ஆண்டவனுக்கு, புடவைகள், துணிகள் சாற்றுகிறார்கள். இவற்றைப் பல வருஷங்களுக்குப் பிறகுதான் ஏலம் விடுகிறார்கள். அதற்குள் இந்தத் துணிகள் பயனற்று, மக்கிப் போய்விடுகின்றன. எனவே, அப்படியில்லாமல், வேண்டிய

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஏப்ரல் 2

புடவைகள், துணிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு, மற்றவற்றை, ஆண்டிற்கொரு முறை ஏலம் விட்டுவிட வேண்டும் என்ற யோசனையை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி, பல பக்தர்கள் ஆண்டவனுக்கு நகைகளைப் போடுகிறார்கள். கம்மல், மூக்குத்தி, இன்னும் சின்னச்சின்ன நகைகளை எல்லாம் போடுகிறார்கள். அந்த நகைகளிலும், வேண்டியனவற்றை, ஆண்டவனுக்குப் போடக் கூடிய, உபயோகமான நகைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு, மற்றவற்றை நல்ல ஆபரணங்களாக மாற்றியமைக்க முடியும். அப்படி, ஆண்டிற்கொரு முறை இப்படிச் செய்து, அந்த நகைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படியும் ஆண்டவனுக்கு உபயோகப்படாத நகைகள் இருக்குமானால், அவற்றை ஆசாமிகளுக்கு விற்று விடலாம், ஏலத்தின் மூலமாக. இப்படிச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, நான் அடிக்கடி சொல்லுவது போல, இன்றைக்குப் பல கோவில்களுக்கு என்னென்ன சொத்துக்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட முறையான ரெகார்டுகள் கிடையாது. உதாரணமாக, புரசைவாக்கம் ஸ்ரீ கெங்காதீஸ்வரர் கோவிலுக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவை எந்த இடத்தில் இருக்கின்றன, அவற்றை யார் யார் வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள், என்ன வரி கட்டுகின்றார்கள் என்பதையெல்லாம் விவரமாகத் தெரிந்து கொள்ளுவதற்கு ஏற்ற முறையில் அந்த விவரங்கள் அடங்கிய பட்டியல் அங்கில்லை. காரணம் ஒன்றுமில்லை.

அங்குள்ள அறங்காவலர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்படுகின்றார்கள். அறங்காவலர்கள் ஐந்தாண்டுக்கு ஒரு முறை என்றால் ஆபீசர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை மாற்றப்படுகின்றார்கள். இப்படி அதிகாரிகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்பட்டால் கோவில் சொத்துக்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று அவர் எங்கே கண்டுபிடிப்பார்? 'Executive Officer' என்று யாரையாவது போட்டால் ஒன்று பிரமோஷனில் போய்விடுகின்றார்கள் அல்லது 'ஏ' கிளாஸ் அல்லது 'பி' கிளாஸ் என்று வரும் நேரத்திலே மாற்றிக் கொண்டு போய்விடுகின்றார்கள்.



1973 ஏப்ரல் 2] [திருமதி த. ந. அனந்தநாயகி]

எக்சிகியூட்டிவ் ஆபீசர்ஸ் என்று இருந்தால் குறைந்தது ஐந்து வருஷமாவது இருக்க வேண்டும். அப்போதுதான் அறங்காவலர்களுக்கும் ஈ.ஓ.-க்களுக்கும் ஒரு 'அண்டர்ஸ்டேண்டிங்' இருக்கும். கோவில்களின் சொத்துக்கள் எங்கெங்கே, யார் யாரிடத்தில் இருக்கின்றன என்று பார்ப்பதற்கு இருவருக்குமிடையே ஒரு 'அண்டர்ஸ்டேண்டிங்' ஏற்படும். எனவே இப்படி அடிக்கடி மாற்றாமல் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு இவர்கள் இருக்க வேண்டும் என்று போட்டு கோவில்களுக்குள்ள சொத்துக்களைப் பற்றியெல்லாம் ஒரு முறையான பட்டியல் தயார் செய்ய வேண்டும். நான் தர்மகர்த்தாவாக இருந்ததால் அந்தக் கஷ்டங்களை உணர்ந்து இதைச் சொல்லுகிறேன். இன்று பல தர்மகர்த்தாக்கள் முறையாக வேலை செய்ய முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள். எனவே இந்த நிலைமையைப் போக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கோவில்களுக்குப் பல முறைகளில் வருவாய் இருக்கின்றன. பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்துகின்றார்கள், கட்டணங்களாகச் செலுத்துகின்றார்கள், உண்டியலில் சேர்க்கின்றார்கள். இந்தப் பணத்தைக் கொண்டு கோவில் திருப்பணிகளைச் செய்ய முதலிடம் கொடுக்க வேண்டும். பல இடங்களிலே கோவில்களும் திருக்குளங்களும் பழுதடைந்து கிடக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட வருவாயைக் கொண்டு இவற்றைப் பழுது பார்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பல கோவில்களில் மதச் சார்பான கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். எனவே இத்தகைய பணிகளில் நீங்கள் அக்கறை காண்பித்து, இவற்றின் செலவு போக மிஞ்சியிருந்தால் அவற்றைக் கல்விக்கு அல்லது அனாதை இல்லங்களுக்கு அல்லது பிச்சைக்காரர்கள் விடுதிக்குச் செலவிட்டுக் கொள்ளலாம். மக்கள் மத்தியில் நல்ல கருத்துக்களை, ஒழுக்கத்தைப் போதிக்கும் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதற்கான வாய்ப்புகள் என்னென்ன என்று ஆராய்ந்து அவற்றுக்கு என்னென்ன செலவழிக்க வேண்டுமோ அவற்றைத் தயங்காமல் இந்த இலாக்கா செய்தால் தான் ஓரளவிற்குச் சீரமைக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஏப்ரல் 2

அடுத்து, பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்விற்கு என்று ஏராளமாகச் செலவழிக்கின்றார்கள். இவர்களுக்காக இல்லங்கள் கட்டியிருக்கிறோம் என்றாலும் இன்னும் பிச்சைக்காரர்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். அன்றைக்கு இருந்தமாதிரி தான் இன்றைக்கும் கோவில் வாசலில் ஏராளமாக இருக்கின்றார்கள் இவர்கள். அழைத்துக் கொண்டு போய்விட்டோம் என்கின்றார்கள். எங்கே அவர்களை அழைத்துக் கொண்டு போனார்களோ தெரியவில்லை. என்னைக் கேட்டால் கோவில்களில்கூட இரண்டு உண்டியல்களை வைக்கலாம்—ஒன்று கோவிலுக்கும் மற்றொன்று இந்தப் பிச்சைக்காரர்களுக்கும் என்று. சாமிக்குப் போடுகின்றவர்கள் போடட்டும், பிச்சைக்காரர்களுக்குப் போடுகின்றவர்கள் போடட்டும்.

இப்போது ஏதாவது பெரிய கோவில்களுக்குப் போனால் என்ன நடக்கிறது, பத்து பதினைந்து பிச்சைக்காரர்கள் சூழ்ந்து கொண்டு "கொண்டா காசு, கொண்டா காசு", என்று நச்சரித்து விடுகின்றார்கள். எனவே இதைப் போக்க ஒரு வழியைக் கண்டால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அவர்களில் கூன் குருடர்கள், தொழு நோய்க்காரர்கள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றார்கள். கோவில்களுக்குப் போகும்போது இவர்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டு விடுவதைப் பார்த்தால் பயமாக இருக்கின்றது. எனவே அறநிலைய இலாக்கா கல்விச் சாலைகளை ஆரம்பிக்கின்றதைக் காட்டிலும் பிச்சைக்காரர்களுக்கு என இடங்களைக் கட்டுவதில் முதலிடம் கொடுத்து, கோவில்களுக்கு வருகின்றவர்களை இந்தப் பிச்சைக்காரர்களுடைய தொல்லையிலிருந்து காப்பாற்றினால் பரவாயில்லை. இதற்காக உண்டியல் வைத்தால்கூட மக்கள் காசு போடத் தயாராயிருக்கின்றார்கள்.

பெரும் பெரும் கோவில்களில் எல்லாம் அங்குள்ள கலையழகைக் கண்டு களிக்க பல அந்நிய நாட்டு மக்கள் வருகின்றார்கள். அவர்களையெல்லாம் இந்தப் பிச்சைக்காரர்கள் சூழ்ந்துகொண்டு தொல்லை கொடுப்பதைப் பார்த்தால் நமக்கு வெட்கமாக இருக்கின்றது. இதுதான் இந்த நாட்டில் இருக்கின்றதோ என்று அவர்களே ஐயப்படத்தக்க அளவிற்கு பிச்சைக்காரர்கள் தொல்லை பயங்கரமாக இருக்கின்றது. ஆகவே அறநிலைய இலாக்காவில் உண்டிகளை வரைமுறைப் படுத்துவதோடு, உண்டியலிலிருந்து



1973 ஏப்ரல் 2] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வரும் பணத்தை எந்தெந்த காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று யோசிக்கும்போது அந்தக் கோவிலின் முக்கியத்துவத்தை அதிகரிக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்யவும் இதுபோன்ற தொல்லைகளைக் குறைக்கவும் யோசிக்க வேண்டும் என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, I fully endorse the views expressed by the hon. Member, Thirumathi T. N. Anandanayaki. I personally feel that the amount that is collected through the process of 'hundi' must be properly utilised. That is a very, very important aspect of the matter which the Hon. Minister must carefully go into. He has brought forward an amendment to indicate how exactly the amount is going to be collected.

But I would like to point out how exactly the amount is being utilised and how exactly the Hindu Religious and Charitable Endowments Board is utilising the funds placed at their disposal and these are the things which have to be carefully gone into. Only then the public will be tempted to give their money in the hands of the temple authorities through hundis. So the public will have to be encouraged to give more and more money to hundis and for that they must have confidence that the money thus collected will be properly utilised.

I shall now give certain examples as to how improper utilisation of money is made by the Department. For instance, I want to refer to the Government Grant and diversion of funds from Common Good Fund held by the Commissioner as Personal Deposit Accounts and also diversion of surplus funds from other temples.

More than 10 lakhs of rupees of Government Funds and Temple Funds have been diverted by the Commissioner to several village temples in Singampuneri Constituency whereas there are several other historical and important temples in Tamil Nadu which require immediate renovation. The amount is utilised for repairing horses in several Ayyanar temples in the said Constituency. What is the reason for spending several lakhs over such village temples in a particular area alone. A higher level judicial

committee consisting of a High Court Judge should be appointed to go into this matter of diversion of surplus funds of temples and also diversion of funds from Government Grants and Common Good Fund held by the Commissioner in P.D. Account and to examine the necessity, reasonableness, fairness and also the misuse of authority by the present Commissioner of Endowments.

Then I refer to work of Revenue staff posted to work in the Department for collecting data of landed properties of temples in the State. The expenditure on special work by this staff is not properly utilised. How are they going to utilise the amount collected for the purpose for which it is intended. There are a number of such irregularities.

There has been an indiscriminate booking of trunk calls and expenditure thereon. Even for an ordinary matter, trunk calls are booked in the offices of the Department. The regional office trunk call charges per month exceeds Rs. 10,000 which may kindly be seen as lavish particularly in this kind of Department.

Then I come to the use of jeeps. The money collected from the hundials is used for jeeps. All the Assistant Commissioners and Special Deputy Collectors are provided with jeeps. There are about 20 jeeps in the Department. The Congress Government did not sanction jeeps. Now there is heavy expenditure on this account without any substantial work done by the officers.

Then, again the hundi amount collected from the people is spent for claiming of Travelling Allowance by officers. The Commissioner and other high officials are drawing Travelling Allowance. They never attend to any useful official work. The Commissioner undertakes frequent and long journeys without any purpose. His long and frequent and rapid marches should be curtailed and the expenditure should be reduced as it is the public money. This is one aspect of the matter.

Then I come to another aspect of the matter. The other day we had occasion to know how the properties are acquired. Now I want to refer to the sale of Shri Kapaleeswarar Temple land. During August 1972 the Government had acquired 116 grounds of Shri Kapaleeswarar temple in Mylapore, situated near Luz at a cost of Rs. 2,880/- for the Slum Clearance Board.



The ground value in that area is Rs. 20,000 per ground. If a ground at Kottur can fetch Rs. 10,000 surely ground in Mylapore would fetch Rs. 20,000. But what actually happened? They were forced to sell one ground at Rs. 2,880. This was objected to by the Hindu Temple Protection Committee.

The Commissioner of Hindu Religious and Charitable Endowments in his letter No. 32092/T1, dated 19th December 1972 called upon both the parties for an enquiry. I would request the hon. Member Thirumathi T. N. Anandanayaki to listen to this. The temple authorities and the Executive Officer did not turn up. The Temple Protection Committee came. But on the other hand.........

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர். இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் அவைத் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் கவனிக்க வேண்டுமென்று பேசுவது முறைதானா?

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): The hon. Member DR. Hande knows very well that he should address the Chair.

DR. H. V. HANDE : It is not as if that I should always be addressing facing my distinguished friend Thiru N. Veerasami. I am addressing the hon. Member Thirumathi T. N. Anandanayaki through the Chair.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இங்கே தலைவராக இருந்தவர்கள் சேரைப் பார்த்து அட்ரஸ் பண்ண வேண்டும் என்று ரூலிங் கொடுத்திருக்கிறார்கள்.

We have to address through the Chair.

என்பதனாலே தலைவரைப் பார்த்துக் கொண்டே பேசவேண்டும் என்கிற நிலை இல்லை. Chair மூலமாகத்தான் மற்றவர்களையும் கவனிக்க வேண்டும் என்று சொல்கிறோம். இதில் தவறு இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் மயிலாப்பூர் தொகுதியைச் சேர்ந்த காரணத்தினால் அவர் சொன்னதில் ஒன்றும் தவறில்லை. கபாலீசுவரர் கோவில் நிலத்தை எடுத்து மிகச் சுலபமாக கிரவுண்டு ரூ. 2,500-க்கு விற்றுவிட்டோம் என்று சொல்லி விட்டார்கள். கோயிலுக்குப் போகிற ஏழைகள் பணம்தான் அது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அம்மையார் அவர்கள் தம் தொகுதியிலுள்ள ஏழைகளைப்பற்றி எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது போதும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** உங்கள் அக்கறையில் என் அக்கறை கொஞ்சமும் குறைந்தது அல்ல, உங்கள் கஜானாவில் இருந்து கொடுப்பதுதானே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கொண்டு வந்திருக்கிற மசோதா உண்டியலைப் பற்றியது. டாக்டர் ஹாண்டே அவர்கள் இதைப்பற்றிப் பலமுறை பேசினார்கள். இப்படி கட்டுப்பாடு இல்லாது பேசிக் கொண்டே போனால் 5-ம் தேதி கூட முடியாது. அவ்வளவு மசோதாக்கள் இருக்கின்றன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** உண்டியலைப்பற்றிப் பேசும் போது அம்மையார் அவர்கள் எவ்வளவோ சொன்னார்கள். நான் கோவில் சொத்துக்களைப் பற்றித்தான் சொல்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படி எல்லாம் லாஜிக்கலாகப் போனால் எப்படி முடியும்? பில்லுக்குச் சம்பந்தப் பட்டதாக இருக்க வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒருவேளை நான் பேசுவது அரசாங்கத்திற்குச் சாதகமாக இல்லாமல் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரசாங்கத்திற்குச் சாதகமாகப் பேசுகிறீர்களா பாதகமாகப் பேசுகிறீர்களா என்பதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. அவைக்கு முன்னால் இருக்கிற விஷயத்தைப்பற்றி மட்டும் பேச வேண்டும். அவைக்கு முன்னால் இருக்கிற விஷயத்தைப்பற்றி எதிர்க் கட்சியில் இருந்து நீங்கள் எப்படிப் பேசினாலும் நான் கவலைப்படவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** டாக்டர் ஹாண்டே பேசுவது முழுக்க முழுக்க அரசாங்கத்திற்குச் சாதகமாகத்தான் இருக்கிறது. கோவில் நிலத்தை ஏழைகளுக்காக வீடு கட்ட குறைந்த விலையில் வாங்கியது அரசாங்கத்திற்குச் சாதகமானது தான்.



**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முதலமைச்சர் சொன்னது சரி தான். கோயில் நிலத்தை கிரவுண்டு ரூ. 2,880 என்று வாங்கினீர்கள். அப்படிக் குறைந்த விலைக்கு வாங்கினது நியாயந்தானா என்று கேட்டவர்கள்மீது ரூ. 25,000 டெபமேஷன் நோட்டீஸ் அனுப்பினீர்கள். ஆனால் பணக்காரர் நிலத்திற்கு 50 லட்சம் கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பணக்காரருக்கு 50 லட்சம் கொடுத்துவிட்டோம் என்று சொல்கிறார். அவர் ஹவுசிங் போர்டுக்குக் கொடுக்காது ப்ளாட் பண்ணி க்ரவுண்டுக்கு 18 ஆயிரம் என்று விற்றிருந்தால்கூட விற்றிருக்க முடியும். ஹவுசிங் போர்டு வியாபாரம் தான் பண்ணுகிறது. 400 க்ரவுண்டை, க்ரவுண்டு பத்தாயிரம் என்று 50 லட்சத்திற்கு வாங்கி, க்ரவுண்டு 18 ஆயிரம் என்றுதான் விற்கிறது. பணக்காரருக்கு அரசாங்கம் ஏதோ கொடுத்துவிட்டது என்று சொல்வது இருக்கட்டும். இப்போதுகூட அவர் கொடுத்த பணம் போதாது என்று கோர்ட்டுக்குப் போயிருக்கிறார். இதற்கும் குடிசை மாற்று வாரியத்திற்கு வாங்கியதற்கும் என்ன சம்பந்தம்?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இங்கே தனி மனிதனிடத்தில் வாங்கும்போது 50 லட்சம் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அதுவும் போதாது என்று அவர் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார் என்கிறீர்கள். அங்கே கோயில் நிலங்களை க்ரவுண்டு ரூ. 2,880 என்று வாங்கியிருக்கிறீர்கள். சமுதாயச் சொத்தாக இருக்கிற கோயில் நிலத்திற்கே இந்த விலை கொடுத்திருக்கிறபோது அங்கே மட்டும் அந்தப் பணக்காரருக்கு அவ்வளவு விலை ஏன் கொடுக்க வேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்தப் பணக்காரரே ப்ளாட் போட்டு தம் நிலத்தை விற்றிருந்தால் என்ன செய்வது?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அவர் ஒருக்காலும் விற்றிருக்க முடியாது. இவ்வளவு பெரிய இடத்தை விற்றிருக்க முடியாது. நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் அவற்றை ஆர்ஜிதம் செய்து வாங்கிக் கொண்டிருக்கலாம். எப்படி மயிலாப்பூர் நிலத்தை வாங்க முடியுமோ அப்படி வாங்கியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அது டிரஸ்டி பிராபர்டி. நாம் அதைத் தடுக்க முடியுமா என்பது இருக்கட்டும். இப்போதே அவரது சகோதரர் முத்தையா செட்டியார் தம்முடைய நிலங்களை ப்ளாட் போட்டு விற்றுக் கொண்டுதான் இருக்கிறார் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அப்படி என்றால் அர்பன் லாண்ட் சீலிங் கொண்டு வருவதற்குள் இப்படி நிலங்கள் விற்கப்படுவதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அர்பன் லாண்டு சீலிங் கொண்டுவருவது பற்றியே பல சிக்கல்கள் இருக்கின்றன. இது சிதம்பரம் செட்டியாருக்குச் சொந்தமான நிலம்—டிரஸ்ட் பிராபர்டி—நிலம் எப்படி வந்தது என்பது பிரச்சினை அல்ல. அவர் அப்படியே கொடுக்கத் தயாராக இருந்தார். வாங்கிற்று.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** டிரஸ்டுகளை ஒழிக்க மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு ப. உ. சண்முகம் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் அறக்கட்டளைகள் பற்றிய சட்டத்தைப் படிக்க வேண்டுமென்று கேட்கிறேன். படித்துவிட்டுச் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் நிறைய மசோதாக்கள் இருக்கின்றன சப்ஜெக்டைவிட்டு இப்படி பைபாஸ் பண்ணிப் போவதை நான் அனுமதிக்க முடியாது. ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கபாலி கோயில் நிலத்தை பற்றி இந்த அவையில் நான் பலமுறை விளக்கம் கொடுத்து இருக்கிறேன். ஒரு சங்கத்தின் சார்பில் தீர்மானம் போட்டு, இந்தத் துறையைப்பற்றி அவதூறாக நடந்து கொண்டதற்கு சட்டதிட்டங்களின்படி நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கோவில் நிலத்தில் பல்லாண்டு காலமாகக் குடிசை போட்டுக்கொண்டு வாழ்ந்த மக்களுக்கு, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அங்கேயே வீடுகள் கட்டிக்கொடுக்க திட்டமிட்டு ஏற்பாடு செய்த நேரத்தில் இந்தக் கோவில் நிலம் மட்டும் அல்ல, குன்றக்குடி ஆதினத்தைச் சேர்ந்த நிலம்கூட இதே விலைக்கு



நிர்ணயம் செய்யப்பட்டு ஆதினகர்த்தரால் ஒத்துக் கொள்ளப்பட்டு, வாங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோவில் நிலத்திற்கான விலையும் அறங்காவலர்கள் அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது. அதன் பேரில்தான் ஆணையர் அனுமதி கொடுத்திருக்கிறார்.

அதோடு இங்கே வாழ்ந்து வருகிற ஏழைகளை அப்புறப்படுத்த, இதுபோல நகரத்தில் வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகிற ஏழைகளை அப்புறப்படுத்த எந்தவிதமான வழிமுறைகளும் கிடையாது. குடிசை போட்டு வாழ்ந்து வந்த மக்களுக்கு அங்கேயே வீடுகள் கட்டிக் கொடுக்க அறங்காவலர் நிர்ணயித்த விலையில்தான் அந்த நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஆண்டுக்கு 400 ரூபாய் என்ற குத்தகைக்கு அந்த நிலத்தில் குடியிருந்தவர்கள் அதனை எடுத்திருந்தார்கள். அந்தக் குத்தகையைக்கூட பல ஆண்டுகளாகக் கொடுக்காமல் இருந்தவர்கள் பலர். அதுகூட, சரியாக வசூலாவது இல்லை. இரண்டு ஆண்டுகள், 3 ஆண்டுகள், வாடகை பாக்கி இருந்து கொண்டே வந்தது. ஆனால், இப்பொழுது சுமார் ரூ. 3 லட்சத்திற்கு மேல் அந்த நிலத்தை குடிசை மாற்று வாரியத்திற்கு விற்றுவிட்டதற்குப் பின்னால், அந்தப் பணத்தை வங்கியில் போட்டதில் ரூ. 40,000-க்கு மேல் வருமானம் வந்திருக்கிறது. ரூ. 400 வந்த இடத்திலே இப்பொழுது ரூ. 40,000-க்கு மேல் வருமானம் வந்து கொண்டிருக்கிறது. அதிலே என்ன தவறு? அறநிலையத் துறை சட்டத்தில் கோயில் நிலங்களை இனமாகக் கொடுக்கக் கூடாது என்று வழி வகுத்திருக்கிறார்கள். சட்டத்தில் வழி இருக்குமானால், குறைந்த விலையில் மட்டுமல்லாமல், இனமாகக்கூட, ஏழைகளுக்குக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இங்கு இனமாகக் கொடுத்த மந்திரி, மற்ற அறக்கட்டளைகளுக்காக ரூ. 50 இலட்சத்துக்குக் கொடுக்கக் கூடாது என்றுதான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாகப் பதில் சொல்வதாக நினைத்துக் கொண்டு சொல்கிறார். நான்கூட . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** டாக்டர் ஹாண்டே அவர்கள், தான்தான் சாமர்த்தியசாலிபோல் நினைத்துக் கொண்டு, 50 லட்சத்துக்குக் கொடுத்தது தவறு என்று சொல்வது

கொஞ்சம் கூடப் பொறுப்பற்றது என்று தெரிவித்துக்கொ கிறேன். அங்கு லாண்ட் அக்குவிசிஷன் அதிகாரி நிர்ணயித்த விலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் கொடுத்தது தவறு என்றால், நீதிமன்றத்திற்குப் போகலாம், வேறு வழியில் சொல்லலாம், அல்லது ஊழல் புகாரிலே சொல்லலாம். அதிலே தவறு கிடையாது. பத்திரிகைகளில் விளம்பரத்திற்காக இவ்வாறு அவர் சொல்வது சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நானும் பொறுப்பற்ற வகையிலே அமைச்சர் அவர்கள் பேசுகிறார் என்று சொல்ல முடியும். அது பெரிதல்ல. ஒருவருக்கொருவர் காம்ப்ளிமெண்ட்ஸ் சொல்லலாம். எங்கள் பேச்சுக்கு முதலமைச்சர், பதில் சொல்லலாம். நாங்கள் பதில் சொல்லக் கூடாதா? எங்கள் வாய்க்குப் பூட்டு போடுகிறீர்கள்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, வாய்க்குப் பூட்டுப் போடவேண்டாம். திறந்தபடியே வைத்துக் கொள்ளுங்கள். யாரும் பூட்டுப் போட வேண்டாம். (டாக்டர் எச். வி. ஹாண்டே குறுக்கீடு) தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்டது (டாக்டர் எச். வி. ஹாண்டே குறுக்கீடு) நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? நீங்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? அசெம்பிளியா, என்ன இது?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அசெம்பிளிதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உட்கார்ந்து கொண்டு பேசுவது முறையற்றது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் இடம் கொடுத்தேன்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இடம் கொடுத்தால், பேசும்பொழுது உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்களே, அப்படிச் செய்யக் கூடாது, பேசக் கூடாது. மறுபடியும் எழுந்து பேச வேண்டும். உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது.

இரண்டு நாளைக்கு முன்பே பேசப்பட்டது கோட்டூர் நில விவகாரம் பற்றி. அதற்குப் பதில் அளித்தாகிவிட்டது. இப்பொழுது கோயில் உண்டியலை எப்படி முறைப்படுத்த வேண்டுமென்பதுபற்றி விவாதிக்கிறோம். இதைப்பற்றித்தான் பேச வேண்டும். கோட்டூரைப்பற்றி பேசக் கூடாது.



அம்மையார் அவர்கள் பேசினார்கள் என்றால், அம்மையார் அவர்கள் கோயிலைப் பற்றித்தான் பேசினார்கள். பிச்சைக்காரர்கள் தொல்லைகளை ஒழிப்பதற்காக உண்டியலை முறைப்படுத்தவேண்டுமென்று பேசினார்கள். நீங்கள் கோட்டூர் நிலத்தைப்பற்றி இணைத்துப் பேசியிருக்கிறீர்கள். மைலாப்பூரில் கோயில் நிலத்தில் ஏழைகள் குடிசைகள் போட்டிருந்ததால், அக்கோவிலின் அறங்காவலர்கள், தாங்களே குறைந்த விலைக்கு விற்க முன் வந்தார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் விளக்கியாகிவிட்டது. அந்த அறக்கட்டளை நிலத்தில், கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான மக்கள், ஏழைகள், குடிசைபோட்டு வாழ்கிறார்கள். அங்கிருந்து அவர்களை அப்புறப்படுத்துவதற்கு யாராலும் இயலாது. அரசாங்க புறம்போக்காக இருந்தாலும், தனிப்பட்டவர்களுடைய நிலமாக இருந்தாலும், இப்படி அவர்கள் ஆக்கிரமித்துவிட்டால், அவர்களை அப்புறப்படுத்துவது சாதாரணமான காரியம் அல்ல. மனிதாபிமான உணர்ச்சியோடு அப்பிரச்சினையை நோக்க வேண்டியிருக்கிறது. அந்த வகையிலே தான், இந்த இடத்திலே வீடு கட்டித் தருவோம் என்று குடிசை மாற்று வாரியம் சொன்னதன் பேரில், குறைந்த விலைக்கு அந்நிலத்தைத் தருவோம் என்று அறங்காவலர்கள் கூறினார்கள். இதற்குப் பிறகும், அதைப் போல் கோட்டூர் நிலம் என்று சொன்னால் அது அர்த்தமற்றது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மசோதாவைப்பற்றி பேசவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள், உங்களுக்கு எவ்வளவு தூரம் நான் சலுகை கொடுக்கிறேன் என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. உங்களை என்றைக்காவது பேசவேண்டாமென்று நான் சொல்லியிருக்கிறேனா? இந்தப் பிரச்சினையிலிருந்து இவ்வளவு தூரம் விலகிப் போகிறீர்கள் என்று சொன்னால், நீங்கள் வேறு பிரச்சினையைக் குறிப்பிட்டதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்கிறார். அமைச்சர் பதில் சொல்லியதற்குப் பிறகு நான் பதில் சொல்லவேண்டுமென்று கேட்கிறீர்கள். இப்பொழுது இந்த பில்லை பாஸ் பண்ணவேண்டும், அதற்குப் பிறகு இன்னொரு

யில்லை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இதைப் பற்றிப் பேசுங்கள். திரு. சுரேந்திரன் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார். என்ன, கேளுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** இங்கே பேசுகின்றபொழுது, முதலமைச்சர் அவர்கள், உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அம்மாதிரி ஒரு மெம்பர் இன்னொரு மெம்பருக்கு உத்தரவிடலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது உத்தரவல்ல. சபையினுடைய மரபை அவர் நினைவூட்டுகிறார். (திரு. எம். சுரேந்திரன் உட்கார்ந்து கொண்டே குறுக்கீடு). நீங்கள் உட்கார்ந்துகொண்டுதான் பேசுகிறீர்கள். நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேசுவது ஒன்றாக இருக்கிறது, ஆனால் கேட்பது வேறொன்றாக சமயத்திலே ஆகிவிடும். எனவே, நின்று பேசினால் பதிவேட்டிலே கூடப் பதிவு செய்யப்படும். உட்கார்ந்து கொண்டு பேசினால் நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பது தெளிவாகத் தெரியாது. பதிவேட்டிலே பதிவாகவில்லையென்ற காரணத்தினால் இஷ்டம்போல் பேச உங்களுக்கு வாய்ப்பிருக்கிறது. அது முறையல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள் திரும்பத் திரும்பப் பழைய பிரச்சினையையே பேசுகிறார். ஏற்கனவே அதைப்பற்றி பேசியிருக்கிறீர்கள். பேசியதைத் திரும்பத் திரும்பப் பேசுவது முறையல்ல. அது நேரத்தை வீணாக்குவதாகும். கோயில் உண்டியல் பணத்தைப் பாதுகாப்பதற்கு, அரசாங்கத்திற்கு அதிகாரம் தர இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மட்டும் பேசுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முதலமைச்சரவர்கள் சொல்லிய நேரத்திலே, கோயில் பகுதியிலே போடப்பட்டிருக்கிற குடிசைகளை அப்புறப்படுத்தக் கூடாது என்று சொன்னார்கள். நான் அப்புறப் படுத்தவேண்டுமென்று சொல்லவில்லை. அதே மாதிரியாக, அந்த இடத்திலே கூடச் சிலபேர் குடிசை போட்டுக்கொண்டு, அந்த மாதிரி குடிசைப் போட்டுவிட்டார்கள் என்று கோட்டிலேகூடப் பயன்படுத்தலாம் என்றுதான் நான் பதில் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் கூறுகிற பதில் புதிது, புதிது ; மாண்புமிகு



முதலமைச்சர் அவர்கள் புதிது புதிதாக, விந்தையாகப் பதில் சொல்கிறார் என்று சொல்லவில்லை. புதுக் கருத்தைச் சொல்கிறார்கள், புதுத் தகவலைச் சொல்கிறார்கள். பழைய விஷயமாக இருந்தாலும் அவர் புதிதாகக் கருத்துச் சொல்வதால், பதில் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த மாதிரி இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. பார்ட்டிக்குலரா, உங்கள்மேல், நீங்கள் குற்றம் செய்தீர்கள் என்று நான் சொல்லப் போவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள் என்று நினைக்கிறேன். உண்டியலைப் பற்றி பேசுவதானால் அனுமதிக்கப் போகிறேன். இல்லை யென்றால், நான் அனுமதிக்கப் போவதில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அவர்கள் பதில் சொல்கிறார்கள், நான் சொல்லக் கூடாதா ? . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் போட்டி போட்டுக்கொண்டிருந்தால் எப்படி ? டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு,

I am not going to allow this. The main Bill has been completely forgotten.

DR. H. V. HANDE : Because you are not allowing me, as a protest I am sitting down.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சபையினுடைய கரன்ட் புரசீடிங்ஸ் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே பேசுவதானால் . . .

DR. H. V. HANDE : You are not allowing me to give a reply; as a protest I am sitting down, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது நல்ல பார்லிமென்டரி பிராக்டிஸ் அல்ல. நீங்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தால், இன்றைக்கு பேரவையில் எடுத்துக் கொண்டிருக்கும் இந்த மசோதாவைப்பற்றி செய்திகள் வெளியே வராது. வேறு விவாதம் என்ற செய்தி வெளியே வருவது பேரவையினுடைய மரபுகளுக்கு நல்லதல்ல. மைலாப்பூர் தொகுதி உறுப்பினர் கூட, சம்பந்தப்பட்ட விஷயத்தைப்பற்றி, உண்டியலைப் பற்றித் தான் சொன்னார்கள். மூல மசோதாவை மறந்து வேறு

விஷயத்தைப்பற்றிப் பேசவில்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுகிற நேரத்திலே சொல்ல வேண்டியதைச் சொல்கிறீர்கள். அவர்கள் அதற்குப் பதில் கொடுக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மசோதாவை விட்டுவிட்டு, தொலைவிலே போய், வேறு விஷயத்தைப் பேசிய காரணத்தினாலேதான் பதில் அளிக்க வேண்டிய அவசியமே இருக்கிறது. உண்டியலைப் பற்றிப் பேசியிருந்தால், தகவல் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும், விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். பதில் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. டாக்டர் ஹாண்டே அவர்கள் இப்பொழுது கூடச் சொன்னார்கள், 'குடிசை போட்டுக் கொண்டிருந்தார்கள், அதை நான் எடுக்கச் சொல்லவில்லை (குறுக்கீடு)—உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்கள். தயவுசெய்து அப்படிச் செய்ய வேண்டாம்—இங்கு குடிசை போட்டதை எடுக்கச் சொல்லவில்லை. கோட்டூரிலேயும் ஏன் முதலிலேயே குடிசை போட்டுவிட்டு, குறைந்த விலைக்கு நிலத்தை கேட்கக் கூடாது' என்று அவர்கள் கேட்டார்கள். இதற்கு நாங்கள் பதில் அளிக்க வேண்டுமா, வேண்டாமா?

மைலாப்பூரில் பல ஆண்டுகாலமாக, ஏழை மக்கள் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். ஒருவராவது அவர்களிடத்திலே புதிதாகக் குடிசைகளைப் போடச் சொல்லி, குடிசைகளை அப்புறப் படுத்த முடியாமல் இருக்கிறது, ஆகவே, குறைநத விலைகு நிலத்தை கொடு என்று சொல்வதற்கும், அவர்களாக இந்த காரியத்திற்காக நிலத்தைக் குறைந்த விலைக்குத் தருகிறோம் என்று சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. குடிசைகளைப் பிரிக்க வேண்டாம், அதை நல்ல வீடுகளாகக் கட்டித் தருவதாக இருந்தால், குடிசை மாற்று வாரியத்திற்குக் குறைந்த விலைக்கு அந்நிலத்தைத் தருவதாகச் சொன்னார்கள். அவர்களே சம்மதித்துத்தான் நடந்திருக்கிறது. அங்கே அரசாங்கமே. குடிசைகளைப் போடச் சொல்ல முடியுமா? ஆகவே, குறைந்த விலைக்குக் கொடு என்று சொல்ல முடியுமா? இங்கு அவர்களாகச் சம்மதித்து, குடிசை மாற்று வாரியம் பெற்றிருக்கிறது. அங்கு. அரசாங்கமே எடுத்துக் கொண்டு விநியோகிக்கிறோம்.





**திருமதி. த. ந. அனந்தநாயகி:** கனம் முதலமைச்சர் அவர்கள் சிறந்த விளக்கம் தந்தார்கள். இருந்தாலும், அறங்காவலர்களானாலும், தனிப்பட்டு அவர்களே விலையை முடிவுசெய்து கொடுப்பதைக் காட்டிலும், அங்கேயும் நில ஆர்ஜித சட்டப்படி, நிர்ணயம் செய்யலாமே. செட்டியாருடைய அறக்கட்டளைக்கு பேசி விலையை நிர்ணயித்ததுதான் 'அப்யூஸ் ஆப் பவராக' இருக்கிறது. இந்தக் கோவில் உண்டியலைப் பொறுத்த வரை, அறங்காவலர்கள் மட்டும் கொடுத்த சொத்து அல்ல. பக்தர்கள் கொடுக்கிற சொத்து லாண்ட் அக்குவிசிஷன் ஆக்ட் படி, அதற்கும் நியாயமான விலையை நிர்ணயம் செய்திருக்கலாமே . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பக்தர்கள் ஆண்டவன் சாப்பிடுவதற்காக மாத்திரமல்ல, ஆண்டவனால் படைக்கப்பட்ட ஏழைகள் வாழ்வதற்காகவும் தான் போடுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கோட்டூர் பிரச்னையை இங்கே கொண்டு வந்தார்கள். கோட்டூர்புரத்திலே குடிசைகளை அகற்ற முயற்சிகள் நடைபெறுகின்றன, அவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே என்று கேட்டார்கள். கோட்டூர்புரத்திலே எந்தவித குடிசையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் முடித்துவிடுகிறேன். உண்டியல் பணத்தை பல இடங்களிலே ஹெச். ஆர். அன்ட் சி. இ. போர்டு சரியாகச் செலவு செய்யவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே வருவதற்கு முன்பாக நான் சில ஆதாரங்களைச் சொல்லியிருக்கிறேன். உண்டியல் பணம் சீரான வகையிலே, செம்மையான வகையிலே செலவு செய்யப்படும் என்ற வாக்குறுதியை அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே சொல்வார்கள் என்ற நம்பிக்கையோடு நான் முடித்துக் கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைப்பற்றியும் இதற்கு அனுகூலமாக இருக்கிற முறையிலேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. மு. கண்ணப்பன்] [1973 ஏப்ரல் 2

குறிப்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், சிறந்த நல்ல யோசனைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். பித்தளைப் பாத்திரங்கள், வெண்கலப் பாத்திரங்கள் இவைகள் எல்லாம் நன்கொடையாக வந்தால் அவற்றை முறைப் படுத்தி விற்று அதற்கான நிதியை கோயில் நிதியோடு சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அந்த முறையிலே நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே தேவஸ்வம் போர்டிலே உள்ள கோயில்கள் விவரங்களைப்பற்றிச் சொன்னார்கள், அந்த விவரங்கள்பற்றி என்னிடத்திலே தகவல் இல்லை. கோயிலுக்கு வருகின்ற எந்தப் பாத்திரமாக இருந்தாலும் கோயில் நிதியிலே—ஆண்டுதோறும் ஏலம் விடப்பட்டு—சேர்க்கப் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே அவர்கள் சொன்ன கோயில்களைப்பற்றி விசாரித்து பாத்திரங்கள் இருக்குமானால் அவற்றையும் நல்ல முறையிலே கோயில் காரியங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்டியல் பணம், அர்ச்சனைப் பணம் எல்லாவற்றையும் வங்கியிலே போட வேண்டுமென்ற கருத்தை உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உண்டியலை உடைக்கிற நேரத்திலே அறங்காவலர்கள், நிர்வாக அதிகாரிகள் இவர்களோடு மட்டுமல்ல வங்கியினுடைய பிரதிநிதி களும் அங்கேயிருந்து உண்டியல் பணத்தை எண்ணி—பெரிய கோயில்களைப் பொறுத்தவரையிலே—முடித்தவுடன் உடனடியாக பணத்தை வங்கியிலே போடுகின்ற முறைதான் இருந்து வருகின்றது. அந்த முறையே தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் பேசும்பொழுது பலவகையான உண்டியல்கள் இருக்கின்றன, அவற்றை யெல்லாம் முறைப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அவற்றை முறைப் படுத்துவதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். உண்டியல்களிலேயிருந்து களவு போகாமல் தடுப்ப



1973 ஏப்ரல் 2] [திரு. மு. கண்ணப்பன்]

தற்கும் வருகின்ற வருமானத்தை ஒழுங்காகச் செலவு செய்வ தற்கும், உண்டியல்களை ஒழுங்குபடுத்துவதற்கும்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். உண்டியல்களை உடைக்கும்பொழுது அறங்காவலர்கள் இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அறங்காவலர்களும் இருக்க வேண்டுமென்ற முறையிலே கருத்துத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்பொழுது தனியார் கோயிலுக்காக வசூல் செய்வதைத் தடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். எல்லோருமே நேர்மையாக வசூல் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. கோயில் என்ற பெயராலே தவறாகச் செய்வார்கள், ஆகவேதான் குறிப்பாக அறங்காவலர்கள் அல்லது மேல் அதிகாரிகள் இவர்களின் அனுமதி யோடுதான் வசூல் செய்ய வேண்டுமென்ற முறையை வைத்திருக் கிறோம். அந்த முறையே தொடர்ந்து இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துணிகள், புடவைகள் எல்லாவற்றையும் ஆண்டுக்கொரு முறை ஏலம் விடவேண்டுமென்று சொன்னார்கள். பக்தர்கள் ஆண்டவனுக்குப் போட வேண்டுமென்று காணிக்கையாகக் கொடுக்கின்றவைகளைத்தவிர மற்றவற்றை ஏலம் விட்டு கோயில் நிதியிலே அந்த நிதியைச் சேர்க்கிறோம். எதிர்காலத்திலேயும் அது தொடர்ந்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்டியலிலே போடப்பட்டிருக்கின்ற நகைகளை முறையாகக் கணக்குவைத்து அங்கே அங்கேயுள்ள மணியக்காரர்கள் மற்றவர்கள் எல்லாம் அந்த நகைகள் எவ்வளவு எடை உள்ள நகைகள், என்று எல்லாம் பார்த்து ஒரு பட்டியலை வைத்து முறைப்படி பட்டியலிலே பதிவு செய்துகொள்கிறார்கள்; அதைப் பற்றி மேலதிகாரிகளுக்கும் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை மேலும் நல்ல முறையிலே கண்காணிக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில்களுக்கு என்ன என்ன சொத்துக்கள் இருக்கின்றன என்பது தெரியவில்லை என்று சொன்னார்கள். ஒவ்வொரு கோயிலுக்கும் என்ன என்ன சொத்துக்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி சொத்து பராமரிப்பு ரிஜிஸ்டர் ஒன்று வைத்திருக்

கிறார்கள். அந்த ரிஜிஸ்டர் கொஞ்ச நாட்களுக்கு முன்னதாகத் தயாரிக்கப்பட்டிருந்தாலும் மீண்டும் அதைப் பரிசிலனை செய்து புதிதாகச் சொத்துக்கள் சேர்ந்திருந்தாலும் அல்லது குறைந்திருந்தாலும் அவைகளை யெல்லாம் முறையாக அந்த ரிஜிஸ்டரிலே கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில் நிதியிலிருந்து திருப்பணிகள் செய்ய வேண்டும், மதச் சார்புள்ள காரியங்களுக்கே கோயில் நிதியைப் பயன்படுத்த வேண்டுமென்று முதலிலே சொல்லிவிட்டு, பிறகு சொல்லும் பொழுது பிச்சைக்காரர் விடுதிகள் ஏராளமாகக் கட்ட வேண்டுமென்றும் சொன்னார்கள். இந்த இரண்டு கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு அதற்கு இடம் கொடுக்கின்ற முறையிலேதான் கோயில் திருப்பணிகளை முதலிலே நாம் செய்கிறோம், பிச்சைக்காரர்கள் அல்லது ஏழைகள் இவர்களுக்கான காரியங்களையும் செய்கிறோம். இரண்டு கருத்துக்களையும் மாண்புமிகு உறுப்பினர் வலியுறுத்திய காரணத்தினாலே தொடர்ந்து அந்த இரண்டு காரியங்களும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கோயில் வாசலிலே நின்று கொண்டு பிச்சை கேட்கிறார்களே அவர்களால் கோயிலுக்கு வருகிறவர்களுக்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன. கோயிலுக்கு வருகின்ற பிச்சைக்காரர்களுக்காகத் தனியாக விடுதி கட்ட வேண்டுமென்று சொன்னேன். அன்னிய நாட்டிலிருந்து எல்லாம் வருகிறார்கள், உள் நாட்டிலேயிருந்தும் ஏராளமானவர்கள் அன்றாடம் கோயிலுக்கு வருகிறார்கள், அவர்கள் எல்லாம் என்ன நினைப்பார்கள். அதற்காகத்தான் சொன்னேன், கோயிலோடு இணைந்த பிரச்னையானதாலே இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஏற்கனவே அத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே உள்ள மிகப் பெரிய கோயிலான பழனியில் படியிலே நின்று பிச்சையெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்காக பிச்சைக்காரர்கள் விடுதி ஏற்படுத்தி வேண்டிய வசதிகளையெல்லாம் செய்துகொடுத்திருக்கிறோம். ஆனால் என்ன வசதிகள்



செய்து கொடுத்தாலும் அவர்கள் அங்கே தங்குவதற்கு முன் வருவதில்லை, பிச்சையெடுப்பதிலேதான் நிம்மதி என்று நினைக்கிறார்கள். அவர்களையும் விடுதியிலே சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் விரைவிலே எடுப்பதற்கு வழிவகைகள் காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையாளர் நீண்ட தூரம் சுற்றுப்பயணம் செய்கிறார்கள், அதிகமாக டிராங்கால் செய்கிறார்கள், ஏராளமான ஜீப்புகளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். சென்ற ஆண்டிலே நாம் 700 கோயில்களுக்கான திருப்பணிப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருந்தோம். இந்த ஆண்டிலே 1,500 கோயில்களுக்கான திருப்பணிகளைச் செய்ய இருக்கிறோம். ஆகவே அவற்றை யெல்லாம் சுற்றிப்பார்த்து கடமைகளை ஆற்றுவது ஆணையாளர்களுடைய தலையாய கடமையாக இருக்கிறது. ஆகவே அதிகமாகச் சுற்றுப்பயணம் செய்து அங்கங்கே உள்ள நிலைமைகளைப் பார்த்து அதற்குப் பின்னலேதான் முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

ஜீப்புகளைப்பற்றிச் சொன்னார்கள்....

**Dr. H. V. HANDE:** On a point of order, Sir.

(The Hon. Minister did not yield)

Sir, I am on a point of order. First of all the Minister should not wave me like this. I have yielded when I was speaking. He thinks too much of himself (Interruption). You should not wave me like that (Interruption). நீ உட்கார்ந்து கொண்டு பேசலாமா இதுதான் Manners- ஆ? பல விஷயங்கள் சொல்லியிருக்கிறேன், புரிந்துகொண்டு பேசவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே....

(திரு. துரை முருகன், திரு. ஏ. சி. நரசிம்மன் எழுந்து நின்றார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே உட்காருங்கள், துரைமுருகன் உட்காருங்கள். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு இந்தப் பேரவையிலே நடந்துகொள்கிற முறையைப் பற்றி வற்புறுத்த வேண்டியிருக்கிறது. திரு. துரைமுருகன் அவர்கள் யாருடனும் தனியாகப் பேசவேண்டாம், நான் சொல்

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்] [1973 ஏப்ரல் 2

கிறேன். நேரடியாக ஒரு அமைச்சரைப் பார்த்து ஒரு உறுப்பினர் பேசவேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள் என்று சொன்னால், உட்கார் முடியாது என்றால் இந்தப் பேரவையை நடத்திக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) அமைச்சரைக் குறித்து ஓர் உறுப்பினர் பயன்படுத்திய சில சொற்றொடர்கள் குறித்து.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஒரு அமைச்சரைப் பார்த்து டாக்டர் ஹாண்டே அவர்கள், நீண்ட நாட்கள் அனுபவம் பெற்ற உறுப்பினர் அவர்கள், 'மேனர்ஸ் இல்லை' என்றும், 'நீ' என்றும் பேசுவது முறையல்ல. இவைகள் எல்லாம் பதிவேட்டில் இருக்கின்றன. இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I rise on a point of order. So far as discussions in the House are concerned, we are governed by Rule 63 of the Assembly Rules. It is specifically laid down that—

'A member present at a sitting of the House and not speaking—

(i) shall not read any newspaper except in connection with the business of the House,

(ii) shall maintain silence,

(iii) shall not interrupt a member, while speaking by disorderly expressions or in any other disorderly manner,

(iv) shall bow to the Chair when taking or leaving his seat,

(v) shall not pass between the Chair and any member who is speaking,

(vi) shall not stand or leave the House when the Speaker is addressing the House'

We have to see whether we are observing these rules. As a matter of fact we will have to consider that. I think the members of the Opposition are as much bound by these rules as the members of the ruling party and there is no exception to members of the ruling



1973 ஏப்ரல் 2]

party as well. The Hon. Deputy Speaker should restrict both the parties; if any member contravenes he may be pulled up by the Chair and there is no special privillege to the Ministers or any other member. All are equal so far as the House is concerned. I think the Rule is supreme and we will have to abide by the Rules whether we like or not. That is my submission.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தாங்கள் சட்டப்படி நடக்கவேண்டியதுதான். பிரச்சினைகளைப் பொறுத்து தீர்ப்பளியுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் பேசும் போது டாக்டர் ஹாண்டே அவர்கள் குறுக்கே சொல்வதற்கு முன் வந்தார்கள். அமைச்சரவர்கள் தான் கூறுவதை முடித்து விடுகிறேன், உட்காருங்கள் என்று சொல்கிற எண்ணத்தில் கையை ஆட்டியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் கூறுவதை முடித்து விடுகிறேன், உட்காருங்கள் என்ற எண்ணத்தில்தான் கையை ஆட்டியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர் 'ஆமாம்' என்று சொல்கிறார்கள். அதற்காக டாக்டர் ஹாண்டே அவர்கள் 'நீ' என்று சொல்வதும், அமைச்சருக்கு 'மேனர்ஸ் இல்லை' என்று சொல்வதும், 'ஹி திங்கஸ் டு மச் ஆஃப் ஹிம்செல்ஃப்' என்று சொல்வதும் முறைதானா, இதை இந்த அவையில் ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா?

இவைகள் இந்த அவையின் பதிவேட்டில் ஏறியிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் அமைச்சர்களைப் பார்த்து இப்படித் திட்டுவது, பிறகு சபை நடவடிக்கையிலிருந்து எடுத்து விடுங்கள் என்று சொல்வது, அமைச்சர்களை அவமானப்படுத்துவது போல இருக்கிறது. அமைச்சர்களுக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டுமென்று கேட்டு, நல்ல தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, சாதாரணமாக எந்த ஒரு உறுப்பினரும் பேசுகிற போது நடைமுறையைக் கையாள வேண்டும். விதி 31-ஐ திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சில சமயத்தில் இதற்குப் புறம்பாக வரலாம். 'நீ' என்று சொன்னால் உங்களைச் சொன்னதாக அர்த்தம். என்னென்றால் இதில் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எப்படி நீங்கள் சொல்ல முடியும்? இங்கே மசோதா வரலாம், டிமாண்டு வரலாம். . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மசோதாவின் பேரிலோ அல்லது மற்றவர்கள் பேசுகிறபோது அப்பேர்ப்பட்ட விஷயங்களைப் பேசலாம். உங்களுக்கு முழுக்க உரிமை இருக்கிறது. மசோதாவிற்கு உட்பட்ட விஷயங்கள் அல்ல, உட்படாத விஷயங்களைப் பற்றி ஒரு உறுப்பினர் பேசிவிட்டால், பேசி விட்டாரே என்று அமைச்சர் எழுந்து அதற்குப் பதில் சொல்ல இப்படி பதிலுக்குப் பதில் என்ற முறை வருகிறது. இந்த மசோதாவிற்கு உட்பட்ட முறையிலே இந்த மசோதா சம்பந்தப்பட்ட விஷயங்களை அந்த சம்பந்தப் பட்ட அமைச்சரே எடுத்துச் சொல்வது உதவிகரமாக இருக்கும். பிரச்னை ஒன்றை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் திரு. தங்கமணி சொன்ன அந்த வாதத்தை ஓரளவிற்கு ஏற்றுக் கொள்கிறேன். மசோதாவைப் பற்றி மாத்திரம் பேசிக் கொண்டிருந்தால் அந்த மசோதாவிற்குத் தொடர்புடைய அமைச்சர் எழுந்து அதற்கான விளக்கங்களையும், பதிலையும் சொல்ல முடியும். மசோதாவை விட்டு திடீரென்று வீட்டு வசதி வாரியம் பற்றி பேசும்போது, அந்த விஷயத்தைப்பற்றி சம்பந்தப்பட்ட அந்த அமைச்சருக்குத் தெரியாமல் இருக்கலாம். சம்பந்தப்பட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பனுக்கு அந்த விஷயம் தெரியாமல் இருக்கலாம். அப்போது மாண்புமிகு திரு. இராசாராம் எழுந்து விளக்கம் அளிக்க வேண்டியிருக்கிறது. திரு. தங்கமணி அவர்கள் சொல்கிறபடி பார்த்தால் உறுப்பினர் பேசி முடித்து விடுவாரானால் அந்த மசோதாவைப் பற்றி மாத்திரம் சம்பந்தப் பட்ட அமைச்சர் அந்த மசோதாவிற்குப் பதில் சொல்வார். அந்த மசோதாவிற்குப் புறம்பாக எடுத்துச் சொல்லப்பட்டதற்குப் பதில் விளக்கமே கிடைக்காமல் போகக் கூடும் என்றுதான் ஆகிறது. அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் எழுந்து அதன் தொடர்பாக பேசவேண்டியிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்ற விதி முறையில் 65-வது விதிப்படி.





"When, for the purpose of elucidating a point during discussion, any member has occasion to ask a question of another member who is speaking, he may ask the question with the permission of the Speaker.'

என்றுதான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில், அவர் சொல்வதற்கு முன்னாலேயே, பதில் சொல்லி முடிப்பதற்கு முன்னாலேயே டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்தார்கள். பாயிண்டு ஆஃப் கிளாரிபிகேஷன் என்ற முறையில் எழுந்தார்கள். அமைச்சரவர்கள் முடித்து விடுகிறேன் என்ற முறையில் கையாட்டினார்கள். அவர் எழுந்தபோது உங்களுடைய அனுமதியைப் பெறவில்லை, நம்முடைய 65-வது விதி முறைப்படி அனுமதி பெறவில்லை. அனுமதி பெறாமலேயே எழுந்து இழிவு படுத்தக்கூடிய முறையில் பேசியது, முறைப்படி சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, அமைச்சரவர்களைப் பொறுத்த வரையில் எனக்கு அவரை இழிவு படுத்தவேண்டுமென்ற விருப்பம் கிடையாது. அவர் பேரில் எனக்கு நல்ல மதிப்பு உண்டு. நடந்தது என்னவென்றால், அவர் பேசிக் கொண்டிருந்தார்கள். இடையிலே ஒரு விளக்கத்திற்காக நான் எழுந்தேன். சாதாரணமாக முதலமைச்சர் அவர்கள் கூட நான் இப்படி எழுந்திருக்கிற நேரங்களில், பிறகு எழுந்து சொல்லுங்கள் என்று சொல்வார்கள். அமைச்சரவர்கள் கையாட்டியதை நான் தவறாக எடுத்துக் கொண்டிருக்கலாம். ஏதோ வேகம் வந்தது கையாட்டியதைப் பார்த்து, " ஐ ஃபெல்ட் ஐ வாஸ் இன்சல்ட்" உண்மையாக சொல்ல விரும்பியது, என் பேச்சிலே சில குறைகளைச் சொல்லியிருக்கிறேன். அமைச்சரவர்கள் பதில் கொடுக்கவில்லையென்றாலும், கவனிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, in the hope that he will take necessary action on the points, I have raised. இந்த விஷயமாக பதில் கொடுப்பதற்கு நேரம் இருந்தால் கூட நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னால் போதும் என்று சொல்வதற்கு எழுந்தேன். ஆனால் அவர் கையாட்டினார். அவர் ஆட்டியதுதான் எனக்கு கோபம் வந்தது. நான் மேனர்ஸ் இல்லை என்று சொன்னது உண்மை I regret, personally இன்ஸல்ட் பண்ணவேண்டுமென்ற எண்ணம்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஏப்ரல் 2

இடையவே கிடையாது. கையாட்டினார். வேகமாக ஆட்டியதால் எனக்குக் கோபம் வந்தது.

I lost my temper.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கொஞ்சம் ஆத்திரமாக ஆரம்பமான விவாதம், திரு. ஹாண்டே அவர்களால் ஒரு அமைதியான சூழ்நிலைக்குக் கொண்டு வரப்பட்டதற்காக நான் பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட பெருந்தன்மையும், பரந்த மனப்பான்மையும் நிச்சயமாக வளரவேண்டுமென்று விரும்புகிறோம். ஒன்றை மாத்திரம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த நேரத்தில் கூட சுப்பிரமணியம் அவர்கள் பேசுவார்கள், திடீரென்று அண்ணா அவர்கள் எழுவார்கள். திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே கையைக் காட்டுவார்கள். அப்படியே அண்ணா அவர்கள் உட்கார்ந்து விடுவார்கள். சில நேரங்களில் மாறி மாறி இரண்டு பேரும் பேசிக் கொண்டிருக்கும்போது சபாநாயகர் திருஷ்ணாராவ் அவர்கள் 'நீங்களே பேசிக் கொண்டிருந்தால் எப்படி' என்று சொன்னவுடன் அண்ணா அவர்கள் உட்கார்ந்து விடுவார்கள். இன்றைக்கு யாராவது ஒருவர் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இன்னொருவர் எழுந்து ஏதோ சொல்ல விரும்புவதைக் கவனிக்கின்ற நேரத்தில் கையைக் காட்டினால் உட்கார்ந்து விடுவது உண்டு. பேசிக் கொண்டிருக்கும் போது நடுவில் எழுந்தால் அந்த வாக்கியத்தை முடிக்க முடியாத நிலையில் 'கொஞ்சம் பொறுங்கள்' என்று சொல்லுவதும் சகஜமாக இருக்கிறது. 'முடித்து விடுகிறேன்' என்று நான்கூடச் சொல்லுவது உண்டு. திரு. கண்ணப்பன் அவர்கள் 'முடித்து விடுகிறேன்' என்று இடையில் வார்த்தைகளைப் போட்டால் இடையில் அந்த வாக்கியம் முறிந்துவிடும் என்ற காரணத்தால் கையைக் காட்டியிருக்கலாம். திரு. ஹாண்டே அவர்கள் வருத்தம் தெரிவித்ததற்காக மகிழ்ச்சி. இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு எல்லோரும் உண்டியலுக்குப் போகலாம்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1973)—தொடர்ச்சி.



1973 ஏப்ரல் 2] [திரு. மு. கண்ணப்பன்]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இந்த மசோதாவைப் பற்றிச் சிறந்த கருத்துக்களை, பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக, இதில் வருகின்ற வருமானத்தைச் சரியானபடி செலவழிக்க வேண்டுமென்பதைக் கண்காணிக்கும் வகையிலேதான் அதிகமான ஜீப்புகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

நிர்வாகத்தைத் திறமையாகச் செய்யும் முறையில்தான் அதிகமான தொலைபேசிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்தத் துறையின் கீழ் முன்பு 9000 கோயில்கள் இருந்த நேரத்தில் இவை எல்லாம் குறவாக இருந்திருக்கலாம். இன்று 13,000 நிறுவனங்கள் இந்த துறையின்கீழ் வந்திருக்கின்றன. எதிர் காலத்திலே 40,000 நிறுவனங்களுக்கு மேல் கொண்டுவர வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

புதிதாக அதிகாரிகளைப் போட்டதன் காரணமாக 1 லட்சத்து 98 ஆயிரம் ஏக்கர்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிர்வாகத்தை அன்றாடம் நல்ல முறையில் கண்காணித்து நிர்வகிக்க ஆணையர் கீழே பணியாற்றுகின்றவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்வதும், அதிகமான வாகனங்களைப் பயன் படுத்துவதும் எந்த விதத்திலும் குறைபாடாக இருக்க முடியாது. அப்படித் தவறான முறையில் உபயோகப்படுத்துகிற நிலைமை இருக்குமானால் இந்த அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் என்று கூறி இந்த நல்ல மசோதாவை ஆதரித்ததற்காக எல்லோருக்கும் நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM: I mentioned that hundi collections are not banked. I am not referring to big temples, but only small temples. In big temples bank representatives are there when Hundi collection is counted.

Similarly in big temples public are also associated. I can give you one example. In a street temple in Mambalam where the collection is about Rs. 1,000/- per month, it is not kept in the bank. I am only referring to such temples.

I have no quarrel with the Hindu Religious and Charitable Endowments Department at all because with my littel experience of the present working of the department, it is one of the best administered departments. I can certify that without involving in that because I have nothing to gain by it. It is one of the good

departments and particularly the Commissioner does not even take coconuts from temples. When he visited one of the temples of which I am a trustee, he refused to take even coconuts. He is such a good Commissioner. My point is, wherever small temples are there. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** புது ஸ்பீச் கொடுக்க வேண்டாம். கிளாரிபிகேஷன் மட்டும் கேளுங்கள்.

THIRU K. M. SUBRAMANIAM: My only point is that. I am not making a speech. When hundies are opened in small temples public are not associated. These temples must definitely put the money into the bank then and there and only draw from bank for their expenses. That is my point.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற குறையும் இந்த மசோதாவினால் நீக்கப்படும் என்று கருதுகிறேன். ஏனென்றால் அந்தக் கோயில்களின் நிர்வாகிகள் அவர்களே உண்டியலைத் தயாரித்து வைத்திருக்கிறார்கள். பூட்டுப் போடுவதாக இருந்தாலும் அவர்களே போட்டுக் கொள்கிறார்கள். இந்த மசோதாவின் மூலம் அங்கு வைக்கப்படுகின்ற உண்டியல் எப்படி இருக்க வேண்டும், யாரிடத்தில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் விதி முறைகளை வகுக்கும் நேரத்தில் நிர்ணயிக்கப்படும். ஆகவே, இந்தக் குறைபாடுகளை நீக்குகின்ற வகையில் எதிர்காலத்திலே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1973-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இந்தச் சட்ட முன்வடிவை சட்டமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (4). அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு: (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73)ஐ ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (5) அரசின் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு.

MR. DEPUTY SPEAKER: The motion in regard to this Bill is for reference to a Joint Select Committee. However, in view of the request of many of the Leaders of the Opposition parties, the Hon. Minister will now move a substitute motion for taking the Bill into consideration.

**திரு. எம். ஏ. லத்தீப்:** பொதுவாக, இதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று இன்றைக்குக்கூட அறிவிப்புத் தரப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் எல்லாம் இன்று அவைக்கு வரும்போது இது கூட்டாய்வுக் குழுவுக்கு விடப்படும் என்ற எண்ணத்தோடுதான் வந்தோம். அலுவல் ஆய்வுக் குழுவிலே இப்போது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அலுவல் ஆய்வுக்குழு இந்த முடிவை எடுக்க எப்படி உரிமை படைத்தது என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிசினஸ் அட்வைசரி கமிட்டி தானே அப்படி ஒரு முடிவை எடுக்கவில்லை.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்] [1973 ஏப்ரல் 2

It is not a decision of the Business Advisory Committee. It was the consolidated opinion of the Opposition Leaders that the Bill be taken into consideration.

**திரு. எம். ஏ. லத்தீப் :** முடிவு எடுப்பதற்கான கருத்து ஆராயப்பட்டிருந்தாலும் இந்தக் குறிப்பிட்ட பொருளைப் பற்றி ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டியதில்லை என்று கருத்து அறிவித்திருந்தாலும் இன்றைக்கு கொடுத்த அறிவிப்பிலும் கூட்டாய்வுக் குழுவுக்குப் போகிறது என்று தந்த பிறகு அதை மாற்றுவது முறையாக இருக்கும் என்று கருத முடியாது. எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் இவ்வாறு எடுத்துவிடுவது சரியா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் இதை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டாம், பேரவையிலேயே விவாதித்து விடலாம் என்று தீர்மானம் போடவில்லை. திரு. தங்கமணி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள். மற்றவர்களும் ஒப்புக் கொண்டார்கள். உங்களுடைய கட்சித் தலைவரும் ஒப்புக் கொண்டார்கள்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** நான் அன்றைக்கு கமிட்டியில் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய திரு. லத்தீப் அவர்கள் எழுப்பிய பிரச்சினை நியாயமான ஒழுங்குப் பிரச்சினை என்றே கருதுகிறேன். காஷுவலாகப் பேசப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அதையே ஆதாரமாகக் கொண்டு பேசக்கூடாது, அப்பேர்ப்பட்ட முடிவுக்கு வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்பாக அரசாங்கத்தின் சார்பாக அமெண்ட்மெண்ட் இருக்கிறது. வாபஸ் வாங்குவதாகச் சொல்லி இருக்கிறார்கள். வாபஸ் வாங்கிய பிறகு ஒன்றும் செய்ய முடியாது. பொதுவாகப் பேசி இறுதியில் அந்த முடிவை எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் மசோதாவை 'மூவ்' பண்ணட்டும். நீங்கள் அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறீர்கள். உங்கள் தரப்பிலிருந்து ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்குப் போக வேண்டுமென்று சொல்லுங்கள்.

It is left to you to convince the Government.



1973 ஏப்ரல் 2]

THIRU R. PONNAPPA NADAR : I may also be heard.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் சொன்னது மாதிரி அமைச்சர் பில்லை மூவ் பண்ணட்டும். திருத்தத்தை மூவ் பண்ண வேண்டாம். அதைப்பற்றிப் பேசுவோம். இறுதியில் திருத்தத்தைப் பற்றி முடிவு செய்யட்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : The Bill has already been moved. Now the question is whether it has to be taken up for consideration by the House or whether it should be referred to a Joint Select Committee.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I would like to make one submission. I was one of the Members of the Business Advisory Committee who participated in the meeting of the Committee. It was suggested and unanimously accepted that the Bill should be discussed on the floor of the House. I never wanted any special favour. I am also not for any special favour. It was decided at the meeting that the Bill be discussed on the floor of the House, because there are certain inherent difficulties in the Bill, which, we, the Members will be able to point out.

In the light of the discussions and suggestions that would be made in the House, the Hon. Minister may move his amendments, if he is convinced. I am pointing out all these things because, the hon. Member Thiru Latheef came to me and asked : "who are you to decide at the Business Advisory Committee?" That is the tone in which he asked me.

As a Leader of the Party, when all the Leaders of the Parties have agreed, I simply kept quiet. I do not want to take away the valuable time of the House. I was not for discussion or against discussion taking place. I am also not against the matter being referred to a Joint Select Committee. I am making this point clear through the Chair.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பிசினஸ் அட்வைசரிக் கமிட்டிக் கூட்டத்தில் நமக்குக் கொடுத்த ஆலோசனை என்னவென்றால் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று. பிறகு, இது முக்கியமான மசோதாவாக இருப்பதனால் இப்போதே அந்த நிறை

[1973 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரவர்களுக்கு உபயோகமாகத்தான் சொல்கிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள், சுதந்திரா கட்சித் தலைவர் அமைச்சரவர்களைப் பார்த்துச் சொல்லியதை, கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் ஆதரித்துப் பேசுவது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

(திரு. நா. வீராசாமி எழுந்து நின்றார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் திரு. வீராசாமி அவர்கள் உட்கார வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் எழுந்து, பேசுவதற்கு முடியாது. உட்காரவேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இம்மாதிரியாக சில சமயங்களில் விவாதத்திலே கொஞ்சம் கடுமையான சில விஷயங்கள் வரலாம். அப்படி வருகிறபோது இந்த விதி கொஞ்சம் புறக்கணிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். இதை சாதாரணமாக அனுமதித்துக் கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் பொதுவாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அனுமதித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லாதீர்கள். நான் சகித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, விவாதம் நடக்கிறபோது அந்த மசோதா சம்பந்தப்பட்ட அமைச்சர் எழுந்து பதில் சொல்வது உதவிகரமாக இருக்கும். அப்படி இல்லாமல், அமைச்சர்களுக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்ற காரணத்தை வைத்துக்கொண்டு ....

(திரு. ஏ. சி. நரசிம்மன் எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பாயிண்டு ஆஃப் ஆர்டர் எழுப்பக் கூடாது. உட்காருங்கள். பேரவையினுடைய விதி முறையை அனுசரித்து நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.



1973 ஏப்ரல் 2]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** முடிந்த அளவிற்கு நன்றாக விஷயங்களை எல்லாம் கேட்டுக்கொண்டுதான் வருகிறேன். தெரியாமல் பேசுகிறேன் என்று ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பார்த்து சொல்கிறார். நான் தெரியாமல் பேசவில்லை. நான் இந்த விவாதம் பூராவையும் இங்கே உட்கார்ந்து வேண்டுமானால் கேட்காமல் இருந்திருக்கலாம். ஆனால் வெளியே கேட்டுக் கொண்டுதான் இருந்திருக்கிறேன். நான் இந்த இடத்தில் இல்லை என்ற காரணத்தினாலேயே நான் தெரியாமல் வந்து பேசுகிறேன் என்று சொன்னால் என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஒரு விஷயத்தைச் சொல்கிறபோது (குறுக்கீடு) நான் ஒன்றும் தெரியாமல் வந்து பேசுகிறேன் என்று சொல்கிறார். நான் தாழ்மையாக கேட்டுக்கொள்வது என்னவென்றால் ...

(திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்போது இந்தப் பேரவையில் உரக்கப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் சத்தம் மிகத் தெளிவாகக் கேட்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, பாயிண்டு ஆஃப் ஆர்டர் கிளப்பி பேசப்படும்போது உறுப்பினர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேசலாமா என்று கேட்கிறேன். அப்படியானால் நாமும் பேசலாமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையிலே கொஞ்சம் உயரமான இடத்தில் உட்கார்ந்திருக்கிறேன். நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். கண்ட்ரோல் பண்ணிக் கொண்டிருக்கிறேன்.

(திரு. நா. வீராசாமி எழுந்தார்.)

நான் நிற்கும்போது இன்னொரு உறுப்பினர் நிற்கக் கூடாது. இது பால பாடம் அல்ல. ஒரு உறுப்பினர் பாயிண்டு ஆஃப் ஆர்டர் கிளப்பிப் பேசும்போது இன்னொரு உறுப்பினர் பாயிண்டு ஆஃப் ஆர்டர் கேட்கக் கூடாது. அவர் முடிப்பதற்கு முன்னால் கேட்கக்கூடாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஒரு மசோதாவின் பேரில் விவாதம் நடக்கிறபோது கூடிய வரையில் அதன் சம்பந்தப்பட்ட அமைச்சர் தலையிட்டு அதற்குப் பதில் சொல்வது நல்லது.

வேற்றி விடலாமே என்ற கருத்தை நான்தான் தெரிவித்தேன். மற்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டது போல் இன்று இந்த மசோதாவை பரிபூர்ணமாக விவாதித்து—நாங்கள்கூட சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். சிலவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரித்துவிடலாம். ஆகவே, அந்த முறையில் இன்று இதன் மீதான விவாதத்தை நடத்துவது நல்லது.

நாடாளுமன்றத்தில் ஒரு விதியிருக்கிறது. பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவை தாங்கள் அறிவிக்கிறீர்கள். சபை அதை ஏற்றுக்கொள்வதாகத்தான் கருதிக் கொள்கிறோம். ஆனால் இந்த சட்டசபைக்கு அதை மாற்றுவதற்கு எப்போதுமே அதிகாரம் இருக்கிறது. ஆகவே இப்போதே இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்போதுள்ள பிரச்னை இதை பொறுக்குக் குழுவிற்கு விடுவதா இல்லையா என்பது. பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். விட்டாலும் ஆட்சேபனை இல்லை என்று பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** தயவுசெய்து இதை பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்ற அவசியம் இல்லை என்பது என் கருத்து. பூராவும் விவாதித்து இன்றைக்கு முடிவு செய்வது என்ற கருத்தின்பேரில் திருத்தங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறோம். வேண்டுமானால் இப்போதே கூட அவர்கள் திருத்தங்கள் கொடுத்து விவாதிக்கலாம். ஆகவே இதை இன்றைய தினமே விவாதித்து நிறைவேற்ற வேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: டிவிஷன் செய்வோம்.

MR. DEPUTY SPEAKER: It is left to the Government to move a Bill. The manner in which a Bill should be moved is left to the discretion of the Government. The Hon. Minister may request the House to decide whether it should be discussed in the



House or whether it should be referred to a Joint Select Committee. That right is with the Hon. Minister. Let the Hon. Minister move the motion first.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Technically I would like to say that it has already been moved. I only request the House to take up the Bill for consideration. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவை* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1973) ஆய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1955-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தில் கூறியுள்ளபடி குத்தகை பாக்கி, நிலத்தைப் பயிரிடத் தவறியது போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காக அன்றி மற்றப்படி, பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு இச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இதன் பின்னர், குத்தகை உரிமைப் பதிவேடுகளைத் தயாரிப்பதற்கும், பேணி வருவதற்குமாக தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணங்கள் சட்டம் இயற்றப்பட்டது. மாநிலம் முழுவதும் இச் சட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. 1973, பிப்ரவரி, 26-ம் நாளன்று வரவு-செலவுத் திட்ட உரையின் வாயிலாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு வேளாண்மைச் சீர்திருத்தத்தில் மற்றொரு நடவடிக்கையாக, பயிரிடும் குத்தகைதாரர்கள் தாங்கள் குத்தகைக்குப் பயிரிடும் நிலங்களை நில உடைமையாளர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளும் உரிமையை அவர்களுக்கு அளிக்கச் சட்டம் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது.

பயிரிடும் குத்தகைகாரர் ஒருவர் தாம் பயிரிடும் நில உடைமையில் அடங்கியுள்ள நிலம் சம்பந்தமாக நிலச் சொந்தக்காரருக்குள்ள உரிமை, பாத்தியதை, பற்று ஆகியவற்றை, நில உடைமையாளர், என்ற வகையிலும் பயிரிடும் குத்தகைதாரர் என்ற முறையிலும் தாம் வைத்திருக்கும் நிலத்தில் மொத்த பரப்பு 5

* 29-3-1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேற்பட்டிருக்கக் கூடாது என்றும் நிபந்தனைக்குட்பட்டு, நில உடைமையாளரிடமிருந்து வாங்கிக் கொள்ளும் உரிமையை பயிரிடும் குத்தகைதாரருக்கு அளிக்க இச் சட்ட வரைவில் வகை செய்யப்பட்டுள்ளது. நில உரிமையாளரிடமிருந்து உரிமை, பாத்தியதை, பற்று ஆகியவற்றை வாங்கிக்கொள்வதற்காக, பயிரிடும் குத்தகைதாரர் செலுத்தத்தக்க விலை விவரம் பின்வருமாறு :—

(அ) ஒப்பந்தம் மூலம் விலை நிச்சயிக்கப்பட முடிந்தால், அத்தகைய ஒப்பந்தத்தின்படி செலுத்தப்படும் தொகை;

(ஆ) அத்தகைய ஒப்பந்தம் எதுவும் ஏற்பட முடியாவிட்டால், வாங்கப்படும் நிலம் அல்லது அதன் பகுதிக்காகச் செலுத்தப்பட்ட நியாய வாரத்தினைப்போல் 12 மடங்காக ஏற்படும் மொத்தத் தொகையுடன், நில உடைமையாளருக்குச் சொந்தமாக அதிலுள்ள கட்டுக்கோப்புகள், கிணறுகள், விசையேற்றங்கள் ஆகியவற்றின் மதிப்பில் பாதித் தொகையும் சேர்த்து பயிரிடும் குத்தகைதாரர் செலுத்த வேண்டும்.

பயிரிடும் குத்தகைதாரர் நிலத்தின் விலை முழுவதையும் ஒரு மொத்தமாகச் செலுத்த இயலாதாகையால், வாங்கும் விலை ரூ. 500 ஆகவும் அதற்கு மேற்பட்டுமிருந்தால், வாங்கும் விலையை 12 சம ஆண்டுத் தவணைகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் செலுத்த இச்சட்டவரைவில் வகை செய்யப்பட்டுள்ளது. வாங்கும் விலை முழுவதையும் ஒருமொத்தமாக ஒரே தடவையில் செலுத்துவதானால் மொத்த விலையில் முக்கால் பங்கை மட்டுமே அவர் செலுத்தினால் போதும் என்றும் பயிரிடும் குத்தகைதாரருக்கு விருப்ப உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

சிறு நில உடைமையாளர்களுக்கு இடர் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக, தமிழ்நாடு 1955-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டம் அல்லது 1961-ம் ஆண்டு இந்திய வருமான வரிச் சட்டம் (மத்தியச் சட்டம் 43/1961) ஆகியவற்றின் கீழ் வரி செலுத்துவதற்குட்படாத நில உடைமையாளர் எவரும் தாம் குத்தகைக்கு விட்ட நிலபரப்பில் பாதி அளவுக்கு மேற்படாத நிலத்தைச் சொந்தமாகப் பயிரிட குத்தகைதாரர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் இச்சட்ட வரைவில்





வகைசெய்யப்பட்டுள்ளது. ஆனால், அத்தகைய நில உடைமையாளர் சொந்தமாகவும் பயிரிடும் குத்தகைக்தாரர் என்ற வகையிலும் மொத்தம் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்துக்கு மேற்பட்டு வைத்திருக்கக் கூடாது. நில உடைமையாளர் நிலத்தைத் திரும்பப் பெறும் அவரது உரிமையை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்.

இச்சட்டம் வேளாண்மைச் சீர்திருத்தம் தொடர்பான ஒரு முக்கிய சட்டமாகயிருப்பதால் விரிவான பரிசீலனைக்காக எடுத்து செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இச்சட்ட வரைவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக புள்ளிவிவரங்களை கொஞ்சம் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் குத்தகைதாரர்கள் பதிவேடு சட்டம் இயற்றி எங்கெங்கு குத்தகைதாரர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அதிகாரிகளை அனுப்பி ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று குத்தகைதாரர்கள் யார் யார் என்று பதிவேடுச் சட்டத்தின்படி பதிவு செய்யச் சொன்னோம். மாவட்டந்தோறும் சென்று பதிவு செய்து முடித்திருக்கிறார்கள். முடிந்திருக்கிற இந்தப் பதிவேடு முடிவான பதிவேடு அல்ல. இதில் சில தவறுகள் இருக்கக்கூடும். பினாமி என்று சொல்லக் கூடியவர்களும் பதிவு செய்யாமல் இருக்கக்கூடும். இல்லை என்று சொல்லவில்லை.

ஆங்காங்கு சில தவறுகள் ஏற்பட்டிருக்கக்கூடும். தவறு ஏதாவது நடந்திருந்தால் திருத்திக்கொள்ள ஏற்கனவே உள்ள சட்டத்திலேயே வகை செய்திருக்கிறோம். குத்தகைதாரர்கள் குத்தகைக்கு ஓட்டிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லி இப்போது மனு கொடுத்தால் கூட நிலச் சொந்தக்காரர்கள் ஒத்துக் கொள்ளவேண்டும் என்பதல்ல, பக்கத்தில் குத்தகைக்கு ஓட்டிக் கொண்டிருக்கிறவன் சாட்சியம் சொன்னால் போதும், குத்தகைதாரர் என்று பதிவு செய்து கொள்ளலாம் என்று சுலபமான முறையில் சட்டத்தில் வழிவகை செய்திருக்கிறோம். மொத்தம் தமிழ்நாட்டில் எவ்வளவு குத்தகைதாரர்கள் பதிவாகியிருக்கிறார்கள் இன்றுள்ள சட்டப்படி என்பதற்கு புள்ளிவிவரம் தருகிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் பதிவாகியிருக்கிற குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 3,86,520 ஆகும். இதுகூட முழுமையான புள்ளி

ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேற்பட்டிருக்கக் கூடாது என்றும் நிபந்தனைக்குட்பட்டு, நில உடைமையாளரிடமிருந்து வாங்கிக் கொள்ளும் உரிமையை பயிரிடும் குத்தகைதாரருக்கு அளிக்க இச் சட்ட வரைவில் வகை செய்யப்பட்டுள்ளது. நில உரிமையாளரிடமிருந்து உரிமை, பாத்தியதை, பற்று ஆகியவற்றை வாங்கிக்கொள்வதற்காக, பயிரிடும் குத்தகைதாரர் செலுத்தத்தக்க விலை விவரம் பின்வருமாறு :—

(அ) ஒப்பந்தம் மூலம் விலை நிச்சயிக்கப்பட முடிந்தால், அத்தகைய ஒப்பந்தத்தின்படி செலுத்தப்படும் தொகை;

(ஆ) அத்தகைய ஒப்பந்தம் எதுவும் ஏற்பட முடியாவிட்டால், வாங்கப்படும் நிலம் அல்லது அதன் பகுதிக்காகச் செலுத்தப்பட்ட நியாய வாரத்தினைப்போல் 12 மடங்காக ஏற்படும் மொத்தத் தொகையுடன், நில உடைமையாளருக்குச் சொந்தமாக அதிலுள்ள கட்டுக்கோப்புகள், கிணறுகள், விசையேற்றங்கள் ஆகியவற்றின் மதிப்பில் பாதித் தொகையும் சேர்த்து பயிரிடும் குத்தகைதாரர் செலுத்த வேண்டும்.

பயிரிடும் குத்தகைதாரர் நிலத்தின் விலை முழுவதையும் ஒரு மொத்தமாகச் செலுத்த இயலாதாகையால், வாங்கும் விலை ரூ. 500 ஆகவும் அதற்கு மேற்பட்டுமிருந்தால், வாங்கும் விலையை 12 சம ஆண்டுத் தவணைகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் செலுத்த இச்சட்டவரைவில் வகை செய்யப்பட்டுள்ளது. வாங்கும் விலை முழுவதையும் ஒருமொத்தமாக ஒரே தடவையில் செலுத்துவதானால் மொத்த விலையில் முக்கால் பங்கை மட்டுமே அவர் செலுத்தினால் போதும் என்றும் பயிரிடும் குத்தகைதாரருக்கு விருப்ப உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

சிறு நில உடைமையாளர்களுக்கு இடர் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக, தமிழ்நாடு 1955-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டம் அல்லது 1961-ம் ஆண்டு இந்திய வருமான வரிச் சட்டம் (மத்தியச் சட்டம் 43/1961) ஆகியவற்றின் கீழ் வரி செலுத்துவதற்குட்படாத நில உடைமையாளர் எவரும் தாம் குத்தகைக்கு விட்ட நிலபரப்பில் பாதி அளவுக்கு மேற்படாத நிலத்தைச் சொந்தமாகப் பயிரிட குத்தகைதாரர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் இச்சட்ட வரைவில்



வகைசெய்யப்பட்டுள்ளது. ஆனால், அத்தகைய நில உடைமையாளர் சொந்தமாகவும் பயிரிடும் குத்தகைக்தாரர் என்ற வகையிலும் மொத்தம் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்துக்கு மேற்பட்டு வைத்திருக்கக் கூடாது. நில உடைமையாளர் நிலத்தைத் திரும்பப் பெறும் அவரது உரிமையை ஒருமுறை மட்டுமே பயன் படுத்தலாம்.

இச்சட்டம் வேளாண்மைச் சீர்திருத்தம் தொடர்பான ஒரு முக்கிய சட்டமாகயிருப்பதால் விரிவான பரிசீலனைக்காக எடுத்து செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இச்சட்ட வரைவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக புள்ளிவிவரங்களை கொஞ்சம் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் குத்தகைதாரர்கள் பதிவேடு சட்டம் இயற்றி எங்கெங்கு குத்தகைதாரர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அதிகாரிகளை அனுப்பி ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று குத்தகைதாரர்கள் யார் யார் என்று பதிவேடுச் சட்டத்தின்படி பதிவு செய்யச் சொன்னோம். மாவட்டந்தோறும் சென்று பதிவு செய்து முடித்திருக்கிறார்கள். முடிந்திருக்கிற இந்தப் பதிவேடு முடிவான பதிவேடு அல்ல. இதில் சில தவறுகள் இருக்கக்கூடும். பினாமி என்று சொல்லக் கூடியவர்களும் பதிவு செய்யாமல் இருக்கக்கூடும். இல்லை என்று சொல்லவில்லை.

ஆங்காங்கு சில தவறுகள் ஏற்பட்டிருக்கக்கூடும். தவறு ஏதாவது நடந்திருந்தால் திருத்திக்கொள்ள ஏற்கனவே உள்ள சட்டத்திலேயே வகை செய்திருக்கிறோம். குத்தகைதாரர்கள் குத்தகைக்கு ஓட்டிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லி இப்போது மனு கொடுத்தால் கூட நிலச் சொந்தக்காரர்கள் ஒத்துக் கொள்ளவேண்டும் என்பதல்ல, பக்கத்தில் குத்தகைக்கு ஓட்டிக் கொண்டிருக்கிறவன் சாட்சியம் சொன்னால் போதும், குத்தகைதாரர் என்று பதிவு செய்து கொள்ளலாம் என்று சுலபமான முறையில் சட்டத்தில் வழிவகை செய்திருக்கிறோம். மொத்தம் தமிழ்நாட்டில் எவ்வளவு குத்தகைதாரர்கள் பதிவாகியிருக்கிறார்கள் இன்றுள்ள சட்டப்படி என்பதற்கு புள்ளிவிவரம் தருகிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் பதிவாகியிருக்கிற குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 3,86,520 ஆகும். இதுகூட முழுமையான புள்ளி

விவரம் இல்லை. சில தவறுகள் இருக்கலாம். இருந்தால் திருத்த வேண்டியிருக்கும். இப்போது இந்த குத்தகைதாரர்கள் பதிவேடு சட்டத்தின் கீழ் மாற்றப்பட்டிருக்கும் நிலம் 5,89,505 ஏக்காராகும். இந்த 5,89,505 ஏக்கர் நிலம் குத்தகைதாரர்கள் பதிவேடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி பதிவு செய்யப்பட்டிருக்கிற நிலத்தில் தனியார் நிலம் 4 லட்சத்திற்குப் பக்கமாக இருக்கிறது. மிச்சம் இருப்பது ஹிந்து அறநிலையங்கள், முஸ்லீம் அறநிலையங்கள், கிருஸ்துவ அறநிலையங்கள் அல்லது வேறு டிரஸ்ட் நிலங்களாக வருகிறது. ஆக, இப்படி பதிவாகி இருக்கிறது.

இப்படி பதிவாகியிருப்பவர்களுக்கு நிலத்தை வாங்க உரிமையளிக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் சென்ற ஆண்டு இந்த குத்தகைதாரர் பதிவேடு சட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றினேம். அப்போது அந்த நோக்கத்தை நாம் சொல்லவில்லை. சொல்லிவிட்டால் குத்தகைதாரர்கள் இல்லை என்று நிலச் சொந்தக்காரர்கள் அவர்களை பயமுறுத்தி அந்தச் சட்டத்தின் நோக்கத்தையே கெடுத்துவிடக் கூடும் என்பதால் சொல்லவில்லை. இப்போது வெளிப்படையாகச் சொல்கிறேம். அந்த நிலத்தை வாங்க உரிமை கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறேம்.

முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைக் கொடுக்கும்போது இன்னெரு கருத்தைத் தெரிவித்தார்கள். சிறு நிலவுடைமையாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்படும் என்று தெரிவித்து இருக்கிறர்கள். இப்போது இருக்கும் சட்டப்படி சிறு நிலக்காரர்கள் தாங்கள் குத்தகைக்கு விட்டிருக்கும் நிலத்தை திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது. ஆனல் இப்போது கொண்டு வந்திருக்கும் சட்டப்படி அவர்கள் பாதி நிலத்தை தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளலாம் என்று நாம் இந்தச் சட்டத்திலே வழி வகை செய்து இருக்கிறேம்.

மற்ற நிலச் சீர்திருத்தச் சட்டங்களிலே எப்படி இழப்புத் தொகை போட்டு இருக்கிறேமோ, அதே இழப்புத் தொகையைத் தான் போட்டு இருக்கிறேம். 60/40 ஃபேர் ரெண்ட் வைத்து,



நியாய வாரத்தை 12-ஆல் பெருக்கி, அதையே நிலத்தின் விலை மதிப்பு என்று நிர்ணயித்து இருக்கிறேம். அப்படி விலை மதிப்பு என்று நிர்ணயித்து இருக்கிற பணத்தை எப்படிக் கொடுப்பது என்று பார்த்தபோது, ஒரே முறையாகக் கொடுத்தால் முக்கால் பங்கு கொடுத்தால் போதும், சொந்தமாக்கிக் கொள்ளலாம். இல்லை ரூ. 500-க்கு மேற்கொண்ட மதிப்புள்ள நிலமாக இருந்தால், அவர் ஒரே முறையில் கொடுக்க முடியாவிட்டால், 12 தவணைகளில் கொடுத்தால் போதும், எடுத்துக்கொள்ளலாம்.

முதல் தவணை மனு போட்டு, விலை நிர்ணயம் செய்து, முதல் தவணை கட்டிய பிறகு, அந்த நிலத்தில் இருக்கும் எல்லா உரிமைகளும் குத்தகைதாரர்களுக்கு வந்து விடுகிறது. நிலச் சொந்தக்காரர்கள், 12 தவணைகளில் 11 தவணை பாக்கியைத்தான் வாங்கிக் கொள்ள வேண்டும். ஒருவேளை குத்தகைதாரருக்கு நிலம் சொந்தமாகிவிட்டதால், பணம் செலுத்தத் தவறினல், அந்தப் பணத்தை நிலச் சொந்தக்காரர்கள் பெறுவதற்கான பாதுகாப்பையும் இந்தச் சட்டத்தில் செய்து இருக்கிறேம். என்ன செய்து இருக்கிறேம் என்றல், 'ஆதரைசுடு ஆபீசர்' கொடுக்கும் உத்தரவே 'டிக்ரி உத்தரவாகக்' கருதப்படும். அதன்படி நிலத்தை ஜப்தி செய்கிற உரிமையையும் நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்து இருக்கிறேம். ஏனென்றல், நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நாம் கொண்டு வருகிறபோது, நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்று நாம் சொல்கிறபோது, சொந்தக்காரனுக்கும் நஷ்டஈடு கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேம். அதை நாம் அவர்களுக்கு வாங்கியும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேம் என்ற காரணத்திற்காகத்தான் நாம் கொண்டு வந்திருக்கும் சட்டத்தில் குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு கொடுத்ததுபோல், சொந்தக்காரர்களுக்கும், நஷ்டஈடு தொகையைப் பெறுவதற்கு பாதுகாப்பு கொடுத்து வழி வகை செய்து இருக்கிறேம்.

இந்தச் சட்டத்தை மாண்புமிகு அங்கத்தினர்கள் நன்றகப் படித்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். அங்கத்தினர்களுடைய விரிவான கருத்துக்களைக் கேட்கக் காத்து இருக்கிறது அரசு என்று கூறி, அரசாங்கம் எடுத்துள்ள முடிவில் பிடிவாதமாக இல்லாமல், அங்கத்தினர்கள் மாற்றம் செய்ய வேண்டுமென்று கூறினல், அதையும் அரசு பரிசீலிக்கும், பரிசீலித்து முடிவு எடுக்கும்,

திறந்த மனதோடு அரசு இருக்கிறது, அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துரைகளைத் தரலாம் என்று தெரிவித்து, தலைவரவர்களே, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, I move the following amendment:—

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of......Members (......Members from the Assembly and ......Members from the Council) to consider the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Land Owners Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973), and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee (Names of Members will be given later)."

THIRU D. S. A. SIVAPRAKASAM: Sir, I second the amendment.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, I would like this House to dispassionately consider certain points which I am going to put forth now. This Bill is a new type of Bill wherein a new class of citizens is sought to be made. There is already a class of farmers who are in posession of 5 or 7 or 8 or 9 acres—less than 10 acres— and there are lakhs and lakhs of people in that category.

In fact, according to the figures given by the Hon. Minister, the tenants are about 3,86,000. But there are a small number of peasants who own six or seven acres and according to this Bill, a portion of it must be given to the tenants for purchase by the latter.

Sir, some complications are bound to arise and certain lacunae which are in this Bill will definitely be disturbing quite a small number of landholders. I am in the least bothered about the big landholders. Therefore, my contention is that in this process of dispossessing a number of small landholders, a lot of unhappiness and discontentment are likely to take place. That is an important point to which the Hon. Minister should give consideration.





In addition to that, I want to point out that this is an indirect method by which further fragmentation of land is sought to be made. Already there is a ceiling of 15 acres and now a portion of it is sought to be given to the tenant. The tenant will be the owner and he will be owning about 6 or 7 or 8 acres and the landholder who is already possessing 15 acres will be given the balance. My only fear is that this is indirectly trying to make further fragmentation of lands. Already the plea that the small land-holdings are uneconomical for tractors, is further strengthened. On the one hand, we are trying to increase the number of tractors and on the other hand we are trying to make landholding smaller and smaller. Ultimately this might go against food production which we want to step up. Of course, there may be a difference of opinion in regard to this matter.

Then, again. . . .

**திரு. மணலி. சி. கந்தசாமி:** திரு. ஹாண்டே அவர்கள் இதை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டும், என்ற பிரச்னை குறித்துத் தான் திருத்தம் கொடுத்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக இருக்கும் கருத்துக்களைத்தான் சொல்லலாம். அந்த பில்லின் மீது பூராவும் அபிப்பிராயம் சொல்வது சரியல்ல. பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்ற திருத்தத்தின் மீதுதான் அவர் பேசுவது பொருத்தமாக இருக்கும், இதன்மீது பூராவுமாகப் பேசுவது சரியாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. என்னைப் பொறுத்தவரையில், இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்பதற்காக சில காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். பொருத்தமான சில காரணங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்கு அவர்கள் மறுப்பு தெரிவிக்கலாம். அவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கலாம். அவர் பேசுகிறபோது அந்தக் கருத்துக்களுக்கு மறுப்பு தெரிவித்துப் பேசலாம். ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லலாம். அவருக்கு எப்படி மறுத்துச் சொல்ல உரிமை இருக்கிறதோ, அதேபோன்ற உரிமை எனக்கு இருக்கிறது. பெரிய பொருளாதாரப் பிரச்னை

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 ஏப்ரல் 2

யாக வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று சொன்னாலும் நான் விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. 'ஐ ஆம் ஆக்சுவலி ஸ்பீக்கிங் ஆன் தி பில் இட் சல்ப்'. விரிவாக இங்கே பேசிவிட்டால் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடலாமா, வேண்டாமா என்பதைப்பற்றி பிறகு முடிவு எடுக்கலாம். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எங்கள் பக்கத்தில் எந்த நிலச் சொந்தக்காரர்களும் இல்லை. இதனால் 4 ஓட்டுகூட நான் வாங்க முடியாது. நாட்டின் நன்மைக்காகச் சொல்கிறேன். பிடித்தால் எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு நிலமும் கிடையாது. இதனால் எனக்கு லாபம் ஒன்றும் இல்லை. ஒரு 'அப்ஜக்டிவ்வாகச்" சொல்கிறேன்.

The other point is this. There are two classess of tenants, one who is cultivating and one who is non-cultivating. The latter is something like a middle-man. Are we not going to take into consideration the latter category also while defining 'tenant' and are we not going to take measures so that the latter category does not exploit the cultivating tenant. As far as I am concerned. .

என்னைப் பொறுத்தவரையில் இந்த நிலத்தை எடுத்து டெனன்டுக்குக் கொடுத்து ஒரு டெனன்டை நிலச் சொந்தக்காரனாகச் செய்து விட்டால் எனக்கு அதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அப்படி நிலத்தை பிரித்து, ப்ராபர்டி ரைட்கள் கொடுப்பதால் எனக்கு லாபமே தவிர வேறல்ல. "we expect more persons to become land owners", பிராபர்டி ரைட்களை டிஃபண்ட் பண்ணுவதற்கு சௌகரியமாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் ஏராளமான குடியானவர்களுக்கு உரிமைகளைக் கொடுப்பது தான் நல்லது.

இப்படி உரிமையாளர்கள் ஏராளமாக மாறிவிட்டால் அதற்குப் பிறகு எங்களுக்குத்தான் நல்லது. சிலர் இருக்கலாம், உரிமையாளர்களே இருக்கக்கூடாது, ஒரு செண்ட் நிலம்கூட வைத்துக் கொள்ளக்கூடாது, முழுக்க முழுக்க நிலம் அரசாங்கத்திற்கேதான் சொந்தம், நிலச் சொந்தக்காரர்கள் என்று ஒருவர்கூட இருக்கக் கூடாது, ஒரு ஏழை விவசாயிகூட ஒரு செண்ட் நிலம்கூட வைத்துக்கொள்ளக் கூடாது, என்று சொல்லக் கூடியவர்கள். சில கட்சிகளும் இருக்கலாம். அது வேறு விஷயம்.



1973 ஏப்ரல் 2] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

என்னைப் பொறுத்தவரையில் லட்சக்கணக்கான ஏழை எளிய விவசாயிகள் நிலம் வைத்துக்கொள்ள வேண்டும், நிலச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும். நமது தமிழ்நாட்டிலே எல்லா லேண்ட்லார்ட்களும், எல்லா டெனன்ட்ஸ்கூட டிஸ்பொசஸ் செய்ய வேண்டுமென்ற வாதம் இருக்கலாம். சீனாவில் அப்படி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது வேறு விஷயம். அதற்குள்ளே நான் நுழையவில்லை. டெனன்டுக்கும் கொடுப்பது நல்லதுதான். எனக்குச் சாதகம்தான்.
"landless to come to possess more lands". I welcome it. But . . .
ஒரு லேண்ட்லார்ட் கோஷ்டியை ஒழித்துக் கட்டிவிட்டு இன்னொரு கோஷ்டியை உருவாக்குகிறார்கள். எனவே, என்னைப் பொறுத்தவரையிலும் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

'சட்டத்தை நியாயமானதாகச் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். ஒரு செண்ட் நிலம் வைத்திருப்பவர்கள் கூட இருக்கக் கூடாது என்று சிலர் வாதிடலாம். இப்போது வேண்டுமானால் வாதிடாமலிருக்கலாம். பொதுவுடைமைக் கொள்கை என்று என்ன வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் நியாயமாக என்ன இருக்க வேண்டும்? கோடிக்கணக்கான ஏக்கர் நிலம் அரசாங்கத்திற்குத்தான் சொந்தம். ஒருவனுக்கும் ஒரு செண்டு நிலம் கூட இருக்கக் கூடாது என்று, அப்படி, பொதுவுடைமை ஸ்டேட்டாகவோ, டோடாலிடேரியன் ஸ்டேட்டாகவோ, எப்படி இருந்தாலும்—சீனாவில் அப்படித்தான் இருக்கிறது—மற்ற டெனன்ட் எல்லாம் டெனன்ட் அல்ல.

தொழிலாளர்கள் தங்களுடைய குறைந்த ஊதியத்தை வைத்துக்கொண்டு தொழிற்சங்கங்களை வைத்துக்கொண்டு அரசோடு போராடும்படியான நிலைமை ஏற்படலாம். எதிர்க்கட்சிகளே இல்லாமலிருக்கலாம். எதிர்க்கட்சியே இருக்கக் கூடாது, பூரா நிலங்களும் அரசாங்கத்திற்கே சொந்தம் என்றெல்லாம் நிலைமை ஏற்பட்டாலும் .... இவ்வளவுதான் கொடுப்பேன், ஒரு [illegible] கஞ்சிதான் கொடுப்பேன், வேலை செய்தால் செய், இல்லாவிட்டால் போ என்பது வேறு விஷயம்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 ஏப்ரல் 2

இதிலே எனக்கு லாபம் தான். ஏனென்றால், நாளைக்கு நாங்களும் பேசலாம் அல்லவா? ஆகவே, சட்டத்தை நியாயமாகச் செய்ய வேண்டும். எவ்வளவோ திருத்தங்கள் இருக்கின்றன. நல்ல திருத்தங்கள்தான். ஆட்சேபிக்கக் கூடிய நிலையில் நான் இல்லை. இருந்தாலும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் எல்லோரும் உட்கார்ந்து கொள்வோம். கொள்கையை வாதாடலாம். தவறாக நினைக்க வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள், இன்னும் இரண்டு மூன்று திருத்தங்களும் கொடுக்கலாம். நேற்று ராத்திரி அந்த ஆட்சேபனை எழுந்தது. அரசு சார்பாக இந்தத் தீர்மானத்தை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கொடுத்திருந்தார்கள். நேற்றைக்கு நினைத்திருக்கலாம். ஓகோ, தீர்ப்பாக, ஃபேர்மாக, டெனண்டாக பொறுக்குக் குழுவிற்கு அனுப்புகிறோமே என்று நினைத்து அந்த அச்சத்தின் காரணமாக இந்த மசோதாவை ஒப்புக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். மற்றவர்களுடைய கருத்துக்கள் என்ன என்பதை நாங்கள் தெரிந்து கொள்கிறோம். நான் லாயர் இல்லை. ஏதாவது என்றால், பத்து பேர்களை வைத்துக்கொண்டு டிஸ்கஸ் பண்ண வேண்டியிருக்கிறது, என்ன தவறு இருக்கிறது, என்ன கொள்கை என்பது பற்றி எல்லாம். இதில் பெரிய முதலாளிகள் தப்பித்துக் கொள்ளலாம். எனவே, அமைச்சர் அவர்கள், செலக்ட் கமிட்டியில் உட்கார்ந்துகொண்டு நல்ல வகையில் பேசுவதுதான் நியாயமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்த பிரச்சினை சிவில் சூட் பற்றியது. 12 தவணையில் நிலத்தை வாங்குகிறார்கள். தவணையைக் கொடுக்கவில்லை என்றால் என்ன செய்வது? ஆயிரக்கணக்கான விவசாயிகள் இருக்கிறார்கள்—அவர்களெல்லாம் பணக்காரர்களா? ஒரு பங்க் கடை வைத்தால் கூட, ரூ. 400, 500 என்று தேவைப்படுகிறது. ஐந்து ஏக்கர் வைத்திருக்கக்கூடியவர்கள் எல்லாம் பெரிய நிலச்சுவான்தார்களா? எவ்வளவோ பணக்காரர்களைப் பார்க்கிறோம். அவர்கள்மீது கை வைப்பதில்லை. விவசாயிகள் மேல் கை வைக்கிறார்கள். நான் இதைக் கட்சிக்காகச் சொல்லவில்லை. விவசாயி மேல் கை வைப்பது தான் இயற்கையாக இருக்கிறது.



1973 ஏப்ரல் 2] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

சென்னையை எடுத்துக்கொண்டால் லட்சக்கணக்காக சம்பாதிக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. கை வைப்பதில்லை. பிளாக் மார்க்கெட்காரர்கள், இன்கம் டாக்ஸ் கொடுக்காதவர்கள், வரி வஜா செய்கிறவர்கள்—இவர்களைப் பார்க்கிறோம். அவர்களின் மேல் கை யாரும் வைப்பதில்லை. அதற்கு தைரியம் இல்லை. நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கிறேன். நிச்சயமாகச் சொல்கிறேன், வரி ஏய்ப்பவர்கள், இந்த நாட்டின் துரோகிகள். மனம் விட்டுப் பேசுகிறேன். விவசாயி பத்து ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? யோசனை பண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஐந்து, பத்து ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருப்பது ஒரு பெரிய தப்பா? பெரிய குற்றவாளியா? இந்த நேரத்தில் சரியான வகையில் நிலைமைகளைப் பார்த்து, சிந்தித்து, ஆராய்ந்து செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேனே தவிர, வேறொன்றுமில்லை. அதைத்தான் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

பன்னிரண்டு தவணைகளில் கொடுக்கிறோம். ஒரு தவணையைக் கட்டுகிறான், இரண்டாவது தவணையைக் கட்ட முடியவில்லை என்றால் அப்போது என்ன நிலைமை? கேஸ். கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருக்க வேண்டும். லாயர்களுக்கு—மன்னித்துக் கொள்ள வேண்டும் லாயர்கள்—நிறைய கேஸ்கள் வரும். அதுதான் விளைவாக இருக்குமே தவிர வேறல்ல. விவசாயி கோர்ட்டுக்கும் வீட்டுக்குமாக நடந்து கொண்டிருக்க வேண்டும். டெனண்ட் குட்டிச்சுவராகப் போய்க் கொண்டிருக்க வேண்டியதுதான். இப்படி லட்சக்கணக்கான ஏழை எளிய விவசாயிகளை கோர்ட்டுக்கு இழுக்கக்கூடிய நிலைமையை உருவாக்குவதன் மூலமாக அவர்களுக்கு நாம் நன்மை செய்கிறோமா?

எனவே, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்காக சட்டத்தை தெளிவாகச் செய்ய வேண்டும். எனக்கு யார் மீதும் கோபம் கிடையாது. எனக்கு இருக்கக்கூடிய கவலையெல்லாம்—லட்சக்கணக்கான டெனண்ட்கள் நிலம் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. ஆனால் நான் இன்னொன்றுக்குச் சொல்கிறேன், ஒரு ஐந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நிலைமை எப்படி இருக்குமென்றால்—அப்போது நான் அரசியலில் இருப்பேனோ, இல்லையோ, எனக்குத்

தெரியாது—இப்போதே எனக்கு அரசியலில் ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. நியாயம் பேசினால் மக்கள் புரிந்து கொள்கிறார்களா என்றால், இல்லை.

கட்சிக் கண்ட்ரோலுடன்தான் எதையும் பேசவேண்டியிருக்கிறது. மனம் விட்டு எதையும் பேச முடிவதில்லை. "வித் கிரேட் க்ரீஃப்"—மிக மன வருத்தத்தோடு நான் இதைச் சொல்கிறேன்—ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வரக்கூடிய சூழ்நிலையை நான் பார்க்கிறேன். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி சாகுபடி செய்ய முடியாது. ஐந்து ஏக்கர், இரண்டரை ஏக்கர் ஆகலாம். சாகுபடியே செய்ய முடியாத அளவுக்குக் கூட சிறிய நிலமாக ஆகக் கூடிய நிலைமை ஏற்படலாம்—டோடலி அன் எக்கனமிக் ஹோல்டிங்ஸாக ஆகிவிட்டால் அவர்கள் நிலைமை என்னவாகும்? இப்படி, சிறு சிறு நிலங்களாக வைத்துக் கொண்டிருப்பதால் விவசாயிகளுக்கு என்ன லாபம்? சாகுபடியே செய்யமுடியாது.

இந்தச் சூழ்நிலை, இந்த தமிழ் நாட்டில் மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது என்பதை கவலையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

"The entire tenants no doubt are going to become land owners according to this Act."

எல்லோரும் அவர்களுடைய நிலங்களை டிஸ்போஸ் செய்துவிட்டு அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டால் நிலைமை எப்படி இருக்கும்? தி.மு.க. அரசுதான் பெரிய முதலாளியாக ஆகிவிடுவார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், ரெவின்யூ மினிஸ்டர் தான் பெரிய லேண்ட்லார்டாக இருப்பார். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அப்போது எனக்கு நிறைய பலம் கிடைக்கும். அப்போது மக்கள் தி.மு.க.-வை வெறுக்கின்ற நிலைமை ஏற்படும். தி.மு.க.-வை பதவியிலிருந்து விலகவேண்டுமென்று மக்கள் சொல்லக்கூடும். அரசாங்கத்தைப் பற்றி மக்கள் அப்படிச் சொல்லும்போது பதவியிலிருக்கக்கூடியவர்களுக்கு வருத்தமாக இருக்கும்.

Because the entire D.M.K. Government will become land owners. அப்போது மக்கள் எங்கள் கருத்தைப் பாராட்டக்கூடிய நிலைமை வரும்.



நான் இன்றைக்கு மனம் விட்டுப் பேசுகிறேன். இப்போது அரசாங்கம் சொல்கிறபடி போனால் கடைசியில் நிலைமை என்னவாகும்? தனியாக யாரும் சாகுபடி செய்ய முடியாத நிலைமைதான் வரும். அப்போது நிலம் அரசாங்கத்திடம் போகும். கூட்டுப்பண்ணை நடைபெறும். பல இடங்களில் கூட்டுப்பண்ணை எப்படி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இப்போது 5 ஏக்கர் நிலத்தை வைத்திருப்பவர்கள் கொஞ்சநாள் வைத்திருப்பார்கள். அவர்களுக்குக் கொஞ்சநாள் சந்தோஷமாக இருக்கும்.

They will be lulling into a false sense of security.

இப்படியே நிலை நீடித்துக்கொண்டிருந்தால் அப்புறம் 5 ஏக்கர் நிலம் என்பது கொஞ்சங்கொஞ்சமாக குறைந்துபோய், அதற்குப் பின்னால் டெனன்டும் இருக்க மாட்டார்; லாண்ட் லார்டும் இருக்கமாட்டார். எல்லா நிலத்தையும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கின்ற நிலைமைதான் வரும். அப்போது சிலருக்கு சந்தோஷமாக இருக்கும். ஆனால் மக்களுக்கு அது ஒரு பெரிய சோகமாக இருக்கும். நான் இன்னும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தலாம். ஆனால் அப்படிப் பயன்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால் சிலருக்கு ஆத்திரம் வரும். அதனால் நான் இதற்கு மேல் கடுமையான சொற்களைப் பயன்படுத்திப் பேச விரும்பவில்லை.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவின்மீது எல்லோருக்கும் நல்ல முறையிலே கருத்துக்களைச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும். இதிலே பல விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. பலருடைய கருத்துக்களைக் கேட்க வேண்டியிருக்கிறது. இந்த மசோதாவைப்பற்றி பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டியில் கூட இதைப்பற்றிப் பேசியிருக்கலாம். என்னுடைய கருத்து என்னவென்றால் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். அங்கே இதைப்பற்றி விரிவாகப் பேசவேண்டும். கட்சிக் கண்ட்ரோலுடன் நான் இதைச் சொல்லவில்லை. நம்முடைய கட்சிகள் எல்லாம் கூட விவாதிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நாம் கொண்டு வரக்கூடிய சட்டம் ஒழுங்காக இருக்க வேண்டும். ஆகவே, பலருடைய கருத்துக்களையும் கேட்டு ஆலோசித்து

*[டாக்டர் எச். வி. ஹாண்டே]* ***[1973 ஏப்ரல் 2***

*நல்ல மசோதாவாக இதை உருவாக்க வேண்டுமென்றால் இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி விரிவாக விவாதிப்பது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.*

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** *கம்யூனிஸ்ட் கட்சியி லிருந்து நான்கு பேர் பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிறார்கள். எல்லோரும் பேசினால் நேரம் அதிகமாகிவிடும். அதனால் கடைசியில் அமைச்சர்களுக்குக் கூட பேச நேரம் இல்லாமல் போய்விடக் கூடியதை நாம் பார்க்கிறோம். ஆகவே, ஒரு கட்சிக்கு இரண்டு பேர் பேசலாம். (திரு. ஏ. ஆர். மாரிமுத்து எழுந்தார்) முதலில் அ.தி.மு.க.-விலிருந்து பேசிவிடட்டும்.*

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I entirely oppose the amendment moved by my hon. friend Dr. Hande. The reason for the same is out of my genuine conviction that this Bill must be quickly passed since otherwise there is the likelihood of underhand things cropping up and the purpose of the Bill itself might be defeated. Already it is late. It has been declared by various parties that the cultivator should be the owner of the land. I cannot agree with Dr. Hande that this Bill should be referred to a Select Committee.

I have got experience of Select Committees. There are certain Bills which never see the light of the day, after being referred to Select Committees. There are certain Bills which take one or two years to come back to the Legislature. Certain Bills come fairly quickly. But certain Bills when they come back from Select Committee come not in its original form but in a much watered-down condition, with the original purpose having been completely changed. So, I think this Bill should not be referred to a Select Committee.

All parties are agreed that the cultivator should become the owner and so far as the Bill is concerned, we need not at all discuss whether the policy is right or wrong but we need discuss only the way in which it should be administered. Mr. Hande said that this Bill would result in further fragmentation of holdings. Where agriculture is the main-stay of the people, this cannot be prevented. What is important is that we should immediately have



***1973 ஏப்ரல் 2]*** [Thiru K. M. Subramaniam]

another Bill on "consolidation of land holdings". That Bill should come after this Bill so that lands could be consolidated without affecting property rights of people. That is most important.

We should not say that the cultivator should not become the owner of the land, even though it may be that he may be cultivating only 2 or 5 acres of land. Such fragmentation will be there, when the tenants become owners. It is not as if tenants are cultivating 100 or 200 acres of lands. What little he is cultivating, he is now given the right to become the owner. If he becomes owner, he will take more interest in the land. Take the example of housing.

In England, 2/3rd of the occupiers are owners. They feel proud to call themselves as owners. They take interest in upkeep of houses. Similarly the cultivator, when he is made owner of the land, will take more interest in the land. Of course as I have said earlier, another Bill, consolidating the land holding without affecting property rights on the lands, should come after this present Bill. So I think this Bill should be taken up immediately. I welcome the measure. Exploitation of tiller of the soil should be stopped and in that connection this Bill is welcome. I oppose the reference of the Bill to Select Committee. With these words, I conclude my speech.

*(திரு. நா. வீராசாமி தலைமை)*

***திரு. ஏ. சி. நரசிம்மன் :*** *தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த மசோதாவை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.*

*இந்த மசோதாவிலே நிலத்தை அதன் சொந்தக்காரர் திரும்பப் பெறுவது என்று சொல்லும்போது அவருக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு உட்பட்டு இருக்கவேண்டும். அதுமட்டுமல்ல; அவர் இன்கம் டாக்ஸ், அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் கட்டாதவராக இருக்கவேண்டும் என்று இருக்கிறது. 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை நாம் அனுமதிக்கும்போது ஒருவர் சாதாரணமாக 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார் என்றால் அந்த 5 ஏக்கர் நிலத்திலும் ஒரு பம்புசெட் வைத்திருப்பார். அப்போது*

கல்டிவேட்டிங் டெனன்ட் தனக்கு அந்த பம்புசெட்டும் நிலமும் வேண்டுமென்று கேட்டால், அவருக்கு 2½ ஏக்கர் நிலமும் பம்பு செட்டில் பாதியும்—பம்புசெட்டில் பாதி கொடுக்கமுடியவில்லை என்றால் அதன் மதிப்பில் பாதி—கொடுத்துவிட்டால் மீதி இருக்கிற 2½ ஏக்கர் நிலத்தில் பயிர்வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அந்த நிலத்தையும் கொடுத்துவிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நிலச் சொந்தக்காரருக்கு பாதுகாப்பு இல்லை. ஆகவே, பம்புசெட்டில் பாதியும் அவருக்குக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அதேமாதிரி சிலர் 1½ ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் அந்த நிலத்தை வைத்துத்தான் பிழைக்கக் கூடிய நிலைமை இருக்கும். அவர்கள் கூட நிலத்தைத் திரும்ப பெறமுடியாது; பாதியைத்தான் திரும்பப் பெற முடியும். திரும்பப்பெறப்பட்ட பாதி நிலமாகிய முக்கால் ஏக்கர் நிலத்தில் எந்த வேலையும் செய்ய முடியாது. எனவே, சட்டத்திலே 5 ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும். கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் புரொட்டக்ஷன் ஆக்ட் போல ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி நிலத்தை குத்தகைதாரர் வாங்கும்போது 75 சதவிகிதத்தைக் கட்டிவிட்டால் போதும் என்று சொல்லும்போது அது நியாய வாரத்தைப் போலப் பன்னிரண்டு மடங்கு என்று விலையை நிர்ணயிக்கிறோம். இப்படி விலையை நிர்ணயம் செய்த பிறகு அந்த நிலத்திற்கு உண்டான முழுத் தொகையையும் கட்டி விடுவதுதான் நியாயமாக இருக்கும். இப்படி முழுத் தொகையையும் கட்டிவிட்டுத்தான் நிலத்தைப் பெற்றுக் கொள்ளுவது முறையாக இருக்கும். அதில்லாமல் முதல் தவணையைக் கட்டிவிட்டால் பிறகு பன்னிரண்டு ஆண்டுத் தவணைகளில் மிச்சத்தைக் கட்டலாம் என்று சட்டத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றது. பின்னால் அவர் தவணையைக் கட்டத் தவறும்போது சம்பந்தப்பட்ட அதிகாரி கொடுக்கும் உத்திரவு கோர்ட்டு 'டிக்ரி'யாகக் கருதப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆனால்



கோர்ட்டுகளின் 'டிக்ரி' என்பது இன்று கோர்ட்டில் 'டிக்ரி' ஆனதிற்குக் கூட சுலபமாக பணத்தைப் பெற முடியாது எவ்வளவோ கஷ்டப்படுகின்றார்கள்.

எனவே, கோர்ட்டிற்குப் போய் பணத்தைப் பெற்று விட முடிகிறதா என்று பார்த்தால் அதற்குப் பல்வேறு எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. எனவே அந்தக் குத்தகைதாரரிடமிருந்து பாக்கித் தவணைகளைப் பெற முடியாமல் நிலச் சொந்தக்காரர்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். இதை யோசிக்க வேண்டும். அல்லது தவணைகளைக் கட்ட முடியாத நிலைமை வரும்போது நிலத்தை சொந்தக்காரரே திரும்பப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருந்தால் தவணைகளை ஒழுங்காகக் கட்டுவார்கள். எனவே அதற்கு ஏற்ற வகையில் இந்தச் சட்டத்தில் வழிவகை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பதினொன்று பேர்கள் பேச இருக்கின்றார்கள். எனவே ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷத்தில் பேசி முடித்துக்கொண்டால் நல்லது.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கொஞ்சம் நேரத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டும். நாளைக்குக் கூட இதை வைத்துக்கொள்ளலாம். பல கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கும். ஆகவே கொஞ்சம் 'எக்ஸ்டெண்டு' பண்ணிக்கொள்ளலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள். ஐந்து நிமிஷத்தில் உங்கள் கருத்துக்களைச் சொல்லிக்கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, உழுபவர்களுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டும் என்ற கோரிக்கை தேசிய விடுதலைப் போராட்டக் காலத்திலிருந்தே கொதித்துக்கொண்டு இருக்கின்றது. விடுதலைக்குப் பிறகு நிலத்தைப் பொறுத்தமட்டில் பலவிதமான சட்டங்கள் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன. உச்சவரம்பு என்று முப்பது ஏக்கர் பின்னர் பதினைந்து ஏக்கர் என்ற சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. பின்னர் இந்தச்

சட்டங்களின் பலன்களை பல மோசடிகள் காரணமாக எந்தச் சாகுபடியாளர்களும் அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறோம். அதுபோன்றே இப்போது கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டத்திலும் நாங்கள் எங்கள் கட்சியின் சார்பிலே கொடுத்துள்ள திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் இதிலும் எந்தவிதமான பலனும் சாகுபடியாளர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. அநுகூலங்களை விட பிரதிகூலங்களே அதிகமாக ஏற்படும் இந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கு நில உச்சவரம்புச் சட்டம் என்று கொண்டு வந்த நேரத்தில், பல புள்ளிகள் அன்றைக்கும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை சொந்தமாகப் பண்ணை வைத்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லிக்கொண்டு அவற்றை பினாமியாகக் குத்தகைக் காரர்களை, வேண்டியவர்களின் பெயரால் அல்லது சொந்தக்காரர்களின் பெயரால் அல்லது இல்லாதவர்களின் பெயரால் அதிகாரிகளின் துணையோடு குத்தகையைச் சொந்தமாகப் பயிர் வைத்திருக்கிறோம் என்று செய்ததைப் பார்த்தோம். தஞ்சை மாவட்டத்தில் குன்னியூர் ஐயர் பண்ணையில் ஆலத்தூர், விக்ரபாண்டி போன்ற பல கிராமங்கள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் இந்த உச்சவரம்புச் சட்டங்களையெல்லாம் மீறி பண்ணையை வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இதேபோல் 'நாடு பாதி, நங்கவரம் பாதி' என்று சொல்லுவார்கள். அதிலே ஒரு காலத்தில், மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களும் எங்கள் கட்சித் தலைவர் எம். கல்யாணசுந்தரம் அவர்களும் நங்கவரத்தில் நிலவெளியேற்றத்தை எதிர்த்து மிகப் பெரிய போராட்டமே நடத்தியிருப்பதை யாரும் மறந்திருக்க முடியாது. அங்கு இனியும் ஆயிரம் ஏக்கர் சொந்தப் பண்ணை அப்படியேதான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, குன்னியூருக்குச் சொந்தமான பண்ணையில் பினாமியாக எழுதி வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றார்கள். பினாமி என்றால் என்ன என்று அவ்வா







விளக்கம்கூட கேட்கவில்லை. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், அதுபற்றிய விவரங்களை அரசுக்குக் கொடுத்தால் உதவியாக இருக்கும்.

நாம் கல்டிவேடிங் டெனன்ட் சட்டத்தை நிறைவேற்றியிருக்கும்போது என்ன சொல்லியிருக்கிறோம் என்றால் 'குத்தகைதாரர்' என்று சொன்னால், 'நிலத்தில் தன் உழைப்பை கொடுப்பவர்களாக இருக்க வேண்டும்' என்று சட்டத்தில் வேண்டிய பாதுகாப்பினைக் கொடுத்திருக்கிறோம். அவன் தன் பெயரைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். எனவே பொதுவாக 'பினாமி'யாக எழுதி வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள் என்று சொல்லுவதைக் காட்டிலும் விவரம் தந்தால் உதவியாக இருக்கும் என்று சொல்லத்தான் குறுக்கிட்டுக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** இன்றைக்கு பினாமியாகப் பதிவு செய்திருக்கின்றார்கள் என்று சொன்னால் உச்சவரம்பில் மிச்சமாக இருக்கும் நிலம் 200 ஏக்கர் 300 ஏக்கர் என்று வருகின்றதே அதைப் பலர் பெயரால் தங்களுக்கு வேண்டியவர்கள் அல்லது இல்லாதவர்கள் பெயரால் குத்தகை என்ற பெயரில் பினாமியாக எழுதி வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இது பல இடங்களில் இருக்கின்றது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதில் அடிப்படையில் ஒரு சிறு தவறு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உச்சவரம்புச் சட்டம் அமுலாக்கப்பட்ட தேதியிலிருந்து, அந்தத் தேதியிலிருந்து யார் யாருக்கு நிலம் சட்டவரம்பிற்கு அதிகமாக இருந்தாலும் அதை எடுத்துக்கொள்ளுவது என்று சட்டம் இருக்கின்றது. இதில் பினாமிக் குத்தகைதாரர் என்று எழுதி வைத்துக்கொள்ளவே முடியாது. உச்சவரம்புச் சட்டத்திற்கும் குத்தகைதாரருக்கும் தனித் தனிச் சட்டம் இருக்கின்றது. உச்சவரம்பில் இவ்வளவு நிலம்தான் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கின்றது. அந்த வரம்பிற்குள் எவ்வளவு குத்தகைதாரர்களை வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள் என்பது வேண்டுமானால் இருக்கலாம்.

*திரு. சோ. அழகர்சாமி:* இன்றைக்கு உச்சவரம்பிற்கு மீதியாக உள்ள நிலத்தை சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சொன்ன காலத்தில் அதில் சாகுபடி செய்தவர்கள் யார் யார் என்று பார்க்கும்போது, இன்னின்னார் குத்தகை என்று பெயரை எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மிச்ச நிலத்தை முன்பு யார் சாகுபடி செய்துகொண்டிருந்தார்களோ அந்தச் சாகுபடியாளர்களுக்குத்தான் நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்று விதியிருப்பதால் அந்தக் காரணத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் பெயரால் எழுதி வைத்துக்கொண்டு, முன்பு இருந்த அதே ஆயிரம் ஏக்கர் நிலத்தை இன்னும் அனுபவித்துக்கொண்டுதான் வருகின்றார்கள்.

இந்தமாதிரியாக முன்பு இருந்த பல சட்டங்களின் கீழ் மோசடி செய்திருக்கின்றார்கள் பலர். இப்போதும் சாகுபடி பண்ணக்கூடியவர்களுக்குத்தான் நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று சொல்லும் சட்டம் எப்படியிருக்கின்றது என்றால், ஒருவரோடொருவர் பேசி நிலத்தை நேரிடையாகப் பெற்றுக் கொள்ளவேண்டும், அதற்கான தொகையைத் தவணையில் கொடுக்க வேண்டும், முதல் தவணையைக் கொடுத்த பின்னர் அடுத்த தவணைகளைக் கொடுக்கவில்லை என்றால் நிலத்தைச் ஜப்தி செய்யலாம் என்று இருக்கும்போது அந்த நிலம் மீண்டும் நிலச் சொந்தக்காரருக்கே போய்விடக்கூடிய ஆபத்து இருக்கின்றது. இதைச் சுட்டிக்காண்பிக்கும் வகையில்தான் எங்கள் திருத்தத்தினைக் கொடுத்திருக்கிறோம். நாங்கள் விரும்புவது, இந்தச் சட்டத்திற்குப் பின்னால் சகுபடியாளர்களுக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இருக்கக்கூடாது. நாம் நிர்ணயம் செய்யும் தொகையானது, அதாவது இப்போது கொடுக்கப்படும் நியாய வாரத்தைப்போலப் பத்து மடங்கு என்று சொல்லும் அந்தத் தொகையை பதினாறு ஆண்டுக் காலத்தில் வசூல் செய்துகொள்ள வேண்டும், நிலச்சுவான்தாரருக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்டயீட்டை சாகுபடியாளர்கள் அவர்களுக்கு நேரிடையாகக் கொடுப்பதற்குப் பதிலாக அரசாங்கமே கொடுக்கவேண்டும்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* ஒருவேளை அரசாங்கத்திற்கே அவர்கள் கொடுக்கத் தவறிவிட்டால் என்ன செய்வது?





*திரு. சோ. அழகர்சாமி:* அரசாங்கம் பலவிதங்களில் விவசாயத்திற்குக் கடன்களைக் கொடுக்கின்றது. அவற்றை ரெவின்யூ ட்யூஸ் போல வசூல் செய்கின்றார்கள். தவணைகளைக் கட்டவில்லையென்றால் அதுபோல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வழி இருக்கின்றது.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* தலைவரவர்களே, லேண்டு ரெவின்யூ ட்யூஸ் வசூலாகவில்லை என்றால் அந்த நிலத்தை ஜப்தி செய்யலாம். ஏலத்திற்கு விடுகிறோம். ஏலத்தில் கட்டுப்பாடாக யாரும் எடுக்கவில்லையென்றால் அரசாங்கமே நிலத்தைச் சொந்தமாக வைத்துக்கொள்ளுகின்றது. அதற்குப் பிறகு யாருக்கு அதைக் கொடுப்பது என்பது பின்னால் வருகின்றது. அந்த விதத்தில் லாண்டு ரெவின்யூ ட்யூஸ் வசூலாகவில்லை என்றால் ஏலத்திற்கு விடுகிறோம் அந்த நிலத்தை, அதுபோல இங்கேயும் அந்த நிலத்தைத்தான் ஜப்தி செய்யவேண்டிய கட்டாயம் வரும்.

*திரு. சோ. அழகர்சாமி:* தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு இப்போது பாக்கி செலுத்தவில்லை என்றால் லாண்டு ரெவின்யூ ஆக்ட்படிக்கு எப்படி வசூல் செய்கிறோமோ அதேமாதிரி இதிலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அரசாங்கமே நிலத்தை எடுத்துக்கொள்ளலாம். அல்லது கொஞ்சம் தவணை கொடுக்கலாம். தவணைகள் செலுத்தவில்லை என்றால் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது? குத்தகை பாக்கி என்று குத்தகை கொடுக்க வேண்டிய காலத்திலிருந்து கொடுக்க முடியாமலிருந்து பின்னால் ஒரு தேதிபோட்டு 'அந்தத் தவணையிலிருந்து கொடுக்க முடியவில்லை' என்று நிலத்திலிருந்து வெளியேற்றுகின்றார்கள்.

ஆகவே அந்தவிதமான தொந்தரவும் சாகுபடி செய்கின்றவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் வரக்கூடிய ஆபத்து இருக்கின்றது. அது மட்டுமில்லை. தமிழகத்தில் ஏறத்தாழ 5 லட்சத்து 86 ஆயிரம் பேர் சாகுபடியாளர்கள் என்று பதிவு செய்யப்பட்டு இருக்கின்றார்கள். ஆனால் இவர்களுக்கு 5 லட்சத்து 69 ஆயிரம் ஏக்கர்தான் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றது. அதிலும் தனியார் நிலத்தில் 4 லட்சம் ஏக்கர்.

கோவில், மடங்கள் என்று இவற்றுக்கு ஆறு லட்சம் ஏக்கர் இருக்கின்றது. அவற்றில் சாகுபடி செய்கின்றவர்களும் சாகுபடியாளர்கள்தான். அந்த நிலங்கள் எல்லாம் அந்தச் சாகுபடி

யாளர்கள் பெயரால் பதிவு செய்யப்படவில்லை. இவைகளையெல்லாம் முறையாகக் கணக்கில் கொண்டுவராமல் பிறுமியாகவே வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். சாகுபடியாளர்கள் மனுப் போட்டால் அதனால் வரக்கூடிய விளைவுகளை எண்ணி அவர்கள் மனுப் போடக்கூட முடியாமல் பயந்து பல இடங்களில் கஷ்டப் பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பல இடங்களில் இதுமாதிரியாக பதிவு செய்துகொள்வதற்கு, 'நான் சாகுபடி செய்கிறேன்' என்று சொன்னால் நிலம் கையைவிட்டு வெளியே போய்விடுமோ என்று பயந்து எழுதிக்கொடுக்காமல் இருக்கிறார்கள்.

ஆகவேதான் நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தப்படி எந்தத் தேதியில் இந்த மசோதா வருகிறதோ அந்தத் தேதியில் இருந்து யார் யார் சாகுபடியாளரோ, அவர்கள் வாரத்தையோ, குத்தகையோ நேரிடையாக நிலக்காரர்களிடத்தில் கொடுக்க வேண்டாம். குத்தகை, வாரம் வாங்கக்கூடிய ரைட் நிலக் காரருக்கு இல்லை. நிலம் யார் யாருக்குச் சொந்தமோ அவர்களுக்கு—5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை குறைந்த நிலம் வைத்திருப்பவர்களுக்கு உடனடியாக மார்க்கெட் ரேட் போட்டு பணத்தைக் கையில் கொடுத்துவிடுங்கள். அவர்கள் அந்தப் பணத்தை வேறு தொழிலில் முதலீடு செய்ய வாய்ப்பு இருக்கும். ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலம் வைத்துள்ள பெரிய நிலக்காரர் களுக்கு 16 தவணைகளிலோ, 20 தவணைகளிலோ பாண்டுப் பத்திரம் மூலமாகவோ நஷ்ட ஈட்டைக் குறைத்து மதிப்பிட்டுக் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறோம். அப்படிக் குறைத்துக் கொடுப்பதில் ஒன்றும் தவறில்லை. சாகுபடியாளர்களைச் சுரண்டிச் சுரண்டித்தான் அவர்கள் இந்நாள்வரை மாடமாளிகையில் வாழ்ந்து வருகிறார்கள். அதை மறுக்க முடியாது. அவர்களுக்கு நஷ்ட ஈட்டைக் குறைத்து, நீண்டகால அடிப்படையில் தவணை முறையில் அதனையும் கொடுக்கலாம். . . (மணி அடிக்கப்பட்டது)

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைத் தலைவர் அவர்களே, இந்த குத்தகை உரிமையாளர்களை நில உடைமையாளர்களாக ஆக்கு வதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை நான் மனதார வரவேற்று சில திருத்தங்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது 12 ஆண்டு மேல்வாரத்தை நஷ்ட ஈடாகக் கொடுத்து



எடுத்துக்கொள்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கக்கூடிய சிக்கல் என்னவென்றால் முதல் தவணை செலுத்திவிட்டால் அதற்கு பிற்பாடு விதிமுறைப்படி on the deposit of the purchase price in lumpsum or of the first instalment of such price, the authorized officer shall issue a certificate of purchase to the cultivating tenant and thereupon the right, title and interest of the landowner shall vest in the cultivating tenant . . .

இது வரவேற்கக்கூடியதுதான். நமது கொள்கைப்படி பைனான்ஸ் கார்ப்பரேஷன் அமைக்கிறோம். சிறு நிலக்காரர்களுடைய நிலத்தை எடுக்கும்போது அதற்கான மார்க்கெட் வால்யூவை உடனடியாகக் கொடுத்துவிட்டால் அவர்களும் அந்தப் பணத்தைப் போட்டு வேறு தொழில் செய்து பிழைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கும். நீங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டப்படி பார்த்தால் 'where the second or any subsequent instalment is not paid or deposited on the due date, the authorised officer may, on application from any person entitled to the instalment of the purchase price in default or any part thereof, pass an order directing the payment of the amount together with interest thereon and the order of the authorised officer may be executed through the court as if it were a decree passed by it.'. இப்படிப் பார்த்தால் அவர் ஒவ்வொரு ஆண்டும் ஆதரைஸ்டு ஆபீசரின் ஆர்டரை வாங்க வேண்டும், அப்புறம் டிகிரிக்குப் போக வேண்டும். இன்றைக்கு நிலச்சுவான்தார், குடியானவர்களுக் கிடையே இருக்கிற ஐக்கியம் இதன்மூலம் பெரிதும் குலைந்துவிடும். சட்டத்தின் கருத்தை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இந்தச் சட்டப்படி ஒரு சிறுநிலக்காரரது நிலத்தை அந்நிலக்குத்தகைக் காரருக்குச் சொந்தமாக்குகிறபோதே அந்த நிலத்திற்கான மார்க்கெட் வால்யூவை இந்தக் கார்ப்பரேஷன் மூலமாக நிலக் காரருக்குக்கொடுத்துவிடவேண்டும். அப்போதுதான் அவர்கள் வேறு தொழில் செய்ய முதலீடாவது செய்ய முடியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தொழில் செய்ய விரும்பு கிறவர்கள் நிலம் வைத்துக்கொண்டு அதை குத்தகைக்கு விட்டிருப்பவர்கள் மாத்திரம் அல்ல. தொழில் செய்ய யார் விரும்பினாலும் அவர்களுக்கு அரசாங்கம் பல்வேறு வகையில் உதவி செய்கிறது. [illegible]

திரு. ஏ. ஆர். சுப்பையா: இவர்கள் நான்கில் ஒரு பங்காவது முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு அவன் கையில் பணம் இருந்தால் தான் போட முடியும். ஆகவேதான் எதிர்வட்டி கூட வேண்டாம், உடனடியாக சிறுநிலக்காரர்களுக்காவது மொத்தப் பணமும் பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகவாவது கொடுத்தாக வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த நிலத்தை குத்தகைக்காரனுக்காக வாங்காமல் இருந்தால், இப்போது சட்டமே வராமல் இருந்தால் தொழில் செய்வதற்கு நில உடைமையாளர்கள் என்ன செய்வார்கள்?

திரு. ஏ. ஆர். சுப்பையா: நிலத்தின் ரைட் அவர்களிடம் இருக்கிறது. அடமானம் வைத்து வாங்கலாம். இப்போது அந்த ரைட் கூட போய்விடுகிறது. அதுபோல ஹைஸ்கூல், காலேஜுகளுக்கு 15 ஏக்கரா, 25 ஏக்கரா வைத்துக்கொள்ளலாம் என்று விதிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள். சர்க்காரே அவற்றை எடுத்துக்கொள்கிற நிலை உடனடியாக வந்துவிட்டால் பல தொந்தரவுகள் இல்லாமலே போய்விடும். இந்த இரண்டு முக்கிய திருத்தங்களையும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கொள்கை அளவில் இந்த மசோதாவை நான் வரவேற்று சில திருத்தங்களை அரசு அதில் ஏற்றுக்கொள்வது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு அடிப்படையாக பல சட்டங்களை நாம் இங்கே நிறை வேற்றியிருக்கிறோம். 1955-ம் ஆண்டு குத்தகை பாதுகாப்புச் சட்டம், 1969-ம் ஆண்டு குத்தகை பதிவேடு சட்டம்--இந்த இரண்டு சட்டங்களும் நம் மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

இதற்கு முன்னதாக திருவிதாங்கூர்-கொச்சியில் கன்னியாகுமரி மாவட்டம் ஒரு பகுதியாக இருந்தபோது ஆக்ட் 8 ஆப் 19[illegible] குத்தகைப் பாதுகாப்புச் சட்டம் இருந்தது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் குத்தகைக்காரர்களை நிலத்தில் இருந்து வெளியேற்ற இயலாது. நாம் உழுபவனுக்கே நிலம் என்ற



அடிப்படையில் இந்தச் சட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். அது வரவேற்கத்தக்கது. என்றாலும் நாம் நிறை வேற்றுகிற சட்டங்கள் எந்த அளவுக்கு சாகுபடியாளர்களுக்கு, குத்தகைதாரர்களுக்குப் பயன்படுகின்றன என்று பார்த்தால் பெரிதும் ஏமாற்றமாகத்தான் இருக்கும்.

நாம் சட்டங்களை நிறைவேற்றிவிடுகிறோமே தவிர அவை சரியான முறையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்று பார்ப்பதில்லை. குத்தகைதாரர் பதிவேடுச் சட்டத்தை 1969-இல் நிறைவேற்றினோம். ஆனால் அது சரியான முறையில் பல இடங்களில் செயல்படுத்தப்படவில்லை. பலர் நிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை 15 ஸ்டாண்டர்ட் ஏக்காராக மாற்றினோம். நாட்டில் இருக்கிற சிறு பான்மை சமுதாயத்தினர்களாகிய கிருஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோருக்கு மைனாரிட்டி அடிப்படையில் விதிவிலக்கு அளித்திருக்கிறோம். அந்த விதிவிலக்குகள் இந்தச் சட்டத்தில் தெளிவாக இல்லை என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சர் அவர்கள் இங்கே முன்னமேயே கூறினார்கள், இந்தச் சட்டத்தை எந்த முறையில் நாம் திருத்த வேண்டுமோ, அது சேர்ந்து . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நண்பர் ஜேம்ஸ் அவர்களுக்குத் துவக்கத்திலேயே தெளிவுபடுத்தி விடுகிறேன். 'டெனன்ட்', குத்தகைதாரர் என்று வரும்போது, அது இந்து அறநிலையத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும் சரி, வாக்ப் சொத்துக்களாக இருந்தாலும் சரி, சர்ச்சுக்குச் சொந்த மான நிலமாக இருந்தாலும் சரி, வேறு எந்தத் தனிப்பட்ட வருக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, அந்தச் சட்டத்தின்கீழ் யார் குத்தகைதாரர் என்று சொல்லப்படுகிறாரோ அவர்களுக் கெல்லாம் அந்த அனுகூலம் கிடைக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே அப்படியானால், இந்தச் சிறுபான்மை டிரஸ்டுகளுக்கு காம்பன்சேஷன் கொடுக்கிறபொழுது இப்பொழுது இருக்கிற அரசியலமைப்பு விதியின்படி, பேர் காம்பன்சேஷன் கொடுக்கப்படுமா?

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 ஏப்ரல் 2

அதல்லாமல், இங்கு சொல்கிறமாதிரி, 12 தவணைகளாகத் தரப்படும் என்று கூறப்பட்டிருக்கிறதே அந்த காம்பன்சேஷன் கொடுக்கப்படுமா என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுது கொண்டு வந்திருக்கிற சட்டத்தின்படி, எதிலும் வித்தியாசம் இல்லாமல் தான் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றி. இதுவரையிலே, சிறுபான்மை இனத்தவர் எந்த அளவுக்கு விதிவிலக்குகளை அனுபவித்து வந்தார்களோ, அந்த அளவில் இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு கிடைக்கும் என்பதால், சிறுபான்மையானவர்கள் சார்பில் நன்றி கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் சரியாகப் புரியவைக்கவில்லையோ என்று சந்தேகப்படுகிறேன். சட்டத்தின்கீழ் யார் யார் குத்தகைதாரர் என்று வருகிறார்களோ, அவர்கள் எந்த நிலத்தை ஓட்டிக்கொண்டிருந்தாலும், வக்ப் நிலத்தை ஓட்டிக்கொண்டிருந்தாலும், அல்லது வேறு அற நிலையங்களின் நிலத்தை ஓட்டிக்கொண்டிருந்தாலும் அல்லது இந்து அறநிலையக் கோயில்களுக்குச் சொந்தமான நிலத்தை ஓட்டிக்கொண்டிருந்தாலும், அல்லது தனிப்பட்டவர் நிலத்தை ஓட்டிக்கொண்டிருந்தாலும், குத்தகைதாரர் என்று 1955-ம் ஆண்டைய சட்டத்திலே என்ன டெபனிஷன் சொல்லப்பட்டிருக்கிறதோ அவர்கள் அத்தனை பேருக்கும், நிலத்தைப் பற்றிய பிரச்சினை இல்லை, இது குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிற சட்டம். உழுகிற நிலத்தை வாங்கிக் கொள்கிற உரிமை கொடுக்கிற சட்டம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அப்படி என்று சொன்னால், அரசியலமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்பு இந்தச் சட்டத்தினால் மறுக்கப்படுகிறது என்பதை இந்த அரசுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரசியலமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு எந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதோ, இது வரை நாம் நிறைவேற்றிய சட்டங்களில் எந்த அளவிற்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டதோ .



1973 ஏப்ரல் 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குத்தகைதாரர்களில் ஒருவர் முஸ்லிமாகவும், இன்னொருவர் கிறிஸ்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தலாமா, பொருந்தக் கூடாதா?

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் ஏற்கனவே கூறினேன், இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதில் சிறுபான்மையோர் பாதுகாப்பு என்று குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள், இந்துக் கோயில்களுக்குச் சொந்தமாக இருந்தாலும், முஸ்லீம் கோயில்களுக்குச் சொந்தமாக இருந்தாலும், கிறிஸ்துவ தேவாலயங்களாக இருந்தாலும் அவர்களுடைய நிலத்தில் பயிரிடுகின்ற குத்தகைதாரர்கள் யாராக இருந்தாலும், அந்தக் குத்தகைதாரர்களுக்கு ஒதுக்கப்படுகிற சட்டம் அனைவருக்கும் பொருந்தும் என்று சொன்னார்கள். ஜேம்ஸ் அவர்கள் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்றார்கள். நான் கேட்பது, குத்தகைதாரர்களில் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள், முஸ்லீம்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தலாமா, பொருந்தக் கூடாதா, என்பது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இதுவரையிலே நாம் இயற்றியிருக்கிற சட்டங்களை அத்தனை பேருக்கும் பொருந்த வேண்டுமென்று நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால், ஒவ்வொரு சட்டத்திலும் சிறுபான்மை சமுதாயத்திற்கு என்று விதிவிலக்கு அளித்திருக்கிறோம். சட்டம் இயற்றும்போது அதிலே விதிவிலக்கு வேண்டும். எல்லோருக்கும் சட்டம் ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமென்பதிலே எனக்கு ஐயப்பாடு இல்லை. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அரசியல் சட்டத்தில் சிறுபான்மை சமுதாயத்திற்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு இந்தச் சட்டத்தில் கொடுக்கப்படுகிறதா? இது சிறுபான்மையினருக்கு...

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் விளக்கத்திற்காகக் கேட்கிறேன்—இதில் என்ன விதிவிலக்கு கேட்கிறீர்கள் என்று சொன்னால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். நீங்கள் கோரிய விதிவிலக்கு என்ன?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** என்னைப் பொறுத்தமட்டில், நான் இதற்கு முன்னதாகப் பல தடவையும் இந்த மன்றத்தில் கூறியிருக்கிறேன். இந்தத் தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், கிறிஸ்தவ சமுதாயத்தினருக்கு சிறு அளவு, அதாவது, ஆங்காங்கு 10 ஏக்கர், 15 ஏக்கர், 20 ஏக்கர் என்றெல்லாம் குறிப்பிட்ட அளவுக்கு நிலம் இருக்கிறது. குறிப்பாக, எனது மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், ஏறத்தாழ 100 ஏக்கர் நிலம், தென்னிந்திய கிறிஸ்தவ திருச்சபைக்கு, அந்தக் கோயிலுக்கு இருக்கிறது. அந்த 100 ஏக்கர் நிலத்தையும் வைத்து அவர்களாகப் பயிரிட்டு அங்கிருக்கிற கல்லூரிகள், அங்கிருக்கிற நெய்யார் போன்ற மருத்துவ நிலையங்கள். . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உங்களுடைய உதவிக்காகவும், அவைக்காகவும், எங்களுக்குத் தெளிவாகவும் இருக்க ஒரு கருத்தைத் தெரிவித்து விடுகிறேன். சிறுபான்மையோருக்கு அரசியல் சட்டத்தில் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தில் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு இல்லையென்ற கருத்தைச் சொன்னார்கள். அரசியல் சட்டத்திலே சொல்லி இருப்பதை மீண்டும் வலியுறுத்த, அதிகாரிகளிடத்திலே தெரிந்துவந்து சொல்கிறேன். அரசாங்கம் அக்குயர் செய்வதாக இருந்தால்—அரசாங்கமே இதிலே வருவதில்லை—அரசாங்கம் நிலம் முழுவதையும் எடுத்துக்கொண்டு குத்தகைதாரர்களுக்கு என்று சொன்னால், அப்பொழுது காம்பன்சேஷன் அங்கே வரும். ஆனால், அரசாங்கம் நடுவிலே வருவதில்லை. அதற்காக என்ன செய்ய இருக்கிறோம் ? அவர்கள் ஒருவருக்கொருவர் முடிவு செய்து கொள்ள, இண்டர்மீடியரியாக இருந்து, விலை கொடுக்கிறோமே தவிர, அரசாங்கம் மத்தியிலே வரவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அப்படியானால், அந்த மார்க்கெட் விலைக்கும் இப்பொழுது நிர்ணயித்திருக்கின்ற விலைக்கும் இடைவெளி இருக்கின்றதே, அந்த மிச்சத் தொகையை அரசாங்கம் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்தப் பிரச்சினையே இல்லை.



**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் கேட்டார்கள். நான் குறிப்பிட்டு ஒன்றைக் கூறிக் கொண்டே இருந்தேன். என்னைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ 100 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு, பல்வேறு கல்லூரிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். 15 உயர்நிலைப் பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். நெய்யார் போன்ற பல்வேறு மருத்துவ மனைகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அதுபோன்ற பல்வேறு தொழில் ஸ்தாபனங்களையும் மருத்துவ ஸ்தாபனங்களையும் இன்னும் வேலூர் மருத்துவக் கல்லூரியையும் நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, சுய நலத்திற்காக இந்த நிலங்களைப் பயன்படுத்தவில்லை. அதிலே வருகிற வருவாயைக் கொண்டு, இத்தகைய நிலையங்களை நாங்கள் நடத்திக்கொண்டு வருகிறோம். 1969-ம் ஆண்டு சட்டம் வந்தபொழுது, இவற்றிற்கு இந்த அரசாங்கம் விதி விலக்கு அளித்தது. ஆகவே, அந்த அடிப்படையில், இந்தச் சட்டத்திற்கும் விதிவிலக்கு அளித்தால் தான் . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எந்தச் சட்டத்தில் விதி விலக்கு வந்தது ?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** உச்ச வரம்புச் சட்டம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சிலிருந்து முஸ்லிம்களுடைய, கிறிஸ்தவர்களுடைய ஆலயங்களுக்கும் விதிவிலக்கு கேட்கிறார்களா ?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** முஸ்லிம்கள், கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் விதிவிலக்குத் தரவேண்டுமென்று கோருகிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்துக்களுடைய கோயில்களை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறீர்களா ?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இது ஒரு முதலமைச்சர் கேட்கக்கூடிய வாதம் என்று எதிர்பார்க்கவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் பேசியதை வைத்து. . .

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் ஒரு மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் கூறுகிறேன். இங்கே பல்வேறு நபர்கள் இருக்கிறார்கள். அவர்கள், அவர்களுக்குத் தேவையான, அவர்களைப் பாதுகாக்கின்ற முறையில், இந்தச் சட்டம் எந்த அளவுக்கு இருக்கிறதோ. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் ஒரு விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன். கிறிஸ்தவ ஆலயங்களின் சார்பாக, அந்த அறக்கட்டளையினால், பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள் நடைபெறுகின்றன. அவைகளுக்கு விதிவிலக்கு வேண்டுமென்பது நண்பர் ஜேம்ஸ் அவர்களுடைய வாதம். அதே வாதத்தை முஸ்லிம்களும் செய்யக் கூடும், இந்துக்களும் செய்யக்கூடும். Hindu Religious Institutions. என்ற வகையிலே இருக்கிற நிலம் 1,3,366 ஏக்கர்—இந்துக்கள் இந்து மதத்தின் சார்பாக இருக்கிற நிலம். முஸ்லிம் மதத்தின் சார்பாக இருக்கிற நிலம் 4,658 ஏக்கர். Under Christian Religious Institutions 2,932 ஏக்கர். ஆக, 1,23,366 ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு இந்து மதத்தின் சார்பாகவும் பல்வேறு இடங்களில் பள்ளிக் கூடங்கள், மருத்துவ மனைகள், அறநிலையங்களை இவர்களும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாதிட வேண்டுமானால், Hindu Religious Institutions, Christian Religious Institutions, Muslim Religious Institutions ஆக இந்த மூன்றிற்கும் விதிவிலக்குத் தரவேண்டுமென்று சொல்கிறார்களா? அல்லது இந்துக்களுக்கு விதிவிலக்குத் தேவையில்லை, கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மாத்திரம் தரவேண்டுமென்று கோருகிறார்களா?

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்துக்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டாம் என்றோ, கொடுக்க வேண்டும் என்றோ நான் ஆர்க்யூ பண்ணுவதாக இல்லை. இந்த அரசாங்கத்தை நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மைனாரிட்டி சமுதாயத்திற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டியது பெரும்பான்மை சமுதாயத்தினுடைய கடமை. . .



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது மைனாரிட்டி சமுதாயத்திற்கு நில உச்ச வரம்புச் சட்டத்திலே விதிவிலக்குத் தரப்பட்டது என்று சொன்னார்கள், அப்படியில்லை. டிரஸ்டுகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்ட பொழுது அதுவும் சேர்ந்திருக்கலாம், அவ்வளவுதான். எந்த நில உச்ச வரம்புச் சட்டத்திலேயும் மைனாரிட்டி சமுதாயத்திற்கு என்று சொல்லி விதிவிலக்கு அளிக்கப்படவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: நானும்தான் அந்த செலக்ட் கமிட்டியிலே இருந்தேன், எனக்கும் தெரியும்; மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இருந்தார்கள், அவர்களுக்கும் தெரியும். மைனாரிட்டி சமுதாயத்தின் சார்பிலேதான் அந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டது. . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பல்வேறு கட்டங்களிலே நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே நிறைவேற்றப்பட்டச் சட்டம் இருக்கிறது, இந்த அரசு வந்ததற்குப் பிறகு நிறைவேற்றப்பட்டச் சட்டம் இருக்கிறது. எந்தச் சட்டத்திலேயும் குறிப்பிட்டு சிறுபான்மையோர், அதனால் இதற்கு விதிவிலக்கு என்று சொல்லப்படவில்லை. அதிலே ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷன்ஸ் என்ற முறையிலே விதிவிலக்குத் தரப்பட்டது. அந்த முறையிலே கிறிஸ்தவர்களுக்கு 1,000 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால் அந்த நிலம் பாதிக்கப்படாது என்ற முறையிலேதான் இருக்கிறது. சிறுபான்மையோருக்கு என்று விதிவிலக்குத் தரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நீங்கள் அந்த நிலத்தை எடுத்துக் கொண்டாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் கூறுவது எல்லாம் அரசியலமைப்பிலே மைனாரிட்டி சமுதாயத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இங்கேயும் கொடுக்க வேண்டும். மைனாரிட்டி சமுதாயத்தின் நிலங்களைக் கொண்டு இந்த அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மன்னிக்க வேண்டும், திரு. ஜேம்ஸ் அவர்கள் எடுத்துச் சொல்கிற கருத்தினை விளக்கமாகச் சொன்னால் இந்த அரசு அதை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். நான் கேட்பது அவர்களைக் கேள்விகேட்டு மடக்க வேண்டும் என்பதற்காக அல்ல, புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் கேட்கிறேன். சிறுபான்மையோர் சமுதாயத்தில் முஸ்லீம்களும் கிறித்துவர்களும் இருக்கிறார்கள். அதிலே கிறிஸ்துவர்களுக்கு, குத்தகைதாரர்களாக இருக்கிறார்களே, அவர்களுக்கு விதிவிலக்குக் கேட்கிறாரா அல்லது முஸ்லீம் மசூதிகள்; கிறிஸ்துவ தேவ ஆலயங்கள் வைத்திருக்கிற நிலங்களுக்கு விதிவிலக்குக் கேட்கிறாரா?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஏற்கனவே நான் சொன்னேன். நிலம் உழுபவனுக்குத்தான் சொந்தமாக இருக்க வேண்டுமென்று சொன்னால் அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அரசியலமைப்பு எந்த அளவிற்கு மைனாரிட்டி சமுதாயத்திற்கு விதிவிலக்குக் கொடுக்கிறதோ அந்த அளவிற்கு. . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அரசியலமைப்புச் சட்டத்திற்கு மாறாக, விதிவிலக்கு அளிக்காவிட்டால், அது செல்லாமல் போய்விடும் அல்லவா ?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அதையும் கூறலாம் என்றுதான் இருந்தேன். இந்த மசோதா அரசியலமைப்புக்கு விரோதமாக, செல்லாமலும் போய்விட முடியும். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** செல்லும் என்ற நம்பிக்கை அளிக்கின்ற விதத்தில் கோளாறில்லாமல் அப்படிப்பட்ட சட்டம் கொண்டு வந்திருக்கின்றார்கள் ; அது செல்கிறது. செல்லாமல் போகவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஆகவே, இந்தச் சட்டம் அரசியலமைப்பிற்கு எப்படி உட்பட்டு அமைக்கப்பட வேண்டுமோ அப்படி அந்த முறையிலே அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).



**திரு. எம். சுரேந்திரன் :** உறுப்பினர் அவர்கள் பேசும் பொழுது மைனாரிட்டிக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** அதைப் பற்றி ரொம்ப நேரம் விவாதித்து முடிந்து போய்விட்டது.

**திரு. எம். சுரேந்திரன் :** நான் விளக்கம் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒரு கிறிஸ்தவ குத்தகைதாரர் அல்லது முஸ்லீம் குத்தகைதாரர் ஆக இருந்தால் இந்தச் சட்டம் வழி செய்யவில்லை என்று சொல்கிறார்களே, அவர்களுக்குப் பாதுகாப்புச் செய்வதற்கு இந்தச் சட்டம் இருக்கிறது. ஆகவே மைனாரிட்டிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்கிற அவர்களுடைய வாதம் எப்படிச் சரியாகும் ?

**திரு. என். கணபதி :** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய குத்தகைதாரர்களுக்கு நில உரிமை அளிக்கின்ற முறையிலே வருகின்ற இந்தச் சட்டத்தை வரவேற்று ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன், சமுதாயத்திலே உள்ள. தாழ்ந்தப்பட்ட நிலையிலே உள்ள ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி அவர்களுக்கு நன்மைகள் செய்து வருகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதிலே ஒரு படியாக இன்றைய தினம் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப்படையிலே இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்தச் சட்டத்தை இந்த அவையிலே உள்ள அத்தனைக் கட்சிகளும் வரவேற்கின்ற நேரத்திலே தங்களுக்கிருக்கின்ற இரண்டொரு குறைகளையும் ஆசைகளையும் வெளியிட்டுக்கொள்வதிலே எந்தவிதத் தவறும் இல்லை என்ற முறையிலே நல்ல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், ஏழை எளிய மக்களைப் பற்றிக் கவலைப்படுகின்ற அதே நேரத்திலே, பணக்காரர்களுக்குத் துணை போகக்கூடாது என்று நினைக்கின்ற அதே நேரத்திலே,

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியபடி இடையிலே உள்ள நடுத்தர வர்க்கம் என்ற வர்க்கத்தினர் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அந்த வர்க்கத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். ஏழை விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆண்டாண்டு அடிமைகளாக இல்லாமல் அவர்கள் தானும் நிலச் சொந்தக்காரன் என்று மார்தட்டிச் சொல்லக்கூடிய நேரத்திலே இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர், ஐந்து ஏக்கர், என்று வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய சாதாரண மக்கள் தங்களுடைய உரிமையை இழக்கக்கூடிய முறையிலே இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது.

அப்படி இருக்கிற நேரத்திலே கோயில்களுக்கும், பெரிய பெரிய நிலச்சுவான்தார்களுக்கும் இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை எடுத்து ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. உத்தியோகத்திலே இருப்பவர்கள், சிறு வியாபாரம் செய்துகொண்டிருப்பவர்கள் தங்கள் உணவுக்காக என்று கொஞ்சம் நிலம் வைத்துக் கொண்டு அதைக் குத்தகைக்கு விட்டு குத்தகை மூலம் வருகின்ற நெல்லை உணவுக்காகப் பயன்படுத்துகின்ற அந்த மக்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் குறைவாக வைத்துள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** May I put one question with your permission, Sir. ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு இந்தச் சட்டத்திலே விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்பதைத் தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**திரு. என். கணபதி:** ஐந்து ஏக்கர் என்பதைப் பிரித்து குத்தகைதாரருக்குப் பாதி அதாவது 2½ ஏக்கர் என்றும் சொந்தக்காரருக்குப் பாதி அதாவது 2½ ஏக்கர் என்றும் இந்தச் சட்டத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. . .





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒருவரிடம் 5 ஏக்கர் நிலம் இருந்து அதை ஒருவர் குத்தகைக்கு எடுத்துக்கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த நில உடைமையாளருக்கு 5 ஏக்கர் நிலத்தையும் பறித்துக்கொடுத்து விட்டால் அந்தக் குத்தகைதாரர் கதி என்ன ஆகும் என்பதைத் திரு. கணபதி அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**திரு. என். கணபதி:** பொதுப்படையாக நன்மைகள் செய்யும் ஒரு சட்டம் ஒரு சிலரைப் பாதிக்கத்தான் செய்யும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதனால்தான் நாம் நிலவுடைமையாளருக்கு இரண்டரை ஏக்கர் என்றும் அதுவரையிலும் பாடுபட்டு நிலத்தை உழுத குத்தகைதாருக்கு 2½ ஏக்கர் என்றும் இருக்க வேண்டுமென்ற முறையிலே சட்டம் செய்கிறோம்.

**திரு. என். கணபதி :** அதே நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இரண்டு ஏக்கர், ஒரு ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கிறார்கள் ; அவர்களுக்கு இந்தச் சட்டம் பொதுவாக இருப்பதாலே ; எப்படிச் சீரான நிலைமையை ஏற்படுத்த முடியும் என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட நிலையில் அதை அவர்களே உணர்ந்து ஒரு அட்ஜஸ்ட்மெண்டிற்கு வந்து விடுவார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இன்னொரு ஆலோசனையும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் கொடுப்பதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்த ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறவர்களுக்கு பாதி எடுத்தால் மீதி 50 சென்டு தான் இருக்கும். இந்த 50 சென்டை எடுத்து நஷ்டஈடு கொடுக்கிறபோது இப்படி 5 ஏக்கருக்குள் உள்ள உடைமைக்காரர்களுக்கு மொத்தமாகக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படும். ஒருவர் சென்னையில் இருப்பார். அவருக்குத் தஞ்சாவூரில் நிலம் இருக்கும். அவருக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் இருக்கும். இப்போதிருக்கிற

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 ஏப்ரல் 2

சட்டப்படி இதில் பகுதியைத் தான் விற்க முடியும். இதனால் ஏற்படுகின்ற இழப்பினை அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள் பெரிய நிலச் சுவாந்தார்கள் அல்ல; அவர்களுக்குக் கொடுப்பதில் தயக்கம் வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலத்தின் மதிப்பு 500-க்குக் கீழே இருக்குமானால் நஷ்ட ஈட்டை ஒரே தவணையில் கொடுக்க வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறார்கள்.

திரு. என். கணபதி: நடுத்தர வர்க்கத்தினர் படும் அல்லல்களைச் சற்றுக் கவலையோடு கவனித்துப் பரிகாரம் தேடித் தரவேண்டும் என்று முதல்வர் அவர்களையும் வருவாய்த் துறை அமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காம்பன்சேஷன் வழங்கப்படுகிற நேரத்தில் குறைவாக நிலம் வைத்துள்ளவர்களுக்கு இப்போதுள்ள விதி முறைகள் என்ற முறைகளை அவர்களுக்கு அனுசரிக்காமல் அரசாங்கம் செய்கிற இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் நிலச் சொந்தக்காரர்கள் இந்தத் தொகையை ஒரே தவணையில் பெற வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தை வரவேற்று உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பயிரிடும் குத்தகைதாரருக்கு அவர் பயிரிடுகிற நிலத்தை உரிமையாக்குகிற இந்தக் கொள்கையை வரவேற்கிறேன்.

இந்தக் கொள்கையின் அடிப்படையிலே என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். உழுபவருக்கே நிலம் வேண்டுமென்பதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. சமுதாயத்தினுடைய மாற்றங்கள் அப்படித்தான் அமைய வேண்டுமென்பதில் எங்களுக்கும் வேறுபாடு கிடையாது என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூறுகிறேன். ஆனால், உழைப்பவருக்கு நிலம் சொந்தமாகிற அதே நேரத்தில் சிறு நிலச் சொந்தக்காரர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படி சிறு நிலச்



1973 ஏப்ரல் 2] [திரு. கே. எ. வகாப்]

சொந்தக்காரர்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். அவர்களும் தங்களுடைய வாழ்க்கையிலே வேண்டிய வசதிகளைப் பெற்று வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

குறிப்பாக விவசாயி என்று சொன்னால் விவசாயத்தில் என்ன வருமானம் உள்ளது என்று உண்மையில் பார்த்தால் நிலத்தை உழுது பார்த்தவர்களுக்குத் தான் தெரியும். குத்தகைதாரருக்கு இதில் வருகிற வருவாய் குறைவாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் 5 ஏக்கருக்கு உட்பட்டவர்கள் 2½ ஏக்கராகப் பிரித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி ஏற்படுகிற நேரத்தில் 5 ஏக்கருக்கு உட்பட்டவர்களுக்கு ஒரு விதி விலக்காவது அளிப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், உழுபவருக்கு நிலத்தைச் சொந்தமாக்குவது என்று சொன்னால், நிலச் சொந்தக்காரரின் அனுமதி பெறாமல் எடுத்துக் கொடுத்து விடலாம். பக்கத்தில் இருக்கிற குத்தகைதாரர் சாட்சி சொன்னால் போதும் என்று இருப்பதை மாற்றி உறுதியான முறையில் சட்டமாக அமைக்கலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இதிலே சில குறைபாடுகள் ஏற்பட வழி உண்டாகும். யாரை வேண்டுமானாலும் சாட்சியாக அழைத்துக் கொண்டு வந்து மற்றவர்களின் நிலத்தைப் பெறுவதற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டு விடக்கூடிய குறைபாடு இருக்கிறது என்ற காரணத்தினால் இதையும் சிந்திக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கூறுகிறபோது 5,89,505 ஏக்கர் நிலங்கள் பதிவேட்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன, அதிலே 4 லட்சம் ஏக்கர் பக்கம் வரை தனியார் நிலங்களாக இருக்கின்றன என்றார்கள்.

தனியார் நிலங்களை எடுப்பது பற்றியோ, அதை எடுத்து உழைக்கிற விவசாயிகளுக்குக் கொடுப்பது பற்றியோ எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதில் இந்துக்களும் இருப்பார்கள். முஸ்லீம்களும் இருப்பார்கள், கிறிஸ்துவர்களும் இருப்பார்கள்.

[திரு. கே. எ. வகாப்] [1973 ஏப்ரல் 2

இந்தக் குத்தகைதாரர்கள் பயனடைய வேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்துக் கிடையாது. இதை நிச்சயமாக வரவேற்கிறோம்.

எல்லாச் சமூகக் குத்தகைதாரர்களும் பயன் அடைய வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அற நிலையங்களைப் பற்றிப் பேசுகிறபோது பாதுகாப்பற்ற நிலையிலே அற நிலையங்கள் இருக்கின்றன என்று மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள்.

மைனாரிட்டிகளுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். நான் அந்த அளவிற்குக் கூடத் துணியவில்லை. மைனாரிட்டிகளின் உரிமைகள், ஃபண்டமெண்டல் ரைட்ஸ், ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்ளாவிட்டாலும், தமிழக அரசுக்கு மைனாரிட்டி மக்களிடத்தில் அக்கறை இருக்கிறது என்ற அடிப்படையில் சொல்கிறேன். ஒரு தாய்க்கு 4, 5 பிள்ளைகள் இருந்தால், அதில் ஒரு பிள்ளை சோனிப் பிள்ளையாக, சத்தில்லாத பிள்ளையாக இருந்தால் அந்தப் பிள்ளைக்குச் சத்துணவு கொடுத்து வளர்க்க வேண்டும் என்ற அதே நிலையில் தமிழக அரசு இருக்கிறது. அதே நிலையில் இனிமேலும் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிற நிலையில் இருக்கிறேன்.

மைனாரிட்டி மக்கள் என்ற அடிப்படையில் இந்த உரிமையைக் கேட்பதற்கு நிச்சயமாக உரிமை உண்டு. வாயில்லாத குழந்தைக்கு, பேசுவதற்குச் சக்தி இல்லாத குழந்தைக்குத் தாயே உணவு ஊட்டுகிற நிலையில் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் இந்த நாட்டில் இருக்கிற முஸ்லீம்களுக்கும், கிருஸ்துவர்களுக்கும், சட்டப்படி பாதுகாப்புகளை நாங்கள் கேட்காமலே நீங்களே அளிக்கவேண்டியது. அந்த பெருந்தன்மையோடு நடந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அந்த அடிப்படையில் கேட்டுக்கொள்கிறேன். அற நிலையங்கள் என்று சொல்கிறபோது, மசூதிகள், சர்ச்சுகள் இருக்கின்றன இன்றைய நிலையில் சமுதாயத்தில் அனாதைகளாக இருக்கிற குழந்தைகளை வளர்க்கிற நிறுவனங்கள் அறநிலையங்கள் சார்பில்



1973 ஏப்ரல் 2] [திரு. கே. எ. வகாப்]

இருக்கின்றன. மருத்துவ சம்பந்தமான உதவிகளை அற நிலையங்கள் எடுத்து நடத்துகின்றன. இங்கே கொடுத்திருக்கிற கணக்குப்படி இஸ்லாமிய அற நிலையங்களில் 4,658 என்றும் கிருஸ்துவ அற நிலையங்களில் 2,932 என்றும் சொன்னார்கள். ஆனால் அதே நேரத்தில் இந்து அற நிலையங்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகளுக்கு விலக்கு அளிக்கப்படவேண்டுமா என்றால், பொதுவாக அளிக்கப்படவேண்டும் என்றுதான் சொல்கிறோம். ஆனால் அதே நேரத்தில் நான் சொன்ன கணக்குப்படி பார்த்தால் குழந்தைகளில் எது சோனிப் பிள்ளை, எந்தக் குழந்தைக்குச் சத்துணவு தேவைப்படுகிறது என்று பார்த்தால் நிச்சயமாக முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள் அப்படிப்பட்ட நிலைமையில் நாட்டில் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இப்படிப்பட்ட நியாய வாரா அடிப்படையிலே இந்த நிலத்திற்கெல்லாம் விலை நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மார்க்கெட் விலையிலே அமைக்கப்பட்டு, இன்றையதினத்தில் என்ன நிலவரம் இருக்கிறது என்று பார்த்து அதன் அடிப்படையில் நிலத்திற்கு வேண்டிய பூரணத் தொகையைக் கொடுப்பதற்கு, பூரணத் தொகையில் 75 சதவீதம் கொடுக்கலாம் என்று இருக்கிறது. 5 ஏக்கருக்கு உட்பட்ட நிலங்களுக்கு அந்தத் தொகையைப் பூரணமாகக் கொடுத்துவிட வேண்டும். இப்படிப்பட்ட அற நிலையங்களைப் பற்றித்தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதைப்பற்றி யோசிப்பதற்கு நிச்சயமாக நமக்கு அவகாசம் தேவைப்படுகிறது. என்ன காரணமோ, காலை இங்கு வருகின்ற வரையில் செலக்ட் கமிட்டிக்குச் செல்வதாக இருந்த இந்தத் தீர்மானமானது மதிப்பிற்குரிய நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் இதிலே மிகவும் அக்கறையோடு உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணத்தினால் இப்படி மாற்றப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இது இரண்டு நாட்களுக்கு முன் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவிலே செலக்ட் கமிட்டிக்கு விடத் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது. ஏற்கெனவே அறிக்கைகள் அனுப்பப்பட்டன.

காலையிலே இப்படிப்பட்ட முடிவிற்கு வந்து எடுக்கப்பட்ட ஒன்று அல்ல. அலுவல் ஆய்வுக் குழுவிலே எல்லாத் தலைவர்களும் பேசி எடுத்த முடிவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: அலுவல் ஆய்வுக் குழுவிலே யோசனையாகக் கூறப்பட்டது என்று பேசப்பட்டது. இருந்தாலும் இந்த மாமன்றத்தில் பேசுகிற காரணத்தினால் இப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி செயல்படுவது நலமாக இருக்கும் என்று கருதுகிறோம். ஆனால் அதே நேரத்தில் முக்கியமான அற நிலையங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு சொன்னார்கள். இன்னும் திறந்த மனத்தோடுதான் இருக்கிறோம்.

உங்கள் கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் மாற்றங்கள் வேண்டுமானாலும் கூடச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்றார்கள். அந்தக் கருணை உள்ளத்தோடு பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய திருத்தத்தை ஏற்று செலக்ட் கமிட்டிக்குச் சென்று திருத்தமாக வரவேண்டிய அவசியமில்லை. இந்த இடத்திலேயே கூட இந்த திருத்தத்தை அற நிலையங்கள் சம்பந்தப்பட்ட வரை செய்து இந்த நாட்டில் உள்ள மைனாரிட்டி சமுதாய மக்களின் பரிபூரண அன்பைப் பெற வேண்டுமென்று கேட்டு இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

* திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, மாண்புமிகு ரெவின்யூ அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தக் குத்தகைதாரர்கள் நிலம் வாங்குகிற சட்டம் சம்பந்தமாக நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் வந்ததற்கேக் காரணம் உழைக்கிறவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். உழைப்பவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டுமென்று இன்று சொல்லவில்லை. காந்திஜி அவர்கள் தேசியப் போராட்ட காலங்களில் விவசாயிகளைப் பார்த்து உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தமாக இருக்க வேண்டுமென்று சொன்னது இன்றைக்கும் நினைவுக்கு வருகிறது. அது மாத்திரம் அவர் சொல்லவில்லை. உழுபவனுக்கு நிலம்





சொந்தம், எழுதுபவனுக்குப் பேனா சொந்தம், படிக்கிறவனுக்குப் புத்தகம் சொந்தம் என்று இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நேரடியாக யார் யார் எதை உபயோகப்படுத்துகிறார்களோ, அவர்களுக்குத் தான் அது சொந்தமாக இருக்க வேண்டுமென்று அன்றையதினம் காந்தி அவர்கள் சொன்னதன் அடிப்படையில் இதை ஒரு தேசியப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு தேச முழுவதிலும் இருக்கக் கூடிய உழவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குகிற ஒரு கால கட்டத்தில் இன்றையதினம் நாம் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அந்த முறையில் பார்க்கும்போது இந்த நாட்டில் இருக்கக் கூடிய பூமி அனைத்தும் அரசாங்கத்துக்குச் சொந்தமானது. இந்த அரசாங்கத்துக்குச் சொந்தமான பூமிகளை அரசாங்கம் பார்த்து தங்கள் இஷ்டத்திற்கு சமூகத்திற்குத் தேவையான காரியங்களைச் செய்ய அத்தனை அதிகாரமும் இருக்கிறது. நிலத்தைக் கிரயத்திற்கு வாங்குபவர்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்துகிறார்கள். அதுதான் அவர்களுடைய உரிமை. இன்றைய தினம் நிலத்தை எடுத்துக் கொள்ளுவதன் மூலமாக அவர்கள் வரி செலுத்துவது நிறுத்தப்பட்டு விடுகிறது. நாடு முழுவதும் விவசாயிகளுக்கு, உழுகின்றவர்களுக்கு அவர்களுடைய உரிமை மறுக்கப்பட்டது மாத்திரமல்லாமல் அவர்களுக்கு நியாயமான வாரம் கிடைக்காத நிலைமையும் இருந்தது. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழு கொம்பு கூட மிஞ்சாது' என்ற பழமொழி இருக்கிறது.

அந்த முறையில் உழுபவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறையில் 1951-ம் வருஷம் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்று கொண்டு வந்தார்கள். இதனால் அன்றைய தினம் நிலப் பிரபுக்கள் அமர்க்களப்படுத்தினார்கள், கிளர்ச்சி செய்தார்கள். இருந்தபோதிலும் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே சட்டம் கொண்டு வரப்பட்டது. உழுபவர்களுக்கு 40, நிலச் சொந்தக்காரர்களுக்கு 60 வாரம் என்ற முறையிலே சட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்றையதினம் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். நியாய

மான வாரம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் விவசாயிகளுக்கு 60, நிலச் சொந்தக்காரர்களுக்கு 40 என்ற வகையிலே சட்டம் கொண்டு வரப்பட்டது. இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து நிலத்தில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு நிலம் சொந்த மாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில்தான் குத்தகைதாரர்கள் பதிவு செய்ய வேண்டுமென்ற சட்டம் நிறை வேற்றப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் 3 லட்சம் பேர்கள் குத்தகைதாரர் களாகப் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது ரொம்பக் குறைவானது. இந்த மாநிலத்தில் குறைந்தது 10 லட்சம் குடும்பங்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட வேண்டும். கோவில், மடங்களுடைய கணக்கு சரியாக வரவில்லை. முதலமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலும் கூட 1,32,000 ஏக்கர் இந்து கோயில்களிடமும், 4,258 ஏக்கர் முஸ்லீம் மத ஸ்தாப னங்களிடமும், 2,932 ஏக்கர் நிலம் இதர மத ஸ்தாபனங் களிடமும் என்று சொன்னார்கள். மடாதிபதிகளுக்கு 7 லட்சம், 7½ லட்சம் நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. அதிலே சாகுபடி செய்யக் கூடியவர்கள் பதிவு செய்யப்படாமலே வைக்கப் பட்டிருக்கிறார்கள். அதிலே மோசடி நடக்கிறது. அதை எல்லாம் சேர்த்துப் பார்த்தால் 10 லட்சம் பேர்களாவது குத்தகை தாரர்களாக இருப்பார்கள், அவர்களுக்கெல்லாம் நிலத்தைச் சொந்தமாக்கும் நிலைமை ஏற்படுத்த முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டங்களிலிருந்து ஏமாற்ற பல பெயர் களில் பினாமியாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. குத்தகை நிலம் கூட அப்படித்தான் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கோ இருப்பவர்களுக்கெல்லாம் குத்தகை கொடுத்ததாக தாவ்தாவேஜ் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இன்றையதினம் நிலம் சொந்தமாக்கப்படப் போகிறதா? அவர் களுக்கும் நிலத்திற்கும் சம்பந்தமே இல்லை. அரசாங்கம் தஞ்சை மாவட்டத்தில் விசாரணை செய்து, பினாமி நிலத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். 200 ஏக்கர் நிலத்தைக் கண்டு பிடித்திருக் கிறார்கள். அந்த நிலத்தை. அங்கிருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கொடுத்தால்கூட சட்டப்படிச் செல்லாது என்று உயர்நீதிமன்றம்



தீர்ப்பளித்திருக்கிறது. அந்தக் கிராமத்திலேயே, அந்த மாவட்டத்திலேயே இல்லாதவர்கள் எல்லாம் குத்தகைதாரர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இது போல் மாநிலம் முழுவதும் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை நிலப் பிரபுக்கள் ஏமாற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று ஆயிரம் ஏக்கர் 500 ஏக்கர் என்று சொந்தப் பண்ணை நிலமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நாங்கள் நிலமீட்சிப் போராட்டம் நடத்தியதை சபையில் எல்லோரும் அறிவார்கள். இந்தியா முழுவதிலும் நடத்தப்பட்டது. தமிழகத்திலே அப்படிப் பல பண்ணைகள் இருக்கின்றன. திருச்சியில் தங்கவரம் பண்ணை. அதிலிருந்து ஆயிரம் ஏக்கர் உபரியாக எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று குன்னியூரார் பண்ணை, வடபாதி மங்கலம் பண்ணை, வாண்டையார் பண்ணை என்றெல்லாம் இருக்கிறது. எப்படி அரசு அவர்களிடமிருந்தெல்லாம் நிலங்களை மீட்கப் போகிறார்கள் என்று இப்போது நமக்குப் புரியவில்லை. உத்தரப் பிரதேசத்தில்கூட லக்சம்பர்க் பண்ணையை எடுத்து உழுகின்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர், 2½ ஏக்கர் என்று கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 10,000 ஏக்கரை எடுத்து அப்படி விநியோகித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் அப்படி நிறைய எடுத்து விவசாயி களுக்கு, உழவர்களுக்கு விநியோகிக்க வேண்டும். அந்த முறையில் சட்டம் கொண்டுவர வேண்டும். குத்தகைதாரர் களுக்குச் சொந்தப்படுத்துகிற சட்டம் என்று சொல்ல வேண்டுமே தவிர குத்தகைதாரர்கள் நிலத்தை வாங்குகின்ற சட்டம் என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை இந்தச் சட்டம் என்றையதினம் அமலுக்கு வருகிறதோ அன்றைய தினத்திலிருந்து குத்தகைதாரர்கள் இந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகிறார்கள் என்ற விதத்தில் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்து ஒருசில கருத்துக்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய நாடு வேளாண்மையைப் பெரிதும் நம்பியிருக்கும் நாடு... கிராமங்கள் மிகுந்திருக்கும் நாடு. இந்த நாட்டில் கிராமப் பொருளாதாரம், சரியாக, சீராக அமைந்திட்டால்தான் நாட்டுப்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1973 ஏப்ரல் 2

பொருளாதாரம் சீராக இருக்கும் என்பது எல்லோருக்குமே விளங்கும். கிராமப் பொருளாதாரம் சீராக இருக்க வேண்டுமென்று சொன்னால், கிராமங்களில் உழுகின்ற விவசாயிகளுக்கு அவர்களுடைய வாழ்க்கைப் பொருளாதாரம் சீராக இருக்க வேண்டும். இதற்காக உழுகின்றவர்களுக்கு அந்த நிலத்தை உடைமையாக்க வேண்டுமென்ற கொள்கையானது பல ஆண்டுகளாக, பல தலைமுறைகளாக, பல பத்தாண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகின்ற தத்துவம். அதனை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருப்பதை வரவேற்கிறேன்.

இந்தக் கிராமப் பொருளாதாரத்தைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, உழவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று சொல்லும்போது ஃப்ராக்மென்டேஷன் வரும், நிலங்கள் மீண்டும் பிரிவினை ஆகி பொருளாதாரத்தைக் கெடுத்துவிடும் என்ற அச்சம் தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமெரிக்க நாட்டு ஸ்தானிகராக இருந்த செஸ்டர் பௌல்ஸ் இங்கிருந்து திரும்பிச் சென்ற பிறகு 'அம்பாஸடர் ரிப்போர்ட்' என்ற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். உழவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிடுவதால் ஃப்ராக்மென்டேஷன் வரும் என்று சொன்ன வாதத்திற்கு அழகாக அதிலே பதில் சொல்லியிருக்கிறார்கள். அது எதிர்ப்பு வாதமாக இருக்க முடியாது.

ஒன்றை நாம் செய்ய வேண்டும். நிலங்களைப் பிரித்துக் கொடுத்த பிறகும் சரியாக, பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் லாபகரமாக சாகுபடி செய்வதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். அதற்காகத்தான் கூட்டுறவு முறைகள் இருக்கின்றன. சர்வீஸ் கோவாப்பரேட்டிவ்ஸ், ஜாயின்ட் ஃபார்மிங் மூலம் ஃப்ராக்மென்டேஷனை அகற்றிட முடியும். நிலத்தில் பாடுபடுகின்றவனுக்கு வாழ்க்கை நடத்த வசதி இருக்க வேண்டும்; பாடுபட உற்சாகம் இருக்க வேண்டும். இந்த இரண்டும் அடிப்படைத் தத்துவங்கள். இந்த இரண்டு அடிப்படைத் தத்துவங்களை வகுத்துத்தான் நிலத்தை உழுபவனுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று சொல்லுகிறேன்.



1973 ஏப்ரல் 2] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

இதைச் செய்யும்போது ஒன்றை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தத்தை சிறுகச் சிறுக, பகுதிப் பகுதியாகச் செய்யும்போது அது பல கேடுகளுக்குக் காரணமாகி விடுகிறது. சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வழி ஏற்படுகிறது. இது முழுமையாக இருக்க வேண்டும். அதே சமயத்தில் விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்ய என்னவெல்லாம் ஒத்தாசை புரிய வேண்டுமென்பதைப் பற்றியும் அரசு திட்டங்களை வகுத்துச் செயலாற்ற வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஆங்காங்கு நங்கவரம் போன்ற பல பண்ணைகள் இருக்கின்றன. இப்படி ஒரு சட்டத்தையும் கொண்டு வந்துவிட்டு ஆயிரக்கணக்கான ஏக்கர்களை வைத்துக்கொண்டு இருப்பதற்கு அனுமதி தருவது என்பது சரியாக இருக்காது. ஆகவே தமிழ் நாட்டில் ஆப்ஸன்டீ லான்ட்லார்டிஸம் இல்லாத ஒரு நிலையை நாம் உண்டாக்கவேண்டும். அதேபோல் உழவர்கள் உழவடை செய்கிற நிலத்திலிருந்து அவர்கள் தங்கள் வாழ்க்கையை சரிவர நடத்தும் ஒரு நிலையை உண்டாக்கினால்தான் நமது செயல் சரிவரச் செய்த செயலாகும்.

அடுத்து. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நிலை இருப்பதாக எனக்குத் தகவல் வருகிறது. குத்தகைப் பதிவுச் சட்டம் இருக்கிறது. இந்தக் குத்தகைப் பதிவுச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அங்கே ஒரு முறையைக் கையாள்வதாகச் சொல்கிறார்கள். குத்தகைதாரர்களை எல்லாம் அவர்களின் பெயர்களை மாற்றிவிட்டு தண்ணீர் இறைப்பதற்கான லைசென்ஸ்கள் என்று மாற்றி வைத்து குத்தகைதாரர்கள் பதிவுச் சட்டத்தின்படி அவர்களைப் பதிவு செய்ய விடாமல் தடுத்து நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே. எந்தக் காரணத்தைக் கொண்டும் மெய்யான குத்தகைதாரர் எவருக்கும் சட்டத்தின்படி உள்ள உரிமைகள் பறிக்கப்படாமல் தகுந்த பாதுகாப்பைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று. அதற்காக அவர்கள் கோவில்களுக்கு விதிவிலக்குத் தரவேண்டுமென்று சொன்னார்கள்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1973 ஏப்ரல் 2

இதைப்பற்றி ஒரு 'ராங்க் நோஷன்' அல்லது ஒரு 'மிஸ் கன்ஸெப்ஷன்' சிறுபான்மையினர் உரிமை குறித்து இருக்கிறது. சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு என்றால் பாதுகாப்பு எதற்கு? சிறுபான்மையினர் என்ற காரணத்திற்காக அவர்களுக்குத் தனியாகத் தீங்கு செய்துவிடக் கூடாது, அவர்களுக்கு ஓர வஞ்சனை செய்யக்கூடாது என்பதுதான் சரியே தவிர சிறுபான்மையினர் என்பதற்காக அவர்களுக்கு என்று தனிச் சலுகைகள் வழங்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அதாவது . . . (திரு. வா. மை. சுப்பிரமணியம் ... எழுந்தார்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): க்ளாரிபிக்கேஷன் என்றால் அவர்கள் பேசி முடித்த பிறகு க்ளாரிபிகேஷன் கேளுங்கள்.

*திரு. ஏ. சுப்பிரமணியம்: சமுதாய நலன் கருதி சமுதாய முன்னேற்றத்திற்காக மற்றவர்களுக்குச் செய்யப்படுவதில் இருந்து விதிவிலக்கு கோருவது சரியல்ல. அது சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புத் தருவதாகாது. ஆகவே பாதுகாப்பு என்று சொன்னால் எல்லோருக்கும் ஒரே வகையில் பாதுகாப்பு இருக்க வேண்டும். சிறுபான்மையினர் என்பதற்காக அவர்களுக்கு விதிவிலக்கு இருக்கக்கூடாது.

அடுத்து, இந்தச் சட்டத்திலிருந்து யாருக்குமே விதிவிலக்கு இருக்கக்கூடாது. அரசாங்க நிலம் உட்பட விதிவிலக்கு இருக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்வேன். காரணம், அரசாங்கம் இன்று பெரிய முதலாளியாக ஆகிவிடுகிறது. ஏராளமான நிலங்களுக்குச் சொந்தக்காரராக ஆகிவிடுகிறது. ஆகவே அரசாங்க நிலங்களுக்கும் கூட விதிவிலக்கு இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, இச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. நான் பல திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். குறிப்பாக, குத்தகைதாரர்கள் நிலத்தை வாங்கிக் கொள்வதில் டைம் லிமிட் கொடுப்பது என்பது கூடாது. காரணம் அவர் குத்தகைதாரர். குறித்த நேரத்தில் பணம் அவரிடம் இருக்க முடியாது. ஆகவே, அதற்குக் கால்வரையறை இருக்கக்கூடாது. ஆனால் நிலத்தைச்



1973 ஏப்ரல் 2] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

சொந்தச் சாகுபடிக்கு எடுத்துக்கொள்வதில் காலவரையறை குறிப்பிடப்படாமல் இருக்கிறது. இது தலைகீழாக இருக்க வேண்டும்.

சொந்தத்தில் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளக் காலவரையறை வேண்டும். ஆனால் குத்தகைதாரர் அதை வாங்கிக்கொள்வதற்குக் காலவரையறை இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, நாம் சட்டங்கள் இயற்றிவிடுகிறோம். பிறகு அந்தச் சட்டம் சரியாகச் செயல்படுகிறதா என்பதற்கு உத்தரவாதம் பார்க்க வேண்டும். இன்று நாட்டில் பல சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் அந்தச் சட்டங்களை உடைத்து தப்பித்துக்கொள்கிறார்கள் பலர்.

நாம் இயற்றுகிற சட்டத்தின் பலன் குத்தகைதாரர்களுக்கு சரியாகக் கிடைக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி தரப்பில் ஒரு கருத்து சொன்னார்கள். இதைக் கவனிக்க மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது நல்ல கருத்து. அப்படிச் செய்வதால் தவறுகள் நடக்காமல் இருக்கும். குத்தகை இருந்தும் ஏட்டில் இல்லாத காரணத்தால் அவர்கள் குத்தகைதாரர்கள் அல்ல என்று நிலச் சொந்தக் காரர்கள் சொல்வதற்கு வழி இல்லாமல் செய்யவேண்டுமென்று சொன்னால் மக்கள் பிரதிநிதிகள் கையில் இதை ஒப்படைத்து விட்டால் அவர்களுக்கு நன்கு தெரியும் யார் யார் குத்தகை தாரர்கள் என்று. கேரளா சட்டத்தில் ஒன்றை வைத்திருக் கிறார்கள். தாங்கள்தான் குத்தகைதாரர்கள் என்று நம்பும்படி அவர்கள் சொல்லிவிட்டால் போதும், அவர்கள் வார்த்தையை எடுத்துக்கொள்ளலாம் என்று, அங்குள்ள சட்டத்தில், கேரளாச் சட்டத்தில் அப்படி வைத்திருக்கிறார்கள்.

ஒரு கமிட்டி என்றால் அதில் உள்ள உறுப்பினர்களுக்குத் தெரியும், உள்ளூரில் இருப்பவர்களுக்குத் தெரியும் யார் யார் குத்தகைதாரர்கள் என்று. ஆகவே அது ஒரு சிறந்த யோசனை யாகும். அதோடு தாமதம் இல்லாமல் விரைவில் இது நடைபெற வேண்டும். தாமதமாகிவிட்டால் பல தவறுகள் ஏற்படும், பயன் இல்லாமல் போய் விடும். ஆகவே நிலத்தைக் கொடுப்பதில் தாமதம் ஏற்படக்கூடாது என்று கூறி விடைபெறுகிறேன்.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, 'உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும்' என்ற நல்ல தத்துவத்தின் அடிப்படையிலேயும், உழைப்பவனுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்ற நல்ல லட்சியத்தின் அடிப்படையிலும் இந்த நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற நம் அரசை நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்தின் வாயிலாக இன்றைக்கு லட்சோபலட்சம் உழவர் பெருமக்கள் மகிழ்ச்சிக் கடலில் இருக்கிறார்கள் என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. இந்தச் சட்டத்தைத் தாமதப்படுத்தும் வாயிலாக அல்லது பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவதன் வாயிலாக இந்தச் சட்டத்தினுடைய முக்கியத்துவத்தை நாம் நிறைவேற்றுவதிலிருந்து தவறிவிடக்கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் அழுத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், நிலத்தை வைத்திருப்பவர்கள் எப்படி எப்படி எல்லாம் இதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று இன்றைக்கு யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

நாம் எவ்வளவுக்கெவ்வளவு இங்கு பேசிக்கொண்டு நேரத்தை வீணாக்குகிறோமோ, அதேநேரத்தில் அவர்கள் பல யோசனைகளை உருவாக்கி இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு வழி வகைகளை கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே எவ்வளவு சீக்கிரமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியுமோ, அந்த அளவிற்கு இதை விரைவில் நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்வதினால் இலட்சோப லட்சம் உழவர் பெருமக்கள் நம்மை வாழ்த்துவார்கள் என்றும் நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் காம்பன்சேஷன் கொடுக்கிற நேரத்தில், பத்து பதினைந்து ஏக்கர்கள் வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் நிலங்களை எடுத்துக்கொள்ள 12 ஆண்டு வருமானத்தைக் கணக்கிட்டு காம்பன்சேஷன் கொடுக்கிறார்கள்.

நான் சிறிது தீவிரமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 12 ஆண்டுகள் அல்லது 15 ஆண்டுகள் குத்தகையை அனுபவித்து வந்தவர்களிடம் இருந்து நிலத்தைப் பெறும்போது அவர்களுக்குக் காம்பன்சேஷன் கொடுக்காமலேயே அந்த நிலம் குத்தகைதாரருக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும். இதை நான் மிகவும் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இன்னொன்று திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள், ஐந்து ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்திருப்பவர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று. திரு. கணபதி அவர்களைப் போன்றவர்கள் இங்கு வக்கீல்களாக இருந்துகொண்டு அங்கிருக்கிற நிலத்திலிருந்து வரும் அரிசியைத்தான் சாப்பிட வேண்டும் என்ற ஒரு நியதி கிடையாது. அவர்கள் வாங்கிக் கூடச் சாப்பிடலாம். ஆகவே அவர்கள் சொன்னதைப்போல் ஒரு சின்ன விதிவிலக்கு கூட இந்தச் சட்டத்தில் வைக்காமல் இருப்பது மிகவும் நல்லது.

**திரு. என். கணபதி:** வக்கீல் வேலை செய்பவர்கள் விலைக்கு அரிசி வாங்கிச் சாப்பிடலாம் என்று சொல்கிறார்கள். வக்கீல் வேலை செய்வதற்குத் திறமையான மூளை வேண்டும். அதற்கு நல்ல அரிசி சாப்பிட்டால்தான் அங்கு நல்லபடியாக வக்கீல் வேலை பார்க்க முடியும்.

**திரு. கு. காமாட்சி:** சென்னையில் இருப்பவர்களுக்குப் பல ரகமான அரிசிகளைப் பார்த்து வாங்குவதற்கான சூழ்நிலை இருக்கிறது. ஆத்தூர் கிச்சடி, காஞ்சிபுரம் கிச்சடி, பக்கத்தில் உள்ள ஆந்திராவில் இருந்து வரும் நெல்லூர் அரிசி இவையெல்லாம் கிடைக்கின்றன. ஆகவே அது தேவையில்லை என்று கூறிக் கொண்டு இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்று அமர்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக, நல்ல சோஷலிச நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிற இந்த அறநிலைய நிலங்களை எடுக்கும் சட்டத்தை பார்வேர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை, பல ஆண்டுகளாக, பல காலமாக For each one according to his position and for each one according to his capacity, என்ற காரல் மார்க்ஸின் மகத்தான திட்டத்தை, உலகத்திலுள்ள சோஷலிஸ நாடுகள் அத்தனையும் அவர்களுடைய புகழ், சரித்திர அமைப்புகள், மக்கள் பிரச்சினைகள் இவற்றிற்கு உகந்த முறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முறையில், காந்தி அடிகள் கூறியதுபோல் இந்த நாட்டு மக்களின் கலாசாரம், மனோநிலை இவற்றை அடிப்படையாக வைத்து செய்ய வேண்டுமென்ற முறையில். நேதாஜி போஸ் அவர்களைப் போன்றவர்களின் முற்போக்குத் திட்டங்களை இன்று நம் கலைஞர் அவர்களின் அரசு கொண்டுவருவதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயக நாட்டிலே டெமாக்ரசி என்றால் ரூல் பை மெஜாரிட்டி என்று பொருள்—நாம் அரசாங்கத்தை மெஜாரிட்டி மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சி நடத்துகிறோம். ஆகவே, இந்தச் சட்டம் லட்சக்கணக்கான மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய சட்டமாக இருக்கிறது, ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்கும் சட்டமாக இருக்கிறது என்று இருந்தபோதிலும், பெரும்பான்மையான மக்களின் உள்ளத்தை பாதிக்காத வகையில், ஓரளவுக்கு அந்த மக்களும் இதைப் புரிந்து கொள்ளும் அடிப்படையில் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, அதன் மூலம் மக்களுக்கு இதனுடைய தன்மைகளை எடுத்துக் கூறி, மேலும் இந்தச் சட்டத்தை விரிவாக ஆராய்ந்து அந்த மக்களும் நல்ல முறையில் புரிந்து கொள்ளும் வகையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், இந்தச் சட்டம் மத சம்பந்தமாக உள்ள சொத்துக்களைப் பாதிக்கிற காரணத்தால், மத உணர்ச்சியுள்ள மக்கள் பெரும்பான்மையாக இருக்கிற காரணத்தால், அவர்களுடைய உணர்ச்சிகளுக்கும் மதிப்புக்கொடுத்து, அவர்கள் மனம் புண்படாத வகையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





இது காலதாமதப்பட்டால் நிலச்சுவான்தார்கள் இதில் பல கோளாறுகளைச் செய்துவிடுவார்கள் என்று எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் ஐயம் தெரிவித்தார்கள். அது உண்மையென்றாலுங்கூட, நாம் பல சட்டங்களைக் கொண்டு வருகிறோம், அப்படிக்கொண்டு வரும்போது அந்தச் சட்டங்களுக்கு 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்தும் கொண்டு வருகிறோம். பல மாதங்கள், பல வருஷங்கள் முன்பு அந்தச் சட்டத்திற்கு அதிகாரம் கொடுக்கிறோம். அந்த முறையில் இந்தச் சட்டத்திற்கும், 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து கொண்டு வரலாம்

ஆகவே, இதைப் பொறுக்குக் கமிட்டிக்குக் கொண்டு வரலாம் என்று கூறிக்கொள்கிறேன். அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அமைச்சர் அவர்களும், கலைஞர் அவர்களும் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்தால் நாம் ஒரு நல்ல சட்டமாக இதைக்கொண்டு வரலாம் என்று என்னுடைய கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கையின் அடிப்படையில் அரசு இன்று நிலங்களை ஆர்ஜிதம் செய்து முன் வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். அவர்கள் 12 வருடத் தவணையில் அந்த நிலத்தின் மதிப்பை செலுத்தலாம் என்று சொல்லியுள்ளதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். 1-2 உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கு 'வித் அவுட் காம்பன்சேஷன்' நஷ்ட ஈடு கொடுக்காமல் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அது மிகப் புனிதமான சோசலிசக் கருத்துத் தான், என்றாலும் கூட நாட்டில் சோசலிச கருத்தைச் சட்டமாக்கி விட்டால் மட்டும் போதாது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி நடைமுறைப்படுத்துகிறபோது, மக்கள் இந்தச் சட்டம் நமக்காக கொண்டுவரப்பட்ட சட்டம், நம்முடைய சகோதரர்களை வாழ்விக்க வந்த சட்டம் என்ற பொறுப்புணர்ச்சியோடு அதை அவர்கள் அணுகவேண்டும். அப்படிப்பட்ட முறையில் சட்டங்களைக் கொண்டு வந்தால் தான் நாட்டில் சோசலிசமும் கொண்டு வரமுடியும், நாட்டுமக்களுக்கு நன்மையையும் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்போது தான் இப்படிப்பட்டச் சட்டங்களையும் நல்ல முறையில் நாம் நடைமுறைப்படுத்த முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் இன்னும் பக்குவம் அடையாத மக்கள் பலரை வைத்திருக்கிறோம். அவர்களையும் பக்குவப் படுத்தி, அவர்களிடத்திலும் இத்தகைய திட்டங்களை எடுத்துச் சொல்லி, அவர்களுடைய ஒத்துழைப்பும் பெற்று இந்தச் சட்டங்களை அமல்படுத்துவது தான் நல்லது என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய சகோதரர்கள் 'மைனாரிட்டிக்கு ப்ரொடெக்ஷன்' வேண்டுமென்று கேட்டார்கள். இந்துக்கள், கிருஸ்தவர்கள், முஸ்லீம்களுக்கு நல்ல பாதுகாப்புத் தேவைதான். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. இங்கே 'அன் ஆர்களைஸ்டு கம்யூனிட்டியாக' இருக்கும் சமுதாய மக்களுக்கும் பாதுகாப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலைஞர் அரசு இதைக் கருணையோடு கவனித்து செய்யவேண்டுமென்று கோரி, இந்தச் சட்டத்தை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவதால் பாதகம் ஏற்படாது. ஆகவே, இதை அனுப்பி வைக்கவேண்டுமென்று கோரி, முடித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி. சி. கந்தசாமி : மாற்றுத்தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல சட்டம். இந்த நல்ல சட்டத்தை நல்ல விதத்தில் அமல்படுத்தவேண்டுமென்பதில் பெரிய அக்கறை இருக்கிறது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் 3,86,520 குடியானவர்கள், குத்தகைதாரர்கள் பயன் அடையப்போகிறார்கள். 5,89,505 ஏக்கர் நிலங்கள் அவர்களுக்குச் சொந்தமாக்கப்படவிருக்கிறது. சில உறுப்பினர்கள் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொன்னார்கள். இந்த மாதிரியான நல்ல சட்டத்தை சுடசுடக்கொண்டு வந்தால் தான் என்ன பலனை அது நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பி கொண்டுவருகிறோமே அதை அடைய முடியும்.

மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் எப்போதும் சொல்வது போல் ஒரு வாதம் சொன்னார்கள். நிலத்தைத் துண்டாடுவதால் உற்பத்தி அதிகமாகாது என்று சொன்னார்கள். நிலச்சீர்திருத்தம்



வந்த பிறகு இன்று நாட்டில் உணவு உற்பத்தி ஏராளமாகப் பெருகியிருக்கிறது. அதைத்தான் இன்றுள்ள நாட்டின் நிலைமை எடுத்துக்காட்டுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : உரம், இர்ரிகேஷன் பெசிலிடீஸ் முதலியவற்றினால் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. இன்னும் இதை நன்றாகச் செய்திருந்தால், இன்னும் அதிகமான உற்பத்தியைப் பெருக்கியிருக்க முடியும். இதை அவர்கள் கட்சி உறுப்பினர்கள் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் நான் சொன்னேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : நிலச்சீர்திருத்தம் வந்தபிறகு தான் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்று பிளானிங் கமிஷன் கூடச் சொல்லி இருக்கிறது. உலகமே அழிந்தாலும் தனிவுடைமைக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று தான் அவர்களே கூறுவார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் சொன்னது வேறு. அவர்களுடைய கொள்கை பிரகாரம், டெனன்ட்ஸ் கூட உரிமையாளராக இருப்பதற்கு சான்ஸ் கிடையாது. Nobody should possess a cent of land. Everything should be nationalised. பாலிசி பேசவேண்டிய தேவையில்லை. என்னுடைய பாலிசிக்கும் அவர்களுடைய பாலிசிக்கும் வித்தியாசம் இருக்கிறது. Even tenants cannot hold the lands. அவர்களுடைய கொள்கைபடி எல்லாமே சமுதாயத்திற்குச் சொந்தம் நாட்டுக்குச் சொந்தம். **Therefore, let us not go into it.** நான் சொல்வது என்னவென்றால் கூடிய வகையில் சிறிய சிறிய நிலச் சொந்தக்காரர்கள் 4 ஏக்கர் 3 ஏக்கர் வைத்து இருக்கிறவர்களை வாழவிடலாம் என்று தான் சொல்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : நம்முடைய ஹாண்டே அவர்கள் உடனடியாக இருக்கக்கூடிய பிரச்சினையைப் பார்க்காமல், ஆயிரம் வருடத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்பதைப் பற்றி

எண்ணிப் பார்க்கிறார்கள். எங்கே கம்யூனிசம் வந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள். நாட்டு மக்கள் சம்மதம் இல்லாமல் எதுவும் செய்யவும் முடியாது.

இன்று விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுப்பதற்காக நாங்கள் சொல்கிறோம். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் கொடுக்கச் சொல்கிறோம். இன்னும் 10-15 வருடத்திற்குப் பிறகு எப்படி இருக்கும் என்பதை யார் சொல்வது. 15 வருடத்திற்குப் பிறகு நாமே எப்படியிருப்போமோ? அப்போது இருக்கிற அரசாங்கத்தின் அபிப்பிராயத்தைப் பொறுத்தது அது. ஆகவே, அதைச் சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை.

இந்த 2—3 மாதம் ஒத்தி வைத்தால் அதனால் பல சிக்கல்கள் வரும். முதலாளிகள், அவர்களுக்குப் பக்கபலமாக இருப்பவர்கள் டமாரம் அடிக்கத் தொடங்கிவிடுவார்கள். பத்திரிகைகளில் எழுதுவார்கள். ஆகவே தான் இதை உடனடியாகச் சுடச்சுட நிறைவேற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதால் யாருடைய முதலும் மூழ்கிப் போய்விடவில்லை. 5 ஏக்கருக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். இந்த நாட்டிலே நிலத்தை வாங்குவதற்கும் விற்பதற்கும் உரிமை இருக்கிறது. அது அவருடைய 'பன்டமன்டல் ரைட்ஸ்' இந்தியாவில் நிலத்தை வாங்குவதற்கும் விற்பதற்கும் உரிமை உண்டு.

இன்றைய தினம் சர்க்காரே அந்த நிலங்களை எடுத்துக் கொண்டு, அதை டெனன்ட்ஸ்களுக்கு உரிமையாக்கவேண்டும். அப்படிச்செய்வது ரொம்ப சிக்கல் இல்லாமல் இருக்கும். ஆபத்து ஏற்படாது. இன்றைய தினம் கையெழுத்துக்கூட போடத் தெரியாமல் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த சட்ட நுணுக்கங்கள் எல்லாம் தெரியாது. ஆகவே, அவர்கள் மிகச் சுலபமான முறையில் அந்த நிலங்களைப் பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டும். அவர்களுக்கு நீங்கள் தான் கார்டியன். எனவே,





இந்தச் சட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பை நீங்கள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே தான் நான் இதைச் சொல்கிறேன்.

12 மாதமோ, 12 வருஷமோ—அவ்வளவு தவணைகளில் வாங்குவது என்ற முடிவுக்கு வந்ததற்குப் பிறகு தவணைகளில் வாங்கக் கூடிய உரிமையையும் சேர்த்து அரசாங்கமே பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நாங்கள் இதில் செயல்பட முடியும். ஆனால் பல இடங்களில் விவசாயிகள், அப்பாவிகளாக இயக்கமேதுமில்லாமல், ஸ்தாபனமில்லாமல், இந்த உரிமையைப் பெறுவதற்கு வேறு கட்சிகள் முன்வந்தால், அதை ஏற்றுக்கொள்ளக் கூட முடியாத நிலையில், கொடுத்த உரிமையை அனுபவிக்கக் கூட முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் இந்த உரிமைகளைக் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும். நாங்கள் இதில் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். இப்படி மாற்றிக்கொண்டு வருவது தான் நல்லது.

ரிசம்பஷன் பற்றி பலர் பேசினார்கள். ஒருவன், பைத்தியமாகவோ, திறமையற்றவனாகவோ, அல்லது ஒரு விதவையாகவோ இருந்தால், இப்படிப்பட்ட இனங்களைச் சேர்ந்தவர்கள் நிலத்தை வைத்துக்கொண்டிருப்பதைப்பற்றி சிந்திக்கலாம். அவர்கள் இந்த குத்தகையை தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்க அனுமதி அளிக்கலாம். புத்தி சுவாதீனமற்றவர்கள், வேறு வழியே இல்லாமல், வாழ்வதற்கு இதையே நம்பி இருக்கக்கூடிய விதவைகள் ஆகியவர்கள் பற்றி சீக்கிரத்தில் முடிவுக்கு வந்து விடலாம். செலக்ட் கமிட்டியில் வாதப்பிரதிவாதங்கள் தான் அதிகமாக இருக்குமே தவிர, நிலைமையைக் குழப்பவேண்டுமென்று நினைக்கிற குழப்பவாதிகள் பண்டிதர்கள் விவாதம் பண்ணுகிற அளவுக்குத்தான் செலக்ட் கமிட்டி இருக்குமே தவிர, வேறெதுவும் நடக்காது. காரியத்தை சீக்கிரமாகச் செய்ய வேண்டும், சுருக்கமாகச் செய்ய வேண்டும். மக்களுக்கு எதையும் சூடாகத் தரவேண்டும். எனவே, செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பொறுக்குக் குழு போடுவதன் காரணமாக பிரச்சினை ஆறிவிடும், இடையிலுள்ள ஒருமாத காலத்தில் இந்தப் பிரச்சினையின் சூட்டை தணித்துவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடக் கூடும் என்ற கருத்தினை பெரியவர் மணலி அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். நான், இந்த இரண்டிற்கும் பொதுவான ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். விவாதம் நாளைக்கும் தொடர்ந்து நடைபெற விருக்கின்றது. ஆகவே, பொறுக்குக் குழுவுக்கு விடாமலும், அதே நேரத்தில் எல்லாத் தலைவர்களையும் கலந்து ஒரு ஏற்பாட்டினைச் செய்வது நல்லதாக இருக்குமென்ற வகையில், அந்த ஏற்பாட்டினைச் செய்துகொள்ள வேண்டி, இன்று மாலை நான்கு மணிக்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எல்லாத் தலைவர்களையும் சந்தித்துப் பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். குறிப்பிட்ட சில தலைவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் கேட்கப்படவில்லை. அவ்வாறு நான்கு மணிக்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மற்ற தலைவர்களும் பேசிய பிறகு, நானும், அவரும், சட்டத் துறையிலுள்ளவர்களும் பேசி நாளைக்கு முடிவு செய்து கொள்ளலாம். இந்தப் புதிய ஏற்பாட்டிற்குக் கம்யூனிஸ்டுக் கட்சியும், ஆளும் காங்கிரஸ் கட்சியும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவரவர்களே, எங்களைப் பொறுத்தவரையிலும் நாங்கள் ஒத்துழைக்கத்தயாராக இருக்கிறோம். தாராளமாக, 4 மணிக்கு வரத் தயாராக இருக்கிறோம், கருத்துக்களைச் சொல்லவும் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, நாங்களும் வந்து எங்கள் கருத்தைச் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, முஸ்லீம் லீக் கட்சியினர் விருந்து வைத்திருக்கிறார்கள். ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் எங்களை விட்டால் போய்ச் சேருவதற்கு வசதியாக இருக்கும். (குறுக்கீடு) நாங்கள் மட்டுமல்ல, எல்லோரும் தான்.



**திரு. எம். ஏ. லத்தீப்:** இந்தக் கருத்தைத் தெரிந்து கொள்வதற்கு கட்சித் தலைவர்கள் மட்டுமல்லாமல், கட்சிச் செயலாளர்களும் அழைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கட்சித் தலைவருக்குத் துணையாக யார் வேண்டுமானாலும் வரலாம். துணையாக இருந்து கருத்து பரிமாறிக்கொள்ளலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இப்போது எல்லோரும் விருந்துக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஸ்ஸுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கமிட்டி ரூம் காலியாக இருக்கிறதா என்பதை அறிந்து காலியாக இருந்தால், கமிட்டி ரூமிலேயே விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன், உங்களுடைய அறை போதாதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கமிட்டி ரூம்தான் இருக்கிறதே—என்பதால் தான் சொன்னேன்.

(திரு. மணலி கந்தசாமி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மணலி கந்தசாமி அவர்கள் தம்முடைய பேச்சை நாளைக்குத் தொடரலாம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை நாளைக் காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.25 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

### (6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

92. Notification issued with G.O. Ms. No. 2649, Rural Development and Local Administration, dated the 22nd December 1972, in regard to certain amendments to the Rural Development and

Local Administration Department Notification II-2 No. 380 of 1961, published at pages 211 to 212 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 24th May 1961, as subsequently amended. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

93. Notification issued with G.O. Ms. No. 393, Rural Development and Local Administration, dated the 27th February 1973, in regard to date of commencement of the Tamil Nadu District Municipalities (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 5 of 1973). [Laid on the Table of the House under section 304 *(d)* of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

94. Notification issued with G.O. Ms. No. 2154, Rural Development and Local Administration, dated the 10th October 1972, in regard to specification of number of Councillors of certain Municipalities with effect on and from the date of next ordinary elections. [Laid on the Table of the House under section 304 *(d)* of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

B. *Reports, Notifications and Other Papers*

155. Notification issued with G.O. Ms. No. 502, Industries, dated the 22nd March 1973 making the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order, 1973.

@ 156. The Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners ' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973).

† 157. Interim Report of the Committee of Privileges in regard to certain matters of privileges referred to it for examination and report.

158. List of Unstarred Questions and Answers Nos. 1 to 16.

£ 159. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12 of 1973).

---

@ Despatched to Members on 30—3—1973.
† Laid on the Table of the House on 31—3—1973.
£ Despatched to Members on 31—3—1973.



## இணைப்பு I

(150-ம் பக்கத்தில் வெளியிடக் குறிப்பிட்ட வினா எண் 601-க்கு விடை)

### *Development of Inland Fisheries in Chingleput district*

Out of the many ways of supplying fresh fish to a village one way is to develop the tanks in the village by introducing Fish fingerlings in the tanks when they have water, allow them to grow and harvest and sell them to the people in and around the tank and send the surplus to the market. With this aim in view, 37 tanks in Chingleput district have been provincialised for intensive development by the Fisheries Department. Twenty-five lakhs of fish fingerlings composed of Cauvery carps, major carps, common carps and Tilapia are being stocked annually. The fingerlings are brought from Thanjavur, Sathanur, Lalpet and other outstations and stocked in all the 37 provincialised waters free of cost. The fish are grown and the fishery rights either auctioned or leased to nearby fishermen co-operative societies who, in turn, fish these and meet the needs of the people. By leasing or auctioning these tanks, an amount of Rs. 25,000 on an average is realised annually. Last year, the amount fetched was Rs. 33,799.90 p. This scheme not only provides livelihood to the fishermen but also helps the people to get fresh fishes. Under this scheme, an average of 15 co-operative societies are benefited. The estimated catch from these tanks is 1,000 tonnes.

2. Besides these provincialised waters, there are tanks and wells vested with panchayats and panchayat unions. The panchayat unions or panchayats are supplied with fish fingerlings at subsidised cost and they stock the fingerlings in their tanks. Every year, a grant of Rs. 20,000 is distributed to the panchayat unions to buy fingerlings for stocking their tanks, to renovate fallen tanks and to protect the inlet or outlet of tanks where they have introduced fish fingerlings.

3. There are also demonstration tanks numbering 21 in all the places where there is a sub-office. These are located in Kanchipuram, Sriperumbudur, Ponneri, Tiruthani, Poondi and Chingleput. These tanks serve as model tanks where fish breeders are kept and raised. The unwanted fish are also sold from these tanks daily for the benefit of the local fish eating people. Last year, the fish landings from these were, 3,776.550 kgs. and the amount realised by their sale was Rs. 4,787.82 p.

4. This district is endowed with one reservoir at Poondi. The fishery in this reservoir is also being developed. Annually, five lakhs fish fingerlings are stocked in this reservoir. Fishing is allowed by the licence method. There are 400 fishermen in and around the reservoir who depend on it for livelihood. The licence fee ranges from Re. 1 to Rs. 20 per month according to the tackle used. The licence fee realised last year was Rs. 1,086. The estimated fish landings by these licensees is 100 tonnes per annum. Besides licensees, the department has also introduced non-traditional way of fishing to be followed in deep waters by the fishermen. The landings by the Department by this demonstration is five tonnes per annum. When the water level in the reservoir goes down below 120 feet M.S.L. the department conducts major exploitation of fishery after consulting other concerned departments. The last major fishery was in 1969 and the amount realised by the department was Rs. 4,259 after allowing due share to the fishermen.

5. There is a fish farm attached to the reservoir. This farm is designed to keep fish breeders in large quantities and to produce fish hatchings by inducement. Major carps do not breed in tanks or confined waters. So, they are induced by harmone injections and are made to breed in tubes and in cisterns. Pure breed is obtained and supplied to panchayat unions, private parties and also stocked in the reservoirs. Fifty lakhs of fish hatchlings are produced during good rainy season.



6. Other experiments such as fish culture in cages, fish culture in circulating water and in running water are also carried on with success. Implementation on a large scale in the field will be done after the economics are worked out and the cost of feed brought down in less than 25 paise per kilo.

7. The fish culture in circulation water and in running water is specially suited for Chingleput district because the agriculturists use pump sets in a large measure for irrigation. The agriculturists can increase their income by adopting fish culture in cages, or allowing them in enclosed channels which take water from the well up to the limit of the actual fields without any extra cost except cost of feed and cost of fish fingerlings. The experiment has been initiated at Poondi.

8. Under the Socio-Economic Programme, the department is issuing long term loans, medium term loans, housing loan and nylon at subsidised rate and has set up ice plants and freezing plant. Roads are also constructed where necessary to connect fishing villages to main roads. and vehicles provided to facilitate the quick transport of fish catches to marketing centres.

9. The estimated landings of fish in the Chingleput district is about 40,000 tonnes of which one third is from inland waters. There are 26 inland fishermen societies which have formed into a Federation.

*செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்நாட்டு மீனள மேம்பாடு—கிராமத்தில் புத்தம் புதிய மீன்களை வழங்கும் பல வழிகளுள், கிராமத்தில் உள்ள ஏரிகளில் அவற்றில் தண்ணீர் இருக்கும் போது—மீன் குஞ்சுகளை விட்டு ஏரியை மேம்படுத்தி அவற்றை வளரவிட்டு நன்றாக வளர்ந்தவுடன் அவற்றை ஏரியைச் சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு விற்று எஞ்சியுள்ளதை அங்காடிக்கு அனுப்புவது ஒரு வழியாகும். இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள 37 ஏரிகள் மும்மூர*

மேம்பாட்டுக்காக மீனளத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. காவிரியில் வாழும் மீன் வகைகள், பெரிய மீன்கள், சாதாரண மீன்கள், திலாபியா வகை மீன்கள் ஆகியவற்றைக் கொண்ட 25 லட்சம் மீன் குஞ்சுகள் ஆண்டுதோறும் ஏரிகளில் விடப்பட்டு வருகின்றன. இந்த மீன்கள் தஞ்சாவூர், சாத்தனூர், லால்பேட்டை ஆகிய இடங்களிலிருந்தும் ஏனைய இடங்களிலிருந்தும் கொண்டு வரப்பட்டு மீனளத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்ட 37 ஏரிகளில் இலவசமாக விடப்படுகின்றன. இந்த மீன்கள் வளர்க்கப்பட்டு மீன்பிடி உரிமைகள் அண்மையில் உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏலத்தில் விடப்படுகின்றன அல்லது குத்தகைக்கு விடப்படுகின்றன. அவர்கள் இந்த ஏரிகளில் மீன் பிடித்து மக்களின் தேவையை நிறைவு செய்கின்றனர். இந்த ஏரிகளில் மீன் பிடிக்கும் உரிமையை ஏலத்தில் அல்லது குத்தகைக்கு விடுவதால், ஆண்டுதோறும் சராசரியாக ரூ. 25,000 வருவாய் கிடைக்கிறது. கடந்த ஆண்டில் இந்த வகையில் கிடைத்த தொகை ரூ. 33,799.90; இத்திட்டம் மீனவர்களுக்கு வாழ்க்கை வசதி அளிப்பதோடு மட்டுமல்லாமல் மக்களுக்குப் புத்தம் புதிய மீன்கள் கிடைக்கவும் உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் சராசரியாக 15 கூட்டுறவுச் சங்கங்கள் பயனடைகின்றன. இந்த ஏரிகளில் 1,000 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

2. மீனளத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த ஏரிகளைத் தவிர ஊராட்சிகளிடமும், ஊராட்சி ஒன்றியங்களிடமும் நிலைபெற்றுள்ள ஏரிகளும் கிணறுகளும் உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் குறைந்த விலையில் மீன் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. அவர்கள் அவற்றை தங்களுடைய ஏரிகளில் வளர்க்கின்றனர். தங்களுடைய ஏரிகளில் மீன் வளர்க்க மீன் குஞ்சுகளை வாங்கவும், தூர்ந்து போன ஏரிகளைச் சீரமைக்கவும், துறையால் வழங்கப்பட்ட மீன் குஞ்சுகள் விடப்பட்ட ஏரிகளில் நீர் பாயும் வழியையும், வடிகாலையும் பாதுகாக்கவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒவ்வொராண்டும் ரூ. 20,000 மானியமாக வழங்கப்படுகிறது.



3. துணை அலுவலகங்கள் உள்ள இடங்களில் கட்புல விளக்க ஏரிகள் 21 இருக்கின்றன. இவை காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், பொன்னேரி, திருத்தணி, பூண்டி, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் உள்ளன. இந்த ஏரிகள், மாதிரி ஏரிகளாகத் திகழ்கின்றன. இவற்றில் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. உள்ளூர் மக்களின் பயனுக்காக இந்த ஏரிகளில் உள்ள தேவையில்லாத மீன்கள் நாள்தோறும் விற்கப்படுகின்றன. கடந்த ஆண்டு, இந்த ஏரிகளில் கிடைத்த மீன்கள் 3,776,850 கிலோ கிராமாகும், அவைகளை விற்றதனால் கிடைத்த தொகை ரூ. 4,787.82 காசாகும்.

4. இந்த மாவட்டத்தில் பூண்டியில் நீர்த்தேக்கம் ஒன்று உள்ளது. இந்த நீர்த்தேக்கத்தில் மீனளம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 5 லட்சம் மீன் குஞ்சுகள் இந்த நீர்த்தேக்கத்தில் வளர்க்கப்படுகின்றன. உரிமம் வழங்கும் முறை மூலம் இந்த நீர்த்தேக்கத்தில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகிறது இந்த நீர்த்தேக்கத்தைச் சுற்றி 400 மீனவர்கள் இருக்கின்றனர். அவர்கள் இத்தொழிலை நம்பி தம் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். மீன் பிடிக்கும் சாதனத்தையொட்டி உரிமக் கட்டணம் திங்களொன்றுக்கு ரூ. 1-லிருந்து ரூ. 20 வரை விதிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,086 இந்த உரிமதாரர்களால் பிடிக்கப்பட்ட மீனின் மதிப்பு ஆண்டொன்றுக்கு 100 டன்னாகும். உரிமதாரர்கள் தவிர மீனவர்கள் பின்பற்றப்பட வேண்டிய ஆழ்பகுதி மீன் பிடி முறையையும் துறை தொடங்கியுள்ளது. இவ்விளக்க முறையின் மூலம் துறையால் பிடிக்கப்பட்ட மீன்கள் ஆண்டொன்றுக்கு 5 டன்னாகும். நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் மட்டம் 120' கடல் நீர் மட்டத்திற்குக் கீழே உள்ளபோது, சம்பந்தப்பட்ட பிற துறைகளைக் கலந்த பின்னர் பெரிய அளவில் மீன்பிடிக்கும் பணியைத் துறை நடத்துகிறது. இறுதியாக பெரிய அளவில் மீன் பிடிக்கல் பணி 1969-ல் நடத்தப்பட்டது. மீனவர்களுக்குச் சேர வேண்டிய பங்கினைக் கொடுத்த பின்னர் துறைக்குக் கிடைத்த வருவாய் ரூ. 4,259.

5. நீர்த்தேக்கத்தோடு இணைந்த மீன் பண்ணை ஒன்று உள்ளது. பெரிய அளவில் மீன்களை வளர்ப்பதற்காகவும், செயற்கை முறையில் மீன் குஞ்சுகளைப் பொறிக்கவும் இப்பண்ணை ஏற்படுத்தப்

பட்டது. பெரிய மீன்கள் ஏரிகளிலோ அல்லது நீரோட்டமில்லாத தண்ணீரிலோ வளராது. எனவே, அவைகளுக்கு ஹார்மோன் ஊசி போடப்பட்டு குழல்களிலும் தொட்டிகளிலும், முட்டையிடுமாறு செய்யப்படுகின்றன. நல்ல மீன்கள் வாங்கப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. அவைகள் நீர்த்தேக்கங்களிலும் வளர்க்கப்படுகின்றன. மழைக் காலங்களில் செயற்கை முறையில் 50 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

6. தொட்டியில் மீன் வளர்த்தல், சுழல் நீரிலும் ஓடும் நீரிலும் மீன் வளர்த்தல் போன்ற பிற சோதனைகளும் வெற்றியுடன் நடத்தப்படுகின்றன. இவற்றிற்கான செலவு மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டு இவைகளின் உணவுச் செலவு கிலோ ஒன்றுக்கு 25 காசுக்கும் குறைவாகக் கொண்டுவரப்பட்ட பின்னர்தான் இத்துறையில் பெரிய அளவில் மீன் வளர்க்கும் முறை செயல்படுத்தப்படும்.

7. குழல் நீரிலும், ஓடும் நீரிலும் மீன் வளர்ப்பது செங்கற்பட்டு மாவட்டத்திற்குச் சிறப்பாகப் பொருந்துகின்றது. ஏனெனில், உழவர்கள் பாசனத்திற்காக விசையேற்றங்களை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். உழவர்கள் தொட்டிகளில் மீன்களை வளர்க்கலாம் அல்லது கிணற்றிலிருந்து வயல் வரப்புவரை நீர் எடுத்துச் செல்லும் கரை அமைக்கப்பட்ட வாய்க்கால்களில் மீன்களை வளர்க்கலாம். இதன் மூலம் மீன் உணவுச் செலவும் செயற்கை முறை மீன் குஞ்சுகளுக்காகும் செலவு தவிர, வேறு செலவு எதுவும் இல்லாமல் உழவர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள இயலும். இப்பரிசோதனை பூண்டியில் தொடங்கப்பட்டுள்ளது.

8. சமூகப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ், நீண்ட காலக் கடன்கள், நடுத்தரக்காலக் கடன்கள், வீட்டு வசதிக் கடன், குறைந்த விலையில் நைலான் வலை வழங்கல் ஆகியவற்றை துறை வழங்குகிறது. மேலும் குளிர்பதன எந்திரங்களையும் உறைய



வைக்கும் எந்திரங்களையும் அமைத்துள்ளது. மீனவர் கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைக்க வேண்டிய அவசியம் உள்ள இடங்களில் சாலைகளும் போடப்படுகின்றன. மீன் பிடிக்கும் இடத்திலிருந்து மீனை அங்காடிக்கு விரைவாகக் கொண்டு செல்லும் வகையில் வண்டிகளும் கொடுக்கப்படுகின்றன.

9. செங்கற்பட்டு மாவட்டத்தில் 40,000 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அதில் மூன்றில் ஒரு பகுதி உள்நாட்டு நீர் நிலைகளில் பிடிக்கப்படுவதாகும். உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 26 உள்ளன. அவை ஒரு கூட்டமைப்பாக அமைந்துள்ளன.

## இணைப்பு —II

[175-ம் பக்கத்தில் 12-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

**பாடல் :** புத்தம் புதியதொரு திட்டம் வருகுது
அத்தனையும் உங்களுக்கே
செலவோ ஒரு ரூபாய்
வரவோ ஒரு லட்சம்.

**ஆண் :** தமிழக பரிசுச் சீட்டின் புதியத் திட்டப்படி
முதல் பரிசு வரிசைக்கும் லட்சம் உண்டு.

**பெண் :** ஆறுதல் பரிசுகளும் உண்டு.

**ஆண் :** தமிழகப் பரிசுச் சீட்டின் வருவாய்
மக்கள் நல் வாழ்வுக்கே பயன்படுகிறது.

**பெண் :** வாங்கிடுவீர் தமிழகப் பரிசுச் சீட்டு!

பாடல் : புத்தம் புதியதொரு திட்டம் வருகுது
அத்தனையும் உங்களுக்கே!

**பாடல் :** தமிழக அரசின் பரிசுச் திட்டம்! பரிசுத் திட்டம்!!
நம்மை கூவுது! நம்மை நாடுது ஆஹா
ஆயிரமாயிரம் பரிசுகள் நமக்காக காத்திருக்குது
தமிழக அரசின் பரிசுத் திட்டம்! பரிசுத் திட்டம்!

**ஆண் :** தமிழகப் பரிசுச் சீட்டின் புதியத் திட்டப்படி முதற் பரிசு வரிசைக்கும் லட்சம் உண்டு.

**பெண் :** ஆறுதல் பரிசுகளும் உண்டு.

**ஆண் :** தமிழகப் பரிசுச் சீட்டின் வருவாய் மக்கள் நல் வாழ்வுக்கே பயன்படுகிறது.

**பெண் :** வாங்கிடுவீர் தமிழகப் பரிசுச் சீட்டு !

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**செவ்வாய்க்கிழமை, 1973 ஏப்ரல் 3**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**1, வினாக்கள்—விடைகள்.**

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

### *Fifth Five-Year Plan*

581 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Centre has consulted the State Government regarding the formulation of the Fifth Five Year Plan ; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) மத்திய திட்ட ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட 'ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை அறிக்கை' தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் முதலமைச்சர்களால் விவாதிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது. அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு மாநில திட்ட வரைவுகளைத் தயாரிப்பதற்காக, மாநில அரசுகளுக்கு மத்திய அரசு வழிகாட்டிக் குறிப்புகளை வகுத்து வழங்கி வந்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவிற்குரிய செயற்குறிப்புகளைத் தயாரிக்கும் பணி மாநிலத் திட்ட ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டக் குழுவின் அறிக்கையினை அரசு ஆய்வு செய்து தமது மாநிலத் திட்டத்திற்கான வரைவை அரசு முடிவு செய்யும்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, இதுவரையிலும் முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்களிலெல்லாம் [illegible] என்ற முறையில் இருந்தன. ஆகவே, இந்தத் திட்டத்திற்கும், அந்தத் திட்டங்களுக்கும் அணுகுமுறையிலும் 'அவுட்லுக்' கிலும் மாற்றம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அணுகுமுறையில் மாற்றங்கள் இருப்பதை ஏற்கெனவே நான் இந்த அவையில் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த அணுகுமுறை எப்படி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய ஏடுகளில் அதன் விவரங்கள் வெளிவந்ததைப் படித்திருக்கக் கூடும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்திற்கு எந்த அளவுக்கு உதவி கிடைக்கும், மத்திய அரசாங்கம் எவ்வளவு அவர்களுடைய ஸ்கீமுக்காகத் தருகிறார்கள் என்ற விவரத்தை முதலமைச்சர் தரமுடியுமா? அதுமட்டுமல்லாமல், இந்த மன்றத்தில் அது பற்றித் தனியாக விவாதம் நடத்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவைப்பற்றிதான் ஏற்கெனவே தேசிய வளர்ச்சிக் குழுவில்—டில்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டில்—விவாதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு தொகை மொத்தத்தில் ஒதுக்குவது என்பதும் மாநிலங்களுக்கு எவ்வளவு என்பதும் இன்னும் இறுதியாக ஆக்கப்படவில்லை. அதுபற்றிய ஆரம்பம் இன்னும் செய்யப்படவில்லை. ஆனால் நம்மைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத் திட்டக் குழுவினிடத்தில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவை அளிக்குமாறு கேட்டதற்கு 1,300 கோடி ரூபாய்க்கு நம்முடைய மாநிலத் திட்டக் குழு ஒரு திட்டத்தை இப்பொழுது நிறைவேற்றுவதற்கென அவர்களுடைய பரிந்துரையாக அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து, எவ்வளவு தொகைக்குத் திட்டம் தீட்டலாம் என்பதைப் பிறகு முடிவு செய்யும்.

**திரு. கே, டி. கே. தங்கமணி:** நமது மாநிலத் திட்டக் குழு 1,300 கோடி ரூபாய் அளவுக்குத் தீட்டியிருக்கிற அந்தத் திட்டத்திற்கும் மத்திய சர்க்கார் ஏற்கெனவே கொடுத்த 'ப்ளான் அப்ரோச்சுக்கும்' ஏதாவது மாறுபாடுகள் இருக்கின்றனவா? அப்படி மாறுபாடு இருந்தால் அதையும் பரிசிலனை செய்து இறுதியான குறிப்பு இங்கே சமர்ப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முதலில் உள்ள வரைவுக்கான அணுகுமுறை, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், திட்டத்தின் அளவு பொறுப்பு குறித்த கருத்து, மற்ற வளர்ச்சி வீதம் குறித்த கொள்கையும் நிதிப் பொறுப்புகளும், வேலை வாய்ப்புகள், சமமான பகிர்வு—வட்டாரப் பகுதிகள் சம்பந்தப்பட்ட நிலை, குறைந்த அளவு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல், ஆகிய இந்த அணுகுமுறையின்படி அந்த வரைவுபற்றிய கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டு அதுபற்றி அங்கு எங்களுடைய கருத்துக்களை அந்தந்த மாநிலத்தின் சார்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 1,300 கோடி



ரூபாய்க்கான திட்டம் இந்த அணுகுமுறையின் அடிப்படையிலேயும் நம்முடைய மாநிலத்தின் தேவைகளைப்பற்றிய நிலையை மனத்திலே வைத்துக் கொண்டும் தீட்டப்பட்டதாகும். இதைப் பிறகு அரசு பரிசீலித்துத்தான், எவ்வளவு தொகை மத்திய அரசைக் கேட்பது என்று முடிவு எடுக்கும்.

**திரு. எ. சுப்பிரமணியம்:** 1,300 கோடி ரூபாய் செலவிற்கு திட்டமிட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். இதற்கான வருவாய் வாய்ப்புகள் எந்த எந்த வகையில் எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது அந்தந்த மாநிலத்தினுடைய ரிஸோர்ஸஸ் அடிப்படையில்தான் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். இன்றைக்குத்தான் நம்முடைய மாநிலத் திட்டக் குழு அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறது. திட்டத்திற்கு மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்படவேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்தெந்த சாத்தியக்கூறுகளில் அந்த வருமானங்கள் கணக்கிடப்படும் என்ற விவரங்களை என்றால் இப்பொழுது சொல்ல முடியாது. ஏனென்றால், மாநிலத் திட்டக் குழுவின் அறிக்கை முழுவதையும் நான் படிக்கவில்லை. அறிக்கை இப்பொழுதுதான் வந்திருக்கிறது.

## தகவல் நிலையங்கள்

* 582 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள தகவல் நிலையங்கள் (Information Centres) எத்தனை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழ் நாட்டில் தற்போது சென்னையில் மாநிலத் தகவல் நிலையம் ஒன்றும், மதுரையில் ஒரு தகவல் நிலையமும், தஞ்சாவூரில் ஒரு தகவல் நிலையமும் ஆக மொத்தம் மூன்று தகவல் நிலையங்கள் உள்ளன.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இந்தத் தகவல்கள் முக்கியமாக ஆற்றும் பணிகள் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அங்கு நூல் நிலையங்கள், படிப்பகங்கள் இவைகளெல்லாம் இருக்கின்றன. அவற்றின் மூலமாக அரசைப் பற்றிய தகவல்களையும் பல்வேறு இலாக்காக்களைப்பற்றிய தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம்.

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, கோவையில் ஒரு தகவல் நிலையத்தை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா? இந்த ஆண்டே அதைத் துவக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது இருப்பது மூன்று தகவல் நிலையங்கள்தான். வேறு எங்கெங்கு நிறுவுவது என்பதுபற்றிப் பிறகு யோசிக்கப்படும்.

**திரு. நா. வே. குருசாமி :** தலைவர் அவர்களே, மாநிலத் திட்டக் குழுவினர் 1,300 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டியிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 'ரிவர்ஸி'ல் போகிறீர்களே.

**திரு. ந. தருமலிங்கம் :** தலைவர் அவர்களே, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இதுபோன்ற நிலையங்கள் அமைக்கப்படும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கோவையைப்பற்றி கேட்ட கேள்விக்கு நான் அளித்த பதில்தான் இதற்கும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, இந்த தகவல் நிலையங்கள் தகவல் சேகரிக்கும் நிலையங்களாகவும், மக்கள் குறைகள் அந்தந்தப் பகுதிகளில் என்னென்ன என்பதை அரசுக்கு அறிவிக்கும் நிலையங்களாகவும் செயல்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது அங்கிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். சேகரித்த தகவல்களை மற்றவர்கள் பெற்றுக்கொள்ள வசதி இருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்த தகவல் நிலையங்களில் மாநிலத்தின் பல்வேறு நிலைமைகளைப்பற்றி ஆராய ஏதேனும் 'ரெபரன்ஸ் புக்ஸ்' இருக்கிறதா ? இல்லை என்றால் 'ரெபரன்ஸ் புக்ஸ்' வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கூடுமானவரையில் அதற்கான நூல்கள் இருக்கின்றன. அவை போதவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை பரிசீலனை செய்யலாம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, இந்தத் தகவல் நிலையங்களில் தமிழ் இலக்கியங்களைப்போல பிறமொழி இலக்கியங்களையும் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அங்கு நூலகங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை தேவை என்றால் அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் :** தகவல் நிலையங்களில் பொது மக்களுக்கு அத்தியாவசியமான சில சாமான்களைப் பெறுவதற்கு கஷ்டமாக இருக்கின்ற நேரங்களில் அவர்களின் கஷ்டத்தைப் போக்குகின்ற வகையில் என்னென்ன பொருட்கள் எங்கெங்கே கிடைக்கும் என்ற விபரங்களை தெரிவிப்பார்களா ? அதுமட்டுமல்லாமல் 'சிட்கோ' போன்ற நிறுவனங்களில் இருந்து பாரங்களை எப்படி பூர்த்தி செய்வது, எந்தெந்த வகையில் கடனைப் பெறலாம் என்று அவர்கள் பொதுமக்களுக்கு தெரிவிப்பார்களா ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டத் தகவல்களைப் போன்றவைகளை அறிவிப்பதற்கு வேறு பல துறைகள் இருக்கின்றன. அவைகள் மூலமாக அந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, 'இன்ஃபர்மேஷன் சென்டர்'களில் எல்லாம் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள் ? அவர்களுக்கு ஆகும் செலவு என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒவ்வொரு தகவல் நிலையத்திற்கும் 25,000 ரூபாய் அளவுக்குச் செலவாகிறது. எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள் என்ற விபரம் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த 'இன்ஃபர்மேஷன் சென்டர்'களில் தகவல் கொடுக்கக்கூடியவர்கள் ஆண்களா அல்லது பெண்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் இப்படி ஒரு கேள்விவரும் என்று அதற்கான விபரத்தைச் சேகரிக்கவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** விளம்பர இலாகா என்று ஒவ்வொரு ஜில்லா ஹெட்குவார்ட்டர்சிலும் இருக்கிறது. அதோடு இந்த இலாகாவை ஒன்றுபடுத்தி, ஒரே அமைப்பாக உருவாக்க அரசுக்கு யோசனை உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற இடங்களில் அந்த இலாகாவோடு இணைந்து பணியாற்றுகிறார்கள். மற்ற இடங்களிலும் தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டால் அவர்களும் விளம்பர இலாகாவோடு இணைந்து பணியாற்றும் நிலைமை ஏற்படும்.

### *Railway Cess Fund.*

*611 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether the Railway Cess Fund for 1971-72 has been distributed among Panchayat Unions in the State ; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இரயில்வே செஸ் நிதியிலிருக்கும் பணத்தை விதிகளில் கூறப்பெற்றிருக்கும் அடிப்படை வசதிகள் செய்து தரவே பயன்படுத்த வேண்டும். அப்பணத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்துத் தர வேண்டும் என விதிகளில் இல்லை. இருப்பினும் தத்தம் மாவட்டங்களில் இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் பணத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, கோவை, தென் ஆற்காடு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர்களின் செயற்குறிப்பிற்கு ஏற்கெனவே அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இரயில்வே செஸ் நிதி எத்தனை வருஷத்திற்கு ஒரு தடவை ஒதுக்கப்படுகிறது, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அந்தப் பணம் பிரித்துக்கொடுக்கப்பட ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இரயில்வே செஸ் நிதி ஏற்கெனவே சேர்ந்திருக்கிற ஒரு நிதி. அதை எப்படி பயன்படுத்துவது என்ற பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இரயில்வே செஸ் நிதி இருக்கின்ற மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவரால் குறிப்பாக சில பல திட்டங்கள் வகுக்கப்பட்டு, அத்திட்டங்களை நிறைவேற்றுவதில் முன்னுரிமை தரவேண்டுமென்ற நோக்கம் இருக்கிறது. அந்தவகையில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், ஒளி விளக்கு வசதி, துவக்கப் பள்ளிக் கட்டிடங்கள், குழந்தைகள் நல இல்லங்கள், மகப்பேறு இல்லங்கள், அறிவுக் கூடங்கள், இணைப்புச் சாலைகள் போன்றப் பணிகளை வரிசைப்படுத்தி, அவைகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை கொடுத்து இந்த செஸ் நிதி செலவழிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களின் பிற்பட்டத்தன்மைகளை மனதிற்கொண்டு, தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் அறிக்கைகளை அரசு பரிசீலித்து ஏற்றுக்கொள்ளும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, இரயில்வே செஸ் நிதியில் இரயில் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் பங்குத்தொகை கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த செஸ் நிதி செங்கற்பட்டு, வடாற்காடு, தர்மபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு இல்லை. ஆக, கன்னியாகுமரிக்கு மட்டும் இல்லை என்றில்லை; வேறு பல மாவட்டங்களும் இருக்கின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்த செஸ் நிதி கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டு 1½ ஆண்டு ஆகிவிட்டது. ஆனால் இன்னும் ஊராட்சி ஒன்றி



யங்களுக்குப் பணம் போய்ச் சேரவில்லை. ஆகவே, உடனடியாகப் போய்ச் சேர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதற்கானக் குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் தரப்பட்டிருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீருக்காக 32,72,950 ரூபாயும், துவக்கப்பள்ளிகளுக்காக 9,26,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மாவட்ட ஆட்சித் தலைவரால் நடைமுறைப்படுத்தப்படும். அதிலே ஏதாவது சிரமங்கள் இருந்தால் வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் பேசித் தீர்வு காணலாம். மீதி 45,150 ரூபாய் இருக்கிறது. அதற்குத் திட்டங்கள் தயாரித்து அனுப்ப மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is huge accumulation of railway cess fund, and Dharmapuri district has been formed into a separate district. May I know from the Hon. Minister for Education whether the amount due for Dharmapuri district will be given from the Cess Fund?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சேலம் மாவட்டமும், தர்மபுரி மாவட்டமும் ஒன்றாக இருந்தபோது இந்த செஸ் நிதி 3,70,254 ரூபாய் இருந்தது. அதற்கு தர்மபுரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அதற்குரிய தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அது மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருக்கிறது. அவரிடம் இருந்து அறிக்கை வந்தவுடன் அரசாங்கம் முடிவு செய்யும்.

**திரு. த. சோலையா :** தலைவரவர்களே, இரயில்வே செஸ் நிதியிலிருந்து சில மாவட்டங்களுக்குத்தான் பணம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அப்படி அனுமதிக்கப்பட்டிருக்கின்ற மாவட்டங்களில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சமமாகப் பிரித்துக்கொடுக்கும் உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இரயில்வே செஸ் நிதி என்பது, அந்தந்த மாவட்டங்களில் 'டிஸ்ட்ரிக்ட்போர்டு' இருந்தபோது சேர்ந்த நிதியாகும். 'டிஸ்ட்ரிக்ட் போர்டுகளில்' இரயில்வேயை நடத்திவந்தார்கள். பிறகு இந்திய அரசு அதை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஈட்டுத்தொகையை அளித்தது. அப்படி அளிக்கப்பட்ட ஈட்டுத்தொகை அந்தந்த மாவட்டங்களில் வைக்கப்பட்டது. அப்படித்தான் சில பல மாவட்டங்களில் இரயில்வே செஸ் நிதி சேர்ந்தது. ஆகவே அதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சமமாகப் பிரிக்கும் நோக்கம் இல்லை. ஏற்கெனவே நான் அறிவித்தபடி குறிப்பிட்ட சில

பணிகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவரால் இந்தப் பணம் செலவழிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் பணித் திட்டங்களைத் தயாரிக்கும்போது அந்தந்த மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் பிற்பட்டத் தன்மையை மனதிற் கொண்டு தயாரிப்பார். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஒப்பளிப்பு வழங்குகிறது.

**திரு. சு. துரைசாமி :** 1971-72-ம் ஆண்டில் இரயில்வே செஸ் நிதி மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு ரூபாய் கிடைத்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது இரயில்வே செஸ் நிதி கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் முன்னால் ஜில்லா போர்டு இருந்த போது, சில பல ஜில்லா போர்டுகளால் இரயில்வே நடத்தப்பட்டு வந்தது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டபின்னால் இரயில்வே லைனுக்கு வாடகை கொடுக்கப்பட்டு வந்தது. அந்தப் பணம் செஸ் நிதியாக வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்குச் சொந்தமான இரயில்வே லைனும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்குரிய ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டது, அந்தப் பணமும் செஸ்நிதியோடு சேர்க்கப்பட்டது. அதற்குப் பின்னால் செஸ் நிதி கொடுக்கப்படவில்லை; செஸ் நிதியில் பணமும் சேரவில்லை. இது ஆண்டுக்காண்டு கொடுக்கப்படும் நிதி அல்ல. ஆகவே, ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டத் தொகைதான் இரயில்வே செஸ் நிதியில் இருக்கிறது.

### பேரூராட்சி எல்லைகளுக்குள் ஏற்படும் ஆக்கிரமிப்புகள்

* 612. **வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேரூராட்சி மன்ற எல்லைக்குள் வீதிகளிலும், பேரூராட்சி மன்ற சொத்துகளின் மீதும் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் நீக்க மன்றத் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மிகக் குறுகிய வீதிகளை உடைய பேரூராட்சியில் படிகளை நீட்டித்தல், பால்கனிகளை நீட்டித்தல் ஆகிய ஆக்கிரமிப்புகள் உள்ளன. அவைகளை உடனடியாக நீக்க நிர்வாக அதிகாரிகளுக்கு காவல்துறை அரசு உத்தரவு தருமா ? அவர்கள் கோரினால் காவலர்களுடைய உதவியும் நிர்வாக அதிகாரிகளுக்கு அளிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆக்கிரமிப்புகளை அகற்ற பேரூராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னேனே தவிர இப்போதே விதிமுறைகளின் கீழ் நிர்வாக அதிகாரிகளுக்கும், நகராட்சி மன்றத்



தலைவர்களுக்கும் முழு அதிகாரம் இருக்கிறது. மற்ற இடங்களில் கர்ணம் போன்றவர்கள் கூட்டாட்சித் தலைவருக்கு அறிவித்து அதனை அகற்ற உரிமை இருக்கிறது. அப்படி அவர்கள் தவறினாலும் 3 மாத காலத்திற்குப் பிறகு கூட்டாட்சித் தலைவரே நிர்வாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அவற்றை அகற்ற முடியும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** பேரூராட்சி மன்ற எல்லைக்குள் இருக்கும் ஆக்கிரமிப்பை அகற்ற முற்படும்போது, அது ரெவின்யூ புறம்போக்கு என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே பேரூராட்சி எல்லைக்குள் இருக்கிற ரெவின்யூ புறம்போக்கு நிலங்கள் என்ன என்ன என்கிற பட்டியலை பேரூராட்சிக்குத் தர வேண்டுமென்ற கோரிக்கை கோவை மாவட்டத்தில் எழுந்திருக்கிறது. இது பற்றி அரசு பரிசீலனை செய்து அந்தப் பட்டியலை ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தர முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போதே அந்தப் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இல்லையானால் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளத் தவறும் நிர்வாக அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதை நீக்கும்படி கோரிக்கை எழுப்பப்பட்டு, ஊராட்சி மன்றமும் தீர்மானம் நிறைவேற்றி, அவர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருந்தால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இப்போதே விதிமுறைகள் இருக்கின்றன.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இப்படி ஆக்கிரமிப்புச் செய்கிறவர்கள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். ஆகவே இதுபோன்று ஆக்கிரமிப்பை அகற்றுகிறபோது அவர்களுக்கு வேறு ஒரு இடத்தைக் கொடுத்துவிட்டு அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பலயிடங்களில் இது மனிதாபிமான உணர்ச்சியுடன்தான் நடைபெறுகிறது. கூடுமானவரையில் மாற்று இடங்களைக் கொடுத்துவிட்டுத்தான் அத்தியாவசியமான இடங்களில் செய்யப்பட்டிருக்கிற ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன.

**திரு. கே. ஏ. வகாப் :** இப்போதே பேரூராட்சி எல்லைக்குள் இருக்கும் புறம்போக்குகள் பேரூராட்சியிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒப்படைக்கப்படாமல் இருக்கிற ரெவின்யூ புறம்போக்கு நிலங்களையும் பேரூராட்சியிடமே ஒப்படைக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரூராட்சி மன்றங்கள் செவின்யூ புறம்போக்கு நிலத்தை இன்ன இன்ன காரியத்திற்காக வேண்டும் என்று விண்ணப்பித்தால் அவ்வாறு ஒதுக்கித் தருவதில் எவ்விதத் தடையும் இருக்காது.

திரு. கே. என். குமாரசாமி: ஊராட்சி ஒன்றியங்கள், பஞ்சாயத்து வழித் தடங்கள் ஆகியவற்றில் இடைஞ்சலாக உள்ள ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தியும், இடைஞ்சல் இல்லாத இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் என்றால் அவர்கள் அங்கேயே குடிசை போட்டுக்கொள்ள தடையில்லாமலும் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சாலை வசதிகளைப் பொறுத்தும், இன்னும் சிலபல முக்கியமான கட்டிடங்களைப் பொறுத்தும், பள்ளிக்கூடங்கள், மருந்தகங்கள் என்பதாகவும் இப்படி முக்கியமான பணிக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் தான் உடனடியாக அகற்றப்படுகின்றன. இடைஞ்சல் இல்லாத இடங்களில் குடிசை போட்டுக்கொண்டிருக்கிறபோது அந்த இடங்களை அவர்களுக்கே பட்டா செய்துகொடுக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

திரு. ஆர். இராமலிங்கம்: இத்தகைய ஆக்கிரமிப்புகளைத் தடுத்து, அந்தப் புறம்போக்கு நிலங்களை நகராட்சிகள், பஞ்சாயத்துகள் ஆகியவற்றுக்கே சொந்தமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வருவாய்த் துறையில் இருக்கும் போதே ஆக்கிரமிப்புகள் இந்த அளவில் இருக்கின்றன. அவை நகராட்சிகள், பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டால் இதனால் அதன் உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் ஏற்படக்கூடிய இடையூறுகளை உணரவேண்டும். ஆனாலும் அங்கங்கே உள்ள வருவாய்த் துறை புறம்போக்குகள் நகராட்சி, ஊராட்சி ஆகியவற்றின் முக்கியமான பணி எதற்கும் தேவைப்பட்டால் அதை வருவாய்த் துறைக்கு எழுதி அவர்கள் அனுமதியோடு எடுத்துக்கொள்வதில் தடை எதுவும் இருக்காது.

### *Employees of Madras Corporation.*

* 613 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the total number of Adi-Dravidas in service in the Madras Corporation; and

(*b*) the posts in which they are employed at present?

* 416-420-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 1980.

(இ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேல்நிலையில் உள்ள பணிகளில் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். அதில் அவர்கள் அதிகமாக வரும் வாய்ப்பினை ஏற்படுத்த அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வகுப்பு பிரதிநிதித்துவ விகிதாசார அடிப்படையில் அங்கே நியமனம் செய்யப்படவேண்டுமென்ற கருத்து மாநகராட்சி மன்றப் பரிசீலனையில் இருப்பதாக ஆணையர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இங்கே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் 1980 பேர்கள் பணியாற்றுவதில், துப்புரவுத் தொழிலாளர்களாக 468 பேர்கள் இருக்கிறார்கள். இனி துப்புரவுத் தொழிலாளர்களையும் கூட எம்பிளாய்மெண்டு எக்சேஞ்ஜ் மூலம் எடுக்கவேண்டுமென்று சொல்லப்படுவதை அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். அதுபோல இன்றி முன்போலவே வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொதுவாக பல்வேறு வேலைகளுக்கும் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ்ஜ் மூலமாகவே நியமனம் செய்ய வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். துப்புரவுத் தொழிலாளர்கள் பணிக்கும் அங்கே பலர் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள், அங்கிருந்தும் பட்டியல் கேட்டு இப்போது ஆணையர் தான் நியமித்து வருகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: வகுப்பு விகிதாசார அடிப்படையில் நியமனம் செய்ய ஆலோசித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படித் தான் நியமனம் செய்யவேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாநகராட்சி மன்றம் அப்படிப் பட்டதொரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். அதுதான் மாநகராட்சி மன்றப் பரிசீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டேன்.

திரு. கே. ஏ. வகாப்: இப்போது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒவ்வொரு வகுப்புக்கும் இவ்வளவு சதவிகிதம் கொடுக்கவேண்டும் என்பதே அரசு கொள்கையாக வகுத்திருக்கிறது. மாநகராட்சி போன்ற பெரிய ஸ்தாபனம் இதுவரை அப்படிச் செய்யாததை வற்புறுத்தி இனிமேல் அப்படிச் செய்யவேண்டும் என்பதை அவர்களுக்கு அரசு ஆலோசனையாகக் கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாநக
மு. ப. 9-30 ராட்சி மன்றத்தாலே இது பரிசீலனை செய்யப்படுகிறது. அவர்களது அறிக்கையை அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அறிக்கை வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ளும்.

**திரு. எஸ். வடிவேல் :** துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் அறிக்கையை பார்க்கும்போது, நாங்களும் கடைகோடி, எங்களுக்குக் கொடுக்கிற தொழிலும் கடைசியாக இருக்கிறது. துப்புரவுத் தொழிலாளிகள் 468-ஆகவும், தொழிலாளிகள் 505 ஆகவும், துப்புரவுப் பணியாளர்கள் 100-ஆகவும், இருப்பது தெரிகிறது. இதைப் பார்க்கின்ற பொழுது, அரசு விதிகளிலே 18 சதவிகிதம் அவர்களை பணிகளில் பொருத்த வேண்டுமென்று இருந்தாலும், நடைமுறையிலே, மற்ற தொழில்களிலே 1, 2 என்று பொருத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய நிலைமையை போக்கி, எல்லா பதவிகளிலும் 18 சதவிகிதம் பொருத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த அடிப்படையிலேதான் மற்றைய அரசாங்கத் துறைகளில் எப்படி, நியமனங்கள் செய்கிறோமோ, அதே முறை இங்கும் கையாளப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். அந்த வகையிலேதான், மாநகராட்சியினுடைய அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது. அது வந்ததற்குப் பிறகு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, தக்க அறிவுரைகளையும், ஆணைகளையும் வழங்கும்.

**திரு. நா. வீராசாமி :** 4 எல்.டி.சி. இருந்தால் 1 யூ.டி.சி.-யை நியமிப்பது அரசாங்கத்திலே வழக்கம். ஆனால், மாநகராட்சியில், 13 யூ. டி.சி., எல். டி. சி., டைப்பிஸ்ட்ஸ் சேர்ந்து 10 என்ற அளவில் இந்த விகிதாசாரம் மிகக் குறைவாக இருக்கிறது. இவ்வளவு பெரிய நகராட்சி மன்றத்திலே ஒரு ஸ்டெனோகிராபர் கூட ஆதித் திராவிடரைச் சேர்ந்தவர் அல்ல என்று கொடுக்கப்பட்ட குறிப்பிலிருந்து தெரியவருகிறது. எனவே, ஆணையருக்கு, இப்படிப்பட்ட வேலைகளில் ஆட்களை நியமிக்கும்போது, ஆதித் திராவிடர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றிதான் மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்தி வந்தார்கள். அதுபற்றித் தான் மாநகராட்சி மன்றமும் ஆலோசித்து வருகிறது. அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.



**திரு. கு. இராசமாணிக்கம் :** ஆதித் திராவிடர்கள் என்பது ஒரு குறிப்பிட்ட பிரிவினரை மட்டும் குறிக்குமா? அல்லது துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் பின்தங்கியவர்களையும் அந்த ஆதித் திராவிடர் என்பது குறிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஹரிஜன் வார்ட் கம்யூனிட்டி இதிலே சேராது. ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அவர்கள்தான் அரிஜனங்கள் என்றும் சொல்கிறோம், ஆதித் திராவிடர்கள் என்றும் சொல்கிறோம். ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் என்கிற அத்தனைபேரும் இதிலே அடங்குகிறார்கள்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, போன்றவைகளில், பணியாளர்களை நியமிப்பதில், அரசாங்கத்தினுடைய கண்டிப்பான உத்தரவின் அடிப்படையில், மதத்தின் அடிப்படையில், இத்தனை விகிதாசாரம் நியமிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதுபோல் ஒவ்வொரு நியமனமும் செய்யப்படுகிறது. இதிலே துப்புரவுப் பணியாளர்கள், கடைநிலை ஊழியர்கள், இரவுக் காவலர்கள் போன்ற பணியாளர்களை மாவட்ட வேலை தேடித்தரும் அலுவலகத்திடமிருந்து லிஸ்ட் பெற்று அதிலிருந்து நியமிக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. இப்படிப்பட்ட பணிகளுக்கு மட்டும் மாவட்ட வேலை தேடித்தரும் நிலையத்திடமிருந்து லிஸ்ட் பெறத் தேவையில்லையென்றும், ஜாதி அடிப்படையிலே, விகிதாசாரப்படி நியமித்தால் போதும் என்றும் உத்தரவு அனுப்ப அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றிய சங்கடங்கள் இருந்து, அரசாங்கத்திற்கு எழுதி அனுப்புவார்களானால், ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம். வேலை வாய்ப்பு தேடித்தரும் நிலையத்தில் பலர் பதிவு செய்து, பிறகு அவர்களை எடுக்காத சூழ்நிலை ஏற்படும்போது, அங்கங்கே இருக்கிற பேரூராட்சி மன்றங்கள், அவர்களுக்கு வேண்டியவர்கள் அல்லது தெரிந்தவர்களை எடுத்துக்கொள்ளும்போது, பதிவு செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பே கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே தான் அது வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அதிலே இருக்கிற சங்கடங்களை கவனித்து கோரிக்கை அனுப்பப்படுமானால், அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

### *Employment opportunities for Nurses.*

*614 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that a large number of trained Nurses are without jobs in this State ; and

(b) if so, the steps taken to provide them with jobs?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) பயிற்சி பெற்ற, வேலையில்லாத செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு அரசு தனது நிதி நிலைமைக்கு உட்பட்ட எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** டாக்டர்-நர்ஸ் புரப்போர்ஷன், நர்ஸ்-பேஷன்ட் புரப்போர்ஷன் இவைகளின் அடிப்படையில் சரியாக எல்லா மருத்துவ மனைகளிலும் நர்ஸ்களை நியமிக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த புரப்போர்ஷனில் நியமிக்கும்படியான நடவடிக்கை எடுத்தால், அன் எம்பிளாய்மென்ட் பிராப்ளம் இருக்காது. அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நோயாளிகள் மருத்துவ மனையில் சேர்க்கப்படுகிற அளவுக்கு, அங்குள்ள படுக்கை எண்ணிக்கைக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் நர்ஸ்கள், செவிலியர்கள், பணியாற்ற வேண்டுமென்ற ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி ஆலோசனை வழங்கிய ஒரு குழு அந்த விகிதாசாரத்தை மிகக் குறைவாக அமைத்த காரணத்தால், அதை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், தமிழகத்தில் மருத்துவ மனைகளிலே செவிலியர்களால் கிடைக்கிற பணி, நிறைவாகக் கிடைப்பதற்கு 1971-72-ம் ஆண்டில் 401 செவிலியர் பதவிகளையும், 1972-73-ம் ஆண்டில் 101 செவிலியர் பதவிகளையும், 1973-74-ம் ஆண்டில் 73 செவிலியர் பதவிகளையும் தொடர்ந்து புதிதாக ஏற்படுத்தி இருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு இங்கே தரப்படுகிற ஊதியம், மற்ற வசதிகள் போதுமானதாக இல்லாமல், பலர் வெளிநாடுகளுக்குப் போகிறார்களே, இதுபற்றி மத்திய சம்பளக் கமிஷன் கூட, குறிப்பிட்டிருக்கிறதே, ஆகவே, அவர்களுடைய ஊதிய நிலைமை, வாழ்க்கை நிலைமை இவற்றை உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவாக, செவிலியர்கள் வெளிநாட்டுக்குப் போய் விடுகிறார்கள் என்பது மற்ற மாநிலங்களைப்பற்றி பேசப்படுகிற ஒன்று. தமிழ்நாட்டிலே இருக்கிறவர்கள் மற்ற மாநிலங்களுக்குக் கூடப் போவது இல்லை. கேரளத்திற்கும் போவதில்லை, ஆந்திராவுக்கும் போவதில்லை. யாராவது போகிறார்கள் என்றால், அவர்கள் மேல்படிப்புக்குப் போகிறார்கள். இந்தப் பிரச்சினை உள்ள வேறு சில மாநிலங்களோடு அங்கத்தினருக்குத் தொடர்பு இருக்கும் என்று கருதுகிறேன். இங்கே உள்ள பிரச்சினை வேறு, அங்கே உள்ள பிரச்சினை வேறு.



**திரு. எஸ். வடிவேல் :** நமது மாநிலத்தில் பயிற்சி பெற்ற செவிலியர்கள் எத்தனை பேர் இன்னும் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 1973-ம் ஆண்டு டிசம்பர் முடிய, பயிற்சி பெற்றவர்கள், பயிற்சிக்குப் பின் வேலை தரப்பட வேண்டியவர்கள் 739 பேர். அவர்கள் அரசாங்க வேலைக்கு மட்டுமே செல்லவேண்டுமென்ற அவசியம் இல்லை. ரெயில்வே துறையிலேயும் செல்லலாம். தொழில் துறையிலேயும்—இண்டஸ்ட்ரியல் சர்வீஸ—செல்லலாம், பிரைவேட் செக்டாருக்கும் செல்லலாம், தனிப்பட்ட மருத்துவ மனைகளுக்கும் செல்லலாம், ஆர்மி சர்வீசுக்கும் செல்லலாம். அவர்கள் எங்கே வேண்டுமானாலும் வேலைக்குச் செல்லலாம் என்று அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்கள், ஒன்றியங்களிலே உள்ள ஹெல்த் விசிட்டர் வேலையிலும் சேரலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பல பேர் பல இடங்களில் வெவ்வேறு வகையான வேலைகளில் இருக்கிறார்கள்.

**திரு. க. துரைசாமி :** 1972-ம் ஆண்டு ஏறத்தாழ 700 பேர் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசாங்கம் விரைவாக, 1972-ம் ஆண்டு இறுதியாக இருப்பதால், வேலையில்லாமல் இருக்கிற எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு சிறப்பு திட்டம் ஏதாவது கொண்டு வர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறையிலேயும் அந்த அந்தத் துறையினுடைய வளர்ச்சிக்கேற்பவும் அந்த வளர்ச்சி வேறு எந்த வகையிலும் பாதிக்காது என்பதையும் பொறுத்துத் தான் வேலை வாய்ப்பு உருவாகும். நல்ல மருத்துவ மனைகட்ட முடியாதபொழுது, 40, 50 படுக்கை வசதிகளை அளிக்கமுடியாத பொழுது, புதிதாக 2 டாக்டர்களைப் போட முடியாதபொழுது, 4 செவிலியர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாது.

## சென்னை பொது மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மருத்துவர்கள்

* 615. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் (G.H. ) "கேஷுவாலிடி" பிரிவில் அலுவல் பார்க்கும் சர்ஜிகல், மெடிக்கல் ஆகிய துறைகளைச் சார்ந்த டாக்டர்களில் ஒருவர் தாங்கள் மருத்துவம் செய்த நோயாளிகளைப் பற்றிய சாட்சியம் தான் சொல்ல நீதி மன்றங்களுக்கு செல்ல நேரிடும்போது அந்த நேரத்தில் அவர்

கள் சார்ந்துள்ள துறையைச் சார்ந்த வேறு டாக்டர் யாரேனும் அவருக்குப் பதிலாக அவர்களது பணியினைச் செய்ய அமர்த்தப்படுகின்றார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.

## தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள்

* 616. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் M.D., M.S. போன்ற மேல் பட்டப்படிப்பு வகுப்புகள் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, மாநிலத்திலே எந்த எந்த மருத்துவக் கல்லூரிகளிலே எம்.டி, எம்.எஸ்.-க்கான வகுப்புகள் இருக்கின்றன. எத்தனை சீட்டுகள் இருக்கின்றன என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இருக்கிற கல்லூரிகளுடைய பெயர்களை மட்டும் நான் சொல்ல முடியும். சென்னையில் சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மதுரையில், மதுரை மருத்துவக் கல்லூரி ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரிகளிலே எம்.டி. பொது மேல்பட்டப் படிப்பும், எம். எஸ். அறுவை சிகிச்சை மேல் பட்டப் படிப்பும் மற்றும் பல மேல்பட்டப் படிப்புக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, எம்.டி., எம். எஸ். மேல் பட்டப்படிப்புகளில் சேருவது மிகவும் கடினமாக இருக்கிறது என்று இப்பொழுது கூறப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட மேல் படிப்புகளில் சேர்ந்து படிக்க ஆர்வம் உள்ளவர்களை ஊக்குவிக்கும் முறையில், சில விதிமுறைகளைத் தளர்த்தியாவது அவர்களுக்கு வாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அது ஒரு தவறான தகவல். சேருவது கடினமாக இருப்பது மட்டுமல்ல, அதற்குப் பிறகு தேர்ச்சி பெறுவது அதைவிடக் கடினமான காரியம். பலபேர் 7, 8 தடவை கூடத் தேர்வுக்குச் சென்றுவிட்டு, சிபார்சு செய்யக் கூடப் பார்க்கிறார்கள். ஆக, அப்படிப்பட்ட நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள் திறமையுடன் படிக்க முடியாது திண்டாடுகிற நிலை அரசாங்கத்திற்கு நஷ்டம். ஆகவே, தேர்ந்தெடுக்கும்போதே, ஓரளவு திறமையானவர்கள், ஆர்வம் உள்ளவர்கள், அக்கறை உள்ளவர்கள் இவர்களைப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதால், இந்தப் படிப்புக்காக [illegible] பெரும் நஷ்டம் குறையும்.





திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, இப்பொழுது எம்.எஸ்., எம்.டி. டிகிரிகளின் தன்மையை உயர்த்துவதற்கும் அதே நேரத்திலே நம்முடைய மாநிலத்திலே உள்ள டிபார்ட்மெண்டல் ஹெட்ஸ் வெளிநாட்டிலேயுள்ள திறமைசாலிகளுக்குச் சமமாக இருப்பதாலே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தொகை குறைவாக இருப்பதாலே 1,000 முதல் 1,300 வரை என்று இருப்பதால் அதைக் கொஞ்சம் உயர்த்துவதற்கும், அவர்களுக்குத் தெம்பு கொடுக்கக்கூடிய முறையிலே அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசுக்கு திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மேற்பட்டப் படிப்பு படித்த மருத்துவ வல்லுநர்கள் தமிழகத்திலே பேராசிரியர்களாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலும், வேறு மாநிலங்களைவிட இங்கே உள்ளவர்கள் அதிக வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதாலும் மேற்பட்ட படிப்புப் படித்தவர்களுக்கு வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றன என்று சொல்வது தவறாகும். மேற்பட்டப்படிப்பு படித்தவர்களேகூட நோயாளிகளுக்கு சிகிச்சை செய்துவருகிற பயிற்சியை அதிகமாகப் பெற்றால்தான் சிறந்த நிபுணர்களாக ஆக முடியும். அந்தப் பயிற்சிக்கான வாய்ப்பும், அவர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏராளமாக இருக்கின்றன. எனவே இதிலும் எந்தவிதக் குறைபாடும் இல்லை. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொண்டு போகிற நிலையில்தான் ஊக்கம் அளிக்கமுடியும் என்ற தத்துவத்தைப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சொல்வது எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தஞ்சாவூரிலே எம்.டி., எம்.எஸ்., பட்டப் படிப்புகள் துவங்குவதற்கான திட்டம்பற்றிச் செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன். ஏதாவது இடர்ப்பாடுகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: காரணம், ஏற்படுத்துவதற்குக் காரணம் இல்லை என்பதுதான். மேற்பட்டப் படிப்பு சிறந்த பேராசிரியர்கள் அதிகமாக உள்ள இடங்களிலேதான் துவங்குவதற்குப் பல்கலைக் கழகம் ஒத்துக்கொள்ளும். நான்கு மாணவர்கள் மேற்பட்டப் படிப்புப் படித்தால் ஒரு பேராசிரியர் பதவி ஏற்படுத்தவேண்டும் என்பது போன்று பல விதிகள் உள்ளன. பல்கலைக் கழகம்கூட அதற்கான போஸ்ட் கிராஜுவேட் தகுதியுள்ளவர்கள் இருந்தால் தான் ஒத்துக்கொள்கிறது. இப்பொழுதே தமிழ்நாட்டிலே 3 கல்லூரிகளிலே மேற்பட்ட படிப்பு இருப்பதால் வேறு இடங்களிலே திறப்பது அவசியம் என்று கருதவில்லை. மேலும் அதற்காக ஏற்படும் . பெருஞ்செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும், எனவே அதற்கான வாய்ப்புக் கூறுகள் குறைவாக இருக்கின்றன.

## கோழிப்பண்ணைகள் ஏற்படுத்த உதவி

* 617. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரங்களில் கோழிப்பண்ணை நடத்த முன்வருவோருக்கு அரசு கடனோ மானியமோ அளித்துவருகிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அரசு நேரடியாகத் தனிப்பட்டவர்களுக்குக் கடன் வழங்குகிற திட்டமோ உதவி செய்கிற திட்டமோ இல்லை.

**திரு. கா. வேழவேந்தன்:** துணைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற கோழிப் பண்ணைகளை நல்லமுறையிலே முன்னேற்றத் தனியாக இயக்குநர் போடப்படவேண்டுமென்று மதிப்பீட்டுக்குழு கொடுத்த ஆலோசனையின்மேல் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, கோழிப் பண்ணையைக் கூட்டுறவு முறையிலே நடத்துகின்ற கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு சில உதவிகளை வழங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதற்கு ஆன நடைமுறைத் திட்டங்கள் இன்றைய தினம் செயல்பட்டு வருகின்றன. அந்தத் திட்டங்களின் அடிப்படையிலே மாநில அளவில் ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சி இருக்கிறது. அதற்குத் தனியாக ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்படுவார், பெரும்பாலும் அவர் அந்தத் துறையைச் சேர்ந்தவராக இருப்பார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைகள் அரசாங்கத் தரப்பிலே அமைத்து கோழிகள் இல்லாமல் பல பண்ணைகள் இருக்கின்றன. அதைத் துவங்குவதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வது கோழிக் குஞ்சுகளை வளர்த்துப் பிறருக்குக் கொடுப்பதற்கான பெரிய நிலையங்கள் இல்லை என்று நினைத்துச் சொல்கிறார்கள். கப்பலூரிலும், காட்டுப் பாக்கத்திலேயும் உள்ள நிலையங்களிலே நல்லமுறையிலே வளர்க்கப்பட்டு ஆயிரக்கணக்கான கோழிகள் மாதந்தோறும் விற்கப்படுகின்றன. இதைத்தவிர எக்ஸ்டென்ஷன் சென்டர்ஸ் என்று ஏற்படுத்தப்பட்டவை சரியாக வரவு-செலவு வைக்க முடியாது இருந்தன என்ற காரணத்தினாலே பல மூடப்பட்டன. அவற்றுள்ளும் எந்த எந்த இடங்களிலே உள்ளவை பயன்தரும் என்று எதிர் பார்க்கப்படுகிறதோ அங்கேயெல்லாம் நடத்தப்படுகின்றன.

**திரு. சீ. க. வடிவேலு:** தலைவர் அவர்களே, தனியார்கள் கோழிகளை வளர்ப்பதற்காக நல்ல முறையிலே செலவுசெய்தும் நல்லமுறையிலே அமையாத காரணத்தினால் அவர்களுக்கு அரசு மானியம் வழங்கத் திட்டம் இருக்கிறதா?





**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அரசாங்கம், நல்ல முறையிலே அமையாது போனதற்கு உதவி செய்வது என்பது அர்த்தமற்றது. நல்ல முறையிலே கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு கோழிகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி, உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள்மூலம் நல்லமுறையிலே கவனித்துச் செயல்பட்டு வருகிறது.

**திரு. ஏ. எம். இராஜா:** அரசாங்கம் நேரடியாகப் பண உதவி செய்வது இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எம்லைன், ஹைலைன் கோழிக்குஞ்சுகளையெல்லாம் தனியார்கள் 4 ரூபாய்க்கு விற்கிறார்கள். அதிகமாக இருக்கிறது. எனவே அரசாங்கமே எம்லைன், ஹைலைன் கோழிக் குஞ்சுகளை ஒரு ரூபாய் விலையில் கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கனம் உறுப்பினருடைய கேள்வி முதலிலே சர்க்காருக்கு நஷ்டம் எற்படுத்துவது என்பது. சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படுத்திப் பிறகு மக்களிடத்திலே வளர்ச்சி ஏற்படுவது என்பது நல்ல முறையல்ல. அதிகமான அளவிற்கு முட்டைகள் தரக்கூடிய ஒரு கோழி இனம் இருக்கிறது. அந்தக் கோழி இனம் அதிகமாக நோயாலும் மற்றவற்றினாலும் தாக்கப்படாமல் இருக்கிற இனமாக இருக்கிறது, வெள்ளைக் கோழி இனம் என்ற அந்தக் கோழி இனம் நல்லமுறையிலே பலன் தருகிறது. மற்றக் கோழி இனங்களை வளர்ப்பது என்பது தனிப்பட்டவர்களுடைய பொறுப்பும், விருப்பும் ஆகும்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைகள் ஏற்படுத்த அரசாங்கத்தினாலே பலவித உதவிகள் டிரைவ் பார்ம், எஸ்.எப்.சி. ஸ்கீம் மூலமாக மூன்றில் ஒரு பங்கு சப்ஸிடியும், நான்கில் ஒரு பங்கு சப்ஸிடியும் கொடுக்கப்படுகிறது. பண்ணைகளை ஆரம்பித்தும் லாபகரமாக நடத்த முடியாததற்குக் காரணம் கோழிக் குஞ்சுகள், கோழிகள் எல்லாம் 18, 20, 25 ரூபாய்க்கு விற்கிறது, தனியார் பண்ணைகளிலே. அரசாங்கப் பண்ணைகளிலே நியாயமான குறைந்தவிலையில் கோழிகள், கோழிக்குஞ்சுகள் கொடுக்க, ஓசூரிலிருந்தும் அபிஷேகப்பட்டணம் ஆகிய இடங்களிலிருந்தும் குறைந்த விலைக்குக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற விவரம் சரியல்ல என்று நினைக்கிறேன். ஒன்று 18, 20 ரூபாய் விலையில் கோழிக்குஞ்சுகள் வாங்கப்படுவதில்லை, ஒரு இனக் கோழிகளை 18, 20 ரூபாய்க்கு வாங்குகிறார்கள் என்பது தவறு. அப்படிக் கோழிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்குவதில்லை. தனிப்பட்டவர்கள் கடன் வாங்கி அப்படிக் கோழிகளை வாங்குவதாக இருக்கலாம். அப்படி வாங்குவதும் விற்பதும் கூட்டுறவுச்

சங்கங்களைப் பொறுத்து இல்லை. பண்ணைகளை நடத்த வெள்ளை இனக் கோழி தான் தரமுள்ள கோழியாக இருக்கிறது. கப்பலூரிலே மிக அதிகமாக அதை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக்கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமல் கேட்கிறீர்கள், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள், அதிலிருந்து நீங்கள் இன்னும் ஒரு சம்பந்தம் இல்லாத துணைக் கேள்வி கேட்கவேண்டாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** 'அதே கேள்விதான். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதே கேள்வி என்று வேறு கேள்வியைக் கேட்கிறீர்கள். ஊர்வன, பறப்பன இதுபற்றியெல்லாம் ஒரே கேள்விதான் என்று துணைக்கேள்வியைக் கேட்கவேண்டாம்.

*Assistance for Employees State Insurance Schemes*

* 618 Q.—THIRU N. DENNIS,

THIRU S. DURAISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the need for a greater financial assistance from the Centre for the Employees State Insurance Schemes was stressed during the discussions with the Central Minister for Labour in February 1973; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் மருத்துவ வசதிக்கான செலவின்மேல் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் உச்ச வரம்பினை நிர்ணயித்துள்ளது. இந்த உச்சவரம்புப் படி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் 7–8 பங்கும், மாநில அரசு 1/8 பங்கும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த உச்சவரம்பிற்குமேல் ஆகும் செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும். மத்திய தொழிலாளர் நல அமைச்சருடன் நான் கலந்துரையாடியபோது இந்த உச்சவரம்பினை நீக்குவது பற்றியும், அது இயலாவிடின், உச்சவரம்பின விகிதத்தை மிகுந்த அளவு உயர்த்துவதுபற்றியும் வலியுறுத்தினேன்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அண்மையில் டெல்லியிலே தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மாநாடு ஒன்று நடந்தது. அந்த மாநாட்டிலே அந்த விகிதாச்சாரத்தை உயர்த்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகாரப்பூர்வமாக நமக்குத் தெரிவிக்கப்படவில்லை.

**திரு. க. துரைசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபொழுது எட்டில் 7 பங்கும், எட்டில் 1 பங்கும் என்ற விகிதாச்சாரத்திலே பணம் ஒதுக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். மீதமென்று அதிகமான செலவை மாநில அரசாங்கம்தான் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருப்பதாகத் தெரிவித்தார்கள். மாநில அரசுப் பொறுப்பேற்கிற அதே நேரத்திலே மத்திய அரசும் ஏன் பங்கு கொடுக்கக்கூடாது? மத்திய அரசாங்கம் தன்னுடைய நிதியிலிருந்து ஒதுக்கவேண்டுமென்று வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. என் வி. நடராசன் :** ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் இதை எடுத்துக் கூறியிருக்கிறேன். அநேகமாக நம்முடைய வேண்டுகோளுக்கும், எண்ணத்திற்கும் ஏற்ப பதில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

'ழனிக்கருகில் கிடைக்கும் "மொலிப்டினம்"

* 619 வினா—**புலவர் சி. பழனிச்சாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் 1971-ம் வருடம் டிசம்பர் 9-ம் தேதியன்று வினா எண் 202-க்கு அளித்த விடையையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், பழனிக்கருகில் உள்ள காடிக்கூட்டம் என்னும் சிற்றூருக்கருகில் மத்திய அரசின்மூலம் மொலிப்டினம் என்னும் மூலப்பொருள் அகழ்ந்தெடுக்கும் பணி இதுவரை எந்த அளவுக்கு நடைபெற்றுள்ளது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்திய நிலவியல் ஆய்வுக்கழகம் காடிக்கூட்டம் என்னும் சிற்றூரைச் சுற்றிலும் இதுவரையில் 5433.19 மீட்டர் நிலத்தில் துளையிடும் பணியை மும்முரமாக மேற்கொண்டுள்ளது. இப்பகுதியில் அதிக அளவு 60 மீட்டர் ஆழம்வரை மொலிப்டினம் கனிப்பொருள் 36,360 டன் படிந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்த விரிவான அறிக்கை ஒன்று இந்திய நிலவியல் ஆய்வுக் கழகத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**புலவர் சி. பழனிச்சாமி :** இப்படி அகழ்ந்தெடுக்கப்படுகிற மூலப்பொருளைப் பயன்படுத்தி பழனிப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை அமைக்க நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அவர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டால் அந்த மூலப்பொருளில் நம்முடைய மாநிலத்திற்குப் பங்கு வேண்டுமென வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆராய்ச்சி முடிந்ததற்குப் பின்னால் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : இந்தக் காடிக் கூட்டத்திற்கு மத்தியில் தைரியமாகச் செல்லத் துணிந்தவர்கள் மத்திய அரசாங்கமா அல்லது மாநில அரசாங்கமா? அந்த மொலிப்டினம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காடிக் கூட்டம் என்பது ஊர் பெயர். அங்கு காடி கிடையாது. மொலிப்டினத்தைக்கொண்டு Molybdenum steel is widely used in air crafts, automobiles, shafts, high speed vehicles, pumps, gears, guns, armour plates, etc., ஆகியவற்றையெல்லாம் உற்பத்தி செய்யலாம் என்று ஆராயப்பட்டிருக்கிறது.

## *Tamil Nadu Cements, Alangulam*

* 620 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of persons working in the Packing Department in Tamil Nadu Cements, Alangulam; and

(*b*) whether they are working under the Department or under Contractors?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சிமெண்ட் மூட்டைக் கட்டும் வேலை, தொழிற்சாலையைச் சேர்ந்த 58 தொழிலாளர்களால் செய்யப்படுகிறது. சிமெண்ட் மூட்டைகளை வாகனங்களில் ஏற்றுதலும், கோணிப்பைகளில் முத்திரையைப் பொறித்தலும் 20 ஆட்கள்மூலம் ஒபந்தக்காரரால் செய்யப்படுகின்றன.

திரு. க. சுப்பு : ஒப்பந்தக்காரர்களின்கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு வேலை இருப்பது, இல்லாமல் விடப்படுவது என்ற நிலைமையில் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஒப்பந்தம் முறையை ரத்து செய்து அவர்களையும் துறையின் ஊழியர்களாகப் போட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இப்படி யோசனை இல்லை. இதிலே இரண்டு பகுதியாக வேலை செய்யப்படுகிறது. முதல் பகுதி தொழிற்சாலை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள். கடைசியில் லோட் செய்யும்போது தனியாக ஒப்பந்தக்காரரை வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பின்னர் பரிசிலனை செய்யப்பட்டு முடியுமா என்பதைப்பற்றி ஆராய வேண்டும்.



திரு. ஜே. ஜேம்ஸ் : காண்டிராக்ட் சிஸ்டத்தைக் கூடிய வரையில் அகற்ற வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும்போது அரசாங்க சிமெண்ட் ஆலையில் காண்டிராக்ட் முறையை வைத்துக்கொண்டிருப்பது சரியா? அதை அகற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்சாலையில் மூட்டையை வெளியே கொண்டு போகும்போது யார் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள்தான் இந்த மூட்டையை லோட் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு சுப்பு அவர்கள் கேட்டுக்கொண்டபடி இதைப் பற்றிப் புனர் பரிசிலனைசெய்து நாமே செய்யலாமா என்று பார்க்க வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தொழிற்சாலைகளில் லோடிங், அன்-லோடிங் உட்பட தொழிற்சாலைத் தொழிலாளர்கள்தான் செய்கிறார்கள். காண்டிராக்ட் லேபர் அபாலிஷன் ஆக்ட் வந்தபிறகும் அரசாங்கத் தொழிற்சாலையில் காண்ட்ராக்ட் முறை இருப்பது சரியல்ல என்ற காரணத்தால் காண்ட்ராக்ட் தொழிலாளர்களை ஆலைத் தொழிலாளர்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிக் காண்ட்ராக்ட் முழுவதையும் விட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அதைப்பற்றிச் சட்டப் பிரச்சினை எதுவும் எழவில்லை.

## *Purchase of Implements by Mineral Development Project*

* 621 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Mineral Development Project have purchased a number of diamond drill bits and reaming shells during the calendar year 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தமிழ்நாட்டுக் கனிவளர்ச்சிக் கழகம் வைர வியாபார வளர்ச்சி அபிவிருத்திக்காக எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மினரல் ப்ராஜக்ட்ஸ் சம்பந்தப்பட்டது. வியாபாரம் சம்பந்தப்பட்டது அல்ல.

திரு. என். டென்னிஸ் : தமிழக கனி வளர்ச்சிக் கழகம் வைர அபிவிருத்தி சம்பந்தமாக எக்ஸ்ப்ளோரேஷன் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதை எடுத்ததற்குப் பிறகுதான் வியாபாரம், பயன்பற்றிச் சொல்ல வேண்டும். ஆராய்ச்சிபற்றித்தான் பதில் சொன்னேன். அப்படிப்பட்ட முயற்சி இல்லை என்று சொன்னேன்.

### *Preventing benami loan transactions in Co-operative Societies.*

* 622 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to amend the Co-operative Societies Act with a view to prevent benami loan transactions taking place in the Co-operative Credit Societies?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது நடைமுறையிலுள்ள கூட்டுறவுச் சட்டத்தில் 64, 65, 71 ஆகிய பிரிவுகளின்கீழ் போதிய அதிகாரம் இருக்கிறது. எனவே, சட்டத்தை இப்போது திருத்தத் தேவையில்லை.

**திரு. என். கே. பழனிசாமி :** பெருவாரியான க்ரெடிட் சொசைடிகளில் தலைவர்கள் பினாமியாக பல பேர்மீது கடன் போட்டு அதை எடுத்துக்கொள்கிறார்கள். அதைக் குறிப்பிட்ட நேரத்தில் கட்டுவது இல்லை என்ற காரணத்தால் பல சொசைடிகள் ஃபங்ஷன் பண்ணாமல் இருக்கின்றன. ஆகவே, சர்க்கார் இப்போது இருக்கும் முறையை மாற்றி லோன் விண்ணப்பம் போடுபவர்கள் நேரடியாக வந்து பணத்தை வாங்குவதற்கான முறையை ஏற்படுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது கடன் விண்ணப்பம் போடுவதும், கடன்களை விநியோகம் செய்வதும் நேரடியாகத்தான் நடக்கிறது. அரசாங்க அதிகாரிகூட இருந்து விநியோகம் நடக்கிறது. இதிலே தவறுதல் நடக்குமானால் சீர்திருத்தம்செய்ய இப்போதுள்ள சட்டத்திலேயே இடம் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்போதுள்ள சட்டத்தில் இடம் போதவில்லை என்ற நிலையில்தான் பல பேர் பினாமியாகப் பணத்தை வாங்கிக்கொண்டு டெஸ்ட்ஃபுல் டெட்ஸ்—மீளாக் கடன் பல லட்சக்கணக்கான ரூபாய் கூட்டுறவுத் துறையிலே ஏற்படுகிறது. ஆகவே, லோனுக்கு அப்ளிகேஷன் போடும் போது ஃபோட்டோ வைக்க வேண்டுமென்றும், தலைவர் கையில் அதிகாரம் இருக்கக்கூடாது என்ற முறையிலும் சீர்திருத்தம் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஒவ்வொரு மனுவிலும் போட்டோ வைக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குரிய செலவை யார் கொடுப்பது? ஏழை எளியவர்கள் போட்டோ பிடித்து வைக்க பண வசதி இருக்கிறதா என்பது கேள்வி. தவறுதல் நடக்குமானால் இப்போதுள்ள சட்டத்திலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய அதிகாரம் இருக்கிறது. கேள்வி, சட்டத்தைத்திருத்த வேண்டுமா என்பது. திருத்தாமலே போதிய அதிகாரம் இருக்கிறது என்று விடை சொன்னேன்.



**திரு. சோ. அழகர்சாமி :** இப்போதே பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்களில் பினாமியாகக் கொடுப்பது, வாங்குவது என்பது அதிகமாகி விட்டது. இதைத் தடுக்க எவ்வளவு சட்டங்கள் இருந்தாலும் நிர்வாகத்தில் இருப்பவர்கள் தடுக்க முடியவில்லை ஆகவே, சந்தானம் கமிட்டி சிபாரிசு அடிப்படையில் மூன்று ஆண்டுக் காலத்திற்குப் பதவியில் இருந்த பிறகு, இரண்டு பீரியடுக்குப் பொறுப்புக்கு வரக்கூடாது என்ற முறையில் ஏற்படுத்தினால் இதைத் தடுக்க முடியும். அதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** சந்தானம் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறது என்றால் தவறு செய்பவர்கள்மீது இந்தியன் பீனல் கோட் படி நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது, அதைக் கூட்டுறவுச் சட்டத்திலும் சேர்த்துவிட வேண்டுமென்று. பணத்தைத் திரும்பப் பெற கூட்டுறவுச் சட்டத்திலேயே இடம் இருக்கிறது. பீனல் கோடில் கிரிமினல் நடவடிக்கை எடுக்க இடம் இருக்கிறது.

**திரு கு. இராசமாணிக்கம் :** 1960-61-ஆம் ஆண்டுகளில் தீவிரச் சாகுபடித் திட்டத்திற்காக கொடுக்கப்பட்ட கடன்கள் இதுவரை வசூல் ஆகவில்லை. விவசாயிகளுடைய நிலைமையைப் பார்த்து அப்பேர்ப்பட்ட கடன்களை அரசு ரத்து செய்யுமா ? (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இம்மாதிரியான பினாமி டிரான்சாக்ஷன்களைத் தடுக்க போதுமான சட்டம் இருந்தாலும்கூட செயலாற்றுகின்ற முறையில் இருக்கும் கஷ்டத்தின் காரணமாகத் தவிர்க்க முடியவில்லை. அதற்காகத்தான் அம்மையார் அவர்கள் கோரியதுபோல் ஒவ்வொரு அப்ளிகேஷனிலும் ஃபோட்டோவைச் சேர்த்துக் கொண்டால் ஆள் மாறாட்டத்தைத் தடுக்க முடியும். அந்த முறையை அரசாங்கம் கையாள முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஆள் மாறாட்டம் செய்வது என்பது கூட்டுறவுச் சட்டத்தில் குற்றம் என்பது மட்டுமல்ல, இந்தியன் பீனல் கோட் படி பெரிய குற்றமாகக் கருதப்படுகிறது. சந்தானம் கமிட்டி பீனல் கோடில் இருக்கும் பிரிவைக் கூட்டுறவுச் சட்டத்திலும் சேர்த்துக்கொண்டால் நல்லது என்று கூறிற்று. பீனல் கோடிலேயே இடம் இருப்பதால் அது தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது. இப்போது 50 ரூபாய்க்கூடக் கடன் கொடுக்கிறோம். அதற்கெல்லாம் போட்டோ வைக்க வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக நடைமுறையில் சாத்தியமாக இருக்காது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகள்.

* 623 வினா.—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் நிலவள வங்கிகள்மூலம் 1971-72-ம் ஆண்டு வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை எவ்வளவு?

(இ) இதில் புதிய கிணறுகள் வெட்டக் கொடுத்த மொத்தத் தொகை எவ்வளவு?

(உ) மற்ற அபிவிருத்தி வேலைகளுக்குக் கொடுத்த தொகை எவ்வளவு?

(எ) முன் கடன் தீர்க்கக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ரூபாய் 93.63 இலட்சம். (ரூபாய் தொண்ணூற்று மூன்று லட்சத்து அறுபத்து மூவாயிரம்).

(இ) ரூபாய் 22.40 இலட்சம் (ரூபாய் இருபத்திரண்டு லட்சத்து நாற்பதனாயிரம்).

(உ) ரூபாய் 56.41 இலட்சம். (ரூபாய் ஐம்பத்தி ஆறு லட்சத்து நாற்பத்தி ஓராயிரம்).

(எ) ரூ. 14.82 இலட்சம். (ரூபாய் பதினான்கு லட்சத்து எண்பத்தி ரெண்டாயிரம்).

மு.ப. 10-00 திரு. சோ. அழகர்சாமி: 1971-72-ம் ஆண்டுக்கு மொத்தம் இந்தக் கூட்டுறவு நிலவள வங்கிகள்மூலம் கடன் கொடுப்பதற்கு டார்கெட்டாக நிர்ணயிக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதில் எந்தளவிற்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: டார்கெட் என்ற இலக்கு, ரூ. 103.5 லட்சம். அதில் ரூ. 93.63 லட்சம்தான் கொடுக்க முடிந்தது. டார்கெட்டுக்குக் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு அதையும் சேர்த்துக்கொடுக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தினை சிறிது நீட்டித்துக்கொள்கிறேன்.

திரு. ஏஸ். ஆறுமுகம்: முன்கடனைத் தீர்க்க, கொடுக்கக்கூடிய தொகை, முன்கடனைத் தீர்ப்பதற்காக ஒரு சத விகித அடிப்படையில் நிலவள வங்கி மூலம் கொடுக்கப்படுகிறது. அதைச் சிறிது உயர்த்தி விவசாயிகள் முன்கடன் தீர்ப்பதற்காக மனுச் செய்து கொண்டால் அவர்களுக்குத் தாராளமாகக் கொடுக்கிற அளவிற்கு நிலவள வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்படுமா?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: முன்னால் நில அடமான வங்கிகளாக இருந்தபோது முன்கடன் தீர்க்கத் தாராளமாக பணம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது நிலவள வங்கிகளாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகவே முன் கடன், முன்னால் வாங்கப்பட்ட கடன் நிலத்தை வளப்படுத்துவதற்கு, நிலத்தில் அதிகமான விளைச்சல் காணப் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு இப்போதும் நாம் கடன் வழங்கிவருகிறோம்.

எலி ஒழிப்புத்திட்டம்

* 624 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அகில இந்திய எலி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்திற்கு மத்திய அரசு ஏதேனும் உதவி அளித்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: விவசாயத்தைப் பெரிதும் பாழடிப்பது இந்த எலித் தொல்லைதான். ஆகவே இந்த எலிகளை ஒழிப்பதற்கு அரசு ஏதாவது நவீன முறைகளைக் கையாளுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தமிழக அரசுச் சார்பில் பயிர் பாதுகாப்பு பொறுத்தவரைக்கான உதவித் தொகையோடு எலி பாஷாணமாகிய, துத்தநாக பாஸ்பேட்டுக்கான உதவித் தொகை தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. தற்போது மருந்து பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. துத்தநாக பாஸ்பேட், எலிமருந்து போதுமான அளவிற்குப் பல்வேறு விவசாயக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு உழவர்களுக்குத் தேவைப்பட்டபோது பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப்: முன்பெல்லாம் வயல்களில் அதிகமாகப் பாம்புகள் இருக்கும். அதனால் எலிகள் வருவதில்லை. ஆனால் இப்போது பாம்புகள் எல்லாம் ஒழிந்துவிட்டன. ஆகவே அரசாங்கம் விஷம் இல்லாத பாம்புகளை, ஒரு பண்ணைபோல் வைத்து வளர்த்துவைத்து இந்த எலிகளைப் பிடிப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பாம்பிற்காக எலி வளர்த்து எலியைப் பிடிக்கப் பூனையை வளர்க்கும் பிரச்சினை இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த எலித் தொல்லை காரணமாக மொத்தம் எவ்வளவு தானியம் நஷ்டமாகியிருக்கிறது என்பதைப்பற்றி ஏதாவது புள்ளிவிவரம் அமைச்சர் அவர்களின் கையில் இருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரங்களைத் தருவார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்விபோட்டால் அதற்கு வேண்டிய விளக்கத்தை அளிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எலி பிடிப்பதற்கு என்று இந்த அரசாங்கம் ஏதாவது உதவித் தொகை கொடுக்குமா? எலி பிடிப்பதை உற்சாகப்படுத்த ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றுமில்லை.

திரு. துரை முருகன்: இப்படிப் பிடிபட்ட எலிகளை என்ன செய்கிறீர்கள்? எலிக்கறி சாப்பிடலாம் என்று முன்பு ஒரு மந்திரி வேறு ஒரு மாநிலத்தில் சொன்னார். அப்படி அதை உணவாகச் சாப்பிடும்வகையில் ஏதாவது பக்குவப்படுத்திச் செய்யமுடியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றுமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போதெல்லாம் பெருச்சாளிகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆகவே இந்த பெருச்சாளிகளைப் பிடிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வயல்களில் எதுவும் பெருச்சாளிகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பெருச்சாளிகளை ஒழிப்பதற்காக இப்போது சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிற நிலைமையில் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். வழக்கமாக ஆர்டர் வரிசையில்தான் அமைச்சர்களின் கேள்விகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் கேள்விக்குப் பின்னால் நம் வேளாண்மைத்துறை அமைச்சரின் கேள்வி வந்திருக்கிறது. அது நடைமுறை விதிகளுக்குச் சரியானதுதானா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஆர்டர் படித்தான் கூப்பிட்டிருக்கிறேன். ஆனால் அமைச்சர்கள் இடம் மாறி உட்கார்ந்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பெருச்சாளிகளை ஒழிக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எந்தப் பெருச்சாளிகளை......





மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இதுவரையில் ஏழைகளைச் சுரண்டி வந்த பெருச்சாளிகளை ஒழிப்பதற்கு.

திருமதி த. ந. அனந்தநாயகி: நிலத்தில் உள்ள எலி, பெருச்சாளிகள் பற்றிக் கேள்வி. மற்றப் பெருச்சாளிகள்பற்றி விவசாயத் துறை அமைச்சருக்கு அக்கறை இல்லை. இது விவசாயிகளை, வயல்களைப் பொறுத்தது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வயல்களில் உள்ள எலிகளை ஒழிப்பது மட்டுமல்ல. பெருச்சாளிகளை ஒழிப்பது என்பது நிலச்சொந்தக்காரர்கள் என்றுதான் பொருள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தெரிந்த பதிலுக்குக் கேள்வி கேட்கக்கூடாது.

திரு. கு. காமாட்சி: வயல்களுடைய வரப்புகள் அகலமாக இருப்பதால்தான் எலிகள் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அது உண்மைதான். ஆகவே இந்த வரப்புகளை எல்லாம் சீரமைக்கிற திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தஞ்சை மாவட்டத்தில் சித்தமல்லி ஸ்கீம் ஏற்படுத்தப்பட்டு அது நடைமுறையில் இருந்துவருகிறது. அங்கு வரப்புகள் எல்லாம் ஒழுங்காகச் சரி செய்யப்பட்டு இன்றையத்தினம் அப்பகுதியில் மேலும் பல இடங்களுக்கு விஸ்தரிக்கத் திட்டமிருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு: தஞ்சை மாவட்டத்திலும் வேறு பல மாவட்டங்களிலும் எலி ஒழிப்பு வாரம் என்ற பெயரால் சில ஆண்டுகளுக்கு முன்பாக தொடர்ந்து கொண்டாடப்பட்டு வந்தது. அத்தகைய வாரங்கள் இப்போது நடைமுறையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மத்திய அரசுச் சார்பில் இத்திட்டம் 1968–69-ல் இருந்தது. அது இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது.

திரு. என். கே. பழனிசாமி: கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எலி மருந்து விநியோகத்தை நிறுத்திவைத்திருப்பதாக. என்ன காரணத்தினால் இந்த விநியோகம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது? பஞ்சாயத்து ஒன்றியங்கள்மூலம் ஏன் அதை விநியோகிக்கக்கூடாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சப்ஸிடி கொடுப்பது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேனேதவிர மருந்து கொடுப்பது நிறுத்திவைக்கப்படவில்லை. எல்லா கோடவுன்களிலும் இந்த எலி பாஷாணம்

இருக்கிறது. எந்த நேரத்திலும் அவர்களின் தேவைக்கேற்ப அது கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** சுத்தமல்லி ஸ்கீம், வாட்டர் மானேஜ்மென்ட், ட்ரெயினேஜ், இவையெல்லாம் பகிர்ந்து கொடுக்கக்கூடிய நிலையில் நல்ல திட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செயல்படுத்த அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** வாட்டர் மானேஜ்மென்ட் ஸ்கீம் மட்டுமல்ல சாயில் கன்சர்வன்சி ஸ்கீமில் அது செய்யப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலும் பெரிய பெரிய வரப்புகள் இருந்து அதில் எலிகள் தங்குவதற்கு வாய்ப்புகள் இருந்தன. அதைப் போக்க சுத்தமல்லி ஸ்கீம் உருவாக்கப்பட்டு ஒழுங்காக வரப்புகள், வாய்க்கால்கள், எல்லாம் கவனிக்கப்பட்டு இன்று நல்ல முறையில் இருந்து வருகிறது. மேலும் தஞ்சை மாவட்டத்தில் அதை விஸ்தரிக்கத் திட்டமிருக்கிறது. மற்றப் பகுதிகளுக்கு விஸ்தரிப்பதற்குத் திட்டம் இப்போது இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** சில நகராட்சிகளில் நகரப்பகுதிகளில் உலாவுகிற பெருச்சாளிகளைப் பிடிக்க காசு வழங்கப்படுகிறது. அதேபோல் தம் மாநகராட்சியிலும் கடைப்பிடிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அந்தப் பொறுப்பு மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களிடம் இருக்கிறது. அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

### ஐயாவையனாற்றங்கரையோரச் சாலை

* 625 வினா.—**திரு. என். கிட்டப்பா.** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் ஐயாவையனாறு ஆற்றுக் கரையில் தார்சாலை அமைத்திடும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. அவையுரிமைப் பிரச்சினை

### சட்டப் பேரவையில் அரிசன நலத் துறை அமைச்சர் 19—3—73 அன்று ஆற்றிய உரை குறித்து

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru James has given notice under Rule 184 of the Legislative Assembly Rules to raise a matter of privilege against the Hon. Minister for Harijan Welfare in regard to a statement made on the floor of the House on 19th March 1973 in the course of her reply on Demand relating to Harijan Welfare. The relevant passage in Tamil is as follows :—

" மாண்புமிகு முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் கூட, மதம் மாறிய கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கு ஒரு தலைமுறைக்குச் சலுகைகள்—இரண்டாம், மூன்றும் தலைமுறையினர்களுக்குக் கிடையாது என்று சட்டம் போட்டிருந்தார்கள். இது, பழைய காங்கிரஸ்காரர் திரு ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரியவேண்டும். ஆனால் நாங்கள் அந்தப் பாகுபாட்டைக்கூடப் பார்க்கவில்லை. ஒரு தலைமுறையினராக இருந்தால் என்ன, இரண்டு தலைமுறையினராக இருந்தால் என்ன, எல்லாம் ஒரே தாழ்த்தப்பட்டவர்கள்தான்; பழைய கந்தன் பழைய கந்தன்தான் என்ற முறையில், அத்தனை சலுகைகளும் மதம் மாறிய கிருஸ்தவர்களுக்கும் உண்டு என்று சட்டம் இயற்றினோம். மத்திய அரசுச் சலுகையானாலும், மாநில அரசுச் சலுகையானாலும், மதம் மாறிய கிருஸ்தவர்களுக்கும் அவை கொடுக்கப்படவேண்டிய ஒன்றாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மத்திய அரசு அதைச் செய்யவில்லை." திரு. ஜேம்ஸ் அவர்கள் இதில் என்ன உரிமைப் பிரச்சினை இருக்கின்றது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன இலாகா அமைச்சர் அவர்கள், இந்த மன்றத்தில் அரிசன இலாகா மானியக் கோரிக்கை வந்த நேரத்தில், அரிசன மக்களில் மதம் மாறிய கிருத்துவர்களுக்கு, இந்துக்களுக்கு இருக்கும் சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்ற கருத்துப்பட நான் கூறியதற்குப் பதில் அளிக்கையில், 'இந்த அரசு மதம் மாறிய கிருஸ்துவர்களுக்குத் தலைமுறையைக் கணக்கிடாமல் எத்தனை தலைமுறையானாலும் அவர்களுக்கு இந்தச் சலுகைகளைக் கொடுப்பதற்கு உள்ள சட்டத்தினை இயற்றியிருக்கிறோம், இது முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜர் காலத்தில்தான் இந்தத் தலைமுறைக் கணக்கு இருந்தது' என்ற கருத்துப்படக் கூறினார்கள்.

ஆனால் இந்த அரசு இப்போது நடைமுறையில் வைத்திருக்கின்ற திட்டப்படி, லிஸ்டுப்படி, மதம் மாறிய அரிசனங்கள்—இவர்களுக்கு மாத்திரம் என்று சொல்லி, 'கொடேஷனில்', 'ஒரு தலைமுறை மட்டும்தான்' என்று அதில் குறிப்பிட்டு இருக்கின்றது. ஆக இதன்படி பார்த்தால் ஒரு தலைமுறையினருக்கு மட்டும்தான் இந்தச் சலுகைகள் மதம் மாறிய அரிசனங்களுக்கு என்ற முறையில்தான் இந்த 'பேக்வார்டு' லிஸ்டு அமைந்திருக்கின்றது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். இதனைப் பார்க்கும்போது, இன்று கடைப்பிடிக்கும் முறையையும் முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் காலத்தில் கடைப்பிடித்த முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டும் ஒரே முறையாகத்தான் இருக்கின்றதேதவிர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல இப்போது மதம் மாறிய அரிசனங்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் அதிகப்படியாக வழங்கப்படவில்லை.

ஆகவே, மாண்புமிகு அரிசன இலாகா அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே உண்மையை அறிந்தும், தங்கள் கையில் லிஸ்டை வைத்துக்கொண்டே இந்த மன்றத்திற்குத் தவறான கருத்தினை வெளியிட்டார்கள். ஆகவே இந்தக் கருத்தின் அடிப்படையில் இந்த மன்றத்திற்குத் தவறான கருத்தினைக் கூறியிருக்கின்றார்கள் என்று கூறி இந்த உரிமைப் பிரச்சனையை எழுப்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, கடந்த 19-ம் தேதி அரிசன நலத் துறை மானியத்தின்மீது பேசுகையில் குறிப்பிட்ட சில கருத்துக்கள் உரிமைப் பிரச்சினைக்கு விடப்படக்கூடியதாகும், நான் வேண்டும் என்றே உண்மையான தகவல்கள் கையில் இருந்தாலும் அவற்றைத் திரித்துப் பேசியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் முதலில் சொல்லிக்கொள்ள விரும்புவது, உண்மைக்குப் புறம்பான முறையில், கையில் வைத்திருந்த உண்மையான தகவல்களை வேண்டுமென்றே திரித்துக்கூறவில்லை எதையும் என்பதை நான் முதலில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்கள் குறிப்பிட்டார்கள், மதம் மாறிய அரிசனக் கிருஸ்துவர்களுக்கும் முதல் தலைமுறையில் பேக்வார்டு, பின் தங்கிய சமுதாயத்தில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்து வருகிறோம், இது காமராசர் காலத்திலிருந்து இன்று வரையில் கொடுக்கப்பட்டு வருகின்றது, இதில் புதுமை ஒன்றும் இல்லை என்ற முறையில் கூறினார்கள். நான் வேலை வாய்ப்புகளில் மதம் மாறிய அரிசன கிருஸ்துவர்களுக்கு பதினெட்டு சதவிகிதத்தில் பின்தங்கியவர்களுக்குத் தரப்படும் அந்த இடத்தில் இடம் பெறுகின்றார்கள் என்றோ அல்லது இப்போது அது உயர்த்திக்கொடுக்கப்படுகிறது என்றோ



அல்லது இன்று இந்துக்களாக இருக்கும் அரிசனங்களுக்குக் கிடைக்கும் சலுகைகளில் பதினெட்டு சதவிகிதம்தான் கொடுக்கிறோம் என்றோ சொல்லவில்லை.

நான் குறிப்பிட்டது, அந்தச் சலுகைகள் முன்னாள் முதலமைச்சர் திரு காமராஜர் அவர்கள் பதவியில் இருந்தபோதுகூட ஒரு தலைமுறைக்கு என்று கொடுத்திருந்தார்கள், அதனை இப்போது ஒரு தலைமுறை என்று இல்லை, எல்லாத் தலைமுறைக்கும் கொடுக்கலாம் என்று மாற்றியிருக்கிறோம் என்று சொன்னேன். அதற்குச் சான்றாக இப்போது நான் கூற விரும்புகின்றேன். Memorandum No. 94023/HW-III/70-1, dated 15th October 1970, தேதியில் மெமோ கொடுத்திருக்கிறோம். அதன்படிப்பார்த்தால் முதலில் 25—4—1957-ல் திரு. காமராஜர் காலத்தில் கொடுத்திருந்த 'all the educational concessions applicable to Harijans are available to Harijans converted to Christianity also with effect from 1957–58 . . . என்று இருக்கிறது. எனவே கல்விக்கான சலுகைகளை மட்டும்தான் அப்போது கொடுத்திருந்தார்கள். ஆனால் 1970-ல் நாங்கள் கொடுத்த மெமோவிலிருந்து அரிசனங்கள், 'கன்வெர்ட்ஸ்' 'Harijan converts are eligible for the benefit of all the educational schemes, such as scholarships, mid-day meals, admission in Government Hostels, etc., the expenditure on which is met entirely from State Government Funds.........'. என்று கொடுத்திருக்கிறோம். நான்காவதாக இந்தத் தலைமுறைப் பிரச்சினையைப் பார்க்கும்போது, the above concessions will be applicable to the children of Harijan converts also என்று போட்டிருக்கிறோம். இதற்கு முன்பு அரிசன 'கன்வெர்ட்ஸ்' என்றுதான் போட்டிருந்தார்கள். ஆனால் இந்த 1970-ம் ஆண்டு கொடுத்த மெமோவில் 'சில்ட்ரன் ஆஃப் அரிசன் கான்வெர்ட்ஸ்' என்று சொல்லும்போது மதம் மாறியவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய பிள்ளைகளுக்கும் என்று போட்டிருக்கின்றோம். வீடு கட்ட நிலம் கொடுப்பது, உபகாரச் சம்பளம் கொடுப்பது, மிட்டே மீல்ஸ் கொடுப்பது, மாநில அரசு நடத்தும் விடுதிகளில் இடம் கொடுப்பது இவைகளெல்லாம், முன்பு மதம் மாறிய அரிசன கிருஸ்துவர்களுக்கு மட்டும் என்று இருந்தது, இப்போது அவர்களுடைய குழந்தைகளுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கும்போது, அதைத்தான் ஒரு தலைமுறைக்கு இல்லை, இரண்டு தலைமுறைகளுக்கு என்று குறிப்பிட்டேன்.

அது மட்டுமல்ல, 1967-க்குப் பிறகு மாநில அரசு தரும் சில சலுகைகளை அதாவது அரிசனங்களுக்குத் தரப்பட்டு வரும் சலுகைகள் மதம் மாறியவர்களுக்குத் தரப்படாமல் இருந்தன. அவைகள் எல்லாம் இப்போது தரப்பட்டு வருகின்றன அல்லது தருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு

வருகின்றன, அவை மத்திய அரசிலிருந்து வரவேண்டியிருந்தால். உதாரணமாக, விவசாயக் கருவிகள் வாங்க 1967-க்கு முன்பு மதம் மாறிய அரிசன கிருஸ்துவர்களுக்கு கடன்கள் வழங்கப்படாமல் இருந்தன. கிணறுகள் வெட்டுவதற்கான மானியம் வழங்கப்படுவதில்லை. இவற்றையெல்லாம் இப்போது கொடுத்து வருகிறோம். காமராஜர் அவர்கள் கொடுக்கவில்லை, கலைஞர் அவர்கள் கொடுக்கின்றார்கள்.

இதுபோலவே டெக்னிகலி டிரெய்ன்ட் பெர்சன்ஸ் என்பவர்களுக்கு முன்பெல்லாம் ஸப்சிடி கொடுக்கப்படுவதில்லை, இப்போது கொடுக்கிறோம்.

முன்பு இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேடிவ்ஸ்களில் அவர்களுக்குச் சலுகைகள் முன்னுரிமைகள் இல்லை, இப்போது கொடுக்கப்படுகின்றன. இதுபோன்று ப்ரைட் ஸ்டூடண்ட்ஸ் ஸ்காலர்ஷிப் இப்போது கொடுக்கிறோம், அவர்களுக்கு முன்பில்லை.

மேலும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்து இந்த அரசு அரிசனங்களுக்குக் கொடுக்கும் சில சலுகைகள், அதாவது எஜுகேஷன் ஸ்காலர்ஷிப்,

(a) under State Government regulations; and

(b) under Government of India regulations. கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசினைக் கேட்டிருக்கின்றோம்.

For admission into educational institutions, coaching scheme for appearing for Tamil Nadu Public Service Commission Examination for Group IV Services, if the candidate himself is a convert, he will be treated as Backward Class and computed against 31 per cent reservation. இப்போது மதம் மாறியிருந்தாலும் அந்த 31 சதவிகிதத்தில் இவர்களுக்கும் வேலை வாய்ப்பு, கல்லூரிகளில் முன்னுரிமை இவையெல்லாம் மதம் மாறிய அரிசனக் கிருஸ்துவர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். Employment, Provision of House-site, Assignment of land for cultivation and Financial Assistance for petty trades. எம்ப்ளாய்மெண்டு என்று இருக்கின்றது. இதில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே ஃபினான்ஷியல் அஸிஸ்டென்ஸ் ஸ்மால் ட்ரேடர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போன்று இவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை. வீடு கட்டும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து இவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை. எனவே மத்திய அரசு நிதி உதவி பெற்று அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் நிதியிலிருந்து மதம் மாறிய கிருஸ்துவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று எழுதியிருக்கிறோம். இவ்வளவு



விளக்கத்திற்குப் பிறகும் நான் உண்மைக்குப் புறம்பாக, வேண்டுமென்றே இட்டுக்கட்டி, திசைத் திருப்ப வேண்டும் என்று எதையும் சொல்லவில்லை என்று கூறிக்கொண்டு இதில் எந்தவிதமான உரிமைப் பிரசினைக்கும் எடுத்துக் காட்ட இடமில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய பதிலிலிருந்து இன்றையதினம் பல்வேறு வகைகளில் மதம் மாறிய கிருஸ்துவர்களுக்கு ஒரு தலைமுறைக்கு மட்டும்தான் என்று இருப்பதாக ஒப்புக்கொண்டார்கள். சில வகைகளில் ஒரு தலைமுறையினருக்கும், வேறு சில வகைகளில் அவர்களுடைய பிள்ளைகளுக்கும். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருப்பி ஆர்க்யுமெண்டு ஆரம்பிக்கக் கூடாது You have already stabed the reasons. கிளாரிபிகேஷன் கேட்கலாம். அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டார் என்று கன்விக்ஷனிலே பேசுவது நல்லது அல்ல.

THIRU R. PONNAPPA NADAR: The official list that has been published by the Government is also submitted to you for perusal. In that there is a specific statement to the effect 'one generation only'. What is the argument? What is the answer for that, we want to know here and now. Instead of just sidetracking the issue, let them say that this is correct. Probably there may be so many things within the special knowledge of the Minister. All those things ought to have been clarified when she was giving the reply. Now when the notice has been given she just wants to sidetrack the whole issue. That is the only point which has to be answered. Instead of giving so many circuitous answers, it is better that she gives a direct and clear answer.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பின் தங்கிய மக்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் என்று வருகிற போது, அத்தகைய பின் தங்கிய பட்டியலில் வருகிற லிஸ்டை வைத்துக்கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். இந்த லிஸ்டில் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட மக்கள் யார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மதம் மாறிய அரிஜன கிருஸ்துவர்கள் என்று ஒரு பெயர் போட்டு 'வித் இன் பிராக்கெட்', 'பை ஹிம்செல்ப்' என்று இருக்கும்போது, அவர்கள் மாத்திரம் கன்வர்டாக இருந்தால் 31 சதவீத வேலை வாய்ப்புக்கு இடம் பெறுகிறார்கள் என்று இருக்கிறது. உறுப்பினர்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னுடைய ரூலிங் சொல்கிறேன். யாரும் குறுக்கிடக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரவர்களும் தெளிவாக விளக்கம் தந்திருக்கிறார்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் குற்றம் சாட்டுகிறபடி வேண்டுமென்றே தவறான தகவல் என்று தெரிந்து கொண்டே பேரவையை தவறான முறையில் வழி நடத்திச் செல்லவேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அவர்கள் அதற்கான தெளிவான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். எனவே இதிலே எந்தவிதமான அவை உரிமை மீறல் பிரச்சினையும் இல்லை என்று தீர்ப்புக் கூறி இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்து விடுகிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

#### (அ) உடுமலைப்பேட்டை தாலுக்கா குறிச்சிக்கோட்டையில் நடந்த மோதல் காரணமாக நடந்த துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து

MR. DEPUTY SPEAKER: Thiru R. Ponnappa Nadar has given notice of the following adjournment motion:

"The clash at Kurichikottai polling station, Udumalpet taluk at about 5 p.m. on 30th March 1973 resulting in attack and shooting on three innocent voters and the consequent tense situation prevailing there."

The hon. Member Dr. H. V. Hande also has given a notice under Rule 42 to the same effect. I request the hon. Members to explain very briefly how it will come under Rule 42.

**திரு. ஆர் பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, அவசரமும், அண்மையிலே நடந்ததுமான இந்த விஷயத்தையொட்டி இந்த அவையை ஒத்தி வைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்கவேண்டுமென்று இந்த அவையிலே நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முற்படுகிறேன். இது சம்பந்தமாக என்னுடைய கட்சியைச் சேர்ந்த திரு. நடராஜ கவுண்டர், திருவள காங்கிரசைச் சேர்ந்த ஒரு தலைவர், அவர்கள் தந்தி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் இந்த விவரங்களைத் தந்திருக்கிறார்கள். நான் எல்லா விளக்கங்களுக்குள்ளும் போகாமல் இதைப்பற்றி சுருக்கமாகக் கூறுவதுதான் இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தினை உணர்ந்து சொல்



கிறேன். 30—3—1973-ம் தேதியன்று தேர்தல் நடைபெற இருந்தது. அப்போது ஒவ்வொரு தாலுகாவின் விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்த கோவை ஜில்லா மார்கெடிங் கமிட்டிக்கு தேர்வு நடத்துவது என்று ஏற்பாடு செய்தார்கள். அப்போது என்ன நடந்தது என்று சொன்னால் அந்தியூர் வாக்குச் சாவடியில் உள்ள வாக்காளர்கள் ஓட்டு போடுவதற்குச் சென்ற போது அப்போது ஒரு சில விரும்பத்தகாத சம்பவங்கள் எல்லாம் நடந்து விட்டன என்ற தகவல் என்னிடம் இருக்கிறது.

என்ன நடந்தது என்று சொன்னால் குறிச்சிக்கோட்டையிலே இருந்த திரு. பி. பி. நடராஜனும், ஊழியர்களும் வேறு சிலருமாக அங்கிருந்தபோது தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய அனுதாபிகளுமாகச் சேர்ந்து இடையே ஒரு மோதல் ஏற்பட்டு அங்கு பயங்கரக் கலவரம் ஏற்பட்டதன் விளைவாக துப்பாக்கி கொண்டு சுட வேண்டிய அவல நிலைமை ஏற்பட்டு விட்டது. சமாதானமான சூழ்நிலையில் இந்த வாக்குப்பதிவு நடக்கவேண்டியதற்கு நேர்மாறாக இந்த மாதிரியான விரும்பத்தகாத பல காரியங்கள் அங்கே நடந்து இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், அங்கே பெரும் கூட்டம், கலவரம் ஏற்பட்டு, அங்கே பதட்ட நிலைமை உருவாகியிருக்கிறது. இந்த மாதிரியான நிலைமைகள் அடிக்கடி உண்டாவது என்பது விரும்பத்தக்கதல்ல. அதிலும் குறிப்பாக இன்று தமிழகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய அரசாங்கமும், காவலரும் அதற்குரிய போதிய முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, இது ஒரு முக்கியமான விஷயமாக இருக்கிறது. இந்த மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதிலே ஒரு தலைப்பட்சமாக இருக்கிறார்கள் என்று எனக்கு மேற்கொண்டும் தகவல் வந்திருக்கிறது. இது பற்றி விளக்கமாக விவாதிக்கவேண்டுமென்பதற்காக இந்த மன்றத்தின் காலத்தைக் கோருவதற்கு முற்படுகிறேன். இந்த மாதிரியான சம்பவம் இனிமேலும் வராமல் தடுப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I move—

"This House stands adjourned to discuss a matter of urgent public importance namely, the clash between two groups, Congress (O) and D.M.K. at Kurichikottai, Amaravathi Nagar, Udumalpet

taluk, resulting in three of them sustaining injuries due to gunshot on 30th March 1973 during an election contest for the Coimbatore Market Committee."

During the past few days, there has been some sort of political rivalry and discontentment and also some sort of unhappy feelings between two groups of persons at Kurichikottai, Amaravathi Nagar. This particular unhappy feeling had let to gunshots. Because of this unhappy feelings, gunshots were fired at.

In fact one of our old colleagues Thiru R. Krishnaswamy Gounder, one of the contestants and Thiru T. N. Kumaraswamy, who was the Chairman and who stood for the election were involved in this clash. One Thiru Krishnan, one of the followers and supporters of Thiru Krishnaswamy Gounder had altercations with Thiru Kumaraswamy. The whole thing had developed into a serious crisis and led to gunshots. This is what has happened there.

In fact, I would like the Hon. the Chief Minister to give an assurance to the effect that he would see that as far as possible the persons on either side—either D.M.K. Supporters or others—will not be allowed to utilise the officials to their advantage. I would like to have such an assurance from the Hon. the Chief Minister in view of the political conditions prevailing there. If the Hon. the Chief Minister can give an assurance, peaceful conditions will prevail there. If after the Hon. the Chief Minister's reply, the Deputy Speaker feels that it is necessary, he can give us a chance to discuss the Adjournment Motion in the House.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அரசியல் காரணங்களால் இதுபோன்ற கோளாறுகள் ஏற்படுவதும், வன்முறை அளவுக்கு அந்தக் கோளாறுகள் நடப்பதும் உள்ளபடியே யாரும் விரும்பக்கூடிய நிகழ்ச்சி அல்ல. ஆனாலும், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அரசு அல்லது காவல் துறை ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான்—திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. ஹாண்டே அவர்களும் விட்டது போல்—அந்த விவகாரத்தின் விவரங்களுக்குள் செல்ல விரும்ப



வில்லை. ஏனெனில், உடனடியாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அதிலும், துப்பாக்கியைப் பயன்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. தி.மு.க. அனுதாபி என்று கூறப்படுகிற கண்ணப்பன் உடனடியாக கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் மீது காவல் நிலைய, குற்ற எண் 34/73-ல் இ.பி.கோ. 307 பிரிவின் கீழ் வழக்கு ஒன்றும், அதைப்போலவே அவருடைய சகோதரர் சின்னப்பன் மீது குற்ற எண் 35/73-ல் இ.பி.கோ. 506, 11 பிரிவின் கீழ் வழக்கு என்றும், ஆக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருக்கின்றன. அதைப் போலவே, மாற்றுத் தரப்பினரைத் தாக்கியதாக நிறுவன காங்கிரஸ் குருசாமி மைசூரான் ஆகியவர்கள் மீதும் குற்ற எண் 36]73-ல் இ.பி.கோ. 324 பிரிவின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு, இதனால் தடைப்பட்டுப்போன தேர்தல், மீண்டும் 5—4—1973 அன்று நடைபெறவிருக்கிறது. இதிலே பாரபட்சம் இல்லாமல் காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். இதற்கப்பால், இந்தச் சம்பவங்களை மேலும் அதிகப்படுத்துகின்ற அளவுக்கு அங்கே அனைத்துக் கட்சி சார்பில் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். காவல் துறையினர் உடனடியாக ஏற்ற நடவடிக்கை எடுத்து இருப்பதால், எந்த விதமான பாரபட்சமும் இல்லாமல் அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியையும் நான் இங்கே அளித்து, அந்த உறுதியை அடிப்படையாகக் கொண்டு அங்கே ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் போன்ற காரியங்களில் எதிர்க்கட்சிகள் மேலும் ஈடுபட்டு, அதன் தொடர்பாக அமளி ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹாண்டே அவர்களும், பொன்னப்ப நாடார் அவர்களும் கேட்டுக்கொண்டபடி உறுதியாக, நிச்சயமாக இந்தப் பிரச்னையில் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் மற்ற அலுவல்களை நிறுத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று தலைவரவர்களுக்கு கூறிக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறியபடி கண்ணப்பன் அவர்கள் தான் 'கன்-ஷாட்டிற்குக்' காரணம் என்று

சொன்னார்கள். அவர்களிடத்தில் லைசென்சு இருந்ததா? அது பற்றிய விஷயங்கள் ஆராயப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காலையில் அது பற்றி விசாரிக்கச் சொன்னேன். அவரிடத்தில் லைசென்சு இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அந்தத் தகவல் வந்திருக்கிறது. லைசென்சு உள்ள துப்பாக்கியா, எப்படி பயன்படுத்தப்பட்டது என்பது விசாரணையில் தெளிவாக இருக்கிறது. அவருடைய துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டு, அவரும் கைது செய்யப்பட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதி, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) சென்னை ஐ.என்.டி.யு.சி. காரியாலயத்தின் முன் அடிசன் கம்பெனித் தொழிலாளர் இடையே ஏற்பட்ட மோதல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது—

"The clash in front of I.N.T.U.C. Office at Madras on 29th March 1973 between two sections of workers of Addison & Co., and the difficulties caused to the workers of Addison & Co., by not finding a solution."

இது எப்படி 42-வது விதியின் கீழ் வரும் என்பதை திருமதி அனந்தநாயகி அவர்கள் சுருக்கமாக விளக்குவார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு மாதங்களுக்கு மேலாக அடிசன் கம்பெனி மூடி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட—ஐ.என்.டி.யு.சி. சங்கம் இருக்கிறது. அங்கே இருக்கிற தொழிலாளிகள் எல்லாம் கூடி தகராறைத் தீர்த்து வைக்க வழி பிறக்குமா என்று யோசனை நடத்தினார்கள். அப்படிக் கூடிய தொழிற் சங்க வாதிகளை எல்லாம் மற்றொரு கோஷ்டியினர் அவர்கள் மீது கல் வீசியும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டும், மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க முடியாத அளவுக்கு தடை செய்து விட்டார்கள். அடிசன் கம்பெனியில் தொழிலாளர்களின் மேல் வழக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். எப்படி பின்னி கம்பெனியின் வழக்கில் விசாரணை நடத்தி வருகிறோமோ அப்படியே,



அடிசன் கம்பெனியிலும் தொழிலாளர்கள் மீது ஒரு விசாரணை நடத்த வேண்டும். தொழிலாளிகள் பக்கம் நியாயமா, அல்லது மற்றவர்கள் மீது நியாயமா என்பதை விசாரணை முடிவு செய்யும்வரை தொழிற்சாலையைத் திறந்து வைப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று புரியவில்லை.

இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற, அங்கீகரிக்கப்பட்ட யூனியன் 1972-ல் தேர்ந்தெடுக்கப்பட்டது. மீண்டும் 1974-ல் தேர்தல் நடக்கவேண்டும். இரண்டாண்டுக் காலம் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறபோது இடையிலே புகுந்து கலவரம் செய்வது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். தேர்தல் நடந்து ஒரு ரெகக்னைஸ்ட் யூனியன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அந்தச் சங்கம் செயல்பட விடாமல், கலவரங்கள், குழப்பங்கள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்டே இருந்தால் சங்கம் செயல்பட முடியாமல், தொழிலாளிகளின் நிலைமைகள் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியாத நிலை ஏற்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட யூனியன் எதுவாக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலை கிடையாது. அது தன்னுடைய முழுக் காலத்திற்கும் செயல்பட வேண்டும். அதற்குள் குறுக்கே புகுந்து கலகம் விளைவிப்பது, நெருக்கடிகளை ஏற்படுத்துவது என்பது சரியல்ல.

1974-இல் மீண்டும் தேர்தல் வரப்போகிறது. இப்போது இருக்கிற சங்கத்தை மூடிந்தால் வீட்டுக்கு அனுப்பிவிட்டு அந்த யூனியன் வரட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்குள்ளாக, வன்முறையில் ஈடுபடுவது, இந்தச் சங்கத்தை நடக்கவிடாமல் தொல்லைகள் கொடுப்பது, நடத்தக்கொண்டிருப்பது என்பது முறையானதல்ல. இதனால், 70 நாட்களுக்கு மேலாக அந்தத் தொழிலாளிகள் வேலைக்குப் போக முடியாமல், வேலையில்லாமல் வெந்துகொண்டிருக்கிறார்கள். யார் யூனியன் தலைவராக இருந்தாலும் சரி, when an elected and recognised union is there, nobody should disturb it.

ஆறு வருஷம், 5 வருஷம் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். வேண்டுமானால் தொல்லைகள் கொடுக்கலாமே தவிர, வன்முறைச் செயல்களில் ஈடுபடக் கூடாது. ஆனால், அதே சமயம், ஒரு பெரிய மக்கள் கிளர்ச்சி—அப்ஹீவல் வந்து மாற்றம் செய்யப்பட்டால், அது வேறு விஷயம்.

எனவே, அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இருக்கிறபோது போட்டிச் சங்கங்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது என்பது தவறு. தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கம் அதனுடைய முழுக் காலம் வரை ஒழுங்காக நடத்தும்படியான சூழ்நிலையை ஏற்படுத்துவது, தொழிலாளர் நலனுக்கு மிகமிக அவசியம். அப்படி இல்லாமல், இந்த அடிசன் கம்பெனியில் ஐ.என்.டி.யு.சி. ஆபீசில் வன்முறைச்

செயல்களில் ஈடுபட்டு, தொல்லைகள் கொடுத்து வருகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை தொழிலாளர்களிடையே அமைதியைக் கெடுக்கின்ற முறையில் இருப்பதால், இப்படித் தொல்லை கொடுப்பவர்கள் மீது துரிதமாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவரவர்களே, இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்சங்க யூனியனைக் குலைப்பதற்கு, தொல்லை கொடுப்பதற்கு முயலுகின்றவர்கள் யார்? அந்தத் தொழிற்சங்கத்தின் பெயர் என்ன என்பதை அம்மையார் அவர்கள் அறிவித்தால் நலமாக இருக்கும்.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* . . . . . எனக்குத் தெரியாது. அப்படி, ஒரு தேர்ந்தெடுக்கப்படுகிற யூனியன் இருக்கிறபோது மற்றொரு சங்கம் தொல்லை கொடுப்பது என்பது நியாயமாகாது. ஒரு சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்படிப்பட்ட தொல்லைகளால், அந்தச் சங்கத்தை காலை முடக்கிக்கொண்டு உட்கார வைத்து விட்டால், அப்புறம் யூனியன் என்பதே தேவையில்லையே! அந்த முறைகளைத் தடுப்பதற்கு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:* தலைவரவர்களே, நமது முதலவரவர்கள் சில நேரங்களில் "ரோஜலு மாராயி" "காலம் மாறிப்போச்சு" என்று சொல்வார்கள். அது இப்போது பொருத்தமாக இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கத்திற்கு போட்டியாக இன்னொரு சங்கம் இருக்கலாமா என்று எதிர்க்கட்சித்தரப்பினர் கேட்கும்படியான காலம் இவ்வளவு சீக்கிரத்தில் வரும் என்று எதிர்பார்க்கவில்லை. (கரவொலி).

*திருமதி த. ந. அனந்தநாயகி:* தலைவரவர்களே, அந்தமாதிரியான மாறுபட்ட கருத்தினை நான் சொல்லவில்லை, தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கம் வேலை செய்யும்போது அதற்கிடையில் புகுந்து வன்முறையில் ஈடுபடுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. விசாரணை நடத்தி நியாயம் பெறலாம். சிம்சனில் விசாரணை நடக்கவில்லையா? அதே மாதிரி நடக்கட்டுமே! அப்போது நியாயம் வழங்கப்படும்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்ற வாசகங்களையும், அதை ஒட்டி டாக்டர் அம்மையார் அவர்கள் பேசிய பேச்சுக்களையும் நான் உள்ளபடியே வரவேற்கிறேன். ஒரு நிர்வாகம் அல்லது ஒரு சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கம் அதனுடைய பதவி காலம் வரை நீடித்



திருந்துதான் தீர வேண்டும், அதற்கிடையே தொல்லை கொடுக்கக்கூடாது என்பதை நான் நிச்சயமாக வரவேற்கிறேன். அவருடைய அந்தக் கருத்தை பரிபூரணமாக நான் பாராட்டுகிறேன்.

அதே நிலையில், அதே மாதிரி பிற எல்லா காரியங்களிலும் இதை நாம் கடைபிடிக்க வேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், அவருடைய தலைவராக இருக்கின்ற இந்திரா காந்தி அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கட்சி அல்லது ஒரு சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு பதவி காலம் வரையிலே அவர்கள் அந்தப் பதவியிலே இருந்து பொறுப்பு வகிக்க வேண்டுமென்ற கருத்தினை பிரதமர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த பிறகு அம்மையார் அவர்களும் அந்தக் கருத்தினைத் தெரிவித்ததற்காக நன்றி கூறிக் கொள்கிறேன்.

ஐ.என்.டி.யு.சி. சங்கம் அங்கே நடைபெறுகின்றது. அந்த யூனியனுக்கு எதிராக வேறு சங்கத்தின் சார்பில் தொல்லை கொடுக்கிறார்கள் என்ற கவலை இங்கே தெரிவிக்கப்பட்டது. இது சென்னை மாநகரத்தில் பல்வேறு தொழிற் சங்கங்களில் பலகாலமாக நடைபெற்று வருகின்ற ஒன்று. நாமே, தெரிந்தோ, தெரியாமலோ ஆதரவு கொடுத்திருக்கின்றோம். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பதற்கேற்ப சில காரியங்கள் நடந்து விடுகின்றன.

காட்டூர் கோபால் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தத் தொழிற்சங்கத்தின் தலைவராக இருந்தார். அந்த இடத்திலேயிருந்து அவரை நாம் மாற்றி விட்டோம். இப்பொழுது ஐ.என்.டி.யு.சி. சங்கத்திற்கு தொல்லைகளை தருகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி யார் தொல்லை தருகிறார்கள் என்று அவர் வாயாலேயே சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் தந்திரமாக சொல்லாமல் விட்டுவிட்டார்கள். அரசு அவர்களுடன் கலந்து பேசி, ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் என்ற உறுதியை மாத்திரம் அளித்து இந்த ஒத்திவைப்புப் பிரேரணையின் மீது இனியும் விவாதம் தேவையில்லை, ஒத்திவைப்புப் பிரேரணையை திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* நான் தெரிவித்தது, யாரும் டிஸ்டர்ப் பண்ணக் கூடாது. அந்த முறையில் பதவியில் இருக்கிறவர்களும் நடந்து கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் பதவி காலம் வரை யாரும் தடுக்க முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:* தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் அரசு, விரைவில், துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்று காலையில் கூட, மேனேஜ்மெண்டார் தொழிற்சாலையைத் திறந்து, எவ்வளவு சேதாரம் ஏற்பட்டிருக்கிறது,

மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதை எல்லாம் நாலைந்து நாட்களில் பரிசிலனை செய்யப் போவதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு 'லாக்-அவுட்டை' லிப்ட் செய்து விட்டு தொழிலாளர்களை வேலைக்கு அனுப்புவது என்ற முறையில் நம்பிக்கையோடு மேனேஜ்மெண்ட் செயல்பட்டு வருகிறது. அப்படி தொழிலாளர்கள் வேலைக்குப் போகும்போது மற்றொரு யூனியன் வாசலில் நின்றுகொண்டு தொழிலாளர்கள் போவதைத் தடுத்தால் இங்கே உள்ள தொழிற்சங்கத் தலைவர்களும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் கட்சியும் அதற்கு இடம் கொடுக்காமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்றைக்குக் காலையில் மேனேஜ்மெண்டார் தொழிற்சாலைக்குள் சென்று சேதப்படுத்தப்பட்ட உடைமைகளையெல்லாம் பார்வையிடுவதற்காகப் போயிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் அரசியல் குறுக்கிடாமல், இது முழுக்க முழுக்க தொழிற்சங்கப் பிரச்சினையாக இருப்பதால், தொழிற்சங்க விதிமுறைகளின்படி செயல்பட வேண்டுமென்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

மற்றொன்றும் சொல்ல விரும்புகிறேன். தொழிற்துறையின் ஒழுங்குமுறை விதிகளின்படி ஒரு சங்கம் அங்கீகாரம் பெற்றுவிட்டால் இரண்டாண்டு காலத்திற்கு அந்தச் சங்கம்தான் பதவியில் இருக்கவேண்டும். அதன்படி இப்போது ஒரு ஆண்டு முடிந்திருக்கிறது. இன்னும் ஒரு ஆண்டு இருக்கிறது. எனவே, அதற்குள் தேர்தல் என்பது முறையானதல்ல என்பது அரசின் கருத்தாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் "புரட்சி ஏற்பட்டால் யாரும் தடுக்க முடியாது" என்று சொன்னார்கள். தொழிலாளர்களும் மக்கள் தான். மக்கள் சமுதாயத்தின் ஒரு கூறு தான் தொழிலாளர்களும். அந்த இலக்கணம் அதற்குப் பொருந்துமானால், அதே இலக்கணம் இதற்கும் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்குப் பின் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்பதால், இதற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

## 4. நடைமுறைக் கேள்வி

**குறைந்த கால அளவில் பல சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவருவது குறித்து**

**THIRU R. PONNAPPA NADAR :** Sir, with your permission I want to raise a point of order. In the Agenda that has been circulated to the House, the first item is 'Tamil Nadu Cultivating



Tenants (Right to Purchase Land Owners' Rights) Bill, 1973. In the Supplemental Agenda leave is asked for the introduction of the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973. Rule 88 of the Tamil Nadu Legislative Assembly Rules' says—

'Any member desiring to move for leave to introduce a Bill shall give five days' notice of his intention and shall together with the notice, submit to the Secretary a copy of the Bill and a full statement of Objects and Reasons' என்று விதிமுறைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விதிமுறைகள் எல்லாம் சரியான முறையில் கடைபிடிக்கப்படவில்லை என்ற ஆட்சேபணையை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் எந்த பில் ஆனாலும் சரி, கடைசி நேரத்தில் அவசர அவசரமாக வருகின்ற காரணத்தால் எங்களைப் போன்றவர்கள் அவற்றைப் படிப்பதற்கு, விவாதிப்பதற்கு அவகாசம் இல்லை.

ஆகவே, இந்த மாதிரியான காரியங்களைத் தவிர்க்கவேண்டும். இந்த மன்றத்தில் பொதுவாக சட்டமியற்றுகின்ற காலவரையறை மிகவும் குறைவாக இருக்கின்றது. இங்கே இருப்பவர்கள் எல்லோரும் சட்ட நிபுணர்களாகவோ, வழக்கறிஞர்களாகவோ இல்லை. வழக்கறிஞர்களாக இருந்தாலும் அந்தச் சட்டங்களை எல்லாம் படித்து அதிலே இருக்கின்ற நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் கொஞ்ச காலம் பிடிக்கும். ஆகவே, இந்த மாதிரி, பல பில்களை குறைந்த கால அளவில் கொண்டுவருவது சரியல்ல.

இன்றைக்கு, டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் பில் மட்டுமல்ல, மெட்ராஸ் சிடி டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் பில்லும் வருகிறது. அதற்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி விதிமுறைகள் இருக்கும்போது, இப்படிப் போதிய அவகாசமில்லாமல் பில்களைக் கொண்டுவருவது என்பது சரியல்ல. எங்களுக்கு அவகாசம் குறைவாக இருக்கிறது. தொன்றுதொட்டே இப்படி நடக்கிற காரணத்தால், இந்த விதிமுறைகளை கவனத்திற்குக் கொண்டு வந்து இனியாவது இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்ளும்படி மிகத் தாழ்மையுடன் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன்பேரில் தங்களுடைய மேலான தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, பொதுவாக இந்த மசோதா சம்பந்தப்பட்ட மட்டில் இந்தச் சபையிலே இதற்கு முன்னால் இரண்டு தடவை எழுப்பியிருக்கிறோம். மசோதாக்கள் முறையாகக் கொடுக்கப்படுவதில்லை

என்பது மாத்திரமல்லாமல், கடைசி நேரத்தில் மசோதாக்கள் கொண்டுவரப்படுகின்றன. இன்றைகுக் கூட, சப்ளிமெண்டரி லிஸ்டில்,

(1) The Tamil Nadu Legal Aid and Advice Bill, 1973;

(2) The Madras City Tenants ' Protection (Amendment) Bill, 1973; and

(3) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill. 1973 ஆகியவைகள் இப்போது கொடுக்கப்படுகின்றன. அவையின் நீண்ட செஷன் நடந்துகொண்டிருக்கிறபோது இப்போது திடீரென்று இவைகள் கொடுக்கப்படுகின்றன. இவற்றை ஆரம்ப காலத்திலேயே கொண்டுவந்திருக்கலாம். ஒரு மாதத்திற்கு முன்பே இவற்றைக் கொண்டுவந்திருந்தால் எங்கள் கருத்துக்களை இந்த அவையின் முன்னால் வைப்பதற்கு சௌகரியமாக இருக்கும். அப்படியில்லாமல், கடைசி நேரத்தில் பில்களை இண்ட்ரொட்யூஸ் பண்ணுவது என்பது முறையானதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்த செஷனில் இதைப்பற்றி விவாதிக்கலாம் என்றால், இன்றைக்கு அதை இண்ட்ராட்யூஸ் பண்ணவேண்டிய அவசியமில்லை. விசேஷமாக ஒரு கூட்டம் நடக்கும், அப்போது இந்த மசோதாக்கள் எடுக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பைச் செய்திருந்தாலும் பரவாயில்லை. அப்படி இல்லாமல் திடீரென்று ஆரம்பத்திலேயே எடுத்திருக்கவேண்டிய மசோதாக்களை கடைசியிலே கொண்டுவந்து, விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது என்று சொன்னால் அது முறையானதல்ல என்பதைத்தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, விதிகளில் எந்தவிதமான தவறுதலும் செய்துவிடவில்லை. துணைத் தலைவரவர்களின் அனுமதியைக் கேட்டுத்தான் செய்கிறோம். இன்றைக்கு அறிமுகம் செய்யப்படுகின்ற மசோதாக்களின் முக்கிய நோக்கம் பொதுமக்களுக்குச் செய்யப்படுகின்ற உதவி காலதாமதம் ஆகாமல் விரைவிலே கிடைக்க வேண்டும் என்பதுதான். அதுவும் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டதைப்போல எல்லா மசோதாக்களும் அப்படிக் கொண்டுவருவதாகச் சொல்ல முடியாது. சில மசோதாக்களை நம்முடைய மன்றத்திலே இந்த கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும் என்று சொன்னதற்குப் பின்னாலேதான் எப்படியாவது கொண்டுவந்துவிட வேண்டுமென்று முயற்சி செய்யப்படுகிறது.

குறிப்பாக, இப்போது வந்திருக்கிற 'சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்கல்' என்ற மசோதாவை நாம் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பலாம் என்று இருப்பதால் அதிகமாக விவாதம் இருக்காது என்று உத்தேசித்துக்



கொண்டு வந்திருக்கிறோம். அதற்குக் காரணம் மத்திய அரசு இதைப்பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அதற்கு முன்னால் நாமே பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி பரிசீலித்து விடலாம் என்றுதான் கொண்டுவந்திருக்கிறோம். இதை உடனடியாக சட்டமாக நிறைவேற்றிவிட வேண்டுமென்ற நோக்கத்தில் கொண்டுவரவில்லை.

'எலெக்ட்ரிசிட்டி அண்டர்டேக்கிங்லை' பொறுத்தவரையில், இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவந்துவிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்திருந்ததால் அதைக் கொண்டுவந்திருக்கிறோம். இதிலே கூட ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தை அப்படியே பின்பற்றி, நஷ்ட ஈட்டைப் பற்றி மட்டும் தான் மாற்றம் செய்யப்படுகிறது. இரண்டாவதாக, இப்போது இருக்கிறது 39-வது அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்யும்போது ப்ரொடெக்ஷன் வேண்டுமென்ற பிரிவை சேர்த்திருக்கிறோம். இதைத்தவிர ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற சட்டத்தையே பெரும்பாலும் பின்பற்றுவது என்பதை ஏற்றிருக்கிறோம். ஆகவே, இதிலும் விவாதத்திற்கு அதிக வாய்ப்பு இல்லை. அதனால்தான் அதையும் இப்போதே கொண்டுவந்திருக்கிறோம். இப்போது கொண்டுவராவிட்டால், தேசியமய மாக்கும் பிரச்னையில் காலம் தாழ்த்தினால் பல சிக்கலான பிரச்னைகள் உருவாகக்கூடும். அதைத் தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் அவசரமாக இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்காகத்தான் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே கூட நாளை மறுநாள் ஒரு மணி நேரம் ஒதுக்கி மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்கலாம் என்றிருக்கிறோம்.

ஆக, இந்த இரண்டு மசோதாக்களிலுமே அதிகமான விவாதத்திற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மற்ற சிக்கல்கள் ஏற்படாமல் விரைவிலேயே மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய உதவிகள் அவர்களைச் சென்று அடையவேண்டும் என்பதற்காகத்தான் அவசரமாக இந்த மசோதாக்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவே அல்லாமல் வேறு எந்த நோக்கமும் இல்லை. ஆகவே, கட்சித் தலைவர்கள் இதிலே எதிர்ப்புக் காட்டாமலிருக்க வேண்டும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன விளக்கம் போதுமென்று கருதுகிறேன். சட்டப் பேரவை விதி 138-ன் கீழ் சட்டப் பேரவைத் தலைவர் 88-வது விதியைத் தளர்த்தி அனுமதி கொடுக்கலாம் என்றிருக்கிறது. ஆகவே, அமைச்சரவர்கள் குறிப்பிட்ட மசோதாக்களுக்கு 138-வது விதியின்கீழ் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதில் பெரிய பாதகம் எதுவும் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பில்லை இன்ட்ரொடக்ஷன் பண்ணினாலும் கூட, இது எப்படி ஏற்றுக்கொள்ளப்படும் என்ற விஷயங்கள் . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றி எல்லாம் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசிக்கொள்ளலாம்.

5. அறிக்கை அளித்தல்

(அ) வினா எண் 299-க்கு போடப்பட்ட துணை வினாவிற்கு அளித்த விடையைத் திருத்தி அரிசன நல அமைச்சர் அளித்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 4—3—1972-ம் நாளன்று 299-ம் எண் வினாவிற்கு திரு. க. நாகராசன் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரிசெய்து மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அந்த 299-ம் வினாவிற்கான துணைக் கேள்விக்கு அளித்த விடையைத் திருத்தி அறிக்கை @ ஒன்று மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறை மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறையின் மீதான மேற்படி குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்.

THIRU PALANIVEL RAJAN : Sir, I rise to present the report of the Estimates Committee on Hindu Religious and Charitable Endowments Administration Department.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் இந்தச் சட்ட முன்வடிவை அறி உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

---

@ 420–422-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1973-ம் ஆண்டு சென்னை மாநகர் குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1973-ம் ஆண்டு, சென்னை மாநகர் குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973."

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

**(ஈ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமை யாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73)**—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73)-ன் மீதான விவாதம் நேற்று முடிவுறவில்லை. அதன்மீதான விவாதம் இன்று தொடரும். திரு. மணலி கந்தசாமி அவர்கள் தொடர்ந்து உரையாற்று வார்கள்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** மாண்புமிகு துணைத்தலைவரவர்களே, நேற்றைய தினம் நான் பேசும்போது இந்த மசோதாவுக்குப் புறம்பான சில கருத்துக் களைச் சொன்னேன். அதற்குப் பின்னால் தீர யோசித்துப் பின்னால் அந்தக் கருத்துக்களை விட்டுவிட முடிவு செய்திருக்கிறேன். ஏனென்றால் நிலச் சீர் திருத்தம் இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இருக்கிறது. அவர்களின் வாழ்க்கை உயர்வுக்கு அனைவருமே பாடுபடுகிறோம். அதற்காக இந்த அரசு கொண்டுவரக்கூடிய சட்டங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். எந்தக் கோணத்தை எடுத்துக்கொண்டாலும் சாதாரண மக்களின் மேம்பாட்டையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும்.

இன்றைக்கு நிலத்தை வசப்படுத்தி, பயிரிடுபவர்களுக்கு கொடுக்கின்ற வகையில் இந்த மசோதா வந்திருக்கிறது. கடந்த 50 ஆண்டு காலமாக விவசாய இயக்கத்திலிருந்து பல்வேறு கமிட்டிகள் போடப்பட்டு, அதன் அடிப்படையிலே இன்றைக்கு நல்ல பல மாற்றங்கள் ஏற்பட்டாலொழிய உணவு உற்பத்தி அதிக ரிக்க முடியாது, என்பதை இந்த நாடு அங்கீகரித்திருக்கிறது. அதற்கேற்ற முறையில் பல திருத்தங்கள் வந்து, இன்றைக்கு இந்தச் சட்டம் மிக எளிய சட்டமாக வந்திருக்கிறது. இதிலே சிக்கல் ஒன்றும் இல்லை. 12 வருஷம் தொடர்ந்து ஒருவன் குத்தகை கட்டினால் அவன் நிலத்திற்குச் சொந்தக்கார னாக்கப்படுகிறான். இந்த அளவுக்கு சட்டம் சாதாரணமாகத்தான் இருக் கிறது.

இதிலே சிக்கல் மசோதா என்று சொல்வதற்கு ஒன்றும் இல்லை. பெரிய அளவுக்கு சட்ட நுணுக்கங்களைப்பற்றி எல்லாம் ஆராய வேண்டிய தேவை யில்லை. சிலர் இதை மீண்டும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். செலக்ட் கமிட்டிக்குப் போனால், அதற்குள்ளே ஏதாவது விஷமங்களைப் பண்ணலாம் என்று எண்ணுகிறார்கள். அவர்களைவிட அதிகமான



குழப்பங்களை உண்டுபண்ண எங்களால் முடியும். பெருமளவிற்கு விவசாயி களைத் திரட்டிக்கொண்டு, இன்னும் தீவிரமான சட்டம் வரவேண்டுமென்று தெருத் தெருவாக கோஷங்களைப் போட்டுக்கொண்டு ஊர்வலம் நடத்த எங்களால் முடியும். அப்படிச் செய்ய நாங்கள் விரும்பவில்லை. சாதாரண மக்களுக்கு நல்லது செய்வதாக இருந்தால் அதற்கு ஆதரவாக இருக்கத்தான் நாங்கள் விரும்புகிறோம். இது ஒரு நல்ல சட்டமாக இருப்பதால் நாங்கள் இந்தச் சட்டத்தை வரவேற்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இன்னும் தீவிரமான சட்டம் வர வேண்டுமென்று தெருத் தெருவாக ஊர்வலம் நடத்தினால் நாங்கள் நிச்சயமாக வரவேற்கிறோம். ஆனால் விவசாய வருமான வரியை உள்ளே ஆதரித்துவிட்டு, வெளியே எதிர்த்து ஊர்வலம் நடத்தினீர்களே! அதைப்போல வராமல் இருந் தால் இரட்டிப்பு மகிழ்ச்சி.

**திரு. மணலி சி. கந்தசாமி :** நடக்க வேண்டியவைகளை நான் சொல்கிறேன்; நடந்தவைகளைச் சொல்லவில்லை.

இதிலே இன்னும் ஒரு சில சிறிய சிக்கல்கள் இருக்கின்றன. எப்படி என்றால், மனு வாங்கல், மனு கொடுத்தல் ஈரங்கி கொடுத்தல், விசாரணை செய்தல், தீர்ப்பு வழங்கல், அப்பீல் செய்தல் என்று சம்பிரதாயமான விளக் கங்களை வைத்திருக்கிறோம். அது வேண்டியதில்லை; அதை விட்டுவிடுங்கள். அதற்குப் பதிலாக நீங்களே பொறுப்பை ஏற்றுக்கொண்டுகூட வாங்கக்கூடிய உரிமையை வழங்கி விடலாம். கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசியமில்லை. குத்தகைதாரர்களுக்கும் சிரமமில்லை. அப்படி இல்லை என்றால் கேரளாவிலே வைத்திருப்பதுபோல் செய்யலாம். அவர்களும் இந்த மாதிரியான நிலச் சீர் திருத்தச் சட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள் பப்ளிக் கமிட்டி என்று சட்டசபையில் இருக்கக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட கட்சியினரைப் போட்டு, கிராம கமிட்டிகள் வைத்து, அந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு வைத்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரெவின்யூ உத்தியோகஸ்தர்களையெல்லாம் கண்டிக்க வேண்டும் என்று இதைச் சொல்லவில்லை. ஆனால் ரெவின்யூ இலாகாவினுடைய போக்கு பெரும் பாலும் சொத்து இல்லாதவர்களுக்கு, உழக்கூடிய விவசாயிகளுக்குப் பாதக மான கண்ணோட்டத்துடன்தான் இருக்கின்றது என்பதை வருத்தத்தோடு சொல்லவேண்டியிருக்கிறது. எனவே இந்தப் பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அதே சமயத்தில் 'அவர்கள் தங்கள் கடமைகளிலிருந்து தவறு வார்களானால், ஒரு குறிப்பிட்ட நிலைக்குமேலே அவர்கள் அந்த உரிமைகளை

இழப்பார்கள்' என்ற நிலைமையைக் கொண்டு வந்தால் அதற்கும் தயாராயிருக்கிறோம். அடுத்து, இந்த விதிவிலக்குகளைப் பொறுத்தமட்டில் 1955-ம் ஆண்டுச் சட்டத்திலேயே இந்த 'எக்ஸெம்ப்ஷன்ஸ்' கொடுக்கப்பட்டு இருக்கின்றன. குத்தகைதாரர்கள் பயிரிடும் நிலத்தில் ஒரு பகுதியை மீட்டுக்கொள்ளலாம் என்றும் அதில் இருக்கின்றது.

இப்போது அந்தக் கண்ணோட்டத்தை வைத்துக்கொண்டு பார்த்தால் சராசரி 3 லட்சத்து 90 ஆயிரம் டெனன்ட்ஸ் வைத்துக்கொண்டு இருக்கும் நிலத்தைப் பார்த்தால் ஒரு நபருக்கு 1½ அல்லது இரண்டு ஏக்கர் தான் சராசரியாக வரும். ஆக இரண்டு அல்லது மூன்று ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு உழக்கூடியவர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்களே தவிர, ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டு உழக்கூடியவர்கள் வெகுசிலர்தான் இருக்கின்றார்கள். நேற்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் இன்னும் பலர் பதிவு செய்யப்படாதிருக்கும் ஆபத்தும் இருக்கின்றது என்று. அவர்கள் எல்லாம் பதிவு செய்ய ஏற்பாடுகளைச் செய்வது மிக அத்தியாவசியமானதாகும். ஆகவே விதிவிலக்கு என்று இந்தச் சட்டத்தில் வரும் சில சலுகைகளை ஒரு பகுதியினருக்கு கொடுக்க வேண்டிய அவசியமும் இருக்கின்றது. வாழ்க்கை நடத்த முடியாத, வேறு யாரும் துணையில்லாத ஒரு சில வயோதிகர்கள், சித்தஸ்வாதீனமற்றவர்கள், வேறு ஆதரவு யாரும் இல்லாதவர்கள், இப்படிப்பட்டவர்களுக்கு உள்ள நிலங்களை இதிலிருந்து விதிவிலக்குக் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. இவர்களுடைய நிலங்களை எடுத்துக் கொடுத்தாலும் இன்னொருவருக்குத் தான் கொடுக்க வேண்டும். ஆகவே அவர்கள் விஷயத்தில் தொடர்ந்து அவர்கள் உயிரோடு உள்ள வரையில் அந்த நிலத்தை அவர்களே வைத்திருப்பார்கள், அவர்களுக்குப் பிறகு அந்தக் குத்தகைக் காரர்களுக்குக் கொடுக்கப்படும் என்ற திருத்தத்தினைக் கொண்டு வந்தால் அவற்றை ஆதரிக்கத் தயாராயிருக்கிறோம்.

இன்றைக்கு 3 லட்சத்து 90 ஆயிரம் குத்தகைக்காரர்களுக்கு நிலத்தைக் கொடுப்பதன் மூலம் ஒரு பெரிய நிலச் சீர்திருத்தத்தினைக் கொண்டு வந்த பெருமையை இந்த சர்க்கார் சம்பாதித்துக்கொள்ளுகிறது. இன்னும் பல மாநிலங்களிலே இது விஷயத்தில் தைரியமாக ஒரு கொள்கையை ஏற்று நடத்த முடியாது திண்டாடிக்கொண்டுள்ள நிலையில் நாம் மிகத் துணிவாகச் சொத்துரிமையில் தலையிட்டு மூன்று நான்கு லட்சம் சாகுபடியாளர்களுக்கு நிலத்தைக் கொடுக்கிறோம், நிலத்தை அவர்களுக்கு உரிமையாக்குகிறோம் என்றால், இது ஒரு பெரும் பெருமையை நமது அரசு தேடிக்கொள்ளுவதாக



அமையும். எனவே நாம் சொல்லும் இந்த மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த நஷ்டஈட்டுத் தொகையைப் பொறுத்தது. படித்துப் பாருங்கள். எந்த மத்திய அரசுக் கமிஷனிலும் 25 சதவிகிதம் தான் நியாய வாரம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் இன்றைக்கு அந்தக் கணக்குப்படி 25 இண்டு 16 என்று பார்த்தால் 400 வருகின்றது. ஆனால் 40 சதவிகிதத்தினை 12 ஆண்டுகாலம் என்று சொல்லும்போது 480 என்று வருகின்றது. ஆக வித்தியாசம் 80 தான். ஆக சமுதாயத்தில் நிலத்தை வைத்துக்கொண்டு இருப்பவர்கள்கூட கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய வாழ்க்கையை புதிய பாதையில் இந்தத் தொகையின் மூலம் திருப்பிக்கொள்ளுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். எனவே இருக்கும் இரண்டு ஏக்கர் நிலமும் போய்விட்டால் என்ன செய்வது என்பவர்கள் பயப்படத் தேவையில்லை. ஏற்கெனவே அவர்கள் இருக்கும் வேலைகளை, தொழில்களை உறுதி செய்து கொண்டு அதில் மேலும் மேலும் விருத்தி செய்து கொள்ளுவதற்கு இந்தக் காம்பென்சேஷன் தொகை உதவும். காம்பென்சேஷன் தொகையை வைத்துக்கொண்டே வாழ்ந்துவிடலாம் என்று, இன்றுள்ள இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள இரண்டொரு திருத்தங்களை வைத்துக்கொண்டு மார்க்கெட் வேல்யூ படிக்கு காம்பென்சேஷன் கொடுப்பது முறையல்ல.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

இன்னும் ஒன்று. பணக்காரர்கள் சம்பாதிக்கின்றார்களே, அவர்களை பங்கம் திரும்பாமல் இங்கே இரண்டொரு ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு இருப்பவர்கள்தான் உங்கள் கண்களில் படுகின்றார்களா என்று யாராவது கேட்டால், அவர்களுக்குச் சொல்லுவோம், அவர்களை அடுத்தபடியாகக் கவனிப்போம். இதை முதலில் செய்யுங்கள், அடுத்து உங்களோடு சேர்ந்து அவர்களைப் பிடிக்க நாங்கள் ஆதரவாக இருக்கிறோம். 'இதை முடித்துக்கொண்டால் உங்களோடு நாங்களும், மூன்று லட்சம் டெனன்டுகளும் சேர்ந்து கொண்டு அவர்களைப் பிடிப்பதற்கு உங்களுக்கு உதவத் தயாராயிருக்கிறோம். அந்த முறையில் ஒரு தேசிய முறபோக்கான பாதையைத் தேடிச்செல்லுவோம். பரம்பரை பரம்பரையாக ஒன்றும் இல்லாது இருந்தவர்களுக்கு உழுது பயிரிட நிலம் கொடுத்திருக்கிறோம், வீடற்றவர்களுக்குக் குடியிருக்க வீடு கட்டிக்கொள்ள குடியிருப்பு மனைகளைக் கொடுக்கிறோம் என்ற ஒரு உணர்ச்சியோடு செயலாற்ற முன் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டு, இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் இந்தச் சட்டம் உருவாக்க இருக்கின்றது. இது ஒரு 'கன்ட்டிநியுவேஷன்' சட்டம்

தான். ஏற்கெனவே இதைப்பற்றி இதன் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ்'-ல் எடுத்துக் காட்டியிருக்கிறது. எனவே, குறிப்பிட்ட விதிவிலக்குக்கு மட்டும் இடமளித்து, இந்த மசோதாவினைச் சீக்கிரமாக நிறைவேற்றி நாட்டிலே, தமிழ் நாட்டிலே, தமிழ் நாட்டிலே பொருளாதார ரீதியில் ஒரு பெரிய மாறுதலுக்கான ஆரம்பத்தைச் செய்கிறோம் என்ற முறையில் சீக்கிரம் கொண்டு வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பயிரிடும் குத்தகைக்காரர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் மசோதாவின் மீது என் கட்சி சார்பிலும் என் சார்பிலும் சில கருத்துக்களைச் சொல்ல என்னுகிறபோது—மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது—இதனால் பல விவசாயக் குடும்பங்களுக்கு நன்மை விளையும் என்று தோன்றினாலும், நாட்டிலே ஒரு புரட்சியை உண்டாக்கி, இதுவரையில் இருந்துவரக்கூடிய அமைதியான சூழ்நிலையைக் குலைக்கத்தக்க விதத்தில் இந்தச் சட்டம் அமைந்திருக்கின்றது என்பதைச் சொல்லித்தான் தீரவேண்டும். அதிலும் குறிப்பாக நீண்ட நெடுங்காலமாக நம்நாட்டிலே மக்கள் மத உணர்ச்சி படைத்தவர்களாக வசித்து வருகின்றார்கள். அவர்கள் எந்த மதத்தினையும் ஏற்று வாழ்வதற்கு அவர்களுக்கு முழு உரிமை இருக்கின்றது. இந்த நாட்டின் அரசியல் சட்டத்தில் அவர்கள் தங்கள் மத ஆசாரங்களைப் பேணி வாழ்வதற்கு உத்திரவாதம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை இந்தச் சட்டத்தின் விளைவாக எப்படி பாதிக்கப்படும் என்பதைச் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன்.

இப்போது அற நிலையங்கள் வசமுள்ள சொத்துக்களுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு இல்லை என்றால் பல தீமைகள் ஏற்படும். பல அறநிலையங்கள் பத்து ஏக்கர் பதினைந்து ஏக்கர் நிலங்களை வைத்துக்கொண்டு அவற்றிலிருந்து வரும் வருவாயிலிருந்து தினசரி சமாசாதனைகள், சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுப்பது, மார்க்க அனுஷ்டானங்கள் அனுசரிப்பது என்பதெல்லாம் நடத்தப் பட்டு வருகின்றன. இந்தச் சொத்துக்கள் இப்படி எடுத்துக்கொள்ளப்படு மானால் மார்க்க அனுஷ்டானங்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படும். எனவே, இது அனுசரிக்கப்பட்டு வரும் மார்க்க அனுஷ்டானங்களுக்கு விரோதமானதாகும் என்று சொல்லி இந்தச் சட்டத்தைப் பலமாக எதிர்க்கின்றேன். இந்தச் சட்டம் கொண்டு வரப்படுமானால், தோழமைக் கட்சி என்ற முறையில் எச்சரிக்கையாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், இதனால் மக்களுடைய மத உணர்ச்சிகள் தூண்டப்படும், அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுவார்கள் என்று திட்ட வட்டமான முறையில், நண்பர் என்ற முறையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படு



இந்தச் சட்டத்தில் அனாதை இல்லங்கள் என்பவற்றுக்காக உள்ள நிலங்களுக்குப் பாதுகாப்பில்லை, கல்விக்கூடங்களுக்காக உள்ள சொத்துக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றால் பின்னர் இவை எப்படி நடக்கும்? எனவே இந்தச் சொத்துக்களையெல்லாம் எடுத்துக்கொள்ளுவது எந்த அளவில் நியாயமானதாகும். சிலர் திரித்துச் சொல்ல முற்படுவார்கள், முஸ்லிம்கள் அற நிலையங்களுக்கு நாலாயிரத்துச் சொச்சம் ஏக்கர்தானே இருக்கின்றது?

அதே சமயத்தில் இந்துக்களின் அறநிலையங்களுக்கு லட்சத்து 33 ஆயிரம் ஏக்கர் இருக்கிறதே, இதை ஒரு சிலர், வீண் ஆடம்பரங்களுக்காக உபயோகப் படுத்தப்படுகிறது, அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் அதில் நீங்கள் ஏன் தலையிட வேண்டும் என்று சொல்லுவார்கள். நான் சொல்லிக்கொள்ளு வேன், எந்த ஒரு அறநிலையத்தின் சொத்து இப்படி முறைதவறி செலவழிக்கப் படுகிறதோ, எந்தப் புனிதமான காரியத்திற்காக வாக்ஃப் செய்யப்பட்டு இருக் கின்றதோ அந்தப் புனித நோக்கத்திற்கு மாறாக தனிப்பட்டவர்களுடைய ஆடம்பரத்திற்கு அல்லது ஒரு சிலருடைய அந்தஸ்தை உயர்த்துவதற்காக அந்தச் சொத்து உபயோகப்படுத்தப்படுமானால் அந்தச் சொத்துக்களை இந்தச் சட்டத்தின்கீழ் அப்போது கொண்டு வாருங்கள், ஆட்சேபணை இல்லை.

ஆனால் நல்ல காரியங்களுக்காக உள்ள சொத்துக்கள் மீது—அது இந்துக்கள், முஸ்லிம்கள், அல்லது கிறித்துவர்களுடைய அறநிலையங்களுக்குள்ள சொத்துக் கள் மீது—கை வைக்காதீர்கள். இதுதான் என்னுடைய கோரிக்கை. மதத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தச் சொத்துக்கள் மீது கை வைக்கா தீர்கள். தனிப்பட்டவர்களிடமுள்ள சொத்துக்கள் மீது நீங்கள் கை வைப்பதில் நாங்கள் குறுக்கே நிற்க விரும்பவில்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதிலே இன்னும் ஒரு வாதம் சொல்லப்படுகிறது. "இந்த நிலத்தை சும்மா எடுத்துக்கொள்ளவில்லை. நியாய வாரத்தைப் போன்று 12 மடங்கு நஷ்டஈடு கொடுத்துவிட்டுத்தானே எடுத்துக்கொள்கிறோம். அந்தப் பணத்தை அரசாங்க பாங்கில் போட்டுவிட்டு அதிலிருந்து கிடைக்கக்கூடிய வட்டியை வாங்கி ஏன் மார்க்க வணக்கமுறைகளை அனுஷ்டிக்கக்கூடாது என்ற வாதம் சொல்லப்படு கிறது.

நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். மற்ற மதங்களைச் சேர்ந்தவர்கள் இதுபோன்று வட்டியை வாங்கி மதத்தை அனுஷ்டிக்க ஒப்புக்கொள்கிறார்களோ என்னவோ, முஸ்லிம் அனுஷ்டானத்தில் அதற்கு இடமே இல்லை. வட்டியை வாங்கி வணக்கத் தலங்களை நடத்துவது என்பது கனவில்கூட நினைக்கக்கூடாத

ஒன்றாக இருக்கிறது. துரதிருஷ்டவசமாக சில வறட்டுக் கொள்கைவாதிகள், தத்துவவாதிகள், வேறு ஒரு அன்னிய நாட்டைத் தங்கள் சித்தாந்தத்திற்கு உதாரணமாகக் கொண்டவர்களது, அன்னிய நாட்டவர்களைத் தங்களது வழி காட்டியாகக் கொண்டவர்களது சூழ்ச்சியின் வலையில் இந்த அரசு தெரிந்தோ, தெரியாமலோ வீழ்ந்து விட்டது என்பதுதான் நான் கவலைப்படுவது எல்லாம். எப்படியும் இந்தக் காரியத்தை முஸ்லிம் சமுதாயம் ஒப்புக்கொள்ளாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட விரும்புகிறேன்.

இந்த மசோதாவில் கட்டிடங்கள், கிணறுகள், பம்புசெட்டுகள் இருந்தால் அவற்றுக்கான பாதி கிரயம் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. எந்த அடிப்படையிலும் இது நியாயமாக இருக்க முடியாது. கட்டிடங்கள் நேற்றுக் கட்டியதாக இருக்கலாம். பம்பு செட்டு 2 மாதங்களுக்கு முன்பு போட்டதாக இருக்கலாம். பம்பு செட்டுக்கு வாங்கிய கடனைக்கூட இன்னும் கொடுக்காமல் இருக்கலாம். தம்முடைய மேல் சொத்துக்களை, பெண்டு பிள்ளைகளின் நகைகளை அடகு வைத்து அவற்றைச் செய்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஒரு விளக்கத்திற்காகக் கேட்கிறேன். திரு. ஜப்பார் அவர்கள் பேசும்போது இதுபோல வணக்க தலங்கள், பாடசாலைகள், அறநிலையங்கள் இவற்றின் சொத்துக்களை எடுத்துக்கொள்வதன் மூலம் அவை நடக்க முடியாத நிலை ஏற்படலாம் என்று சொன்னார்கள். உழுபவனுக்கு பாதி பூமியைத்தான் கொடுப்பது, மீதி பாதியை அவர்கள் சொந்தமாக சாகுபடி செய்யும் உரிமையை வைத்துக்கொள்கிறார்கள் என்றால் அதனால் அவை பாதிக்கபடாது இருக்குமா?

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** பாதி என்று சொல்வதில் 10 ஏக்கர்தான் இருக்கிறது, 5 ஏக்கர்தான் இருக்கிறது என்றால் அவற்றில் பாதியை வைத்துக் கொள்வதன் மூலம் என்ன வருமானம் கிடைக்கும்? அதை வைத்து எப்படி நடத்த முடியும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்போது இருக்கிற சட்டப்படி குத்தகைக்காரனை வெளியேற்ற முடியாது. இந்தச் சட்டத்தின் மூலம் பாதி நிலத்திற்கு அவன் சொந்தக்காரனாக ஆக முடியும் என்கிறபோது மீது பாதியை நிலக்காரரே எடுத்துக்கொள்கிற உரிமை வந்துவிடுகிறது. இதில் என்ன தவறு இருக்கிறது என்பதை விளக்க வேண்டும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** அமைச்சர் அவர்கள் சொல்வது தனி நபர்களுக்கு ஆதாயமாக இருக்கலாம். அறநிலையங்களைப் பொறுத்தவரை



அவையே நேரிடையாக உழ வர முடியாது. திரும்பவும் அதை குத்தகைக்குத் தான் விடவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்த பதிலுக்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். குறிப்பிட்ட ஒரு அளவு 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை அவை சொந்தமாக வைத்துக்கொண்டு, குத்தகைக்கும் விடலாம். அதற்கு மேல் உள்ள நிலத்திற்குத்தான் இது பொருந்தும் என்பதாகச் சலுகை கொடுத்தால் சரியாகப் போய்விடுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** ஒரு அறநிலையத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் இருந்தால் போதுமானதாக இருக்கலாம். மற்றொன்றுக்கு ஐம்பதாயிரம் தேவைப்படுவதாக இருக்கலாம். அங்கங்குள்ள தன்மையை அனுசரித்து வழிவகை செய்வதாக இருந்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சட்டம் என்கிறபோது நாம் ஒரு வரை முறையை ஏற்படுத்தவேண்டும். உதாரணமாகச் சொல்கிறேன். மாதா கோவில், மசூதி, இந்து கோயில், பாடசாலை என்பதாக எந்த அறநிலையமாக இருந்தாலும் ஒரு ஐந்து ஏக்கர் மினிமம் வைத்துக்கொள்ளலாம். அதற்குமேல் உள்ள நிலங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும் என்றால் சரியாக இருக்கும். சட்டம் இயற்றும்போது தவறு ஏற்படக்கூடாது, சிரமம் ஏற்பட்டாலும் பரவா யில்லை. தவறுகளைத் தடுக்க எச்சரிக்கையாக இருப்பது அறநிலையங்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்கும் அல்லவா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** இது ரொம்ப முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** முக்கியமான விஷயம் தான். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** அமைச்சர் அவர்கள் சொல்லியபடி குறைந்தபட்ச அளவு எவ்வளவு என்று வைக்கலாம் என்பதாக அமைச்சர் அவர்கள் திடீரென்று எழுந்து கேட்டால் உடனடியாகச் சொல்வது எப்படி முடியும்? ஏராளமான பேர்கள் இதனால் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. இதுபற்றி கலந்து ஆலோசித்துத்தான் சொல்ல முடியும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இன்றைய தினம் தமிழக அரசு புரட்சிகரமான ஒரு சட்டத்தை இந்த அவையில் இயற்றிக்கொண்டிருக்கிறது. இதை

[திரு. ப. உ. சண்முகம்] [1973 ஏப்ரல் 3

ஏகமனதாக இந்த அவை ஏற்றுக்கொண்டது என்கிற பெருமை இந்த அவையில் உள்ள எல்லோருக்கும் வேண்டுமென்ற அடிப்படை எண்ணத்தில்தான் நான் சொன்னேன். நான் சொன்ன யோசனையை சிறுபான்மையினர்களுக்காக வாதிடுகின்றவர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். பிரிவுவாரியாக விவாதம் வருகிறபோது தங்கள் கருத்துக்களைச் சொன்னால் போதும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இவ்வளவு புரட்சிகரமான சட்டத்தை இந்த அவை ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் உள்ளபடியே, உண்மையாகக் கருதினார்கள். ஆனால் கொஞ்சம் எல்லாத் தரப்பு உறுப்பினர்களுக்கும் அவகாசம் கொடுத்து நிறைவேற்ற வேண்டுமே தவிர அவசரக்கோலம் அள்ளித் தெளித்தாற்போல இதனை அவசரம் அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றியே தீரவேண்டும் என்பது நியாயமாகாது. இதுபற்றி எல்லாத் தரப்பினர்களும் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு இந்த ஒரு ஆய்வுக்குழுவிற்கு விடவேண்டுமென்பதை நான் மிகவும் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தில் ஒரே தடவையாகக் கொடுத்தால் 75 சதவிகிதம் என்கிறார்கள். நாம் நிர்ணயித்திருப்பதே 40 சதவிகிதம். அதில் 75 சதவிகிதம் நஷ்டஈடு என்பது என்ன நியாயம்? ஏழைகளை பிச்சைக்காரர்களாக ஆக்குகிறீர்கள். அதுதான் நியாயம் என்றால் இது என்ன சோஷலிசம் என்று புரியவில்லை. 'ஏ' வாழவேண்டும் என்பதற்காக 'பி'-ஐ அழிக்க வேண்டுமா? நம்முடைய சோஷலிசத் திட்டங்கள் எல்லாம் அப்படித்தான் போகின்றன. சமதர்மத் திட்டங்கள் என்ற பெயரால் ஒருவனைக் கொள்ளை அடித்து மற்றொருவனை வாழவைப்பதாக இருக்கிறது. இது நியாயமாகாது.

ஒருவன் 3 தவணைகளைக் கொடுத்துவிட்டு, 9 தவணைகளை மொத்தமாகக் கொடுத்தால் நிலைமை என்ன? அதற்குரிய விளக்கம் இந்தச் சட்டத்தில் இடம் காணவில்லை.

நாம் உண்மையிலே விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று சொன்னால், அந்த நஷ்ட ஈட்டை அரசாங்கம் தரவேண்டும். நஷ்ட ஈட்டை அரசாங்கம் தரப்போகிறதா? அதுதான் என்னுடைய பிரதானமான கேள்வி, நஷ்டஈட்டை விவசாயி தரவேண்டுமென்று சொன்னால், இதிலே அதிகப் பிரயோசனம் விவசாயிக்கு ஏற்பட்டுவிடாது. இதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.



1973 ஏப்ரல் 3] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்

இந்த மசோதாவிலே இருக்கிற பெரிய அம்சம் என்னவென்று சொன்னால், இந்த நாட்டு மக்களுக்கு இருக்கிற சனநாயகத் தன்மை இந்தச் சட்டத்தின் மூலமாக மறுக்கப்படுகிறது. ஆதரைஸ்டு ஆபீசர்தான் நிர்ணயம் செய்வார் என்று இருக்கிறது. அந்த ஆதரைஸ்டு ஆபீசர் இட்டதுதான் கட்டளை. மேல் முறையீடு செய்வதுகூட இந்தச் சட்டத்தில் மறுக்கப்படுகிறது. இறைவனுடைய கட்டளைக்குத்தான் மறுப்பில்லை என்று எனைப்போன்ற மதவாதிகள் சொல்வார்கள். அந்த ஆதரைஸ்டு ஆபீசர் இட்டதுதான் சட்டம், அதற்கு மறுபேச்சே கிடையாது என்று சொன்னால், இதுதான் சனநாயகமா என்று கேட்க விரும்புகிறேன். நான் உண்மையிலே வேதனையோடு பேசுகிறேன். மேல் அதிகாரிகளுக்கு மனு செய்வதற்கும், தனக்கு அநீதி இழைக்கப்பட்டது என்று பாதிக்கப்பட்டவன் கருதுவானானால் மேல்முறையீடு செய்வதற்கும் அதிகாரம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரிகளிடமிருந்துதான் நியாயம் பெறவேண்டுமென்று சொன்னால், மக்கள் என்ன நினைக்கிறார்கள் அதிகாரிகளைப் பற்றி என்று நான் சொல்ல வேண்டியதில்லை, எல்லோருக்கும் தெரியும். 100-க்கு 90 பேர் நியாயமான அதிகாரிகளாக இருக்கலாம். 10 பேர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்பவர்களாக இருந்தால், எத்தனை மக்களுடைய மனத்தில் உளைச்சலை ஏற்படுத்திவிடுவார்கள் என்பதை இந்த அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த 10 அதிகாரிகளை எதிர்த்து, எந்த கோர்ட்டுகளுக்கும், சிவில் கோர்ட்டுகளுக்குக்கூட செல்ல முடியாது என்று சொன்னால், மக்களுக்கு இருக்கிற சனநாயகத் தன்மைகளை இது மறுப்பதாகாதா என்பதையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

சிறிய நிலச்சுவாந்தார்கள் 5 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னால், அதிலே பாதி பங்கு போட்டுக்கொள்வது என்று சொன்னால், என்ன நியாயம ஆகும்? அவன் தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற பிள்ளைகளை படிக்கவைக்க, எதிர்காலத்திற்கு இதைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறான். இதிலே போய் .....

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்பொழுது இருக்கிற சட்டப்படி, 5 ஏக்கராவை அவன் திருப்பி வாங்கிவிடமுடியாது. குத்தகைதாரருக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத்திலே புதுச் சலுகை கொடுக்கிறோம். அங்கத்தினர்கள் அதை மறந்துவிட முடியாது. நில உடைமையாளர்கள் தங்களிடமிருப்பதில் 2½ ஏக்கரை விற்றுவிடலாம், சொந்த சாகுபடிக்கும் வைத்துக்கொள்ளலாம். இப்பொழுது இருக்கிற சட்டப்படி அதைச் செய்ய முடியாது. அந்தப் புது உரிமையைக் கொடுக்கிறோம். அதையும் மறந்துவிடக் கூடாது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** அந்தத் தத்துவத்தின் முறையிலே கொண்டு வரப்பட்டாலும், 5 ஏக்கராவது கொடுக்கப்படவேண்டும். நிலச் சுவாந்தார் என்ற பட்டப் பெயரை எப்பொழுதோ பெற்றிருந்தான் என்ற காரணத்தாலே, அவனுக்கு உரிய சலுகையினை மறுப்பது, எப்படி நியாயம்? ஆகவே, பொதுவாக 5 ஏக்கர் அவனுக்கு சேர வேண்டுமென்ற காரணத்தாலே அம்முறையிலே இதைக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மனிதாபிமான அடிப்படையில், ஒன்றைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். விதவைகளுக்குச் சொந்தமான நிலங்களும் உண்டு. சில இடங்களிலே விதவைகள் உண்டு. அவர்கள் தங்களுக்கிருக்கிற 5 ஏக்கர் நிலத்தைக்கொண்டு, தன் குழந்தைகளுடைய எதிர்காலத்தைப் பாதுகாக்கிறார்கள், கல்யாணம் ஆகவேண்டிய பெண்ணுக்குக் கல்யாணம் செய்விக்கிறார்கள். பையன் படிப்புக்கு அதிலிருந்து செலவு செய்கிறார்கள். அவன் எதிர்காலத்தில் வருவாய் தேட உதவுகிறார்கள். இன்னும் எத்தனையோ அம்சங்கள் இருக்கின்றன. இந்த விதவைகளைக்கூட வாழவிடக்கூடாமல் செய்கிற சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மனிதாபிமான உணர்ச்சிகளைத் தூண்டிக்கக்கூடிய அம்சங்கள் இதிலே அடங்கியிருக்கின்றன. மத உணர்ச்சிகளைத் தூண்டிக்கக்கூடிய அம்சங்கள் இதிலே அடங்கியிருக்கின்றன. இப்படி இவைகளைத் தூண்டிக்கக்கூடிய வகையில் கொண்டுவராமல், ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி, அவரவருக்குச் சாதக பாதகமான அனைத்தையும் ஆராய்ந்து, எல்லோருக்கும் நியாயம் வழங்கக் கூடிய நியாயமான சட்டத்தை இந்தச் சபையிலே இருக்கிற எல்லோருடைய அனுமதியைப் பெற்று நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** மாண்புமிகு முஸ்லீம் லீக் அங்கத்தினர் பேசும் பொழுது சில அநாவசியமான விஷயங்களைக் குறிப்பிட்டார். இது சர்க்கார் கொண்டு வரக்கூடிய மசோதா. இதிலே, வறட்டு தத்துவவாதிகள், வெளிநாட்டு விஸ்வாசிகள், இப்படியெல்லாம் குறிப்பிடுவது ரொம்ப அநாவசியமான வார்த்தைகள். யாரை வெளிநாட்டு விஸ்வாசிகள் என்று கூறுகிறாரோ, அந்தக் கட்சியினரோடு கூட்டு சேர்ந்து, ஆட்சி அமைத்துக்கொண்டிருக்கிற முஸ்லீம் லீக் இங்கே இப்படிப் பேசுவ சரியல்ல. நாட்டு விஸ்வாசத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இளைத்தது அல்ல எங்கள் கட்சி என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இப்படிப் பேசுவது முறையல்ல என்று நான் ஆட்சேபிக்கிறேன்.



**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஜப்பார் அவர்கள் பேசும்பொழுது இஸ்லாம் மதத்தில் உள்ள ஒரு கருத்தைச் சொன்னார்கள். நஷ்ட ஈடாக வருகிற பணத்தை, வங்கியிலே போட்டு வட்டியாக வருவாயைப் பெறுவதை தங்கள் மதம் கண்டிக்கிறது என்ற அழகான கருத்தைச் சொன்னார்கள். வட்டியை வாங்குவதே தப்பு என்று சொல்கிற அங்கத்தினர்கள் வாடகையும் கோருகிறார்களே, அந்த நிலத்திலே எந்தவிதமான உழைப்பையும் கொடுக்காத ஒருவர், குத்தகை பெறுவது சரி என்று எப்படி அவருடைய மதம் கருதுகிறது, அவருடைய மனம் கருதுகிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் நண்பர் அவர்கள் சொன்னார்கள், கம்யூனிஸ்டு கட்சி, எங்கேயோ இருக்கக்கூடிய கட்சியினுடைய வலையில் விழ வேண்டாமென்று. கம்யூனிஸ்டு கட்சி மட்டும் இந்த நிலச்சீர்திருத்தம் வேண்டுமென்று சொல்லவில்லை. முதலாளிகளுக்கும் நிலச்சீர்திருத்தம் அவசியம். உள்நாட்டு மார்க்கெட்டை விரிவுபடுத்த நிலச்சீர்திருத்தம் அவசியம். ஆகவே, இரண்டு வலை இருக்கிறது. கனம் அங்கத்தினர் எந்த வலையில் விழுகிறார் என்று தெரியவில்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, முதலாவதாக, எந்தக் கட்சிப் பெயரையும் நான் சொல்லிச் சொல்லவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** முதலிலே, உங்களுக்கு வாய்ப்பு கொடுத்ததற்குக் காரணமே, 3 பேர் ஒவ்வொரு பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்கு நம்முடைய மன்றத்தைப் பொறுத்தவரை, ஒரு தனிப்பட்ட உறுப்பினரை, கட்சியைக் குறிப்பிடுவதில், மறைமுகமாக பொருள் கற்பிக்கக்கூடாது. நண்பர் அவர்கள் கூறுவது ஒரு கட்சியைக் குறிப்பிடுகிற மாதிரி இருக்கிறது. சட்டமன்றத்திலே அவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமென்று பலமுறை சொல்லியிருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட வார்த்தைகளைத் தவிர்ப்பது நமக்கு உதவிகரமாக இருக்கும் என்றுதான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** இரண்டாவதாக, நண்பர் திரு அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், வாடகை வாங்குவதும் வட்டியைப் போன்றது என்று. இரண்டுக்கும் மாபெரும் வித்தியாசம் இருக்கிறது. ஒருசில நிமிடங்களில் விளக்கிச் சொல்லமுடியாது. இஸ்லாமியத் தத்துவத்தை தனிப்பட்ட முறையிலே தெரிந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு மணலி அவர்கள் பேச்சு, இங்கே ஏதோ கம்யூனிஸ்டு கட்சிக்கும், முஸ்லீம் லீக்குக்கும் ஒரு மோதல் இருக்கிறது, அந்த வகையிலேதான் நம்முடைய நண்பர் லீக் உறுப்பினர் பேசினார்கள் என்ற தோரணையில் அமைந்திருப்பதை நான் உணர்ந்தேன். அவருடைய பேச்சு அப்படி அமைந்ததா என்று தெரியவில்லை. திரு. ஜப்பார் அவர்கள் வறட்டு தத்துவம் என்று சொன்னதை கம்யூனிஸ்டு தத்துவமாக ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்? அவருடைய கருத்திலே ஏதோ அப்படி எடுத்துக்கொண்டாரோ. நிச்சயமாக கம்யூனிஸ்டு தத்துவத்தைப் பற்றி, அதுவும் மணலி போன்றவர்களைப்பற்றி எந்தவித குறைந்த மதிப்பும் இல்லை. அவர்களைப்பற்றி சொல்லவில்லை என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று சில கருத்துக்கள் கூற முற்படுகிறேன்.

தமிழக வரலாற்றில் பொன்னேட்டில் பொறிக்கப்படவேண்டிய இந்த மசோதா எவ்வளவு சிறப்பிற்குரியது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம், இந்த மசோதாவினுடைய சிறப்பை எல்லாம் பார்க்கின்றபொழுது, இப்படிப்பட்ட ஒரு பொதுவுடைமைத் தத்துவத்தைத் தமிழகத்திலே புகுத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்ட நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களை, ஏழை எளிய மக்கள், குறிப்பாக, தாழ்ந்து கிடக்கின்ற, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் நல்ல எதிர்காலத்தை, வாழ்க்கையைப் பெறுவதற்காக இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், உள்ளபடி, இந்தத் துணிகரமான மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிற கலைஞருக்கு தமிழ்நாட்டு மக்கள் தங்களுடைய நன்றி உணர்வை என்றைக்கும் காட்டிக் கொள்வார்கள் என்பதை இந்த அவையிலே தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது அவதிப்படும் நாட்டுமக்களுடைய நல்லெண்ணத்தைப் பெறுகின்ற வகையிலே கொண்டு வந்திருக்கிற நம்முடைய முதலமைச்சரை நான் மனமாரப் பாராட்டுவதோடு, இந்தச் சட்டம் உடனடியாக நாட்டில் நடைமுறைக்கு, அமுல்படுத்துவதற்கு உண்டான சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்ற வேண்டுகோளையும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். பெரும்பாலும், இந்தச் சட்டம் யாருக்குப் பயன்படப் போகிறது, யார் பலன்



பெறப் போகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுதே, அடித்தளத்தில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்களே, தங்களுக்கு வாழ்வே கிடைக்காது என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறார்களே, தங்களுடைய கையைப் பிடித்துத் தூக்கிவிடுவதற்கு யாரும் முன்வரமாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களே, அப்படி அடித்தளத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அவர்களுடைய வாழ்விலே ஒளி ஏற்றுகின்ற வகையிலே இந்த மசோதா பயன்படும் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களாக இருப்பவர்கள்தான் இந்தக் குத்தகைதாரர்களாக இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது அவர்கள் குத்தகைதாரர்கள் என்பதைவிட கூலிக்காரர்களாகத்தான் நிலத்திலே உழுது கொண்டிருக்கிறார்களே தவிர, ஒரு முதலாளியினுடைய வாழ்க்கை சீர்பெறுவதற்கும் செம்மைப்பெறுவதற்கும் தங்களுடைய உழைப்பைத் தருகிறார்களே தவிர, தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இவர்களுடைய கூலிகளாக இருக்கின்ற இவர்களுடைய உழைப்பு இல்லாமல் அவர்கள் வாழ்வைப் பெறமுடியாது என்பது உலகறிந்த விஷயம் ஆகும். குத்தகைதாரர்களாக இருக்கின்ற சூழ்நிலையில் உள்ள கூலிகளாக இருக்கின்ற சூழ்நிலையில் உள்ள [illegible] பட்ட மக்களும், பிற்பட்ட மக்களும் [illegible] தருவதற்கேற்ற முறையிலே அவர்களுக்கு [illegible] தருவதற்கு இந்த அரசு முன்வந்திருக்கிறது. இன்னும் நல்ல முறையிலே அந்த மக்கள் எல்லாம் வாழ்வதற்கு ஏற்றமுறையிலே நல்ல சட்ட திட்டங்களைக் கொண்டு வர அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூ.ப. 11-30

அறக்கட்டளைகள் என்ற பெயரால் விதிவிலக்குகள் தேவை என்று இங்கே பேசப்பட்டது. என்னைப் பொறுத்தவரையிலே அறக்கட்டளைகள் என்ற பெயராலே நடக்கின்ற மோசடிகளுக்கெல்லாம் ஒரு முடிவு காணவேண்டும். நாம் எல்லாம் ஆண்டவனுடைய குழந்தைகள் என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். ஆண்டவன் என்ற பெயரால் செய்யப்படுகின்ற மோசடிகளை நடக்கவிட்டால் இந்த நாடும் உருப்படாது, நாமும் உருப்படமாட்டோம், இந்த உலகமே உருப்படாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அறக்கட்டளைகள் என்ற பெயரால் உள்ள மோசடிகளுக்கு முடிவு காணுவதைத் தவிர வேறு விமோசனமே கிடைக்காது என்பதையும் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த மதமாக இருந்தாலும் சரி, கிறித்துவ மதமாக இருந்தாலும் சரி, முஸ்லீம்கள் வழிபடுகின்ற இஸ்லாம் மதமாக இருந்தாலும்சரி, அறக்கட்டளைகளுக்கு

எந்தவிதமான விதிவிலக்கும் கூடாது, கூடாது என்பதைததான் நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அறக்கட்டளைகள் என்ற பெயரால் நீண்டநெடுங்காலமாக 25 ஆண்டுக்காலமாக இந்த நாட்டிலே மோசடிகள் எவ்வளவு நடந்துகொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்கும்பொழுது அவற்றை முழுக்க முழுக்க ஒழிப்பதற்கு முடியும் என்ற நிலைமை வந்துவிட்டதற்குப் பிறகும் அறக்கட்டளைகளுக்கு விதிவிலக்குகள் கொண்டுவரவேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபட்டால் இந்தச் சட்டமே கொண்டுவரத் தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து ஆகும். வெளியிலே இருக்கின்ற கோடானு கோடி மக்கள் அறக்கட்டளைகளுக்கு விதிவிலக்குக் கூடாது என்றுதான் விரும்புகிறார்களே தவிர, அறக்கட்டளைகளுக்கு விதிவிலக்கு வேண்டுமென்று வெளியிலே இருக்கின்ற கோடானு கோடி மக்கள் வற்புறுத்தவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தங்கள் மூலமாக அவையடக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த அரசு செய்கிற இந்தத் துணிவான நடவடிக்கையை மக்கள் வரவேற்கிறார்கள், வாழ்த்துகிறார்கள், வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். எந்த அச்சமும் இல்லாமல் அறக்கட்டளைகளுக்கு விதிவிலக்குத் தேவையில்லை என்ற உறுதியை இந்த அரசு ஏற்கவேண்டுமென்ற கருத்தைச் சொல்கிற அதேநேரத்திலே இன்னொன்றையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்ன சின்ன விவசாயிகளுக்கு எல்லாம் ஒரு விதிவிலக்கு தேவை என்ற கருத்தை நான் வற்புறுத்த விரும்புகிறேன். மூன்று ஏக்கர்களுக்கு உட்பட்டு வைத்துக்கொண்டிருக்கின்ற விவசாயிகள் அதை வைத்துக்கொண்டுதான் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே அவர்களுக்கு எந்த விதமான பாதகமும் இல்லாத பாதுகாப்பை இந்த அரசு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களை வைத்துக்கொண்டு ஏமாற்றிக்கொண்டு இருப்பவர்களைத் தடுக்கத்தான் இந்த அரசு சட்டம்கொண்டுவருகிறதே தவிர, கீழ்த் தளத்திலே இருக்கின்ற முடியுமா, முடியாதா என்ற சூழ்நிலையிலே வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கின்றவர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பை இந்த அரசு தரும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களின் நம்பிக்கை வீண் போகாத வண்ணம் அவர்களுடைய துயரங்களைத் துடைக்கின்ற வகையிலே, சிறந்த முறையிலே பாதுகாக்கின்ற முறையிலே 3 ஏக்கர்களுக்கு குறைந்து வைத்திருக்கின்றவர்களுக்கு இந்த அரசு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இவ்வளவு துணிகரமாக, இவ்வளவு புரட்சிகரமாக மேல்நாடுகளிலேகூட இல்லாத, பார்க்கமுடியாத அளவிற்கு பொது உடைமைப் பூங்காவை இந்த நாட்டிலே மலரச்செய்ததற்காக



டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டி அவர்களுக்கு நன்றிதெரிவித்துக்கொண்டு, இப்படிப்பட்ட முற்போக்கான திட்டங்களுக்கு நாட்டுமக்களிடத்திலே நல்லாதரவு உண்டு, நல்ல மதிப்பு உண்டு என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. குழ. செல்லையா : மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, இந்த விவசாயக் குத்தகைதாரர்கள் மசோதாவை வரவேற்று என்னுடைய கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதா ஒரு வரவேற்கத்தக்க நல்ல மசோதாவாகும். இதைக் கொண்டுவருகின்ற நோக்கிலே உண்மைக் குத்தகைதாரர்கள் இதை அனுபவிக்க முடிகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். குத்தகைதாரர்கள் பதிவு செய்கின்ற முறையிலே பலவிதமான தொந்தரவுகள் கொடுக்கப்பட்டதையெல்லாம் உணரக்கூடிய தன்மையிலே நாம் எல்லோரும் இருக்கிறோம். குத்தகைதாரர்கள் சரியான முறையிலே பதிவுசெய்யப்படவில்லையென்பதால் அதை மீண்டும் இந்த அரசு பரிசீலனைசெய்யவேண்டும். குத்தகைதாரர்களைப் பதிவு செய்கிறார்களா என்ற நிலைமையைக் கூடத் தெரிந்துகொள்ளாத நிலையிலே பலர் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றார்கள். நான் தஞ்சை மாவட்டத்துக்காரன் என்ற முறையிலே சொல்கிறேன், அந்த நிலைமையை நான் நன்றாக, தெளிவாக அறிவேன்.

பல்வேறு விவசாயிகள் இதைத் தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லாமலே இருக்கிறார்கள், பல விவசாயிகள் இதைத் தெரிந்துகொண்டும்கூட தெரிந்து கொள்ளவில்லை என்று இருக்கக்கூடிய நிலைமையிலேயும், பல விவசாயிகள் குத்தகைதாரர்களாக இருந்தும் அவர்கள் வெளியிலே அதைச் சொல்லிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இல்லாதவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு உணரவேண்டும். நிலச் சொந்தக்காரர்கள் பல இடங்களிலே குத்தகைதாரர்களுக்கு குத்தகை ரசீதுகூட கொடுப்பதில்லை.

இதையெல்லாம் இந்த அரசு நிவர்த்தி செய்யவேண்டும். குத்தகைதாரர் யார் என்பதை அறிவிக்காததற்குக் காரணம் என்ன என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். சில இடங்களிலே கணக்குப்பிள்ளைகள் குத்தகைதாரர் யார், சாகுபடி கணக்கு, தீர்வை கணக்கு இவற்றையெல்லாம் கணக்கு எழுதுவதில்லை. கர்ணமே வீட்டிலே இருந்துகொண்டு தலையாரியைக் கேட்டுக்கொண்டு ஜமாபந்தி நேரத்திலேதான் கணக்கு எழுதுகிறார்களே தவிர உண்மையாகவே யார் குத்தகைதாரர், யார் சொந்தக்காரர், யார் உழுகிறார்கள் என்ற

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு மணலி அவர்கள் பேச்சு, இங்கே ஏதோ கம்யூனிஸ்டு கட்சிக்கும், முஸ்லீம் லீக்குக்கும் ஒரு மோதல் இருக்கிறது, அந்த வகையிலேதான் நம்முடைய நண்பர் லீக் உறுப்பினர் பேசினார்கள் என்ற தோரணையில் அமைந்திருப்பதை நான் உணர்ந்தேன். அவருடைய பேச்சு அப்படி அமைந்ததா என்று தெரியவில்லை. திரு. ஜப்பார் அவர்கள் வறட்டு தத்துவம் என்று சொன்னதை கம்யூனிஸ்டு தத்துவமாக ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்? அவருடைய கருத்திலே ஏதோ அப்படி எடுத்துக்கொண்டாரோ. நிச்சயமாக கம்யூனிஸ்டு தத்துவத்தைப் பற்றி, அதுவும் மணலி போன்றவர்களைப்பற்றி எந்தவித குறைந்த மதிப்பும் இல்லை. அவர்களைப்பற்றி சொல்லவில்லை என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று சில கருத்துக்கள் கூற முற்படுகிறேன்.

தமிழக வரலாற்றில் பொன்னேட்டில் பொறிக்கப்படவேண்டிய இந்த மசோதா எவ்வளவு சிறப்பிற்குரியது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம், இந்த மசோதாவினுடைய சிறப்பை எல்லாம் பார்க்கின்றபொழுது, இப்படிப் பட்ட ஒரு பொதுவுடைமைத் தத்துவத்தைக் தமிழகத்திலே புகுத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்ட நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களை, ஏழை எளிய மக்கள், குறிப்பாக, தாழ்ந்து கிடக்கின்ற, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் நல்ல எதிர்காலத்தை, வாழ்க்கையைப் பெறுவதற்காக இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், உள்ளபடி, இந்தத் அணிகரமான மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிற கலைஞருக்கு தமிழ்நாட்டு மக்கள் தங்களுடைய நன்றி உணர்வை என்றைக்கும் காட்டிக் கொள்வார்கள் என்பதை இந்த அவையிலே தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது அவதிப்படும் நாட்டுமக்களுடைய நல்லெண்ணத்தைப் பெறுகின்ற வகையிலே கொண்டு வந்திருக்கிற நம்முடைய முதலமைச்சரை நான் மனமாரப் பாராட்டுவதோடு, இந்தச் சட்டம் உடனடியாக நாட்டில் நடைமுறைக்கு, அமுல்படுத்துவதற்கு உண்டான சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்ற ஆலோசனையையும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, இந்தச் சட்டம் யாருக்குப் பயன்படப் போகிறது, யார் பலன்



ஏற்கெனவே இருந்தவரை குத்தகை பாக்கிக்காக வெளியே அனுப்பி, வேறு ஒரு குத்தகைதாரர் சட்டம் அமுலாக்கப்பட்ட தேதியில் இருந்தால் அந்தகைய குத்தகைதாரருக்குத்தான் இந்த உரிமை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இதை ஜெனரல் டிஸ்கஷன் ஆக்காதீர்கள்.

**திரு. குழ. செல்லையா:** ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் குறிப்பாக நிலத்தை உழுது கொண்டிருப்பவர்தான் தான் குத்தகைதாரர் என்று சொல்ல முடியவில்லை. சொன்னால் அவர் மேல் பொய் வழக்கு போடப்படுகிறது. அவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுவதில்லை. குடியிருப்பு மசோதா கொண்டு வந்திருக்கிறோம், ஆனால் 5 செண்ட் நிலம் யாரும் வாங்கி, குடி இருக்க முடியவில்லை. பலர் குடியிருக்க முற்பட்டால், அவர்களை மிரட்டியும், அவர்கள் வீடுகளுக்கு தீ வைத்தும், அதிகார பலத்தை வைத்தும், பண பலத்தை வைத்தும் செய்கிறார்கள், குடியிருப்பவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கவேண்டும். அவர்கள் நிரந்தரமாக இருப்பதற்கு வழி வகை காணவேண்டும்.

இந்தக் குடியிருப்பு மசோதா போன்று நல்ல நோக்கத்திற்காக இயற்றப் பட்ட சட்டங்கள் இந்த குடியிருக்கிற மக்களுக்காகச் செய்ய முடியவில்லை. அவர்கள் குடியிருக்க முடியவில்லை. அப்படி குத்தகைதாரரை உழுகிறவராக உரிமை ஆக்கப்படுகிற நிலைமையில் நிலச் சொந்தக்காரருக்கு வேண்டிய கணக்குப் பிள்ளை இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்தச் சட்டதைப் பற்றி தெளிவு படுத்துகிறேன். இந்த பதிவேட்டு சட்டத்தில் உள்ள ஷரத்துகளைப் பூரணமாகப் படித்துப் பார்த்தால் விளக்கமாக இருக்கிறது. கணக்குப் பிள்ளையையோ அல்லது மணியக்காரரையோ கேட்க வேண்டிய அவசியமில்லை. தாலுகா அலுவலகத்திற்கு டெபுடி தாசில்தார் ரெஜிஸ்டரை எடுத்துக் கொண்டு போகிறார்கள். அடங்கலைப் பார்த்து எழுதுகிறார்கள். அப்படி முடியவில்லையென்று சொன்னால் ஊரில் இருப்பவர்களைக் கேட்கிறார்கள். குத்தகைதாரர் வந்து சொன்னால் எழுதிக் கொள்கிறார்கள். நான் எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வது, அவரவர்கள் தொகுதியில் அப்படி எங்காவது குத்தகைதாரர் தன்னைப் பதிவு செய்து கொள்ள முடியாத நிலைமையை நிலச் சொந்தக்காரர் ஏற்படுத்தியிருக்கிறார் என்று தெரியுமானால் இந்த பதிவேட்டு சட்டத்தின் அதிகாரியை அழைத்துப்போய் பதிவு செய் என்று சொன்னால்,

கணக்கை சரியாக எழுதுவதில்லை. எங்களுடைய மாவட்டத்திலே அமராமேந்திரபுரம் என்ற கிராமத்திலே அந்த மாவட்டச் செயலாளருக்குச் சொந்தமான நிலங்களைப் பொறுத்தவரையிலே ஆண்டு ஆண்டாக பாரம்பரையாக அங்கே குத்தகைதாரர்களாக இருந்தவர்களுக்கு குத்தகை ரசீதுகூடக் கொடுக்கப்படுவதில்லை. இந்த நிலையில் அவர்களுக்கு எப்படி நிலம் சொந்தமாக ஆகமுடியும், அவர்களைக் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்துகொள்வதற்கான நடவடிக்கைகளை எல்லாம் சரியான முறையிலே அரசாங்கம் எடுத்தாகவேண்டும்.

எங்களுடைய மாவட்டத்திலே உள்ள எழுத்தணிவயல் என்கிற கிராமத்திலே 60 எக்கர் நிலம் ஒரு எம்.எல்.சி. அவர்கள் தனிப்பட்டவருக்கு குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அது முன்னாலே தேவஸ்தானத்திலே பல ஏழை எளிய மக்கள் பயிர் செய்துகொண்டிருந்த நிலமாகும். இப்பொழுது அந்த நிலத்திற்கு தனிப்பட்ட சிலருக்கு வேண்டியவர்களை அந்த எம்.எல்.சி. குத்தகைதாரர்களாக நியமித்து இருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் பாரம்பரையாக உழுது கொண்டிருந்தவர்களின் நிலை என்ன ஆகும். . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டப்படி யார் யார் குத்தகைதாரர்கள் என்று பதிவேட்டிலே பதிவுசெய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் குத்தகைதாரர்கள் என்ற நிலைமை வரும். வெளியே யாரோ பினாமியாக, இருப்பதெல்லாம் சொல்லலாம், தனிப்பட்டவர்கள், எம். எல். சி. யாக இருக்கலாம், எம். பி. யாக இருக்கலாம், அமைச்சராகக்கூட இருக்கலாம், குத்தகைதாரர்கள் பதிவு செய்கின்ற சட்டத்தின்படி யார் யாருடைய பெயர்கள் குத்தகைதாரர்கள் என்று வருகின்றனவோ அவர்கள்தான் குத்தகைதாரர்கள். மற்றபடி வெளியிலே பினாமி இருக்கிறது என்றால் அது காலப்போக்கிலேதான் திருத்தப்படவேண்டும்.

திரு. குழ. செல்லையா: நான் சொல்வது, 20, 30, 40 ஆண்டுகள் சாகுபடி செய்தவர்களை கடந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே அப்புறப்படுத்திவிட்டு, தங்களுக்கு வேண்டியவர்களாக குத்தகைதாரர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். அப்படி புதிதாக வந்தவர்களுக்குத்தான் நிலம் சேருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மீண்டும் விளக்கிச் சொல்கிறேன். குத்தகைதாரர் பதிவேட்டு சட்டத்தை நிறைவேற்றி, தமிழகம் முழுவதும் சட்டம் வந்த தேதியில் யார் யார் குத்தகைதாரர் என்று பார்த்திருக்கிறோம்.



ஏற்கனவே இருந்தவரை குத்தகை பாக்கிக்காக வெளியே அனுப்பி, வேறு ஒரு குத்தகைதாரர் சட்டம் அமுலாக்கப்பட்ட தேதியில் இருந்தால் அந்தகைய குத்தகைதாரருக்குத்தான் இந்த உரிமை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இதை ஜெனரல் டிஸ்கஷன் ஆக்காதீர்கள்.

திரு. குழ. செல்லையா: ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் குறிப்பாக நிலத்தை உழுது கொண்டிருப்பவர்தான் தான் குத்தகைதாரர் என்று சொல்ல முடியவில்லை. சொன்னால் அவர் மேல் பொய் வழக்கு போடப்படுகிறது. அவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுவதில்லை. குடியிருப்பு மசோதா கொண்டுவந்திருக்கிறோம், ஆனால் 5 செண்ட் நிலம் யாரும் வாங்கி, குடி இருக்க முடியவில்லை. பலர் குடியிருக்க முற்பட்டால், அவர்களை மிரட்டியும், அவர்கள் வீடுகளுக்கு தீ வைத்தும், அதிகார பலத்தை வைத்தும், பண பலத்தை வைத்தும் செய்கிறார்கள், குடியிருப்பவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கவேண்டும். அவர்கள் நிரந்தரமாக இருப்பதற்கு வழி வகை காணவேண்டும்.

இந்தக் குடியிருப்பு மசோதா போன்று நல்ல நோக்கத்திற்காக இயற்றப்பட்ட சட்டங்கள் இந்த குடியிருக்கிற மக்களுக்காகச் செய்ய முடியவில்லை. அவர்கள் குடியிருக்க முடியவில்லை. அப்படி குத்தகைதாரரை உழுகிறவராக உரிமை ஆக்கப்படுகிற நிலைமையில் நிலச் சொந்தக்காரருக்கு வேண்டிய கணக்குப் பிள்ளை இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தச் சட்டத்தைப் பற்றி தெளிவுபடுத்துகிறேன். இந்த பதிவேட்டு சட்டத்தில் உள்ள ஷரத்துகளைப் பூரணமாகப் படித்துப் பார்த்தால் விளக்கமாக இருக்கிறது. கணக்குப் பிள்ளையையோ அல்லது மணியக்காரரையோ கேட்க வேண்டிய அவசியமில்லை. தாலுகா அலுவலகத்திற்கு டெபுடி தாசில்தார் ரெஜிஸ்டரை எடுத்துக் கொண்டு போகிறார்கள். அடங்கலைப் பார்த்து எழுதுகிறார்கள். அப்படி முடியவில்லையென்று சொன்னால் ஊரில் இருப்பவர்களைக் கேட்கிறார்கள். குத்தகைதாரர் வந்து சொன்னால் எழுதிக் கொள்கிறார்கள். நான் எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வது, அவரவர்கள் தொகுதியில் அப்படி எங்காவது குத்தகைதாரர் தன்னைப் பதிவு செய்து கொள்ள முடியாத நிலைமையை நிலச் சொந்தக்காரர் ஏற்படுத்தியிருக்கிறார் என்று தெரியுமானால் இந்த பதிவேட்டு சட்டத்தின் அதிகாரியை அழைத்துப்போய் பதிவு செய் என்று சொன்னால்,

பக்கத்தில் உழுது கொண்டிருக்கிறவர்கள் சாட்சி சொன்னால் போதும், எழுதிக் கொடுக்கவேண்டாம், இவர்தான் பயிர் செய்கிறார், ஓட்டிக்கொண்டிருக்கிறார் என்று சாட்சி சொன்னால் போதும், அவரைக் குத்தகைதாரர் என்று எழுதிக் கொள்ளவேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறோம். அல்லது அவரே ஸூமோட்டோவாக எழுதிக் கொள்ளலாம். டெபுடி தாசில்தார் தானாகவே விசாரித்து எழுதிக் கொள்ளலாம் என்று தெளிவாக விதி போட்டிருக்கிறோம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, ஒரு விளக்கம் தேவை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** அவர் பேசினதற்கு பிறகு கேட்கலாம்.

**திரு. குழ. செல்லையா :** இதற்கு அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் கிராமக் கமிட்டிகள் அமைத்து, இவர்தான் சாகுபடி செய்கிறார் என்பதை அந்தக் கிராம கமிட்டிகள் மூலம் தெரிந்து கொள்வது நல்லது என்பதைச் சொன்னார்கள். இப்படி நல்ல நோக்கத்திற்காகக் கொண்டு வருகிற சட்டங்களின் பலாபலன்களை மக்கள் அனுபவிக்கிறார்களா என்பதைப் பார்க்கவேண்டும். இன்னொன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குத்தகைதாரர்கள் வாங்கப்படுகிற நிலத்தை மீண்டும் விற்கக் கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். காரணம் என்னவென்றால், நிலச் சொந்தக்காரர்கள் தங்களுக்கு வேண்டியவர்களை வைத்துக்கொண்டு சில நேரங்களில் திரும்ப எழுதி வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். அப்படி உண்மைக்கு மாறாக பினாமிகளை உருவாக்காமல், குத்தகைதாரர் தான் வாங்கிய நிலத்தை திரும்பவும் குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் விற்கக்கூடாது என்று சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் கோயில்கள் மூலமாக பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். மனிதாபிமான உணர்ச்சியோடு பார்த்து எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்யவேண்டும். கோயில்கள் மூலம் பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், மருத்துவமனை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாம் இப்படிச் செய்வதன் மூலமாக இந்தக் காரியங்கள் தடைபடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் இவைகள் தடைபடாத அளவிற்கு வழிவகை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.



**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, ஒரு விளக்கம் வேண்டும். இந்த குத்தகை பதிவேட்டு அதிகாரியிடம் போய்ச் சொன்னால், பக்கத்தில் உள்ள விவசாயி சாட்சி சொன்னால் கூட, குத்தகைதாரர் பதிவேட்டில் எழுதிக் கொள்வார்கள் என்று சொன்னார்கள். கடந்த ஆண்டு திருநெல்வேலியில் ஆதரைஸ்டு ஆபீசர் முன்னாலே நானே வழக்கு நடத்தினேன். அங்கே பிரச்னையெல்லாம் யார் நிலத்தை பயிர் பண்ணுகிறார்கள் என்பதுதான். தீர்ப்பு என்னவென்றால், நிலச் சொந்தக்காரர் சொந்த பயிர் வைத்திருக்கிறார்கள், குத்தகைதாரர் பெயர் பட்டியலில் இல்லை என்று சொல்லப்பட்டது. அப்படி தீர்ப்பு அளித்ததற்குப் பின்னால் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் போய் குத்தகைதாரர் தான் தான் பயிர் செய்வதாக சொன்ன பின்னாலும்கூட கடந்த 6 மாதமாகியும் அதற்கு முடிவு இன்னும் சொல்லவில்லை. அதிகாரிகள் இதை எழுதாமல் இருக்கிறார்கள். அரசில் உள்ளவர்கள் தலையீடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பரந்து கிடக்கிற தமிழ் நாட்டில் ஏதோ ஒரு சிறு கிராமத்தில் இப்படி நடந்திருக்கக் கூடும். அவர் என்ன நடந்தது என்று தெரிவிப்பார்களானால் அதைப் பற்றி விசாரிக்கலாம். எங்கோ ஒரு கிராமத்தில் குத்தகைதாரர் பெயரை எழுதவில்லை என்கிறார்கள். அப்படிப்பட்ட விவரத்தை அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் விசாரிக்கிறேன்.

## 7. அறிவிப்பு

### பேரவை அலுவல் குறித்து

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : I have to make an announcement to the House.

The Business Advisory Committee which met today has re-arranged the business of the House as follows—

3-4-1973 (Tuesday)—The Tamil Nadu Cultivating Tenants (Right to purchase the Landowners' Rights) Bill, 1973.

The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1973.

4-4-1973 (Wednesday)—Holiday.

5-4-1973 (Thursday)—From 11.00 a.m. to 11-30 a.m.

(1) The Tamil Nadu Legal Aid and Advice Bill, 1973.

(2) The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1973.

(3) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973.

Between 11-30 a.m. and 1-30 p.m.

(4) The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973.

After-noon—From 4 p.m. to 7 p.m.

(1) Half-an-hour discussion.

(2) Private Members' business.

*6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.*

**தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73)**

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, இந்த உழவு தாரருக்கு நிலம் சொந்தமாக்கும் விஷயம் புரட்சிகரமான திட்டம்.

காந்திஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டினுடைய கிராமங்களுடைய முன்னேற்றத்தைப் பொறுத்துள்ளது. ஒன்பது லட்சம் கிராமங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். வறண்டு கிடந்த பயிர்களைக் கொண்ட பூமி வானத்தை நோக்கிக் கொண்டிருப்பது போல, நல்ல காலம் வாராதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு, வறண்ட பூமிக்கு நல்ல மழையைப்போல, இது நல்ல சட்டமாக அமைகிறது. இந்த சட்டத்தைப் பற்றி யாரும் குறை கூற முடியாது. ஆங்காங்கு



சில யோசனைகளைச் சொல்ல முடியும். இந்த தொகையை மொத்தமாகக் கொடுத்தால் 25 சதவீதம் தள்ளுபடி என்று சொல்கிறார்கள். அதை வரவேற்க முடியவில்லை. ஏனென்றால் ஏழைகளுக்கு சலுகை காட்டவேண்டியது நியாயம்.

12 வருஷத் தவணை கொடுக்கலாம். ஆனால் தொகையைக் கொடுக்க சக்தி வாய்ந்தவர்கள் கொடுக்க முன் வரும்போது அவர்களுக்கு ஏன் சலுகை காட்ட வேண்டுமென்று கேட்கிறேன். மொத்தமாக தொகையை அளிப்பவர்களுக்கு தள்ளுபடி செய்யவேண்டிய அவசியமில்லை என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிரவும், அவர்கள் சொந்த விவசாயம் செய்வதற்கு நிலம் வேண்டுமென்று கேட்கும்போது அப்படிப்பட்ட விவசாயிகள் எத்தனை இடத்தில் கேட்கலாம், அம்மாதிரி கேட்கப்படுகிற நிலத்தின் மொத்த விஸ்தீரணம் என்ன என்ற விவரம் என்னைப் பொறுத்தவரை எனக்குக் கிடைக்கவில்லை.

அமைச்சரவர்கள் ஒருவர் பெறவேண்டிய நிலத்தின் அளவு என்ன என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். தவிரவும் 12 ஆண்டுகளில் பணம் கொடுக்கவேண்டிய விவசாயிகள் 2, 3 ஆண்டுகளில் பணம் கொடுத்த பிற்பாடு அவர்களால் கொடுக்க முடியாமல், மழை சரியாகப் பெய்யவில்லை, விவசாயம் சரியாக நடக்கவில்லை என்ற காரணத்தினால் கொடுக்க முடியாமல் போனால், அப்போது அவர்கள் நிலை என்ன? என்ன உதவி அவர்கள் பெறுவார்கள் என்ற விஷயங்களை இந்த சட்டத்தில் தெளிவு படுத்தினால் நல்லதாக இருக்கும். இந்த மாதிரி 3, 4 ஆண்டுகள் கொடுத்து, மேற்கொண்டு கொடுக்க முடியவில்லையென்றால் கொடுத்த பணத்தை ஃபர்ஸ்ட் சார்ஜாக வைத்துக் கொண்டு சில வங்கிகள் அந்த தவணைப் பணங்களைக் கொடுத்து உதவுவது என்ற ஒரு விதியைச் செய்துவிட்டால் நலமாக இருக்குமென்று கருதுகிறேன். தவிரவும், விவசாயிகள் சொந்த விவசாயத்திற்காக நிலம் வேண்டுமென்று கேட்டால் தற்போதுள்ள சட்டப்படி கேட்கலாம் என்று இருக்கிறது.

ஐந்து ஏக்கர் என்றால் பாதி வரை அவர்கள் கேட்கலாம் என்று இருக்கிறது. பாதி கேட்டு வாங்கி அவர்கள் சொந்தமாக உழப் போகிறார்களா அல்லது யாருக்குக் கொடுக்கப் போகிறார்களா என்பதைப் பற்றி ஆராயவேண்டும். சொந்த விவசாயம் பண்ணுவதாக இருந்தால் அவர்களுக்கு உரிமை இருக்கும். ஐம்பது மைலுக்கு அப்பால் ஒரு ஊரில் அவர்கள் இருந்தால் பாதி நிலத்தை வாங்கினால் அவர் இன்னொருவருக்குக் கொடுப்பார். அப்படி ஏன் கொடுக்க வேண்டும்?

சொந்த விவசாயம் என்று நிலம் கேட்டு வாங்க உரிமை உண்டு. அவர் கிராமத்திற்குப் பக்கத்தில் இத்தனை மைல் சுற்றளவில் தங்கக் கூடியவர் என்ற நிலையில் இருக்கவேண்டும் என்ற ஒரு விதியை அமைத்தால் நன்றாக இருக்கும். இல்லாவிட்டால் எல்லோருமே, எல்லா நிலச் சொந்தக்காரர்களும் நாங்கள் விவசாயம் செய்யவேண்டும், பாதி நிலம் வேண்டுமென்று கேட்டு பாதி நிலம் பெறுவதற்கு ஏற்பாடு பண்ணிக் கொள்வார்கள் என்ற நிலைமை இருக்கிறது.

பல அங்கத்தினர்கள் சொன்னது மாதிரி சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்களை பொதுஜனங்கள் தர்ம காரியங்கள் என்ற முறையில் செய்கிறார்கள். ஏழை குழந்தைகளுக்கு ஹாஸ்டல் வசதிக்காக நிலங்களை ஒதுக்குகிறார்கள். ஆஸ்பத்திரிக்காக ஒதுக்குகிறார்கள், பில்கிரிம்சுக்குச் சாப்பாடு போடுவதற்காக ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே, பிரைவேட் டிரஸ்டுக்கு ஓரளவு நிலம் வைத்துக் கொள்ளலாம் என்ற முறையில் விதிவிலக்கு கொடுத்தால்தான் ஜனங்களுக்குச் சமாதானமான முறையில் சட்டத்தை நிறைவேற்ற முடியும். ஆகவே, அப்படி ஓரளவுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டிஃபால்ட் ஆன விவசாயிகள் 5 பர்சன்ட் வட்டி சேர்த்துக்கட்ட வேண்டுமென்று இருக்கிறது. அது ரொம்பக் குறைவாக இருக்கிறது. வாடகைச் சட்டத்தில்கூட 9 சதவிகிதம் என்று போட்டிருக்கிறார்கள். 5 பர்சன்ட் என்றால் திருப்பிக் கட்டுவதிலே ஒரு அஜாக்கிரதை ஏற்படும். ஆகவே, அதை 7½ சதவிகிதம் என்ற அளவுக்காவது உயர்த்த வேண்டும். கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவை வரவேற்று இந்த அரசின் நற்பணிகளுக்கு முழு ஆதரவைக் கொடுத்து கலைஞர் அவர்கள் விவசாயிகளின்மேல் பற்றும் பாசமும் கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காகப் பாராட்டி இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே விவாதிக்கின்ற குத்தகைதாரர்களுக்கு நிலத்தினுடைய உரிமையை வழங்கக்கூடிய இந்த மசோதாவை நான் முழு மனதோடு ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற முன்வந்துள்ளேன்.

வெகு நீண்டகாலமாக குத்தகைதாரர்கள் என்ற வகுப்பினர் தங்களுக்கு நிலத்திலே எந்தவிதமான உரிமையும் அற்ற நிலையிலே உழைத்து, அந்த நிலத்



திலே பாடுபட்டு நிலச் சொந்தக்காரர்களுக்கு ஒரு பாதியை வாரமாகக் கொடுத்துவிட்டு, கிடைக்கின்ற பாதியை வைத்துக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். இம்மாதிரி ஒரு நிலத்தின் பேரில் குத்தகைதாரர் என்று ஒருவரும், நிலச் சொந்தக்காரர் என்று ஒருவரும் என்ற நிலைமையை மாற்ற யார் நிலத்திலே பாடுபடுகின்றார்களோ அவர்களுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று கருத்து பல்லாண்டுகளாக இந்த அவையிலே வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது.

1955-ம் ஆண்டிலே டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே அவர்கள் நிலச் சொந்தக்காரர்கள் தயவில் வாழவேண்டிய துர்பாக்கியமான நிலையில் இருந்து காப்பாற்றி அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்று சட்டத்தில் கூறி அது தடை செய்யப்பட்டது. அதன் பிறகு அந்த நிலத்தினுடைய வாரம் 60, 40 என்று குறைக்கப்பட்டது. இப்படிப் பல்வேறு விதமான மாறுதலுக்குப் பிறகு இன்றையதினம் யார் அந்த நிலத்தில் உழுகின்றார்களோ அவர்களுக்கு உரிமையளிக்க வேண்டுமென்ற வகையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்பதை இதனை எதிர்க்கின்றவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு முன்னாலேயே யார் நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்களோ, குத்தகை சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களை வெளியேற்றக் கூடாது என்று தடை செய்துவிட்டோம். ஆகவே, நிலத்திற்கு உரிமையாளர் அதற்குரிய குத்தகையைத்தான் வாங்க முடியுமே தவிர, நிலத்தில் பிரவேசிக்க முடியாது என்ற தடை இருக்கிறது. ஆகவே, நிலத்தின்பேரில் இரண்டு விதமான உரிமை இருக்கக்கூடிய சூழ்நிலை வருகிறது. ஒன்று குத்தகைதாரருக்கு நிலத்தில் உழுவதற்கான பாத்தியதையை அளித்து விட்டோம். அடுத்தபடியாக நிலத்திற்குச் சொந்தக்காரர் என்று தனியாக வைத்து விட்டோம். இந்த இரண்டு பேருக்கும் நிலத்தில் உரிமையைக் கொடுத்து விட்டதால் சமுதாயத்தில் நிலத்தின் வளர்ச்சிக்குத் தடை ஏற்பட்டிருக்கிறது.

நிலத்தைச் சீர்திருத்தி அதிகப்படியான உற்பத்திப் பெருக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கான எண்ணம் குத்தகைதாரர்களுக்கும் இல்லாத நிலையில், நிலச் சொந்தக்காரர்களுக்கும் இல்லாத நிலையில் நிலத்தின் வளர்ச்சி தடைப்படுகிறது. நிலச் சொந்தக்காரர் அந்த நிலத்தை திரும்பச் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ள முடியாது. குத்தகைதாரர் தனக்கு நிலம் பாத்தியதை இல்லை என்ற காரணத்தால் அதன்பேரில் கடன் வாங்கி நிலத்தை அபிவிருத்தி

செய்யத் தேவையில்லை. இம்மாதிரி பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருந்து கொண்டிருக்கும் காரணத்தால் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடையாக இருக்கிறது.

ஆகவே, இதை யார் உழுகின்றார்களோ அவர்களுக்கே உரிமைப்படுத்தி விட்டால் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கான பணியைத் தொடங்குவதற்கான நிலைமை ஏற்படும் என்ற கருத்து பல்வேறு பொருளாதார நிபுணர்களால் கூறப்பட்டிருக்கிறது. இந்தியாவைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாட்டைச் சேர்ந்தவர்களும் நிலத்தை யார் உழுகின்றார்களோ அவர்களுக்கே சொந்தமாக்கினால்தான் நிலங்கள் அபிவிருத்தி அடையும், உற்பத்தி பெருக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

ஆகவே, இந்தச் சட்டம் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக யார் உழுகின்றார்களோ அவர்கள் குடும்பத்திற்குப் பயன்பட வேண்டுமென்பது ஒருபுறம் இருக்க, உற்பத்திப் பெருக்கத்திற்கும் இது அடிப்படையாக இருக்கிறது. ஒட்டு மொத்தமாக இது சமுதாயத்தின் பெருவளர்ச்சிக்குப் பயன்படுகிறது என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில்களுக்கெல்லாம் விலக்கு அளிக்க வேண்டுமென்று பேசப்பட்டது. இதற்கு முன்னாலேயே கோயில்களுக்கு 20 ஏக்கர் நிலம் வரை சொந்தமாகச் சாகுபடி செய்ய உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. சொந்தமாகச் சாகுபடி செய்யக்கூடிய நிலத்தில் இந்தச் சட்டம் பிரவேசிக்கவில்லை. கோயில், மடங்கள் நிலங்களைத் தனியாருக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களைத்தான் இந்தச் சட்டம் பாதிக்குமே ஒழிய சொந்த சாகுபடியில் வைத்திருக்கின்ற நிலங்களைப் பாதிக்காது.

பள்ளிக் ட்ரஸ்ட் ஆக்டில் கூட தர்ம ஸ்தாபனங்களுக்குள்ள நிலத்தில் 20 ஏக்கருக்கு மேல் இருப்பதைக் குத்தகைக்கு விட்டுத்தான் ஆகவேண்டுமென்று சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். கோயில்கள், மடங்கள், தர்ம ஸ்தாபனங்களுக்கு உள்ள நிலங்களும் உழுபவனுக்குப் பாத்தியம் இல்லாமல் போய் விட்டால் அபிவிருத்தி அடையாமல் போய்விடுமோ என்ற சமூக நலனை எண்ணித்தான் எடுத்துக் கொள்ளப்படுகிறதே தவிர கோயில்கள் பேரிலோ தர்ம ஸ்தாபனங்கள்பேரிலோ உள்ள கோபத்தினால் அல்ல. இதிலே சமுதாயத்திலே அடித்தளத்திலே உள்ள மக்களுக்குப் பயன் கிடைக்கிறது என்ற கருத்தில் இதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இதிலே முக்கியமான மாற்றம் என்ன செய்யப்பட்டிருக்கிறது என்றால் குத்தகைக்கு விட்ட நிலத்தை நிலச் சொந்தக்காரர்கள் திரும்ப எடுத்துக் கொள்ள முடியாது என்று இருந்த சட்டத்தை மாற்றி நிலச் சொந்தக்காரருக்கு 50 சதவிகிதம், நிலத்திலே சாகுபடி செய்கிறவருக்கு 50 சதவிகிதம் என்று உரிமை விதித்து வழங்கப்பட்டிருக்கிறது. 15 ஆண்டுகாலமாக இருந்துவந்த தடை நீக்கப்பட்டிருக்கிறது. நிலச் சொந்தக்காரர்கள் 50 சதவிகிதத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. நாங்கள் அதை வரவேற்கிறோம். நிலச் சொந்தக்காரர்களை மோசமான நிலைமையில் விட்டு விட வேண்டுமென்பதல்ல. இது உழுபவனுக்கும், நிலச் சொந்தக்காரருக்கும் இரண்டு பேருக்கும் சாதகமான மசோதாவே தவிர, நிலச் சொந்தக்காரரை அப்படியே விட்டு விட்டு குத்தகைதாரருக்கு நிலத்தைக் கொடுத்து விடக்கூடிய நிலை இல்லை.

நிலச் சொந்தக்காரர் பாதி நிலத்தை இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். குத்தகை சரியாக வருவதில்லை என்ற குறைபாடு சொல்லப்பட்டு வந்ததைப் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் இல்லாமல் பாதி நிலத்தை அவர்கள் சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம், மீதி பாதி நிலத்திற்கு காம்பன்சேஷன் கிடைத்து விடும். தஞ்சை மாவட்டத்தில் 2,000 ரூபாயிலிருந்து 35,000 ரூபாய் வரை ஏக்கருக்கு காம்பன்சேஷன் கிடைக்கிறது. ஆகவே, மார்க்கட் வால்யு கூட குறைவு என்று சொல்வதற்கில்லை.

ஆகவே, எந்த வகையில்பார்த்தாலும் இது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மசோதா, இது எதிர்க்கக்கூடிய ஒரு மசோதா அல்ல. இதை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொல்கிறார்கள், அப்படி பொறுக்குக் கமிட்டிக் ந.ப. 12-00
குப் போய் திருத்தங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை.

சிலபேர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். விதவைகள், மைனர் குழந்தைகள் இவர்களுக்கு அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. வேறு வழியே இல்லாமல், வேறு வருவாய் இல்லாமல் இதையே நம்பியிருப்பவர்களுக்கு, தன்னால் வேலை செய்ய சக்தியற்று குத்தகைக்கு விட்டிருந்தால் அதை நீடித்து வைத்துக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. அவர்கள் குத்தகையைத் தொடர்ந்து வாங்கிக்கொள்ள அனுமதிப்பதுபற்றி எங்களைப் பொறுத்தவரையில் ஆட்சேபணையில்லை.

ஆனால், இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் அரசாங்கம் பணப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராகயில்லையென்ற கருத்தில்தான் இந்த

மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தில் ஒருவர் க்ளார்க்காக இருக்கலாம், ப்யூனாக இருக்கலாம் அல்லது ஆசிரியராக இருக்கலாம். அவருக்கு ஒரு ஏக்கர் நிலம் இருக்கலாம். பத்து மூட்டை நெல் கிடைக்கலாம். தன் சம்பளத்தையும் அதையும் வைத்துக்கொண்டு அவர் குடும்பம் நடத்தக் கூடிய நிலையில் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு வேண்டுமானால் சிறிது அதிகம் காம்பன்சேஷன் கொடுத்து இந்த பத்து மூட்டை நெல்லில் கிடைக்கிற அளவிற்கான வருவாய் வேறுவிதத்தில் கிடைக்கும்வகையில் முதலீடு செய்யும் விதத்தில் சிறிது அதிகமாக காம்பன்சேஷன் கொடுக்கலாம். ஆனால் அதை குத்தகைதாரரிடமிருந்து வாங்கிக் கொடுப்பதில் சிரமம் இருக்கிறது. ஆகவே இந்த சிறு நிலச் சொந்தக்காரர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். அரசு கொடுத்துவிட்டு பின்னர் வசூல் செய்யும் முறையில் வைக்கலாம்.

இப்படி ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள் என்று வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் காம்பன்சேஷனை மொத்தமாகக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். குத்தகைதாரர் அப்படி ஒரேயடியாகக் கொடுக்கமுடியாது. எனவே அரசாங்கமே அதற்கு பொறுப்பு எடுத்துக்கொண்டு முதலில் அந்தத் தொகையைக் கொடுத்துவிட்டுப் பின்னர் குத்தகைதாரரிடம் வசூல் செய்து கொள்ளலாம். அரசாங்கம் பணப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் இரண்டு பேர்களுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்துகொள்ளும் அளவிற்குத்தான் செய்யமுடியும் என்ற வகையில் சொல்கிறார்கள்.

ஆகவே நான் சொல்வது, சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அரசே பொறுப்பேற்று முழுத்தொகையையும் லம்ப் ஸம்மாகக் கொடுக்க யோசிக்கவேண்டும். பின்னர் ப்ராக்மென்டேஷன்ஸ் பற்றியெல்லாம் சொன்னார்கள். இப்போதே துண்டு துண்டாகத்தான் இருக்கிறது.

இன்னும் துண்டு துண்டாகப் போய் கெட்டு விடப்போவது ஒன்றுமில்லை. இதை எதிர்ப்பதற்கு அதை ஒரு வாதமாகச் சொல்லலாம். ஃபேர் ரென்ட் பொறுத்து பின்னால் வரும்போது பேசிக்கொள்கிறேன். வாரத்தை அடிப்படையாக வைத்து போடப்பட்டிருக்கிறது. சிலயிடங்களில் இருக்கலாம். சிலயிடங்களில் குத்தகை முறைதான் இருக்கிறது. விளைச்சலை எடுத்து அளந்து 40-60 என்று பாகம் பிரிப்பது அநேக இடங்களில் பழக்கத்தில் இல்லை. குத்தகையாக எதைச் செலுத்தி வந்தார்களோ அதையே ஃபேயர் ரென்டாக எடுத்துக் கொள்ளலாம். அதற்கான வகையில் மாற்றம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை முழுமையாக ஆதரித்து என் பேச்சை முடிக்கிறேன்.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** இதை முடித்தவிட்டு பிரிவுவாரியாக எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு விற்பனை வரி மசோதா வருகிறது. நேரம் இல்லை. ஆகவே, தலைவர்கள் தயவுசெய்து சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். ஐந்து நிமிடங்களுக்குள் முடித்து விடுங்கள். திரு. லத்தீப்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவை, அதனுடைய நோக்கத்தையும் எண்ணத்தையும் நான் ஆதரிக்கிறேன்.

இந்த மசோதாவை எந்த நோக்கோடு கொண்டுவந்திருக்கிறார்களோ அந்த நோக்கத்தையும், எண்ணத்தையும் எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது.

அதுமட்டுமல்ல. இங்கு மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது அவர் எண்ணுகின்ற அடிப்படையில் சமுதாயத்திற்கு நன்மை பயக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் பேசுகிறார்கள் என்பதை என்னால் உணரமுடிகிறது. சமுதாயத்தில் இதுவரையில் அநீதிக்கு ஆளாக்கப்பட்ட ஒரு பிரிவு நீதி பெறவேண்டும், நியாயம் பெறவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்களைப் போன்றவர்கள் விரும்புவார்களேயானால் அதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம், வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே அவர்கள் சொல்கிற கருத்து நியாயத்திற்குப் புறம்பானது என்று வாதிட நான் தயாராயில்லை. அவர்களது கருத்தை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. அதைப் பாராட்டி புரிந்துகொள்கிறோம்.

அதே நேரத்தில் என்னைப் போன்றவர்கள் பேசும்போது சமுதாயத்தில் அநீதிக்கு ஆளாக்கப்பட்ட ஒரு பிரிவினருக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அப்படி நீதி ஒரு பிரிவினருக்குக் கொடுக்கப்படும்போது மற்ற ஒரு பிரிவினருக்கு அநீதி இழைக்கிற வகையில் சில காரியங்கள் செய்யப்படக்கூடாது என்று என்னைப் போன்றவர்கள் கூற முன்வருவார்களேயானால் மணலி அவர்களைப் போன்றவர்கள் நல்ல எண்ணத்தோடு அதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. அப்படித்தான் இங்கு பேசிய எல்லாத் தரப்பினரும் பேசுகிறார்கள்.

இது ஒரு நல்ல திட்டம். விவசாயிகள் தாங்கள் உழைக்கிற நிலங்களிலிருந்து அதன் பலனை மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்காமல் தான் பெறுகிற பலனை தானே சுதந்திரமாகப் பெறவேண்டும், அதற்கான சுதந்திரம் அவர்களுக்கு இருக்க வேண்டும், தாங்கள் உழைக்கிற நிலம் தங்களுக்குச் சொந்தமானது என்ற உணர்வு அவர்களிடத்தில் இருக்கவேண்டுமென்று எல்லோரும்

கருதுகிறார்கள். விவசாயியும் அப்படி நினைக்கிறான், நாமும் அப்படி நினைக்கிறோம். அதில் தவறு இல்லை.

அதேநோக்கில் இந்த மசோதாவினை நிறைவேற்றி செயல்முறைப்படுத்தும் போது சில சிக்கல்கள் ஏற்படும் என்ற ஒரு உணர்வைப் பெற்ற காரணத்தால் தான் இதற்கு சில திருத்தங்கள் வேண்டும் என்று கோருகிறோமே தவிர, விவசாயப் பெருமக்கள் இந்த உரிமைகளைப் பெறக் கூடாது என்பதற்காக அல்ல என்பதை இந்தச்சமயத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

உதாரணமாக எனக்கு முன்பு பேசிய நண்பர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். சமுதாயத்தில் சிலர் விதவைகளாக இருக்கிறார்கள். சிலர் அங்கஹீனர்களாக இருக்கிறார்கள், சிலர் வறியவர்களாக இருக்கிறார்கள், சிலர் முதியோர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தங்கள் வாழ்க்கையை நடத்துவதில் இந்த நிலத்தில் இருந்து வருகிற வருமானத்தை நம்பித்தான் வாழ்கிறார்கள் என்ற நிலை இருந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று சொல்வதில் நியாயம் இருக்கிறது. அதை, சமூக நீதியைத்தான் அவர்கள் கோருகிறார்கள் என்ற அடிப்படையில்தான் மற்றவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இந்தச் சட்டத்தைப் பற்றி எனக்கு ஒரு சில ஐயப்பாடுகள் உள்ளன. நம் அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கங்களை நல்லமுறையில் தந்திருக்கிறார்கள். அவர்களை உண்மையிலே பாராட்ட நாம் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் ஒன்று. இப்போது ஒருவரிடம் ஐந்து ஏக்கர் நிலத்தை வாங்கிக் கொடுத்துவிடுகிறோம். நிலத்தை அவருக்கு உரிமையாக்கிவிடுகிறோம். அவர் ஒரு பத்து ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு வாங்கி விவசாயப் பயிர் தொழில் நடத்துகிறார். தற்போதைய நிலையில் இந்தச் சட்டத்தின் வாயிலாக அந்த நிலத்தின்மீதான உரிமையை அவர் பெற்றுவிடுகிறார். ஆனால் அந்த விவசாயி ஏதோ ஒரு காரணத்தினால் வயது முதிர்ச்சி அல்லது ஏதோ ஒரு காரணத்தால் இறந்துவிடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். ஒரு ஐந்து ஏக்கர் நிலத்திற்கு உரிமை பெற்ற ஒரு விவசாயி இப்படி திடீரென்று இறந்துவிடுகிறார் என்றால் அவருக்கு ஒரு மனைவி இருக்கிறாள், இரண்டு வயது, மூன்று வயது உடைய இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் அந்தப் பெண்மணி விவசாயத்தைக் கவனிக்கமுடியாது. அந்தக் குழந்தைகளும் கவனிக்க முடியாது. வேறு ஒருவனை வைத்துத்தான் விவசாயத்தை நடத்தவேண்டும். அந்த நிலத்தைக் குத்தகைக்கு அல்லது வாரத்திற்கு கொடுத்துவிட்டால் அந்த நிலத்தின் மீதான உரிமையை அவர்கள் இழந்துவிடுகிறார்களா என்பதைப்பற்றி ஒரு விளக்கமும் [illegible] இல்லை.



இப்போது விவசாயிகளாக இருக்கக்கூடியவர்கள்தான் உரிமை பெற வேண்டும் என்பதற்காக சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதே தவிர வருங்காலத்தில், விவசாயி விவசாயத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாது இறந்துவிட்டால் உடனே அந்த நிலம் அதைக் குத்தகைக்கு எடுத்து செய்பவருக்கு மாற்றப்பட்டு விடுகிறது. அப்போது வருங்காலத்தில் இறந்து போனவரின் மனைவி அல்லது சிறிய குழந்தைகளின் நிலை என்ன என்பதைப் பற்றி விளக்கம் இல்லாமலிருக்கிறது. அது ஒரு முக்கியமான அம்சம். அதைப் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். அது பற்றி ஒரு விளக்கம் தேவை.

ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷன் பற்றிச் சொன்னார்கள். அறக் கட்டளைகள் மதஸ்தாபனங்களால் நடத்தப்படுகின்ற அவர்களுடைய நிலங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், விதிவிலக்கு வேண்டுமென்று கோருகிறேன். அப்படிக் கோருகிறபோது அது விவசாயிகளுக்கு விரோதமானது, சோசலிசத்திற்கு விரோதமானது, அல்லது நாட்டிலே ஏற்படுகின்ற முன்னேற்றத்திற்குத் தடையாக, தடங்கலாக இருக்கிறார்கள் என்று நண்பர்கள் ஐயம் கொள்ளத் தேவையில்லை. இப்போது இருக்கும் நிலையில் 'ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷன்' மதஸ்தாபனங்களுக்குள்ளே நிலங்கள், கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தால். அனுபவ பூர்வமாகப் பார்த்தால் நம்முடைய நாட்டிலே இருக்கின்ற சூழ்நிலையை மனதில் வைத்துக் கொண்டு பார்த்தால், 'அர்ரியர்ஸ் ஆப் ரென்ட்' பாக்கிகள் பெறுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. நிச்சயமாக அவற்றைப் பெற முடியாது. அப்படிப் பார்க்கிறபோது அது பள்ளிக்கூடங்கள், மதஸ்தாபனங்கள் ஆகியவை தொடர்ந்து செயல்படுவதற்குப் பாதகம் ஏற்படும் என்று உணர்ந்து சொல்கிறோம். பாதிக்காது என்று உறுதி அளித்தால் ஒப்புக்கொள்ளலாம். இருந்தாலும், அனுபவ பூர்வமாக நாம் பார்த்துள்ள காரணத்தால் இந்த விதிவிலக்குத் தேவை என்று கருதுகிறேன். நம்முடைய 'எஸ்டிமேட் கமிட்டி' ரிப்போர்ட்டிலேயே—இன்று வைத்திருக்கிறார்கள்—தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் பாருங்கள் .....

"There is heavy accumulation of arrears of these amounts due from tenants in respect of agricultural lands of religious institutions. The agricultural lands of religious institutions come under the purview of the Tamil Nadu Public Trusts Act, 1961. Section 19 of the Act provides for only eviction of tenants in case of default in payment of rent. There is no provision either to obtain advance

rent or for recovery of rent amount under the provision of the Act. Therefore, in every case of default it becomes necessary to file a petition for eviction and collect the arrears under threat of eviction. Hence, the Committee recommends for the consideration of the Government whether the Public Trusts Act can be suitably amended so as to provide for recovery of arrears of rent due from tenants.

The Committee is given to understand that the loss to religious institutions due to the implementation of the provisions of the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Act is of the order of Rs. 3 crores. Needless to say this greatly affects the finances of the temples and they find it hard to meet their commitments on repairs and renovations, diversion of funds to educational institutions maintained by them and for such and similar purposes." . . . . .

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):* உங்களுக்கு அதைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனுடைய கருத்தை மட்டும் சொல்லுங்கள். முழுவதையும் படிக்க வேண்டாம்.

*திரு. எம். ஏ. லத்தீப்:* இப்போது இருக்கிற சட்டத்தை வைத்துக்கொண்டு, கோவிலுக்குச் சேரவேண்டிய பாக்கி இது வரையில் ரூ. 3 கோடி அளவுக்கு இருக்கிறது. இதையே இவர்கள் தற்போது பெற முடியவில்லை. ஆகவே அவர்களுக்குப் பாதுகாப்பு தேவை. அதிலிருந்து விலக்கு தர அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 'எஸ்டிமேட் கமிட்டி' ரிப்போர்ட்டிலேயே அதற்கு ஒரு மாற்றுத் திட்டம் செய்யவேண்டுமென்று பரிந்துரை செய்து இருக்கிறார்கள். திரு. மணலி கந்தசாமி அவர்கள் கூட அதில் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். அந்தக் காரணத்தால்தான் இதை வலியுறுத்திச் சொன்னேன்.

ஆகவே, நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சமுதாயத்தில் வறியவர்களாக இருக்கக்கூடியவர்கள், சிறிய நிலச்சுவான்தார்கள் ஆகியோருக்கு இதிலிருந்து பாதுகாப்பு வேண்டும். அதே நோக்கில் அறக்கட்டளைகளுக்கும் பாதுகாப்பு வேண்டும். இதைப்பற்றியெல்லாம் நாம் வலியுறுத்திப் பேசுவதற்கும், விளக்கமாக எடுத்துச் சொல்வதற்கும்தான் இதைக்



கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று கூறினோமே தவிர, இந்த நல்ல திட்டத்தை தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல என்பதை பெரியவர் மணலியைப் போன்றவர்கள் உணரவேண்டும்.

சோஷலிசத் தத்துவத்தில் மணலி அவர்கள் எவ்வளவு ஊன்றியிருக்கிறார்களோ, வலியுறுத்திச் சொல்கிறார்களோ, அந்தத் தத்துவத்தில் முழு நம்பிக்கை வைத்திருப்பவர்கள், அதை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் முஸ்லீம்கள்; முஸ்லீம் லீக் கட்சியினரும் அந்தத் தத்துவத்தை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று சொல்லி, சமுதாயத்தில் இருக்கும் சில குறைகளைப் போக்குவதற்கு சில விதி விலக்குகள் நிச்சயம் தேவை, ஒரு இடத்தில் நீதி செய்பவர்கள், அதே நோக்கில் மற்ற இடத்தில் இருப்பவர்களுக்கும் நீதி செய்ய வேண்டுமென்று சொல்லி, இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டத்தை மற்ற எல்லாவகையிலும் முஸ்லீம் லீக் முழுமனதோடு ஆதரிக்கிறது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* தலைவரவர்களே, சாகுபடியாளர்களுக்கு, குத்தகைதாரர்களுக்கு நிலம் உடைமையாக்கப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதா பேரில் என்னுடைய கட்சியின் கருத்துக்களை எனக்கு முன்னால் பேசிய மணலி அவர்களும், அழகர்சாமி அவர்களும், ஏ. கே. சுப்பையா அவர்களும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் குறிப்பிட்ட சில விஷயங்களை மட்டும் இங்கே வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

குத்தகைதாரர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்ற இந்தக் கருத்து நாடு பூராவிலும் அநேகமாக ஏற்றுக்கொண்டுள்ள கருத்தாகும். சில விவரங்களை மட்டும் நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பீகாரிலே சாதாரணமாக குத்தகை விவசாயிகளாக இருந்தவர்கள் அந்த நிலங்களைத் தங்களுக்கே சொந்தம் என்று சொல்லி, பின்னால் சர்க்கார் அவர்களுக்கு பட்டா பேரட்டு, முடிந்த அளவுக்கு நீங்கள் ஏதாவது நஷ்ட ஈடு கொடுங்கள் என்று அங்கே அது முறையாக நடந்து கொண்டிருக்கிறது. நிலத்தை விட்டு வெளியேற்றுவது ஒரு பிரச்னை அல்ல. நிலச்சொந்தக்காரர்கள் என்ற முறையில் அதிலே இருக்கிறவர்களுக்கே அந்த நிலத்தைச் சொந்தமாக்கும் வேலையை அங்கே அரசு செய்து கொண்டு வருகிறது.

1970-ம் ஆண்டு நாடு பூராவிலும் நான் சேர்ந்து இருக்கும் கட்சி இந்த அதிகமான நிலம் வைத்து இருப்பவர்கள், ஏகபோகமாக நிலத்தை வைத்திருப்பவர்கள் ஆகியவர்களின் நிலத்தில் நாங்கள் நுழைந்து அந்த நிலத்தை

எடுத்துக்கொள்வது என்று செய்தோம். அதற்கு நில மீட்சிப் போராட்டம் என்று சொன்னோம். சிலர் அதற்கு வேறுபெயர் கூடச் சொன்னார்கள். அப்படிச் செய்கிறபோது 10,000 ஏக்கர் நிலத்தை, பிர்லாவிற்குச் சொந்தமான நிலத்தை, அரசு இலவசமாகக் கொடுத்திருந்த அந்த நிலத்தை, இயந்திர சாதனங்கள் மூலம் ஒரு பார்ம் அமைக்க வைத்திருந்த நிலத்தை, நாங்கள் நுழைவது என்று எங்கள் கட்சியின் தலைவர் டாங்கே அவர்கள் அதைச் செய்வதாக இருந்தார்கள். அவர் அதற்காக கைது செய்யப்பட்டார். அதற்குப் பின்னாலே என்ன ஏற்பட்டது என்றால், அந்த பிர்லா அங்கே என்னென்ன இயந்திரங்களை வைத்திருந்தார்களோ அதையெல்லாம் அவர்கள் எடுத்துக் கொண்டு போகும்படியான நிலைமையேற்பட்டு, அந்த 10,000 ஏக்கர் நிலத்தையும் அங்கே பயிரிட்டுக் கொண்டிருந்த விவசாயிகளுக்குப் பட்டா போட்டுக் கொடுப்பது என்ற செய்தி எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாடு பூராவிலும் உள்ள நிலம் விவசாயிகளுக்குச் சொந்தம் என்ற கொள்கையானது எந்த முறைகளில் எல்லாம் ஓரளவிற்கு அமலாகிக் கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான்.

பக்கத்திலே இருக்கக்கூடிய கேரளாவில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் விவரங்களை என்னை விட அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் நன்றாக அறிந்திருப்பார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, கம்யூனிஸ்ட் கட்சி ஏதோ ஒரு வறட்சி தத்துவத்தை வைத்துக்கொண்டு இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தது என்று சொன்னால், இந்திய நாட்டிலே இருக்கிறோம், அரசியல் சட்டம் இருக்கிறது, அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு, மாநிலத்திற்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ, அதையும் கணக்கில் கொண்டு தான் அந்தச் சட்டத்தைக்கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டம் சுப்ரீம் கோர்ட்டிலே கூட செல்லும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கேரளாவில் எங்கள் கட்சியோடு முஸ்லீம் லீக் கூட்டு சேர்ந்திருக்கிறது. அங்கே முஸ்லீம் லீக் அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே முஸ்லீம் லீக் என்ன கருத்தைச் சொல்கிறதோ அந்தக் கருத்தை இங்கேயும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அல்லது கேரளாவில் உள்ள முஸ்லீம் லீக் வேறு, தமிழ் நாட்டில் உள்ள முஸ்லீம் லீக் வேறு, அவர்கள் கொள்கை வேறு, எங்கள் கொள்கை வேறு என்று சொல்கிறார்களா?



திரு. எம். ஏ. லத்தீப்: கேரளாவில் இருக்கும் முஸ்லீம் லீகும், தமிழ் நாட்டில் இருக்கும் முஸ்லீம் லீக்கும் எல்லாம் ஒன்றுதான். அகில இந்திய ரீதியில் ஒரே முஸ்லீம் லீக் தான். கேரளாவில் அந்தப் பிரச்னையை எப்படி அணுகினார்களோ, அதே முறையில்தான் இங்கேயும் அணுகுகிறோம் என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கேயும் விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினோம். சம நீதி இருக்கவேண்டுமென்று கோரினோம். அங்கே ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று கே. டி. கே. அவர்கள் சொல்லுகிறார்கள். அங்கே ஏற்றுக்கொண்ட நியாயத்தை இங்கேயும் ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அங்கே எந்த அளவுக்கு விதி விலக்கு கொடுத்தார்களோ அதை ஏற்றுக்கொள்கிறோம் என்றால், அதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. அவர்கள் கேட்பது போல் அந்த விதி விலக்கு அங்கே கொடுக்கப்படவில்லை. அதுதான் உண்மை.

இந்த மசோதா உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று நாங்கள் கோருகிறோம். அப்படி நிறைவேற்றுகிறபோது சில தவறுகள் ஏற்படலாம். அப்படிச் சில தவறுகள் இருந்தால், அனுபவ பூர்வமாக வரும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு பிறகு திருத்தங்கள் கொண்டு வரலாம். அப்படி அந்தக் கருத்தை நிறைவேற்றி விட முடியும்.

இங்கே ஒரு ஆலோசனை கொடுத்து இருக்கிறோம். அந்த ஆலோசனை என்னவென்றால், குத்தகை விவசாயிகளுக்கு நிலம் உரிமையாக்கவேண்டுமென்ற கருத்து இருக்கவேண்டுமே தவிர, குத்தகைக்கு இருக்கும் விவசாயிகள் நிலத்தை வாங்குகிறார்கள் என்ற கருத்து இந்த மசோதாவின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். காரணம் இன்றைக்கு யாரும் பணத்தைக் கொடுத்து நிலத்தை வாங்குவதில்லை. குத்தகைக்கு வாங்குகிறார்கள். இதில் விசேஷமான சலுகை ஏதுமில்லை. குத்தகை விவசாயி என்று உரிமையைப் பெற்றிருந்த காரணத்தால் அந்த நிலத்தை சொந்தமாக்கிக்கொள்ள அரசு சட்டப்படி உரிமையை வழங்கி இருக்கிறது. அப்போது கூட, நாம் போட்ட சட்டங்கள் அமுலாக முடியாமற் போய் விடுகிறது என்பதை அமைச்சரவர்கள் கூட ஒத்துக்கொள்வார்கள்.

யார், யார் குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள் என்று அடங்கலில் பதிவு செய்யவேண்டுமென்ற சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அதை அமுல் நடத்துவதைப் பற்றி பரிசீலனை செய்யவேண்டும். பத்ரிநாத் என்று நினைக்கிறேன்—அவர் ஒரு அறிக்கை விட்டிருந்தார். "இவைகள் எல்லாம் சரிவர

செய்யப்படாமலிருக்கிறது" என்று. அதிகாரிகளும் ஏற்றுக்கொள்வார்கள். எத்தனை குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள், எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது என்று பார்த்தால், கணக்கில் இருப்பதற்கும், நடைமுறைக்கும் முரண்பாடு இருக்கும்.

நான் யாரையும் குறை கூற விரும்பவில்லை. இன்றைக்கும் கிராமங்களிலே நிலச்சுவான்தார்கள்தான் செல்வாக்கு உள்ளவர்கள். சில இடங்களிலே விவசாயிகளின் இயக்கம் வலுவுள்ளதாக இருக்கலாம். அந்த இடங்களில் விவசாயி தானாகச் சென்று அடங்கலில் பதிவு செய்துகொள்வான், இத்தனை ஏக்கர் நிலம், இத்தனை ஆண்டுகளாக சாகுபடி செய்கிறேன் என்று. இந்த மாதிரி எல்லா இடங்களிலும் பதிவு செய்ய முடியவில்லை.

ஆனால் சட்டத்தில் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம், அப்படி பதிவு செய்துகொள்ள விவசாயி பயந்தாலும், பக்கத்திலே உள்ள விவசாயியை வைத்துக்கொண்டு பதிவு செய்யலாம் என்று சொல்லி இருக்கிறோம். டெபுடி தாசில்தார்கள் தாங்களாகவே "He can himself record that so-and-so isa tenant . . . . . suo moto . . . ." பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் இன்றைக்கு எத்தனை பேர்கள் இப்படிச் செய்திருக்கிறார்கள்? யாரும் அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை—விவரங்களை எடுத்துப் பார்த்தால் தெரியும்.

ஆனால், சட்டத்தில் இருக்கிறது. டெபுடி தாசில்தார் விவசாயி பயந்து கொண்டிருக்கிறான் என்ற காரணத்தால், அவராகவே பதிவு செய்யலாம் என்று. அப்படி உண்மையிலே நடைபெற்று விட்டால், சமுதாயத்தில், கீழே உள்ள நிர்வாகத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டுவிட்டது என்று அர்த்தம். அப்படி நடப்பது என்பது முடியாது, நடக்க முடியவில்லை. ஏனென்றால், அந்த டெபுடி தாசில்தாரும் அங்கேயே வாழவேண்டிய நிலை தானே இருக்கிறது.

இதில் என்னுடைய ஆலோசனை என்னவென்றால், இந்த இடத்தில், கமிட்டிகள் நிர்வகிக்கப்பட வேண்டும். அவைகள் பரிசீலிக்க வேண்டும். இது எங்கள் கட்சியின் கருத்து மட்டுமல்ல, ஆளுங்கட்சியிலுள்ளவர்களும் இப்படி கருதுகிறார்கள். போலீஸ் மானியம் விவாதிக்கப்பட்டபோது சரியான அளவுக்கு கேஸ்களை எடுத்து நடத்துவதில்லை, ஆகவே, கமிட்டி போடவேண்டுமென்று சொன்னார்கள். இது எங்கள் கட்சியின் கருத்து மட்டுமல்ல. எங்கள் கருத்தெல்லாம், விவசாயிக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும்—சட்டம் நல்ல முறையில் அமுலாக்கப்பட வேண்டுமென்பதுதான்.

இந்தச் சட்டத்தின் மூலமாக உடனடியாக, மடம், ஆலயம், ஆண்டவனின் நிலங்கள் எல்லாம் வந்துவிடுகிறது என்பது உண்மையாக இருந்தாலும் கூட,



இதிலே ஒரு பெரிய விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். அந்த விதிவிலக்கு ரத்து செய்யப்படுகிறது. சீலிங் என்று வைக்கின்ற நேரத்தில், எந்தமாதிரியான சீலிங் என்று பார்க்கும்போது சீலிங் ஆக்டில் விதிவிலக்கு இல்லாத முறையில் கொண்டுவரவேண்டுமென்ற ஏற்பாடு இருக்க வேண்டும்.

இப்படி வருகின்றபோது சிறு நிலச்சுவான்தார்கள்—அல்லது நகரத்தில் இருக்கின்ற ஒரு உத்தியோகஸ்தர்—டாக்டர் போன்றவர்கள்—விதவைகள்—இவர்களுக்கு விதிவிலக்கு இருக்கலாம். அவர்களுக்கு உண்மையில் விதிவிலக்கு—பாதுகாப்பு கொடுக்க வேண்டும். காம்பன்சேஷனை உடனடியாக ரொக்கமாகவே கொடுப்பதற்கு எங்களைப் பொறுத்தவரையிலும் ஆட்சேபணை இல்லை. கேரளாவில் நிலச்சுவான்தார்களைப் பொறுத்தவரையிலும் நஷ்டஈடு கொடுக்கிறோம். அதற்கு ஒரு முறை வைத்திருக்கிறோம். அந்த முறையில் நடவடிக்கை எடுத்தால், அமலாக்குவதில் சிரமங்கள் குறையும் என்று சொல்லிக்கொண்டு இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், இது ஒரு நல்ல நோக்கத்தைக் கொண்டதாக இருக்கிறது—இருந்தாலும், ஒருசில திருத்தங்களைக் கொடுத்திருக்கின்றோம்—அவற்றைக் கொடுத்த உறுப்பினர்கள் அதைப்பற்றிப் பேசினார்கள்—அவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்கிறேன். விதவைகள், பயிரிடுவதற்கு இயலாதவர்கள் என்று சிலரைச் சொல்லி, சட்டத்தில் விதிவிலக்கு கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கம்யூனிஸ்டு கட்சி தரப்பில் சொன்னார்கள். காம்பன்சேஷன் இவர்களுக்குத் தரும்போது, மார்கெட் வேல்யூ கொடுக்க வேண்டுமா, அல்லது ஃபேர் ரெண்ட் பேசிசில் கொடுக்க வேண்டுமா? இந்த இரண்டில் எதை [illegible] கொள்ளலாம் என்பதில் உறுப்பினருடைய கருத்தை அறிய [illegible]

**திரு. மணலி சி. கந்தசாமி:** இரண்டையும் [illegible]

(சிரிப்பொலி)

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக, மசோதாவில் [illegible] பார்க்கிறபோது நிலச்சுவான்தார்- குத்தகைதாரர் என்ற உறவு [illegible] முற்றுப்புள்ளி வைக்கும்படியான நிலச் சீர்திருத்தத்தின் ஒரு ஆரம்பம் என்றுதான் கருதுகிறேன். குத்தகைதாரர்கள் கஷ்டப் படுகிறார்கள், அவர்களுக்கு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற முறையில், இது ஒரு நல்ல ஆரம்பம் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நான் இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஒருசில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

இந்த மசோதாவில் அமைச்சரவர்கள் சில விவரங்களை எல்லாம் இந்த மன்றத்திற்குத் தந்திருக்கின்றார்கள். அதிலே, ஒட்டு மொத்தமாக, 3,88,483 டெனன்ட்ஸ் இருப்பதாகவும், இதிலே இருக்கின்ற நிலப்பரப்பு 5,89,505 ஏக்கர் என்றும் விவரங்களையெல்லாம் எடுத்துக் கூறினார்கள். இதிலே கொஞ்சம் மாற்றங்கள் இருக்கலாம். இந்த 5,90,264 என்ற மாறுதலையும் தெரிவித்தார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற கருத்தினை ஒத்துக்கொள்கிறேன். இந்தக் கருத்தை எப்படி நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதில், புரட்சி மார்க்கமா அல்லது வளர்ச்சி மார்க்கமா என்ற கருத்துக்குள் நான் போக விரும்பவில்லை. இது ஒரு அடிப்படை உரிமையாக இருந்து வருகின்றது. 'ரைட் டு பிராபர்டி' என்பதை எல்லாக் கட்சிகளும் ஒத்துக்கொண்டிருக்கின்றன.

பொதுவுடைமை சித்தாந்தத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் அனைவரும் இந்தக் கருத்தை வலியுறுத்துவார்கள். உழுபவனுக்கே நிலம் அதிகமாக இருக்க வேண்டுமென்ற கருத்தினை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். நிச்சயமாகக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் இந்தச் சட்டத்திலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதால் இதிலே ஒருசில ஆலோசனைகளைக் கூறவேண்டுமென்று கருதுகின்றேன்.

இந்த நிலத்தைப் பொறுத்தவரையில் குத்தகைதாரர்களுக்கு முழு உரிமையையும் கொடுப்பதற்கு எல்லா வழிவகைகளையும் செய்திருக்கின்றார்கள். ஆனால், சிறு நில உடைமையாளர்களுக்கு என்ன பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதைச் சிந்தித்துப் பார்த்தால் உசிதமாக இருக்குமென்று கருதுகின்றேன். எப்படி நில உச்சவரம்புச் சட்டத்தில் நிலங்களெல்லாம் அரசாங்கத்தின் கைக்கு 'வெஸ்ட்' செய்யப்பட வேண்டுமென்று விதியைச் செய்தோமோ, அதேமாதிரி இதிலும் 'வெஸ்ட்' செய்யவேண்டுமென்ற கருத்தினை என்னுடைய ஆலோசனையாக வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நில உடைமையாளர்களுக்கும் குத்தகைதாரர்களுக்குமிடையே வர்க்கப் போராட்டம் இந்த நாட்டில் தேவையில்லை என்ற காரணத்தால் இந்தக் கருத்தினைக் கூற விரும்புகிறேன். அரசு எல்லா நிலங்களையும் எடுப்பதால், இண்டர்மீடியரிஸ் என்ற ஒரு நிலை ஏற்படும். எனவே, எல்லா உரிமைகளையும் ரத்து செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன்.



பெரிய நிலவுடைமையாளர்களுக்கு அரசாங்கம் எவ்வளவோ சலுகைகளைச் செய்திருக்கிறது என்று நினைக்கிறபோது, சிறிய உடைமையாளர்களுக்கு ஏன் இந்தச் சலுகைகளைக் கொடுக்கக் கூடாது? அரசாங்கம் நடுத்தர வர்க்கத்தினர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் ஒரே முறையில் நில உச்சவரம்பு நீதியை அமல் நடத்தவேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்துவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

மறுமுறையும் அரசாங்கம் பரிசீலித்து சில சுமுகமான முடிவுகளைச் செய்து, சமுதாயத்தில் புரட்சி இல்லாமலேயே வளர்ச்சி மார்க்கமாகவே மறுமலர்ச்சி ஏற்படுத்துவற்காக இந்தக் கருத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தைப்பற்றி, இது செல்லுமா, செல்லாதா, சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனால் உடனே அடிபட்டுப் போகும், என்றெல்லாம் ஐயப்பாடுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தமாதிரியான ஐயப்பாட்டிற்கு எந்தவிதமான இடமும் இல்லை என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இதில் ஒருமித்த கருத்து இருக்கிறது என்று சொல்ல முடியாது. சோஷலிசத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் எல்லாம் இந்த மாதிரியான சீர்திருத்தங்கள் எல்லாம் மிகமிகத் தேவை என்று உணர்ந்து கொண்டிருப்பார்கள். அதனால் அக்ரேரியன் ரிஃபார்ம்ஸ் என்ற ஒரு காரணத்தால், நிச்சயமாக இதற்குச் சட்டப் பாதுகாப்பு இருக்கும் என்றுதான் நான் கூற விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இப்போது டைரக்டிவ் பிரின்சிப்பிள்ஸ் வைத்திருப்பதால் இன்று சொத்துக்கள் எல்லாம் ஒரு சிலரிடத்திலே குவியலாக இருக்கக் கூடாது, இகாலிடேரியன் சொசைட்டி இருக்கவேண்டுமென்று நாம் வாதாடுகிறோம் என்றால் எதிலும் ஏற்றத் தாழ்வற்ற நிலை இருக்கவேண்டும்; ஒரே சீரான ஏற்றத் தாழ்வற்ற பாரத சமுதாயமாக உருவாக்கப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே சில எக்சம்ஷன்கள் கொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில் நேற்றையதினம் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் ஒருசில ஆலோசனைகளைத் தெரிவித்தேன். அதைத்தான் மீண்டும் கூற விரும்புகிறேன். 4 ஏக்கருக்குக் குறைவாக நிலம் இருக்கின்றவர்களுக்கு எக்சம்ஷன் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். 4 ஏக்கருக்குக் குறைந்தவர்களுக்கு என்று சொல்வதற்கு ஒரு காரணத்தை வைத்திருக்கிறேன். 3 ஏக்கர் இருந்தால் 1½

ஏக்கர் ரிசூம் பண்ணலாம் என்று இருக்கிறது. 4 ஏக்கர் என்றால் கொஞ்சம் கூடுதல் இருக்கும். அந்த 4 ஏக்கர் என்று சொல்லும்போது அவர்கள் பெரிய செல்வச் சீமான்கள், செல்வந்தர்கள் என்று சொல்ல முடியாது. ஆகையால் அதற்கு எக்சம்ஷன் கொடுக்கவேண்டும். இந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்று கருதுகிறேன். ரெவின்யூ அமைச்சரவர்கள் இதிலே அதிக மாக சிந்தனை வைத்திருப்பதால் அவர்கள் நல்ல பல ஆலோசனைகளை, பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அதற்கு எல்லாம் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறிய நிலச்சுவான்தார்களுக்கு பாது காப்புக் கொடுக்கவேண்டுமென்பது தங்கள் கருத்து. 4 ஏக்கர் நிலம் ஒரு சிறிய நிலச்சுவான்தாருக்கு இருந்தால், பயிரிடும் குத்தகைதாரருக்கு 2 ஏக்கர், சொந்தக்காரருக்கு 2 ஏக்கர் சொந்தம் என்று இந்தச் சட்டத்தில் வகை செய்யப் பட்டிருக்கிறது. அந்த 2 ஏக்கரில் நிலச் சொந்தக்காரர் பயிர் செய்துகொள்ள லாம். குத்தகைதாரர் அவருக்குக் கொடுக்கவேண்டிய குத்தகையைக் கொடுத்துக் கொண்டிருப்பார். இதிலே எக்சம்ஷன் என்று கொடுத்தால் இரண்டு பேருக்கும் இந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் என்னுடைய சட்ட அறிவுக்கு எட்டியவரையில், என்னுடைய சிற்றறிவுக்கு ஏற்றவாறு அணுகினேன். ஆகை யால் இந்தத் திருத்தத்தினால் எந்தவிதமான கஷ்டமும் இருக்காது என்று கருதுகிறேன். ஒருபுறம் எக்சம்ஷன், மறுபுறம் மற்ற சலுகைகள் வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சமுதாயத்திலே இரண்டு பேருக்கும் பாதுகாப்புத் தேவை. நிலத்தில் இருக்கின்ற குத்தகைதாரருக்கு நிச்சயமாகப் பாதுகாப்பு வேண்டும். ஏனென்றால் சமுதாயத்தில் இருக்கின்ற கோடிக்கணக்கான மக்களுக்கு இது பொருத்தமாக இருக்கின்றது. அந்த விதியை ஏற்றுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்தமாதிரியான சச்சரவுகள் நிலத்தைப் பெறுவதில் ஏற்படக்கூடாது என்ற முறையில்தான் இந்தக் கருத்தை நான் கூறுகிறேன்.

அடுத்தபடியாக ரிசம்ஷன் பற்றி ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். Resumption of lands below 4 acres should be allowed as a right. என்ற கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒருவனுக்கு இருக்கின்ற மற்ற வருமானத்தையும் இதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில் விதிமுறைகளை



திருத்தி அமைப்பது பொருத்தமாக இருக்கும். வேறு வருமானம் வருவதாக இருந்தால் நிச்சயமாக எக்சம்ஷன் கொடுக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறு நிலச்சுவான்தார் என்பது மட்டு மல்ல; அவர் மத்திய அரசுக்கு வருமான வரி கட்டாதவராக இருக்க வேண்டும்; விவசாய வருமான வரி கட்டாதவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் எக்சம்ஷன் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் அதைப் பார்த்தேன். அதைவிடக் கூடுதலாகக் கொடுக்கமுடியுமா என்பதற்கு என்னுடைய ஆலோசனைகளைக் கூறுகிறேன். விதவைகள், பென்ஷனர்ஸ், உடல் ஊனமுற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கு எக்சம்ஷன் கொடுக்கவேண்டும் என்று நேற்று சொல்லப்பட்டது. நானும் அந்தக் கருத்தை வலியுறுத்துகிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான விஷயம். மிலிட்டரியில் இருப்பவர்களுக்கு 25-வது பிரிவு இருக்கிறது. அதிலே என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால்,

"Nothing in this Act shall apply to any person who is a member of the Armed Forces so long as that person continues to be a member of the Armed forces"

என்று இருக்கிறது. அது சரியாகத் தெரியவில்லை. மிலிட்டரியில் இருப்பவர்களுக்கு எக்சம்ஷன் கொடுக்கவேண்டும்; இல்லை என்று நான் சொல்லவில்லை. மிலிட்டரியில் பெரிய உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள், சாதாரண சிப்பாய்களும் இருக்கிறார்கள். இரண்டு சாராருக்கும் ஒரேமாதிரி எக்சம்ஷன் கொடுத்தால் பாதகம் ஏற்படாதா? இந்த ஷரத்து மற்ற ஷரத்துக்களுக்குப் பொருத்தமாக இருக்குமா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் பெரிய உத்தியோகஸ்தர்களாக இருக்கின்றவர்களுக்கு பென்ஷனும் அதிகமாக வரும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தப் பிரிவின் நோக்கமே அவர்கள் இராணுவத்தில் பணியாற்றுகிறார்கள் என்பதுதான். இராணுவத்தில் பணியாற்றக்கூடியவர்கள் நேரடியாகப் பயிர் செய்கிற வாய்ப்பு இல்லை. ஆகவே, அவர்கள் அங்கே பணிபுரிகின்ற வரையில் 'ரைட் டு பர்ச்சேஸ் பை டெனன்ட்' என்பது முடியாது. நீங்கள் சொல்வதுபோல பென்ஷன் வாங்கக் கூடியவர்கள் என்றால் அவர்கள் பணி புரிபவர்களாக இருக்கமாட்டார்கள்; வீட்டுக்கு வந்து விடுவார்கள். அப்போது அவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: I thank the Hon. Minister for his clarification.

இன்னொரு விஷயம். இந்தச் சட்டத்தில் 26-வது ஷரத்து வேறு சில சட்டங்களை 'ஓவர்ரைட்' செய்யும் என்று இருக்கிறது. சாதாரணமாக இந்தமாதிரியான சட்டங்கள் எல்லாம் சொத்து மாற்றங்கள் செய்யும்போது, அரசியல் அமைப்பு 19-லே இருக்கிற பிரிவாக இருந்தாலும் சரி, ஓவர்ரைட் செய்யும் என்பதில் இரண்டு அபிப்பிராயம் இருக்க முடியாது. இதிலே ட்ரஸ்டுகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

'சாரிட்டபிள் பர்ப்பஸ்' என்றிருந்தால் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் இருக்கிறது. அதற்கு மிஞ்சியுள்ள நிலம் இருந்தால் அதை வாங்க மார்க்கெட் வால்யூ கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாரிட்டிசைப் பாதுகாக்க வேண்டுமென்ற முறையில் சாரிட்டபிள், ரிலிஜியஸ் ட்ரஸ்டுகள் நிறுவப்படுகின்றன.

கோவில் பூஜைகள், சர்ச் சம்பந்தப்பட்ட காரியங்கள், மசூதி தொழுகைகள் எல்லாம் ஒழுங்காக நடைபெறுவதற்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவை ஒழுங்காக நடைபெறவேண்டுமென்றால் அவைகளுக்கு எக்சம்ஷன் மிக மிகத் தேவை என்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய நிலங்களை எடுத்துக்கொள்ளும்போது அவைகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக் கூடாது. ஆகவே, அந்த நிலங்களை எடுத்துக்கொள்வதாக இருந்தால், அவற்றிற்கு 'ஃபுல் காம்பன்சேஷன்' கொடுக்கவேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தில்கூட அதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக இந்த சிறு நிலச்சுவாந்தார்களைப் பொறுத்தவரையில் எனக்கு பல மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகள் பூராவையும் நான் படிக்க வேண்டுமென்று விரும்பவில்லை. இந்தச் சட்டம் நல்லமுறையில் அமையவேண்டுமென்ற முறையில் என்னுடைய கருத்துக்களை மட்டும் கூறுகிறேன். ஒரு மனுவிலே Robbing Paul and paying Peter போலாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னொன்றில் Flood gate of litigation போல் அமையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொன்றில் Look before you leap என்று குறிப்பிட்டுள்ளார். இப்படி தாராளமாகக் கருத்துக்களை வாரி வாரி வழங்கியிருக்கிறார்கள். அந்த விவரங்களை எல்லாம் நான் இங்கே கொடுக்க வேண்டுமென்று விரும்பவில்லை. ஒரு பென்ஷனர் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார். அவருக்குக் கொஞ்ச நிலம்தான் இருக்கிறது. அதற்கு எக்சம்ஷன் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். அவருடைய விலாசம், நாராயணசாமி, சன்னதி தெரு, வேதாரணியம், தஞ்சை மாவட்டம் என்று மனுவிலே



குறிப்பிட்டிருக்கிறார். வேறு சில ஆலோசனைகளையும் கூறியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் அரசாங்கத் தரப்பிலிருந்து திருத்தம் வருமென்று எதிர்பார்க்கிறேன். Minors, widows and disabled persons அவர்களுக்கெல்லாம் விதிவிலக்கு அளிக்கின்ற வகையில் இந்த மசோதா அமையவேண்டுமென்று தந்தி கொடுத்திருக்கிறார்கள். தந்தி கொடுத்தவர் திரு. சிவானந்தம் என்பவர்; திருச்சியிலிருந்து கொடுத்திருக்கிறார்.

இந்தமாதிரியான கருத்துக்களை எல்லாம் சொல்ல வேண்டுமென்று அவர்கள் மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள்; தந்தி கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் இந்தக் கருத்துக்களை எல்லாம் கவனத்தில் கொண்டு இந்தச் சட்டத்தை ஒருவருக்கும் மனக் கசப்போ, குரோதமோ ஏற்படாத வகையில் நிறைவேற்ற வேண்டும். இன்னும் இந்த நில உடைமையாளர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஒரு கிளர்ச்சியும் போராட்டமும் ஏற்படாத வகையில் இந்த மசோதா அமைய வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசாங்கம் இதைப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதிலே எல்லாக் கட்சியினரும் நல்ல நோக்கத்தோடு தங்களுடைய கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். குத்தகைதாரருக்கு அந்த நிலத்தை வாங்குகின்ற உரிமையை வழங்குகின்ற இந்தச் சட்டம் ஒரு நல்ல சட்டம் என்பதை ஒருவரும் மறுக்கவில்லை.

ஆனால் இங்கு பேசிய சிலர் இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பலாம்; பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி பரிசீலிக்கலாம் என்று சொன்னார்களே தவிர, குத்தகைதாரருக்கு நிலத்தை வாங்குகின்ற உரிமையை வழங்குகின்ற இந்தச் சட்டம் தவறானது என்று ஒரு கட்சியினர்கூடச் சொல்லவில்லை; ஒரு அங்கத்தினரும் பேசவில்லை என்று பார்க்கும்போது இந்தச் சட்டத்தினுடைய பெருமை எல்லோருக்கும் தெரியும்.

நிலச் சீர்திருத்தங்களிலே பழைய பாதுகாப்புச் சட்டத்தில் துவக்கி இன்றையதினம் இந்தப் பண்ணையாளர்களுக்கு இந்த நிலத்தை வாங்குகிற உரிமை வழங்குகிற இந்தக் காலம் வரையில் பல்வேறு திருத்தச் சட்டங்கள் இந்த நாட்டில் வந்திருக்கின்றன. வேறு மாநிலங்களில் வெவ்வேறு விதமான சட்டங்கள் வந்திருக்கக் கூடும்.

இங்கு பேசிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவரவர்கள் பிகாரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள், கேரளாவைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த மாநிலங்களில்

எப்படிப்பட்ட சட்டங்களை உருவாக்கினார்கள் என்று பார்க்கும்போது தமிழ் நாட்டில் உருவாக்கி இருக்கிற சட்டத்தோடு கூட ஒப்பிட்டுப் பார்ப்பதுச் சரியாக இருக்க முடியாது. அப்படி ஒப்பிடுகிற நேரத்தில் சில நேரங்களில் அரசு தரப்பில் இருக்கிற எங்களுக்கு சில சங்கடங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

இன்னொரு மாநிலத்தில் நிறைவேறிய சட்டத்தில் குறை சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலையில் இருக்கிறோம். வேறு ஒரு மாநிலத்தில் நிறைவேறிய சட்டத்தைக் குறை சொல்கிற மனப் பான்மை எங்களுக்கு இல்லை. தமிழகத்தைப் பொறுத்த மட்டில் ஆளுகிற கட்சியாக வந்திருக்கிற நாங்கள் எங்கள் கொள்கைக்கு ஏற்ப இவைகளை நிறை வேற்றுவது என்ற முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். சென்ற ஆண்டு குத்தகைதாரர் பதிவேட்டுச் சட்டம் வந்தபோதே முதலமைச்சர் அவர்கள் இந்த எண்ணத்தை மனதில் வைத்துத்தான் குத்தகைதாரர் யார், யார் என்று தீர்மானித்த பிறகு இதை வெளியே சொல்லலாம் என்று கருதி இந்தப் பதிவேட்டுச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதை நாம் நிறை வேற்றினோம்.

அதிலே மேலும் சில மாறுதல்கள் வேண்டுமென்று திருத்தங்கள் கொண்டு வந்தோம். குத்தகைதாரர் பதிவு செய்துகொள்வதற்கு எளிய முறையை ஏற் படுத்தினோம். அப்படியிருந்தும் கூட முழுமையாக குத்தகைதாரர்கள் பதிவு செய்து கொண்டுவிட்டார்கள் என்று அரசு தரப்பிலிருந்து வாதிட நான் தயா ராக இல்லை. குத்தகைதாரர் விடப்பட்டிருக்கலாம். அப்படி விடப்பட்டிருந் தால் "ஆவணச் சட்டத்தின்" கீழ் பதிவு செய்துகொள்ளச் செய்வதற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள், அந்தத் தொகுதியில் இருக்கிறவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத்திலே சென்று பதிவு செய்கிற டெபுடி தாசில்தார் அந்த அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் —எங்காவது தவறு நடந்திருக்கலாம், தவறு செய்ய மாட்டார்கள் என்ற நம் பிக்கை இருக்கிறது—அப்படித் தவறு செய்திருந்தால் அங்கத்தினர்கள், கவனத்திற்குக் கொண்டுவரும்போது திருத்திக்கொள்ளலாம். அந்த அதிகாரி மேற்கொண்டு தவறு செய்வாரேயானால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்குண்டான பரிகாரம் தேடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின் காரணமாக என்னென்ன சிக்கல்கள் எழும் என்று விவாதிக்கப்பட்டது. விவாதித்தவர்கள் எல்லாம் சொன்ன சிக்கல்கள், "இது செல்லுபடி ஆகுமா, நீதிமன்றத்திற்குச் சென்றால் நிற்குமா?" என்று கேட் டார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டம் செல்லுபடியாகுமா என்று கேட்கப்



பட்டபோது அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. கேரளாவில் நிறைவேற்றப்பட்ட 1970-ம் ஆண்டு சீர்திருத்தச் சட்டம் சுப்ரீம் கோர்ட்டில் செல்லாது என்று தீர்மானித்ததால் அதற்குக்கூட அரசியல் சட்டத்தைத் திருத்தி அந்த முழு சட்டத்திற்குமே பாதுகாப்பினை இந்திய அரசாங்கம் தந்திருக்கிறது. இந்த மன்றம் நிறைவேற்றுகின்ற சட்டத்திற்கு நிச்சயமாகச் சட்டத்தில் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நிறைவேற்றுகிறோம். ஒருவேளை தோற்கடிக்கப்படுமானால் கேரள அரசாங்கம் எந்த முறையைக் கையாண்டதோ, அதே முறையைக் கையாண்டு அரசியல் சட்டத்தைக் கொண்டு பாதுகாப்பு தரத் தயாராக இருக்கிறோம். இந்திய அரசாங்கம் அப்படிப் பாதுகாப்பு தருவதற்குத் தயாராக இருப்பதாக நம்பு கிறேன். எனவே, சட்டச் சிக்கல் ஏதுமில்லை என்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது சொன்னார்கள், ஃபிராக் மெண் டேஷன் போல் நிலத்தை உடைத்துக்கொண்டே போகிறோம். கன்சாலிடே ஷனுக்கான மனப்பான்மை வளரவில்லை, ஃபிராக்மெண்டேஷன் உணவு உற்பத் தியைப் பாதிக்குமென்ற கொள்கையைச் சொன்னார்கள். அது ஒரு கொள்கை. உழுகிறவனுக்கு நிலம் சொந்தமாக இருந்தால் குத்தகை நிலத்தில் அதிகமாகப் பாடுபட்டு உழைக்கவேண்டும் என்ற எண்ணம் வரும். இல்லாவிட்டால் 40 பாகம் தானே என்ற மனப்பான்மையோடு உழுவான். அதனால் உற்பத்தி குறையும். ஆனால் நிலம் சொந்தமாகிறபோது சிறு பிராக்மெண்டேஷன்களால் நிலத்தின் உற்பத்தியைத் தடுக்க முடியாது. உணவு உற்பத்தி பாதிக்கப்படு மென்று சொன்னார்கள். ஆனால் நிலச் சீர்திருத்தம் செய்வதற்கு முன்னால் எந்த அளவிற்கு உணவு உற்பத்தி செய்தோமோ அதைவிட ஏறக்குறைய இரண்டு பங்கு அதிக உணவு உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு வாய்ப்பு இன்றைக்கு இருக்கிறது. நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்ட பிறகு இந்த வளர்ச்சி இருக்கிறது. நிலம் சிறிதாக ஆகிவிடுவதன்மூலம் உற்பத்தி குறையாது என்று இதன் மூலம் தெரிகிறது. நம் கண் எதிரிலே இது தெரி கிறது. ஆகவே, அந்தக் கொள்கை சரியாக இருக்க முடியாது.

இன்-புட்—உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் நான் தெரிவித்துக் கொள்வேன், இதனால் உணவு உற்பத்திக்கு அதிக ஆர்வம் கொடுக்கிறோம். உற்பத்தி பெருகும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். டாக்டர் ஹாண்டே சொன்ன கொள்கை அவருடைய கட்சியின் கொள்கையாக இருக்கலாம். அல்லது அவருடைய கொள்கையாக இருக்கலாம். ஆனால் நமக்கு இருக்கிற கொள்கை, சிறு சிறு நிலங்களாவதால் உணவு உற்பத்தி பாதிக்கப்படாது.

சிறு விவசாயிகள் தலையில் கை வைக்கப்படுகிறது என்று டாக்டர் ஹாண்டே சொன்னார்கள். நான் தெரிவித்துக்கொள்வது, இதுவரை நிலவுடைமைக்காரர்களுக்குத் தமிழ்நாட்டில் இல்லாத உரிமையை இந்தச் சட்டத்தின்மூலம் வழங்குகிறோம். இதுவரை நில உடைமைக்காரர்கள் குத்தகைதாரர் குத்தகை கொடுக்காவிட்டால், குத்தகைதாரரை நிலத்தை விட்டு வெளியேற்றலாமே தவிர அந்த நிலத்தைச் சொந்தமாகப் பயிரிடுவதற்கோ, வேறு குத்தகைதாரனுக்கு மாற்றுவதற்கோ, வேறு காரியங்களைச் செய்யவோ முடியாதபடி சட்டம் இருந்தது. இப்போது வந்திருக்கிற இந்தச் சட்டத்தில் நாம் உழுகிறவர்களுக்கு ஒரு சலுகை கொடுக்கிற அதே நேரத்தில் நிலச் சொந்தக்காரர்களுக்கும் சலுகை கொடுத்து சட்டம் செய்கிறோம். இதில் இருக்கிற உரிமை, நிலச் சொந்தக்காரன்—அவன் வருமான வரி கட்டாதவனாக இருக்க வேண்டும்—அல்லது தமிழக அரசுக்கு வேளாண்மை வருமான வரி கட்டாதவனாக இருக்கவேண்டும்—அப்படி இருப்பானானால் அவன் குத்தகைக்கு விட்டிருக்கிற நிலத்தில் பாதியைச் சொந்தப் பயிர் வைத்துக்கொள்ள எடுத்துக் கொள்ளலாம் என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். மீதியை அந்தக் குத்தகைதாரனுக்கு விற்றுவிட வேண்டும். விற்கிற விலையை ஆதரைஸ்ட் ஆபீசர்கள் நிர்ணயிப்பார்கள்.

நிலத்தை வாங்கவேண்டுமென்று எண்ணம் கொண்டிருக்கிற குத்தகைதாரர்கள் ஆதரைஸ்ட் ஆபீசர்களுக்கு மனுப் போடவேண்டும். அதன் பிறகு ஆதரைஸ்டு ஆபீசர்கள் அந்த நிலத்தினுடைய ஃபேர் ரெண்டை நிர்ணயித்து அதை 12-ஆல் பெருக்கி நிலத்தினுடைய விலையை நிர்ணயிப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதிலே சில சந்தேகங்களை எழுப்பியிருக்கிறார்கள். இதை ஏன் ஆதரைஸ்ட் ஆபீசர்களிடத்தில் கொடுக்க வேண்டும்? அவர்கள் ஒழுங்காகச் செய்வார்களா என்று கேட்கிறார்கள். தனியாக நியமிக்கப்படும் அதிகாரிகள் நிர்ணயிப்பதுதான் நியாயம் என்று கருதுகிறோம்.

கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் ஒரு கருத்து சொல்லப்பட்டது. கிராமப்புறங்களில் எல்லாக் கட்சியினரையும் கொண்ட கமிட்டிகளை அமைத்து அந்தக் கமிட்டி பார்த்து நிலத்திற்கு விலையை நிர்ணயிப்பதோ, குத்தகைதாரன் பணம் கட்டுவதோ, கட்டவில்லை என்றால் நடவடிக்கை எடுப்பதோ, இவைகளை அந்தக் குழு பார்த்துக்கொள்ளட்டும் என்ற பொருள்படத் திருத்தம்கூடக் கொடுத்திருக்கிறார்கள். அதை வலியுறுத்தியும் பேசினார்கள். நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வேன் அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனென்றால், கிராமப்புறங்களில் இருக்கிற அரசியல் சூழ்நிலைகள் நம் அத்தனை பேருக்கும்



தெரியும். அப்படித் தெரிகிற காரணத்தால், அரசியல் கட்சிகளுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி—ஒரு கிராமத்தில் ஒரு அரசியல் கட்சி செல்வாக்குடன் இருக்கும்—இன்னொரு கிராமத்தில் இன்னொரு அரசியல் கட்சி செல்வாக்குடன் இருக்கும்—ஆக, அரசியல் கட்சிகள் தங்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி, அங்கே இருக்கிற குத்தகைதாரர்களுக்கோ, அல்லது நிலவுடைமைக்காரர்களுக்கோ பாதகம் விளைவிக்கும்படி நடந்து கொள்ளக் கூடாது. எல்லோருக்கும் நியாயம் வேண்டுமென்று கருதி அரசுத் தரப்பில் தனி அதிகாரி வந்து செய்யட்டும் என்று செய்திருக்கிறோம்.

அந்த அதிகாரி தவறு செய்தால் விசாரிக்க நமக்கு உரிமை இருக்கிறது. தவறு செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை எல்லோருக்கும் இருக்கிறது. எதிர்க்கட்சியிலிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. எனவே, இதிலே யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. இன்னொரு மாநிலத்தில் இப்படிக் கிராமக் கமிட்டி போடவில்லையா என்று கேட்கலாம். போட்டிருக்கலாம்—நான் தவறு என்று சொல்லவில்லை. இந்த அரசைப் பொறுத்தமட்டில் எங்களுக்கு இதிலே நம்பிக்கை இல்லை. தனி அதிகாரியைப் போட்டு அதை நாம் நிறைவேற்றுகிறபோது தவறு நடக்காமல் பார்த்துக் கொண்டால் போதும் என்று கருதி, கிராமக் கமிட்டிப் பிரச்சினையை வலியுறுத்தத் தேவையில்லை என்று பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பேசிய நண்பர்கள் வேறுசில கருத்துக்களைச் சொன்னார்கள். சிறு நிலக்காரர்கள், ஐந்து ஏக்கருக்குக் கீழே இருக்கிறவர்கள், நான்கு ஏக்கருக்குக் கீழே இருக்கிறவர்களுக்கு அப்படியே 'ஸ்டேடஸ் கோ' இருக்க வேண்டுமென்றார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் கூடச் சொன்னார்கள். இந்தக் கருத்து நல்ல கருத்துதான். இருந்தாலும் இதைப் பற்றித் தீவிரமாக யோசித்தோம். அரசுத் தரப்பில் இரண்டு திருத்தங்கள் கொடுப்பதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, நான்கு ஏக்கரை 2 ஏக்கராகப் பிரிப்பதால் அல்லது ஒரு ஏக்கரை 50 செண்டாகப் பிரிப்பதால் அதனால் ஒரு பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதில்லை. அப்படி ஏற்படக் கூடியவை சொற்பமாக இருக்கும். அப்படிச் சொற்பமான ஜட்டத்திற்காக இவ்வளவு பெரிய சட்டத்தில் விதிவிலக்கு வைக்க வேண்டுமா என்பதுபற்றி ஆராய்ந்தோம். எதிர்க்கட்சித் தலைவர்களோடு பேசியதற்குப் பிறகு நேற்று முதல்வர் அவர்களோடு கலந்து பேசியபிறகு இப்போதைக்குத் தேவையில்லை என்று முடிவு செய்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1973 ஏப்ரல் 3

நண்பர் அழகிரிசாமி அவர்கள் பேசியபோது, குன்னியூரில் பதிவு செய்யவில்லை என்றார்கள். பதிவு செய்யப்படாததைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன். மீண்டும் பதிவு செய்வதற்கு முடியும். ரிகார்டுகளை முடித்துவிடவில்லை. அது முடிவானதல்ல. எப்போது வேண்டுமானாலும் பதிவு செய்துகொள்ளலாம். அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் தனியாகச் சந்தித்து இருக்கிற குறைபாடுகளை எழுதிக்கொடுத்தால் நிச்சயமாகக் கூறுகிறேன், அரசு நடவடிக்கை எடுத்து, அந்த ஏழை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் கோவில்கள், மத ஸ்தாபனங்கள், அற நிலையங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு விடும் என்று வாதிக்கப்பட்டது. முஸ்லீம் லீகைச் சேர்ந்த திரு. அப்துல் ஜப்பார் அவர்கள் கூட கொஞ்சம் கடுமையான பதங்களை உபயோகித்து, ‘ஒருவனைக் கொள்ளை அடித்து இன்னொருவனுக்குக் கொடுப்பதா?’ என்று கேட்டார்கள். அற நிலையங்கள், மத ஸ்தாபனங்கள் எல்லாம் கெட்டுவிடவேண்டும் என்பது அரசின் நோக்கம் அல்ல. அரசுத் தரப்பில் இருந்து ஒரு திருத்தம் கொண்டு வருவதாக இருக்கிறோம். அந்தத் திருத்தமும்கூட எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கும்.

இந்தச் சட்டத்தை அவசரம் அவசரமாகக் கொண்டு வந்துவிட்டீர்களே என்று எல்லோரும் கேட்டார்கள். இதை அவசரமாக நிறைவேற்றுகிறோம் என்று அல்ல. நெடுநாளாக முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு, இதற்கு முன்னோடியாகத்தான் பதிவேடு சட்டத்தைக் கொண்டுவந்து இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இதுபற்றி நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது நாம் இதை நிறைவேற்றினாலும்கூட ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்று வர ஒரு மாதம், இரண்டு மாதம் ஆகலாம். இப்போதே காலதாமதமாவதைத் தடுக்கவேண்டும் என்றுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏழைகளுக்கு நன்மை செய்வது என்று முடிவு செய்த பிற்பாடு அதை உடனடியாகச் செய்யவேண்டும் என்பதுதான் இந்த அரசின் அக்கறை. ஆகவேதான், அவசரம் காட்டுகிறோம் என்பதைவிட ஏழைகளுக்கு உடனடியாக நன்மை ஏற்படவேண்டும் என்று மிகுந்த ஆர்வம் காட்டுகிறோம் என்பது பொருத்தமாக இருக்கும்.

சிறுபான்மை நிலக்காரர்களுக்கு மார்க்கெட் வால்யூ கொடுக்கவேண்டும் என்றார்கள். நம்முடைய நிலச் சட்டத்தில் என்ன கொடுக்கிறோமோ அதையேதான் இதிலும் போட்டிருக்கிறோம். அதைவிட அதிகமாகக் கொடுப்பது தேவையில்லை.



1973 ஏப்ரல் 3] [திரு. ப. உ. சண்முகம்]

எல்லோரும் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்பதைத்தான் வலியுறுத்திச் சொன்னார்கள். நேற்று எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி இதுபற்றி கலந்துபேசி செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டாம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்போது இதைப் பொறுக்குக் குழுவுக்கு விடுவதனால் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்பதனால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மேலும் நிலக்காரர்களுக்கு அரசே பணம் கொடுத்துவிட்டும், நிலத்தை குத்தகைக்காரர்களுக்குக் கொடுத்து அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ளட்டும் என்று சொன்னார்கள். அதிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. அரசாங்கமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கார்ப்பரேஷன் நிறுவி அதன்மூலம் அந்தப் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்வதாவது பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நானும் அந்தக் கருத்தைத்தான் தொடர்ந்து சொல்வதாக இருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதுபற்றி தமது நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். முன்பு வருவாய்த் துறை அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்களும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே டெல்லியில் நடந்த மகாநாட்டில் கலந்துகொண்டு இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்திச் சொன்னார்கள். டெனன்சி கார்ப்பரேஷன் என்பதாக ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் உட்கார்ந்துகொண்டே இன்னொரு வாரியத்திற்கு இன்னொரு தலைவரைப் போடலாம் என்று சொல்கிறார்கள். நல்ல காரியம் செய்கிறபோது அதை வாழ்த்தாவிட்டாலும் இப்படி மனம் புண்படும்படி பேசாமல் இருக்கலாம். இப்படி வாரியம் என்று போடுவதன் காரணமாக என்ன என்ன பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என்பதைப்பற்றி அரசுப் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்தின் மூலம் நிலக்காரர்களுக்குப் பாதி உரிமை வழங்குகிறோம். பாதி நிலத்தை எடுத்து விற்றுக்கொள்ளவும் கூட உரிமை கொடுக்கிறோம். குத்தகைதாரர் ஒரு முறை நிலத்தை எடுத்துக்கொள்வதாக ஆதரைஸ்டு ஆபீசருக்கு மனுக் கொடுத்து ஒரு தவணை கட்டி டைட்டில் முதற்கொண்டு வாங்கிவிட்டால் மறு தவணை தரவில்லை என்றால் ஆதரைஸ்டு ஆபீசருக்கு மனுச் செய்து நிலக்காரர் டிகிரியே வாங்கிவிடலாம். கோர்ட்டுக்குப் போக வேண்டியதில்லை. அந்த நிலத்தையே ஜப்தி செய்து எடுக்கலாம். நிலக்காரர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படவில்லை. நிலக்காரர்கள் அஞ்சத்தக்க அளவுக்கு இந்தச் சட்டத்தில் ஒன்றுமில்லை. இந்தச் சட்டம் எல்லா வகையிலும் இரு சாராருக்கும் நியாயம் வழங்குகிற சட்டம். இதை வரவேற்ற எல்லா

அங்கத்தினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இதை ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I am pressing my amendment. At the same time, I make an impassionate plea once again to the Hon. Chief Minister and the Hon. Minister to reconsider their stand and allow this Bill to be referred to Select Committee. In fact, if the Hon. Minister had not brought forward the amendment we would have brought forward the amendment to refer the Bill to a Select Committee. So, I make a very, very impassionate plea in the interest of the farmers to reconsider their stand and see that this Bill is sent to the Select Committee.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதை ஏற்கனவே பொறுக்குக் குழுவிற்கு விடலாம் என்றுதான் யோசித்துக்கொண்டிருந்தேன். முதலில் என்னுடைய உரையில்கூட அதைத் தெரிவித்தேன். சர்வ கட்சித் தலைவர்கள்கூட இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டாம் என்ற காரணத்தினுல் என்னுடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டேன். இப்போது நீங்கள் கொண்டு வந்ததனுல் நாங்கள் கொடுக்கவில்லை என்பது 'நாங்கள் வேண்டுமென்றால் நீங்கள் வேண்டாமென்பது, நாங்கள் வேண்டாமென்றால் நீங்கள் வேண்டுமென்பது' என்கிற மனப்பான்மையைக் காட்டுவதாக இருக்கிறது. இது சரியல்ல. இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : (THIRU N. VEERASAMI) : Is the hon. Member Dr. Hande pressing his amendment?

DR. H. V. HANDE : Yes Sir, I am pressing it.

The amendment was put and declared lost.

DR. H. V. HANDE : Sir, I want a division.

MR. CHAIRMAN : (THIRU N. VEERASAMI) : Not necessary. We can decide by voice vote.

DR. H. V. HANDE : I am pressing for a division.

மாண்புமிகு அவைத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பெரும்பாலானவர்கள் டாக்டர் ஹாண்டே அவர்களுடைய திருத்தத்தை மறுத்திருக்கிறார்கள். எனவே அவருடைய திருத்தம் தோல்வியுற்றது.



டாக்டர் எச். வி. ஹாண்டே : இப்படி எழுந்து நின்று வாக்கெடுப்பு நடத்த ப்ரொசிஜர் சரியாக இருந்தால் சரி.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே இப்படி நடப்பது உண்டு, அது வழக்கம். பலமுறை நடந்திருக்கிறது.

திரு. க. சுப்பு : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். டாக்டர் ஹாண்டே அவர்கள் வற்புறுத்துவாரானுல் ரெக்கார்ட் செய்யவேண்டும். எத்தனை பேர் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறார்கள் என்பது தெரிய வேண்டியிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : 3 பேர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எண்ணிக்கை வேண்டுமென்று கோருகிற காரணத்தால், ஆம் என்போர், மறுப்போர் ஒவ்வொரு சாராரையும் எண்ணி அறிவித்து விடுதல் நலம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

DR. H. V. HANDE : I am pressing for a division.

திரு. எம். ஏ. லத்தீப் : சில விதிவிலக்குகள் வேண்டுமென்று நாங்கள் கோரி இருக்கிறோம். அவை பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். அவைபற்றி ஒரு உறுதியான வாக்கு கொடுத்தால் நாம் முடிவு செய்ய வாய்ப்பாக இருக்கும்.

DR. H. V. HANDE : Sir, we are on the division and I am pressing for a division.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களின் திருத்தத்தை ஆதரிப்பவர்களையும், எதிர்ப்பவர்களையும், நடுநிலை வகிப்பவர்களையும் அவரவர் இடங்களில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் தனித்தனியே அவ்வாறு எழுந்து நின்று எண்ணப்பட்ட பின்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களின் திருத்தத்தை ஆதரிப்போர் 3 பேர், எதிர்ப்போர் 68 பேர், நடுநிலை வகிப்போர் 9 பேர். எனவே, திருத்தம் தோல்வியுற்றது என அறிவிக்கின்றேன்.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, the Government have decided to move amendments to clauses 15, 26 and 27 of the Bill. The other clauses may be put to vote.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மணலி சி. கந்தசாமி, திரு. சுப்பையா, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் கொடுத்த பொதுவான திருத்தங்கள் விதிமுறைகளுக்கு உட்படாத காரணத்தால், அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU MANALI C. KANDASAMI : Sir, I move the following amendment :—

"(1) 'Peoples' Committee' means a village committee consisting of representatives of peasants, organisations, political parties and an Officer who may be appointed by the Government."

THIRU K. T. K. THANGAMANI : Sir, I second the amendment.

THIRU MANALI C. KANDASAMI : My intention in moving the amendment is that 'Peoples' Committees' should be constituted in every village.



நான் ஏற்கனவே சொன்னேன், சட்டங்கள் அமுலாக்கப்படும்போது, அதிகார வர்க்கத்தின் மூலமாக சட்டத்தினுடைய நோக்கங்களை தோற்கடிக்கிற விதத்திலே சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று சென்ற காலத்திலேயே வற்புறுத்தியிருக்கிறேன். ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலேயும் ஒவ்வொரு கமிட்டியை அமைத்து, அந்தக் கிராமத்திலேயே அவர்கள் இருப்பதாலே, மக்களுக்கு எதிரில் பதில் சொல்ல வேண்டியிருப்பதாலே, நலமாக இருக்கும். அரசியல் சூழ்நிலையில் வேண்டுமா என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். இன்றிருக்கிற அரசியல் சூழ்நிலையில்தான் இது அவசியம் என்று குறிப்பிடுகிறேன். ஏனென்றால், எந்த எந்த கட்சி எந்த எந்தப் பக்கம் என்று எடுத்துக்காட்டும். யார் மிராசுதார் பக்கம் இருக்கிறார்கள், யார் மக்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று நேரடியாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும், அரசியலிலே தெளிவு ஏற்படும் என்று அந்த அடிப்படையிலே நான் வலியுறுத்துகிறேன். இவ் விவரங்களை கிராம கமிட்டிகள் மூலம் மக்கள் புரிந்துகொள்ள முடியும், நமக்கு நிலைமை புரியும், ஆகவே இப்படிப்பட்ட கமிட்டிகளை நியமிப்பது உத்தரவாதம் அளிக்கும் என்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் முதலில் பேசியபொழுதே இது பற்றி கருத்து தெரிவித்திருக்கிறேன். அரசியல் கட்சிகளுடைய கமிட்டி அமைத்து இப்படிச் செய்வது சரியாக வராது. ஆகவே, இதை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதரைஸ்டு ஆபீசர்களை நியமித்திருக்கிறோம். ஏதாவது தவறு செய்தார்களானால், அப்படி புகார் இருக்குமானால், அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது, பாரபட்சமற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு மணலி அவர்கள் இதை வற்புறுத்த வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU MANALI C. KANDASAMI : Sir, I am pressing my amendment.

திரு. மணலி சி. கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 3 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU MANALI C. KANDASAMI : Sir, I move the following amendment :

For Clause 3 substitute the following :—

" 3. *Conferment of ownership right of cultivating tenants.*—Any cultivating tenant shall be entitled to the conferment of ownership of the right, title and interest of the land owner in respect of the land comprised in his holding as cultivating tenant and he shall be liable to pay the value of the land to the Government as may be determined under section 6 :

Provided that the total extent of the—

(i) Land owned by such cultivating tenant and personally cultivated by him already.

(ii) land held by him as cultivating tenant shall not exceed 5 standard acres.

The amendment was duly seconded.

திரு. மணலி சி. கந்தசாமி : அதாவது வாங்கும் உரிமை என்று சொல்வதற்குப் பதிலாக அந்த உரிமை வழங்கப்படுகிறது என்ற அடிப்படையிலே இந்தத் திருத்தம் அமைந்திருக்கிறது. இதையும் நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதற்கும் நான் ஏற்கனவே விளக்கம் தெரிவித்திருக்கிறேன். அதற்கு மேல் விளக்கம் ஒன்றும் தருவதற்கு இல்லை என்று சொல்லி இந்தத் திருத்தத்தை அவர்கள் வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU MANALI C. KANDASAMI : Sir, I press my amendment.

திரு. மணலி சி. கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 5 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட



THIRU A. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

In sub-clause (1) of Clause 5, delete the words " within such period as may be prescribed from the notified date ".

The amendment was duly seconded.

THIRU MANALI C. KANDASAMI : Sir, I move the following amendment :

For clause 5 substitute the following :—

" 5. *Application for conferment of right of ownership of the land by the cultivating tenants.*—A cultivating tenant entitled to the conferment of ownership of the right, title and interest of the land owner under section 3 may apply to the Peoples' Committee within such period as may be prescribed from the date of enactment of the Act for the conferment of the ownership of such right, title and interest. "

The amendment was duly seconded.

திரு. மணலி சி. கந்தசாமி : வேறு ஒன்றும் இல்லை. கமிட்டிக்கு மனுப் போட வேண்டுமென்பதுதான் என்னுடைய திருத்தம். அதை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி கமிட்டியே தேவையில்லை என்று முதலிலேயே தீர்மானித்து விட்டோம். ஆகவே இது தேவையில்லை. Then automatically it will become infructuous. இது தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. SUBRAMANIAM : Sir, I am pressing.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

THIRU MANALI C. KANDASAMI : Sir, I am pressing,

திரு. மணலி சி. கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 6.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 6 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendment:—

(i) In sub-clause (1) of clause 6, delete item (*a*).

(ii) In item (*b*) of sub-clause (1), delete the words "where no such agreement can be reached".

(iii) In item (ii) of sub-clause 1 (*b*) for the words "structures, wells", substitute the words "structures and wells of a permanent nature".

(iv) In sub-clause (2), for the words "shall be the aggregate of", substitute the following:

"shall be the rent that has been fixed by agreement, express or implied, but shall not exceed—"

(v) In sub-clause (2), delete the letter '(*a*)' before item (i).

(vi) For the proviso to sub-clause 2 (iv), substitute the following:

"Provided that in the case of lands referred to in items (ii) and (iv) for the cultivating of which water is lifted by pumpset installed at the cost of the land-owner, 40 per cent of the normal gross produce or its value in money".

(vii) In Explanation II of sub-clause 2, delete the letter '(*a*)' at the beginning and the word 'and' at the end.

(viii) In sub-clause (2), delete item (*b*).

(ix) Before sub-clause (3), add the following as sub-clause (3) and re-number sub-clause (3), as (4):

"(3) For purposes of fixing the purchase price under this section, the land revenue paid in a year for the land by the land-owner shall be deducted from the fair rent".



The amendment was duly seconded.

THIRU MANALI C. KANDASAMI: Sir, I move the following amendment—

For clause 6 substitute the following:—

"6. *Value of the land.*—(1) The value of the land payable by a cultivating tenant to the Government for the benefit of the conferment of the ownership of the right, title and interest of the land owner shall be—

(*a*) ten times the fair rent or the actual rent paid in respect of the holding whichever is less; and

(*b*) one half of the value of the structures, wells and pumpsets belonging to the land owner".

(2) The fair rent referred to in sub-section (*a*) shall be the aggregate of—

"(i) in the case of wet land 40 per cent of the normal gross produce or its value in money;

(ii) in the case of land, the irrigation of which is supplemented by lifting water, 35 per cent of the normal gross produce or its value in money;

(iii) in the case of land on which crops, which do not give any yield within a period of one year from the time of cultivation are cultivated. 40 per cent of the normal gross produce or its value in money.

(iv) in the case of any other class of land 33-1/3 per cent of the normal gross produce or its value in money."

The amendment was duly seconded.

திரு. மணலி சி. கந்தசாமி: இது ஒரு அடிப்படையான திருத்தம். இதிலே 10 மடங்கு தரவேண்டுமென்று போட்டிருக்கிறேன். அதோடு 16 தடவைகளில் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இதையும் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 12 மடங்கு கொடுக்க வேண்டுமென்று அரசு போட்டிருக்கிறது. கேரளச் சட்டத்திலே 16 மடங்கு என்று போட்டிருக்கிறார்கள், ஆகவே . . . . .

திரு. சோ. அழகர்சாமி : கேரளாவிலே பேர்பாதியிலே 16 மடங்கு என்று தான் போட்டிருக்கிறார்கள், அதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நமது சட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நிலச் சட்டத்திலே என்ன காம்பன்சேஷன் என்று போட்டிருக்கிறோமோ அதைத்தான் கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறோம். அதைக் குறைப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அக்ரிமெண்ட் மூலம் பிக்ஸ் பண்ணுவது என்று வைத்தால் குத்தகைதாரர்களை நிர்ப்பந்தப்படுத்திவிடக்கூடிய, தவறாகப் பயன் படுத்தக் கூடிய நிலைமை எல்லாம் வரும். ஆகவே அக்ரிமெண்ட் இல்லாமல் செய்துவிடலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திருத்தத்தினுடைய நோக்கம் அவர்களாகவே பேசி முடித்துக்கொண்டால் அரசாங்கம் தலையிட வேண்டாம் என்பதுதானே தவிர வேறு இல்லை. அதற்காகத்தான் அக்ரிமெண்ட் என்று போட்டு இருக்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள்கூடச் சொன்னார்கள். 40, 60 என்ற முறையில் இல்லாமல் பல இடங்களிலே குத்தகைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமையிலே . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஃபேர் ரெண்ட் பற்றி தமிழ் நாட்டிலே தனிச் சட்டமே இருக்கிறது. அதிலே சொல்லப்பட்டபடி ஃபேர் ரெண்ட் ஃபிக்ஸ் பண்ணிவிட்டு அதை பன்னிரண்டால் பெருக்கவேண்டும், அவ்வளவு தான். ஃபேர் ரெண்டிலே தகராறு என்றால் அதைப்பற்றி பின்னாலே யோசிக்கலாம். ஆனால் அந்தச் சட்டத்தின்கீழே ஃபேர் ரெண்ட் ஃபிக்ஸ் பண்ணிவிட்டு அதை 12-ஆல் பெருக்க வேண்டுமென்ற முறையிலேதான் இப்பொழுது சொல்லப்பட்டிருக்கிறது. அக்ரிமெண்ட் மூலம் அவர்களாக முடிவு செய்து கொள்ளவும் வழிசெய்யப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்திலே விவசாயிகள் எவ்வளவு எச்சரிக்கையாகவும் தெளிவாகவும் இருக்கிறார்கள்



என்பது நமக்கு எல்லாம் தெரியும். நிலம் தேவை என்று ஆதரைஸ்டு ஆபீசர்களுக்கு மனுப் போட்டால் அரசாங்கமே விலை நிர்ணயம் செய்துவிடுகிறது. ஆகவே அக்ரிமெண்ட் அதிலே தேவையில்லாமல் போய்விடுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த ஷரத்திலே,—60, 40 ஆக இருந்தால் 35, 65 ஆக இருந்தால் ஃபேர் ரெண்ட் என்ற முறையிலே வந்துவிடுகிறது—சில இடங்களிலே கண்டுமுதல் எவ்வளவு என்று பார்த்து அதிலே பிரித்துக் கொள்ளாமல் வருடத்திற்கு 5 கலம் 8 கலம் என்ற முறையிலோ அல்லது வருடத்திற்கு இவ்வளவு ரூபாய் என்ற முறையிலோ கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எக்ஸிஸ்டிங் ரேட்டிலே என்பதைச் சேர்த்துக்கொண்டால் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில இடங்களிலே இரண்டு போகம் இருக்கிறது, மூன்று போகம் இருக்கிறது. பல இடங்களிலே வேறு நடைமுறைகள் இருக்கின்றன . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஃபேர் ரெண்ட் ஆக்டிலே நாம் அதைப்பற்றி எல்லாம் ப்ரொவிஷன் போட்டிருக்கிறோம். அந்தச் சட்டத்திலே எவ்வளவு போடுவது என்பதுபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்திலே அக்ரிமெண்ட் என்ற முறையையும் சேர்த்து இருக்கிறோம். ஆகவே அவர்களே ஒப்பந்தம் செய்துகொண்டால் அதுதான் செல்லும், கோர்ட்டிற்குப் போனால் கூட அதுதான் நிற்கும். அதிலே 60, 40 என்ற முறையிலே எத்தனை கலம் என்று கொடுக்கப்பட்டிருந்தால் அந்த முறையிலே கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறோம். அப்படியில்லாவிட்டால், அதற்குத்தான் நாம் ஆப்ஷன் என்று போட்டிருக்கிறோம். அந்த முறையிலே அவர்களாகவே அக்ரிமெண்டு செய்து கொண்டுவிடலாம். அதைத்தான் நாம் இந்தச் சட்டத்திலே போட்டு இருக்கிறோம். இரண்டு பேர்களும் சேர்ந்து நிர்ணயிக்கிற விலை, அதிலே நமக்கு சம்பந்தம் இல்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இரண்டு பேர்களும் சேர்ந்து நிர்ணயிக்கிற விலை என்றால், சில இடங்களிலே 60, 40 என்ற முறையிலே இல்லாமல் இருந்தால் அதை இன்வின்ட் பண்ணுவது மாதிரியாகிவிடும். ஆகவே 60, 40 என்ற முறையிலோ அல்லது அவர்கள் ஒத்துக்கொண்ட தொகையைப்போல் 12 மடங்கு என்றோ போட்டால் தெளிவாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 40, 60 என்பதையெல்லாம் ஃபிக்ஸ் பண்ணி எவ்வளவு என்று முடிவு செய்வது எல்லாம் ஆதரைஸ்டு ஆபீஸர்கள்தான். எனவே அதிலே போடாத காரணத்தினாலே அந்த வாதம் அவர்களுக்கு விடுபட்டுப்போய்விட்டதாக இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. மணலி சி. கந்தசாமி: நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

*Clause 7.*

MR. DEPUTY SPEAKER: The question is—

"That Clause 7 do stand part of the Bill".

THIRU MANALI C. KANDASAMI: Sir, I move the following amendment:—

*Sub-clause* (2)

(ii) After sub-section (1) the following shall be inserted as new sub-section(2):—

"If no application under section 5 is received, the Peoples' Committee shall make a *suo motu* enquiry as to the entitlement of the conferment of ownership of any cultivating tenant."

*Sub-clause* (3)

(iii) *Insert* sub-clause (3) for sub-clause (2):—

"The Peoples' Committee shall, after considering the claims and objections received and hearing any person appearing in pursuance of the notice issued under sub-section (1) and after making due enquiries and pass orders regarding the ownership of the right, title or interest of land of the cultivating tenant."

 [Thiru Manali C. Kandasami]

*Sub-clause* (5)

(v) *Insert* sub-section (3) for sub-section (2) occuring in line 1.

*Sub-clause* (7)

(vi) *Substitute* the following for clause 7 (7):—

"The value determined by the peoples' committee as payable to the land owner under this clause shall be paid to the land owner by the Government in the manner as may be prescribed, provided that the Government shall pay the full market value of the land to the small land owners."

The amendment was duly seconded.

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendment:—

In sub-clause (3) *delete* the words "as far as possible".

The amendment was duly seconded.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் என் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. மணலி சி. கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 7 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

*பிரிவு 8.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 8 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendment, namely:—

(i) In clause 8, *delete* the 1st proviso.

(ii) In clause 8, in the 2nd proviso, *delete* the word 'further'.

The amendment was duly seconded.

THIRU MANALI C. KANDASAMI: Sir, I move the following amendment, namely:—

For clause 8, substitute the following:

'8. *Value of the land payable in instalments*:—The value of the land determined under section 7 shall be payable by the tenant to the Government in sixteen equal annual instalments'.

The amendment was duly seconded.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. மணலி சி. கந்தசாமி: நான் என் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 8 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

*Clause 9*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 9 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

The amendment of Thiru Manali Kandasami is disallowed under Rule 76 (2).

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendment, namely:—

(i) In item (i) of sub-clause (1), for the words 'three months', substitute the words 'nine months';

(ii) In item (ii) of sub-clause (1), for the words 'three months', substitute the words 'six months';

(iii) In the proviso to sub-clause (1), for the word 'may', substitute the word 'shall';

(iv) In the proviso sub-clause (1), for the words 'three months', wherever they occur, substitute the words 'six months';



(v) In sub-clause (3), for the words 'the purchase price in lump sum or the first instalment thereof', substitute the words 'the first instalment of the purchase price';

(vi) After sub-clause (3), *add* the following as proviso—

'Provided, however, that the cultivating tenant shall have the right, after the lapse of one year after such cancellation, to apply for the purchase of the right title and interest of the land owner; and on such application, the authorized officer shall proceed as provided under section 7'.

The amendment was duly seconded.

திரு. ஏ. சுப்பிரமணியம்: என் திருத்தங்களை முன் மொழிந்து ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குத்தகைதாரர் நிலத்தை வாங்கிக் கொள்ள விண்ணப்பம் போட்டால் பணம் கட்டுவதற்கு 3 மாதம் அவகாசம் கொடுக்கப்படுகிறது. ஏற்கெனவே விண்ணப்பம் போடுவதற்கு காலவரை குறிப்பிடுகிருர்கள். 3 மாதம் என்று சொல்லும்போது அவர்கள் பணத்தைத் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. குறைந்த தொகை 500 ரூபாய் மொத்த மாகக் கட்டவேண்டுமென்று இருக்கிறது. கோள சட்டத்தில் 9 மாதம் கொடுத் திருக்கிருர்கள். அதைத்தான் நானும் கேட்டிருக்கிறேன். அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். அதோடு ஒரு முறை கேன்சல் ஆகிவிட்டால் திரும்பவும் கேட்பதற்கு உரிமை இல்லை, கொடுத்த காலத்திற்குள்ளே கட்டவில்லையென்ருல் வாங்கிக்கொள்ள உரிமை போய்விடுகிறது என்று இருக்கிறது. தவறியதற்கு ஒரு சிறு தண்டனை வேண்டும். வேண்டுமானுல் அவர்கள் ஓராண்டு வரையிலே திரும்பக் கேட்கக் கூடாது என்று போடலாம். மறுபடியும் கேட்பதற்கே உரிமை கொடுக்கவில்லையென்ருல் சட்டத்தின் நோக்கம் பல சந்தர்ப்பங்களில் கெட்டுப் போய்விடும் என்று அஞ்சுகிறேன். இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அமைச்சரவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மீண்டும் பரிசீலித்த பிறகுதான் 3 மாதம் என்று போட்டிருக்கிருேம். 9 மாதம் என்று கோள சட்டத்தில் இருக் கிறது; இங்கு ஏன் அப்படிப் போடவில்லை என்கிருர்கள். நம் சட்டத்தில் இருக்கிற பல பிரிவுகள் கோள சட்டத்தில் இல்லை. கோள சட்டத்தில் இருக்கிற பல பிரிவுகள் இதிலே இல்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, புரொவிசோவைப் படித்துப் பார்த்தால் தெரியும்.

' within three months ' from the date on which the order of the authorized officer under section 7 has become final:

Provided that the authorized officer may, on application by the cultivating tenant before the expiry of the said period of three months extend the period for making such deposit, so however that the period so extended shall not exceed three months. '

என்று இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் கேட்பது, 6 மாதத்தோடு 3 சேர்த்து 9 மாதமாகக் கொடுங்கள் என்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 6 மாதம் போதும் என்று வைத்திருக்கிறோம். இன்னும் 3 மாதம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். கொடுக்கிற காலம் போதுமென்ற காரணத்தினால் திருத்தம் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, கடைசியில் ஒரு புரொவிசோ சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். ஒருவர் தனக்கு நிலம் உரிமை ஆக்கப்பட வேண்டுமென்று விண்ணப்பம் கொடுக்கிறார். ஆதரைஸ்டு ஆபீசர் ரேட் ஃபிக்ஸ் பண்ணுகிறார். இந்த ஃபர்ஸ்ட் இன்ஸ்டால்மெண்டு கட்டுவதிலே டைம் ஆனால் கான்சலாகிவிடும். அவர் திரும்ப அப்ளிகேஷன் கொடுக்க புரொவிஷன் இல்லை. மேலும் நிலச்சுவான்தார் ரேட் சம்பந்தமாக கோர்ட்டுக்குப் போகலாம். இந்த மாதிரி ஆர்டர் போட்டு, கட்டாமல் விட்டுப் போனால் அவர்கள் திரும்ப அப்ளிகேஷன் கொடுக்க வழி கிடையாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்படிச் சட்டத்தைக் கொண்டு வருகிற நேரத்தில் சட்டத்தினுடைய விதி முறையைப் இலகுவாக வைத்தால் தான் வாங்குபவர்களுக்கு வாங்கவேண்டுமென்ற எண்ணம் வரும். இல்லாவிடில் அடுத்த வருஷம் கேட்டுக் கொள்ளலாம் என்று குத்தகைதாரர், நிலச்சுவான்தாரிடையே இந்தப் பிரச்னை இழுத்துக் கொண்டே போகும். குறைக்க வேண்டுமென்றே சட்டத்தில் இப்படி வைத்திருக்கிறோம். இதில் எந்த சிக்கலும் இல்லை. திருத்தம் தேவையில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் என் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.



திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 9 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 10, 11, 12 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 13

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 13 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendment, namely—

'In clause 13, add the following as sub-clause 9 after sub-clause (8)—

" (9) Where the extent of land owned by the land-owner is two standard acres or less, and where the cultivating tenant pays the purchase price in instalments, the full amount of purchase price shall be paid to the land-owner after the first instalment is deposited. "

The amendment was duly seconded.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மிகக் குறைவாக நிலம் இருக்கிறவர்களுக்கு கொஞ்சம் அவர்களுக்கு உதவி புரிகிற முறையில் இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்திருக்கிறவர்களுக்கும், பணம் லம்ப் ஸம்மாக கொடுக்கவேண்டும். அரசு இதற்குப் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். இது ஒன்றில்தான் அரசு பொறுப்பேற்க வேண்டியிருக்கும். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கெனவே நான் டெனன்ஸி பிரனன்சிங் கார்ப்பரேஷனைப் பற்றிச் சொன்னேன். எந்த அளவிற்கு அரசு உதவி செய்ய முடியுமென்று பரிசீலித்து முடிவு செய்யும். வந்தால் பரிசீலிக்கலாம். இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கர் உள்ள எல்லோருக்குமே கொடுத்து விட வேண்டுமென்று சொல்வது சரியல்ல. மொத்தமாக பணம் கொடுப்பதானால் முக்கால் பங்கு கொடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறோம். திருத்தம் தேவையில்லை. டெனன்ஸி பினான்சிங் கார்ப்பரேஷன் வரும்போது சரியாகப் போய்விடும். ஆகவே வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நான் என் திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 13 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 14 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 15 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move the following amendment, namely—

'In clause 15, after the first proviso, add the following proviso, namely—

Provided further that in the case of any religious, charitable or educational institution, for the purpose of computing the total extent under the first proviso the extent of land in excess of ten standard acres owned by such institution shall alone be taken into account.'

THIRU A. SUBRAMANIAM : Sir, I am not moving my amendment.

The Government amendment was put and carried.

Clause 15, as amended, was put and carried.

Clauses 16 and 17 were put and carried.

பிரிவு 18.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 18 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU A. SUBRAMANIAM : Sir, I move the following amendment, namely—

(i) In sub-clause (1), add at the end the following words—

'and within three months of the notified date'.



(ii) In sub-clause (3), add the following at the end :

'so however that the period so extended shall not exceed two months'.

The amendment was duly seconded.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்தச் சட்டத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல குத்தகைதாரர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்கிற காலவரை குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சொந்தக்காரர்கள் விஷயத்தில் ரிசம்ப்ஷனுக்கு காலவரை கொடுக்காமல் இருக்கிறது. இது முரண்பாடாக இருக்கிறது. அவர்களுக்கு 5 மாதம் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குத்தகைதாரருக்குத் தான் நிலம் வாங்குகிறேன் என்றால் ரிசம்ப்ஷன் பவர்ஸ் வைத்திருக்கிறோம். நிலத்தை குத்தகைதாரர் வாங்கவில்லையென்றால் அப்படியே நடந்து கொண்டிருக்கும். வாங்குகிறேன் என்று சொல்கிறபோது தான் இது வரும். எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று திருத்தம் போடுவது சரியாக இல்லை.

THIRU R. PONNAPPA NADAR : I want to know whether it may not amount to excessive delegation. That is a matter which the Law Minister may kindly consider.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு பிரிவுக்கும் ரூல்ஸ் போடலாம். பி.ப. 1-30
ரிசம்ப்ஷனுக்குப் பவர் கொடுத்திருக்கிறோம்.

ஐந்தாவது பிரிவிலும் ரைட் டு பர்ச்சேஸ் என்று போட்டிருக்கிறோம். "Within such period as may be prescribed" என்று இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இதற்கு ரூல்ஸ் எப்படிப் போட முடியும்?

"The application shall be in such form and shall contain such particulars as may be prescribed". என்று தான் இருக்கிறது.

திரு. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 18 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 19 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU MANALI C. KANDASAMI: Sir, I move the following amendment—

For Clause 19, substitute the following :—

" Any person aggrieved by an order passed by peoples' committee under this Act may within such period as may be prescribed appeal to the Land Board consisting of the Collector of the District, representatives of the Peasants' Organisation and Political Parties and the decision of the Land Board on such appeal shall be final. "

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்தத் திருத்தம் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 19 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 20 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

திரு. மணலி சி. கந்தசாமி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் கொடுத்த திருத்தங்கள் பேரவை விதி 76 (2)-ன்படி தள்ளுபடி செய்யப்படுகின்றன.

பிரிவு 20 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 21

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 21 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேலிக்காக கமிட்டி வேண்டுமென்ற திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகவே, அதன் தொடர்பாக வரக்கூடிய இந்தத் திருத்தங்கள் தேவையில்லை.

திரு. மணலி கந்தசாமி அவர்களுடைய திருத்தம் சட்டப் பேரவை விதி 76 (2)-ன் கீழ் தள்ளுபடி செய்யப்பட்டது.



பிரிவு 21 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 22 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. மணலி சி. கந்தசாமி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் கொடுத்த திருத்தங்கள் விதி 76 (2)-ன் கீழ் தள்ளுபடி செய்யப் பட்டன.

பிரிவு 22 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 23 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 24

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 24 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் சட்டப் பேரவை விதி 76 (2)-ன் கீழ் தள்ளுபடி செய்யப்பட்டது.

பிரிவு 24 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 25 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move " That Clause 26 be renumbered as Clause 28 and before Clause 26 so renumbered, insert new Clauses 26 and 27 "

The motion was put and carried.

*New Clause 26*

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move that after Clause 25, insert the following Clause, namely :

" 26. *Act not to apply to certain institutions.*—Nothing in this Act shall apply to an extent of ten standard acres owned by any religious, charitable or educational institution;

[Thiru P. U. Shanmugam] *[1973 ஏப்ரல் 3*

Provided that where such institution owns more than ten standard acres, it shall be at the option of such institution to choose any ten standard acres to which the exemption shall apply."

The new Clause was put and carried.

*New Clause* 27

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move that after Clause 26, insert the following Clause, namely :—

"27. *Act not to apply to minors, etc.*—Nothing in this Act shall apply to any land owned by any person who is—

(a) a minor, or

(b) a person of unsound mind, or

(c) a widow, or

(d) a physically disabled person,

if the total extent of the land owned by such person does not exceed two standard acres and if such person has no other means of livelihood :

Provided that the exemption under this section shall apply only if such person opts for such exemption. Such option shall be intimated to the authorized officer in such manner and within such time as may be prescribed." ;

New Clause 27 was put and carried.

*New Clause* 28

Clause 26, renumbered as Clause 28 was put and carried.

*பிரிவு 1*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—*

*"பிரிவு 1 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".*

THIRU MANALI C. KANDASAMI : Sir, I move—

" For Clause 1, the following shall be substituted :—

(i) This Act may be called the Tamil Nadu Cultivating Tenants (Conferment of Ownership Right) Act, 1973



*1973 ஏப்ரல் 3]* [Thiru Manali C. Kandasami]

(ii) It shall come into force on the date of enactment of the Act."

The amendment was duly seconded.

THIRU MANALI C. KANDASAMI : Sir, I am pressing my amendment.

*திரு. மணலி கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.*

*பிரிவு 1 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.*

*முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.*

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

" That the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land-owners' Rights) Bill, 1973, as amended, be passed. "

DR. H. V. HANDE : Sir, I will just take one or two minutes. This is the third reading. In this House itself once the Hon. Chief Minister was good enough to refer a particular Bill to a Select Committee during the third reading stage. Finally I am just trying to find out whether at the last minute at least the Government will change its mind. Without taking much time of the House, I shall just briefly mention certain items.

Firstly, my contention is that this Bill is not going to help the real tiller. Secondly, this Bill does not exclude benami tenants. Thirdly, this Bill is very harsh on small land-owners of around five acres. Fourthly, full compensation must be paid by the Government to the persons from whom lands are taken away. Fifthly, the Government will not even earn the appreciation of the tenants either for political reasons later on. Sixthly, the religious institutions, temples, mosques, etc., will find it difficult if the Government does not take the responsibility of giving the amount. Seventhly, the hasty legislation will result in a spate of litigation among the poor farmers and will unleash a great deal of misunderstanding among the different sections of farmers. Eighthly, the Government will realise the truth of what I have said before the

next election. The tenants will realise that this Government will also finally come to their lands and see that that land also is dispossessed for sufficient political reasons.

Apart from that, a number of amendments were sought to be moved by several members. Whatever it is, all these things could have been dispassionately considered in a Select Committee and a few amendments could have been passed. I have nothing particularly against it. Finally we have been always mentioning about Tiruvalluvar.

வள்ளுவர் கூறியிருப்பது போல்,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்."

யார்தான் உண்மையாக உழுதுண்டு வாழ்பவர்கள்? இதனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை ஏதாவது இருக்கிறதா? டில்லர்ஸ்க்கு ஏதாவது நன்மை இருக்கிறதா? இதைப்பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். செலக்ட் கமிட்டிக்கு விடுவதால் இந்த மசோதாவின் வேகத்தைக் குறைப்பதற்காகச் சொல்லவில்லை. எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உட்கார்ந்து பேசி சில முடிவுகளை எடுத்திருக்கக்கூடும். ஆகவே லாஸ்ட் மினிட் அப்பீலாகச் செய்கிறேன். நீங்கள் கேட்காவிட்டால் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. திரும்பவும் டிவிஷன் கேட்கப்போவதில்லை. ஒரே நேரத்தில் திரு. மதியழகன் அவர்களையும், திரு. கருணாநிதி அவர்களையும் நிற்கவைத்தேன், அது வேறு விஷயம். அது ஒரு அர்ஜிமெண்ட்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் அவர்கள் ரொம்பதூரம் தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டார்கள் என்பதுதான். அரசியலில் யாரும் யாருக்கும் விரோதி அல்ல. அரசியலில் நிலையான நண்பர்களும் கிடையாது, நிலையான விரோதிகளும் கிடையாது. கொள்கைப்படித்தான் நாம் இந்த மன்றத்தில் செயல்பட்டு வருகிறோம். நண்பர் அவர்கள் தம்மைத் தனிமைப்படுத்திக்கொண்டு விட்டார்கள். யாரையும் சேர்த்து வைப்பதோ அல்லது கூட்டி வைப்பதோ, அவர் சொல்லி நாங்கள் சேரவும் இல்லை, யாரும் பிரிந்து விடவும் இல்லை. இது புரட்சிகரமான ஒரு சட்டம் அல்ல. ஒரு துவக்கமே. தங்கமணி அவர்களிடம் என் கருத்தைச் சொல்லச் சொன்னேன். இதுவே ஒரு பெரிய மசோதா என்று பொருள் அல்ல. நல்லதொரு துவக்க



மாக இருக்கிற வகையில் துவங்கப்பட்டிருக்கிறது. அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது. நிரந்தரப் பகைவர்களும் கிடையாது. கொள்கைப்படி தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** என்னை நான் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. எனக்கு எந்த அளவிற்கு ஆதரவு இருக்கிறது, கிராமங்களில் ஆதரவு இருக்கிறது என்று தெரியும். வோட்டர்களின் பல்ஸ் எனக்குத் தெரியும். அதில் நான் யாருக்கும் பின்வாங்கியவன் அல்ல. அது வேறு விஷயம். மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் எழுந்துநின்று அதேநேரத்தில் 71 கூட்டணியில் சேர்ந்தவர்களும் நிற்கும்போது விந்தையாக இருந்தது. நான் குத்திக் காட்டச் சொல்லவில்லை. நான் சொல்வது, அரசாங்கம் மீண்டும் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து திருத்தங்கள் கொண்டுவரவேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்கிறேன். லாஸ்ட் மினிட் அப்பீல். பிறகு நீங்கள் செய்வதைச் செய்து கொள்ளுங்கள், அது உங்கள் இஷ்டம் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** பொறுக்குக் குழுவிற்கு விடாமல் இந்தச் சபையில் சில மணி நேரங்களுக்குள் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே இது பொறுக்குக் குழுவிற்குப் போகவேண்டிய அவசியமில்லை என்பது நன்கு தெரியும். அதோடு அவர்கள் இங்கு பேசியதைத்தான் அங்கும் பேசியிருப்பார். அது எப்போதுமுள்ள விஷயந்தான். செலக்ட் கமிட்டிக்குப் போவது என்றால் சுற்றிச் சுற்றிப் பேசி வம்பிழுக்கும் வேலையே தவிர ஆராய்ச்சி செய்து உண்மைகளைக் கண்டுபிடிக்கும் விஷயம் அல்ல. ஹாண்டே அவர்களுக்குச் சொல்கிறேன்.

இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு தேர்தல் பற்றிப் பேசுகிறார்கள். அந்த மிரட்டல் ஒன்றும் நடக்கப் போவதில்லை. தமிழக மக்கள் புத்திசாலிகள். ஹாண்டே அவர்களுக்குத் தமிழக மக்கள் நிச்சயமாக அவர்கள் மறக்கமுடியாத அளவிற்கு தேர்தல் முடிவு இருக்குமே தவிர வேறு விதமாக இருக்காது என்று தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை சுறுசுறுப்பாக நிறைவேற்றியதற்காக என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் இதை அமல் படுத்துவதிலும் மிகவும் கண்காணிப்புடன் இருந்து இந்த விவசாயிகளுக்கு நிலம் கிடைப்பதற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிந்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தேர்தலுக்கு நிற்பதுபற்றி, நான் மூன்று தேர்தல்களில் நின்று மூன்றிலும் வெற்றி பெற்று வந்திருக்கிறேன். எந்த ஒரு தேர்தலிலும் நான் தோல்வி அடையவில்லை. ஆனால் 1967-ல் தி. மு. க. ஆதரவு இல்லாமல் சிலர் தோல்வியடைந்திருக்கிறார்கள். பிறகு 71-ல் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அது வேறு விஷயம். கூட்டணி சார்பில் வெற்றி பெற்றிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் நான் தேர்தலில் தோல்வி அடைந்ததில்லை. நான் சொல்வது, ஏராளமான மக்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள், அரைகுறையாக வந்தால் பாதிக்கப்படுவார்களென்று சொன்னேனே தவிர எந்த சமுதாயத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. தேர்தலில் நான் தோல்வி அடைந்ததில்லை. அதைப்பற்றி நான் மார்தட்டிக்கொண்டு பேசுவேன். அது வேறு விஷயம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் உழுபவனுக்கு இதனால் பலன் உண்டா என்று கேட்டார்கள். டில்லேர்ஸ், ஏர் பிடித்து உழுபவனுக்குப் பலன் உண்டா என்று கேட்கிறார்கள். ஏர் பிடித்து உழுகிற லட்சக்கணக்கானவர்களுக்குப் பலன் ஏற்படுத்துவதற்காகத்தான் சாத்வீக முறையில் மகத்தானதொரு சட்டத்தை இந்த அவை இவ்வளவு குறுகிய நேரத்தில் நிறைவேற்றியிருக்கிறது. இதற்காக டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் பாராட்டு தெரிவிக்கவேண்டும் இந்த அவைக்கு. அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும். மணலி அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். ஹாண்டே அவர்கள்கூட மனதில் கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கையை வைத்திருப்பதாக எங்களிடம் சொல்வதுண்டு. அந்தக் கொள்கையை வைத்திருப்பவர் பாராட்டியிருப்பார் என்று எதிர்பார்த்தேன்.

இந்தச் சட்டத்தை, தமிழ்நாட்டில் ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, இலட்சக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்கள், இதுவரை உழுதுகொண்டு இருந்தவர்களை அந்தந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக ஆக்கும் மகத்தான சட்டத்தை இம்மன்றம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) திருத்தப்பட்டபடி, நிறைவேற்றப்பட வேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு, திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது. (ஆரவாரம்.)

**(உ) தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/73).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு *(சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 12/73) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 1/1959) முதலாம் விவர அட்டவணையில் கட்டுபாள இயந்திரம், சுரங்க யந்திரங்கள், நிலத்தைச் சமன்படுத்தும் யந்திரங்கள் மண்லாரி டிராக்குகள் ஆகியவை பற்றிக் குறிப்பான பதிவு எதுவும் தற்போது இல்லை. இதன் விளைவாக மேற்சொன்ன சட்டத்தின்கீழ் இந்த இனங்களுக்கு வரி விதிப்பது குறித்து வரி விதிக்கும் அதிகாரிகள், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இதைக் கருதி மேற்படி சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் இந்த இனங்களைத் தனிப்பட்ட இனமாக வகைப்படுத்துவதன்மூலம் இம்மாநிலத்தில் இவ்வகை இயந்திரங்களின் விற்பனையின் மேல் முதல் விற்பனை முனையில் 9 சதவீதம் என்னும் ஒரே படித்தான வீதத்தில் வரி விதிக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. மேற்படி சட்டத்தின் 59 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டதன் மூலம் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது.

சட்டத்திலுள்ள தெளிவற்ற நிலையைத் தவிர்ப்பதற்காக மேற்படி சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் அந்தந்த இடங்களில் அதாவது 1-வது இனத்திலும் 9-வது இனத்திலும் விளக்கப் பகுதிகளில், தட்டச்சு இயந்திர நாடாக்கள், இசைத்தட்டுகள், இசைத்தட்டு ஊசிகள் ஆகியவை திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி சட்டத்தின் 59 (1) பிரிவின்கீழ் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் மூலம் இதற்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் 59 (2) பிரிவைச் சேர்ந்த முதலாம் வரம்பு நிபந்தனையின் கீழ், மேற்குறிப்பிட்ட அறிவிப்புகளுக்குப் பதிலாகச் சட்டவரைவு ஒன்று சட்டமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரில் கொண்டுவரப்படவேண்டியுள்ளது.

---

* 1973 மார்ச் 30-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/73

[திரு. ப. உ. சண்முகம்] [1973 ஏப்ரல் 3

இம்மாநிலத்தில் தற்பொழுது ரப்பர் 3½ சத வீத பலமுனை வரி விதிப்பிற்கு உட்பட்டது. இம்மாநிலத்தில் ரப்பர் முதற்கண் வாங்கப்படும் முனையால் அதற்கு 5 சதவீத ஒரு முனை வரி விதிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட செயற்குறிப்புகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரித் (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 12/73 கொண்டு வரப்பட்டு பேரவையின் ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளது.

**இப்பிரேரணையை இம்மாமன்றம் ஏற்றுக்** கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்தச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவில் முடிவுற்று, 5—4—1973, வியாழக்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.51 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

### (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

95. Notification issued with G.O. Ms. No. 242, Housing, dated the 3rd October 1972, making the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [*Laid on the Table of the House under section* 72 (2) *of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act*, 1971 (*Tamil Nadu Act* 11 *of* 1971).]



1973 ஏப்ரல் 3]

96. Notification issued with G.O. Ms. No. 311, Rural Development and Local Administration, dated the 18th February 1972, in regard to certain amendments to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 380 of 1961—published at pages 211 to 212 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette dated the 24th May 1961, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

97. Notification issued with G.O. Ms. No. 3146, Agriculture, dated the 29th December 1972, in regard to regulation of trade for the purchase and sale of groundnut, chillies and sugarcane, jaggery in all forms at the Market at Lalgudi in Tiruchirappalli district. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

98. Notification issued with G.O. Ms. No. 3145, Agriculture, dated the 29th December 1972, in regard to establishment of a market at Sathyamangalam in Coimbatore district to provide facilities for the purchase and sale of cotton, groundnut, tobacco, turmeric, maize, sugarcane and jaggery. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

### B. *Reports, Notifications and Other Papers*

@160. Annexure to the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12 of 1973).

161. Report of the Committee on Estimates on Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

---

@ Despatched to Members on 31st March 1973.

## இணைப்பு I

248ம் பக்கத்தில் வெளிக்குறியிட்ட வினா எண் 613-க்கு விடை.]

The posts in the Corporation of Madras in which the Adi-Dravidas are employed are as follows :—

| | Number of persons |
|---|---|
| 1. Superintendents and Manager ... ... | 4 |
| 2. Upper Division Clerks ... ... ... | 13 |
| 3. Lower Division Clerks and Typists ... | 10 |
| 4. Attenders ... ... ... ... ... | 4 |
| 5. Peons and Lascars ... ... ... ... | 165 |
| 6. Watchmen ... — ... ... ... | 6 |
| 7. Drivers ... ... ... ... ... | 14 |
| 8. Medical Officer ... ... ... ... | 1 |
| 9. Supervisor ... ... ... ... ... | 1 |
| 10. Surveyor ... ... ... ... ... | 1 |
| 11. Sanitary Inspectors ... ... ... | 3 |
| 12. Conservancy Inspectors ... ... ... | 7 |
| 13. Licence Inspector ... ... ... ... | 1 |
| 14. Tax Collectors ... ... ... ... | 7 |
| 15. Rent Collectors ... ... ... ... | 4 |
| 16. Process Server ... ... ... ... | 1 |
| 17. Sewer Superintedents ... ... ... | 2 |
| 18. Store Keepers ... ... ... ... | 2 |
| 19. Time Keepers ... ... ... ... | 5 |
| 20. Electricians ... ... ... ... | 2 |
| 21. Weighman ... ... ... ... | 1 |
| 22. Chargeman ... ... ... ... | 1 |
| 23. Pharmacists ... ... ... ... | 2 |
| 24. Lay Secretary ... ... ... ... | 1 |
| 25. Water Analyst ... ... ... ... | 1 |



| | Number of Persons |
|---|---|
| 26. Female Ward Attenders ... ... ... | 3 |
| 27. Gollah (R.D. Cash) ... ... ... | 1 |
| 28. Brick Layers ... ... ... ... | 5 |
| 29. Fitters ... ... ... ... ... | 7 |
| 30. Cleaners ... ... ... ... ... | 16 |
| 31. Firemen (Water Works) ... ... ... | 3 |
| 32. Telephone Operator ... ... ... | 1 |
| 33. Gardeners ... ... ... ... | 10 |
| 34. Thozhilalies ... ... ... ... | 505 |
| 35. Turn Cock (Water Works Department) ... | 1 |
| 36. Boostermen (Water Works Department) ... | 2 |
| 37. Sanitary Workers ... ... ... | 100 |
| 38. Shaft Thozhilali (Water Works Department) | 1 |
| 39. Carting Maistry ... ... ... ... | 1 |
| 40. Conservancy Thozhilalies ... ... ... | 468 |
| 41. Health Visitors ... ... ... ... | 9 |
| 42. Staff Nurse ... ... ... ... ... | 1 |
| 43. Midwives ... ... ... ... ... | 102 |
| 44. Ayahs ... ... ... ... ... | 19 |
| 45. Road Roller Drivers ... ... ... | 12 |
| 46. Operators (Works Department) ... ... | 2 |
| 47. Mechanical-*cum*-Sprayer ... ... ... | 1 |
| 48. Typist ... ... ... ... | 1 |
| 49. Assistant Jointer ... ... ... | 1 |
| 50. Buffet Attender ... ... ... ... | 1 |
| 51. Assistant Overseer ... ... ... ... | 1 |
| 52. Teachers ... ... ... ... ... | 447 |
| Total ... | 1,980 |

சென்னை மாநகராட்சியில் ஆதி திராவிடர்கள் பணிபுரிந்து வரும் பதவிகள் பின்வருமாறு :—

| பதவிகளின் பெயர். | நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. கண்காணிப்பாளர்கள், மேலாளர் | 4 |
| 2. மேல்பிரிவு எழுத்தர்கள் | 13 |
| 3. கீழ்ப்பிரிவு எழுத்தர்களும், தட்டச்சர்களும் | 10 |
| 4. சிற்றெழுத்தர்கள் | 4 |
| 5. கடைநிலை ஊழியர்கள், லஸ்கர்கள் | 165 |
| 6. காவற்காரர்கள் | 6 |
| 7. வலவர்கள் | 14 |
| 8. மருத்துவ அலுவலர் | 1 |
| 9. மேற்பார்வையாளர் | 1 |
| 10. நில அளவையர் | 1 |
| 11. உடல்நல ஆய்வாளர்கள் | 3 |
| 12. துப்புரவு ஆய்வாளர்கள் | 7 |
| 13. உரிம ஆய்வாளர் | 1 |
| 14. வரி வசூலிப்பவர்கள் | 7 |
| 15. வாடகை வசூலிப்பவர்கள் | 4 |
| 16. கட்டணச் சேர்ப்பிப்போர் | 1 |
| 17. சாக்கடைக் கண்காணிப்பாளர்கள் | 2 |
| 18. பண்டகசாலைக் காப்பாளர்கள் | 2 |
| 19. காலங்குறிப்பவர்கள் | 5 |
| 20. மின் பணியாளர்கள் | 2 |
| 21. எடை நிறுப்பவர் | 1 |
| 22. பொறுப்பாளர் | 1 |
| 23. மருந்தாக்குநர் | 2 |
| 24. ஆட்சிச் செயலாளர் | 1 |
| 25. நீர் பகுப்பாய்வாளர் | 1 |
| 26. வார்டு பெண்பணியாளர் | 3 |



| பதவிகளின் பெயர். | நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 27. பணம் எண்ணுபவர் (வருவாய்த்துறை-பணம்) | 1 |
| 28. கொத்தனார்கள் | 5 |
| 29. பிட்டர்கள் | 7 |
| 30. சுத்தம் செய்பவர்கள் | 16 |
| 31. தீ மூட்டுபவர் (நீர்ப்பணிகள்) | 3 |
| 32. தொலைபேசி இயக்குபவர் | 1 |
| 33. தோட்டக்காரர்கள் | 10 |
| 34. தொழிலாளிகள் | 505 |
| 35. குழாய் வேலை செய்பவர் (நீர்ப்பணித்துறை) | 1 |
| 36. விசையேற்றத்தை இயக்குபவர் | 2 |
| 37. துப்புரவு பணியாளர்கள் | 100 |
| 38. ஷேப்ட் தொழிலாளிகள் (நீர்ப் பணித்துறை) | 1 |
| 39. பாரம் ஏற்றும் மேலாள் | 1 |
| 40. துப்புரவுத் தொழிலாளிகள் | 488 |
| 41. சுகாதாரப் பார்வையாளர் | 2 |
| 42. பணிச் செவிலியர் | 1 |
| 43. மருத்துவச்சிகள் | 102 |
| 44. ஆயாக்கள் | 19 |
| 45. சாலை உருளை ஓட்டுநர்கள் | 12 |
| 46. இயக்குபவர்கள் | 2 |
| 47. இயந்திர கம்மியர் மருந்து தெளிப்பவர் | 1 |
| 48. தட்டச்சர் | 1 |
| 49. உதவி இணைப்பாளர் | 1 |
| 50. சிற்றுண்டி வாங்கிவரும் பணியாள் | 1 |

| பதவிகளின் பெயர். | நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 51. உதவி மேற்பார்வையாளர் | 1 |
| 52. ஆசிரியர்கள் | 447 |
| மொத்தம் | 1,980 |

## இணைப்பு II

338-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**4—3—1972 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் 299 (923) ஆம் வினாவின் ஒரு துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைத் திருத்தி மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அளிக்கும் விவர அறிக்கை.**

4—3—1972 அன்று, *299 (923) ஆம் எண் சட்டமன்றப் பேரவை வினாவின் துணை வினா ஒன்றுக்குப் பதிலளிக்கையில், நான், 1964 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் இந்தியாவுக்கு வந்த இலங்கையைச் சேர்ந்த இந்திய வமிசாவழியினர் அகதிகளாகக் கருதப்படுவதில்லை என்று கூறினேன்.

மேற்படி பதிலுக்குக் கீழ்க்கண்டபடி திருத்தம் அளிக்க விரும்புகிறேன்.

"1964-ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் வாராத, இலங்கையில் உள்ள இந்திய வமிசாவழியினரும், 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு முன்னர் அல்லது பின்னர் இந்தியாவிற்கு வந்தவர்களும் அகதிகளாகக் கருதப்படுகின்றனர். ஆனால், இந்த அகதிகள், 1964-ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ்வரும் அகதிகளைக் குடியமர்த்த எடுக்கப்படும் துயர் தணிப்பு உதவி, புதுவாழ்வு உதவிகளைப் பெறுவதற்குத் தற்போதைக்குத் தகுதியற்றவர்களாவர். எனினும், இலங்கையில் சலவைத் தொழில், முடி திருத்தும் தொழில், மின் பணியாளர் தொழில் முதலிய தொழில் செய்து வந்தவர்கள் இங்கும் தொடர்ந்து அத் தொழிலைச் செய்ய விரும்புவார்களாயின் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 500-க்கு மேற்படாத தொழில் கடன் வழங்குதல், அரசுப் பணிகளில் நியமிக்கப்படுவதற்கான தகுதிகளை இவர்கள் முற்றிலும் பெற்றிருப்பின், வயது, கல்வித் தகுதி தொடர்பான விதிகளைத் தளர்த்தி அரசுத் துறைகளில் நியமிக்கப்படுவதில் முன்னுரிமை அளித்தல், பள்ளி, கல்லூரி





மாணவர்களுக்கு உணவுச் செலவுக்கான உதவித் தொகைகள் (சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு) அளித்தல், பிற தகுதிகளைப் பெற்றிருப்பின் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளுவதில் அகதி-மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்தல், போன்ற சில உதவிகளை மாநில அரசு இவர்களுக்கு அளித்து வருகிறது. 1964-ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் வரும் அகதிகளுக்கு அளிக்கப்படும் துயர் தணிப்பு-புதுவாழ்வு உதவிகள் இவர்களுக்கும் வழங்குமாறு வேண்டி இவ்வரசு, இந்திய அரசுக்கு எழுதியுள்ளது. இது இந்திய அரசின் ஆய்வில் உள்ளது."

[STATEMENT MADE BY THE HON. MINISTER (HARIJAN WELFARE) ON THE FLOOR OF THE ASSEMBLY CORRECTING THE ANSWER TO A SUPPLEMENTARY QUESTION TO QUESTION No. 299 (923) ON THE FLOOR OF THE ASSEMBLY ON 4TH MARCH 1972.]

While furnishing answer to a supplementary question to Legislative Assembly Question No. 299 (923) (Starred) on 4th March 1972, it was stated by me that the Indian Origins in Ceylon who came to India before the Srimavo-Shastri Agreement, 1964 are not treated as repatriates:

I would like to correct the above statement as below :—

" The Indian origins in Sri Lanka who are not covered by the Srimavo-Shastri Agreement, 1964 and who came to India either before or after the Agreement of 1964 are also treated as repatriates, but with the difference that these repatriates are *not eligible* at present for any of the relief and rehabilitation measures undertaken for the settlement of the repatriates covered by the Indo-Ceylon Agreement, 1964. However, the State Government are providing them with certain assistances like sanction of artisan loan not exceeding Rs. 500 each to those who were dhobies, barbers, electricians, etc., in Sri Lanka, if they desired to continue their avocation, priority in the matter of employment in the Departments of the State Government by relaxation of rules relating to age, educational qualifications, etc., if they are found *prima facie* suitable for such appointments, boarding grants to students studying in schools and colleges (subject to certain

conditions) and preference for the student-repatriates in the matter of admission to training schools, if other things are equal. This Government have addressed the Government of India for extending the relief and rehabilitation assistances provided to the repatriates covered by the Indo-Ceylon Agreement, 1964 to these repatriates also and the matter is under consideration of the Government of India."

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## வியாழக்கிழமை, 1973 ஏப்ரல் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

*Death of under trial prisoner in Tiruchirappalli Central Jail*

* 6 S.N. Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether an under trial Railway Worker died in Tiruchirappalli Central Jail on 29/30th March 1973 by falling into well inside Jail;

(b) if so, the details thereof; and

(c) what action has been taken to prevent recurrence of such incidents ?

THE HON. THIRU S. MADHAVAN: (a) & (b): One Arul Selvaraj, a Railway worker, who was charged with murder of his child was remanded to custody in the Central Jail, Tiruchirappalli, by Sub-Magistrate-II, Tiruchirappalli. On 24th March 1973, the Sub-Magistrate committeed the accused to take his trial at the Sessions. On 29th March 1973, the prisoner was found missing at breakfast time. A search was ordered. It was found that he had meddled with the wicket gate of a covered well, had jumped into the well and was drowned. He was rescued from the well and sent to the jail hospital. He died there.

(c) In order to guard against the possibility of prisoners committing suicide, the wells in jails are covered and the tress are fenced with barbed wires. Besides, a close watch is kept over prisoners by the jail staff.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்தக் குறிப்பிட்ட இரயில்வே தொழிலாளி, அருள் செல்வராஜ் என்பவர் மன நோய் உள்ளவராக இருந்து, தன்னுடைய குழந்தையையே தூக்கி எறிந்த குற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு அம்மாதிரியான டென்டன்சி இருக்கும் என்பதைக் கருதி, சரியான பாதுகாப்பு ஏன் அவருக்குக் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில்தான் அவரைத் தனியாக ஒரு அறையில் வைத்துக் கண்காணித்து வந்திருக்கிறார்கள். ஆனால், உணவு அருந்தச் செல்லும்போது அவர் பையத் தப்பித்துச் சென்று, பக்கத்திலுள்ள விக்கெட் கேட்டைத் திறந்து கிணற்றில் விழுந்துவிட்டதென்பது எதிர்பாராது நடந்துவிட்ட நிகழ்ச்சியாகும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக இது பாதுகாப்பு ஏற்பாட்டுக்கு உரிய பிரச்சினையாக இருப்பதால், இதற்காக அது சம்பந்தப்பட்ட வார்டர் போன்றவர்களை சஸ்பெண்டு செய்வதனால் இதற்கு ஒரு பரிகாரம் தேடுவதாக இருக்காது என்ற முறையில் அப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல், ஜெயிலுக்குள்ளே இருக்கக்கூடிய கிணறுகளை இன்னும் சற்று அதிகப் பாதுகாப்போடு வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஜெயிலில் கம்பிகளெல்லாம் போட்டுதான் வைத்திருக்கிறார்கள். மூடப்பட்ட கிணறுக்குப் போவதற்கு விக்கெட் கேட்டும் போட்டுத்தான் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னதைப் போல், ஏதோ எதிர்பாராத விதத்தில் நடந்துவிட்டதற்காக அங்குள்ள வார்டரைப் பழி வாங்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தும். என்றாலும் முறைப்படி அவர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டு, விசாரணை செய்து முடிவு எடுப்பார்கள்.

### *Loans from Commercial Banks*

*626 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total amount of loan borrowed by the Government from Commercial Banks during 1967–1970;

(*b*) the rate of interest and mode of repayment; and

(*c*) the details thereof?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ–இ) விவர அறிக்கையொன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### ஆண்டிப்பட்டி குடிநீர் வழங்கு திட்டம்

*627 வினா—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வைகை அணையிலிருந்து ஆண்டிப்பட்டிக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்கான நீர் வழங்குத் திட்டத்தின் ஆய்வு முடிக்கப்பட்டு, பொது விவரச் செயற்குறிப்புகள் இப்பொழுது முடிவு பெற்றுள்ளன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, as a Member of the Committee on Estimates I had an occasion to see that area—the other Members of the Committee also saw it. It is really a very dry area and it gives an appearance of almost a desert and it remains in the rain-shadow area and by the side of the Vaigai Dam. Unless some special scheme is implemented, the area cannot be improved and the green revolution cannot take place. So may I know whether the present proposal will be implemented as early as possible?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பொதுவாக அந்தப் பகுதியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். கேள்வி, ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்கான நீர் வழங்குத் திட்டத்தைப்பற்றியது. முதல் கட்டமாக இந்தக் காரியம் நடைபெறுகிறது. அவர்கள் சொன்னதையும் மனத்திலே கொண்டு அந்தப் பகுதி மேலும் முன்னேறுவதற்கான வழி வகைகளை அரசு ஆராயும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: I only stated about Andipatti and not other areas.

**திரு. த. சோலையா:** தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி குடிதண்ணீர்த் திட்டத்திற்காகத் தேவைப்படும் தண்ணீர் வைகை

---

@ 673–676 பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

அணைத் தேக்கத்திலிருந்து எடுக்கப்படுகிறதா? அல்லது வேறு எந்த முறையில் தண்ணீர் எடுக்க இந்தத் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்தில் வைகை யாற்றிலிருந்து தண்ணீர் எடுக்க இந்தத் திட்டத்தின்மூலம் உத்தே சிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆய்வு மதிப்பீட்டுக்காக ரூ. 19,500 என்று கணக்கிடப்பட்டு, 23—8—1971-இல் ஏற்பு அளிக்கப்பட்டு, ஆய்வுச் செலவு பேரூராட்சியால் மேற்கொள்ளப் பட்டு, ஆய்வு வேலை இப்பொழுதுதான் முடிவுற்றிருக்கிறது. இப் பொழுது அவுட்லைன் ப்ரொபோசல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதனுடைய இறுதி மதிப்பீட்டைச் சொல்ல முடியாது. அவுட்லைன் ப்ரொபோசலின்படி ரூ. 24.22 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவாகும் என்றும், தொடர்ச் செலவு ஆண்டுக்கு ரூ. 87,000 ஆகும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அவுட் லைன் ப்ரொபோசல்தான்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** வைகை அணை யிலிருந்து மதுரைக்குத் தண்ணீர் கொண்டுபோக அணைக்கட்டில் இரண்டு துவாரங்கள் போடப்பட்டிருக்கின்றன. மதுரை நகரத் தில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருப்பதாலும் அதுபோன்று இன்னும் பல பகுதிகள் இருப்பதாலும், இந்தத் துவாரங்கள் வழியாகத் தண்ணீர் சப்ளைசெய்ய ஏற்பாடு செய்ய அரசு ஆராயுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மூலக் கேள்வி ஆண்டிப் பட்டியைப் பொறுத்தது. அதுபற்றிய விவரங்கள்தான் வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோருவதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஆண்டிப்பட்டியை ஒட்டியிருக்கக் கூடிய செக்கம்பட்டியில் தண்ணீர்ப் பற்றுக்குறை இருக்கிறது.





இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாகத் துவக்குவதற்கும், செக்கம் பட்டிக்கும் இதை விஸ்தரிப்பதற்கும் தக்க ஏற்பாடு செய்யப் படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது இந்த ஆண்டிப்பட்டி குடி தண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதன்மூலம் 14 கிராமங்கள் பயன் அடைகின்றன. குன்னூர், அரப்படிதேவன்பட்டி, கல்லுப்பட்டி, பிராதுகாரன்பட்டி, கதிரப்ப கவுண்டன்பட்டி, திம்மலாபுரம், முத்தனம்பள்ளி, மலையாண்டிபுரம், மலையப்பட்டி, ரெங்கசமுத்திரம், ஸ்ரீரெங்கபுரம், கரிசல்பட்டி, சண்முகசுந்தரபுரம், பாயப்பட்டி ஆகிய இந்தப் பதினான்கு கிராமங்கள் பயன்பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கிராமத்திற்கான திட்டமும் வேறு பல திட்டங்களும் விரைவில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

### மாயூரம் மகளிர் கல்லூரிக்கான கட்டடம்

*628 வினா—திரு. என். கிட்டப்பா :
திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் அரசினர் ஞானாம்பிகை மகளிர் கல்லூரிக்கான கட்டட வேலை துவங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், கட்டட வேலை எப்போது முடியும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) செப்டம்பர் மாதத்தில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அதற்கான மதிப் பீட்டுத் தொகை என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ரூ. 13,35,000-க்கு ஏற்பு வழங்கப்பட்டிருக்கிறது. இத் திட்டம் சனவரித் திங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் திங்களில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : அரசினர் மகளிர் கல்லூரிக்கு 'ஞானாம்பிகை' என்னும் பெண்ணின் பெயர் இணைக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசினர் கல்லூரிக்கும் குறைந்தபட்சம் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை தருபவர்களுக்குத்தான் அவர்கள் குறிப்பிடுகிற பெயர் வைக்கவேண்டும் என்ற நியதி இருக்கிறது அப்படியிருக்க, ஞானாம்பிகை என்ற பெயரில் வைக்கப்பட்டிருப்பதால் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதனுடைய முழு விவரமும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். தெரிந்திருந்தும் அவர்கள் கேட்கிறார்கள். தருமபுர ஆதீனம் இரண்டு லட்ச ரூபாய் இதற்கு உதவித் தொகை தந்து ஞானாம்பிகை தெய்வத்தின் பெயரால் இந்த மகளிர் கல்லூரியை வைக்க இணங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேறு யாரும் தொகை ஏதும் வழங்காத நிலையில் ஐந்து லட்ச ரூபாய் தொகை அளித்தபிறகு கல்லூரியை வைத்திருக்கவேண்டும். ஆனால், ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் ரூபாய் தருகிற காலத்திலேயே இந்தக் கல்லூரி அங்கே துவங்கப்பட்டது தவறாகும். ஐந்து லட்ச ரூபாய் தந்தபிறகு துவங்கியிருந்தால் இந்த இடர்ப்பாடு வந்திருக்காது. தருமபுர ஆதீனம் இரண்டு லட்ச ரூபாய் தருவதாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் பேசியதின் விளைவாக அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

*Auto testing Laboratory in Guindy Engineering College*

* 629 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any auto-testing laboratory is functioning at the Engineering College Campus, Guindy, Madras; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ & இ) ஊர்திப் பொறியியல் ஆய்வகம் ஒன்றை 1972-ல் கிண்டி பொறியியல் கல்லூரியில் புதிதாகத் தொடங்க இவ்வரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாய்வகத்தின் கட்டட வேலைகள் முடியும்தறுவாயில் உள்ளன. தவிரவும் முப்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள





தளவாடங்களும் வாங்கப்பட்டுள்ளன. ஊர்திப் பொறியியலின் ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் ஆய்வுத் தேவைகளை இந்த ஆய்வகம் நிறைவேற்றும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்திலே எத்தனை மாணவர்களைச் சேர்ப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ? எத்தனை பேர் இதுவரையிலும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்ற விபரத்தை அறிவிப்பார்களா ?

மாண்புகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கென்று தனியாக மாணவர்களைச் சேர்க்கவில்லை. ஆட்டோமோட்டிவ் எஞ்சினியரிங் பிரிவை ஏற்படுத்தி அங்கே படித்த மாணவர்கள் இதில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு இருக்கும் என்று கருதித் தொடங்கப்பட்டது. ஆய்வு அளவிலே கூட ஏற்பட்டிருந்தாலும் வளரும் நிலை ஏற்பட்டால் ஆட்டோமொபைல் எஞ்சினியரிங் பிரிவை வளர்க்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற மற்றத் துறைகளுக்கும் பயன்படுகின்ற வகையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : கிண்டியில் தொடங்க இருக்கும் இந்த ஊர்தி பொறியியல் பிரிவில் அங்கே ஆட்டோமோட்டிவ் எஞ்சினியரிங் படித்தவர்களைமட்டும் சேர்த்துக்கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதோடு புதிய மாணவர்களைச் சேர்த்துப் பயிற்சியளிக்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்துமா ?

மாண்பூமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கென்று புதிய மாணவர்களைச் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. கிண்டி எஞ்சினியரிங் பிரிவில் மெக்கானிக்கல் எஞ்சினியரிங் பயிற்சி பெற்றவர்கள் இந்த ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு, நன்மை பெற முடியும் என்ற நோக்கத்தோடு இது தொடங்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்தப் பிரிவு சென்னை கிண்டியில் தவிர, வேறு ஏதாவது மாவட்டக் கல்லூரிகளில் இருக்கிறதா ? இல்லை என்றால் அடுத்துவரும் ஆண்டுகளில் தொடங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேறு சில குறிப்பிட்ட கல்லூரிகளிலும் இப்பிரிவு இருக்கிறது. அதற்கான விபரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் தகவல் சேகரித்துக் கொடுக்கப்படும்.

## *Kannagi Temple*

* 630 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the (1) Kerala Government and (2) Travancore Devaswom Board have sent any report to the State Government about the Kannagi Temple in Kerala State; and

(*b*) if so, the details thereof ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*** : (1) கண்ணகிக் கோவிலை இவ்வரசின் பாதுகாப்பிற்காக ஒப்படைக்கக் கோரி 1971-ம் ஆண்டிலேயே கேரள அரசுக்கு எழுதப்பட்டது. இக் கோரிக்கை தனது அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கேரள அரசு தெரிவித்துள்ளது.

(2) திருவிதாங்கூர் அறநிலைய வாரியத்திற்கு இவ்வரசு கடிதம் எதுவும் எழுதவில்லை.

(இ) கேரள அரசிடமிருந்து இப்பொருள்பற்றி மற்றபடி தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

***திருமதி ஜோதி வெங்கடாசலம்*** : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு கேரள அரசுக்கு அதைப்பற்றி எழுதியும் இதுவரையில் பதில் வரவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன ? மீண்டும் நமது அரசு அதை நினைவுபடுத்தியிருக்கிறதா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*** : தலைவரவர்களே, கேரள அரசு அங்கே இருக்கிற தொல்பொருள் ஆராய்ச்சித் துறையைக் கலந்தாலோசித்து முடிவு அறிவிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். பதில் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

***புலவர் சி. பழனிச்சாமி*** : தலைவரவர்களே, இந்த கேரள மாநிலத்தில் இருக்கிற கண்ணகி கோயிலை முதலில் ஆராய்ந்து கண்டறிந்தவர் யார் ? அவருக்கு ஏதாவது பரிசு அளித்துச் சிறப்பு செய்ய நமது அரசு முன்வருமா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*** : தஞ்சை கரந்தை புலவர் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் கண்டறிந்து கூறியிருக்கிறார். அந்த கோயிலைப்பற்றிய முழு விபரமும் கேரள அரசிடமிருந்து கிடைத்தபிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியும்.



***திருமதி ஜோதி வெங்கடாசலம்*** : தலைவரவர்களே, கேரள அரசு அந்தக் கோயிலை நம்மிடம் கொடுக்கவேண்டாமென்று கேரளத்திலுள்ள லோக்கல் பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பதாக நான் அறிகிறேன். அது நம்முடைய அரசுக்குத் தெரியுமா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*** : அங்கே இருக்கிற தேவஸ்வம்போர்டு அதிகாரிகள் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் அந்தக் கோயிலைத் தமிழ் நாட்டு அரசிடம் ஒப்படைக்க வேண்டாமென்றும் கேரள அரசைக் கேட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால் நமக்கு அதிகாரப் பூர்வமான பதில் எதுவும் வரவில்லை. தமிழக எல்லையிலிருந்து அந்தக் கோயில் ஒரு மைல் தொலைவில் இருக்கிறது. அங்கே அந்த இடத்திற்கு வேங்கைக்கானல் என்றும் மங்களதேவிக் கோட்டம் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. அது ஒரு பாழடைந்த மண்டபம். 400 சதுர அடி பரப்பளவுடையது. 50 அடி நீளம், 8 அடி அகலம், 10 அடி உயரம் கொண்டதாக அந்த மண்டபம் இருக்கிறது. இவைகளைக் கொண்டுதான் அந்தப் பேராசிரியர் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதை அடிப்படையாகக்கொண்டு கேரள அரசை அந்தக் கோயிலை ஒப்படைக்க வேண்டுமென்று நமது அரசு கேட்டது. அவர்கள் ஆராய்ந்து அறிந்த பிறகு பதில் அனுப்புவதாகத் தெரிவித்தார்கள். முழு விவரமும் இன்னும் வரவில்லை.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார்*** : அங்கே இருக்கிற தேவஸ்வம் போர்டு இது கண்ணகி கோயில் அல்ல ; பகவதி அம்மன் கோயில் என்று அறிவித்திருப்பதாக மலையாளப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றிய திட்டவட்டமான முடிவுகள் நமக்கு வந்திருக்கின்றனவா ? கல்வெட்டுகளோ வேறு ஏதாவது சான்றுகளோ இருக்கின்றனவா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*** : கேரள அரசிடம் இருந்து முழு விவர அறிக்கை வந்த பிறகுதான் அதுபற்றி ஆராயப்படும். கண்ணகி கோயில்கூட காலப் போக்கில் பகவதி கோயில் என்று மாறியிருக்கிறது என்று வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். எதுவும் முழு விபரமும் தெரிந்த பின்னால் முடிவு செய்யப்படும்.

**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை :** தலைவரவர்களே, கண்ணகிக் கோயிலைப்பற்றிக் கூறும்போது அமைச்சரவர்கள் அது தமிழ்நாட்டு எல்லையிலிருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கிறது என்று சொன்னார்கள். கேரள எல்லையிலிருந்து சுமார் 25 மைல் தொலைவிலுள்ள பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பத்மனாபபுரம் கொட்டாரத்தை நாம் பிரிந்துவந்தபோது கேரள அரசுக்கு விட்டுக்கொடுத்தோம். அதைப்போலவே இப்போது ஒரு மைல் தொலைவிலுள்ள கண்ணகி கோயிலை நமக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமென்று நமது அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பத்மனாபபுரம் அரண்மனையை ஒப்படைத்தது, கேரளமும் தமிழ்நாடும் பிரியும் போது ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில். மொழிவழி மாநிலமாகப் பிரியும்போது இப்படிப்பட்ட ஒரு உடன்பாடு ஏற்பட்டிருந்தால் நாம் அதைக் கேட்கலாம்; அவர்களும் ஒப்புக் கொள்வார்கள். அப்போது இதுபற்றிய தகவல் நமக்குத் தெரியவில்லை. இப்போதுதான் நமக்கு அது தெரிய வந்திருப்பதால் கேரள அரசைக் கேட்டிருக்கிறோம். அவர்களின் பதிலை எதிர் பார்க்கிறோம். பதில் வந்த பிறகு இந்தப் பிரச்சினை குறித்து எப்படி அணுகமுடியுமோ அப்படி அணுகலாம்.

### *Assistance to Bharatiya Vidya Bhavan*

* 631 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Tamil Nadu Government have given any financial assistance to the Bharatiya Vidya Bhavan in Madras; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆம். பம்பாயிலுள்ள பாரதீய வித்யாபவனம் சென்னையில் அதன் ஒரு கிளையை நிறுவ மைலாப்பூரில் உள்ள ஒரு கட்டடத்தை விலைக்கு வாங்க வசதி செய்யும் பொருட்டு 1963-ல் ரூ. 25,000 மொத்த மானியமாக இம்மாநில அரசால் வழங்கப்பட்டது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, அதன் பணிகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதனுடைய பணிகள்பற்றிய முழு விவரம் தெரியவில்லை. பாரதீய வித்யாபவனம் அதனுடைய கிளை ஒன்றைச் சென்னையில் அமைக்க 1,60,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கட்டடத்தை வாங்குவதற்கு நம்முடைய அரசு மானியம் வழங்க வேண்டுமென்று 1963-லே கேட்டார்கள். அவர்கள் கோரிக்கையைப் பரிசீலித்து 25,000 ரூபாய் மானியமாக இந்த அரசு கொடுத்தது. ஆனால் அதனுடைய பணி விவரங்களுக்கான தகவல் இல்லை.

### கன்னியாகுமரி மாவட்ட நகரப் பஞ்சாயத்துக்களின் வருவாய் தரும் திட்டங்கள்

* 632. வினா—திரு. ஏ. பாலையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972—73-ம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நகரப் பஞ்சாயத்துக்கள் பஸ் நிலையம், சந்தை அபிவிருத்தி போன்ற வருவாய் தரும் திட்டங்களை (Remunerative Enterprises நிறைவேற்றுவதற்கெனக் கடன் கோரி அரசுக்கு எத்தனை மனுக்கள் அனுப்பியுள்ளன ?

(இ) அந்நகரப் பஞ்சாயத்துக்கள் எவை எவை ?

(உ) அவற்றில் இந்த நிதி ஆண்டில் எத்தனை பஞ்சாயத்துக் களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன ?

(எ) எவற்றிற்கேனும் கடன் வழங்கப்படாமலுள்ளனவா ?

(ஐ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ), (இ), (உ), (எ) & (ஐ) பிரதிபலன் தரும் திட்டத்தின்கீழ் (Scheme for remunerative enterprises) 1972—73 நிதியாண்டில் அரசு கடனுதவி கோரி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எந்தப் பேரூராட்சியிடமிருந்தும் கடன் விண்ணப்பங்கள் வரவில்லை.

### *Dam across river Kushastali*

* 633 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to construct a bed-dam across the river 'Kushastali' at Arumbakkam in

Tiruttani taluk and divert the surplus water into a chain of seven tanks ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இத்திட்டத்தின் செயற்குறிப்பு உள்ளூர் அலுவலர்களின் ஆய்வில் உள்ளது. அது இன்னும் அரசு பரிசீலனைசெய்யும் கட்டத்தை அடையவில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் சென்னை மாநகராட்சி தம் ஒப்புதலைக் கொடுக்க மறுக்கிறது. இருநூறு, மூந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இருந்துவரும் ஏரிகள் இவை. சென்னை மாநகராட்சி சமீபத்தில்தான் தோன்றியது. ஆகவே நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களுக்கு இருந்து வருகிற உரிமைகள் பாதிக்கப்படாத வண்ணம், தமிழக அரசு முயற்சி எடுத்து இவற்றுக்கு ஒப்புதலை பெற்றுத்தர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாநகராட்சி ஆணையர் அதுபற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அவரது பதில் வந்த பிறகு அரசாங்கம் இதுபற்றி முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### காக்கவாக்கம் அருகில் இசா ஏரிக்குத் தடுப்புச் சுவர்

*** 634 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், காக்கவாக்கம் இசா ஏரியின் எதிர் முனையில் தொளவேடு கிராமத்தைப் பாதுகாக்க அமைக்கப்படும் தடுப்புச்சுவர்த் திட்டம் (Bund) நிறைவேறுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைமைப் பொறியாளர் (பாசனம்) பல தொழில் நுட்பக்குறிப்புக்களை உள்ளூர் அதிகாரிகளை ஆய்வு செய்யுமாறு கேட்டுள்ளார். இவை ஆய்விலுள்ளன. இவ்வேலை தக்க அதிகாரிகளின் ஒப்புதல் கிடைத்த பின் துவங்கப்படும்.



**திரு. கா. வேழவேந்தன் :** ஒவ்வொரு ஆண்டு மழைகாலத்தின் போதும் இந்த இசா ஏரியின் எதிர்முனையில் உள்ள தொளவேடு கிராமம் பாதிக்கப்படுகிற காரணத்தினால் இந்த ஆண்டே இதனை எடுத்து நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். தலைமைப் பொறியாளரின் கவனத்திற்கு வந்தபிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் கரைகளுக்குத் தடுப்புச்சுவர்

*** 635 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் துணை வட்டம், காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் அரிப்பைத் தடுக்க கரைத் தடுப்புச்சுவர் (Revetment) அமைப்பதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இத்திட்டத்திற்கு ரூ. 1,05,000-க்கு ஒரு மதிப்பீடு பொதுப்பணித்துறை அலுவலரால் தயாரிக்கப்பட்டு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியருடைய ஒப்புதலுக்கும், நிதி ஒதுக்கவும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவரது பதில் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** என்னுடைய சொந்தக் கிராமமாகிய காரணி கிராமம் ஆரணியாற்றின் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப்பெற்று இந்தத் திட்டத்தை இவ்வாண்டே நிறைவேற்றித் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாவட்ட ஆட்சித் தலைவரின் பதில் கிடைத்தவுடன் நிறைவேற்றி வைக்கப்படும்.

### வெற்றிலை சாகுபடி

*** 636 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது எத்தனை ஏக்கர் நிலத்தில் வெற்றிலை சாகுபடி எவ்வளவு செய்யப்படுகிறது, மாவட்டவாரியாக ?

[1973 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தமிழகத்தில் தற்போது மாவட்ட வாரியாக வெற்றிலை சாகுபடியாகும் பரப்பளவு:—

| மாவட்டம். | பரப்பளவு. |
|---|---|
| செங்கல்பட்டு | 187 ஹெக்டர். |
| தென் ஆற்காடு | 451 ஹெக்டர். |
| வட ஆற்காடு | 268 ஹெக்டர். |
| சேலம் | 961 ஹெக்டர். |
| தருமபுரி | 819 ஹெக்டர். |
| கோயம்புத்தூர் | 461 ஹெக்டர். |
| தஞ்சாவூர் | 634 ஹெக்டர். |
| திருச்சிராப்பள்ளி | 582 ஹெக்டர். |
| மதுரை | 893 ஹெக்டர். |
| இராமநாதபுரம் | 256 ஹெக்டர். |
| திருநெல்வேலி | 556 ஹெக்டர். |
| கன்னியாகுமரி | 69 ஹெக்டர். |
| மொத்தம் | 6,077 ஹெக்டர். |

* 637 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) the places where betal leaves are cultivated in the State; and

(b) the incentives offered to these cultivators?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) தமிழ்நாட்டில் நீலகிரி, சென்னை மாவட்டங்கள்தவிர மற்ற மாவட்டங்களில் வெற்றிலை பயிரிடப்படுகிறது.

(இ) தமிழ் நாட்டில் வெற்றிலை பயிரிடுவோர்க்கு விசேடமான சலுகைகள் ஏதும் அளிக்கப்படவில்லை.

**திரு. என். கிட்டப்பா:** வெற்றிலை போடக்கூடியவர்கள் தமிழ் நாட்டில் அதிகமாக இருக்கிற காரணத்தினால், வெற்றிலை பயிரிடக் கூடியவர்களுக்கு இனிமேலாவது கடனாகவாவது, மானியமாகவாவது உதவி செய்ய அரசு முன்வருமா?



1973 ஏப்ரல் 5]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மானியமாக வழங்கப் படுவதில்லை. கடன்பெற கூட்டுறவுத்துறைக்கு விண்ணப்பித்தால் பரிசீலிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சில நேரத்தில் வெற்றிலைக் கொடிக்கால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அழுகிப்போகிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் உதவி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** எதிர்பாராதவிதமாக இப்படிப் பாதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. சமீபத்தில் தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டபோதுகூட சலுகை தரப்பட்டிருக்கிறது.

**திரு. சீ. க. வடிவேலு:** வெற்றிலைக் கொடிக்கால் திடீரென்று நோய்ப்பட்டு வெற்றிலை காய்ந்துபோகிறது. இதுபோல பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அப்படி ஒன்றும் இல்லை.

**திரு. ஏ. எம். இராஜா:** தமிழ்நாட்டில் 6,077 ஹெக்டேர் நிலத்தில் வெற்றிலை பயிரிடப்படுவதாகச் சொன்னார்கள். இவை அனைத்தும் தமிழ் நாட்டிலேயே பயன்படுத்தப்படுகிறதா? அல்லது வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறதா? அல்லது வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** 1970 டிசம்பர் திங்களில் ரூ. 5,428 மதிப்புள்ள வெற்றிலை வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டது. அதற்குப் பிறகு வேறு எங்கும் அனுப்பப்பட வில்லை.

**திரு. த. சோலையா:** தமிழ்நாட்டிலிருந்து வட மாநிலங்களுக்கு வெற்றிலை அனுப்பப்படுகிறது. வதங்கிவிட்டது என்றால் அந்த நஷ்டத்தை இங்குள்ளவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதனால் யாரும் அனுப்ப முன்வரவில்லை. ஆகவே ரயில்வே யுடன் தொடர்புகொண்டு வெற்றிலை வதங்காமல் அனுப்ப குளிர் சாதன வசதி ஏற்படுத்தித்தர முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** வட மாநிலங்களில் உள்ளவர்கள் பழுப்பு வெற்றிலையைத்தான் அதிகமாக விரும்பு கிறார்கள். ஆகவே இதனைப் பதப்படுத்த அவர்களே ஏற்பாடுகள்

செய்துகொள்கிறார்கள். அரசாங்கம் எந்தவிதமான ஏற்பாடும் செய்வதற்கில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in Krishnagiri taluk of Dharmapuri District, some villages like, Elathagiri, Kuppachiparai and Gangarayanakota, grow the best betel leaves and they are sent to other parts of the country and foreign countries also. May I know from the Hon. Minister for Agriculture whether he would take steps to see that those agriculturists are given incentives and help ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தர்மபுரியில் 819 ஹெக்டர் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னேன். வட நாட்டுக்கு முற்றிய வெற்றிலைதான் அனுப்பப் படுகிறது. கொழுந்து வெற்றிலை அனுப்பப்படுவதில்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** திருச்செந்தூர், சாத்தான்குளம் பகுதியில் வெற்றிலை பயிரிடுகிறார்கள். தண்ணீர் போதுமான அளவு கிடைக்காத காரணத்தினால் கொடிக்கால் பெரிதும் பாதிக்கப் படுகிறது. இந்தச் சங்கடத்தைப்போக்க நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்:** தனிப்பட்ட முறையில் எந்தவிதமான விண்ணப்பமும் வந்ததாகத் தெரியவில்லை. அப்படி வந்தால் அதுபற்றி யோசிக்கலாம்.

**திரு. கே. எ. வகாப்:** வெற்றிலை போடுவதால் பல் உறுதியாக இருக்கும் என்கிறார்கள். சிலர் பல் உதிர்ந்துவிடுகிறது என்கிறார்கள். ஆகவே இதுபற்றி நல்லதொரு ஆராய்ச்சியை நடத்தியபிறகு இதற்கு உதவி செய்வதா, இல்லையா என்பது பற்றி அரசு முடிவு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய மூன்றையும் சேர்த்துப்போடுவதால் கால்ஷியம் டெபிஷியன்சி நீங்குகிறது. புகையிலை போடுவதுபற்றித் தெரியாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எதைப் போட்டாலும் அளவோடு போட வேண்டும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு சேர்த்துப்போடுவதால் புற்றுநோய் ஏற்படுவதாகச் சொல் கிறார்கள். ஆகவே தமிழகத்திலுள்ள வெற்றிலைக் கொடிக்கால்



களுக்கு அதிக வரி போட்டு அவர்களுக்கு ஊக்கம் ஏற்படாது தடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அப்படி ஒன்றும் இல்லை.

**திரு. ஆ. பரந்தாமன்:** தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத் திலும் ஒவ்வொரு விதமான வெற்றிலை பயிரிடுகிறார்கள். ஆயினும் கும்பகோணம் வெற்றிலைக்குத்தான் நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே இந்த ரக வெற்றிலையை எல்லா இடங்களிலும் பயிரிடு வார்களா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தனியாக அப்படி ஒன்றும் தகவல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு ஊருக்கு மாத்திரம் விளம்பரம் கொடுத்துக்கொள்வதா ?

**திரு. த. சோனையா:** தமிழ் நாட்டில் பல காலமாகத் தொடர்ந்து வெற்றிலைக் கொடிக்காலில் வேலை செய்கிற தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். எல்லா வகைகளிலும் நியாயமான கூலியை நிர்ணயம் செய்கிற சர்க்கார் வெற்றிலைக் கொடிக்கால் தொழிலாளர் களுக்கும் நியாயமான கூலி நிர்ணயம் செய்ய முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தற்போது அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி:** புயல், வெள்ளத்தால் வெற்றிலைக் கொடிக்கால் பாதிக்கப்படுகிறபோது வெற்றிலை விலை ஏறுகிறது. விலையேறுகிறபோது மாயூரம் உறுப்பினரைப் போன்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட உறுப்பினர்களுக்காவது சகாய விலையில் வெற்றிலை கொடுக்க அரசு முற்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே பதில் சொன்னார்கள், எதையும் அளவோடு போட வேண்டுமென்று. அளவோடு இருந்தால் வளமோடு இருக்கலாம்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்த வெற்றிலை போடுவதால் மன நிலையில் நல்ல திருப்பம் ஏற்படுகிறது. வெற்றிலை போடுகிற நேரத்திலே கோரிக்கைகளைச்

சொன்னால், நிறைவேறும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த மனமாற்றம் ஏற்படுகிறதே, இதுபற்றி அரசு ஏதாவது தெரிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படி ஒன்றுமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இங்கு கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் வெற்றிலை போடக் கூடியவர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய அளவுக்குக் கேள்வி கேட்டதாக நான் கருதுகிறேன். ஆகவே, அவற்றை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கான முயற்சியைத் தயவுசெய்து தலைவர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, வெற்றிலை போடுகிறவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்துகிற நோக்கத்தோடு கேள்வி கேட்கப்படவில்லை. அதிகமாகப் போட்டால் எதுவும் புண்ணாகிவிடும் என்ற அந்த அர்த்தத்தோடு தான் கேள்விகள் கேட்கப்பட்டன.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** துணைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் மயில் பறவை தேசியப் பறவையாக இருக்கிறது. அதைப்போல், வெற்றிலை புனிதமானதாகவும், கோயில்களிலே எல்லோராலும் போற்றப்படுவதாகவும் இருக்கிற காரணத்தால், அதை தேசிய இலையாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மங்களகரமான காரியத்திற்கு மட்டுமல்லாமல், எல்லாக் காரியங்களுக்கும் வெற்றிலை பயன்படுத்தப்படுகிறது. ஆதலால் தேசிய இலையாக ஆக்குகிற பிரச்சினைக்கு இடமில்லை.

**திரு. கே. கந்தசாமி :** தலைவர் அவர்களே, வெற்றிலையை நம்முடைய தமிழர்கள் பழம் புராதன காலத்திலிருந்து சிறந்த முறையில் பயன்படுத்தி வருகிறார்கள். உணவுக்குப் பின்னால் அது பயன்படுத்தப்படுகிறது. அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், மங்கள காரியத்திற்கு இது சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிற காரணம், அதில் சில சத்துப்பொருள்கள் அடங்கி இருக்கின்றன. அத்துடன் சக்தியும் அதில் அடங்கியிருப்பதாகப் புராதனப் பெரியவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, அதை இன்னும் பாப்புலர் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சாப்பாட்டிற்குப் பிறகு மட்டும் அதை உபயோகப்படுத்துவதில்லை. மற்றவர்களை வரவேற்பதற்குக் கூட, வெற்றிலைபாக்கு வைத்துத்தான் வரவேற்கிறோம். முன்னாலும் உபயோகப்படுத்தப்படுகிறது, பின்னாலும் உபயோகிக்கப்படுகிறது. அதற்கென்று தனிச் சலுகை கொடுக்க வேண்டியதில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** வெற்றிலையோடு அகத்திக் கீரையும் பயிராகிறது என்பதை எல்லோரும் மறந்துவிட்டார்கள். ஆகவே, அகத்திக் கீரையையும் கவனிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கொடிக்கால் என்றாலே, இதுவும் பயிராகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். இதைப்பற்றி அது வளர்கிறது, அதைப்பற்றி இது வளர்கிறது.

### கிராமப்புறங்களில் துணி தயாரிப்பு.

* 638 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் போர்டின் சார்பாகக் கிராமப் புறங்களில் துணி தயாரிக்கும் நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும் ?

(உ) அவற்றின் மூலதனம் யாது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) ஆம்.

(இ) பெருமாநல்லூர்—கோவை மாவட்டம்.

சூலூர்—கோவை மாவட்டம்.

எடையன்வலசு—மதுரை மாவட்டம்.

மயிலாடி—கன்னியாகுமரி மாவட்டம்.

ஏரல் அல்லது வள்ளியூர்—திருநெல்வேலி மாவட்டம்.

மேற்படி ஐந்து இடங்களில் துவங்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இவற்றில் பெருமாநல்லூர் நிலையம் 25—4—1971-லும்,

சூலூர் நிலையம் 13—6—1972-லும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிற நிலையங்கள் விரைவில் துவங்க இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| (உ) இயந்திரங்கள் | .. | ரூ. 1-82 லட்சம் |
| கட்டிடம் | .. | ரூ. 1-50 லட்சம் |
| மூலதனம் | .. | ரூ. 0-60 லட்சம் |
| | மொத்தம் | ரூ. 3-92 லட்சம் |

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கதர்த் துணி உற்பத்தியைப்பற்றி எந்த எந்த இடங்களில் அது துவங்கப்பட இருக்கிறது அல்லது துவக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கங்களை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் நகரில், மிகக் குறிப்பாக, கோரைநாட்டில் மிகச் சிறந்த துணி உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. அந்தப் பகுதியில் இந்தத் தொழில் இப்பொழுது நசித்து வருகிற காரணத்தால், அங்கே இம்மாதிரியான நிலையத்தை அமைக்க அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஒவ்வொரு கூட்டுமன்றத்திலும் இதை ஆரம்பிப்பது என்ற திட்டம் இருக்கிறது. ஆகவே, முதலாவதாக, ஐந்து இடங்களிலே இதை ஆரம்பிக்க இருக்கிறோம். மேலும் பல இடங்களில் ஆரம்பிப்பதற்கான யோசனைகள் நடைபெற்று வருகின்றன. அப்படி ஆலோசனைக்கு வரும்போது, மாயூரம் பற்றிப் பரிசிலிக்கலாம்.

**திரு. த. சோலையா :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் போர்டின் சார்பிலே துணிகள் தயாரிக்கிற சில இடங்களைக் குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டம், வறட்சியாலே பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டம், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலே பாதிக்கப்பட்டிருக்கிற மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அந்த மாவட்டத்திலே துணி தயாரிக்க, கிராமமக்கள் அதைப் பயன்படுத்த இந்த நிலையங்களை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன், ஒவ்வொரு கூட்டுமன்றத்திலும் ஒவ்வொரு ஆலை ஆரம்பிக்கின்ற திட்டம் இருக்கிறது





என்று. முதலாவதாக, இந்தப் பகுதிகளிலே ஆரம்பித்திருக்கிறோம். மேலும் அவ்வப்போது ஏற்படுகிற நிலைமைக்குத் தகுந்தவாறு அவை ஆரம்பிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே ஒரு நிலையமானது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் இருக்கிறதா? அது லாபகரமாக ஓடுகிறதா? நட்டமாக ஓடுகிறதா? அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அது இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. இவை எல்லாம் அநேகமாக லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, பெருமாநல்லூர் போன்ற இடங்களில் இது மாதிரியாகத் துணிகளைத் தயார் செய்கிற நிலையங்கள் துவங்கப்பட்டிருப்பதாகவும், அதனால் லாபம் இருப்பதாகவும் விவரங்கள் கூறுகின்றன. ஆகவே, காஞ்சிபுரத்திலே இது மாதிரி அமைத்து, துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற வகையில் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** காதி வாரியமே இப்படி எல்லோருக்கும் வேலை கொடுக்கின்ற திட்டத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. படிப்படியாக, இந்தத் திட்டத்தை எல்லா இடங்களிலும் துவக்க ரூ. 3.92 லட்சம் தேவைப்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு இடமாக ஆரம்பித்து வருகிறோம். இப்பொழுது 68 பேர் வேலை செய்து வருகிறார்கள். பஞ்சாலை நூலுக்குத் தேவையான துணி மட்டும் இப்பொழுது தயாரிக்கப்படுகிறது. போட்டிக்குப் போவது என்றால் அதற்கு அதிகமான நிதி தேவைப்படுகிறது என்ற காரணத்தாலே, அதற்கான யோசனை இப்பொழுது இல்லை.

**சாத்தியாறு அணைப்பகுதியைச் சுற்றுலா மையமாக்கல்.**

* 639 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1973 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இல்லை.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் வைகை அணை சுற்றுலா மையமாக இருக்கிறதா? அப்படி ஆகாமல் இருந்தால், இனிமேலாவது சுற்றுலா மையமாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, சுற்றுலா வாரியம், ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த எந்த இடத்தைச் சுற்றுலாக் கேந்திரமாக ஆக்கலாம் என்று ஆய்வு செய்துவருகிறது. மஞ்சளாறு, சாத்தியாறு, வைகை அணைப் பகுதிகளைச் சுற்றுலாக் கேந்திரங்களாக ஆக்கலாம் என்பதைப் பற்றி அறிக்கை தயாரித்துக் கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு அரசு முடிவெடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. சோலையா :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள சாத்தியாறு அணைக்கட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதற்கு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். ஆனால், அங்கே பல்லாயிரக் கணக்கான பேர்கள் சென்று பார்வையிட்டு வருகிறார்கள். அப்படிப் பார்க்கின்றவர்களுக்கு வசதியை ஏற்படுத்துகின்ற முறையிலே அதை இன்னும் சிறப்பாகச் செய்தால் இன்னும் பல்லாயிரக் கணக்கானவர்கள் வருவார்கள். அதற்கு இனிமேலாவது அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பல்லாயிரக்கணக்கானவர்கள் போக ஆரம்பித்தால், சுற்றுலா வாரியம் அந்த இடத்தை விட்டுவிடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் எந்த எந்த இடம் இம்மாதிரியான சுற்றுலாப் பயணிகளைப் பரப்புவதற்கான இடம் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? அவை பற்றி முடிவெடுக்கப்பட்டு விட்டதா அல்லது இந்த ஆண்டு பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற, மேலவை, ஊராட்சி, ஒன்றியப் பெருந்தலைவர்கள் ஆகியோரிடம் கலந்து எந்த எந்த இடத்தை எல்லாம் சுற்றுலா மையமாக



1973 ஏப்ரல் 5]

ஆக்கலாம் என ஒரு ஆய்வு நடைபெற்று வருகிறது. அதனுடைய அறிக்கை இன்னும் அரசுக்கு வந்து சேரவில்லை. வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, மதுரையில் எந்த எந்தப் பகுதிகளைச் சுற்றுலா மையமாக ஆக்கலாம் என்று ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதைப் போலவே எல்லா மாவட்டங்களிலும், ஆங்காங்குள்ள பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து, எங்கெங்கு சுற்றுலா மையம் அமைக்கலாம் என்று சொல்ல அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஏற்கனவே இப்படி எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய தென் ஆற்காடு மாவட்டம் அதிலே இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மூன்று அணைக்கட்டுகளைப் பற்றிச் சொன்னார்கள், சாத்தியாறு, மஞ்சளாறு, வைகை, என்று. இவற்றில் வைகை அணைக்கட்டாவது சுற்றுலா இடமாக அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, அது ஏற்கனவே ஆய்விலே இருக்கிறது. இதற்கானக் காரியங்கள் விரைவிலே மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே( அழகர் கோவிலுக்குப் போகிற பாதையிலே பழமுதிர்ச் சோலையிலே அநேக ரஸ்தாக்கள் இப்பொழுது போடப்பட்டு ஏராளமான யாத்ரீகர்கள் வந்துகொண்டிருக்கின்றார்கள். அங்கே ஒரு சுற்றுலா மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, பழமுதிர்ச் சோலைக்கு நான் சமீபத்திலே சென்றிருந்தேன். அங்கே செய்யப்பட வேண்டிய காரியங்கள் இன்னும் பல இருக்கின்றன. அவையெல்லாம் செய்யப்பட்டதற்குப் பிறகு அங்கே சுற்றுலா இல்லம் ஏற்படுத்துவதிலே அரசுக்கு ஆட்சேபனை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Drinking water supply for flats in Foreshore Estate.*

* 640 Q.—THIRU N. V. GURUSAMI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal under consideration to provide tap connections for the supply of drinking water for all the flats under the Low Income Group scheme in the Foreshore Estate; and

(b) if so, the present stage thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) பட்டினப்பாக்கத்தில் உள்ள குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான குடியிருப்புகளுக்குத் தனித்தனியாகக் குழாய்கள் அமைத்து குடிதண்ணீர் வழங்குவதற்கான வேலை நடைபெற்று வருகிறது. மாநகராட்சியின் குடிதண்ணீரைச் சேமித்து வைக்கவும், மேல்நிலைத் தொட்டிக்குத் தண்ணீரை மேலேற்றவும், இரு தொட்டிகள் பூமி மட்டத்தில் கட்டிமுடிக்கப் பட்டுவிட்டன. தேவையான பம்பு செட்டுகளும் சேகரிக்கப்பட்டு விட்டன. குடியிருப்புகளுக்குக் குடிதண்ணீர் வழங்க சென்னை மாநகராட்சியையும், இயந்திரங்களுக்கு மின்சாரம் வழங்கு வதற்காக சென்னை மின்சார வாரியத்தையும் வீட்டுவசதி வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது. கூடிய சீக்கிரத்தில் இவ்வேலை முடிந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, although we appreciate the arrangements that are being made, I want to know whether there is any possibility of getting sufficient quantity of water for all these purposes?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மாநகராட்சியோடு அது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்யப் பட்டிருக்கிறது. தண்ணீரைத் தேக்கிவைப்பதற்காக ஸ்லம்ப்கள் ரூ. 88,530 செலவில் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. விரைவிலே 668 வீடுகளுக்குத் தண்ணீர் வழங்குவதற்கான வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. நடைமுறைக் கேள்வி.

### போதுமான துணைக் கேள்விகள் போட அனுமதிக்காதது குறித்து.

**திரு. நா. வீராசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், கேள்வி நேரம் என்பது ஒரு மணி நேரம் என்று பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும்பொருட்டு விதிமுறைகளிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் முக்கியமான கேள்விகள் வந்திருந்தும், முதல் கேள்வி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கவேண்டிய கேள்வி, அதற்கே கூடத் துணைக் கேள்விகள் அதிகமாக அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் எல்லாம் கையைத் தூக்கிக்கொண்டே இருந்தோம். பிறகு வந்த கேள்வி கண்ணகி கோயிலைப்பற்றிய கேள்வியும் முக்கியமான கேள்வி, அதற்கும் போதுமான துணைக் கேள்விகள் அனுமதிக்கப் படவில்லை, இது முறைதானா? உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நீங்கள் நினைத்தால் சப்ளிமெண்டரிகள் போடுவதற்கு அனுமதிக் கலாம். நாங்கள் எல்லாம் மிக ஆர்வத்தோடு கைகளைத் தூக்கியும் கூட அதற்கு வாய்ப்பு அளிக்காமல் இருப்பது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்வது சரியல்ல. முதல் கேள்வி எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது நான் சுற்றும்முற்றும் பார்த்தேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்தார்கள் என்று கருதுகிறேன். அது முதல் கேள்வியாக இருந்ததால் டேபிளிலே வைக்கப்பட்ட கேள்விகளை யாரும் படிக்க முடிய வில்லை, இரண்டாவது கேள்விக்கு நான் சென்றுவிட்ட பிறகு நீங்கள் கையைத் தூக்கியிருக்கலாம் என்று நினைக்கிறேன். கண்ணகி கோயில் குறித்து வந்த கேள்விக்கும் ஆறு துணைக் கேள்விகள் வரை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் நமக்கு நிறைய பிஸினஸ் இருக்கின்றது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) சென்னை மாநகராட்சி ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டது குறித்து.

MR. DEPUTY SPEAKER: Under Rule 42 of the Tamil Nadu Assembly Rules, Dr. Hande has given notice of an Adjournment Motion to discuss the following matter of urgent public importance—

"That this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the plight of 3,000 workers of Corporation of Madras whose services have been terminated from 2nd April 1973."

I request the hon. Member to explain briefly how this matter will come under Rule 42.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 3,000 பேர்களை, திடீரென்று வேலை நீக்கம் செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பல பேர்கள் என்னை வந்து கேட்டுக்கொண்டு உடனடியாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். முன்பு ஒரு முறை இப்படி வேலைநீக்கம் செய்யப்பட்டபொழுது அவர்கள் எல்லாம் கார்ப்பரேஷன் ரிப்பன் பில்டிங் பூங்காவின் முன்னால் மறியல் செய்தார்கள். அதற்குப் பிறகு அந்த உத்தரவை வாபஸ் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தது தவறு என்று நான் சொல்லவில்லை. அவர்களை வேலைக்கு மறுபடியும் எடுத்துக்கொண்டார்கள்.

அந்த முறையிலே திடீரென்று இன்றைய தினம் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக அவர்கள் மீண்டும் இன்னொரு இடத்திலே போய் வேலைக்குச் சேர முடியாது, அவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை இருப்பதால் அமைச்சர் அவர்கள் கார்ப்பரேஷனுக்கு உடனடியாக உத்தரவிட்டு மீண்டும் அவர்களை நீக்கியதைப்பற்றி மறுபரிசீலனை செய்வதற்கு உத்தரவிட்டால் நல்லதாக இருக்கும். ஆசிரியர்களுடைய குறைகளையெல்லாம் அரசாங்கம் புரிந்துகொண்டார்கள் என்ற மனத் திருப்தியும் அவர்களுக்கு இருக்கும் என்று



சொல்லிக்கொண்டு அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் வற்புறுத்துகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியதைப் போன்று எங்கேயும் நிரந்தரமாகப் பணியாற்றுகின்ற ஊழியர்கள் யாரும் நீக்கப்படவில்லை. ஆண்டுதோறும் தாற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் மார்ச் திங்களோடு அவர்கள் எந்த வேலைக்காக அவ்வாறு நியமிக்கப்பட்டார்களோ அந்த வேலை முடிந்தவுடன் வேலையைவிட்டு நீக்குவதுதான் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

31—3—1973 பட்ஜெட் வருஷத்தோடு அவர்கள் நியமிக்கப்பட்ட வேலை முடிந்துவிட்ட காரணத்தினால் தாற்காலிகமாக வேலை நீக்கம்செய்து அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களும் 3,000 பேர்கள் அல்ல, 544 கேஷுவல் ஒர்க்கர்ஸ் தான் நீக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் வேலை வருகிறபொழுது அப்படி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இதுவரையிலே 1, 2 ஆம் தேதிக்குப் பிறகு அதிலே இருநூறு பணியாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மறுபடியும் வேலை வருகிறபொழுது மற்றவர்களும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆகவே நிரந்தரமாகப் பணியாற்றியவர்கள் யாரும் நீக்கப்படவில்லை. இந்த ஆண்டு பட்ஜெட் முடிந்துவிட்டதால் அவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள். அந்த 544 பேர்களிலும் 200 பேர்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அப்படி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும்பொழுது புதிதாக இருப்பவர்களை எடுத்துக் கொள்ளாமல் ஏற்கனவே பணியாற்றி நீக்கப்பட்டவர்களுக்குத் தான் வேலைகள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மீண்டும் தாற்காலிகமாக வேலை கொடுப்பதற்கு—டியூட்டரில் எவ்வாறு ஆண்டுக்கு ஒரு முறை நியமிக்கப்பட்டு பிறகு டெர்மினேட் செய்யப்பட்டு பிறகு ஒவ்வொரு ஆண்டும் நியமிக்கப்பட்டு வருகின்றார்களோ—ஒவ்வொரு ஆண்டும் டெம்பரரியாக போட்டு பிறகு நீக்கி பிறகு

டெம்பரரியாகப் போடுவதைவிட 2, 3, 4 தடவைகள் டெம்பரரியாகப் போட்டிருந்தால் அவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் கவனிக்கப்படவில்லை. இப்படியே போய்க்கொண்டிருந்தால் அவர்களுடைய ஏஜ் பார் ஆகிவிடும். அதற்குப் பிறகு அவர்கள் எந்தவிதமான சர்வீஸிலும் எடுத்துக்கொள்ளப்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதால் இதை முழுவதையும் காம்ப்ரஹென்ஸிவ் ஆக ஆராய்ந்து ஒரு நல்ல முடிவை அமைச்சர் அவர்கள் எடுத்து அவர்களுக்கு நிரந்தரமாக வேலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** என்றென்றும் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று எந்த எந்தப் பணிகளைக் கருதுகிறோமோ அந்தப் பணிகளைப் பொறுத்தவரையிலே அந்தப் பணிகளிலே அமர்த்தப்படுகின்றவர்களை நிரந்தரமாக்குவதுபற்றி யோசிக்கலாம். ஆனால் எல்லோரையும் ஆண்டு முழுவதும் நிரந்தரமாகப் பணியாற்றச் செய்ய வேண்டுமென்றால் மாநகராட்சிக்கு அதிகமான செலவுகள் ஆகும். சில பல பணிகள் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படுமானால் அவை நிரந்தரமாக்கப்படும். இதுவரையிலே தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள்தான் மறுபடியும் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற பழக்கம்தான் இருந்து வருகிறது. அவர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கு அந்தப் பணிகள் கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியின் பேரிலே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மந்திரி சபை விஸ்தரிக்கப்படப்போவதாகப் பத்திரிகைகளிலே செய்திகளைப் பார்க்கிறோம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை முடித்துவிடுகிறேன். இதற்கு என்னுடைய ரூலிங்கையே இன்னும் கொடுக்கவில்லையே. இதற்கு முதலிலே என்னுடைய தீர்ப்பைக் கொடுத்து விடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதி இதற்கு நான் அனுமதியை மறுக்கிறேன்.





## (ஆ) வளவனூர் அரசாங்க தானியக் கிடங்கில் இருந்த நெல் மூட்டைகள் காணமற்போனது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 42-ன்கீழ், திரு. மணலி சி. கந்தசாமி, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஏ. ஆர். மாரிமுத்து, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜோர்ஜ் ஆகிய உறுப்பினர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியம் வாய்ந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையின் இன்றைய மற்ற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். "வளவனூரிலுள்ள அரசாங்க தானியக் கிடங்கிலிருந்து சுமார் 8,799 மூட்டை நெல் காணவில்லை என்ற காரணத்தால் பொது மக்கள் மத்தியில் பரபரப்பான நிலை காணப்படுகிறது" என்பதுபற்றி விவாதிக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் மிகச் சுருக்கமாக இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குள் வரும் என்பதைச் சொல்ல வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, . இது மிக மிக முக்கியமான விஷயம் என்பதை முதலில் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். பத்தாயிரம் மூட்டைகள் இந்த வளவனூர் சர்க்கார் கோடவுனில் இருந்ததாகவும் அதற்குப் பின்னால் அதைச் செக் பண்ணப்போனபோது 8,000 மூட்டைகள் காணவில்லை என்றும், ஆயிரத்து சொச்சம் மூட்டைகள்தான் இருந்தன என்றும் விவரங்கள் கிடைத்திருக்கின்றன. அதற்குப் பிறகு விசாரணை நடத்தியதில் 1,100 மூட்டைகள்வரை திரும்பக் கிடைத்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.

இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. சர்க்கார் நேரடியாகக் கொள்முதல் செய்து கோடவுனில் வைத்திருந்தார்களா? ஏஜெண்டுகள் மூலமாகக் கொள்முதல் செய்து அதற்காகத் தனிச் சாவிகள் வைத்திருந்தார்களா? அவர்களும் தனியாகச் சாவிகள் வைத்திருந்தார்களா? இப்படி பத்தாயிரம் மூட்டைகள் உண்மையிலேயே கொள்முதல் செய்திருந்தார்களா அல்லது ஸ்டாக் என்று எழுதி வைத்திருந்தார்களா?

குறிப்பிட்ட கோடவுனில் இருந்து ஒரே நாளில், இரண்டு நாட்களில் 8,000 மூட்டைகள் காணாமல் போவது, கொண்டு போய்விடுவது என்பது அவ்வளவு லேசான காரியமல்ல. அது

பல நாட்களாக நடந்திருக்கலாம். கோடவுன் கீப்பர்கள், கோடவுனைக் கண்ட்ரோல் பண்ணுகிறவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அரசு தானிய மொத்த வியாபாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகின்ற நிலையில், வற்புறுத்தப்படுகின்ற நிலைமையில் அரசும் கொள்கை ரீதியாக அதை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் அரசாங்க கோடவுனில் உள்ள 10,000 மூட்டைகளில் 8,000 மூட்டைகள் காணமல் போகிறது என்று சொன்னால் அது மிகவும் வருந்தக்கூடிய விஷயமாக இருக்கிறது.

இதைப்பற்றி வற்புறுத்துகிற நேரத்தில் நாடாளுமன்றத்தில் கூட குறிப்பிட்ட முக்கியமான விஷயம் ஒன்று வந்தபோது அந்த விஷயத்தை அந்த முறை எப்படியாவது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். இது சாதாரணமாக இருக்கக்கூடிய ஒத்தி வைப்புத் தீர்மானம் அல்ல. கோடவுன் சம்பந்தமாக எந்த முறை கையாளப்பட வேண்டும், ஆயிரக்கணக்கான மூட்டைகள் காணமல் போகிற நிலைமை எப்படி ஏற்படுகிறது, மாதா மாதம் செக் அப் பண்ணப்படுகிறதா, செக் அப் செய்யப்பட்ட நேரங்களில் மூட்டைகள் சரியாக இருந்திருக்கின்றனவா, இந்தமாதிரி சிலர் ஏற்பாடு செய்து மூட்டைகளை எடுத்துக் கொண்டு செல்லுவதைத் தடுப்பது எப்படி என்பது பற்றியெல்லாம் விவாதிக்க பேரவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இருப்பதால் அருள்கூர்ந்து இது சம்பந்தமாகத் தாங்கள் தீர்ப்புக் கொடுக்கின்றபோது இதைப்பற்றி விவாதிக்க சந்தர்ப்பம் ஏற்பட்டால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என்று கூறி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்திலே நான் ஓரிரு கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற ஏற்படுகிறேன். இது அண்மையில் ஏற்பட்ட காரணத்தாலும், திடீரென்று அதிக நஷ்டத்தை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சியாக இருக்கும் காரணத்தாலும் இதுபற்றி விவாதிப்பது நல்லது. சாதாரணமாக, கோடவுன்களில் ஸ்டாக் ரிஜிஸ்டர்கள் எப்படி வைக்கப்படுகின்றன, யார் யார் அதைப் பரிசோதனை செய்கிறார்கள், ஃபிசிகல் வெரிபிகேஷன் ஆப் ஸ்டாக்ஸ் இருக்கிறதா, வாரத்திற்கு





ஒரு முறையா, மாதத்திற்கு ஒரு முறையா, விதிமுறைகள் இருக்கின்றனவா, விதிமுறைகள் எல்லாம் இருந்தபோதிலும் இவ்வளவு பெருத்த அளவில் காணமல் போனதற்கு யார் உடந்தையாக இருந்தார்கள், இது சம்பந்தமாக யார்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது, யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா, என்ற விவரங்களை எல்லாம் அறிய நல்ல முறையில் விவாதிப்பது பொருத்தமாக இருக்கும்.

பொதுவாக, இந்த மாதிரி சர்க்கார் கோடவுன்களில் இருக்கும் ஸ்டாக்குகள் திடீர் திடீரென்று மறைந்து போவதால் மக்கள் மத்தியில் பீதி ஏற்படும் நிலைமை இருக்கிறது. ஆகவே, பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, as the hon. Members have suggested, I also suggest that the House must adjourn to discuss this important matter for several reasons, apart from the reasons that they have mentioned. At a time when almost all over the country people are talking in terms of taking over the wholesale trade of foodgrains like wheat—probably after some time a similar thing may take place with regard to rice also in Tamil Nadu—and in the context of the present political situation, I think this matter definitely raises gravce concern in my mind as to the shape of things to come. How are we going to face this problem of nationalisation of foodgrains ? In a godown with a stock of only 10,000 bags, 8,000 bags have disappeared, that is nearly 80 per cent of the stock has disappeared.

This is a serious matter and I fix the responsibility directly on the Government. Whatever reasons they may adduce, the responsibility rests squarely on the shoulders of our distinguished Minister for Food for which— தட்டிக் கழிக்க முடியாது— he has to accept responsibility. As this is a matter of great concern to the public, I also want to know what action has been taken by the Government to fix responsibility on the officials concerned and how 1,000 bags have been recovered.

They also say that two or three persons have been arrested, and who are those persons ? This incident is only like an ice-berg where only one-ninth of the ice would be visible on the surface

and the rest of it would be below it. Such things would have happened elsewhere but they have not come to the surface. This matter has lifted our eyebrows and I therefore request the Hon. Deputy Speaker to adjourn the House for at least a couple of hours so that the entire matter can be discussed thoroughly. Then only we will know how this had happened and we will also suggest preventive steps to be taken in future With these words, I resume my seat.

***மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :*** தலைவர் அவர்களே, வளவனூரைச் சேர்ந்த திரு. பி. அப்துல் வஹாப் என்பவர் அதிகாரம் கொடுக்கப்பட்ட ஒரு அரைவை முகவர். 1970 சம்பா அறுவடையில் சில இடங்களில் லெவி முறையில் கொள்முதல் செய்யப்பட்ட நெல், பாதுகாத்து வைத்து; அரைவை செய்து நிர்ணயிக்கப்பட்ட அளவு அரிசியை அரசுக்குக் கொடுக்க அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1970-வது வருடத்திலிருந்து ஏஜெண்டாக நியமிக்கப்பட்டு 59,149 மூட்டைகள் லெவி கொள்முதல் செய்து, 49,026 மூட்டைகள் நெல் அரைத்துக் கொடுத்திருக்கிறார். அதில் மீதம் இருக்க வேண்டிய மூட்டைகள் 10,123. வழக்கம்போல் நெல் உரிமம் பெற்ற கிடங்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

இரட்டைப் பூட்டு முறையில், ஒரு பூட்டின் சாவிகள் விழுப்புரம் தனி வட்டாட்சியரிடமும் மற்றொன்றின் சாவிகள் ஆலைச் சொந்தக்காரரிடமும் இருந்தன. அரசின் கணக்கிலுள்ள நெல்/அரிசி ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் பதிவுபெற்ற அலுவலர் ஒருவர்மூலம் நேரடி இருப்புத் தணிக்கை செய்யப்படுகிறது. இந்த அரைவை முகவருக்கு ஒப்படைக்கப்பட்ட நெல்/அரிசி 31—12—1972-ல் விழுப்புரம் விவசாய வருமான வரி உதவி ஆணையரால் தணிக்கை செய்யப்பட்டது. குறைபாடு ஏதும் அப்போது காணப்படவில்லை.

விழுப்புரம் விவசாய வருமான வரி உதவி ஆணையர் 31—12—72-ம் தேதி இருப்பைத் தணிக்கை செய்தபோது கிடங்குகளில் 10,123 மூட்டைகளும் ஆலையில் 1,644 மூட்டைகளும் நெல் இருந்தது. இந்த 1,644 மூட்டை நெல்லும் அரைத்து அரிசி அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. 1—1—1973-க்குப் பிறகு அரைவைக்கு நெல் அளிக்கப்படவில்லை. விழுப்புரத் தனி



வட்டாட்சியர் 5—1—73, 21—1—73, 14-3-73, 22—3—73 ஆம் தேதிகளில் கிடங்குகளைப் பார்வையிட்டபோது முத்திரைகள் சரியாகவிருந்தன. 31—3—1973 தேதியுடன் முடியும் காலாண்டுத் தணிக்கைக்காக 25—3—1973 தேதி தனி வட்டாட்சியர் ஒரு கிடங்குக்குச் சென்றபோது கிடங்கு காலியாக இருந்தது. மற்றக் கிடங்குகளையும் பார்வையிட்டதில் அவைகளிலும் முத்திரைகள் கள்ளத்தனமாக மாற்றியமைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். வளவனூர் போலீசுக்கு உடனே புகார் செய்ததின் பேரில் குற்றம் பதிவு செய்யப்பட்டு ஏழு கிடங்குகளில் இருந்த 1,324 மூட்டைகள் (நெல்) கைப்பற்றப்பட்டது. சுமார் ரூ. 3½ லட்சம் மதிப்புள்ள 8,799 மூட்டைகள் நெல் காணப்படவில்லை. மேலும் தகவலின் பேரில் மற்ற இடங்களிலிருந்து 1,387 மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. ஆலைச் சொந்தக்காரர் தலைமறைவாக இருக்கிறார்.

அவருடைய கூட்டாளியான திரு. ஷஹாபுதீன் என்பவர் கைது செய்யப்பட்டு ரிமான்டில் வைக்கப்பட்டிருக்கிறார். மற்றும் திரு. கலிபுல்லா என்பவர் இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரைவை மையங்களிலுள்ள இருப்புகள் வாரம் ஒரு முறையாவது அலுவலர்களால் தணிக்கை செய்யப்பட வேண்டும். அடுத்த அறுவடைக்குள் முன்போக லெவி நெல்லை அரைவை செய்து முடிக்கும்படி தக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று அறிவுரைகள் உள்ளன. ஆகையால் சக்திக்கு அதிகமாக எந்த ஆலைச் சொந்தக்காரரையும் லெவி நெல் பெற அனுமதிக்கக்கூடாது. தென்னாற்காடு மாவட்டத்தில் அரைவை திராணமாக நடப்பதைச் சுட்டிக்காட்டி அதனைத் துரிதப் படுத்தும்படி மாவட்ட வருவாய் அதிகாரி/மாவட்ட ஆட்சியர் தலைவருக்கு 3—12—72, 18—12—72, 22—12—72, 19—3—72, தேதிகளில் ஆணையர் அறிவுரைகள் வழங்கியிருக்கிறார்.

இவ்விஷயம்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை வந்துள்ளது. அலுவலர்கள் பணியில் குறைகளுக்கு அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுப்பதுபற்றிப் பரிசீலனையிலுள்ளது. ஆலைச் சொந்தக்காரர்மீது குற்ற நடவடிக்கையைத்

தொடர்ந்து, கூடுமானவரை நெல்லை மீட்கவும் அல்லது அதன் மதிப்பை அவர் சொத்துக்கள் இதர ஆஸ்திகளைக் கொண்டு வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தாலும் கூட, இந்த அரைவையாளர், தனியார் ஒருவருக்குத்தான் கொள்முதல் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விவரங்களை எந்த முறையில் பார்த்தாலும் இந்த அரைவையாளர் குறிப்பிட்ட அளவிற்கு நெல்லை அங்கு ஸ்டாக் வைக்காமல் அல்லது வாங்காமலே ஏமாற்றியிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. ஆகவே தனியாரிடம் லெவி கொள்முதலுக்கு ஏற்பாடு செய்யும்போது இப்படிப்பட்ட ஊனங்கள் ஏற்படுகின்றன. ஆக, இந்த மாதிரியாக தனியார்களுக்கு லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டு தனிப்பட்ட அரைவையாளர்கள் மற்றவர்கள் என்னென்ன முறைகளில் செய்கிறார்கள் என்பதுபற்றித் தீவிரமாக அரசாங்கம் பரிசோதனை நடத்துமா? அதிகாரிகளைப் பற்றிக்கூட நினைக்க வில்லை. இப்படித்தனி அரைவையாளர்களுக்குக் கொடுத்துள்ள சலுகைகள் அல்லது வசதி காரணமாக இம்மாதிரி ஏற்பட்டிருக் கிறது என்பதால் மற்றவை எல்லாம் எப்படி எப்படி நடக்கின்றன என்பதை அறிவது மிகமிக அவசியம். அமைச்சரவர்கள் எவ்வளவு விவரங்கள் கொடுத்தாலும்கூட திருப்திகரமாக இல்லை.

ஆகவே ஒரு இரண்டு மணி நேரமாவது சபையை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிப்பது உதவிகரமாகவிருக்கும் இதுமாதிரி சுப்ரீம் கோர்ட்டில் நடந்த ஒரு சம்பவத்தை வைத்து நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அவர்கள் மூன்று மணி நேரம் சபையை ஒத்தி வைத்து விவாதம் நடந்த அனுமதித்திருக் கிறார்கள்.

இது உண்மையாகவே சபையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு வேண்டிய மிக முக்கிய பிரச்சினையாகும். அது அரசாங்கத்திற்கும் உதவிகரமாக இருக்கும், உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கும் உதவிகரமாக இருக்கும் என்பதால் சபையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்துகிறேன்.





**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** குற்றம் செய்தவர்கள் மீது பரிசோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. வழக்கு இருக்கிறது. லெவி நெல் உள்ளே வரவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதிகாரிகளும், மற்ற தணிக்கை அதிகாரிகளும் தணிக்கை செய்திருக்கிறார்கள். 31—12—72-ல் இன்கம் டாக்ஸ் அலுவலர்கள் சென்று தணிக்கை செய்திருக்கிறார்கள். இருந்தாலும், எப்படி கடத்தப்பட்டது, எங்கெங்கு கடத்தப்பட்டது என்பதைப் பரிசோதனை செய்துதான் போலீஸ் அதிகாரிகள் இப்போது இரண்டு, மூன்று நாட்களில் 1,300 சொச்சம் மூட்டைகளைப் பிடித்திருக்கிறார்கள். மேலும் இதுபற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

தனியார்களுக்கு கொடுக்கலாமா கொடுக்கக்கூடாதா என்ற பிரச்சினை குறித்து—இப்போது நெல் கொள்முதல் செய்யப் படுகிறது, கிட்டத்தட்ட 1,10,000 மூட்டைகள் வாங்க வேண்டியிருக்கிறது. நம்முடைய மில்களில் நிச்சயமாக எல்லாவற்றையும் அரைக்க முடியாது, பிரைவேட் ஏஜென்ஸி யிடம் கொடுத்துத்தான் அரைக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு மூட்டைகளுக்கு மேல் அரைத்துக் கொடுத்தவர்கள் அவர்கள் கடைசியாக 10,000 மூட்டையில் இப்படி தவறு நடந்திருக்கிறது இதற்குக் காரணம் யார் யார் என்று தெரிந்து கொள்வதோடு, 1974-ல் டெப்பாஸிட் தொகை ஜாமீன் வாங்கும் முறை ப்ரைவேட் ஏஜென்ஸிஸை நியமிப்பது இவைப்பற்றி சில விதிமுறைகளை மாற்றுவதுபற்றி கமிஷனரால் புது உத்தரவுகள் இடப்பட்டிருக்கின்றன.

மேலும் தனியாரிடம் கொடுக்காமல் அரைக்க முடியுமா என்றால் அது முடியாத ஒரு நிலையில் இருக்கிறது. நம்மிடையே மாடர்ன் ரைஸ் மில்ஸ் உள்ளன. எப்.ஸி.ஐ.யும் வைத்திருக் கிறார்கள். கொள்முதல் செய்யும் நெல் முழுவதையும் நம் மில்களில் அரைப்பது என்பது இயலாத காரியம்.

நாம் வெளியாரிடம் கொடுத்தும் அரைக்க வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம். நாம் நம் மில்கள் முழுவதையும் ஓட்டினாலும் கூட 78,000 அளவிற்குத்தான் அரைக்கும் கப்பாஸிட்டி இருக்கிறது. வெளியாரிடம் கொடுக்கும்போது, ஒருசில தப்புகள் நடந்திருப்பது உண்மைதான். நாம் இதுபற்றி விவாதிப்பதால், ஏதாவது ஒரு கருத்தைச் சொல்லும்போது

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 ஏப்ரல் 5

அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் சாதகப்படுத்திக் கொள்வார்கள் என்ற நிலை இருப்பதால் இதுபற்றிய முழு விவரத்தையும் இந்த வழக்கு முடிந்த பிறகு தகவல் கொடுக்கிறோம் என்று சொல்லி இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே. . .

. **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** க்ளாரிபிகேஷன் மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தனியார் கோடவுன்களைக் கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது பல இடங்களில் கோடவுன்ஸ் உள்ளன. அவைகளில் மொத்தமாக எவ்வளவு சேமித்து வைத்திருக்கிறார்கள் ? இப்போது இப்படி ஒரு இடத்தில் நடந்திருப்பதால் எச்சரிக்கையாக முன்கூட்டியே எல்லா கோடவுன்ஸ்களையும் சோதனை செய்து எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது, புத்தகத்தில் எவ்வளவு இருக்கிறது, உண்மையில் கோடவுன்ஸில் எவ்வளவு இருக்கிறது என்பதுபற்றி கண்காணிப்பு செய்தால் நன்றாக யிருக்கும்.

All godowns will have to be inspected so that we will have the confidence that nothing of our property is lost.

அதைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் தயாரா யிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நம்முடைய கமிஷனர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்து அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். திடீரென்று அவசரச் சோதனை நடத்தியதால்தான் அப்படிப் பிடிபட்டிருக்கிறது. பல இடங்களில் சோதனைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இரண்டு இலாகாக் களும் சேர்ந்து நடத்துகிறது. இந்த முறையை எப்படி மாற்றியமைப்பது, எந்த முறையில் ஏஜென்ஸீஸ் நியமிப்பது என்பதெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது. இரண்டு இலட்சம் ரூபாய்க்கு டர்ன்ஓவர் இருந்தால் டெப்பாஸிட் ரூ. 50,000 தான் வாங்குகிறோம். ஏஜென்ஸீஸ் நியமிப்பது டெப்பாஸிட் தொகை, சால்வன்ஸி என்றெல்லாம் பார்த்து தகுதி



1973 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

உடையவர்களுக்கு தகுதி உடைய அளவிற்குக் கொடுக்கப் படுகிறது. பத்து, பன்னிரெண்டு மடங்கு கொடுக்கக்கூடிய அளவில் தகுதி நிர்ணயிக்கிறார்கள்.

99 சதவீதத்துக்கு மேல் தப்பு செய்வதில்லை, ஓரிருவர் தப்பு செய்து விடுகிறார்கள். தாலுகாவிற்கு ஒரு தாசில்தார் என்று வைத்து கண்காணிப்பு செய்து வருகிறார்கள். கோடவுன் வெரிபிக்கேஷன் நடக்கிறது. அக்ரிகல்ச்சுரல் இன்கம் டாக்ஸ் ஆபீஸர் கூட சென்று பரிசீலிக்கிறார்கள். உள்ளே சென்றெல்லாம் பார்வையிடுகிறார். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெரிபை செய்யப்படுகிறது. கடைசியாகத் தணிக்கை செய்தபோது இந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வங்கிகளில் கடன் வாங்குபவர்களும் தவறு செய்கிறார்கள். இப்போது குறைந்திருக்கிறது என்றாலும் இனி நடக்காத அளவிற்கு எந்த முறையில் கண்காணிக்க வேண்டுமென்று அதற்கான நடவடிக்கைகளைக் கமிஷனர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கு மேல் இது குறித்து விவாதம் தேவையில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தச் செக் செய்தது ஒரே அதிகாரியா ? மாறி மாறி உயர்ந்த அதிகாரிகள் மட்டத்தில் செக் செய்தார்களா ? பக்கத்தில் செக் போஸ்ட் வேறு இருக்கிறது. இவ்வளவு ஆயிரக்கணக்கான மூட்டைகள் போக வேண்டுமானால் செக் போஸ்டில் உள்ளவர்களுக்குத் தெரிந் திருக்குமே. அப்படியிருந்தால் இது நேரடியாக அரசாங்க அதிகாரிகளுடைய கண் பார்வையில் விழவில்லையா ? என்பது பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** முதலில் தாசில்தார் பார்க்கிறார். இன்கம் டாக்ஸ் ஆபீசர் பார்க்கிறார். கலெக்டர் பார்ப்பார். டி.ஆர்.ஓ. பார்ப்பார். கமிஷனர் அவர்களும் பார்ப்பார். எப்படிப் போயிருக்கிறது, சவுக்கியைத் தாண்டிப் போயிருக்கிறதா என்று இப்போது சொல்ல முடியாது இன்வெஸ்டிகேஷனில் இருப்பதால். வழக்கு முடிகிற வரையில் அது ஒன்றுக்குமட்டும் இப்போது பதில் சொல்ல முடியாது.

**திரு. மணலி சி. கந்தசாமி :** இப்போது நடந்துள்ள சம்பவம் பகற்கொள்ளைபோல் நடந்து இருக்கிறது. இதற்குப் பிறகாவது இப்போதுள்ள எல்லா கோடவுன்களிலும், ஸ்டாக் உள்ள

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 ஏப்ரல் 5

கோடவுன்களில் எல்லாம் போலீஸ் காவல் போடுவது பற்றி நிச்சயமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** முன்கூட்டியே சொல்லிவிட்டேன். அந்த அக்கறை உறுப்பினரை விட எங்களுக்கு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இதில் சற்று சந்தோஷம் என்னவென்றால் ஹாண்டே அவர்களும் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களும் சேர்ந்து சொல்கிறார்கள். தனியார் வியாபாரத்தை எடுக்க வேண்டுமென்று சொல்பவரும் தனியாரிடமிருந்து வியாபாரத்தை எடுக்கக்கூடாது என்று சொல்பவரும் சேர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். போலீசை வைத்தும், மற்ற சிவில் துறை அதிகாரிகளை வைத்தும், என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமோ, அவைகளை அக்கறையோடு செய்து வருகிறோம். தனியாரிடமிருந்து எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது பல நிலைகள் இருக்கின்றன. ஹனுமான் வங்கி பற்றிய நீண்ட கதை வெகு காலமாக இருந்து வந்தது பற்றி எல்லோருக்கும் தெரியும். அரிசி மூட்டைகளுக்குப் பதிலாக உமி மூட்டையை அடகு வைத்துப் பணம் வாங்கியிருந்தார்கள். இந்தியாவிலேயே பெரிய வழக்குகள் அது சம்பந்தமாக நடைபெற்றன.

இப்படிப்பட்ட கொள்ளைக்காரர்கள் தனியார் துறையில் நிரம்ப இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தனியார் துறையை எப்படி ஒழிப்பது என்பதில் சர்க்கார் மிக மிகக் கவனமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ் அதிகாரிகளையும், சிவில் துறை அதிகாரிகளையும், மற்றவர்களையும் வைத்து எந்த அளவுக்கு இப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க அவசியம் இல்லை என்று கருதி, இதற்கான அனுமதியை நான் மறுக்கிறேன்.



## 4. கவன ஈர்ப்பு.

### கோவை மாநகரில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடி தண்ணீர் வழங்கப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டப் பேரவை விதி 41 இன் கீழ் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரங்கநாதன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கொண்டுவருவார்.

**திரு. கே. ரங்கநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை மாநகரிலுள்ள மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விடுவதால் அந்த நகர மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர் குறித்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகளின் அவசியம் குறித்து இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, கோயம்புத்தூர் நகரில், ஒருவருக்கு 20 காலன் நீர் வீதம் 1 லட்சம் மக்கள் தொகைக்கு சிறுவாணி ஆற்றிலிருந்து நீர் வழங்கும் திட்டம் 1931 ஆம் ஆண்டு முதல் செயலில் இருந்து வருகிறது. கோடை காலம் நீங்கலாக ஏனைய காலங்களில் நாளொன்றுக்கு 4.1 மில்லியன் காலன் நீர் வழங்கப்படுகிறது. தவிர, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் 79 நிலைக் கிணறுகளைத் தோண்டியுள்ளது. இவற்றினால் நாளொன்றுக்கு 0.65 மில்லியன் காலன் நீர் கிடைக்கிறது. எனவே, கோடை காலம் தவிர, ஏனைய காலங்களில் சாதாரணமாக நாளொன்றுக்கு 4.75 மில்லியன் காலன் நீர் வழங்கப்படுகிறது.

சிறுவாணி தலைப் பகுதியில் நீர்க்கொள்ளளவு திறன் மிகவும் குறைவே. அதோடு கோடை காலங்களில் ஆற்றில் நீர் அதிகமாக வாராததால் சிறுவாணி நீர்த் தேக்கத்தில் நாள் ஒன்றுக்கு வரும் நீர் அளவு 2.4 மில்லியன் காலனாகக் குறைந்துள்ளது. மிகவும் வறண்ட காலங்களில் இந்த அளவிற்கும் குறைவாகவே நீர் வருகிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 ஏப்ரல் 5

இதனைச் சரிக்கட்ட கோயம்புத்தூர் நகராட்சி மன்றம், இருட்டுப்பள்ளத்தில் ஒரு கிணற்றையும் பெரியாற்றில் ஒரு கிணற்றையும் வெட்டி விசையேற்றங்களின் மூலம் அவற்றிலிருந்து நீர் எடுத்து அதனை முக்கியக் கால்வாய்கள் மூலம் மக்களுக்கு நீர் வழங்கி வருகிறது. இவ்விரு கிணறுகளிலிருந்தும் நாளொன்றுக்கு சுமார் 0.8 மில்லியன் காலன் நீர் கிடைக்கிறது. ஏனைய காலங்களில் நாளொன்றுக்கு 4.75 மில்லியன் காலன் நீர் நீர்த்தேக்கத்திற்கு வருவதால் கோடை காலங்களில் நாளொன்றுக்கு 3.85 மில்லியன் காலன் நீர் வழங்கப்படுகிறது. கோடை காலங்களில் குறைவாக நீர் வழங்குவதனால், வழக்கமாக நீர் தேவைப்படும் காலங்களில் சமமாக நீர் வழங்குவதற்கேற்றவாறு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீரைக் கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் வழங்கி வருகிறது. பெரும்பாலும் கோடை காலங்களில் இந்த முறையிலேயே நீர் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டில், மின்சாரப் பற்றுக்குறை காரணமாக இப்பிரச்சினை மேலும் சிக்கலாகிவிட்டது. இருட்டுப்பள்ளம், பெரியாறு நீரேற்று நிலையங்களிலிருந்து 4 மணி நேரத்திற்கு மட்டுமே நீரேற்றப்படுகிறது. நகரில் ஒரு பாதிக்கு 12 மணி நேரமும் அடுத்த நாள் மற்றொரு பாதிக்கு 12 மணி நேரமும் மின்சக்தி கிடைப்பதால் 79 துளைக் கிணறுகளிலிருந்து தொடர்ந்து நீரேற்றப்பட முடியவில்லை.

கோயம்புத்தூர் நகராட்சி மன்றம், பெரியாறு நீரேற்று நிலையத்தில் எண்ணெயில் இயங்கும் பொறியை நிறுவி அதன் மூலம் 20 மணி நேரம் நீரேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. ஏற்கனவே இந்த நிலையம் 4 மணி நேரம் மின்சக்தியில் இயங்குவதால் ஆக மொத்தம் நாள் முழுவதும் இந்த நிலையம் செயல்படுகிறது. இருட்டுப்பள்ளம், பெரியாறு நீரேற்று நிலையங்களில் தொடர்ந்து நீரேற்றத் தமிழ் நாடு மின்சார வாரியம் தனியாக மின் கம்பிகளை அமைத்துக் கொடுப்பதற்காக மேற்படி வாரியத்திற்கு நகராட்சி மன்றம் ரூ. 1.10 லட்சம் அளித்துள்ளது. இப்பணி சுமார் 15 நாட்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறாக நாளொன்றுக்கு மொத்தம் 0.4 மில்லியன் காலன் நீர் தற்போது இறைக்கப் படுகிறது.



1973 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

எல்லாப் பகுதிகளுக்கும் சமமாக நீர் பகிர்ந்தளிக்க இயலும் பொருட்டு கீழ்க்காணும் பகுதிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் நீர் வழங்கப்பட்டு வருகிறது:—

(1) ஆர். எஸ். நகர்
(2) டாட்டாபாத்
(3) ராம் நகர்
(4) காமராஜபுரம்
(5) பி. என். பாளையம்
(6) எஸ். ஆர். பி. நகர்
(7) புளிய குளம்
(8) ரேஸ் கோர்ஸ்
(9) காட்டூர்
(10) அனுப்பார்பாளையம்
(11) கிரே டவுன்
(12) காந்திபுரம்

நகரத்தின் எஞ்சிய பகுதிகளில் நாள்தோறும் நீர் வழங்கப் படுகிறது.

இப்பிரச்சினையை எதிர்பார்த்து, ரூ. 10 லட்சம் செலவில் ஆழமாக 10—12 துளைக்கிணறுகள் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியதோடு இப்பணி தமிழ் நாடு குடி நீர் வழங்கு வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீர் நிலையங்களில் நீர் நிறைய இருப்பதால் அங்கு துளைக்கிணறுகள் அமைக்க வாரியத்தினால் இயலவில்லை. அம்மன்குளத்தில் துளைக் கிணறு அமைக்கும் வேலை பெரும்பாலும் முடிந்துவிட்டது. லாலிரோடு துளைக் கிணறு பாதியளவுக்கு முடிந்துவிட்டது. வாலங்குளத்தில் ஒன்றும், குமாரசாமி ஏரியில் இரண்டும் ஆக மேலும் மூன்று துளைக் கிணறுகள் அமைக்கும் பணிவரை தொடங்கியிருக்கிறது. இப்பணி முழுவதும் 1973 மே திங்களுக்குள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூர் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணும் பொருட்டு, சிறுவாணி ஆற்றிலிருந்து 1,300 மில்லியன் கன அளவு நீரைப் பெறவும், கோடை காலங்களில் நீர்

வழங்குவதற்கேற்றவாறு 650 மில்லியன் கன அடி நீர் கொள்ளும் அளவுக்கு நீர்த்தேக்கத்தினை அமைக்கவும் 1969 ஆம் ஆண்டில் இவ்வரசு கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. இதற்காக ரூ. 4.81 கோடி செலவில் விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டும் கூட இத்திட்டத்தைத் தொடங்க முடியவில்லை. ஒப்பந்தம் பற்றி கேரள அரசுடன் மீண்டும் மீண்டும் விவாதம் நடத்தப்பட்டிருப்பினும் விரிவான ஒப்பந்தம் இராததே இதற்குக் காரணம் ஆகும்.

ரூ. 320.50 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் கட்ட மற்றொரு 36 அங்குலம் விட்டமுள்ள முக்கியக் குழாய்களை அமைத்து மேம்பாட்டுப் பணிகள் செய்வதற்கான மற்றொரு செயற்குறிப்பினையும் தமிழ் நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம் அரசுக்கு அனுப்பியுள்ளது. இதனைப் பரிசீலித்து அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

இது தவிர, கோயம்புத்தூர் நகரில் சேர்க்கப்பட்டுள்ள சிங்கநல்லூருக்கும் ஏனைய இடங்களுக்கும் ரூ. 13.98 கோடி செலவில் பவானி ஆற்றிலிருந்து நீர் வழங்கும் நெல்லித்துறை நீர் வழங்குத் திட்டத்தையும் அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. கே. ரங்கநாதன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லித்துறை பகுதியில் மின்சாரம் இல்லை என்று சொன்னார்கள். அங்கே ஆயில் எஞ்சின் வைத்து நீர் எடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆயில் எஞ்சின் வைத்து தண்ணீர் எடுக்கிற ஏற்பாடுதான் அங்கே செய்யப்பட்டு வருகிறது. அங்கே செகண்ட் லைன் போடப்பட்டிருப்பதாக குறிப்பு அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஏ. சுப்பிரமணியம் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** It would become a precedent. இது ஒரு முன்மாதிரியாகப் போய்விடும், எல்லோரும் பேச ஆரம்பித்துவிடுவார்கள். உங்களுக்கு விளக்கம் வேண்டுமானால் அமைச்சரைச் சந்தித்து பெற்றுக்கொள்ளலாம்.



## (5) தகவல் கோரல்

### (அ) அமைச்சரவை விரிவாக்கப்படும் என்பதான செய்தி குறித்து.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். இன்றைக்கு இந்தத் தொடர் கூட்டத்தினுடைய இறுதி நாளாக இருக்கிறது. மந்திரி சபையை விஸ்தரிக்கப் போவதாக நாங்கள் எல்லாம் பத்திரிக்கையில் பார்க்கிறோம். அந்த அறிவிப்பை இந்த மன்றத்திலேயே செய்தால், நாங்கள் எல்லாம் வருகின்ற மந்திரிகளை வாழ்த்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். எனவே, அப்படி மந்திரி சபையில் இடம் பெறப் போகின்ற பெரியவர் யார் என்று முதலமைச்சரவர்கள் அருள்கூர்ந்து தெரிவிப்பார் என்று கருதுகிறேன். முதலமைச்சர் அவர்கள் முன்பே, இந்த மந்திரிசபையை விஸ்தரிப்பதற்கு இடம் இருக்கிறது என்று இந்த மன்றத்தில் ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள். அப்படியானால், அமைச்சரவை விஸ்தரிக்கப்பட இருந்தால், அந்த அறிவிப்பை இங்கே இந்த மன்றத்திலே அறிவித்தால் நல்லது. பிரஸ்-க்குக் கொடுப்பதற்கு முன்னால் நாங்கள் அதைத் தெரிந்துகொள்வதற்கு உரிமை உள்ளவர்களாக இருக்கிறோம் என்று நம்புகிறோம். எனவே, அந்த அறிவிப்பை இங்கே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினைக்கு நான் சொல்கின்ற பதில், அவர் பத்திரிக்கையில் பார்த்ததாகச் சொன்னார்கள். மந்திரிசபை விரிவாக்கப்பட இருப்பதாக பத்திரிக்கையில் பார்த்ததாகச் சொன்னார்கள். விரிவாக்கப்பட்டால், பத்திரிக்கையிலே பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது சொன்னால் வாழ்த்தலாம் என்று சொன்னார்கள். பிறகு சொன்ன பிறகு வாழ்த்துத் தந்தி அனுப்பலாம்.

### (ஆ) எஸ்.எஸ்.எல்.சி. விடைத் தாள்கள் காணாமற் போய்விட்டன என்பதான செய்தி குறித்து.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, இன்று இந்தத் தொடர்க் கூட்டத்தின் கடைசி நாள். நாங்கள் ஏற்கனவே, விதிகள் 41, 42 இன் கீழ் தீர்மானங்கள் கொடுத்திருந்தோம்,

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 ஏப்ரல் 5

குறிப்பாக, எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள் குறைவுதல் குறித்து ஒரு நோட்டீஸ் கொடுத்திருந்தோம். அது மிக மிக முக்கியமான விஷயம். இதுவரையில் அதற்கான தகவல்களை அமைச்சர் அவர்கள் தரவில்லை. இன்று மாலையிலும் கூட்டம் இருக்கிறது. அப்போது இதை அறிவித்தால் நலமாக இருக்கும். இது மாணவர்களின் பிரச்சினை. இதற்கு அரசு என்ன முடிவை எடுத்திருக்கிறது என்று அறிவித்தால் நல்லது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இன்று கடைசி நாள். நமது விதிமுறைகளின்படி, ரூல் 41, 42-இல் தான் பதில் சொல்ல வேண்டுமென்று இருக்கிறது. கடைசி நாளில், சாதாரண வழக்கம் என்னவென்றால், எல்லாத் தீர்மானங்களுக்கும் பதில் கொடுப்பார்கள். இன்றைக்குப் பிற்பகலிலும் ஒரு கூட்டம் இருப்பதால், இவற்றிற்குப் பதில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Even if it is not possible for the hon. Deputy Speaker to allow the adjournment motions, call-attention may be allowed. If it is allowed, well and good. If even that is not possible, at least Rule 82 statement may be made on these things. First preference is for Rule 42, then Rule 41 and then Rule 82. That should be done.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்ட, இந்த எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள்கள் காணாமற் போனது பற்றி புலன் விசாரணை ஆரம்பித்திருக்கின்றது. பத்திரிகைச் செய்தி தவிர வேறு தகவல்கள் கொடுப்பதற்கான வழிவகையில்லை இப்போது. அந்தத் துறையினர் தீவிரமாக நடவடிக்கைகளுக்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த விசாரணை முடிந்து முழுத் தகவல்கள் வந்தபிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் காரணமாக மாணவர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு எந்தெந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமோ அவைபற்றிக் கல்வித் துறை எடுத்துக்கொள்ளும். புலன் விசாரணை முடிந்த பிறகு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் முறைப்படி.



1973 ஏப்ரல் 5]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இதைத் தொடர்ந்து ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன். பி.டி. ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. 'கரெக்‌ஷனுக்கு' அனுப்பப்படவில்லை என்று சொல்லப்படுகின்றது. இதுபற்றி அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று. . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்த நேரத்தில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இப்போது மீண்டும் அதை மாற்றி அமைப்பது என்பது இயலாத ஒன்று. ஆசிரியர்களிடத்தில் பேசும்போதுகூட இதைக் குறிப்பிட்டேன். பத்து பதினைந்து நாட்கள் அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்த காலத்தில், நாம் ஏற்கெனவே திட்டமிட்டப்படி கடந்த 26-ம் தேதியன்று தேர்வுகள் தொடங்கப்பெற்று குறித்த காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் விடைத் தாள்கள் திருத்தப்படுவதற்கும் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு விட்டன. இப்போது மீண்டும் அந்தப் பட்டியல்களையெல்லாம் மாற்றியமைப்பது என்றால் அதில் பல சங்கடங்கள் தோன்றும். இதை ஆசிரியர் பிரதிநிதிகள் வந்த நேரத்தில் அவர்களிடமும் சொல்லப்பட்டுவிட்டது. அவசியம் நேரிட்டால் இதை மறுபடியும் ஆராயலாம் என்று மட்டும் இப்போதைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(THIRU K. M. Subramaniam rose)

MR. DEPUTY SPEAKER : This is neither question-hour nor discussion time on adjournment motions.

THIRU K. M. SUBRAMANIAM : One clarification, Sir, about uneven distribution of flood grants to hut dwellers. I have given notice under Rule 41 on this.

MR. DEPUTY SPEAKER : Under what head are we conducting our business now ? The hon. Member refers to Rule 41 or 42 notice. Normally the practice in this House is not to raise any matter which has been given notice of under Rule 42 or Rule 41 without the permission of the Hon. Speaker. When I refuse my permission or withhold my permission, you must come to my Chamber and discuss the matter.

[1973 ஏப்ரல் 5

THIRU K. M. SUBRAMANIAM : Two questions have been answered. I want to put a third question. I cannot press for an answer.

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru K. M. Subramaniam can ask in person or consult the Hon. Minister and not try to create some precedents.

THIRU K. M. SUBRAMANIAM : I shall follow that advice in future. But in this case I have given notice under Rule 41 about uneven distribution of flood grants in the City of Madras to hut dwellers. I can put a question and answer may be given.

MR. DEPUTY SPEAKER : No.

### (6) அறிக்கை அளித்தல்.

#### (அ) சூப்பர் மார்க்கெட்டுகள், மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றின் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU PALANIVEL RAJAN : Sir, I rise to present the reports of the Estimates Committee on ' Supermarkets ' and ' Hospitals and Dispensaries '.

#### (ஆ) 1969-70-க்கான பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

THIRU MANALI C. KANDASAMI : Sir, I present the report of the Committee on Public Accounts on the accounts of the State of Tamil Nadu for the year 1969-70.

I also present the report on the statement of further action taken by the Government on the observations of the Committee contained in the Report on the purchase of about 400 grounds of vacant land comprised in R.S. No. 124/6 of Perambur Division (Erukkancheri) by the Tamil Nadu Electricity Board in 1963.

The second report is with me. It is under print. As soon as it is printed, it will be circulated to Members.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தப் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டைச் சமர்ப்பிப்பதன் பேரிலே மேலும் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



1973 ஏப்ரல் 5] [திரு. கே. டி. கே தங்கமணி]

1969-70-ம் ஆண்டுக்கான ரிப்போர்ட்தான் இப்போது வந்திருக்கின்றது. 1970-71, 1971-72-ம் வருஷத்திற்கான பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்ஸ் இன்னும் கிடைத்தபாடில்லை. அடுத்த வருஷமாவது 'பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி' என்று வரும்போது இவை முழுவதுமாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும். 1973-74-ல் 1969-70-க்கான அறிக்கையை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? ஆகவே 'கரெண்ட் ரிப்போர்ட்' வருவதற்கு வழி செய்ய வேண்டும். வந்ததைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. இந்தப் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி ஆரம்பத்திலேயே தீவிரமாக இருந்திருந்தால் இரண்டு ஆண்டு காலத்திற்குள் ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்து இருக்க முடியும். இப்படிப்பட்ட பழைய ரிப்போர்ட்டுகளை வைத்துக் கொண்டு பேசுவதில் இந்த சபைக்கு எந்தவிதத்தில் உபயோககரமாக இருக்க முடியும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், இந்தப் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியில் ஓர் அங்கத்தினர் என்ற முறையில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கமிட்டி ஆரம்பித்த சில மாதங்கள் வரையில், இது செயல்படுவதற்குக் கூட அரசாங்க அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை. ஆகவேதான் இந்தக் கமிட்டி தன் வேலையைச் செய்ய முடியாமல் வேலை செய்ய வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தக் கமிட்டியின் தலைவரே இங்கே இருக்கின்றார். அவரே பெர்ஸனலாக எக்ஸ்ப்ளனேஷன் கொடுத்தால் பிரயோசனமாக இருக்கும் இல்லையா ?

திரு. மணலி சி. கந்தசாமி : சார், இந்தக் கமிட்டி மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்ய விரும்பியபோதிலும் பல சந்தர்ப்பங்களிலே பதில்கள் தாமதமாக வந்ததால் கூட்டங்கள் தாமதப்பட்டன. இன்னும் கூட மூன்று இலாக்காக்களுடைய பிரச்சனைகள் சரிசெய்யப்படாமல் இருக்கின்றன. அடுத்த வருஷத்திற்கு விடப்பட்டு இருக்கின்றன என்று சொல்லித்

கொண்டு, வரும் காலத்தில் இந்தமாதிரி தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு இலாக்காக்கள் முடித்துக்கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வரும் கமிட்டிகள் இந்தக் கமிட்டித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தையும், திரு. தங்கமணி அவர்கள் கூறிய கருத்தையும் ஏற்றுக் கொண்டு அதன்படி நடப்பார்கள் என்று நம்புகின்றேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த ரிப்போர்ட்ஸ் காலாகாலத்தில் வராததால் இதைப் பரிசீலிக்க முடியவில்லை என்ற கருத்து இருக்கின்றது. ஆகவே, அவை உடனடியாக மன்றத்தின் முன் வைக்கப்பட்டு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க இலாக்காக்களுக்கு 'டைரெக்ஷன்' கொடுக்க வேண்டும் என்றுதான் மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவரவர்களே, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் நானும் இப்படிப்பட்ட கமிட்டியில் இருந்து இருக்கின்றேன். பொதுவாக கமிட்டிகளின் அறிக்கை என்று சொல்லும்போது இப்படித்தான் நடக்கின்றதே தவிர, ஏதோ இப்போதுதான் 1969–70-ம் ஆண்டுக்கான அறிக்கையைக் கொடுக்கின்றார்கள் என்று சொல்லுவதில் பலனில்லை. பொதுவாக எப்போதும் இப்படித்தான் நடைபெறுகின்றது. அவற்றிலும் கம்யூனிஸ்டு கட்சித் தலைவரவர்கள் இருந்திருக்கின்றார்கள். இந்தக் கமிட்டியில் கம்யூனிஸ்டு கட்சித் தலைவரவர்கள்தான் தலைமை ஏற்றிருக்கின்றார்கள். அந்தக் குறையை எடுத்துச் சொல்லுவதும் அந்தக் கட்சித் தலைவர்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இலாக்காக்களில் தாமதம் ஏற்படுகின்றது என்கின்றார். அதிகாரிகளைக் கேட்பதற்கு கமிட்டிக்கே வேண்டிய அதிகாரம் இருக்கின்றது. இதற்காக அமைச்சரவர்களிடம் போக வேண்டியதில்லை.





## 7. அறிவிப்புகள்.

### (அ) 1973–74-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1973–74-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1. திருமதி த. ந. அனந்தநாயகி.
2. திரு. மு. இராமன்.
3. திரு. கே. பி. கந்தசாமி.
4. திரு. எல். கணேசன்.
5. திரு. சொ. காவேரிமணியம்.
6. திரு. பெரி. சண்முகம்.
7. திரு. அ. சின்னசாமி.
8. டாக்டர் ச. அ. சின்னராசு.
9. திரு. க. சுப்பு.
10. திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
11. திரு. தோப்பூர் திருவேங்கடம்.
12. திரு. கு. அ. பொம்மன்.
13. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
14. திரு. முனு ஆதி.
15. திரு. ஈ. எம். நடராசன்.
16. திரு. எம். ஏ. லத்தீப்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1973–74-ம் ஆண்டு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதலமைச்சர்) அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 174-வது விதியின்கீழ் திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (ஆ) 1973-74-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: 1973-74-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கின்றேன் :—

1. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.
2. திரு. சி. ஆறுமுகம்.
3. திரு. கே. ஆண்டி என்கிற குருசாமி.
4. திரு. கே. கந்தசாமி.
5. திரு. கா. காளிமுத்து.
6. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)
7. திரு. கே. என். குமாரசாமி.
8. திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்.
9. திரு. சி. சின்னவெள்ளையன்.
10. திரு. போ. பத்மநபன்.
11. திரு. வ. பாலையா.
12. திரு. கே. ரங்கநாதன்.
13. திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன்.
14. திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்.
15. திரு. எஸ். வடிவேல்.
16. திரு. மு. வேதாசலம்.





நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1973-74-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதலமைச்சர்) அவர்களும், பொதுக்கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 165-வது விதியின்கீழ் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (இ) 1973-74-ம் ஆண்டுக்கான (1) மதிப்பீட்டுக் குழு (2) பொதுக் கணக்காய்வுக் குழு (3) சட்டப் பேரவை சட்டவிதிகள் ஆய்வுக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்கள் நியமனம் பற்றி மேலவைத் தலைவரது செய்தி குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றன என்பதை இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன் :—

1973-74-ம் ஆண்டுக்கான சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

1. புலவர் ஓ. அறிவுடைநம்பி.
2. திரு. நாகூர் ஈ. எம். அனிபா.
3. திரு. பி. திருஞானசம்பந்தம்.
4. திரு. எஸ். வெள்ளபாண்டியன்.
5. திரு. கே. எஸ். அப்துல் வகாப்.

1973-74-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

1. திரு. கே. ராசாராம்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1973 ஏப்ரல் 5

3. திரு. க. அறிவழகன்.

4. திரு. வி. தங்கபாண்டியன்.

5. திரு. வி. ஈஸ்வரமூர்த்தி.

1973-74-ம் நிதி ஆண்டுக்குரிய சட்டப்பேரவை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை இம்மன்றம் நியமனம் செய்கிறது :—

1. திரு. எம். ராஜா அய்யர்.

2. திரு. ஜி. பராங்குசம்.

3. திரு. எம். சங்கரலிங்கம்.

4. திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி.

5. திரு. இல. பலராமன்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, முன்னாலே இருக்கிறவர்கள் எதிலே வேண்டுமானாலும் பேசுகிறார்கள். அவர்கள் எந்த விதியிலே பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. எந்த விதியின் கீழே அவர்களைப் பேச அனுமதிக்கிறீர்களோ அந்த விதியின் கீழே பின்னாலே இருக்கிற எங்களுக்கும் பேச அனுமதி கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முன்னாலே இருக்கிறவர்கள் எல்லாம் கட்சிகளின் தலைவர்கள் என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்ல. பேரவையில் இருக்கிற எந்த உறுப்பினரும் காரணமில்லாமல் பேசுவதைத் தடுப்பதற்கு சட்ட விதிகள்படி உரிமை எனக்கு இருக்கிறது. அந்த உரிமையை எல்லா நேரங்களிலும் நான் பயன்படுத்துவதில்லை. முன் வரிசையில் இருப்பவர்கள் கட்சிகளின் தலைவர்கள். அவர்கள் கட்சிகளின் சார்பாக இருக்கிறார்கள். நீங்கள் அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொண்டு அவர்கள் உங்கள் கருத்துக்களைச் சொல்கிறார்கள். ஆகவே, நீங்கள் இந்தப் பிரச்னையைக் கிளப்புவது சரி என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.



## (5) தகவல் கோரல் (தொடர்ச்சி)

### (இ) பர்மா பஜார் அகதிகள் கடைகள் அகற்றப்படும் என்பதான செய்தி குறித்து

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, 42-வது விதியின் கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அன்றையதினம் 27ம் தேதி நம்முடைய அரிஜன நலத் துறை அமைச்சரவர்கள் பர்மா பஜார் அகதிகள் வைத்திருக்கிற கடைகளைப் பற்றிச் சொல்லிய காரணத்தினால் அங்கே ஒரு அசாதாரணமான நிலைமை இருக்கிறது. அவர்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வியாபாரிகளாக இருக்கிற காரணத்தினால் பணம் கொடுக்கல், வாங்கல் செய்பவர்கள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பர்மா வியாபாரிகள் பற்றி ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் அதன் மீது பேசவேண்டியதில்லை. எடுத்துக் கொள்வதைப் பற்றி வேண்டுமானால் கேளுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அகதிகள் கடைகளை அங்கேயிருந்து எடுத்துவிடுவார்கள் என்ற கருத்தில் மாண்புமிகு அரிஜன நலத் துறை அமைச்சரவர்கள் சொல்லிய காரணத்தினால் கொடுக்கல், வாங்கலில் சிக்கல் ஏற்பட்டு அவர்கள் வியாபாரம் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அருள்கூர்ந்து வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆகையினாலே இதை வலியுறுத்திச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. கே. எம். சுப்பிரமணியம் எழுந்தார்)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் பதில் சொல்லி முடித்து விடுகிறேன். திரு. லத்தீப் அவர்கள் பர்மாவிலிருந்து வந்து வியாபாரம் நடத்துகிற தோழர்களுக்கு ஏற்படுகிற அவதி குறித்துச் சொன்னார்கள். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்றாலும் கூட, அன்றைக்கு தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரவர்கள் பதிலைச் சுட்டிக்காட்டி அதன் காரணமாக அங்கு வாழ்கிற, வியாபாரம் செய்கிற அந்த மக்களுக்குப் பெரிய இடர்ப்பாடு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தோ அல்லது அரசைப் பொறுத்தோ எடுக்கப்படுகிற எந்த நடவடிக்கையும்

அவர்களை அவதிக்குள்ளாக்குகிற அளவிற்கு அமையாமல் நிச்சயமாகப் பார்த்துக் கொள்ளும் என்ற உறுதியை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் பிரச்னையை நீங்கள் சொல்லுங்கள்.

### (ஈ) சென்னை நகர் சேரிவாழ் மக்களுக்கு அளிக்கப்படும் பஞ்ச நிவாரணம் குறித்து

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I have also given notice of a motion about the distribution of famine relief to slum dwellers in Madras particularly in Thyagarayanagar area. There it has been indiscriminately done and there are still more than 500 families who have not received the relief. They are expecting to receive the relief every day and they are disappointed. I want to know what action does the Government propose to take. Every day they are marching to the Tahsildar's office and they are told to come tomorrow, tomorrow, tomorrow. Even day before yesterday, some people were sent back like that. I only want to know what action the Government proposes to take, because there have been indicriminate distribution, bad distribution and some grants have been distributed wrongly. I want to know what action the Government proposed to take in this matter.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நல்ல காரியங்கள் அல்லது நிவாரணங்கள் அல்லது உதவிகள் இவைகளை அரசு செய்கிற நேரத்தில் அதைப் பாராட்ட முடியாவிட்டாலும் அதில் ஏதோ தவறு இருக்கிறது என்று எடுத்துச் சொல்வதன் மூலம் அரசின் முயற்சிகளுக்கு ஊறு விளைவிப்பதற்குச் சில பேர் பிரயத்தனப்படுகிறார்கள். அந்த வகையைச் சேர்ந்தது தியாகராய நகரில் உள்ள பிரச்னையாகும். உள்ளபடியே பாரபட்சமான காரியம் நடைபெற்றிருக்குமானால் நிச்சயமாக அரசு கவனிக்கத் தவறாது. இதைப் பயன்படுத்திக் கொண்டு பாதிக்கப்படாதவர்களும், எந்த விதமான கஷ்டத்திற்கு உள்ளாகாதவர்களும் தங்களுக்கு உதவி தேவை என்று முறையிட்டுக் கொண்டு வருகிறார்கள். அவசரப்பட்டு பாதிக்கப்படாதவர்களுக்கு அரசாங்கம் பணத்தை அள்ளி வழங்கத் தயாராக இல்லை. எனினும் பரிசீலிக்கப்படும்.





(Dr. Hande and Thiru K. M. Subramaniam rose.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இருந்தீர்கள். என்னுடைய பிரச்னையையும் கேளுங்கள். எவ்வளவு சுருக்கமாகப் பேச முடியுமோ அப்படிப் பேசவேண்டும். கட்சித் தலைவர்கள் சொன்னார்கள். 5-ம் தேதி பேரவை அலுவல்களை முடித்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். கேள்வி நேரம் முடிந்து முக்கால் மணி நேரமாகிறது. இன்றைக்கு 9¾-க்கே கேள்வி நேரம் முடிந்தது. இப்போது 10½ ஆகிறது. இன்னும் மெயின் பிஸினஸுக்கு வரவில்லை.

DR. H. V. HANDE : Sir, it is a question of 15 lakhs of workers. It is about the cost of living . . . .

நாளைக்கு இந்த ப்ராப்ளம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் கொடுத்த 42-வது விதியின்கீழ் கொடுத்த தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** காஸ்டு ஆஃப் லிவிங் இன்டெக்ஸ் பிரச்னை, 15 லட்சம் தொழிலாளர் பிரச்னை. ஒரு நிமிஷத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து எனக்காக உட்காருங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒரு நிமிஷம்தான். முக்கியமான பிரச்னை.

MR. DEPUTY SPEAKER : I think it was not at all kept in abeyance. That particular motion of yours I think has been disallowed once.

(திரு. சோ. அழகர்சாமி நின்றார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தனிப்பட்ட முறையில் நேரம் கொடுக்க முடியாது. இன்னும் 3 பேர் கேட்டால் 11½ மணி ஆகும். நேரடியாக அமைச்சரவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

### (7) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

**(ஏ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்குதல் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 13/73).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 13/73) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவை அளித்துள்ளார்கள்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

DR. H. V. HANDE : On a point of Order, Sir, * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன வார்த்தைகளைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். இதுமாதிரி பேசுவது முறையல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அவர்களையெல்லாம் விட்டீர்கள் இது முக்கியமான பிரச்னை. அதனால் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது கூட பிரிவிலேஜ் ஆகும். This will come under privilege.

(டாக்டர் எச். வி. ஹாண்டே நின்றார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்கள், தயவு செய்து உட்காருங்கள்.

(திரு. துரைமுருகன் நின்றார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துரைமுருகன் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு மட்டும் இந்த உரிமை இருக்கட்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு கட்சியின் தலைவர். நான் இங்கே பேரவையின் தலைமைப் பொறுப்பில் இருந்தபோதிலும் கூட, என்னுடைய நடுநிலைமை

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



தவறாமல் பேச வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். நீங்கள் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் கட்சியைச் சார்ந்தவர்கள். மேலவை உறுப்பினராக இருந்தவர்கள். பேரவைத் தலைவரின் தீர்ப்பைப்பற்றி இவ்வளவு கடுமையாக விமர்சனம் செய்வீர்கள் என்று நினைக்கவில்லை. நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அந்த வார்த்தைகளை நீக்கிவிட்டதால், அது குறித்து நான் மேலும் விமர்சிக்க விரும்பவில்லை. இருந்தபோதிலும் என்னுடைய மன வருத்தத்தை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) (Dr. H. V. Hande rose). (Dr. Hande, you kindly resume your seat. Do not drive me to a remote corner. Kindly resume your seat. You are continuously disobeyinf the Chair. இது ஒரு நல்ல ஜனநாயக முறையாகாது. என்னிடம் பெரிய சக்தி ஒன்றும் கிடையாது.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, என்னைப்போன்ற இளம் சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம், என்ன வேண்டுமானாலும் பேசிவிடலாம், தலைவர் ஆணைக்குக் கீழ்படியாமல் இருக்கலாம், அதற்குப் பரிகாரம், அப்படிப் பேசியவைகளைச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுவதுதானா?

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்களை நான் பேச அனுமதிக்கவில்லை. நீங்கள் பேசுவீர்கள், அதற்குப் பிறகு ஒரு உறுப்பினர் விளக்கம் கேட்பது; இவ்வாறாக ½ மணி நேரம் ஆகிவிடும். (குறுக்கீடு) நான் டாக்டர் ஹாண்டே அவர்களைப் பேச அனுமதிக்கத் தயாராக இல்லை. நீங்கள் பேரவைத் தலைவரை மதிப்பது இல்லை, பேரவையின் சட்ட திட்டங்களை மதிப்பது இல்லை என்று சொல்கிறபோது, இங்கே பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) 'பர்சனல் எக்ஸ்பிளனேஷன்' கொடுக்க அனுமதிக்க முடியாது. 'பர்சனல் எக்ஸ்பிளனேஷன்' கொடுப்பதற்கு சட்ட விதிகளில் முறைகள் இருக்கின்றன. பேரவைத் தலைவரின் ஆணையை மதிக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்த விதிமுறைகளை நீங்கள் மதிக்கவில்லையாதலால், 'பர்சனல் எக்ஸ்பிளனேஷன்' கொடுக்க அனுமதி மறுக்கிறேன்.

(8) அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன் வடிவு எண் 13/73).

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I beg to move that the Tamil Nadu Legal Aid and Advice Bill,* 1973 (L.A. Bill No. 13 of 1973) be referred to a Joint Select Committee.

The Government have had under consideration the question of drawing up a scheme for ensuring that legal aid and advice is made more readily available to persons of small and moderate means. The Hon'ble Members are aware that the existing provisions in the Code of Civil Procedure for affording legal aid to poor are inadequate. The Central Law Commission has also stressed the need to enact a statute for this purpose as is the case in the United Kingdom and other countries. The Bill before the House is the result of the Government's endeavour to enact such a statute for Tamil Nadu.

I move:

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members of the Legislative Assembly and eight Members of the Legislative Council) to consider the Tamil Nadu Legal Aid and Advice Bill, 1973 (L.A. Bill No. 13 of 1973) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee:—

1. Thiru K. K. Muthiah.
2. Thiru Kuzha Chelliah.
3. Thiru N. K. Palanisamy.
4. Thiru V. Thavamani Thevar.
5. Thiru M. A. Latheef.
6. Thiru K. H. Bomman.
7. Thiru A. Subramaniam.
8. Thiru K. Kandaswamy.

* Published in the Tamil Nadu Government Gazette, Extraordinary, dated 3rd April 1973.





9. Thiru K. Thiruppathy.
10. Thiru A. Rajamanickam.
11. Thiru M. V. Karivengadam.
12. Thiru M. Surulivel.
13. Thiru M. Subramaniam.
14. Thiru V. Rajagopal.
15. Thiru K. Vezhavendan.
16. Thiru R. Nainamalai.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: I want a clarification. Why no lady member is included in the Joint Select Committee? Can they not putforth the case of poor women?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லாத் தலைவர்களையும் கலந்துகொண்டுதான் போட்டு இருக்கிறோம். இப்போது பெண்மணிகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: A member from the ruling party can be included. I am not anxious.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்களே இருங்களேன்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: It is better if she is a member from the ruling party.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move that "in the place of Thiru Nainamalai, Thirumathi V. P. Palaniammal, M.L.A. be included."

The amendment was put and carried.

தீர்மானம், திருத்தியபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு கூட்டாய்வுக் குழு ஆய்வு செய்வதற்கு அனுப்பப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விதி 139(1)-ன் கீழ் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களை இக்குழுவின் உறுப்பினராக நான் நியமனம் செய்கிறேன்.

### (ஆ) 1973-ம் சென்னை மாநகர் குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்தச் சட்டமுன் வடிவு.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Deputy Speaker, Sir, I beg to move that the Madras City Tenants' Protection (Amendment) Bill* 1973. (Legislative Assembly Bill No. 14 of 1973) be taken into consideration.

In 1972, it was represented to the Government that tenants who had invested l arge amounts in superstructures in lands taken on lease were denied the protection conferred by the Madras City Tenants' Protection Act, 1921 in view of the proviso to section 12 of that Act as it stood prior to the Madras City Tenants' Protection (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 4 of 1972) on the ground that they had entered into contract with the landlord to surrender both the buildings and the land on the expiry of the tenancy agreement.

The Government, after careful consideration of the representation, decided that the protection given by the Act should be enjoyed by all tenants, irrespective of the fact whether they had entered into an agreement with the landlords containing stipulations as to the erection of buildings constructed after the date of the contract and limiting the rights under the Act.

In order to relieve the hardship to tenants, the Government enacted the Madras City Tenants' Protection (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 4 of 1972), omitting the proviso to section 12 of the Madras City Tenants' Protection Act, 1921 (Tamil Nadu Act III of 1921) with retrospective effect.

The object underlying Tamil Nadu Act 4 of 1972 was to confer benefits on all the tenants who were in actual physical possession of the lands and buildings, notwithstanding any judgement, decree or order of any court holding that the tenant was not entitled to the benefits of the Act by reason of the proviso to section 12 of the principal Act. The position has been examined and it has been decided to amend the principal Act so as to confer the benefits of the Act on persons who were tenants under tenancy agreements to which the principal Act was applicable notwithstanding the fact that courts have passed decrees for

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 3rd April 1973.



declaration or for possession or for similar relief on the ground that the proviso to section 12 of the principal Act as it stood before the publication of Tamil Nadu Act 4 of 1972 disentitled them to the benefits under the Act. The Bill seeks to achieve the above object.

The Bill also seeks to give a right to such persons to make an application to the court within a period of two months of the publication of the proposed Act for claiming the benefits under the Act. Provision has also been made empowering the courts to reopen and review the proceedings relating to such decree or order, as if the proposed Act were in force at the time at which the decree or order was passed.

Sir, I commend the motion for the acceptance of the House.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள **கேள்வி:**

"1973-ம் ஆண்டு சென்னை மாநகர், குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.*

*பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.*

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move that "The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 14 of 1973) be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

### (7) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### (8) தமிழ் நாடு 1973-ம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* தமிழ்நாடு 1973-ம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப் படுத்துதல்) சட்ட முன்வடிவின் (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73)* இப்பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/73.

THE HON. THIRU O. P. RAMAN: Instead of my previous motion that the Bill be taken up for consideration I propose to move that the Bill be referred to a Joint Select Committee and the concurrence of the Legislative Council be obtained in setting up such a Joint Select Committee.

(திரு. நா. வீராசாமி தலைமை)

DR. H. V. HANDE: Sir, I have also given an amendment that the Bill should be referred to a Joint Select Committee. I would like to know from the Chair whether my amendment will be given preference. I do not know the exact time when the Hon. Minister gave his amendment for referring the Bill to a Joint Select Committee. My amednment--that is the cyclostyled copy came to me earlier and the Government amendment came next.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* தலைவரவர்களே, இதுபோன்று, எதிர்க்கட்சிகள் திருத்தங்கள் கொடுக்கும்போது, அவற்றை அரசு தரப்பில் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அப்போது விட்டுக் கொடுப்பது என்பது மரபு. நானும், டாக்டர் ஹாண்டே அவர்களைக் கேட்டேன். அவரும் ஒத்துக் கொண்டார். அதற்குப் பிறகுதான் அமைச்சரவர்கள் முன்மொழிந்தார்கள்.

THE HON. THIRU O. P. RAMAN: Mr. Chairman, Sir,

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 3rd April 1973.



Hon. Members are aware that in his Budget speech, our Chief Minister announced that legislation would be introduced in this Session to acquire all the private electricity supply undertakings in the State.

There are at present seven private electricity supply undertakings in the State. These undertakings make bulk purchase of electricity from the Tamil Nadu State Electricity Board and distribute it in their areas of operation at the tariff fixed by them which are in some cases higher than the tariff of the Electricity Board. Further they generally confine their activities to urban areas which are profitable and rural pockets in their areas are mostly neglected.

As early as in 1949, this Government enacted the Madras Electricity Supply Undertakings (Acquisition) Act, 1949. This Act was later replaced by the Madras Electricity Supply Undertakings (Aquisition) Act of 1954, and a large number of undertakings were taken over and transferred to the Electricity Board and at present, as I said earlier, there are only sven private electricity supply undertakings which are yet to be taken over. This process of taking over however received a set back in 1968, when some of the licensees whose undertakings were notified for acquisition took the matter to the High Court and Supreme Court and it was only recently they withdrew their appeals evidently as a result of the 25th Constitution amendment.

The 1954 Act provides for payment of compensation under three different bases as may be chosen by the licensees. One of the bases provides for payment of 20 times the net average annual profit of the undertakings during a period of five consecutive years immediately preceeding the vesting date. The licenses whose undertakings were taken over by the Government in the past have invariably chosen this basis, as it is far more advantageous than the other two basis.

As it is considered that 20 times the net average annual profit is too high having regard to the present day interest earning power of investment, it is proposed to reduce the payment of amount to 10 times of the average net annual profit of the last five years. According to our calculation, a sum of about

eight crores would have to come payable if we were to pay at 20 times. As a result of reducing it to 10 times, the commitment to Government will be about Rs. 4 crores.

It is also proposed to omit the other basis provided in the 1954 Act.

Provision has also been made in this Bill for determining the amount to be given by agreement with the licensee and if the licensee does not come to an agreement, the amount will be determined by Arbitrator.

The Government of India had informed sometime back that they were contemplating legislation to take over the private electrical undertakings in all States and to entrust them to the State Electricity Boards. But we have been informed recently that it has been decided not to undertake any Central legislation but to leave the matter to the State Governments.

It has accordingly been proposed to initiate fresh legislation to take over the remaining private electricity supply undertakings in this State. Sir, instead of my previous motion that the Bill be taken up for consideration, I move " that, the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill,* 1973 be referred to a Joint Select Committee of both the Houses consisting of 16 Members of the Assembly and eight Members of the Council, and the following Members of the Legislative Assembly be selected to serve on such a Committee :—

1. Hon. Thiru S. Madhavan.
2. Thiru J. James.
3. Thiru Durai Govindarasan.
4. Thiru N. Marudachalam.
5. Thiru K. Kandasamy.
6. Thiru V. M. Abdul Jabbar.
7. Thiru N. V. Gurusami.
8. Thiru K. N. Kumarasami.
9. Thiru C. Pandurangam,
10. Thiru Kuppal K. S. Ramakrishnan.

* Published in the *Tamil Nadu Government Gazette*, dated 3rd April 1973.





11. Thiru M. Selvaraj.
12. Thiru K. Palanivelan.
13. Thiru K. Balakrishnan.
14. Thiru K. M Kathiravan.
15. Thiru V. K. Rajah Pillay.
16. Thiru A. Arumugam. "

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : In view of the substitute motion moved by the Hon. Minister for Electricity, the amendment of Dr. H. V. Hande is disallowed.

DR. H. V. HANDE : In the list furnished by the Hon. Minister, the name of the Minister for Electricity has not been included. I would like to know whether the Hon. Minister for Electricity will be in the Chair or the Hon. Minister for Law will be in the Chair.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : He will be nominated by the Chair. We will announce it later.

திரு. என். கே. பழனிசாமி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்கின்றேன்.

இந்த நான்கு தனியார் மின்சார நிறுவனங்களை சர்க்கார் எடுத்துக்கொண்டு அதற்காக ரூ. 4 கோடியை நஷ்ட ஈடாகக் கொடுக்கின்றார்கள். ஏற்கனவே தனியார் மின்சார நிறுவனங்களை எடுக்கக்கூடிய சமயத்தில் மந்திரிசபையில் 5 நகரசபைகள் நடத்தக்கூடிய இந்த மின்சார ஸ்தாபனங்கள் இருக்கின்றனவே, அவற்றையும் சேர்த்துக்கொள்வது என்று ஒப்புக்கொள்ளப் பட்டது. ஆனால் மசோதாவாக வரக்கூடிய சமயத்தில் இந்தத் தனியார் ஸ்தாபனங்களை மட்டும் எடுத்துக்கொள்வது என்பது சரியல்ல. காரணம், 5 நகரசபைகள் நடத்தக்கூடிய அந்த மின்சார வாரியங்களுக்கு தனித்தனியாக பேலன்ஸ் ஷீட்டுகள் இருக்கின்றன. தனியாக நிதி இருக்கின்றது. சர்க்காருடைய கண்ட்ரோலும் இருக்கின்றது. அப்படி இருக்கக்கூடிய சமயத்தில் சர்க்கார் அதையும் அவசியம் எடுத்திருக்க வேண்டும். எடுத்திருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, இந்த மசோதாவில் வரக்கூடிய மோசமான ஷரத்து என்னவென்றால், அப்படியே விட்டிருக்கலாம்— சர்க்கார் எப்போது இஷ்டப்படுகிறதோ அப்போது எடுத்துக்

[திரு. என். கே. பழனிசாமி] [1973 ஏப்ரல் 5

கொள்ளக் கூடிய வகையில் இந்த ஷரத்து இருக்கலாம். அதற்குப் பதிலாக இந்த லோகல் பாடீஸ் நடத்தக்கூடிய மின்சார ஸ்தாபனங்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று ஷரத்து இருக்கின்றது. அதை செலக்ட் கமிட்டியிலாவது பார்த்து அந்த ஷரத்தை நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நஷ்ட ஈட்டைப் பொறுத்த வரையிலும், 10 வருஷம், 5 வருஷங்களில் எவ்வளவு லாபம் இருக்கிறதோ, அதை சராசரியாகக் கணக்கிட்டு இப்படி ஒரு வருஷத்திற்கு எவ்வளவு லாபம் வருகிறது என்று கணக்கிட்டு அதைப்போல் 10 மடங்கு என்று கணக்கிட்டு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஏற்கனவே இந்த கம்பெனிகளில் லாபம் வந்திருக்கிறது. எனவே, ரூ. 4 கோடி நமது வரிப்பணத்திலிருந்து அவசியம் கொடுத்தாக வேண்டுமா என்பதுதான் இன்றைய கேள்வி. அது மட்டுமல்ல. சர்க்கார் 1967-68-இல் இந்தக் கம்பெனிகளை எடுத்துக்கொள்வது என்று கூறியவுடனே, சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றார்கள். பல வருஷங்கள் அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருந்தது. ஆனால் அப்படிப் போகக்கூடிய சமயத்தில் அவர்கள் செம்புக் கம்பிகளை அகற்றி, அலுமினியக் கம்பிகளை வைத்திருக்கிறார்கள். முக்கியமாக பெரிய பெரிய மெஷின்களை எல்லாம் மாற்றியிருக்கிறார்கள். அதை எல்லாம் கணக்கிடாமல் வெறும் 4 கோடி ரூபாய் நஷ்டயீடு கொடுப்பது என்பது சரியாக இல்லை.

அடுத்தபடியாக, சர்க்கார் இந்தக் கம்பெனிகளை எடுத்துக் கொள்ளக்கூடிய சமயத்தில் தொழிலாளர்களுக்கு என்ன என்ன சேரவேண்டுமோ அதைக் கழித்துவிட்டுதான் நஷ்டயீடு கொடுக்கிறார்கள். 30 நாள் வேலை செய்தால் 30 நாள் லீவ் என்றிருக்கிறது. 30 நாள் வேலை செய்தால் அதற்கு பணம் கொடுக்கிறார்கள். அதை எல்லாம் இந்த நஷ்டயீட்டில் கழிக்கக்கூடிய நிலையில் இல்லை. சர்க்கார் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைத் தனியார் ஸ்தாபனங்களிடமிருந்து வாங்கிக் கொள்கிறது. ஆனால் அதைத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதில்லை. அதற்குக் காரணம், அவர்கள் இந்த



1973 ஏப்ரல் 5] [திரு. என். கே. பழனிசாமி]

ஸ்தாபனங்களை எடுத்துக்கொள்ளும்போது தொழிலாளர்களை 4 மாதங்களுக்கு இஷ்டப்பட்டால் வேலையில் வைத்துக் கொள்ளலாம்; இல்லாவிட்டால் நீக்கிவிடலாம் என்றிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** ஏற்கெனவே 11½ மணிக்கு இந்த மசோதாக்கள் முடிவடைய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அதிக நேரம் எடுத்துக்கொண்டால் அதற்குள் முடிக்க முடியாது. ஆகவே, நீங்கள் உங்கள் பேச்சை 5 நிமிடங்களுக்குள் முடித்துவிடுங்கள்.

**திரு. என். கே. பழனிசாமி :** ஆகவே, சர்க்கார் கணக்கிட்டு பணத்தை வாங்கிக்கொண்டு, தொழிலாளர்களுக்கு அது இல்லை என்று சொல்வது பொருத்தமுடையதல்ல. ஏற்கெனவே பல வருஷங்கள் அவர்கள் வேலை செய்தார்கள். ஆகையால் அவர்களுக்குச் சேரவேண்டிய தொகையை அப்படியே கொடுப்பது என்ற முறைதான் சரியானது. இஷ்டப்பட்டால் வேலையில் வைத்துக்கொள்வது, இல்லாவிட்டால் நோட்டீஸ் கொடுத்து நீக்கிவிடுவது என்ற ஷரத்தை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்கின்ற அதே நேரத்தில் இந்த மசோதாவிலே சில ஆகாத, கூடாத ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருப்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

இந்த மின்சார சப்ளை நிறுவனங்கள் பல ஆண்டு காலமாக குறைந்த மூலதனம் போட்டு, நிரம்ப லாபம் ஈட்டியிருப்பதை எல்லோரும் அறிவார்கள். அப்படியிருந்தும் அவர்களுடைய நிகர லாபத்தில் 10 மடங்கு அவர்களுக்கு நஷ்டயீடு தரவேண்டுமென்று இருப்பது கூடுதலான தொகை என்று நான் கருதுகிறேன். அரசியல் சட்டம் திருத்தப்பட்ட பிறகு காம்பன்சேஷன் என்பதற்குப் பதில் ஒரு தொகை கொடுப்பது என்று வந்த பிறகும் இந்த அளவுக்கு அவர்களுக்கு—ஏராளமான லாபம் சம்பாதித்த பிறகும்—கொடுக்க வேண்டிய தேவை இல்லை; அதைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1973 ஏப்ரல் 5

இன்னொன்று, இந்த 4-வது ஷரத்திலே ஒரு புரொவிசோ இருக்கிறது.

'Provided that the Government may—

(a) from time to time postpone such date; or

(b) cancel such order;.........'

என்று இருக்கிறது. இந்த புரவிசோ தேவையில்லை என்று நான் கருதுகிறேன். ஒரு முடிவை மேற்கொண்ட பிறகு, இந்த மசோதாவின் நோக்கம் தனியார் மின்சார நிறுவனங்களை எடுத்துக்கொள்வது என்று வந்தபிறகு, ஒத்தி வைக்கவேண்டிய அவசியம் அல்லது ரத்து செய்யவேண்டிய அவசியம் ஏன் ஏற்படுகிறது என்று புரியவில்லை.

அடுத்தபடியாக, இந்த மசோதாவிலிருந்து உள்ளாட்சி மன்றங்கள் நடத்துகின்ற கம்பெனிகளை எடுக்கக்கூடாது என்று தடை இருப்பது சரியல்ல. மின்சார விநியோக முறையை ஒரு அமைப்பின்கீழ் கொண்டுவரவேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட பிறகு, தனித்தனியாக உள்ளாட்சி மன்றங்கள் நடத்து பவைகளை விட்டுவிடுவது என்பது அவசியம் இல்லாத ஒன்று.

இன்னொன்று, இந்த மசோதாவின் 5-வது ஷரத்தில் ஒன்று இருக்கிறது. 'liabilities and obligations as on the vesting date' என்று போட்டு அதற்கு புரவிசோ ஒன்றும் இருக்கிறது.

'Provided that liabilities and obligations not incurred in a *bona fide* manner shall not vest in the Government— அதோடு நிறுத்தியிருக்கலாம். 'in so far as they are in excess of the value on the vesting date of the corresponding assets, if any, vesting in the Government; or . . . .' என்ற அந்த இரண்டு லிமிட்டேஷன்களும் தேவையில்லை என்று கருதுகிறேன். லயபிலிட்டீஸ் அண்டு ஆப்ளிகேஷன்லைப் பொறுத்தவரையில் போனஃபைடி இல்லை என்று வந்த பிறகு 'மாலாஃபைடி' என்று தெரிந்தபிறகு, அதில் எந்தப் பகுதியையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் அரசுக்கு இல்லை. ஆகவே அதை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 ஏப்ரல் 5] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

அடுத்தபடியாக 14-வது ஷரத்துக்கு வருகிறேன். This is a most retrograde clause. தொழிலாளர் தலைமீது 'Damocles sword' போல் இருக்கிறது. இந்தத் தொழிலாளர்களை அரசு விரும்பினால் வேலையில் வைத்துக்கொள்ளலாம்; இல்லாவிட்டால் நீக்கம் செய்யலாம்; 3 மாத நோட்டீஸ் கொடுத்தால் போதும் என்றிருக்கிறது. அது தேவையில்லை. ஊழியர்களுக்கு சர்வீஸ் தொடர்ச்சி நிச்சயமாக இருந்து ஆகவேண்டும். ஏற்கெனவே இருந்த சர்வீஸ் தன்மையில் அவர்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்கக் உத்தரவாதம் இருக்கவேண்டும். ஆகவே, இந்தப் பிரிவை மாற்றியமைக்க வேண்டும். ஏற்கெனவே இருந்த சலுகை நீடிக்கவேண்டுமென்ற ஷரத்து இருக்கவேண்டும். இந்த 1973-ம் ஆண்டிலே தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொல்லுகின்ற காலத்திலே—இந்த மாதிரி ஒரு பிரிவு இருப்பது நியாயமில்லை. அதனை எடுத்துவிட வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்ற பிரிவைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 17-வது ஷரத்திலே ஒன்று இருக்கிறது குற்றங்கள் புரியும் நேரத்தில் ' "shall be punishable with imprisonment for a term which may extend to two years, or with fine ...... என்று இருக்கிறது. இது கூடாது என்று நான் கருதுகிறேன். ஏதாவது தவறு இருக்குமானால் அதிலே சம்பந்தப் பட்டவர்களுக்கு ஃபைன் இருக்கிறது. அதுபற்றி ஒன்றும் சொல்லவில்லை. வேண்டுமென்றே குற்றங்கள் செய்கின்றவர்களுக்கு நிச்சயமாக சிறைத்தண்டனை இருந்துதான் ஆகவேண்டும். எனவே 'ஆர்' என்பதை 'அண்டு' என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதிரியான சில அவசியமான திருத்தங்களை இந்த மசோதாவில் சேர்ப்பதற்கு அமைச்சரவர்கள் முன்வர வேண்டும். இந்தச் சட்டத்தை எல்லோரும் வரவேற்கத்தக்க முறையில்—தமிழகத்திலே இருக்கின்ற மக்களும் சரி, இந்த நிறுவனங்களிலே பணியாற்றும் ஊழியர்களும் சரி எல்லோரும் சேர்ந்து வரவேற்கத் தக்க முறையில், தொழிலாளர்கள் மனம் புண்படாத வகையில்,

[திரு. வ. சுப்பிரமணியம்] [1973 ஏப்ரல் 5

அவசியமான மாற்றங்களைச் செய்து இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் குறித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நீண்ட காலமாக நம்முடைய தமிழகத்தில் மின்சார இலாக்காவிடம் இருந்து மின்சாரத்தை வாங்கி விற்பனை செய்துகொண்டு சில நிறுவனங்கள் இருந்து வருகின்றன. அது குறித்து பலமுறை நாங்கள் இந்த மன்றத்தில் நினைவுபடுத்தினேம். அரசாங்கம் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. மின்சார இலாக்கா மூலம் விநியோகம் செய்கிறது. மின்சாரத்தை உற்பத்தி செய்து இப்படிப்பட்ட சில குறிப்பிட்ட தனியார்களிடம் அதை விற்பனை செய்வதற்குக் கொடுப்பது சரியாக இல்லை என்று பல முறை நாங்கள் சொல்லியிருக்கிறோம். அந்தத் தனியார் நிறுவனங்கள் உட்கார்ந்த இடத்திலே இருந்து கொண்டு, உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை வாங்கி விற்பனை செய்து கோடிக்கணக்கான ரூபாய் லாபம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது கூடாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது திருச்சி, தஞ்சை பகுதிகளில் எல்லாம் சில தனியார்கள் நிறுவனம் மின்சாரத்தை விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நமது நாட்டில் மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையிலும் அங்கே திடீர் திடீரென்று மின்சார வெட்டோ அல்லது மற்ற பல கோளாறுகளோ ஏற்படாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது உண்மையாக இருந்தால்—எனக்கு அதுபற்றிய விபரம் முழுவதும் தெரியாது—மின்சார இலாக்கா அவர்களிடம் இருந்து பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு இப்போது எப்படி அங்கே கோளாறு இல்லாமல் விநியோகம் நடைபெறுகிறதோ அதைப்போன்று விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்கிறோம் என்று ஏதோ வாக்குறுதிகளை—வறட்டு வாக்குறுதிகளைக்—கொடுத்தால் போதாது. அதிகாரிகளுக்கு சரியான உத்தரவுகளைப் போட்டு இப்போது இருக்கும் முறை தொடர்ந்து நீடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மனம் இருந்தால்



1973 ஏப்ரல் 5] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

நிச்சயமாக மார்க்கம் உண்டு. அக்கறை இருந்தால் நிச்சயமாக அதைச் செய்ய முடியும். நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள், எங்களை ஒன்றும் செய்ய முடியாது; அரசாங்கத்தின் பாதுகாப்பு எங்களுக்கு இருக்கிறது; எங்கள் இஷ்டப்படி செய்வோம்; பொதுமக்களுடைய குறைகளை எல்லாம் அலட்சியப் படுத்துவோம் என்று மின்சார இலாக்கா அலட்சியமாக இருந்தால் அதைப்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்வதற்கில்லை.

நாங்கள்தான் இவற்றை அடிக்கடி மன்றத்தில் சொல்ல வேண்டும். இந்த விஷயத்தில் இதை எங்கள் கடமையாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி வருகிறோம். ஆனால் அவற்றின்மீது எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருப்பதைப் பார்க்கிறோம். சில நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்தில் பேஸின் ப்ரிட்ஜ் மின் உற்பத்தி நிலையம் பற்றி பல விஷயங்களை எடுத்துச் சொன்னேன். அமைச்சர் அவர்கள்கூட அவற்றைக் கேட்டுவிட்டு, அதைக் கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். அங்கே பல ஸ்டேஷன்கள் இருக்கின்றன. 'ஏ' ஸ்டேஷனில் எட்டாவது பாய்லரில் ஐந்து மெகா வாட்ஸ், ஒன்பதாவது பாய்லரில் 5 மெகா வாட்ஸ் என்று இருந்ததெல்லாம் இப்போது உயர்த்தப்பட்டு 70 ஆக இருந்ததை இப்போது 95 ஆக உயர்ந்திருக்கின்றது. தேசியமயமாக்கிய பிறகு—இப்படி உயர்ந்த பிறகு என்ன செய்ய வேண்டும்? உயர்ந்த பிறகு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். 'இன்ஸ்டால்டு கபேஸிட்டியை' மட்டும் உயர்த்தினால் போதாது. உற்பத்தியையும் கூடவே பெருக்க வேண்டும்.

இதை முன்பு குறிப்பிட்டேன். அப்போது அமைச்சர் அவர்கள் கவனிப்பதாகச் சொன்னார்கள். என்ன ஆச்சு? அங்கே உள்ள ஒரு அதிகாரி—நரசிம்மன் என்ற ஒரு டிவிஷனல் எஞ்சினீயர் அங்கேயிருந்து மாற்றப்பட்டார். 29-ம் தேதியன்று அவரை டிரான்ஸ்பர் பண்ணினார்கள். ஆனால் ஒரு சில மணி நேரத்திற்குள், எங்கேயோ ஒரு இடத்தில் இதில் யாரோ தலையிட்டு அதை மாற்றி விட்டார்கள். இலாக்கா சரியான முறையில் உத்தவிட்டு—

அதிலும் ஒரு பிரச்சினை சட்ட மன்றத்தில் உறுப்பினர் ஒருவரால் எழுப்பப்பட்டு அதன்மேலே இலாக்கா உத்தரவிடுகிறது, இதை இப்படி மாற்றிவிடுகின்றார்கள் என்றால் எந்த அளவிற்கு சட்ட மன்ற உறுப்பினர் எழுப்பும் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கின்றார்கள் என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தமாதிரிதான் நடைபெறும் என்றால் நாம் சொல்லுகிறதைக் கவனிக்க மாட்டார்கள் என்ற எண்ணம்தான் சாதாரணமாக ஏற்படும் என்பதைக் கவலையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உறுப்பினர் என்ற முறையில் பொறுப்போடு ஒன்றை நாங்கள் சொல்லுகிறோம், அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டு கவனிக்கிறேன் என்று சொல்லுகின்றார்கள். இலாக்காவும் மாற்றல் உத்திரவைப் போடுகிறது. இந்த உத்திரவைப் போட்ட பிறகு இலாக்காவிலுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நன்றி தெரிவித்து இருக்கின்றார்கள், அங்கே வேலை செய்கின்றவர்கள். அந்த அளவிற்குக் கொடுமை செய்த அந்த அதிகாரியுடைய மாற்றத்திற்கு அவர்கள் மகிழ்ச்சி கொள்ளுகின்றார்கள். அந்த அதிகாரி அங்கே இருக்கும் காரணத்தினால்தான் உற்பத்தி குறைந்திருக்கிறது என்று இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னேன். அதை ஏற்றுக்கொண்டு உத்திரவும் பிறப்பித்தார்கள். கேவலம், இரண்டு மூன்று மணி நேரத்திற்குள் அந்த உத்திரவு மறுபடியும் மாற்றப்பட்டு இருக்கின்றது என்றால் எந்த அளவிற்கு மாண்புமிகு அங்கத்தினர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கின்றார்கள் என்பதை இங்கே வேதனையோடு சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதில் யாரோ ஒருவர் தலையிட்டு இருக்கின்றார்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** எனக்கு. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள், உங்களுக்குத் தெரியும் எல்லாம். உள்ள நேரம் குறைவு. 11-30-க்குள் இதை முடித்துவிட வேண்டும். அந்த அதிகாரி மாற்றப்பட்டதும் மீண்டும் மாற்றப்பட்டதும் இந்த



மசோதாவிற்குச் சம்பந்தப்பட்டதில்லை. இந்தப் பில்லைப் பொறுத்தவரையில் இதை முடித்து ஆகவேண்டும். தயவுசெய்து பில்லைப் பற்றிப் பேசுங்கள். 11-30 மணிக்குள் இதை முடிக்க மன்றத்திற்கு உதவி செய்யுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சுருக்கமாகவே நான் முடித்துக் கொள்ளுகிறேன். பேச வேண்டிய விஷயங்கள் ஏராளமாக இருந்தாலும் பேச முடியாத நிலை இருக்கின்றது. இருந்தாலும் நான் கேட்டுக்கொள்ளுவதெல்லாம், பேஸின் பிரிட்ஜைப் பொருத்த வரையில் சில தவறுகளைச் சுட்டிக் காண்பித்தேன். அவை நிவர்த்திக்கப்பட வேண்டும். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் நாளைக்கே இந்த மசோதாவின் அடிப்படையில் அங்கே ஒரு செலெக்ட் கமிட்டி ஒன்று போட்டு நீங்கள் ஒரு முடிவிற்கு வருவீர்களானால் அதற்குப் பிறகு அங்கே காரியங்கள் செம்மையாக நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். வேறு ஒன்றுமில்லை.

இவற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லவில்லையென்றால் வேறு எப்போது சொல்ல முடியும்? ஒத்திவைப்புத் தீர்மானமோ அல்லது காலிங் அடென்ஷன் நோட்டீஸோ கொடுக்க முடியாது. காரணம் இந்தக் கூட்டத் தொடரின் கடைசி நாள் இது. இங்கே இனிச் சொல்ல முடியவில்லையென்றால் தெருத்தெருவாக கூட்டங்களில்தான் பேச வேண்டும். ஆகவேதான் இதைச் சொல்லுகிறேன். சொல்லிவிட்டேன், கவனித்தால் கவனியுங்கள் இல்லாவிட்டால் விட்டுவிடலாம். சொல்லுவதுதான் எங்கள் கடமை. செய்வது அரசாங்கத்தின் உரிமை. செய்தால் செய்யுங்கள் இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள்.

இப்போது வினியோகத்தைப் பொறுத்தமட்டில் அது தேசியமயமாக ஆகிவிட்டது. ஆனால் இதில் இன்னொரு கொள்கையை அரசாங்கம் இப்போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது நாம் மின்சார உற்பத்தி செய்யும் முறையில், இன்றைக்கு எங்கே பார்த்தாலும் மின்சார வெட்டு பயங்கரமாக, தொழிலாளர்களிடையே 'லே-ஆஃப்' என்று ஏற்பட்டு இருக்கின்றது. இப்படி எங்கே

*[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1973 ஏப்ரல் 5*

பார்த்தாலும் மின்சார வெட்டும் தொழிலாளர்களிடையிலே வேலையிழப்பும் இருக்கும் இந்த நேரத்தில்தான் நாம் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம். ஆனால் இதே நேரத்தில் உற்பத்தியைப் பெருக்க நாம் என்ன திட்டம் போட்டிருக்கிறோம்? அண்மையிலே எதிர்க் கட்சிகளின் சார்பிலே இந்த விஷயத்தின்மீது ஒரு தீர்மானம் போட்டோம். தனியார் துறையில் ஜெனரேட்டர்ஸ் போட்டு மின்சார உற்பத்தி செய்து அங்கங்கே உள்ள சிறு சிறு பகுதிகளுக்கு அவர்கள் விநியோகம் செய்வதற்கு அவர்களுக்குத் தடையிருக்கின்றது. உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். ஆனால் இப்படி தனியார் ஜெனரேட்டர்ஸ் வைத்துக் கொண்டு மின்சார உற்பத்தி செய்வது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கின்றார்களோ எனக்குத் தெரியாது.

ஆனால் யோசனை ஒன்றைச் சொல்லுகிறேன். பி.அண்டுஸி. மில் போன்ற பெரும் தொழிற்சாலைகளில் இப்படி ஜெனரேட்டர்ஸ் வைத்துக்கொண்டு வேலை செய்வதால் அங்கே தொழிலாளர்கள் 'லே-ஆஃப்' இல்லாமல் இருக்கின்றார்கள். இப்போதிருக்கும் இந்தப் பயங்கரமான மின்வெட்டின் போது கூட அங்கே 'லே-ஆஃப்' இல்லை என்பதைப் பார்க்கிறோம். இது சின்ன விஷயம் இல்லை. இப்படி முடிந்த இடங்களிலே ஜெனரேட்டர்ஸ் வைத்துக் கொள்ளத் தடை எதும் இருக்கக் கூடாது.

இதே நேரத்திலே ஒரு யோசனை. ஒரு சில வருஷங்களுக்கு முன்பு பல முனிசிபாலிடிகள் அவர்களே மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டு விநியோகிக்க வாய்ப்புகள் இருந்தன. அப்போதெல்லாம் என்ன நடந்தது? தேவையான அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கி வேண்டியவர்களுக்குக் குறைவில்லாமல் மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். அப்போதெல்லாம் இப்படித் தனியாக உற்பத்தி செய்து கொண்டு இருந்த காலத்தில் அவர்களுக்கு 'க்ரிட்' இல்லை.



*1973 ஏப்ரல் 5] [டாக்டர் எச். வி. ஹாண்டே]*

இப்போது அந்த மாதிரி ஏன் சின்னசின்னதாக உற்பத்தி செய்யும் நிலைமைகளை, தனியார் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் நிலைமைகளை ஆராயக் கூடாது? அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். அங்கங்கே இப்படி de-centralisation of power production செய்வது என்பதை ஏற்படுத்திக் கொண்டால் நன்றாக இருக்கும். I am not at all concerned about distribution. Production is more importance. இப்படிப் ப்ரொடக்ஷனை 'டி ஸெண்ட்ரலைஸ்' பண்ணிவிடுவதில் உள்ள நன்மைகளை அரசாங்கம் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளுவது என்றால்—நாளைக்கே மான்ஸூன் நல்லபடி வந்து இந்த நெருக்கடி தீர்ந்தாலும் தீரலாம்—ஆனால் இப்படி இந்த யோசனையை ஏற்றுக் கொண்டு நடந்தால் ஒரு நிரந்தரமான பரிகாரத்தைத் தேடிக் கொள்ளலாம்.

பெரிய கட்டிடத்திற்கு எப்படி ஒரே ஃபௌண்டேஷனைப் போடாமல் இரண்டாகப் பிரித்துப் போடுகின்றார்களோ அந்த மாதிரி இந்த இரண்டுவிதமான ஏற்பாடுகளும் இருக்க வேண்டும். அடுத்து இறுதியாக 14-ம் ஷரத்து பற்றி மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளுகிறேன். நான் தஞ்சைக்குப் போன நேரத்தில் அங்கே உள்ள தொழிலாளர்கள் இதைப்பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்தார்கள். இது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அவர்களே சொன்னார்கள், 'நாங்கள் அமைச்சர் அவர்களையும் அணுகியிருக்கிறோம்' என்று. இப்போது திடீரென்று எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல், உத்திரவாதமும் இல்லாமல் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அவர்கள் கதியென்ன?

ஏற்கெனவே உள்ள பாதுகாப்புகள் போதாது, இன்னும் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வரும் நேரத்தில் உள்ள பாதுகாப்புகளுக்கே ஆபத்து வருகிறது என்றால் " to terminate the services of any person on the staff of the licensee immediately before the vesting date, after giving such person, three calendar months' notice in writing . . . . " என்பது பயங்கரமாக இருக்கின்றது.

இப்படிப்பட்ட ஷரத்தைப் போடுவது யாருடைய யோசனை, யாருடைய தலையீடு என்று தெரியவில்லை. செலக்ட் கமிட்டியில் இல்லாமல் இப்போதே சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லி விட்டால், பொறுப்பில் உள்ளவர்கள் இதை யெல்லாம் ஆராய்வார்கள் என்று சொல்லுகிறேன். அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு இப்போது என்னென்ன பாதுகாப்புகள் இருக்கின்றனவோ அவற்றைவிட இன்னும் அதிகமாக பாதுகாப்புகள் இருக்க வேண்டும். உள்ளதைக் குறைப்பதோ அல்லது இப்படிப்பட்ட ஷரத்துக்களைப் போடுவதோ நியாயம் இல்லை என்று சொல்லி இந்த மசோதாவை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்று ஒரு கருத்தைக் கூறவேண்டுமென்று நினைக்கிறேன்.

அதாவது சாப்டர் 3-ஐப் பொறுத்தவரையில் staff, inventory and entry என்ற தலைப்பு இருக்கிறது. அதிலே 14-வது ஷரத்திலே Provision for existing staff of licensees என்று இருக்கிறது. அதிலே கூறியிருக்கிறது.

(a) terminate the services of any person on the staff of the licensee immediately before the vesting date, after, giving such person three calendar months' notice in writing or paying such person three months' pay in lieu of such notice,

என்று ஷரத்து இருக்கிறது. இன்றைக்குத் தொழிலாளர்கள் மத்தியில் இந்த ஷரத்துத்தான் அதிகமான பீதியை உண்டாக்கி யிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். அவர்கள் பதவி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். பல்லாண்டுகளாகப் பணியாற்றி வருகிற காரணத்தினால் அவர்களுடைய சர்வீசைப் பிரித்துவிடுவது அந்தக் குடும்பங்களுக்கு இழைக்கிற தீங்காக இருக்கும் என்று நானும் கூறுகிறேன். இன்று பல அட்ஜுடிகேஷன் போன்ற தொழிலாளர் தகராறு இருந்து வருகிறது. ஆகையால் அவை எல்லாவற்றுக்கும் எந்தவிதமான சூந்தகமும் ஏற்படாத முறையில் இந்த ஷரத்து தக்க வகையில் திருத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.





அடுத்து, தனியார்களுக்கு லைசென்சு வழங்குவது தேவையில்லை என்ற காரணத்தால் இதனை முழு மனதுடன் வரவேற்கின்றேன். ஆகவே அரசாங்கத்தின் அடிப்படை கொள்கையை வரவேற்று, இதில் தொழிலாளர்களைப் பொறுத்த வரை அநீதி இழைக்கக் கூடியதாக இருக்கிற ஒன்றிரண்டு பிரிவுகளை, பொறுக்குக் குழுவினர் நல்ல முறையில் திருத்தி அமைக்க வேண்டும், திருத்தி அமைப்பார்கள் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மசோதாவைப் பற்றி பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பல்வேறு கருத்துக்களையும் எண்ணத்தில் கொண்டு அவற்றைப் பரிசிலிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இதை ஒரு ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடுவதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பொறுக்குக் குழுவினர் இதை நல்ல முறையில் பரிசீலிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் உள்ள தொழிலாளர்கள் பிரிவு பற்றி பலரும் கவலை தெரிவித்தார்கள். அது நியாயம் என்றே நானும் கருதுகிறேன். 1954-ம் ஆண்டு சட்டம் இங்கே அப்படியே எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தில் இப்படி ஒரு பிரிவு இருக்கிறது அதை அப்படியே இங்கும் போட்டிருக்கிறார்கள். பஸகள் சம்பந்தப்பட்ட சட்டத்தில் நாம் அதை மாற்றி அமைத்திருக்கிறோம். அதைப் போலவே இவற்றில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையில் இந்தப் பிரிவையும் மாற்றி அமைக்க பொறுக்குக் குழுவில் பரிசீலிப்பார்கள்.

அடுத்து, நஷ்ட ஈடு அதிகமாகக் கொடுக்க இதில் வகை செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 1954-ம் ஆண்டு சட்டத்தில் இதைவிட அதிகமாகக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. அதில் 3 பிரிவுகள்—எந்தப் பிரிவை வேண்டுமானாலும் அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ள வகை இருந்தது. ஆனால் நாம் இப்போது ஒரே பிரிவுதான் வைத்திருக்கிறோம். ஏ பேசிஸ் என்பதாக அமைத்திருக்கிறோம். அதோடு 1954-ம் ஆண்டு

[திரு. செ. மாதவன்] [1973 ஏப்ரல் 5

சட்டத்தில் 20 மடங்கு நஷ்ட ஈடு செலுத்தப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். நாம் அதை 10 மடங்காகக் குறைத்திருக்கிறோம். ஆகவே நஷ்ட ஈடு அதிகமாகக் கொடுக்க இருக்கிறோம் என்கிற வாதம் தவறாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மின்சார வாரியத்தின் நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். யாருடைய குறுக்கீடும் இல்லாது எது நியாயமோ அதைச் செய்வதற்கு மின்சார வாரிய அதிகாரிகள் எப்போதும் தயாராக இருப்பார்கள் என்கிற உறுதியைக் கூறுகிறேன்.

காப்டிவ் பவர்ஸ் சம்பந்தமாக அரசாங்கம் ஏதோ வேண்டாம் என்று சொல்லுவதுபோல நினைத்துக் கொண்டு சொல்லி இருக்கிறார்கள். அதுபோல அவர்கள் தனியாக ஜெனரேடர்கள் வைத்துக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டால் முன்பு அதற்கும் வரி போட்டு வந்தார்கள். அந்த வரியைக் கூட நாம் எடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, இப்போது மின்சார வெட்டு காரணமாக காப்டிவ் பவர்சு பற்றி எங்கும் ஆர்வம் ஏற்பட்டிருக்கிறதே தவிர—நேற்றே கேரளாவில் பருவ மழை ஆரம்பித்திருக்கிறது. மின்சார நிலையங்களுக்குத் தண்ணீர் கிடைத்து மின்சாரம் உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டால் பெரும்பாலும் அதில்தான் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. காரணம் ஜெனரேடர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு 45 பைசா ஆகிறது. இதைப் போல மூன்று, நான்கு பங்கு ஆகிறது.

இருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தர்மல் பவரை அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. என்றைக்கும் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கிற தொழிற்சாலைகளிலாவது ஜெனரேடர்கள் வைத்துக்கொள்வதுதான் நல்லது என்பதுதான் நமது கொள்கை. மாநில அரசு மத்திய அரசுக்கு ஜெனரேடர்கள் வாங்கி அளிப்பதில் தமிழ் நாட்டுக்கு முதல் ப்ரிபரன்ஸ் கொடுக்க வேண்டும் என்பதாக சிபார்சும் செய்திருக்கிறது. மேலும் சிறு தொழில்களுக்கு நாம் சிட்கோ மூலம் வாங்கிக் கொடுக்கவும் முயற்சி மேற்கொள்ளலாம். ஆக



1973 ஏப்ரல் 5] [திரு. செ. மாதவன்]

இதில் கொள்கை அளவில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்று கூறி மற்றும் சிறுசிறு பிரச்சினைகளைப் பொறுக்குக் குழுவினர் கவனத்தில் கொண்டு இதில் நல்ல திருத்தங்களைச் செய்வார்கள் என்கிற உறுதியைக் கூறி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

THE HON. SPEAKER (Thiru N. VEERASAMI) : The question is—

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both Houses consisting of 24 members (16 members from the Legislative Assembly and eight members from the Legislative Council) to consider the Tamil Nadu Private Electricity Supply Undertaking (Acquisition) Bill, 1973 and that the following members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Hon. Thiru S. Madhavan.
2. Thiru J. James.
3. Thiru Durai Govindarajan.
4. Thiru M. Marudhachalam.
5. Thiru K. Kandasami.
6. Thiru V. M. Abdul Jabbar.
7. Thiru N. V. Guruswamy.
8. Thiru K. N. Kumaraswamy.
9. Thiru C. Pandurangan.
10. Thiru Kuppal K. S. Ramakrishnan.
11. Thiru M. Selvaraj.
12. Thiru K. Palanivelan.
13. Thiru K. Balakrishnan.
14. Thiru K. M. Kathiravan.
15. Thiru V. K. Raja Pillai.
16. Thiru A. Arumugam ".

[1973 ஏப்ரல் 5

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு கூட்டாய்வுக் குழு ஆய்வு பெறுவதற்கு அனுப்பப்பட்டது.

Under Rule 139(1) of the Assembly Rules, the Hon. Deputy Speaker has nominated the Hon. Thiru O. P. Raman, Minister for Electricity, as a member of the Joint Select Committee.

*(ஈ) தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு 3/73).*

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 'தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/73) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகின்றேன்.

இந்தச் சட்டத்தின் கருத்துக்களைப் பற்றி, போட்டிருக்கிற விதிமுறைகளைப் பற்றி எல்லாம் ஏற்கனவே பலமுறை விவாதிக்கப் பட்டிருக்கிறது. இந்த மசோதா வரவேண்டும் என்ற எண்ணம் எல்லாத் தரப்பினருக்கும் இருந்தாலும் சில அரசியல் பிரச்சினைகள் குறுக்கிட்ட காரணத்தினால் இதனை இப்போது எதிர்ப்பதுபோலத் தோன்றுகிறது. ஆய்வுக் குழுவில் இதனை நல்ல முறையில் ஆய்ந்து இந்தச் சட்டம் சிறந்த ஒன்றாக அமைய வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. அது முடியாவிட்டாலும் இன்றைக்கு எல்லாத் தரப்பில் இருந்தும் சொல்லப்படுகிற சிறந்த கருத்துக்களின் அடிப்படையில் இந்த மசோதாவின் ஒவ்வொரு பிரிவும் பரிசீலிக்கப்பட்டு, தேவையானால் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு வர வேண்டுமென்று நாங்கள் அப்போது கேட்டுக்கொண்டோம். சில

---

* 1973-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1973 ஏப்ரல் 5] [திரு. செ. மாதவன்]

பேர்கள் வரமாட்டோம் என்று கூறிவிட்டார்கள். இந்த மன்றத்திலாவது ஆலோசனைகளைச் சொன்னால் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம்.

1952-ம் ஆண்டு Commission of Enquiry மத்திய சட்டம் இருக்கிறபோது இந்தச் சட்டம் தேவைதானா என்பது ஒரு கருத்து. 1952-ம் ஆண்டு சட்டம் கொண்டுவந்த காலத்தில் இதைப் பற்றி விசாரிக்கக்கூடிய எண்ணத்துடனே அதில் பிரிவுகள் உருவாக்கப்படவில்லை. அந்தச் சட்டத்தில் போடப் பட்டிருப்பது எல்லாம் 'Commission of Enuqiry for the purpose of making enquiry into any definite matter of public importance'. இப்படிப் பொதுவாக ஒரு ஷரத்து போடப்பட்டிருக்கிறதே தவிர, அது நாம் நினைப்பதுபோல ஊழல்களை ஆராய்வதற்கு, விசாரணை செய்வதற்கு ஏற்பாடு செய்யும் நோக்கத்தில் கொண்டு வரப்படவில்லை என்பது முதல் பதிலாகும்.

அடுத்த பதில் 1952-ம் ஆண்டு சட்டம் இருந்தபோதே மத்திய அரசாங்கம் சந்தானம் குழுவின் சிபார்சின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திலும் மத்தியிலும் உள்ள அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்தால் அதை விசாரிப்பதற்கு தனிச் சட்டம் வேண்டுமென்ற முடிவை எடுத்தது. அந்த முடிவின் அடிப்படையில்தான் லோக்பால், லோக் ஆயுக்த் என்கிற அமைப்பை 1969-ம் ஆண்டு சட்டத்தில் கொண்டு வரப்பட்டது. இது 1952-ம் ஆண்டு சட்டம் போதாது, வேறு ஒரு சட்டம் தேவை என உணர்ந்து அவர்களே கொண்டு வந்தது. மாநிலங்களும் இப்படிச் செய்ய வேண்டும் என்கிற யோசனையும் கூறப்பட்டது. மராட்டி மாநிலத்தில் கொண்டுவந்து நிறைவேற்றி இருக்கிறார்கள். ராஜஸ்தான் மாநிலத்தில் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். கேரளா மாநிலத்திலும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு மாநிலங்கள் மத்திய அரசாங்கத்தின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

இப்போது நாம் ஒருவருக்கொருவர் ஊழல், ஊழல் என்று பொது மக்களுடைய பிரதிநிதிகளைத் தரம் தாழ்த்தி, அரசியல் வாழ்விலேயே ஈடுபட வேண்டாம் என்று அவர்கள் அஞ்சக்கூடிய

நிலையில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சரியோ, தவறோ யார் ஆட்சியில் இருந்தாலும், மக்கள் பிரதிநிதிகள் தவறு செய்வார்கள் என்ற எண்ணம் ஏற்படக்கூடிய சூழ்நிலை பரவிவிட்டது. இதை மாற்றத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு எதிர்க் கட்சியில் இருந்தபோது பொது மக்களுடைய பிரதிநிதிகள் தங்களுடைய சொத்து விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அது அன்றைக்குத் தோற்கடிக்கப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அதை முதலில் நிறைவேற்றினோம். தங்களுடைய சொத்து விவரங்களை மக்கள் பிரதிநிதிகளாக வருகிறவர்கள் இந்த அவைக்கு முன்கூட்டியே தெரிவித்துவிட்டால் அதை எல்லோரும் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்று செய்தோம், ஆக, இதுபோன்ற சட்ட மன்றத்திலேதான் ஒருவருக்கொருவர் விமர்சித்து, நாட்டு மக்களுக்கு இவர் யார் என்று வெளிப் படுத்துகின்ற ஜனநாயகத்தினுடைய அடிப்படையை நாம் உருவாக்கினோம். இந்த அரசு வந்துதான் அதைச் செய்தது. அதற்குப் பின்னாலேயும் நம்மிடத்திலே சந்தேகம் வந்தது. இதற்கிடையிலே, மத்திய அரசாங்கத்திற்கு, மாநில அமைச்சர்கள்மீது இதுபோன்ற விசாரணை செய்ய அதிகாரம் இருக்கிறதா என்று விவாதிக்கப்பட்டது. நாங்கள் தெளிவாகச் சொன்னோம், 1952-ம் ஆண்டு சட்டத்தை ஒதுக்கி வைத்தால், அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தின்மீது ஆதிக்கம் செலுத்த முடியாது.

எங்களுடைய தலைவர் அண்ணா அவர்கள் அன்றையதினம் திட்டவட்டமாக, மாநில அரசுமீது ஆதிக்கம் செலுத்த மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லையென்று அன்றைய உள்துறை அமைச்சருக்கு எழுதினார்கள் என்று கூறினோம். இந்தச் சட்ட மன்றம்தான் எங்களைத் தட்டிக் கேட்பதற்கு, எங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிமை பெற்ற மன்றம். வேறு யாரும் ஒன்றும் செய்ய முடியாது. 1952-ம் ஆண்டு சட்டத்திலே டெல்லியிலே உள்ள அமைச்சர்களைக் கண்காணிக்கலாம். ஆனால், பிரதம அமைச்சரை கண்காணிக்க, விசாரணை செய்ய வழி இல்லை. அப்படிப்பட்ட நிலை பிரதம அமைச்சருக்கே



இருக்குமானால், நாம் அடிமைப்பட்டிருக்க வேண்டுமா என்ற கேள்வி அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் எழுப்பப் பட்டது. ஆக, நாம் கொண்டு வந்திருக்கிற சட்டம் முழுமையான சட்டம்.

1952-ம் ஆண்டு சட்டத்திலே, பிரதம அமைச்சர், மத்திய அரசாங்கம் விரும்பினால், விசாரணை போடலாம் என்றிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையை இந்தியப் பிரதம அமைச்சருக்குக் கொடுக்கலாமா, அப்படிக் கொடுத்தால், மாநிலங்களிலே வேறு கட்சியினர் ஆட்சியிலிருந்தால், அவர்களைக் கட்டுப்படுத்த இதைப் பயன்படுத்துவது நல்லதா? இதை மாற்ற வேண்டும். யார் ஆண்டாலும், எந்த அமைச்சருடைய தயவும் இல்லாமல், எந்த அரசாங்கத்தினுடைய தயவும் இல்லாமல், விசாரணையை சட்டத்தின் மூலம் கொண்டு வருவதற்கான ஒரு அரிய வாய்ப்பை இந்தச் சட்டத்திலே தந்திருக்கிறோம்.

1952-ம் ஆண்டு சட்டத்திலே அது இல்லை. 1952-ம் ஆண்டு சட்டத்திலே, மத்திய அரசாங்கம், பிரதம அமைச்சர் யாரை நீதிபதியாகப் போடுகிறார்களோ, அவர்கள்தான் விசாரணை நடத்தலாம். சுதந்திரமாக விட வேண்டியதை, நீதித் துறை வைத்துக்கொள்ள வேண்டியதை ஒரு அரசாங்கத்திடம் விடுவது நியாயமாகாது. நம்முடைய சட்டத்திலே சுதந்திரமாக, உயர் நீதிமன்றம் யாரை நீதிபதியாக இருக்க வேண்டுமென்று சொல்கிறதோ அவர்களைப் போட்டுக் கொள்ளலாம்.

அப்படிப் போட்டதற்குப் பின்னாலே 3 ஆண்டுக் காலத்திற்கு அவர்களை வெளியேற்ற முடியாது. அரசாங்கம் நினைத்தால்கூட வெளியேற்ற முடியாது. நீதிமன்றத்திலே நீதிபதிகள் உட்கார்ந்து, குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கு அவர்களை நீக்க வேண்டுமென்ற நிலை வந்தால், அப்பொழுது நீக்க வாய்ப்பு இருக்கிறது. குறிப்பிட்ட குற்றச்சாட்டு என்று நிரூபித்தால் அப்பொழுது நீக்க நாம் வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். 1952-ம் ஆண்டு சட்டத்திலே அப்படிப்பட்ட வாய்ப்பில்லை. 3 ஆண்டுகள், அந்த நீதிபதி களுடைய சம்பளம், சர்வீஸ் கண்டிஷன்ஸ் எதையும் மாற்றக் கூடாது என்று இந்தச் சட்டத்திலே போட்டிருக்கிறோம். 1952-ம் ஆண்டு சட்டத்திலே அது இல்லை.

1952-ம் ஆண்டு சட்டத்திலே விசாரணை செய்ய வேண்டும், அதுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் முடிவு என்ன ஆகும், பிரதம அமைச்சர் முடிவு எடுப்பாரா, எடுக்க மாட்டாரா? எடுக்காவிட்டால் என்ன ஆகும்? அவை பற்றி ஒன்றுமே இல்லை. நாம் கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே 'காம்ப்ரெஹென்சிவ் லெஜிஸ்லேஷன்', அப்படி அறிக்கை கொடுத்த உடனே, ஒரு அமைச்சர் குற்றவாளி என்று சொல்லப்படுவாரானால், அரசாங்கத்திற்கு டிஸ்கிரஷனே கிடையாது. அப்படி வந்தாலே, கிரிமினல் வழக்குப் போட வேண்டுமென்று கட்டாயப்படுத்தி இருக்கிறோம். ஆகவே ஒரு முடிவு யார் குற்றம் சாட்டுகிறார்களோ, அவர்கள் சார்பாக, குற்றம் சாட்டப்படுபவர்கள்மீது கூற, அதற்கான ஒரு வாய்ப்பை இந்தச் சட்டத்திலே தருகிறோம்.

1952-ம் ஆண்டு சட்டத்திலே நிரூபிக்கப்பட்டால், என்ன தண்டனை கொடுக்கப்படும் என்று ஒன்றுமே கிடையாது. மராட்டியத்தின் சட்டத்திலேயும் தண்டனையைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. 'ரிப்போர்ட்' கொடுக்கப்பட வேண்டும், மாநிலங்களிலே சட்ட மன்றத்திலே 'ரிப்போர்ட்' வைக்க வேண்டும், டெல்லியிலே பாராளுமன்றத்திலே 'ரிப்போர்ட்' கொடுக்கப்படும், 'லோக்பால்', 'லோக் அயுக்தா'வினுடைய சாராம்சம் இது.

நாம் ஒரு படி மேலே சென்று, வழக்குத் தொடர வேண்டும், குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், 7 ஆண்டுகள் தண்டனை என்று போட்டிருக்கிறோம். ஆக, எந்த நாட்டிலும், எந்தச் சட்டத்திலும் இல்லாத அளவுக்குத் தண்டனை கொடுக்கக்கூடிய பிரிவைக் கொண்டு வந்திருக்கிறோம். 1952-ம் ஆண்டு சட்டத்திலே இல்லாத ஒன்றை நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இது பொருத்தமான மசோதா என்று நாம் கருதுகிறோம்.

இந்த மசோதாவை எதிர்ப்பதற்காக சொல்லப்படுகிற காரணம், வேடிக்கையான காரணம். இந்த மசோதாவை இன்னும் படிக்கவில்லை. படித்ததற்குப் பின்னாலே இந்த கருத்துக்கள் எல்லாம் சொல்லப்படும் என்ற கருத்தும் அளிக்கப்பட்டதைப் பார்த்தேன். இதில் உள் நோக்கங்கள், உள் உணர்ச்சிகள்



கற்பிக்கப்படுகின்றன. இவை அரசியல் நோக்கத்தோடு பேசப்படுகின்றன என்ற காரணத்தைத் தவிர, இதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இதிலே, பெரும்பாலும் ஆட்சேபிக்கப்பட்டது குற்றம் சாட்டுபவர், மனு கொடுப்பவர், அந்த குற்றத்தை நிரூபிக்கா விட்டால் 3 ஆண்டுகள் தண்டனை, இதுதான் கறுப்புச் சட்டம், இதுதான் அதற்கு அடிப்படை என்று கூறப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னவர்கள் இதுபோன்ற குற்றங்களைச் சொல்பவர்களுக்குத் தண்டனை கொடுப்பது, சட்ட நுணுக்கங்களுக்குப் பொருந்தாது, எந்தச் சட்டத்திலும் இப்படிப்பட்ட முறை இருக்க முடியாது என்றுதான் வாதங்களைச் சொன்னார்கள். இது ஒன்றும் புதிதல்ல. சிவில் புரொசீஜர் கோட், கிரிமினல் புரொசீஜர் கோட், இவைகளிலே இப்படி இருக்கிறது என்று எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, இதற்கு 3 ஆண்டுகள் தண்டனை கொடுப்பது எப்படி நியாயம் என்று கேட்டார்கள். வேறு சட்டங்களிலே தண்டனை கொடுக்க வாய்ப்பு இருக்கும் போது, இந்தச் சட்டத்திலே ஏன் இப்படிக் கொண்டு வருகிறீர்கள் என்ற கேள்வியும் கேட்கப்பட்டது.

மராட்டிய மாநிலச் சட்டத்திலே, இராஜஸ்தான் மாநிலச் சட்டத்திலே இதே பிரிவு இருக்கிறது. அவர்கள் அப்படி நிலை இருந்தால், 3 ஆண்டுக் காலம் தண்டனை கொடுக்கலாம் என்று போட்டிருக்கிறார்கள். அந்த மாநிலத்திலே ஆளுகிற கட்சிகூட, இதை எதிர்க்கிறது என்று சொன்னால், என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அகில இந்திய ரீதியிலே சொல்லப்படுகிற கருத்தை நாம் பின்பற்றுவதிலே எந்தவிதமான தவறும் இல்லையென்றுதான் கருதுகிறேன்.

குற்றம் நிரூபிக்கப்படாவிட்டால் தண்டனையா என்ற கருத்து சொல்லப்படுகிறது.

" Punishment for false, frivolous or vexatious complaint "

ஆக, எப்படிப்பட்ட பிரிவுகளுக்குத் தண்டனை என்று அவற்றில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பிரிவை நாம் அப்படியே இதில் போட்டிருக்கிறோம். இந்தப் பிரிவு இருப்பதனால், ஒருப்

[திரு. செ. மாதவன்] [1973 ஏப்ரல் 5

பயமோ, ஒரு அச்சமோ, நாமெல்லாம் மனுக் கொடுத்தவர்கள், என்ன ஆகும் நமக்கு, நம்மீது என்ன வழக்குப் போடுவார்களோ, என்ன தண்டனை கொடுப்பார்களோ, என்றெல்லாம் யாரும் எண்ணத் தேவையில்லையென்று கூற ஆசைப்படுகிறேன். இது எல்லோருக்கும் பொதுவான சட்டம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நஷ்ட ஈட்டைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். அப்பீல் வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைத் திருத்தத்திலே கொண்டு வந்திருக்கிறோம். நீதிபதி உட்கார்ந்து 7 ஆண்டுகள் தண்டனை என்று ஒருவர் தண்டனை பெற்ற பிறகு, அப்பீலே இல்லை, கோர்ட்டுக்கே செல்ல முடியாது என்று சொல்கிறார்களே, இது நியாயமா என்று கேட்டார்கள். அப்படி இதில் போடவே இல்லை. நாம் போட்டிருப்பதெல்லாம் அப்படி பொய் குற்றச்சாட்டு சாட்டுபவர்களுக்கும் அல்லது குற்றம் செய்தவர்களுக்கும் இரண்டு பிரிவினருக்கும் தண்டனை கொடுக்கக்கூடிய பிரிவுகளைப் போட்டிருக்கிறோம்.

இதற்கு 7 ஆண்டுகள் தண்டனை, இதற்கு 3 ஆண்டுகள் தண்டனை என்று. இந்தச் சட்டத்திலே போடப்படுகின்ற நீதிபதி தண்டனை கொடுக்க முடியாது. இந்த நீதிபதி விசாரித்துச் சொல்லிய பிறகு, அதன்பேரில் கிரிமினல் கோர்ட்டிலே, கம்ப்ளெயின்ட் பிரிஃபர் செய்ய வேண்டும். அங்கேதான் தண்டனை கொடுக்க வேண்டும். அதற்கு அப்பீல் செய்ய, கிரிமினல் புரொசீஜர் கோடிலே வழி இருக்கிறது. ஆகவே, அப்பீலே இல்லை, அதற்கு இதில் வழி இல்லை என்று சொல்வது சரியல்ல. ஆக, சட்ட நோக்கத்தோடு, சட்ட நுணுக்கத்தோடு, நியாயமாக மற்ற மாநிலங்களிலுள்ள தன்மைகளை, சட்டங்களை எண்ணிப் பார்ப்பார்களானால், எங்களுடைய சட்டம் நேர்மையான சட்டம், நீதியான சட்டம், தைரியமான சட்டம், எல்லா நிபுணர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அடிப்படையிலே கொண்டுவரப்பட்ட சட்டம், என்று அந்த நிபுணர்களெல்லாம் வெளியே பாராட்டுகிறார்கள்.

வெளியே பாராட்டினாலும், டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே பாராட்டுவதற்குத் தயங்குகிறார்கள். டாக்டர் சந்தானம் அவர்கள் ஒரு குறிப்பிலே சொல்கிறார்கள். அவர்கள் என்ன



1973 ஏப்ரல் 5] [திரு. செ. மாதவன்]

சொல்கிறார்கள். 'இப்படி அமைச்சர்கள் மீது குற்றம் சாட்டப்படுமானால், அந்தக் குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்கள் அது சரியல்ல என்ற முடிவிற்கு வருவார்களானால், யார் அந்தக் குற்றம் சாட்டுகிறார்களோ, அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும். அப்படி வழக்குத் தொடர்வதற்கு எந்த அமைச்சராவது தயக்கம் காட்டுவாரானால், அரசாங்கமே அவர்களுக்கு நிதி கொடுத்து, வழக்குகளைத் தொடர ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற அழகான கருத்தை அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

'In all other cases, the Ministers against whom the allegations are made should as a rule institute legal proceedings by filing a complaint for criminal defamation and the Minister concerned should be given legitimate assistance by the Government of which they are Ministers'

ஆக, இந்தக் கருத்து நாம் கண்டுபிடித்தக் கருத்து அல்ல. யாரையும் மிரட்டுவதற்காகச் சொல்லப்பட்டக் கருத்து அல்ல. திரு. சந்தானம் அவர்களால் பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஒப்புக் கொள்ளப்பட்டக் கருத்து. இன்றைக்கு மத்திய, மாநில அமைச்சர்கள், அரசாங்கங்கள் ஒப்புக்கொண்ட கருத்து; நியாயம் சிந்திக்கப்படவேண்டும். நாம் கொடுத்த புகார் தவறாகப் போய்விட்டது, நமக்குத் தண்டனை வந்துவிடுமோ என்ற அச்சப்பாடு காரணமாக இதைக் கூறக்கூடாது. பழி வாங்குகிற தன்மையே இதில் கிடையாது. எல்லா அரசியல் கட்சிகளுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. யாரும் பயந்துவிடாமல் தைரியமாகச் சந்திப்பதற்கும் எதிர்காலத்திலே, ஜனநாயகம் நேர்மையோடு நடப்பதற்கும், மற்ற மாநிலச் சட்டங்களெல்லாம் முதலமைச்சரை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்காமல் இருக்கும்போது, இதிலே அதற்கும் வழி வகுத்து, அதையும் இந்த மன்றமே, அரசாங்கத்திற்கு அதிகாரம் இருப்பதோடு மட்டுமல்ல, இந்த மன்றமே தீர்மானம் போட்டு, இவர் மேல் குற்றம் இருக்கிறது, விசாரணைக்கு ஆதாரம் இருக்கிறது என்று கேட்டால், கட்டாயம் விசாரணைத் தொடங்க வேண்டுமென்ற அருமையான வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது

இந்த மசோதாவை எதிர்ப்பதால் ஜனநாயகத்தில் நம்பிக்கை குறைந்துபோய்விடும். வேண்டாமென்று வெளியேறுவதால், அதைத் தமிழ் நாட்டு மக்கள் தவறாகக் கருதுவார்கள். ஆகவே, எல்லோரும் ஏகமனதாக நிறைவேற்றுவதால், தமிழ் நாட்டிலே நல்லதொரு எதிர்காலம் உருவாகும். சனநாயகம் பாதுகாக்கப் படும் அதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக்கொண்டு, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோரி அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** திரு. என். கே. பழனிசாமி அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இருக்கையில் இல்லை, ஆகவே அது முன்மொழியப்படவில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இது மிக நல்ல சட்டம், வரவேற்கத்தக்க சட்டம் என்றெல்லாம் இதனை ஏற்றிப் போற்றி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே பேசினார்கள்.

என்னதான் பேசினாலும் இந்தச் சட்டத்தினைக் கொண்டு வந்திருக்கின்ற சூழ்நிலையையும் இந்தச் சட்டத்திலே கொடுத்திருக்கின்ற ஷரத்துக்களையும் வைத்துப் பார்க்கும்பொழுது இதனை எங்களாலே ஏற்றுக்கொள்வதற்கு இல்லையென்பதை நான் முதற்கண் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே 1952 ஆம் ஆண்டு கமிஷன் ஆப் என்குயரிஸ் ஆக்ட் இருக்கிறது; அந்தச் சட்டம் போதாது, அது ஒரு முழுமையான சட்டம் அல்ல; அது மட்டுமன்றி அந்தச் சட்டத்தின்படி மாநில அமைச்சர்கள் மீது விசாரணை நடத்த முற்பட்டால் அது அரசியல் சட்டத்திலே இருக்கின்ற அதனுடைய பெடரல் நேச்சருக்கு, சமஷ்டித் தன்மைக்கு முரணானது என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் இங்கே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளு மன்றக் கட்சியின் தலைவர் அரியானா முதலமைச்சர் மீது இதே சட்டத்தின் பேரிலே விசாரணை நடத்த வேண்டுமென்ற கோரிக்கையிலே கையெழுத்திட்டு அந்தக் கோரிக்கையை





ஆதரித்து இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி இன்னொரு மாநிலத்திலே மட்டும் அந்தச் சட்டத்தின் கீழே விசாரணை நடத்த வேண்டுமென்று கையெழுத்திட்டு அனுப்பினால் அங்கே மட்டும் சமஷ்டித் தன்மைக்கு. . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தி.மு.க. சார்பிலே கையெழுத்துப் போட்டவர் பெயர் என்ன ?

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தி.மு.க.வும் அதனை ஆதரித்திருக் கிறது என்று பத்திரிகையிலே செய்தி வந்ததைப் பற்றிச் சொல்லுகிறேன். நாடாளுமன்ற செய்தி பற்றி, பத்திரிகையிலே தி.மு.க. அதனை ஆதரித்து இருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. அப்படியானால் அங்கே மட்டும் சமஷ்டி நிலைக்குக் குந்தகம் இருக்காதா? தமிழகத்திலே அது இருக்கும் என்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்து யார்மீது இப்படிப்பட்ட புகார்கள் பற்றி விசாரணை செய்தாலும் அவர்களுக்கு 7 ஆண்டுத் தண்டனை வரை கொடுக்கப் படும் என்றும், முதலமைச்சராக இருந்தாலுங்கூட விசாரணை செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். விசாரணைக்காக வரக்கூடிய நீதிபதிகள், உயர்நீதி மன்ற நீதிபதிகள் அல்லது உயர்நீதி மன்ற நீதிபதியாகும் தகுதி படைத்தவர்கள் யார் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று வரும்பொழுது— ஏற்கனவே இந்த மாநிலத்திலே நீதித் துறையிலே அரசு தலையீடு இருக்கிறது என்ற புகார்கள் நிரம்ப இருக்கின்றன—அப்படி இருக்கிற நிலைமையிலே நீதிபதியாக இருக்கிறவர்கள், நீதிபதி களாக இருக்கத் தகுதி படைத்தவர்களை நியமித்தால் அவர்கள் எந்த அளவிற்குச் சுயேச்சையாக இருப்பார்கள் என்ற ஐயப்பாடு எழுகிறது.

புகார்கள் செய்யப்பட்டு நிரூபிக்கப்படாவிட்டால் புகார்கள் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பதற்கு வழி செய்கிறது என்று சொன்னார்கள். நீதிபதிகளாக இருக்கத் தகுதி படைத்தவர்களே விசாரிக்கலாம், புகார்கள் நிரூபிக்கப்பட

விட்டால் புகார்கள் பொய்யானவை என்று தீர்ப்பளிப்பதும் அந்த நீதிபதிதான் என்ற முறையிலே அமைந்திருக்கிறது. புகார்கள் false, frivolous an dvexatious என்ற தீர்ப்பை அவர்கள்தான் வழங்கியாக வேண்டும்.

அப்படி வரும்பொழுது இந்த அரசின்மேலே ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டுக்கள் வெளியாகியிருக்கின்ற நிலையில் நீதிபதியாக இருக்கத் தகுதி படைத்தவர்களை விசாரிப்பதற்காக நியமிக்கலாம் என்றால் அவர்கள்தான் விசாரணையும் செய்கிறார்கள், அவர்கள்தான் தீர்ப்பும் வழங்க வேண்டும், அவர்கள் தான் false, frivolous and vexatious என்ற தீர்ப்பையும் வழங்க வேண்டுமென்று சொல்லும்பொழுது தமிழகத்திலே உள்ளச் சூழ்நிலையில் தமிழகத்திலே உள்ள அரசு மீது கடுமையான குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டிருக்கின்ற அடிப்படையிலே நியாயமாக விசாரணை செய்யப்படும், குற்றவாளிகள் நியாயமாகத் தண்டிக்கப் படுவார்கள் என்ற நம்பிக்கைக்கே இடம் கிடையாது.

இந்த அரசின்மீது குற்றச்சாட்டுகள் நிரம்ப இருக்கின்றன, ஆதாரமும் சொல்லப்படுகின்றன. இந்த நிலையில் குற்றச்சாட்டுச் சொல்வதற்கு, குற்றச்சாட்டுகளை வெளியிடுவதற்கு யாரும் துணிவதற்கு ஒரு தடையாகத்தான் இந்தச் சட்டம் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னொன்றும் சொன்னார்கள். ராஜஸ்தானிலே, மகாராஷ்டிரத்திலே இருக்கிறது, அங்கேயெல்லாம் ஆளுங்கட்சியாக காங்கிரஸ் கட்சி ஆளுகிறதே, அதே கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கு எதிர்க்கலாமா என்று கேட்டார்கள். மகாராஷ்டிரத்திலேயும், ராஜஸ்தானிலேயும் காங்கிரஸ் கட்சி ஆளுகிறது என்பதாலே அதே சட்டத்தை இங்கே கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. பல்வேறு மாநிலங்களிலே பல்வேறு நிலைமைகள் இருக்கலாம். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே—அங்கே கொண்டுவரப்பட்ட சூழ்நிலை என்ன என்பது எல்லாம் தெரியாது, அங்கே \கொண்டுவரப்பட்டு பல நாட்களாகிவிட்டன—இங்கே இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையிலே—மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—சட்டத்திலே உள்ள வார்த்தைகளை மட்டும் பார்ப்பதில்லை சாட்சியங்களை மட்டும் பார்ப்பதில்லை—சூழ்நிலைகளையும் பார்பார்கள். . . . .





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சூழ்நிலை, சூழ்நிலை என்று அடிக்கடி குறிப்பிடுகிறார்களே, என்ன சூழ்நிலை?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அதனைத்தான் ஏற்கனவே நான் சொல்லிவிட்டேன். ஏற்கனவே இங்கே ஊழல் குற்றச்சாட்டுகள் பல சுமத்தப்பட்டு, அவைகளைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் ஊழல் ஒன்றுமே கிடையாது என்று முதலிலே முடித்தபிறகு, மத்திய அரசுக்கு விசாரணை செய்வதற்கு உரிமை கிடையாது, அப்படி விசாரணை செய்வது சமஷ்டித் தன்மைக்கு முரணானது என்று இங்கே சொல்லி, பிறகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றார்கள், பிரதமரைச் சந்தித்துப் பேசினார்கள், அங்கே சொல்லவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்னதாகச் செய்தித்தாளிலே செய்தி வந்தது, பணம் சம்பாதிப்பது குற்றம் இல்லை, சட்ட விரோதமாகச் சம்பாதிப்பதுதான் குற்றம் என்று சொல்லியிருப்பதாக. . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஏதோ பணம் சம்பாதிப்பது குற்றம் இல்லை, இல்லீகலாக சம்பாதிப்பது குற்றம் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார்கள். இவைகள் எல்லாம் பெரிய அபாண்டங்கள். பத்திரிகையிலே வந்ததாகச் சொன்னார்கள், எங்கே வந்தது?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பத்திரிகையிலே படித்த செய்தியைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பத்திரிகையிலே படித்த செய்தி, பத்திரிகையிலே படித்த செய்தி என்று ஒரு பொறுப்புள்ள மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியல்ல. தாங்களும் பத்திரிகையிலே எந்த செய்தி என்று சொல்லி உறுப்பினரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கலாம், அது முறையல்ல.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அப்படிச் சொல்லவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னால் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பணம் சம்பாதிப்பது தவறு அல்ல என்று நான் சொன்னதாக எந்தப் பத்திரிகையிலே வந்தது ?

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** பத்திரிகையின் பெயர் எனக்கு நினைவில்லை, பத்திரிகை கட்டிங்கை என்றால் தர முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகைகளிலே வந்ததை ஆதாரமாக வைத்துப் பேசக்கூடாது என்பதை நாம் இந்தப் பேரவையிலே ஒரு மரபாகக் கொண்டிருக்கிறோம். எந்தப் பத்திரிகையிலே வந்தது என்று நீங்கள் விவரமாகச் சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நான் அதனாலேதான் சொன்னேன். முதலமைச்சரவர்கள் அம்மாதிரி சொல்லவில்லையென்றால் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னேன். நான் பத்திரிகையில் பார்த்த செய்தி. இல்லையென்று சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன், மறுக்கவில்லை.

ஆகவே மற்ற மாநிலங்களைச் சுட்டிக்காட்டிப் பேசுவது என்று சொன்னால் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு நிலைமைகள் இருக்கின்றன. அந்தந்த நேரங்களுக்கு ஏற்றவாறு காரியங்களைச் செய்கிறார்கள். இந்த மாநிலத்தில் இருக்கிறோம் என்பதற்காக இப்படிச் சொல்ல முடியாது. அதிருஷ்டவசமாகவோ துரதிருஷ்டவசமாகவோ திராவிட முன்னேற்றக் கழகம் வேறு மாநிலங்களில் ஆட்சியில் இல்லை. இருந்தால் நாங்களும் சுட்டிக்காட்ட முடியும். அங்குள்ள நிலைமைக்கு இங்குள்ள நிலைமை மாறாக இருக்கிறது என்று சொல்ல முடியும்.

இங்கேயிருக்கிற இந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. இது தேவையில்லாத சட்டம். ஏற்கெனவே பல சட்டங்கள் இருக்கும்போது, கமிஷன் ஆஃப் இன்கொயரிஸ் ஆக்ட், இந்தியன் பீனல் கோட் எல்லாம் இருக்கும்போது, இது பற்றி விசாரிப்பதற்கு, தண்டிப்பதற்கு வசதிகள் இருக்கும்போது இந்தச் சட்டம் கொண்டு வருவது, ஊழல் குற்றச்சாட்டு



கிளப்புபவர்களை மிரட்டுவதற்கு, அச்சுறுத்துவதற்குத்தான் பயன்படும். அந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால் இதை எதிர்க்கிறோம் என்று கூறி, இதன் விவாதத்தில் எங்கள் கட்சி கலந்து கொள்ளவில்லை, இதைப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி. ராஜாராம் :** துணைத் தலைவரவர்களே, பொது வாழ்வைப் புனிதப்படுத்துகிற, தூய லட்சியத்தோடு, பொறுக்குக் குழுவின் பொறுக்கான திருத்தங்களைப் பெற்று, இந்தப் புதிய மசோதா இந்த அவையில் நிறைவேற காத்திருக்கிறது. ஊரெல்லாம் ஊழல், ஊழல் என்று கூறி கிடந்தவர்கள் உளமாற இந்த மசோதாவினை வாழ்த்தி வரவேற்பார்கள் என்று நாடு எதிர்பார்த்தது. நாமும் எதிர்பார்த்தோம். அவர்கள் என்ன சொன்னார்கள். ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது போல இந்தச் சட்டத்தையே ஊழல் என்று ஓங்கி அடித்து விட்டு அவர்கள் ஓய்ந்து போனார்கள். இது வேடிக்கையாக இருக்கிறது. சிலருடைய கண்களுக்கு எதைப் பார்த்தாலும் மஞ்சளாகத் தோன்றும் என்பார்கள். அது அவர்களது கண்களிலே உள்ள கோளாறு. சிலருடைய எண்ணங்களுக்கு ஊழலாகத் தோன்றுகிறது என்று சொன்னால் அது அவர்தம் எண்ணக்கோளாறா ? அல்லது வேறு என்ன கோளாறு என்று புரியவில்லை. இந்தச் சட்டம் அவசரம் அவசரமாக ஊருக்குத் தெரியாமல் யாருக்கும் தெரியாமல் இங்கே வந்து பிறந்திருக்குமானால் இதைக் குறை கூறுவதிலே, கோளாறு காண்பதிலே பொருள் காண முடியும். ஆனால் ஒரு கூட்டாய்வுக் குழு அமைக்கப்பட்டு, சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக ஆக்கப்பட்டு வாருங்கள், வாருங்கள் உங்கள் அரிய கருத்துக்களைத் தாருங்கள், தாருங்கள் என்று அழைத்த நேரத்தில் மேனகையைப் புறக்கணித்த விசுவாமித்திர மாமுனியைப்போல இந்த ஆய்வுக் குழுவைப் புறக்கணித்து, வெளியே நின்று கொண்டு, எதிர்க் கட்சிக்காரர்களின் குரல் வளையை நெறுக்கக் கூடிய சட்டம், வாய்ப்பூட்டுச் சட்டம், கறுப்புச் சட்டம் என்று பேசிக் கொண்டிருப்பதில் என்ன பொருள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

[திரு. ஜி. ராஜாராம்] [1973 ஏப்ரல் 5

விருந்து மண்டபத்திற்குள் போகாமலேயே பரிமாறப்பட்ட விருந்து வயிற்றை, வாயைக் கெடுத்து விட்டது என்று சொல்லும் வயிற்றுக் கடுப்புக்காரனைப் போல, இன்னிசைக் கச்சேரிக்குள்ளே போகாமல் கச்சேரி மோசம், பாகவதருக்குக் குரல் சரியில்லை, வாத்தியம் வாசித்தவர் ஒத்து வரவில்லை என்று சொல்வது போல, அந்த விசித்திரமான புருஷனைப் போல இந்தக் குழுவிலே கலந்து கொள்ளாமல், தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லாமல், திருத்தங்களைத் தராமல், ஆலோசனைகளைத் தராமல் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசு முனைப்போடு செய்கிற காரியங்களையெல்லாம் தடுப்பதுதான் தங்கள் பிறவிப்பயன் என்று இங்கே இருக்கிற எதிர்க் கட்சிக்காரர்கள் கருதி விட்டார்கள் என்று நாங்களெல்லாம் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தச் சட்ட அறிவிப்பு வந்தவுடனே என்ன சொன்னார்கள். மாநில அரசு மத்திய அரசுக்கு எதிராக உயர்த்திவிட்ட போர்க்கொடி என்று சொன்னார்கள் இது சிலருக்குப் பொழுதுபோக்கு, மத்திய அரசுக்கு மாநில அரசைப் பற்றி திரை திருப்பிக் காட்டுவது வேடிக்கை. ஆனால் இந்த பூச்சாண்டிகளுக்கு இந்தக் கழக அரசு பயந்ததே அல்ல. உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் எழுப்புவோம் என்ற லட்சிய முழக்கத்தை யார் முன்னிலையிலும் எந்தச் சூழ்நிலையிலேயும் சொல்லத் தயங்கியது இல்லை, இந்த அரசு. அது வேறு விஷயம்.

ஆனால் இந்தச் சட்டம் மத்திய அரசுக்கு எதிரானச் சட்டமா? இதை அமைச்சரவர்கள் விளக்கினார்கள். மத்திய அரசின் செல்லப் பிள்ளையாக, நல்ல பிள்ளைகளாக அவர்கள் கீழே கொடி கட்டிக் கொண்டிருக்கிற ராஜஸ்தானிலும், மராட்டியத்திலும் இப்படிப் பட்ட சட்டங்கள் வந்த நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். அவைகள் எப்படிப்பட்ட சட்டங்கள் என்று சொன்னால் இவ்வளவு சிறப்பான அம்சங்களைக் கொண்ட சட்டங்கள் அல்ல. அவர்களே சொன்னார்கள். இதிலே முதல்வருக்குக்கூட தண்டனை இருக்கிறது. பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் 7 ஆண்டு தண்டனை என்று இருக்கிறது. ஆம் பொது வாழ்வே தண்டனையாகிவிட்ட இந்த நேரத்தில் ஏழு ஆண்டு தண்டனை!



1973 ஏப்ரல் 5] [திரு. ஜி. ராஜாராம்]

தண்டனை? இராமாயணக் கதாநாயகன் இராமனுக்குக் கூட ஈரேழு ஆண்டுகள் தான் தண்டனை, அவன் பெரிய தியாகி ஆகிவிட்டான், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக. நம்முடைய அரசு ஏழு ஆண்டு தண்டனையை ஏற்றுக்கொள்கிற சோதனைக்கு உட்படுத்திக் கொள்கிறது.

இந்த இதய சுத்தி, மனத்தூய்மையை, போற்றுகிற மனவளம், அரசியல் நாகரீகம் எதிர்க் கட்சிகளுக்கு இருக்க வேண்டாமா? இப்படிக் கேட்பதில் தவறு இருக்க முடியாது. அவர்கள் இவைகளைப் பெற்றாக வேண்டுமென்று சொல்வதில் தவறு இல்லை. இந்தச் சட்டத்தில் உள்ள 7 ஆண்டு தண்டனையைப்பற்றி பெரிதாகப் பேசவில்லை. குற்றம் சுமத்துபவன், பொய்யான குற்றத்தை சுமத்திவிட்டால் அவனுக்கு இருக்கிற தண்டனையைப் பெரிதுபடுத்திக்கொண்டு பேசுகிறார்கள். பொது வாழ்க்கைக்கு வந்தவனுக்கு என்னப் பாதுகாப்பு இருக்கிறது? இப்போதுப் பாதுகாப்பு இருக்கிறதா?

முத்தனும், முனியனும், சுப்பனும், குப்பனும் சொந்த குரோதம், மன மாச்சரியம் காரணமாக எங்கே வேண்டுமானாலும் நின்று கொண்டு பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களின்மீது சேற்றை வாரி இறைக்கலாம்; பொது வாழ்வில் அவனுக்குப் பாதுகாப்புத் தேடித் தருகிற வகையில் இடம் தரக் கூடாது என்று திரு. பொன்னப்ப நாடார், டாக்டர் ஹாண்டே போன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் நினைக்கிறார்களா என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 3 ஆண்டு தண்டனை, இப்படி கொடுக்கப் படுகிற குற்றச்சாட்டு பொய்யாகப் போனால்தான் என்று இருக்கிறது. பொது வாழ்வில் வந்தவர்கள் "டு சென்சிடிவ்" ஆக வேண்டுமானால் இல்லாமல் இருக்க வேண்டுமென்று விரும்பலாம்; அதற்காக அவன் உணர்ச்சியற்ற மரக்கட்டையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களாவென்று புரியவில்லை.

இன்னொரு குறை, இந்தச் சட்டத்தின்கீழ் வருகிற நீதிபதி அரசினுடைய தயவைப் பெற்றவராக இருப்பார், அரசு சார்புடைய வாரிசாக அவர் இருப்பார், அதனாலே குற்றம் சுமத்துபவர்களுக்கு எதிராகத்தான் பெரும்பாலும் தீர்ப்பு அமையும் என்று எதிர்க் கட்சிக்காரர்கள் கருத்துக்களைச் சொல்கிறார்கள்.

இதிலிருந்து நீதிமன்ற நீதிபதிகள் மீது எவ்வளவு உயர்வான அபிப்பிராயம் எதிர்க் கட்சிக்காரர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கையிலே மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் இப்படிச் சொல்கிற நேரத்தில் அவர்கள் ஒரு உண்மையைச் சொல்கிறார்கள் என்று இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கழக அரசின் பாதுகாப்பிற்குத் தான் இன்றைய தினம் இந்தச் சட்டத்தை நாங்கள் கொண்டு வருகிறோம் என்று அவர்கள் சொல்வதன்மூலம் வருகிற அரசு, வரப்போகிற அரசு, அமைகிற அரசு, நிலை பெறப் போகிற அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருக்குமென்று எதிர்க் கட்சித் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், சட்டமன்றத்திற்கு வெளியே மிகச் சாதாரண பிரசங்கியிலிருந்து ரேட் பிரசங்கி வரை சொல்வது, இன்னும் 3 மாதத்திற்கு மேல் கழக அரசு தாக்குப் பிடிக்காது என்று. ஆனால் பெருந்தலைவர் போன்றவர்கள் கருணை வைத்து 76 வரை ஆயுள் தந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே எங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். இதிலே ஒரு உண்மை இருக்கிறது. கான்ள வரை, கடல் நீருள்ள வரை, இந்தக் கழக அரசுதான் இருக்கும் என்பதை எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நல்ல உள்ளத்தைப் பாராட்டுகிறேன்.

ஆனால் நாங்கள் மக்களுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டு மக்களுக்கான புரட்சிகரமான சட்டங்களைக் கொண்டு வருகிறோம். நேற்றைய தினம் ஒரு சட்டம் வந்தது, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று கொண்டு வந்தோம். இப்படிப்பட்டச் சட்டங்கள் கொண்டு வருவதன் மூலம் நாம் மக்களுடைய நெஞ்சங்களில் நிலையான இடத்தைப் பெறுகிறோம். அதன் விளைவாக இந்த இடத்தில் நிலைத்து விடுவோம் என்று எதிர்க் கட்சிக்காரர்கள் அஞ்சுகிறார்கள். அதனாலேதான் சேரக் கூடாதவர்களெல்லாம் சேர்ந்து கொண்டு, எங்களுக்கு எதிராக கை கோர்த்துக் கொண்டு இந்தச் சட்டத்தை எதிர்க்கிறார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வேன்.



பொது வாழ்வில் இருக்கிற கறை போகவும், குறை போகவும் ஒரு சேர ஒரே குரலில் இதை ஆதரிப்பதன் மூலம் நம்முடைய நல்ல பாரம்பரியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல்வாதிகளைப் பற்றி ஜான்ஸன் அவசரத்தில் உதிர்த்த மொழிகளுக்குச் சவுக்கடி தருவது போல ஏகோபித்த குரலில் நாம் அனைவரும் இதை வரவேற்போம் என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, at the very outset I would like to state on behalf of our Party that we strongly and wholeheartedly oppose this Bill for the following reasons :—

The Hon. Minister in his preliminary remarks has mentioned this. I will refer to the particular sentence : I would like all the members to give careful consideration to that. சந்தேகம் ஏற்பட்டதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டது. That is what he said. In other words, it is only because—he mentioned it as one of the reasons— பொதுவாழ்க்கையில் இருக்கக்கூடியவர்கள் மீது சந்தேகப்பட்டதற்காக இது ஒரு காரணம். முதன் முதலில் சொன்னார்கள். that was the first thing he mentioned.

In other words, this Bill instead of being called "The Tamil Nadu Public Men, etc. etc." Bill, as mentioned—it is because that the people have suspected the bona fides of the Ruling Party that this Bill has been brought—therefore I would like that this Bill be called, the title of this Bill be changed as "Suppression of Complaints against Criminal Misconduct of Public Men Bill" rather than "Public Men Criminal Misconduct Bill". "Suppression of Complaints Against Criminal Conduct of Public Men Bill" will be a fitting title. That is one thing.

Secondly, this Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill is strange in many ways and bizarre and biassed in its new-fangled provisions. It is evident that the Bill is born in a vindictive spirit and the measure only legalises the malafide motive of the Government.

For instance, let us make a cursory glance. Even a cursory glance at the "Statement of Objects and Reasons", will indicate that though the ostensible purpose is to eradicate corruption among public men, its indirect and underlying and dominant purpose is to punish and gag the complainant, who has credible information about the criminal misconduct of the public men, but who may not perhaps pass the rigorous test of proof enjoined by the Criminal Enquiry Commission of the type envisaged in the Bill.

It was stated by the Hon. Minister for Industries and Law that we have not read the Bill. I can clearly state that we have read the Bill thoroughly. The Bill that has been brought by the Hon. Minister was thoroughly read by us. Only after reading the Bill, we have clearly stated our opinion.

We have already stated that this Bill has been brought forward with a view to create some psychological effect in the minds of the public. This has been brought forward with political motives. We have made it clear to the public. What is the real secret of this Bill? The Hon. Minister has got a tendency of correcting us, as if we were discussing the Bill without reading the clauses of the Bill.

I totally disagree with the Hon. Minister in this respect. The Bill is ill-timed and it should not have been brought before the House at all. I shall now explain how the cat comes out of the D.M.K. bag. The cat comes out of the Legislative Bag of the D.M.K. Government in the form of a Select Committee Report, dated 28th March 1973. What is the observation of the Select Committee? It has been observed that an administration is sullied not only by practice of corruption but also by wild and baseless allegations of corruption by responsible persons. What is it? I want to pinpoint that aspect. இதற்காகத் தான்கொண்டு வந்தீர்களா ?

This is exactly the reason for bringing this Bill. It is for that purpose, the mouths of persons who were making complaints have been gagged. The Select Committee is happy to note that



the Bill under consideration attempts to eradicate both these evils. Now my point is this. The warped and distorted perspective of the D.M.K. Rulers is clearly underlined in the above excerpt. They are not so much concerned by the vice of criminal misconduct and corruption but the Government are dead earnest about gagging the bona fide informant or complainant and inflict upon him the harshest and unheard of penalties, both by way of unlimited compensation (Clause 2) and by way of criminal prosecution (Clause 16).

Suffice it to say that the Bill is more intended to protect the public men, who indulge in criminal misconduct and to threaten and punish the bona fide complainant for his temerity and boldness to indict the public men. On the first count itself, the Hon. Minister Thiru Madhavan's argument is torpidoed. (குறுக்கீடு) அவர் அவரே சொல்லிக் கொள்கிறார் நான் நானே சொல்லிக் கொள்கிறேன். As regards clauses 11 and 16 he was saying

பில்லுக்குள்ளே நுழையப் பயப்படுகிறீர்களா என்று கேட்கிறார்கள். நாங்கள் ஒன்றும் பயப்படுவது இல்லை. பில்லுக்குள் நுழைந்தால் பிடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். நுழைந்தால் கவலைப்படுகிறார்கள்.

Let me first take up clauses 11 and 16. They provide for compensation costs and criminal punishment to be imposed on the complainant. Clause 11 deals with compensatory costs in respect of false, frivolous and vexatious charges. This provision is most mischievous, the most obnoxious and the most vindictive of all the provisions in the Bill. Probably, the provision is borne out of the built-in complex of the current occupants of the Ministerial gadi and the culmination of their misdeeds.

It is nothing short of "Mid Summer Madness" to venture upon so tyrannical, so fantastic and so irrational a legislative provision. Let me examine the clause carefully. I am going into the depth of the clause In any proceeding, a Public Man objects to any allegation of the complaint that it is false, frivolous or vexatious to the knowledge of the complainant, the Commissioner while disposing of the 'complaint', if he so thinks, after

reconciling the means, may give a finding that the complaint is frivolous or vexatious and direct that compensation may be paid to the public man by the complainant.

This is the most important point, which I would like all the hon. Members to give careful consideration. I would say they are perverse and atrocious provisions. First of all, this is a new penalty created by this sinister measure. Criminal law knows of no such penalty. Let us now talk of the Indian Penal Laws.

அதற்கும் இதற்கும் ஒப்பிட்டுப் பாருங்கள். முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லுகிறேன். அவரும் வழக்கறிஞர் அல்ல, நானும் வழக்கறிஞர் அல்ல.

We both are not lawyers. There is no such provision at all. I would say that it will go against the public. There is a provision under Section 250 of the Criminal Procedure Code with a marginal heading "False, frivolous or vexatious accusations". But the very essence of the compensatory costs provision is that the complaint should be false primarily and importantly and then it may either be frivolous or vexatious collaterally and in a supplementray way.

இங்கு அப்படி அல்ல. எல்லாம் இவர்கள் ராஜ்யம். இவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதுதான் சட்டம். நாலரைக் கோடி மக்களையும் 15 பேருக்கு அடிமைகள் ஆக்குவதற்காகத்தான் இந்தச் சட்டம்.

Unless the complaint is *prima facie* false then there will be no cause of action under section 250 of the Criminal Procedure Code.

கிரிமினல் ப்ரொசீஜர் கோடில் இவ்வளவுத் தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. இதை நான் முதலமைச்சர் கவனத்திற்காகக் கொண்டு வருகிறேன். அவரும் செலக்ட் கமிட்டியில் இல்லை.

Unless the complaint is *prima facie* false, then there will be no cause of action under section 250 of the Criminal Procedure Code. I would like to point out that the maximum compensation ........



மாண்புமிகு திரு. செ. மாதவன்: எதிலே போடவில்லை? இங்கும் அந்த நீதிபதி ப்ரைமா ஃபாசி கேஸ் இருந்தால்தான் ரெஃபர் பண்ண முடியும். சி.பி.சி. செக்ஷன் 35எ-ல் இதே மாதிரி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Dr. H. V. Hande: நானும் விளக்கமாகத்தான் சொல்லுகிறேன். நானும் பத்து லாயர்களைக் கலந்து பேசாமல் பேசுவேனா? லாயர்களுடன் கலந்து பேசி விட்டுத்தான் பேசுகிறேன்.

I may tell my hon. Friend, Thiru Ganapathi, the maximum compensation is only Rs. 1,000, however grave the charge may be. If the complaint is *mala fide* அங்கு ஆயிரம் ரூபாய்தான் சீலிங். இங்கு அப்படி இல்லை. sky is the limit. If a complainant with a *mala fide* motive involves any person in a charge of murder, even then, the Court has got power to impose a financal burden or penalty of the maximum of Rs. 1,000 only. Even this compensation will only be treated as fine and treated as such. The Court cannot execute the compensation order as a decree and attach the properties of the complainant. But there are appeals provided against the order and even, when imposing the penalty, the complainant shall be given a full opportuity to show cause.

அதற்கும் இதற்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பல மடங்கு விறிக்கும் நிலைமை இருக்கிறது என்பதுதான் குற்றச்சாட்டு

Then I would like to refer to section 35-A of the Civil Procedure Code.

இதிலும் அதே நிலைதான். ஓரமாக (மார்ஜின்)ப் போட்டிருக்கிறார்கள் Even then the maximum fine is only Rs. 1,000. There is no limit to the amount of compensation. The sky is the limit for the penalty.

நீங்கள் என்ன வேண்டுமானாலும் பண்ணலாம். யாரை வேண்டுமானாலும் பிடிக்கலாம். பயங்கரமாக இருக்கிறது. நீங்கள் தமாஷாக நினைக்கிறீர்கள். இதனுடைய விளைவை யார் அனுபவிக்கப் போகிறார்கள்?

But strange as it may seem, the impugned provision of clause 11 of the Bill makes a distortion of Section 250 of the Criminal Procedure Code and a mockery of Section 35-A of the Civil Procedure Code. That is an important point. Under the guise of the words "damages by way of compensation", a subtle engine of 'extortion' is legalised by our distinguished Hon. Minister.

There is no limit to the amount of compensation. This is the most sinister provision. The sky is the limit for the penalty. With this single provision, the complainant will be terrorised and if he still persists he will be made a pauper and I would like the hon. Members to note the serious aspect of the matter.

Further, the order of compensation will be passed without giving an opportunity to the complainant. Clause 11 is a source of smart money for Public Man. The provision for compensation costs under this clause provides a fertile source of making smart money or even a substantial pile by taking recource to this provision. Strange as it may seem that while the Bill ostensibly seeks to indict the Public Man it overtly and concretely helps them to make some more ill-gotten money by the trap-door of clause 11. Thus, on the whole, the clause is unconstitutional, perverse and anti-democratic in the extreme.

Now I come to clause 16 relating to criminal punishment. It is a pale imitation of section 211 of the Indian Penal Code.

இப்படி செக்ஷன் 211-ஐ அரசாங்கத்திற்குச் சாதகமாக மாற்றியமைத்துக்கொண்டு போட்டிருக்கிறீர்கள்.

The clause makes a provision for criminal punishment for false, frivolous or vexatious complaints. There is only one provision . .

THIRU N. GANAPATHY: Sir, on point of order.........

MR. DEPUTY SPEAKER: We have got limited time. There are three or four leaders of parties to speak . . .

THIRU N. GANAPATHY: Sir, on a point of order. I notice the hon. Member is reading from the papers in his hand. He may refer to his notes but he is reading the notes prepared by his lawyer. Is it permissible?





MR. DEPUTY SPEAKER: It is not permissible.

THIRU R. PONNAPPA NADAR: Sir, we are entitled to use our notes. So far as these legal matters are concerned, we cannot put everything at our fingers end. I think if the hon. Member, Dr. Hande, has written his speech and he is obviously referring to it, there is nothing wrong.

MR. DEPUTY SPEAKER: I have already noticed Dr. Hande reading something from his notes. But that is not proper. He can use his notes but he should not read. . . .

THIRU K. T. K. THANGAMANI: Sir, that will be a dangerous ruling. No member is allowed to have his written speech in his hands and read it but he can make reference from his notes. A serious speaker will always refer to it. Certain things will have to be read out. My view is that if a Member reads only from his notes and not turn aside, then it will be objectionable. So far as I am concerned, generally I write out my speech and in the course of my speech I will refer to it and if that is precluded, it will be a dangerous thing. . .

MR. DEPUTY SPEAKER: I think I am misunderstood.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறோம் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். ஆரம்பத்தில் இருந்தே நான் கவனிக்கிறேன். வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இந்த மன்றத்தில் இனிமேல் யாரும் படிக்காத அளவிற்கு நம்மால் செய்யமுடியும். அதைப் பற்றி கவலையில்லை.

MR. DEPUTY SPEAKER: This is not the proper place to challenge.

திரு. இராம. அரங்கண்ணல்: "இந்த மன்றத்திற்குள் யாரும் பேச முடியாத அளவிற்கு செய்துவிட என்றுமே முடியும்". இது மாண்புமிகு கௌரவமிக்க உறுப்பினர் ஹாண்டே அவர்களின்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1973 ஏப்ரல் 5

வாதம். இது சரியானதுதானா? எங்களை எல்லாம் மிரட்டுகிறார்களா? நாங்கள் எல்லாம் என்ன வீரம் இல்லாதவர்களா? பேசமுடியாத அளவிற்குச் செய்ய முடியும் என்று சொல்வது எங்களை இழுக்குக்கு ஆளாக்குவதாகும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** திரு. கணபதி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினார்கள். அதற்கு ஒரு தீர்ப்பு அளித்துவிட்டால் அது பாதகமான தீர்ப்பாக முடிந்துவிடும். ஆகவே நான் சொல்வது, யாரோ வக்கீல்கள் சொல்லிக்கொடுத்து அவர்கள் இங்கு வாதம் புரிகிறார்கள் என்று சொல்வது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்களே சொல்கிறார்களே.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இருக்கலாம். வக்கீல்கள் அல்லது வக்கீல் குமாஸ்தாக்களிடமும் கேட்கலாம். அது சரியல்ல என்றால், அமைச்சர்கள் அதிகாரிகளிடத்தில் கேட்டுச் சொல்வது என்பது கூட சரியானதல்ல. சட்ட மன்ற உறுப்பினர்கள் வாதத்திற்காக யாரிடம் வேண்டுமானாலும் கேட்டிருக்கலாம். அமைச்சர்கள் கூட படிக்கிறார்கள். சில வேளைகளில் சட்ட நுணுக்கங்களையெல்லாம் படிக்கத்தான் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டருக்கு வாருங்கள். குறிப்பை ரெபர் செய்து பேசுவதில் தப்பு இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்:** சட்ட சம்பந்தமான விஷயங்கள் பற்றி அவர்கள் குறிப்புகளை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். ஆனால் வழக்கறிஞராக இருக்கிற உறுப்பினர் திரு. கணபதி . . .

(மணியடிக்கப்பட்டது)

இப்படி மணி அடித்துக்கொண்டே இருந்தால் நான் சொல்ல வேண்டுமா, இல்லையா. இப்படி எல்லோரையும் விரட்டிக் கொண்டிருந்தால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மணி அடித்தால் உட்கார வேண்டும் என்று அர்த்தம்.



1973 ஏப்ரல் 5]

**திரு. கே. ஏ. மதியழகன்:** நான் சொல்வதைக் கேட்பதாக இருந்தால் கேளுங்கள், இல்லையென்றால் வேண்டாம். (Hear, hear)

MR. DEPUTY SPEAKER: I am hearing. The whole House is hearing.

THIRU R. PONNAPPA NADAR: Sir, we should not lose temper on the last day.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** குறிப்புகளை வைத்துக் கொண்டு பேசுவதில், எந்த மெம்பர் பேசினாலும் ஆட்சேபணையில்லை. அதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த மன்றமும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் அதை வைத்துக்கொண்டு பேஜ், பேஜாக படிப்பது தவறு. அப்படி டாக்டர் ஹாண்டே அவர்கள் படித்திருந்தாலும் அது தவறுதான். அப்படியிருந்தால் தாங்கள் கவனமாக இருந்து 'புல் அப்' செய்வதுதான் நீதி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சாதாரணமாக நம் பேரவையில் ஒரு மரபு இருக்கிறது. வாசிக்கக்கூடாது என்று பல முறை தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மெய்டன் ஸ்பீச்சாக இருக்குமானால், வாசிப்பதற்கும் அனுமதித்திருக்கிறார்கள். அமைச்சர்கள் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் பேசுவதுபற்றிச் சொன்னார்கள். கொட்டேஷன்ஸ், அல்லது குறிப்பிட்ட ஒரு ப்ரொபஸர் அல்லது வேறு யாராவது ஒருவர் சொல்லியிருந்தால் நான்கு பக்கங்களானாலும் அதை வாசித்துத் தான் சொல்லவேண்டும். ஆனால் உங்களுடைய பேச்சையே வாசிப்பது முறையல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள் வாசித்தேன் என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆனால், "நான் இனிமேல் யாரையும் வாசிக்க விட மாட்டேன் என்றும்" சொன்னார்கள். You have challenged that you will never allow any Member hereafter to make his speech with the help of papers. You have stated this and that shows that you have read it.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் பேசக் கூடாதா, காலையில் இருந்தே இப்படிப் பண்ணிக்கொண்டிருக்கிறீர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** காலையில் இருந்து இப்படிப் பண்ணிக்கொண்டிருக்கிறீர்களே என்று உங்களைப் பார்த்து யாராவது கேட்டால் நிலைமை என்னவாகும்? சேரைப் பார்த்து அந்தமாதிரி பேசக்கூடாது. வேறு யாரையாவது பார்த்துப் பேசினால் பரவாயில்லை. ஆனால் தலைவரைப் பார்த்து இப்படிப் பேசுவது, நான் தலைவராக இருக்கும் காரணத்தால் சொல்லவில்லை, தலைமையைப் பற்றி இப்படிப் பேசுவது சரியல்ல. அப்படிப் பேசுவதாக இருந்தால் இந்த அவையை நடத்தவே முடியாது. படிப்பது வேறு. ஆகவே படிக்கக் கூடாது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தவறான ஒரு கருத்து இந்த சபையில் ஏற்படக்கூடாது என்பதால் சொல்கிறேன். திரு. கணபதி அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார். திரு. கணபதி அவர்கள், குறிப்புக்களை பேச்சுக்குத் துணையாக வைத்துக்கொண்டு பேசக் கூடாது என்ற அடிப்படையில் சொல்லவில்லை. ஆனால் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது வழக்கறிஞர்களிடம் ஆலோசனை செய்து அவர்கள் கருத்துக்களை அறிந்துகொண்டு இங்கு வந்து பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு பிறகு வந்து குறிப்புகளைப் படிப்பதால் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லாமல் வெளியில் இருக்கிற வழக்கறிஞர்களுடைய கருத்துக்களை இங்கு சொல்கிற வகையில் பேசுகிறார்கள் என்ற ஒரு எண்ணத்தை. . .

MR. DEPUTY SPEAKER : This is not a relevant point Hon. Members are at liberty to consult any number of advocates, any number of people. The point raised by the hon. Member Thiru M. A. Latheef is not relevant. I have not given ruling on the basis of your arguments or the argument of Thiru N. Ganapathy referring to what Dr. Hande said in the beginning. நான் பல வழக்கறிஞர்களைக் கலந்து கொண்டு பேசுகிறேன் என்று சொன்னீர்கள். அப்படிச் சொன்னதாலேயே அந்த வழக்கறிஞர்கள் சொன்னதையெல்லாம் நீங்கள் இங்கே சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், நிபுணர்கள் சொல்கிற கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். நான் சொன்ன ரூலிங், பேப்பரில் உள்ளதை அப்படியே வாசிக்கக்கூடாது என்பது தான். டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிற



முறையில் என்ன சொன்னார் என்றால், "நான் இனிமேல் இந்தப் பேரவையில் யாரும் வாசிக்காமல் செய்வேன்" என்றார். அதற்குத் தான் உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் கூட 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' எழுப்பினார்கள். வழக்கறிஞர்களைக் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்வதில் தவறு இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** வழக்கறிஞர்களைக் கலந்து கொண்டேன் என்று சொன்னேன். வழக்கறிஞர்கள் சொன்னதை அப்படியே நான் இங்கே கொண்டு வந்து சொல்லவில்லை. இரண்டாவதாக, முழுக்க முழுக்கப் படித்து இருக்கிறேன் என்று நான் சொல்லவில்லை. அதிலே உள்ள 'எக்ஸ்டிராக்ட்' படித்து இருக்கிறேன். இப்படிப் பல வழக்கறிஞர்கள் சொன்னார்கள் என்று சொன்ன நேரத்தில், இவ்வளவு மோசமாகப் பேசினால் நாங்களும் பேசலாமா என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் சில குறிப்புகளை வைத்துக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இவ்வளவு மோசமாகப் பேசுகிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னதெல்லாம், நீங்கள் சொன்ன அந்தப் பாணியை எல்லோருமே பின்பற்றலாமா என்று தான் கேட்டேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீங்கள் பாணி என்று கேட்டதன் தொனி அப்படி இருந்தது. அதைப் பற்றிப் பரவாயில்லை. இதன் மீது விளக்கமாகப் பேசுவதற்கு, செலக்ட் கமிட்டியில் சொல்லாத சில கருத்துக்களைச் சொல்வதற்காக குறிப்பு எழுதிக்கொண்டு வந்தேன். இங்கே எழுதிக்கொண்டு வந்து படிக்க வேண்டுமென்று அல்ல. எட்டு ஆண்டு காலமாக சட்டமன்றத்தில் நான் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். வழக்கறிஞர்கள் அளவுக்கு நான் கணிசமாக அறிந்து இருக்கிறேன். பல வழக்கறிஞர்கள் கூட இதைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உட்காருங்கள், சொல்கிறேன். நான் உங்களை குறைத்துப் பேசவில்லை. தவறான எண்ணத்தில் பேசாதீர்கள். நான் அப்படி நினைக்கவில்லை. வழக்கறிஞர்களைக் கலந்து கொண்டு பேசுகிறேன் என்று சொன்னீர்கள். அவர்கள் சொன்னதை எழுதி வைத்திருக்கிறேன்,

'ரெபர்' செய்கிறேன் என்று சொன்னீர்கள். உங்களுக்கு ஒருவர் சொன்னதை 'கோட்' செய்வதற்கு உரிமை இருக்கிறது. ஒருவர் சொன்ன கருத்தைச் சொல்லலாம். 'கம்ப்ளீட்டாக' சென்டன்ஸ்' எழுதி வைத்துக்கொண்டு அதை அப்படியே படிப்பது சரியல்ல. நீங்கள் பேப்பரிலிருந்து வாசித்தீர்கள். ஒரு சாதாரண 'பிரொனன்சியேஷன்' கூட அதிலிருந்து தான் எடுத்துச் சொன்னீர்கள். நீங்கள் கருத்துக்களை தாராளமாக 'ரெபர்' செய்து பேசலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அந்தக் குறிப்புகளை எடுத்து வைத்து விடுகிறேன். அதை வைத்து முழுக்க முழுக்கப் படித்து தான் சட்டமன்றத்தில் பேசவேண்டுமென்று இல்லை. நான் அவற்றை ஏற்கெனவே படித்து வைத்திருக்கிறேன். நான் அவைகள் இல்லாமலேயே விஸ்தாரமாகப் பேச முடியும். பல வழக்கறிஞர்களுக்கு நான் சொல்லிக்கொடுத்திருக்கிறேன். அதைப் பற்றிப் பரவாயில்லை.

**திரு. கே. கந்தசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு ஹாண்டே அவர்கள் பேசுகிறபோது அவர்களுக்கு விவகாரம் அதிகமாகத் தெரியும் என்று சொன்னார்கள். அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. பல சட்ட ஆலோசகர்களுக்கே வழி வகை சொல்லிக் கொடுத்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கி றார்கள். அது முறையான வாதமா, வழக்கறிஞர்களுக்கே ஆலோசனைக் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதையெல்லாம் இவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்ளக்கூடாது. வழக்கறிஞர்களுக்கு மருத்துவத்தைப் பற்றிச் சொல்லியிருக்கலாம். வழக்கறிஞர்களுக்கு வழக்கைப்பற்றிச் சொல்லிக் கொடுத்ததாகச் சொல்லவில்லை. அதையெல்லாம் இவ்வளவு சீரியசாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** வழக்கறிஞர்கள் எனக்கு "ஜுரிஸ் புருடென்ஸ்' சொல்லிக்கொடுத்திருக்கிறார்கள்.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அவர்களிடமிருந்து வக்கீல்கள் கற்றுக் கொள்வதற்கு ஆட்சேபணையில்லை. யார் நல்ல கருத்துக்கள் சொன்னாலும் ஏற்றுக் கொள்கிறோம். வழக்கறிஞர்களுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லவில்லை. "கற்றது கை மண் அளவு, கல்லாதது உலகளவு'. நாங்கள் எல்லோரும் கற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். பொன்னப்ப நாடார் சொன்ன கருத்து எல்லோருக்கும் பொருந்தும் என்று கருதுகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் பொருந்தும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்த மசோதா கொண்டு வந்த அடிப்படை நோக்கமென்ன? பல ஷரத்துக்கள் இருக்கின்றன. அதன் மீது கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்று நினைத்தேன். அப்படிச் சொல்வதால் கொஞ்சம் கூடப் பிரயோசனம் இல்லை, ஆகவே, நான் சொல்வதாக இல்லை இந்த அரசாங்கத்திற்கு. நான் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் இதை எந்தச் சூழ்நிலையில், எந்த முறையில் இதைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். இந்த அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இந்த அரசாங்கத்தின் மீது ஊழல் பட்டியல் தயார் செய்தார்கள். அவற்றை மத்திய அரசாங்கத்திற்கு, பிரசிடென்ட்டிடம் கொடுத்தார்கள். இங்கே கவர்னர் கையில் கொடுத்தார்கள். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொன்னார்கள். தமிழகத்தில் பரவலாக இந்த அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுகளை, ஊழல் லஞ்சப் புகார்களை எழுப்பியிருக்கிறார்கள். அப்படி எழுப்பப்பட்ட பிறகு இந்த அரசாங்கத்தாலே, இந்த ஆட்சியாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தாலே தாக்குப் பிடிக்க முடியாத காரணத்தால் (குறுக்கீடு) —எனக்கு பேச உரிமை உண்டு—ஊருக்குப் போக முடியவில்லை என்ற அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டதால் . . . .

(பல உறுப்பினர்கள் எழுந்தார்கள். கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன் :** ஊருக்குப் போக முடியவில்லை என்று சொல்கிறார்களே, அப்படிச் சொல்லலாமா?

(பல உறுப்பினர்கள் எழுந்தார்கள். கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் இவ்வளவு கோபப்படக்கூடாது. உட்காருங்கள். இப்படிச் செய்வது முறையல்ல. தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். நான் நின்று கொண்டிருக்கும்போது நீங்கள் உட்கார வேண்டும். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால்கூட என்னுடைய அனுமதி இல்லாமல் எழுப்ப முடியாது. டாக்டர் ஹாண்டே சொன்ன கருத்து முறையல்ல. ஊருக்குப் போக முடியவில்லை என்று சொல்லக்கூடாது. ஒரு மாண்புமிகு உறுப்பினரைப் பார்த்து சொல்வது சரியல்ல. நீங்கள் இப்படிப் பேசுவதால்தான் எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். கூடியவரையில் அப்படிப் பேசுவதை ' அவாய்ட் ' செய்யவேண்டும்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன வார்த்தையை திரும்பப் பெறவேண்டும்.

**திரு. சி. ஆறுமுகம் :** சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குப் போக முடியாது என்று சொன்னார்கள். இங்கே சட்டமன்றத்தை முடித்துக்கொண்டு தொகுதிக்குப் போகலாமா? அங்கே பார்க்கட்டும், யாருக்குத் தொகுதியில் செல்வாக்கு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** கவர்னர் மனுவை வாங்க மறுத்தார் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். கவர்னர் வாங்க மறுத்தாரா அல்லது அதை பரிசீலித்து அனுப்புகிறேன் என்று குறிப்பிட்டாரா? டாக்டர் ஹாண்டே அவர்கள் தவறான கருத்தைத் தருகிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கட்சி மட்டத்திலேயே கேட்டீர்கள். பயங்கரமான சூழ்நிலை தமிழகத்தில் ஏற்பட்டது. அந்தக் கட்சிக்குள்ளேயே பிளவு ஏற்பட்டது எல்லோருக்கும்



தெரியும். அதைச் சமாளிப்பதற்கு, பொதுமக்களை திசை திருப்புவதற்கு இந்த நாடகத்தை நடத்துகிறார்களே தவிர, இது என்ன மசோதா? பொதுமக்களை ஏமாற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு மசோதா ....

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சட்டமன்றத்தை நாடகம் என்று சொல்லி, சட்டமன்றத்திலே நிறைவேற்றப்படுகிற சட்டத்தை குறை கூறுவதை தலைவரவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? சட்டமன்றத்திலே நிறைவேற்றப்படுகிற மசோதாவைப் பற்றி நாடகம் என்று அங்கத்தினர் சொல்கிறார்கள். அந்த வார்த்தை இந்த சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறச் செய்வது சட்டமன்றத்தையே கேவலப்படுத்துவதாகும். ஆகவே, அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மசோதாவைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மசோதாவை நாடகம் என்று சொன்னீர்கள். மசோதா சட்டசபை நடவடிக்கைகளின் ஒரு பகுதி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையில் இருக்கும் மசோதாவை நாடகம் என்று சொன்னால், பேரவையையே சொல்வதாக ஆகும். நீங்கள் நாடகம் ஆடுகிறீர்கள் என்று சொல்வது முறையல்ல. அது முறையற்றது. (குறுக்கீடு) எல்லாமே பேப்பர்தான். லட்ச ரூபாய் நோட்டு என்றால் கூட பேப்பர்தான். பேரவையில் நாடகம் ஆடுகிறீர்கள் என்று சொல்லலாமா? அதை நீங்கள் நகைச்சுவையோடு சொல்லியிருந்தால் பரவாயில்லை. (குறுக்கீடு) நீங்கள் அதை வேகமாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதனால்தான் அதற்கு இவ்வளவு எதிர்ப்பு வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஒரு வார்த்தை கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இப்போது இருக்கின்ற பில்லைப் பொறுத்த வரையில் வேண்டுமானால் 'டிராமடிக் லெஜிஸ்லேஷன்' என்று சொன்னால் பரவாயில்லை. மன்றத்தைப் பற்றி டாக்டர் ஹாண்டே

சொல்லவில்லை. அதைப் பொருட்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் எல்லோரும் கடைசி நாளில், இந்த இறுதி நாளில் சண்டை போட்டுக்கொள்ளாமல், நம்முடைய கருத்துக்களை தைரியமாக, எவ்வளவு வேகமாக வேண்டுமானாலும் சொல்வதில் ஆட்சேபணை இல்லை, இருக்காது என்று கருதுகிறேன். உணர்ச்சி வயப்படாமல் நாம் எல்லோரும் இந்த மன்றத்தை நடத்திச் செல்வதற்கு எல்லா அங்கத்தினர்களும் எங்கள் தரப்பில் இருப்பவர்களும் ஆளும் கட்சித்தரப்பில் இருப்பவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. ஹாண்டே அவர்கள் இந்த மசோதாவை நாடகம் என்று சொல்லவில்லை. நாடகம் ஆடுகிறார்கள் என்று சொன்னார்கள். இதைப்பற்றி பொன்னப்ப நாடார் எனக்கு என்ன தீர்ப்பளிக்கிறார் என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பு அவைத் தலைவருடையதாக இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இங்கே உள்ள உறுப்பினர்கள் எல்லாம் நாடகம் ஆடுகிறார்கள் என்று சொன்னார்கள். உள்ளபடியே, நாங்கள் நாடகம் ஆடுகிறோமென்றால், டாக்டர் ஹாண்டே ஒரு கோமாளியாக இருப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. (கரவொலி)

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்த மசோதாவைப் பற்றிப் பேசுகிறேன். அரசாங்கம் இதைக் கொண்டு வந்திருக்கிற முறையைப் பற்றிப் பேசுகிறேன். அரசாங்கம் இதைக் கொண்டு வந்தது எந்தக் கண்ணோட்டத்தில்? பொதுமக்களுடைய திசையைத் திருப்புவதற்காக. இங்கே நடந்த ஊழல்களைப் பற்றி பேசியாயிற்று. இந்தத் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, அகில இந்தியாவிலேயும், தி.மு.க.-வைப் பற்றி விமரிசனம் செய்து கொண்டிருக்கிறார்கள்; காமெண்ட் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். [illegible] பாருங்கள், நாங்களும் கொண்டு வந்திருக்கிறோம்,



புனிதமான மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம், பாருங்கள், என்ன 'கிராண்டாக' இருக்கிறது" என்று. எதற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள்?

பொதுமக்களுக்கு இதை நாங்கள் செய்தோம், கேட்கவில்லை என்று சொல்வதற்காக. நாங்கள் ஊழலுக்கு ஜவாப்தாரி அல்ல என்று சொல்வதற்காக மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், ஒன்று சொல்கிறேன், பொதுமக்கள் அவ்வளவு சுலபமாக ஏமாற மாட்டார்கள். பொதுமக்களை சுலபமாக ஏமாற்ற முடியும் என்று நீங்கள் கருதாதீர்கள். பொதுமக்கள் ஏமாளிகள் அல்ல. ஏமாந்து விடமாட்டார்கள். பொதுமக்கள் உங்களை நன்றாக அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார்கள். அதுதான் பாயிண்ட். ஆகவே, இதை நிறைவேற்றி, இந்த இறுதி நாளில் ஒரு நல்ல மசோதாவை நிறைவேற்றி விட்டோம் என்று சொன்னால், மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம். எத்தனையோ பேர்கள் விமரிசனம் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த மசோதாவை நிறைவேற்றி அந்த எண்ணத்தை மாற்றிவிட முடியும், அந்த விமரிசனத்தை தடுத்து விட முடியும் என்று நினைக்காதீர்கள். நிச்சயமாக, நீங்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கக்கூடிய நோக்கம், எண்ணம், பொதுமக்களுக்குத் தெரியும்.

அறிக்கைக்கு பதில் கொடுத்தீர்களே, விசாரணைக் கமிஷனுக்கு ஏற்பாடு செய்தீர்களா? இந்தப் புத்தகத்தை வைத்தால் மாத்திரம் போதுமா? ஒரு பத்து பேர்கள் கூடி விசாரிக்க முடிந்ததா? அதற்கு தைரியம் இருக்கிறதா? இப்படி, ஒரு மசோதாவைக் கொண்டுவருவதன் மூலம் உங்களுடைய கரங்கள் சுத்தமானவை என்று சொல்லிவிட முடியுமா? இதே நிலைமை நீடித்தால் இன்னும் எத்தனை காலத்திற்கு சமாளிக்க முடியும்? சமாளிப்பது அவ்வளவு சுலபம் என்று நினைக்கிறீர்களா? (குறுக்கீடு.)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** வெளியிலே பேசுவது போல இந்த மன்றத்தில் பேசுவது சரியல்ல. போரியா, வரியா என்ற முறையில் பேசினால் இந்த சட்டமன்றம் சரியாக நடக்காது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : 'திஸ் மஸ்ட் பி ரெலகேடட்'

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டாக்டர் ஹாண்டே அவர்கள் வார்த்தைகளால் அர்ச்சித்தார்கள். அவைகளுக்கு நான் பதில் சொல்லத் தயாராக இல்லை. மக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று சொன்னார்கள், அதே பதிலை நானும் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, சட்டப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். முதலில் குற்றச்சாட்டுகளுக்காக தண்டிக்கக் கூடாது என்று சொன்னார்கள். பின்னர், விளக்கம் சொல்லும்போது தண்டனை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆக, தண்டிக்க வேண்டுமென்கின்ற கொள்கையை ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : எங்களைப் பொறுத்தவரையில் உங்களுடைய முகமூடியைக் கிழித்து பொதுமக்களுக்குக் காட்ட வேண்டியதுதான் எங்களுடைய பணி. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டாக்டர் ஹாண்டேயினுடைய முகமூடி கூட எல்லோருக்கும் தெரியும்.

DR. H. V. HANDE : I sum up by saying that this unfortunate '-masodha' should relegated into the dung—heap of abortive legislation of this State.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் ஒருதலைப்பட்சமாகக் கொண்டு வந்திருக்கிறது போன்ற ஒரு உணர்ச்சியை பிரதிபலிப்பதில்தான் டாக்டர் ஹாண்டேயின் பேச்சின் குறியாக இருக்கிறது. யார் குற்றம் செய்கிறார்களோ, அந்தக் குற்றம் ருஜுப்படுத்தப்பட்டால் அந்த குற்றவாளிக்கு தண்டனை உண்டு என்று இந்தச் சட்டம் சொல்கிறது. அதேபோல நிரபராதி ஒருவரின் மீது குற்றம் சுமத்தப்பட்டால், அவர் நிரபராதியாக இருந்தால் குற்றம் சுமத்துபவனின் மீது குற்றம் இருக்கிறது. இதிலே என்ன தவறு இருக்கிறது? இதிலே என்ன அமைச்சர்களுடைய 'பேக்-கிரவுண்ட்' இருக்கிறது? நான் நிரபராதி. நான் யார் மீதும் குற்றம் சொல்வதில்லை. குறை சொல்ல வேண்டிய அவசியம்



இருக்கிறபோது, குறை இருந்தால் அது உண்மையாக இருந்தால், குறை என்று சொல்வேன். இதிலேஎனக்கு என்ன பயம்? ஆளுகிற கட்சிக்கு அச்சம் என்ன இருக்கிறது? நாங்கள் நிரபராதி. எதற்காக பயப்பட வேண்டும் இந்தச் சட்டத்திற்காக? குற்றச்சாட்டு இருக்கிறது, ஊழல் இருக்கிறது என்றால் இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அந்தக் குற்றச்சாட்டுகளை ருசுப்படுத்துங்கள். ருசுப்படுத்துவதற்கு இந்தச் சட்டம் உதவியாக இருக்கிறது. அதைச் செய்யாமல், இதைக் கொண்டுவரக்கூடாது என்று சொன்னால், யாருக்கு அச்சம் இருக்கிறது? யார் ஊழலைப் பற்றி பயப்படுகிறார்கள்? யாருடைய நெஞ்சில் இது உறுத்திக் கொண்டிருக்கிறது? கொண்டு வருகிறவர்கள் குற்றவாளிகளாக இருந்தால் அவர்கள் குற்றவாளிகள் என்று கூண்டில் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டுமென்ற பகிரங்கமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறவர்களை நீங்கள் பாராட்ட வேண்டாமா? (கரவொலி.)

உங்களுக்கு ஏன் அச்சம் ஏற்படுகிறது? அமைச்சர்கள் மீது குறை கூறுகிறீர்கள். அவர்கள் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்வார்கள் என்று வாதிடுகிறீர்கள். வாதிடுவது இப்படித் தானா? வாதம் செய்வதற்கு ஒரு எல்லை இல்லையா? பேசுவதற்கு ஒரு வரம்பு இல்லையா? உரிமை! என்ன பாழாய்ப் போன உரிமை? எதை வேண்டுமானாலும் பேசுவது என்பது உரிமையா? எதை வேண்டுமானாலும் யார் மீதும், எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதுதான் உரிமை என்று சொன்னால், அது அந்த உரிமைக்கே அழகில்லை. ஹாண்டே அவர்கள் அடிக்கடி இந்தப் பேரவைக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் யாருக்கு உபதேசம் பண்ணுகிறார் என்று தெரியவில்லை.

(குறுக்கீடு)

(ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து) ஸ்பீகர் யீல்ட் பண்ணியிருக்கிறார், ஆகவே பேசுகிறேன். உங்களைக் கேட்டுக்கொண்டு தான் பேசவேண்டுமென்றால், சொல்லுங்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பண்ணுகிற உபதேசத்தை கேட்க நாங்கள் தயாராக இல்லை. அவரும் ஒரு உறுப்பினர். அவர் எங்களுக்கு உபதேசம் பண்ணுவது சரியல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, முன்னால் பேசிய உறுப்பினருடைய கருத்துக்கு மாறுபாடான கருத்தினைப் பேசுகின்ற வாய்ப்பு இவருக்கும் இருக்கிறது. மொய்தீன் அவர்கள் தன்னுடைய உள்ளத்தில் உள்ள கருத்துக்களைக் கூறுகிறார். அதற்கு இவ்வளவு ஆத்திரப்படுவானேன ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. மொய்தீன் அவர்கள் தன்னுடைய கருத்தைக் கூறுவதாகத்தான் அவருடைய பேச்சு இருக்கிறது. அதை உபதேசம் என்று எடுத்துக்கொள்ள வேண்டாம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த ஹாண்டே அவர்கள் பொதுவுடைமைக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துக்களை உங்களுக்கு உபதேசம் செய்கிறார். அப்போது கூட வருத்தம் ஏற்படாத திரு. தங்கமணி அவர்களுக்கு இப்போது உபதேசம் செய்து விட்டார் என்று கோபித்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உபதேசம் செய்கிற உரிமை அவருக்கும் இருக்கிறது.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** தலைவரவர்களே, இந்த மாதிரி சொல்வது உபதேசமாகாது. இது உபதேசமல்ல. என்னுடைய அபிப்பிராயம் என்னுடைய உரிமையை நான் சொல்கிறேன். அவர்களுடைய உரிமையைச் சொல்லும்போது எவ்வளவு கடுமையாகப் பேசினார் ? "நீங்கள் ஏமாற்றுக்காரர்கள், மக்களை வஞ்சிக்கிறீர்கள், துரோகம் செய்கிறீர்கள். அவர்களை திசை திருப்பி விடுகிறீர்கள்", என்றெல்லாம் சொன்னதற்கு பதில் சொல்வது உபதேசமா ? இந்தச் சட்டம் உங்களுக்குக் கூட நடுக்கத்தை உண்டாக்கியிருக்கிறது. அந்த நடுக்கத்தின் காரணமாக இப்படிச் சொல்கிறார்கள். சட்டத்தில் கோளாறு ஒன்றும் இல்லை. சட்டம் வரட்டும் நீங்கள் சொல்கிற ஊழல்கள் [illegible] அமைச்சர்கள் உங்கள் கைகளிலே மாட்டி விடுகிறார்கள். அவர்கள் வலையை உங்களிடம் கொடுக்கிறார்கள்.



நான் புரிந்துள்ள வரையில் இந்தச் சட்டத்திற்கு நான் கொடுக்கும் விளக்கம்—அமைச்சர்கள் தங்களைப் பிடித்துக்கொள்வதற்கான ஒரு வலையை இப்போது உங்களிடம் கொடுத்திருக்கிறார்கள். வலை என்றால் பழைய வலை இல்லை. இப்போது புதிதாக ஒரு வலை வந்திருக்கிறதே! அது என்ன வலை ? (நைலான் வலை) ஆம். அந்த புத்தம் புதிய நவீன நைலான் வலையைக் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** அது கிழிந்து போன வலை.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** அது எப்படி கிழிந்து போன வலையாக முடியும்? இப்போதுதான் சட்டமாக்கப்படுகிறது. இப்போதுதான் சட்டம் வருகிறது. அது எப்படி பழையதாக முடியும்? புது வலையைக் கொடுத்திருக்கிறார்கள். 'நாங்கள் குற்றவாளிகள் என்றால் எங்களைக் கோர்ட்டிலே நிறுத்துங்கள் என்று சொல்கிறார்கள். நான், என்னுடைய கட்சியின் சார்பிலே சொல்லக்கூடிய கருத்து என்னவென்றால், குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்; நிரபராதிகள் மீது குற்றம் சுமத்துபவர்களும் தண்டிக்கப்படவேண்டும். அதற்காகத்தான் இந்தச் சட்டம் வருகிறது. அதில் யாருக்கும் விதிவிலக்குக் கிடையாது. எனவே, இந்தச் சட்டத்தை முழு மனதோடு ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, ஒரு விளக்கத்தை மட்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும், பொய்க் குற்றச் சாட்டுகளை சொன்னவர்களையும் தண்டிக்கிறது இந்த சட்டம் என்று அதை வரவேற்றுப் பேசினார்கள். ஏற்கெனவே தமிழ்நாடு சர்க்கார் கொண்டுவந்த பல சட்டங்கள் இருக்கின்றனவே ! அந்தச் சட்டங்களின், அடிப்படையில் பல்வேறு வழக்குகள் நீதி மன்றங்களில் போடப்படுகின்றன. அந்த வழக்குகளில் பல நிரூபிக்கப்படாமல் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அப்படி பொய் வழக்குகளைப் போடுகின்ற அதிகாரிகளையும் தண்டிக்க வேண்டுமென்று நம்முடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்களா ?

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** குற்றம் என்று சொல்லும் போது அதிகாரிகள் அதற்கு விதிவிலக்கு அல்ல. அவர்களும் அதற்கு உட்பட்டவர்கள்தான். குற்றம் செய்தவர்களை எல்லாம் இந்தச் சட்டம் சுற்றும்.

**திரு. க. உரா. எட்மண்ட் :** இந்தியன் பினல் கோடு சட்டம் இருக்கிறது. அதை அடிப்படையாகக்கொண்டு வழக்குகள் போடப்படுகின்றபோது காவல் துறையினரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் டில்லிக்கு இருக்கிறது. மாநில அரசும் பல சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டங்களின் அடிப்படையில் வழக்குகளைப் போடுகிறார்கள். அவை நீதிமன்றங்களில் நிரூபிக்கப் படாமல், குற்றவாளிகளை விடுதலை செய்கிறார்கள். அப்போது அது பொய் வழக்கு என்று ஆகிறது. அப்படி பொய் வழக்கு என்று சொல்லும்போது அவர்களும் தண்டிக்கப்படுவார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த செக்ஷனைத்தான் டாக்டர் ஹாண்டே அவர்களும் வாசித்துக் காட்டினார்கள். போலீஸ் அதிகாரிகள் பொய் வழக்குப் போட்டாலும் அவர்கள் மீதும் வழக்குப் போட இப்போதே சட்டத்தில் இடம் இருக்கிறது.

**THIRU M. A. LATHEEF :** The hon. Member made a wrong analogy between private persons and officers ruling the State. The hon. Member is an Advocate. I would like to know whether State also can be considered on a par with an individual who has no separate identity.

**THIRU G. R. EDMUND :** While criminal cases are filed by police officials or Government officials, there should be some apprehension in the minds of those officers they are filing some false complaints against the public.

**THIRU M. A. LATHEEF :** I am very sorry that the hon. Member is not able to visualise or comprehend the implications of the word " State ". State means not only Government but also the public. It is territory. Therefore " State " means territory, Government and everything. Even the hon. Member is included.



**திரு. என். கணபதி :** ஐ.பி.சி. 214-வது செக்ஷன்படி யார் பொய்க் குற்றம் சொன்னாலும் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கலாம். அதிலிருந்து அதிகாரிகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பாதுகாப்பில்லை. அது வழக்குரைஞரான மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது 12¾ மணி ஆகிவிட்டது. இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வது என்று முடிவுசெய்து விட்டால் நல்லது. பேசக்கூடியவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துக்கொள்ளவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கனம் துணை சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டபோது, பொறுக்குக் கமிட்டி உறுப்பினராக இருந்த நானும் பல பிரச்னைகளை எழுப்பினேன். ஆகவே, முதல் கூட்டத்திலேயே பங்கெடுத்துக்கொண்டபோது என்னுடைய கருத்தை நான் தெரிவித்திருக்கிறேன். அந்த பொறுக்குக் கமிட்டியின் ரிப்போர்ட் நம் கையில் இருக்கிறது. அதில் பக்கம் 28-ல் இருக்கும் விஷயத்தை நான் வாசிக்கிறேன்.

' Thiru K. T. K. Thangamani demanded that the Bill should be withdrawn, as his party was opposed to the very basis on which the Bill had been brought forward. He did not therefore want to participate in the further deliberations of the Committee. '

இதேநிலைதான் இந்த மசோதா இங்கு வந்தபோதும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவானது இன்றைக்கு கூட நேரம் ஆய்விடவில்லை காலதாமதம் ஆகவில்லை.

' Thiru K. T. K. Thangamani reiterated that their view was that the Bill itself should be withdrawn. Hence, they did not want to participate in the further deliberations of the Committee. '

எந்த நேரத்திலும் வாபஸ் வாங்க அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே, எங்களுடைய கருத்துக்களைக் கேட்ட பிறகாவது இப்படி ஒரு மசோதா தேவை இல்லை என்று வாபஸ் வாங்கிக்கொள்ளலாம்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஏப்ரல் 5

இந்த மசோதா வருகின்றபோது சட்ட அமைச்சர் ஒன்றைச் சொன்னார்கள். தைரியம், துணிச்சல் என்றெல்லாம் சொன்னார்கள் அவர்கள் தைரியமாகவும் துணிச்சலாகவும் தான் பேசுகிறார்கள். அதே மாதிரி எங்களுக்கும் தைரியமும் துணிச்சலும் நிறைய இருக்கிறது. அதில் ஒன்றும் குறைவில்லை. ஏனென்றால் இங்கு எதைப் பேசுகிறார்களோ அதை நாங்களும் பேசத் தயார். ஆனால் பதிலுக்குப் பதில் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. இங்கே உறுப்பினர்களாக வந்திருக்கிறோம். சொல்ல வேண்டிய விஷயங்களை தெளிவாகச் சொல்லி விளக்கவேண்டுமென்ற முறையை கடைப்பிடிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்த பொறுக்குக் கமிட்டியிலிருந்து நாங்கள், ஸ்தாபன காங்கிரஸ், ஆளும் காங்கிரஸ், சுதந்திராக் கட்சி, அண்ணா தி.மு.க., ஆகியோர் வெளிநடப்புச் செய்தோம். அதற்குப் பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், சுதந்திராக் கட்சியின் சார்பிலும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டோம். அதை அடிப்படையாக வைத்து சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதா must be withdrawn. They can still withdraw the Bill. இந்தமாதிரியான ஒரு மசோதா இப்போது தேவை இல்லை. மத்திய அரசினுடைய 60-ம் சட்டம் இருக்கும் போது, this is redundant. It is not necessary. Commission of Enquiry Act, 1952 1952 என்று இருக்கிறதே, அதற்கு இன்றைக்குப் போதுமான அதிகார இருக்கிறது. அப்படி இருக்கும்போது இப்படி ஒரு மசோதா கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்று வலியுறுத்திச் சொன்னோம். பிறகு இந்த மசோதாவை சமர்ப்பிக்கின்றபோதே அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ராஜஸ்தானில் இல்லையா, மகாராஷ்டிரத்தில் இல்லையா என்று சொன்னார்கள். அதேமாதிரி கேரளத்திலே இந்தமாதிரி ஒரு மசோதா இருக்கிறது என்று சொன்னார்கள். அதன் விவரத்தை நான் சொல்ல விரும்புகிறேன். கேரளத்திலே தனியார் மசோதா ஒன்று வந்தது. அதன் மீது விவாதம் நடைபெற்றது. அதற்கு முதலமைச்சர் பதில் சொன்னார். அப்போது தமிழகத்திலே



1973 ஏப்ரல் 5] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இல்லாத அளவுக்கு கேரளத்திலே இம்மாதிரி குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. Through executive order they were appointing commissions. பல ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்திருக்கிறார்கள். அதன் அனுபவம் அவர்களுக்கு இருக்கிறது. அதையெல்லாம் பரிசீலனை செய்யாமல் திடீரென்று வேகவேகமாக எல்லா அம்சங்களையும் பரிசீலனை செய்யாத அளவுக்கு இந்த பிற்போக்கு மசோதாவை கொண்டுவர அவசியம் இல்லை என்று சொன்னார்கள். ராஜஸ்தானிலும் மகாராஷ்டிரத்திலும் இந்த மாதிரியான மசோதாவைக் கொண்டுவருவதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கலாம். அதை அவர்களிடம் தான் கேட்க வேண்டும். பல்வேறு மாநிலங்களில் இப்படிப்பட்ட சட்டம் இல்லை. அதற்கு தேவையில்லை என்று அவர்கள் கொண்டுவரவில்லை. கேரளத்திலும் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே தமிழ கத்தைப் பொறுத்தவரையில் இந்த மசோதா தேவையில்லை; இதற்கு அவசியமில்லை என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த மசோதாவின் பின்னணி என்ன? நவம்பர் 6-ந் தேதி இங்கே சட்டமன்றத்தில் உறுப்பினர்களான நானும், காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும், அண்ணா தி.மு.க. தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கையெழுத்திட்டு ஒரு குற்றச்சாட்டுப் பட்டியலை மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறோம். எங்கள் நோக்கம் என்னவென்றால் மத்திய அரசே நாங்கள் ஏற்கெனவே சொன்ன சட்டத்தின் மூன்றாவது பிரிவின்கீழ் ஒரு 'கமிஷன் ஆஃப் என்குயரி' அமைக்கவேண்டும் என்பது. அப்படி நாங்கள் கொடுத்த அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் இங்கே அவர்கள் ஒரு பதில் கொடுத்திருக்கிறார்கள். அப்படி பதில் கொடுத்தவர்கள் தாங்களாகவே சில அமைச்சர்கள் பேரிலே 'நாங்கள் ஒரு கமிஷன் ஆஃப் என்கொயரி'-யைப் போடுகிறோம் என்ற ஒரு நிலைக்கு வந்திருந்தால் அந்தச் சட்டத்தின்படி போட்டு இருக்கலாம். அன்றைக்கே போட்டிருக்கலாம். போட்டதற்குப் பிறகு மத்திய அரசைக் கேட்கலாம். இன்று மத்திய சர்க்கார் அந்தக் குற்றச்சாட்டுகளின் பேரிலே ஒரு குற்றச்சாட்டு என்கொயரி கமிஷனைப் போட்டுவிட்டால், அதே குற்றச்சாட்டு களுக்காக உங்களால் போட முடியாது. 1952-வது சட்டம் பிரிவு

3-ல் இது மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கின்றது. மத்திய சர்க்கார் ஒரு கமிஷன் ஆஃப் என்கொயரி போட்டுவிட்டால் அதற்குப் பிறகு அதன் பேரிலே மாநில சர்க்கார் ஒரு கமிஷன் போட முடியாது என்பது மிகத் தெளிவாக இருக்கின்றது.

ஆகவே மத்திய சர்க்காரோடு மோத வேண்டும் அல்லது மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இல்லை என்ற நிலை எடுப்பது என்று சொன்னால் அது வேறு விஷயம். இன்றைக்கு அதே சட்டத்தைப் பின்பற்றி பல விசாரணைக் கமிஷன்கள் போடப்பட்டு இருக்கின்றன. அந்தக் காலத்திலேயெல்லாம் இது சுப்ரீம் கோர்ட்டின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. அப்படி பரிசீலனைக்கு வரும்போது, பீஹாரிலுள்ள ஒரு மாஜி முதலமைச்சர் பேரிலே ஒரு விசாரணைக் கமிஷன் போட வேண்டும் என்று மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் திரு. வெங்கட்ராம ஐயர் அவர்கள் கமிஷனாகப் போடப்பட்ட நேரத்தில் 'இப்படி வெளி மாநிலத்திலிருந்து ஒரு ஜட்ஜைக் கொண்டு வந்து போடலாமா' என்ற பிரச்னை சுப்ரீம் கோர்ட்டில் எழுப்பப்பட்டது.

அந்த நேரத்தில், 'வெளி மாநிலத்தில் உள்ள ஒரு ஹைகோர்ட் ஜட்ஜைத்தான் போட வேண்டும். ஏன் என்றால் அந்த மாநில அமைச்சர்களை நன்கு அறிந்திருக்கும் அந்த மாநில ஜட்ஜையே போடக் கூடாது, அப்படிப் போடுவது என்பது பல கோளாறுகளுக்கு இடம் அளித்துவிடும். ஆகவே வெளி மாநிலங்களிலிருந்து தான் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜைப் போட வேண்டும்' என்று பல இடத்தில் பல சந்தர்ப்பங்களிலே சுப்ரீம் கோர்ட்டில் சொல்லியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாநில முதலமைச்சர்கள் பேரிலும் மத்திய அரசின் பிரதம மந்திரியின் பேரிலும் அப்படிப்பட்ட விசாரணைக் குழுக்கள் போடுவதற்குத்தான் அந்த மாதிரி . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** என் முறைப்படி. நான் சொல்லுகிறேன். நான் சொல்லுவது, இந்த மாநிலத்திலுள்ள ஒரு அமைச்சர் பற்றி விசாரணைக் கமிஷன் போட வேண்டும் என்றால் அந்த மாநிலத்திலுள்ள ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் கூடாது என்ற



கருத்து சுப்ரீம் கோர்ட்டில் பல இடத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றது. வேண்டுமென்றால் எந்த எந்த வருஷத்தில் எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் சுப்ரீம் கோர்ட்டு அப்படிச் சொல்லியிருக்கிறது என்பதை நான் எடுத்துச்சொல்லுவதற்கு தயாராயிருக்கின்றேன்.

The salutary principle of appointing a retired judge of the Supreme Court or a Judge of the High Court outside the State followed, when commissions of enquiry were appointed in Bihar, Orissa and Jammu and Kashmir in the past in more than half a dozen instances should not be departed from என்று ஒரு விஷயத்தை சுப்ரீம் கோர்ட்டு சொல்லியிருக்கின்றது. ஏன் என்றால் 1952-வது வருஷச் சட்டம் இருக்கின்றதே, அதில்

The cleanliness of public life in which the public should be vitally interested must be matter of public importance.

'matter of public importance' என்று சொல்லும்போது நிர்வாகம் தவறற்ற முறையில் இருக்க வேண்டும், நிர்வாகம் நேர்மையாக இருக்க வேண்டும் என்பது 'பப்ளிக் இம்பார்ட்டென்ஸ்'. ஆகவே பப்ளிக் இம்பார்ட்டென்ஸ் என்று வரும்போது தனிப்பட்ட அமைச்சர் தவறு செய்வது பிரச்னை இல்லை.

The people are entitled to know whether they have entrusted their affairs to an unworthy man'

நாம் பொறுப்பைக் கொடுத்திருக்கிறோம். பொறுப்பைக் கொடுத்த பின் தலைமையில் வந்தவர்கள் சரியானவர்கள்தானா whether they are worthy men or unworthy men என்ற விஷயத்தில் பல தடவை சுப்ரீம் கோர்ட்டு சொல்லியிருக்கின்றது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன். It is too late to contest the validity of the central enactment of 1952 to appoint a Commission to enquire into corruption charges of public men wherever they may be

இது 1958, 1969, 1968. 1969, 1958 என்று இப்படி நாலைந்து தடவை சுப்ரீம் கோர்ட்டில் இது சம்பந்தமாகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கின்றதா இல்லையா என்ற பிரச்சனையைப் பொறுத்தவரையில் அரசியல் ரீதியில் மத்திய சர்க்காரோடு நாம் சமர் புரிந்து

கொள்ளலாம். ஆனால் இன்றைக்கு அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இயங்கும் உயர்நீதி மன்றம் இருக்கின்றதே சுப்ரீம் கோர்ட், அதைப் பொறுத்த வரையில் 'டெஃபனெட்'-டாகச் சொல்லியிருக்கின்றது இந்த விஷயத்தில். அப்படிச் செய்யும்போது கூடியவரையில் ஒரு மாநில ஜட்ஜைப் போடாமல் இருப்பது நல்லது என்ற கருத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். இதுதான் அந்தக் கமிஷன் ஆஃப் என்கொயரியை அமைக்க வேண்டியதன் சட்டத்தைப் பொறுத்தது.

**திரு. என். கணபதி:** ஸார், ஒரு க்ளாரிஃபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** If Hon'ble member Thangamani is yielding I have no objection

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் 'யீல்டு' பண்ணுவது என்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் நேரம் மிகவும் குறைவாக இருக்கின்றது.

**திரு. என். கணபதி:** ஸார், நான் க்ளாரிஃபிகேஷனாக என்ன கேட்க விரும்புகிறேன் என்றால் பல வழக்குகள் இந்தக் கமிஷன் ஆஃப் என்கொயரி ஆக்டின் கீழ் சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்று இருக்கின்றது என்கின்றார்கள். சரி. ஆனால் ஏதாவதொரு வழக்கில் மத்திய சர்க்கார் மாநில அமைச்சர் மீது கமிஷன் ஆஃப் என்கொயரி ஆக்டின் கீழ் ஒரு விசாரணைக் கமிஷன் போட்டு இருக்கின்றார்களா? இதைப் பற்றிய சர்ச்சை சுப்ரீம் கோர்ட்டில் எழுந்திருக்கின்றதா என்பதைத்தான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஸார், நிறைய இருக்கின்றன.

The plea that an enquiry cannot be conducted against a State Minister under the Commission of Enquiry Act except at the instance of State Legislature has been emphatically overruled by the Supreme Court in 1967—S.C. 122—and this decision of five Judges lays down the law.
வெளியே போய் ஜட்ஜுகளைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம்.

**திரு. என். கணபதி:** நான் கேட்க விரும்புவது, சுப்ரீம் கோர்ட்டில், மத்திய அரசு எந்த மாநில அரசு, எந்த மாநில அமைச்சர் மீது இப்படி ஒரு விசாரணைக் குழுவினைப் போட்டு,



அது சரியானதுதானா, மத்திய அரசுக்கு மாநில அரசு, மாநில அமைச்சர் மீது இப்படி விசாரணைக் கமிஷன் போடுவதற்கு அதிகாரம் இருக்கின்றதா இல்லையா என்ற பிரச்சனையை, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு வந்து விசாரித்திருக்கின்றார்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எனக்கு உள்ள தகவல்களை இப்போது சொல்லுகிறேன். இல்லை என்றால் உங்கள் நேரத்தில் உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள். வேண்டுமானால் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டைப் படிக்கிறேன். அதில் அவர்களுடைய நிலை என்ன. மத்திய சர்க்கார் எந்த அமைச்சர் மீதும் விசாரணைக் குழுவைப் போட முடியுமா என்பதைப் பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. இதைத்தான் ஆங்கிலத்தில் வாசித்தேன். தமிழில் சொல்ல வேண்டுமானால் இப்போது மத்திய சர்க்காருக்கு மாநில அரசின் பேரிலே அதிகாரம் இல்லை என்று சொல்லி வருகின்றார்களே அதை அவர்கள் எந்த அளவிற்கு விகலமாக எடுத்துச் சொல்ல முடியுமோ அந்த அளவிற்கு எடுத்துச் சொல்லி யிருக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறேன். இன்னும் ஒரு முக்கியமான விஷயம். நாங்கள் குற்றச்சாட்டுகளைக் கொடுத்தோம்.

THIRU M. A. LATHEEF : Sir, on a point of order . . .

THIRU K. T. K. THANGAMANI : Sir, I also need some protection. If there is deliberate interruption like this, I will not then continue. What I am saying is from the judgement . . .

THIRU M. A. LATHEEF : Point of order, Sir.

(Thiru S. Alagarswamy stood in his seat)

MR. DEPUTY SPEAKER : Mr. Alagarswamy, please resume your seat. He is on a point of order.

THIRU M. A. LATHEEF : The Supreme Court's observations are not adjudications. They were made by the Supreme Court with reference only to certain cases . . .

MR. DEPUTY SPEAKER : This is not a point of order.

THIRU M. A. LATHEEF: You may hear me . . .

MR. DEPUTY SPEAKER: No. The hon. Member, Mr. Latheef will kindly resume his seat. This is not a point of order.

THIRU M. A. LATHEEF: He is giving wrong information to the House . . .

MR. DEPUTY SPEAKER: I am not going to allow this. You please resume your seat.

THIRU M. A. LATHEEF: The judgment is given in a wrong way . . .

(திரு. கே. என். குமாரசாமி எழுந்து நின்றார்.)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* திரு. குமாரசாமி, தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, if I am accused from behind, I too need some protection.

THIRU M. A. LATHEEF: I submit he is giving wrong information to the House.

THIRU K. T. K. THANGAMANI: If it is wrong, I will answer it. If there is going to be interruption like this, why should I waste my time?

THIRU M. A. LATHEEF: He cannot give wrong information to the House.

MR. DEPUTY SPEAKER: This is not a point of order . . .

THIRU M. A. LATHEEF: No, Sir.

MR. DEPUTY SPEAKER: No. I have completely listened to your point of order and I am giving my ruling. You kindly resume your seat.

THIRU M. A. LATHEEF: I am rising on a point of order, and I am raising point of order, point of order again and again.



MR. DEPUTY SPEAKER: There is no point of order. Please resume your seat.

THIRU M. A. LATHEEF: I will raise a point of order again. You can expel me from the House. But I am raising . . .

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* சற்று திரு. தங்கமணி அவர்கள் பொறுமையாக இருக்க வேண்டும். திரு. தங்கமணி அவர்கள் ஒரு தீர்ப்பிலிருந்து சில பகுதிகளை எடுத்துச் சொல்லுகின்றார்கள். அதைத் தவறான வழியில் பயன்படுத்துகிறார் என்று நீங்கள் (திரு. லத்தீப்) சொல்ல முடியாது. இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்பது ஒருவர் சொல்லும் கருத்தில் நமக்கு உடன்பாடு இல்லை என்பதற்காக அதை மறுக்கும் முறையில் எழுப்பக்கூடியதல்ல. நடைமுறைப் பிரச்சனையில் இந்த நடைமுறையில் தவறு இருக்கின்றது என்று எடுத்துச் சொல்லுவதற்குத் தான் 'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' என்று எழுப்பலாம். தன் கருத்துக்கு மாறுபட்ட கருத்தினை மறுக்க வேண்டும் என்று சொல்ல பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்ப முடியாது. வேண்டுமானால் ஆன ய பாயிண்ட் ஆஃப் எக்ஸ்ப்ளனேஷன் என்று சொல்லலாம். இந்த விஷயத்தில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ற பெயரால் இதை எழுப்புவது இந்த மன்றத்தின் முறைகளை மேலும் மற்றவர்கள் மீறக்கூடியதாக அமைந்துவிடும்.

THIRU M. A. LATHEEF: I am raising my point of order, Sir.

THIRU S. ALAGARSAMY: Sir, I am raising another point of order . . .

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* திரு. அழகர்சாமி அவர்கள் இப்படிக் குறுக்கிடுவது நல்லது அல்ல. திரு. லத்தீப் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால், அவர் சொல்லப்போவது என்ன என்றே தெரியாமல் அதன்மீது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவது முறை அல்ல.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I invite your attention to the rule providing for point of order and it specially provides . . .

MR. DEPUTY SPEAKER : Let us finish that point of order. Mr. Latheef, what is your point of order?

THIRU M. A. LATHEEF : My point of order is this. The Supreme Court judgment was only with reference to former Ministers and not against State Governments subsisting in power. Mr. Thangamani's arguments look as if the Supreme Court gave the judgment with reference to Government constitutionally constituted. It is not the case. That is my submission. The judgment is quoted in a wrong way. It should be corrected. That is what I submit.

MR. DEPUTY SPEAKER : The hon. Member is an advocate.

THIRU R. PONNAPPA NADAR : Sir, we want your clear ruling. Unless we are permitted to speak here as per rules, there is no use in our sitting talking here in the opposition. I shall refer to Rule 83. In Sub-rule (3) of Rule 83, it is said :

"A point of order shall relate to the interpretation or enforecement of these rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker".

This rule is being raped. This rule is being abused, Sir. That is the only submission, I want to make.

THIRU M. A. LATHEEF : It is being raped by the Opposition and not by us.

(Thiru R. Ponnappa Nadar rose)

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru K. T. K. Thangamani was referring to some lines from a judgment. The hon. Member cannot expect him to give the full judgment or prevent him from referring to the judgment. There is no point of order.



திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக நான் எதிர்க்கட்சியில் இருந்துபேசும்போது ஆளும் கட்சியில் உள்ளவர்களோ, அமைச்சர்களோ குறுக்கிடாதிருக்க உத்தரவாதம் கொடுக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. எதிர்க்கட்சியில் உள்ளவரே ஆளும் கட்சிக்காரராகிவிட்டார்.

* *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்று நம்முடைய பேரவையின் தொடர்புக் கூட்டம் முடிவடைய இருக்கிறது. நாம் கடைசிநாள் நிகழ்ச்சியில் கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம். கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் ஒருவருக்கொருவர் குரோத உணர்ச்சிகளை உள்ளத்தில் ஏந்தி நாம் விடைபெற்றுக் கொள்வது முறை அல்ல. அதன் காரணமாக திரு. லத்தீப் அவர்களும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், கடைசியாகப் பரிமாறிக் கொண்ட கடுமையான சொற்களை அவைக் குறிப்பில் இல்லாமல் செய்துவிடுவது நல்லதாக இருக்கலாம். வாதத்தில் கடுமையாக எடுத்துச் சொல்லலாம். ஒருவருக்கொருவர் மனம் புண்படும் படியாக நடந்து கொள்வது நல்லது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் இறுதியில் ஆங்கிலத்தில் பரிமாறிக்கொண்ட வார்த்தைகளைப் பேரவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட ஆணையிடுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் சொல்ல ஆரம்பித்தது நவம்பர் மாதம் 6-ம் தேதி அன்று நானும், திரு. எம்.ஜி.ஆர். அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஜனாதிபதி அவர்களிடம் நேரில் கொண்டுபோய்க் கொடுத்தது இந்த அமைச்சரவையைப்பற்றிய குற்றச்சாட்டுகள். இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு பதில் இந்த அவையில் 14—12—72-லே சமர்ப்பிக்கப் படுகிறது. அந்தக் குற்றச்சாட்டுகள் ஒரு பக்கத்தில் இருக்கின்றன. மத்திய சர்க்கார் இதுவரையிலும் அந்தக் குற்றச்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I invite your attention to the rule providing for point of order and it specially provides . . .

MR. DEPUTY SPEAKER : Let us finish that point of order. Mr. Latheef, what is your point of order?

THIRU M. A. LATHEEF : My point of order is this. The Supreme Court judgment was only with reference to former Ministers and not against State Governments subsisting in power. Mr. Thangamani 's arguments look as if the Supreme Court gave the judgment with reference to Government constitutionally constituted. It is not the case. That is my submission. The judgment is quoted in a wrong way. It should be corrected. That is what I submit.

MR. DEPUTY SPEAKER : The hon. Member is an advocate.

THIRU R. PONNAPPA NADAR : Sir, we want your clear ruling. Unless we are permitted to speak here as per rules, there is no use in our sitting talking here in the opposition. I shall refer to Rule 83. In Sub-rule (3) of Rule 83, it is said :

" A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker ".

This rule is being raped. This rule is being abused, Sir. That is the only submission, I want to make.

THIRU M. A. LATHEEF : It is being raped by the Opposition and not by us.

(Thiru R. Ponnappa Nadar rose)

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru K. T. K. Thangamani was referring to some lines from a judgment. The hon. Member cannot expect him to give the full judgment or prevent him from referring to the judgment. There is no point of order.



திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக நான் எதிர்க்கட்சியில் இருந்துபேசும்போது ஆளும் கட்சியில் உள்ளவர்களோ, அமைச்சர்களோ குறுக்கிடாதிருக்க உத்தரவாதம் கொடுக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. எதிர்க்கட்சியில் உள்ளவரே ஆளுங் கட்சிக்காரராகிவிட்டார்.

* *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்று நம்முடைய பேரவையின் தொடர்புக் கூட்டம் முடிவடைய இருக்கிறது. நாம் கடைசிநாள் நிகழ்ச்சியில் கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம். கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் ஒருவருக்கொருவர் குரோத உணர்ச்சிகளை உள்ளத்தில் ஏந்தி நாம் விடைபெற்றுக் கொள்வது முறை அல்ல. அதன் காரணமாக திரு. லத்தீப் அவர்களும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், கடைசியாகப் பரிமாறிக் கொண்ட கடுமையான சொற்களை அவைக் குறிப்பில் இல்லாமல் செய்துவிடுவது நல்லதாக இருக்கலாம். வாதத்தில் கடுமையாக எடுத்துச் சொல்லலாம். ஒருவருக்கொருவர் மனம் புண்படும் படியாக நடந்து கொள்வது நல்லது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் இறுதியில் ஆங்கிலத்தில் பரிமாறிக்கொண்ட வார்த்தைகளைப் பேரவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட ஆணையிடுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் சொல்ல ஆரம்பித்தது நவம்பர் மாதம் 6-ம் தேதி அன்று நானும், திரு. எம்.ஜி.ஆர். அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஜனாதிபதி அவர்களிடம் நேரில் கொண்டுபோய்க் கொடுத்தது இந்த அமைச்சரவையைப்பற்றிய குற்றச்சாட்டுகள். இந்தக் குற்றச் சாட்டுகளுக்கு பதில் இந்த அவையில் 14—12—72-லே சமர்ப்பிக்கப் படுகிறது. அந்தக் குற்றச்சாட்டுகள் ஒரு பக்கத்தில் இருக்கின்றன. மத்திய சர்க்கார் இதுவரையிலும் அந்தக் குற்றச்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

போர்ட்டுக்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காதது தவறு என்பது என் கருத்து. இதைச் சொல்கிறபோது இந்து தலையங்கத்தை நான் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். 17—11—72-ம் தேதி இந்து பத்திரிகை தன் தலையங்கத்தில்

"Santhanam Committee recommendations apart, Nehru showed how such matters may be dealt with when he personally looked into allegations made against Mr. R. Sankar, the then Chief Minister of Kerala, as well as against Pratap Singh Kairon of the Punjab, before initiating adequate action or dropping the matter altogether. Prolonged suspense over important matters will hardly be conducive to the orderly conduct of public life in a democracy."

அப்போது இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் எங்கள் குற்றச்சாட்டு எல்லாம் மத்திய அரசின் பேரில்தான். ஏன் தாமதம் ஆகிறது? ஆறு மாதமாக ஏன் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு. இந்தமாதிரி இருக்கிற காரணத்தினால் தான் பலவிதமான கோளாறுகள், தகராறுகள் ஏற்படுகின்றன என்பதை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அன்றைக்கு நாங்கள் கொடுத்த குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் பேச துணிச்சல் இல்லை என்பது அல்ல. அவற்றை எல்லாம் சொல்ல வேண்டுமென்றால் 5 மணி வேண்டும். நீங்கள் கொடுக்கப் போவதில்லை. எவ்வப்போது சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அவ்வப்போது அவற்றை இந்தச் சபையில் சொல்லியிருக்கிறோம்.

கமிஷன் என்று போடப்பட்டால் மேலும் பல விவரங்களைத் தர முடியும் என்றுதான் சொன்னோம். ஆட்சிப் பொறுப்பில் இன்றைக்கு நம்மால் வைக்கப்பட்டவர்கள் சரியாக நடக்கிறார்களா என்று பார்த்துக்கொள்வதுதான் முக்கியமான விஷயம். அரசியல் சட்டம்பற்றி சில நிபுணர்கள் கூறியுள்ள கருத்துக்கள் சிலவற்றையும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மெஜாரிட்டி உறுப்பினர்களை வைத்துக்கொண்டிருக்கிற அரசு என்பதனால் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்பது முடியாது.

——"There are two basic tenets that cannot be written into any Constitution but which alone can keep a democracy meaningful. 1). Majority must exercise restraint and keep its own powers in



check. 2) There is no such thing as a fixed and permanent majority. The majority has often great things to answer for and a reponsibility which may far outweight its capacities for shaping the future. Nor are many necessarily right even in this democratic age when they are elected to power and do not arrive at by usurpation or inheritance.

ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் நாங்கள் மைனாரிட்டியாக இருக்கலாம், நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கலாம். நியாயம் வேண்டுமென்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. ஓட்டின் மூலம் சொல்லலாம் என்றால் கட்சிக்கட்டுப்பாடு காரணமாக ப்ரீ ஓட்டு அனுமதிக்கப்படுவதில்லை. மெஜாரிட்டியாக இருக்கிறவர்கள் எந்தத் தீர்மானத்தை வேண்டுமானாலும் நிறைவேற்றலாம், வேண்டாம் என்றால் நிராகரித்துவிடலாம். இந்த நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. மைனாரிடியாக இருக்கக் கூடியவர்கள் கருத்து தப்பாக இருக்கலாம். மைனாரிட்டியாக இருக்கிறவர்கள் சொல்வது எல்லாம் நியாயம் தான், அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் வாதிடத் தயாராய் இல்லை. நாங்கள் சட்டவிரோதமாக என்ன செய்திருக்கிறோம்? 1952-ம் ஆண்டு சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டோமேதவிர வேறு என்ன? அதற்கான உதவியை இந்த அரசு செய்வதற்குப் பதிலாக இன்றைக்கு திசை திருப்பக்கூடிய சட்டமாக இது கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால்தான், This is politically motivated, என்ற நிலை இருக்கிறது. இங்கே பல விஷயங்களை உங்கள் அனுமதி பேரில் எந்த அளவுக்கு வலியுறுத்த முடியுமோ அந்த அளவுக்கு வலியுறுத்துகிறோம். நமக்கு அரசியல் சட்டம் இருக்கிறது. இன்றைக்கு எந்த அதிகாரியாக இருந்தாலும் We are loyal to the Constitution. Constitution is supreme. அவர்கள் சட்டத்தை மீறும்போது, அரசியல் அமைப்புக்குவிரோதமாகப் பிரச்சாரம் செய்தால் நடவடிக்கை எடுக்கத்தான்வேண்டும். இன்றைக்கு நாடு தனியாகப் போகவேண்டுமென்று பிரச்சாரம் செய்கிறார்கள், என்றால் ஐ.ஜி. அப்படிப் பிரச்சாரம்செய்கிறவர்களைக் கைது செய்யத்தான்

வேண்டும். அரசியல்சட்டத்திற்கு உட்பட்டே இந்த அரசும், மாநில அரசுகளும் செயல்படுகின்றன. அப்படி யாராவது தவறான குற்றச்சாட்டுகளை வைத்து பிரச்சாரம் செய்தால் செய்தால் இப்போதேநடவடிக்கை எடுக்க முடியும்.

அவர் அப்படிச் சொல்லவேண்டுமென்றுதான், நான்தான் அதைக் குறிப்பிட்டு, அந்தப் பகுதியைச் சேர்த்தேன். அந்த ஒரு விஷயம் இருக்கிறது. நம்முடைய உறுப்பினர்கள் சொன்னார்கள், இதை 'எக்ஸ்டென்ட்' பண்ணினால் என்ன வரும், என்று. It may be carried to an absurd limit. ஒருவர் திருடிவிட்டார் என்ற உடனே, சப்-இன்ஸ்பெக்டர் பிராசிக்யூட் செய்கிறார். ஆறு மாதம் தண்டனை கிடைப்பதற்குப் பதிலாக அவர் விடுதலை ஆகிறார். உடனே அந்த மாஜிஸ்டிரேட் 'நீ மூன்று மாதம் ஜெயிலுக்குப் போய் வா' என்று சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்துச் சொல்லவேண்டும். இந்த சட்டத்திலே இப்படி ஒரு புரவிஷன் இருக்கிறது.

இராஜஸ்தானிலே,—அல்லது மகாராஷ்டிரத்திலே தவறுதலாக ஒரு காரியத்தை செய்துவிட்டால், அதே தன்மையிலே இங்கே செய்யவேண்டுமென்று இல்லை. இந்தச் சபையிலே நாங்கள் சொல்கிறோம். அதற்காக, குற்றச்சாட்டைத் தப்பாகச் சொன்னவர்களை தண்டிக்கக் கூடாது என்ற நிலையிலும் நான் இல்லை. அவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். அதைவிடப் பொறுப்பு இன்றைக்கு ஆட்சியிலே இருப்பவர்களுக்கு இருக்கிறது. சந்தானம் கமிட்டியினுடைய ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன், இன்னும் இரண்டு மூன்று விஷயங்கள் இருந்தாலும். சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டைப் பற்றி சொல்லும்போது, தப்பாக யார் தகவல் கொடுத்தாலும் அவர்களும் தண்டிக்கப்படவேண்டுமென்று சொல்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

This is what is stated in the report of the Santhanam Committee on the prevention of corruption :—

'It was represented to us that corruption has increased to such an extent that the people have lost faith in the integrity of Public Administration. We wish we could confidently and with-





out reservation assert that at the political level, Ministers, Legislators, party officials were free from this malady. The general impressions are unfair and exaggerated. But the very fact that such impressions are there, causes damage to the social fabric—the general belief about failure of integrity amongst Ministers is as damaging as actual failure . . .'
ஒருவர் குற்றம் செய்துவிட்டார் என்று அர்த்தம் இல்லை. குற்றம் செய்து விட்டார்கள் என்ற அளவுக்கு இன்றைக்கு மக்கள் மத்தியிலே ஒரு கருத்து பரவுகிறது என்று சொன்னால், பரவி இருக்கிறது என்று நாங்கள் வேண்டுமென்றே பரப்பவில்லை. பரவி இருக்கிறது என்று பொதுவாக, நாட்டைப் பொறுத்த அளவிலே சந்தானம் கமிட்டி சொல்கிறது. நாங்கள் அதற்கு உருவம் கொடுத்து, தமிழ்நாட்டிலே பரவி இருக்கிறது என்று சொல்கிறோம். அப்படி இருக்கும்போது இதற்காக நடவடிக்கை எடுக்காமல் போனால், நம்பிக்கை குறையத்தான் செய்யும். ஆகவே, இதை நேரடியாக சந்திப்பதற்குப் பதிலாக, இந்த மசோதாவைக் கொண்டு வந்து ஒரு திசை திருப்பும் மசோதாவாக இது இருக்கிற காரணத்தால், இந்த மசோதா தேவையில்லை, இந்த மசோதாவை வாபஸ் வாங்கவேண்டுமென்று கூறி, நான் முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்தில், பொதுஜனப் பிரதிநிதிகள், அமைச்சர் பெருமக்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர் போன்ற பொறுப்பிலுள்ள தலைவர்கள் தங்களுடைய பொது வாழ்க்கையில் தங்களுக்கு மக்களால் அளிக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி சேவை புரிகின்ற முயற்சியில் ஈடுபடுகிறபொழுது, பொது மக்களால் அல்லது பிறரால் குற்றம் சாட்டப்பட்டு, தாங்கள், தங்களுக்கு மக்களால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததற்கு, நியாயத்திற்குப் புறம்பான முறையில் தனக்கோ, அல்லது தன்னைச் சேர்ந்தவர்களுக்கோ, ஆதாயத்தை அல்லது லாபத்தை பெறுகின்ற வகையில் செயல்பட்டார்கள் என்று குற்றம் சாட்டுவதற்கு வகைதேடி அந்தக் குற்றம் சாட்டுகிறவர்கள் கமிஷன் முன்னால் நிரூபித்தால், குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு 7 வருட தண்டனையும், அவ்வாறு சாட்டப்படுகின்ற குற்றம் உண்மைக்குப் புறம்பானது என்று நிரூபிக்கப்பட்டால் அந்த

குற்றம் செய்தவர், பொய்க் குற்றத்திற்குக் காரணமாக இருந்து செயல்பட்டவர்கள் மீது 3 வருட தண்டனையும் என்ற சட்டத்தை இன்றைய தி.மு.க. அரசு, அவைமுன் வைத்து, அதற்கு சபையினுடைய அனுமதி கோரி இருக்கிறது.

இந்தச் சபையிலே எனக்கு முன்னால் பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஹாண்டே உட்பட மிகக் கடுமையாக, இந்தச் சட்டத்தை, ‘உங்களுக்கு தைரியம் இல்லாத காரணத்தால், உங்களிடம் துணிவு இல்லாத காரணத்தால், நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள், இது மக்களை ஏமாற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம்’ என்ற அளவுக்கு மிகக் கடுமையாக விமர்சனம் செய்து, ஒருமாதிரியாக மாண்புமிகு அங்கத்தினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் பொறுக்குக் குழுவில் தெரிவித்த எதிர்ப்பு உணர்ச்சியையும், உயர்நீதிமன்றத்தில், கருத்துக்கள் இவ்வித போக்குக்கு விரோதமாக தெரிவிக்கப்பட்டது என்ற விவரத்தை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த சட்டமானது revolutionary and reformatory measure’ என்றே நான் கருதுகிறேன். இது ஒரு புரட்சிகரமான, சீர்திருத்த கருத்தோடு கொண்டு வரப்பட்ட நல்ல சட்டம் என்று நான் முழுமனதோடு தெரிவித்து, இதை பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் புரட்சிகரமான திட்டம் என்று நான் கூறுவதற்குக் காரணம், இன்று அவையில் பல மாதங்களாக மிகக் கடுமையாக விமர்சிக்கப்பட்ட, ஊழல் புகார்களை பட்டியல் பட்டியலாகத் தயாரித்து, இங்கேயும், வெளியேயும், கவர்னரிடமும், இன்னும் பிரதமர், ஜனாதிபதி போன்றவர்களிடமும், மகஜர் பட்டியல்கள் அனுப்பப்பட்டு, அதன் மூலமாக, இந்த அரசை சில வாரத்தில், சில நாட்களில், அல்லது சில மாதங்களில் கவிழ்த்துவிடலாம், இதை நீக்கிவிட்டு, புதியவர்கள் ஆட்சியிலே உட்காரலாம் என்று திட்டம் தீட்டி பல அரசியல் தலைவர்கள் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டார்கள்.

அந்தப் பட்டியல்கள், இறுதியிலே நமது அமைச்சருக்கு வப்பப்பட்டு, அவருடைய பதிலும் அளிக்கப்பட்டு, இந்த மன்றத்திலே, அச்சுப் பிரதிகள் அத்தனை பேருக்கும் அளிக்கப்-



பட்டது என்பதை நாம் அறிவோம். முதலமைச்சர் அவர்களுடைய ஆணித்தரமான பதில், திட்டவட்டமாகக் குறிப்பிடப் பட்டிருப்பதையும், கூறப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் எந்த அளவுக்கு ஆதாரபூர்வமற்றவை, நியாயமற்றவை என்பதை நாம் அறிவோம். எனவே, இப்பொழுது பேசுகிறபொழுது கூட, காலையிலே மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது ஒரு கருத்து தெரிவித்து, உடனே முதலமைச்சர் அவர்கள், எங்கே கிடைத்தது அந்தக் கருத்து என்று கேட்டபொழுது, பேப்பரிலே வந்தது என்று உறுப்பினர் சொல்ல, எந்த பேப்பரிலே என்று முதல் அமைச்சர் திரும்பிக் கேட்டபொழுது, பேப்பரினுடைய பெயரை மறந்துவிட்டேன் என்று சொன்னார்.

இதை மாண்புமிகு அமைச்சர் மறுத்தால் நான் வலியுறுத்த வில்லையென்று சொன்னார். முதலில் பேப்பரில் வந்தது என்று சொல்லி, எந்த பேப்பர் என்றால், அந்த பேப்பரினுடைய பெயர் தெரியவில்லை, அதையும் அமைச்சர் அவர்கள் மறுத்தால் நான் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன் என்ற அளவுக்கு வலுவிழந்த, உண்மைக்குப் புறம்பான கருத்தை, ஒரு பெருத்தக் குற்றச் சாட்டாக, பொது வாழ்வில், பொறுப்புமிக்க பதவியில் உள்ளவர்கள் மீது கூறுவது சாதாரண காரியம் அல்ல.

இதை மிக வேதனையோடு சொல்லுகிறேன். பொதுவாக சட்ட மன்ற உறுப்பினர்கள் வீட்டிற்கு சென்று மனு கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். சிலரை சேர்த்து அனுப்பி, அவர்கள் வந்தார்கள். என்னுடைய வீட்டிற்கு வருவார்கள் என்று எதிர்பார்த்தேன், வரவில்லை. தோழமைக் கட்சியினர் வீட்டிற்கும் வருவார்கள் என்று சொன்னார்கள். அதிலும், ‘most corrupt’ என்று பயங்கரமான லஞ்ச ஊழலிலே மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற அளவில், ‘பொருட்’ செய்வது, கல்பமாக ஆக்குவது, அரசியலில், ஜனநாயகத்தில் சிறந்த பணியாகும் என்று யார் சொன்னாலும், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இன்ன இடத்தில் உங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, சட்டத்திற்குப் புறம்பாகச் செய்திருக்கிறீர்கள் என்று தெள்ளத் தெளிவாக யாரும் கூறவில்லை. முன்னால்கூட, அரசியல்

[திரு. கே. கந்தசாமி] [1973 ஏப்ரல் 5

பொறுப்பிலிருந்த பல தலைவர்கள் மீது குற்றச்சாட்டுகள் அள்ளி விசப்பட்டன. அரசுக்கு விரோதமாக, மக்களுக்கு விரோதமான குற்றங்கள், அமைச்சர் பொறுப்பிலே இருந்தவர்கள் செய்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். எங்களுடைய பெரும் தலைவர் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள்கூடச் சொன்னார்கள். அதை முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். திரும்பச் சொல்லத் தேவையில்லையென்று கருதுகிறேன்.

அப்படி அவர்கள் பல நூற்றுக்கணக்கான குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்குப் பதிலாக, ஒன்றை எடுத்து, இன்ன அமைச்சர், இன்ன தேதியில், இன்ன இடத்தில், பதவியைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார் என்று சொன்னால் அது பாராட்டுதலுக்குரியதாகும். அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் வாய்ப்பிருக்கும். பொதுமக்களுக்கும் தங்களுடைய நிலையைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். அதை விட்டுவிட்டு, எதை வேண்டுமானாலும் செய்வோம், கேட்டால் பேப்பரினுடைய பெயர் கூடத் தெரியாது, அங்கே பார்த்தேன் என்று சொல்லி, பார்த்தீர்களா உங்கள் மேல் நம்பிக்கை இல்லை என்று மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய தன்மையை மறந்து, பொறுப்பற்ற முறையில் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசினால் நமக்கும் நாளை, அந்த நிலையில் இருக்கக்கூடிய நமக்கு அந்நிலை வராதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசினார்கள். ஜனநாயகத்திலே அரசியல் பொறுப்பிலே இருப்பவர்கள், பதவிப் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு பதவி நிரந்தரமற்றது, அநித்யமானது, மாறும் தன்மையுடையது என்று ஒரு அறிஞர் சொன்னதாக வாசித்தார்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அந்த அளவிற்கு மாறும் தன்மையுடையது என்று அறிந்திருந்தால் அதிலே நம்பிக்கையுடையவர்களாக இருந்தால், இந்த அமைச்சரவை அவர்களுக்குச் சாதகமாக சட்டத்தைப் பயன் படுத்துகிறது என்று கருதினால் நீங்களும் வாருங்கள், இங்கே வந்ததற்குப் பிறகு குற்றச்சாட்டுகளைக் கொண்டுவாருங்கள், விசாரணை செய்யுங்களேன். என்ன தவறு நடந்திருக்கிறது? சொல்லுங்களேன். அப்படியில்லாமல் நீங்கள் நடந்துகொண்டால்



1973 ஏப்ரல் 5] [திரு. கே. கந்தசாமி]

குற்றச்சாட்டுகளை சுமத்தினால், கூரிய வாள் இருவர் மீதும் பாயும் என்ற வகையிலே இன்றைக்குக் குற்றச்சாட்டுகளைக் கூறுகிற நிலையில் இருந்தால் பொதுமக்கள் உங்களையும் நாளைக்கு லஞ்ச ஊழல் என்றுதான் சொல்வார்கள்.

ஏதோ குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு, பேப்பரிலே பார்த்தது என்று சொல்லிவிட்டு, எந்தப் பேப்பர் என்று கேட்டால் அது தெரியவில்லை என்று இன்றைக்குச் சொல்வீர்களானால் இதைப் போன்ற நிலைமை மீண்டும் உங்களுக்கே வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் முகமூடி கிழிந்து விடும் என்று சொன்னார்கள். யாருடைய முகமூடி எங்கே கிழிந்தது? உங்களுடைய முகமூடிதான் மக்களாலே கிழித் தெறியப்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்வதையே ஆதாரத்தோடு சொல்வதற்கு உங்களுக்கு நெஞ்சிலே உரம் இல்லை, நேர்மைத் திறமும் இல்லை. ஆகவே எல்லாவற்றையும் சொல்லிவிட்டு வாபஸ் வாங்கிக்கொண்டு போகிறீர்கள் என்றுதான் மக்கள் சொல்கிறார்கள். யார் எதைச் சொன்னாலும் கூடுவது மரபு. இதைப் பார்த்துவிட்டு மக்களுடைய ஆதரவு தங்களுக்குப் பொங்கி வழிவதாக கனவு காண்பது சரியல்ல.

குற்றச்சாட்டுக்களை நீங்கள் கொண்டுவரும்பொழுது மக்களுடைய முறைகள், குணநிசயங்கள், பண்புகள் இவைகளை வளர்ப்பதற்காக பாடுபடக்கூடிய முறையிலே அது இருக்க வேண்டுமேயொழிய, இருக்கின்ற சொஸைடியை சமுதாயத்தை டிமாரலைஸ் செய்வதற்காக, டிஜெனரேட் பண்ணுவதற்காக என்ற முறையிலே உங்களுடைய முயற்சிகளும் குற்றச் சாட்டுகளும் அரசியல் காரணமாக அமையுமானால் உண்மையிலேயே உங்களுக்கே அது பாதகமாக அமையும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

வெளி மாநில நீதிபதிகளைப்பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். நேரம் குறைந்து இருக்கிற காரணத்தினால் விரைவிலே முடித்து விடலாம் என்று நினைக்கிறேன். எனக்கு எல்லாம் சீனியராக இருக்கக்கூடிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், அவர்கள் அவர்கள் நிலையிலிருந்து தவறி விட்டார்களோ என்னவோ தெரியாது, ஊழல் என்று சித்தரிக்கக்

கூடிய அளவிற்கு நீதிபதிகளைப்பற்றியும், நீதி ஸ்தலங்களைப் பற்றியும் அவர்கள் சொல்லியது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜுடிஷியரி, எக்சிக்யூடிவ், லெஜிஸ்லேச்சர் என்ற முறையிலே நாம் செயல்படும்பொழுது Judiciary is most independent. It should function as an independent body என்ற முறையிலே நாம் அமைப்புக்களை வைத்து அவற்றிலே தலையிடக்கூடாது என்ற மரபுகளை ஒத்துக்கொண்டிருக்கின்ற பொழுது ஜுடிஷியரியை ஒரு அட்மினிஸ்டிரேடிவ் விங் போலக் கருதி சித்தரிப்பது சரியல்ல, ஜனநாயகத்தினுடைய மரபுகளைக் கெடுக்கிற முயற்சியாகும் அது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் 7 வருட தண்டனை என்று வைத்திருக்கிறோம். ஏன் குற்றத்தை நிரூபிக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் நியாயமான சட்டம், புரட்சிகரமான சட்டம், நல்ல சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கிய சட்டம், பொது வாழ்விலே ஈடுபட்டு உள்ளவர்கள் அத்தனை பேர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய சட்டம் என்பதைத் தெரிவித்து இதை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே விவாதித்துக்கொண்டிருக்கின்ற இந்த லஞ்ச ஊழல் சம்பந்தப்பட்ட மசோதாவைப் பற்றி நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு சாதுரியமான பேச்சை இங்கே நிகழ்த்தினார்கள். உண்மையாகவே நான் அவர்களுடைய சாதுரியத்தையும் இந்த மாமன்றத்திற்கு அளித்த உரையையும் வெகுவாகப் பாராட்டுகிறேன். ஆனால் சில நேரங்களிலே உண்மைக்கும் தோற்றத்திற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. அதுவும் இந்த மசோதாவைப் பார்த்தால் ஒரு பெரும் நல்ல காரியத்திற்காக, புனித காரியத்திற்காகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த மசோதாவிலே அப்படிப்பட்ட அம்சங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால் அதற்கு நேர் எதிர்மறை விளைவுகள்தான் இருக்கின்றன என்பதை நான் இந்த மசோதாவைப் பார்த்த



வரையிலே தெரிவித்துக்கொள்கிறேன், இதற்கு ஏதோ அரசியல் வர்ணம் பூசுகிறேன் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கருதத் தேவையில்லை.

இப்படிப்பட்ட ஆலோசனைகளையெல்லாம் கூறி தவறான திசை காட்டிய சட்ட அமைச்சர், முதலமைச்சர் அவர்களுக்கு எல்லாம் இந்த நிலைமையை ஏற்படுத்திவிட்டார்கள் அவர்களுடைய சட்ட நிபுணர்களும் மற்றவர்களும் என்றுநான் கருதிக்கொள்ள வேண்டும். முதலமைச்சர், அமைச்சர்கள், பொதுத் துறையிலே உள்ளவர்கள்மீது முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் இருந்தால் அவற்றைப்பற்றி விசாரிக்க, இது ஒரு பெரிய நல்ல நோக்கம், புனிதமான நோக்கம். ஒரு அரசுக்கு மிக முக்கியமான பொறுப்பு முறையான நிர்வாகம் இருக்கச் செய்யவேண்டும், ஒழுங்கீனங் களற்ற தூய்மையான நிர்வாகத்தைக் கொடுக்கவேண்டும் என்பதிலே யாருக்கும் மாறான அபிப்பிராயம் இருக்கமுடியாது.

அப்படி மாறான அபிப்பிராயங்கள் கொண்டிருந்த அரசாங்கங்கள் அழிந்து இருக்கின்றன, வீழ்ந்து இருக்கின்றன; லஞ்ச ஊழல்கள் மிகுந்த அரசாங்கங்கள், ஒழுங்கீனமான அரசாங்கங்கள் அப்படி அழிந்திருப்பதற்கு எவ்வளவோ சாட்சியங்கள் இருக்கின்றன. பிரஞ்சு நாட்டிலே இருந்த பெரிய அரசாங்கம் வீழ்வதற்கு, பிரஞ்சு புரட்சி ஏற்படுவதற்கு பிரபுக்களுடைய லஞ்ச ஊழல்கள்தான் காரணம். ரஷ்ய நாட்டினுடைய ஜார் வம்சம் அழிந்ததற்குக் காரணம் அங்கே அதிகாரிகள், அமைச்சர்கள் செய்த லஞ்ச ஊழல்கள்தான் காரணம். சியாங்கே ஷேக் அரசாங்கம் போனதற்குக் காரணம் லஞ்ச ஊழல்தான். பொது வாழ்க்கையிலே லஞ்ச ஊழல்கள் போக்கப்படவேண்டும் என்பதற்கு நல்ல நிர்வாக நெறிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் அதனுடைய லட்சியம். A good standard in public dealings என்பதுதான் பெரிய அடிப்படையான ஒரு லட்சியம். லஞ்ச ஊழல்களாலே யாரோ சில பேர்கள் லட்சாதிபதிகளாகி, குறுக்கு வழியிலே கோடீஸ்வரர்களாகி விட்டார்கள் என்ற பொருளாதாரப் பிரச்னை இங்கே பெரிய பிரச்னை அல்ல. ஜனநாயகத்தில் இப்படிப்பட்ட காரியங்கள்

இல்லாத முறையிலே ஆரோக்கியமான வழிவகைகளைக் கண்டு பொது வாழ்க்கையிலே கொண்டுவரவேண்டுமென்பதுதான் அடிப்படையான நோக்கம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

இந்தப் புனித நோக்கத்திற்கு நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருப்பது கொஞ்சமாவது உதவி செய்கிறதா என்று பார்த்தால் இல்லை. இல்லை என்றுகூடச் சொல்வதை விட அதற்கு நேர்மாறான எதிர்மறைவிளைவுகளைத்தான் இது ஏற்படுத்தியிருக்கிறது என்றுதான் சொல்வேன். அவர்கள் இன்றைக்கு இருக்கிற கமிஷன் ஆப் என்குயரிஸ் ஆக்ட் போதுமானதல்ல, இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டங்கள் எல்லாம் போதுமானவையல்ல, இவற்றையெல்லாம் ஒழிக்கமுடியவில்லை என்று சொன்னார்கள். மற்றக் கட்சிக்காரர்கள் என்ன கருது கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய கருத்து என்னவென்றால் போதுமானது அல்ல என்பதுதான். போதுமான தல்ல என்று சொல்லிக்கொண்டே நீங்கள் இப்பொழுது கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் போதுமானதாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் மறுக்கவேண்டும். லஞ்சம் வாங்குபவனைப் பாதுகாப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவந்திருக் கிறார்கள். எப்படி டெனன்ட்ஸ் புரட்டக்ஷன் ஆக்ட் என்ற சட்டம் மாதிரி லஞ்சம் வாங்குபவனைப் பாதுகாப்பதற்காக, அவர்களுக்கு அபயாலயம் என்ற முறையிலேதான் இந்தச் சட்டம் அமைந் திருக்கிறது. இந்த அவை அதை அவ்வளவு பொறுமையாக அனுமதிக்கவில்லை. இரண்டு விதமான வழிமுறைகள், பொதுவாகவே இப்படித்தான் இருக்கிறது. நாட்டினுடைய நிலையே அப்படி. ஜெனரல் ஆஸ்பத்திரியிலே யாரோ ஒரு பியூன் நோயாளியிடம் ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு உள்ளே அனுமதித்தான் என்பதற்காக 6 மாதக் கடுங்காவல் தண்டனை அவனுக்கு. அதையே பெரிய அதிகாரிகள் செய்தால், லஞ்சம் பெற்றால், அவர்கள் மேல் வழக்கே கிடையாது.

இப்படிப்பட்ட சமுதாய அமைப்பு இருக்கிறது. உண்மை யிலேயே குற்றம் சாட்டுகிறவனுக்கு ஒருமாதிரி நீதியையும், லஞ்சம் வாங்கினவனுக்கு, குற்றம் சாட்டப்பட்டவனுக்கு ஒரு மாதிரி நீதியையும்தான் இந்தச் சட்டங்களிடையே காண



முடிகிறது. அவர்கள் கேட்டார்கள், எனக்கு சட்டமும் தெரியாது, நான் வக்கீலும் அல்ல. என்னை உபத்திரவம் செய்ய வேண்டாம்.

திரு. கணபதி அவர்கள் என்னென்னமோ செக்ஷன்களை சொன்னார்கள். நேற்று ஒரு நம்பர் கொடுக்கிறார்கள், இன்றைக்கு அது 'ரீ-நம்பர்' ஆகிறது. எது வேண்டுமானாலும் இருக்கட்டும். ஃபால்ஸ், ஃப்ரிவெலஸ், வெக்சேஷியஸ் என்று இருந்தால் வழக்கு போடக்கூடாது என்று இருக்கிறது. பாராட்டுகிறேன். வைல்டு அலிகேஷன்ஸ், பேஸ்லெஸ் அலிகேஷன்ஸ், இர்ரெஸ்பான்சிபில் அலிகேஷன்ஸ் பண்ணுகிறார்கள் என்றால் கிடையாது என்று இருக்கிறது. ஏழு வருஷ காலம் முதலமைச்சருக்கு தண்டனை கொடுக்கிறதற்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த முதலமைச்சருக்கும் 7 வருஷ கால தண்டனை கிடைக்கவேண்டு மென்று விரும்பவில்லை. முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்தவர்கள் யாரும் விரும்பமாட்டார்கள்.

கவர்ச்சிகரமாக காணப்படுகிறமாதிரி இருக்கிறதே தவிர வேறு எதுவுமில்லை. ஒருவர் ஃபால்ஸ், ஃப்ரிவெலஸ், வெக்சேஷியஸ் ஆக வழக்கு தொடுத்தால்—ஃபால்ஸ் என்று சொன்னால் பிரைமரிலி ரெஸ்பான்ஸிபில் என்று கிரிமினல் புரொசீஜர் கோடில் இருக்கிறது. ஃப்ரிவெல்ஸ் என்றால் அற்பத்தனமானது, வெக்சேஷியஸ் என்றால் இழுத்தடிப்பது என்பதா, எனக்கு அதற்குத் தமிழ் வார்த்தை சரியாகத் தெரியவில்லை. சட்ட நிபுணர்கள், காரியதரிசிகள் சொல்ல வேண்டும். ஃபால்ஸ்-க்குப் பக்கத்தில் 'கமா' போடுகிறீர்களே, அதற்கு பிரைமரிலி ரெஸ்பான்சிபில் என்று கிரிமினல் புரொசீஜர் கோடில் இருக்கிறது. அற்பத்தனம் என்று சொன்னால் கூட நீங்கள் போடுகிற நீதிபதி, அந்த நீதிபதி பார்த்து கஜானாவிற்குக் கூட அல்ல, அந்த அபராதத் தொகையை குற்றம் சாட்டப்பட்டவருக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லலாம் என்று இருக்கிறது.

எதிரேயிருக்கிற மந்திரிகளுக்கு என்று நான் சொல்லவில்லை. மேயர் என்று வைத்துக்கொள்ளுங்கள், ஒருவர் மேயர் மீது சொல்லிவிடுகிறார். அந்த மேயருக்கு அபராதம் கொடுக்கவேண்டு மென்பதற்கு வழி முறை இல்லையே! 250-வது செக்ஷன் படி

1,000 ரூபாய் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அதனாலே இதை வைத்து மிரட்டுவதற்காக, சொத்தைப் பறிமுதல் செய்வதற்காக இது இருக்கிறது. நியாயமானவர்கள், யோக்கியமானவர்கள், பொது வாழ்க்கையில் அக்கறை இருப்பவர்கள் எந்த வழக்கையும் கொண்டுவர முடியாதமாதிரியாக இந்த செக்ஷன் இருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டினார்கள். வேறு ஒன்றுமில்லை.

ஃபால்ஸ் என்பதற்கு, ஃபால்ஸ் என்பது எய்தர் ஃப்ரிவெலஸ் ஆர் வெக்சேஷியஸ் என்பது ஆகாது. இதை அவர் பேசியதிலிருந்து தெரிந்து கொண்டு சொல்கிறேன். க்ரிமினல் புரொசீஜரில் கூட அப்படி இல்லை. அவ்வளவு சுதந்திரமாக சட்ட நிபுணர்கள் 'கமா' எடுப்பதில், '½ புள்ளி' போடுவதில் சாமர்த்தியம் காட்டுகிறார்கள். இதுதான் அபாயகரமான செக்ஷன். இந்த நாட்டில் உண்மையில் தவறு நடக்கிறது, ஊழல் நடைபெறுகிறது என்றால் ஒருவர் பார்த்துச் சொன்னால் அந்த நீதிபதி இது ஃப்ரிவெலஸ், வெக்சேஷியஸ் என்று தீர்ப்பு சொன்னால் சொத்துக்களைப் பறிமுதல் செய்துவிடலாம் என்று இருக்கிறதே, இந்த மாதிரி இருந்தால் வழக்கு வருமா ?

இது பதவியில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு என்று சொன்னால் என்ன தவறு என்று கேட்கிறேன். அபயாலயம் என்று சொன்னால் என்ன தவறு என்று கேட்கிறேன். ஆக, அதே மாதிரியாகத்தான் 3 ஆண்டு காலத் தண்டனை என்று போட்டிருக்கிறார்கள். ஃப்ரிவெலஸ் ஆக இருந்தால் 3 ஆண்டுத் தண்டனை. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் மீது குற்றம் இருக்கிறதென்றால் 18-வது செக்ஷனில் என்ன சொல்கிறார்கள், முதலமைச்சராக இருந்தாலும் 7 ஆண்டு தண்டனை கொடுக்கலாம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே ஒருவர் 10 லட்சம் ரூபாய் ஊழலில் சம்பாதித்தார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு நிரூபிக்கப்படாவிட்டால், அவர் மேலும் 5 லட்சம் சம்பாதிக்கட்டும் என்று சொல்வதற்கு 12-வது செக்ஷன், பழைய 11-வது செக்ஷன், புதிய 12-வது செக்ஷன் வழி செய்கிறது. அதே மாதிரியாகத்தான் லிமிடேஷன் பற்றிச் சொல்லவேண்டும். வழக்குரைஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். லா ஆஃப் லிமிடேஷன் என்று சொன்னால், ஒருவர் ஏதோ குற்றம் செய்கிறார், அல்லது தவறு நடந்து விடுகிறது. அல்லது ஒரு இரண்டு லட்ச ரூபாய் முறை



கேடாக ஆக்கி விட்டார் என்றால், அதை ஒரு வருஷத்திற்குள்ளே சொல்லவேண்டும். குற்றம் நடந்ததிலிருந்து 12 மாதத்திற்குள் சொல்லவேண்டும்.

குற்றம் அல்லது முறைகேடு நடந்து ஒரு வருஷத்திற்குள்ளே சொல்லவேண்டுமென்றால் எங்கேயிருக்கிறது அப்படி, எந்த ஜூரிஸ்ப்ரூடன்ஸில் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது? ஒருவன் கொலை செய்கிறான் என்று சொன்னால், அவனை ஒரு வருஷத்திற்குள் கண்டுபிடிக்கவில்லையென்றால் உடனே அவனை விட்டு விடவேண்டுமென்பது போல் அல்லவா இந்த 8-வது செக்ஷன் இருக்கிறது. லஞ்சத்தை ஒழிக்கப் போகிறோம், தூய்மையைப் பாதுகாக்கப் போகிறோம், புனிதத்தன்மையை பாதுகாக்கப் போகிறோம் என்று காண்பித்த அவர்கள் இதற்கு சொல்லிக் காட்டட்டும்.

**திரு. என். கணபதி:** லா ஆஃப் லிமிடேஷன் பற்றிச் சொன்னால் நம்முடைய கிரிமினல் சட்டத்தைப் பற்றி ஆராய்வதற்கு சட்டக் கமிஷன் போட்டார்கள். அதற்குத் தலைவராக திரு. கே. வி. கே. சுந்தரம் இருந்து சென்ற ஆண்டு அதன் அறிக்கையை இந்திய அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். குற்றங்களின் கால வரையறையை ஃபிக்ஸ் செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். மத்திய அரசு விரைவிலே லிமிடேஷன் செய்ய இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, லா ஆஃப் லிமிடேஷன் பற்றி இன்னொரு கருத்து இருக்கிறது. லா ஆஃப் லிமிடேஷன் என்று சொல்லி ஒரு சாராருக்கு கொடுத்து இன்னொரு சாராருக்குப் பயன்படுத்தவில்லையென்று சொன்னால் ஒருவருக்கொருவர் டிஃபரன்ஸ் காட்டுவதுமாதிரி இருக்கிறது. இது ஆர்டிகல் 14-ன் கீழ் அல்ட்ரா வயர்ஸ் என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. It is unconstitutional, it will be struct down as contravening Article 14.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டத்தில் இன்னொருவருக்கு லிமிடேஷன் இல்லை என்று சொல்லப்படவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எத்தனை ஆண்டாக இருந்தாலும், எந்தத் துறையாக இருந்தாலும், புலனாய்வு செய்து நடவடிக்கை எடுக்கலாம். ஒருவருக்கு லிமிடேஷன் இல்லாமல், இன்னொருவருக்கு லிமிடேஷன் போட்டு விட்டால் அது வேறுவகையாக டிஸ்க்ரிமினேஷன் அண்டர் ஆர்டிகில் 14 என்று வந்து விடும். It may be struck down. For the information of the Lawyer Member and for the information of the Lawyer Minister. I say this.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திரு. மதியழகன் அவர்கள் சொல்கிறார்கள். இதே லிமிடேஷன் ஃபார் கிரைம்ஸ் என்பது மராட்டியத்திலும், இராஜஸ்தானிலும் போட்ட சட்டங்களில் இந்தக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**Thiru R. PONNAPPA NADAR:** Normally person action dies with the death of the person. That is the fundamental principle so far as criminal law is concerned. Personal action will die with the death of the person so far as crimes are concerned. Crimes are wrongs against society. So there can be no bar of limitation so far as crimes are concerned. Mr. Kenny has said as follows: " Crimes are wrongs whose sanction is *bona fide* and in no way remissible by private persons but remissible by Crown if remissible by Crown at all ".

So, there can be no limitation so far as crimes are concerned.

**திரு. என். கணபதி:** நான் இந்திய அரசாங்கத்தின் சட்டக் கமிஷன் லிமிடேஷன் செய்திருக்கிறது என்று தான் சொல்ல வந்தேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நீங்கள் சொன்னாலும் சரி, மற்றவர்கள் சொன்னாலும் சரி, எனக்குத் தெரிந்த ஜூரிஸ்ப்ருடன்ஸ், There is no law of limitation for crimes என்று இருக்கிறது. ஒருவன் கொலை செய்கிறான் என்றால், 73-ல் கொலை செய்கிறான் என்றால், 75-க்கு மேல் அவன் மீது கொலைக் குற்றத்தின் மேல் வழக்கு தொடரக் கூடாது என்பது போல 18-வது விதி இருக்கிறது. இந்த நோக்கம் நிறைவேறுகிறதா என்பதற்காகத் தான் இதைச் சொன்னேன். ஆனால் குற்றம் சாட்டுகிறவர்களுக்கு



அபராதம் போடலாம், சொத்துக்களை பறிமுதல் செய்யலாம் என்று இருக்கிறது. நீதிபதி லஞ்சம் வாங்கியவன் மேல் குற்றம் இல்லை என்று சொன்னால் இல்லை என்று 18-வது விதி கூறுகிறது. இருக்கிறதென்றால், லஞ்ச ஊழல் செய்திருக்கிறார் என்றால் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றிருக்கிறது. எப்படி நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள், யார் எடுக்கப் போகிறார்கள். வழக்கு போட வேண்டுமென்றிருக்கிறது. shall be prosecuted என்று இருக்கிறது. ஆனால் பிராசிக்யூட் பண்ணுகிறாரா இல்லையா என்று அதைக் கேட்பது யார். அந்த கமிஷனர் கேட்க முடியுமா? முதலமைச்சர் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சாட்டப்பட்டார் என்று சொன்னால், அது நிரூபிக்கப்பட்டால் அவரே அவர் மீது வழக்கு போட்டுக் கொள்வாரா என்பதைப் பார்க்கவேண்டும். நான் ஒன்றும் சட்ட நிபுணன் அல்ல. 18-வது விதியைப் பற்றி வக்கீல்கள் எல்லாம் கொஞ்சம் பார்த்துச் சொல்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறார்கள். நம்முடைய சட்ட அமைச்சர் ரொம்பவும் சாதாரணமாகச் சொன்னார்கள். நாங்கள் அவதூறு சொன்னால் யாரையும் விடுவதாக இல்லை என்றார்கள்.

அவர்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டியது தான். அவதூறுகள், அநியாயமான பழிகள் யார் சொன்னாலும் தவறுதான். அதற்கு பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு அதிகமாகப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியதுதான். அதற்காக சந்தானத்தை இணைத்துக் கொண்டார்கள். சந்தானம் கமிட்டியினர் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அமைச்சர்கள் மீது தவறாகச் சொன்னால் அவதூறு வழக்கைத் தொடரலாம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று ரொம்ப சாமர்த்தியமாக சட்ட அமைச்சர் அவர்கள் படித்துக் காண்பித்தார்கள். அதே சந்தானம் கமிட்டி அதை மட்டும் சொல்லவில்லை. அதற்கு முன்னாடியே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூட ஒன்றை எடுத்துச் சொன்னார்கள்.

The Santhanam Committee felt that the very fact that such an impression had come to be created in the Public mind demanded prompt action to improve the image of the public mind.

என்று சொல்லிவிட்டு இன்னொன்றையும் அவர்கள் கூறியிருக்

கிறார்கள். இதை எல்லாம் ரொம்பத் திறமையாக நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் மறைத்து விட்டார்கள் என்று சொல்ல மாட்டேன், அவர்களுடைய வழக்கப்படி சொன்னார்கள்.

அதற்கு முன்னாலே என்ன சொல்லியிருக்கிறார்கள்

The Committee suggested that whenever ten Members of Parliament or legislature made written complaint against any incumbent of ministerial office and forwarded it to the Prime Minister or concerned Chief Minister through Presiding Officer of Parliament or Legislature, the allegation should be immediately referred to a Committee for investigation என்று சொல்லிவிட்டு இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். இரண்டுவகையாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

The Prime Minister or Chief Minister should be free to refer the matter to Enquiry Committee. The Ministers concerned should take action to sue the complainants for libel. In cases where the Ministers are unwilling to take legal action, the Prime Minister or Chief Minister of State, as the case may be, should take it as proof of guilt and keep them out of office என்று கூறியிருக்கிறார்கள். சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டிலிருந்துதான் நான் படிக்கிறேன்.

அமைச்சர்கள் மீது தவறு சொன்னால் வழக்குப் போடலாம் என்று இருப்பதைப் பற்றி மட்டும் சொன்னார்கள். அமைச்சர் மீது இப்படிப் புகார் வந்தால் விசாரணைக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னதைச் சொல்லவில்லை. அவருக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டு வாதிக்கின்ற முறையில் வாதித்து விட்டார்கள்.

ஆனால் இங்கு இருக்கிற விவகாரம் என்ன? கோபம், கொந்தளிப்பு எல்லாம் இருந்தது. நான் மிகுந்த, ஆழ்ந்த கவலையுடன் இந்த மசோதாவை அணுகுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மசோதாவின் மூலமாக 'சூழ்நிலை, சூழ்நிலை' என்று சொன்னார்கள். மராட்டிய மாநிலத்திலே இருக்கிறது, ராஜஸ்தான் மாநிலத்திலே இருக்கிறது என்றெல்லாம்





சொன்னார்கள். மராட்டிய மாநிலத்திலும், ராஜஸ்தான் மாநிலத்திலும், இந்தமாதிரி நிலைமை வந்ததா? சூழ்நிலை சூழ்நிலை என்றார்கள்.

இங்கு ஒரு நிலை வந்துவிட்டது. அதற்குப் பிறகு ஒவ்வொரு கட்டமாக மாறுகிறீர்கள். நான் குறையாகக் கூடச் சொல்லவில்லை. அந்த நிலை இருக்க வேண்டுமென்று ஆசைப்படவில்லை. இந்த நாட்டில் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சிகள், பொன்னப்ப நாடாரில் ஆரம்பித்து,—சில பேரை நடுவில் விட்டு விடுவோம்,—எல்லாக்கட்சிகளும் இந்த அமைச்சரவை மீது குற்றம் சாட்டுகிறார்கள். அவை எல்லாம் சரியானதுதான் என்று கூட ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. அவை இல்லாமல் இருக்குமானால் என்னைப் போல் மகிழ்பவன் யாரும் இருக்க மாட்டார்கள் என்பது முதலமைச்சருக்குத் தெரியும்.

சரியாகவோ, தவறாகவோ குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டு விட்டன. பொறுப்பானவர்கள், அரசியல் வாழ்வில் இருக்கக் கூடிய தலைவர்கள் குற்றச்சாட்டுகளைச் சாட்டியிருக்கிறார்கள். எங்கள் கட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர் அவர்களும், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும் மட்டுந்தான் குற்றச்சாட்டுக்கள் சாட்டினார்களா? எல்லாக் கட்சிக்காரர்களும், ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சி, சுதந்திராக் கட்சி எல்லோரும் சேர்ந்துதான் குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள். விசாரணைக் குழு நியமியுங்கள் என்று சொன்னால் அது "பாக்ட் பைண்டிங் கமிட்டி"தான் என்று மாதவன் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். உங்களை ஜெயிலில் போடப் போவதில்லை, வீட்டுக்கு அனுப்பப் போவதில்லை, அபராதத் தொகை போடப் போவதில்லை. ஒருசில விவரங்கள், அதற்கு ஒரு கமிஷன். கினேவ் ஹாஸ்டல் சம்பவத்திற்கு கமிஷன் போடவில்லையா? பாளையங் கோட்டை சம்பவத்திற்குப் போடவில்லையா? அந்தமாதிரி கமிஷன் போடவேண்டுமென்று சொன்னதற்கு நீங்கள் எப்படிப் பட்ட கட்டங்களை எல்லாம் எடுத்தீர்கள்? மடியில் கனம் இல்லை என்றால் வழியில் என்ன பயம்? இதை விட ஒரு நல்ல வாய்ப்பு முதலமைச்சருக்கு வருமா? இது பாக்ட் பைண்டிங் கமிட்டிதான்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 ஏப்ரல் 5

அதைப் பற்றி முதலில் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு இவர்கள் யார் எங்கள் மீது விசாரணைக் கமிஷன் போடுவதற்கு? மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா?

குற்றவாளிக் கூண்டில் இருக்கிறோம் என்றால் குற்றவாளி அல்ல என்று நிரூபிக்க வேண்டியது நான் கடமையே தவிர, அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறதா என்று கேட்பதெல்லாம் வேறு கேள்வி. அதிகாரம் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். திரு. தங்கமணி அவர்கள் இருக்கிறது என்று வாதாடுகிறார்கள். மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இல்லாமல் இருந்தால் ரொம்ப சந்தோஷம் உங்களுக்கே அந்த அதிகாரம் இருக்கட்டும், நீங்களே கூட கமிஷன் போட்டிருக்கலாம். செய்ய வேண்டிய கடமையை விட்டு விட்டு இங்கிலாந்து நாட்டு ராஜாக்கள் உள்நாட்டில் குழப்பம் ஏற்பட்டு விட்டால் மகுடத்திற்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து பிரஞ்சு நாட்டின் மீது படையெடுக்கிறோம், பாசறைக்கு வாருங்கள், கொடி மரத்தில் போர்க் கொடியை ஏற்றுங்கள் என்று அழைப்பது போல் இந்த அரசு நடக்கிறது.

நாட்டு மக்களுக்குச் சமாதானம் சொல்லாமல் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். டெல்லிப் பட்டணத்திற்குச் சென்று குற்றச் சாட்டுக்களைக் கொடுத்த திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் சட்டம் தெரியாதவர். அன்றைக்கே மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னீர்களா? நெடுநாட்கள் கழித்து இவர்களுக்கு எங்கே அதிகாரம் இருக்கிறது, எப்படி இவர்கள் "கமிஷன் போட முடியும்?" என்று கேட்டார்கள். இவர்களுக்கு எங்கே அதிகாரம் இருக்கிறது என்று கேட்டவர்கள், கடைசியில் கீழ்பாக்கத்திற்கு பதில் அனுப்புகிறார்கள். "மத்திய அரசுக்கு அதிகாரம் கிடையாது, மாநில அரசு மத்திய அரசு உறவு வேறு, இந்த விவகாரத்தில் நாங்கள் பதில் அனுப்ப மாட்டோம்" என்ற தாக்கீதையல்லவா முதலமைச்சர் அவர்கள் அனுப்பியிருக்க வேண்டும்.

இது ஒரு கட்டம். அடுத்த கட்டம்—பாருங்கள், பாருங்கள்—ஏழு ஆண்டுகள் தண்டனை—முதலமைச்சராக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும் யாராக இருந்தாலும் விட மாட்டோம் என்று வாய்ப்பூட்டுப் போடுவதற்காக, சுதந்திரத்தை அழிப்ப



1973 ஏப்ரல் 5] [திரு. கே. ஏ. மதியழகன்]

தற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். லஞ்சத்தை ஒழிக்க வகை செய்வதாகவே இருக்கிறது, இது? அதனுடைய மூன்றாவது கட்டமாகத்தான் இப்படி ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதாவின் நோக்கத்தை நான் சொல்ல வேண்டுமென்றால்—நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் ரொம்பப் பெரிய நிபுணர் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்—உங்களுடைய அனுமதியோடு இங்கிலாந்து நாட்டுப் பிரதமர் எட்வர்டு ஹீத் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் கொள்கையைப் பற்றி ரொம்ப அழகாகச் சொல்லியிருப்பதை என்னுடைய மொழியிலே சொல்லுவதை விட—என் மீதுதான் கோபம்—யாராவது நான்கு பெரிய மனிதர்கள் வார்த்தையில் சொன்னால் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். நான் வைத்திருப்பது கன்சர்வேட்டிவ் கட்சித் தேர்தல் அறிக்கை. நான் லண்டன் நகரத்திற்குச் சென்றிருந்தபோது அவர்களுடைய அலுவலகத்தில் கொடுத்தார்கள். அந்த அறிக்கையில் பிரதமர் முதல் பக்கத்தில் சொல்லியிருக்கிறார். இந்த அரசாங்கம் அதை அப்படியே எடுத்துக் கொள்ளலாம்.

During the last six years we have suffered not only from bad policies, but from a cheap and trivial style of Government. Decisions have been dictated simply by the desire to catch tomorrow 's headlines. The short-term gain has counted for everything; the long-term objective has gone out of the window. Every device has been used to gain immediate publicity and Government by gimmick has become the order of the day. Decisions lightly entered into have been as lightly abandoned.

What is more, its decision should be aimed at the long-term. The easy answer and the quick trick may pay immediate dividends in terms of publicity, but in the end it is the national interest which suffers. We have seen that too often in the recent past என்று எட்வர்டு ஹீத் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதே நிலைதான் இங்கும். பத்திரிகைகளில் நாளைக்கு எப்படி தலைப்பு போட வேண்டும் என்ற முறையில் விளம்பரச் சாவடியாகத்தான் இந்த அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்துகிறார்களே தவிர, நாலரைக் கோடித் தமிழ் மக்களுக்கு என்ன பதில்

சொல்லுகிறார்கள் என்று கவனித்தால் அந்த நோக்கத்திதான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை.

இந்த மசோதாவின் மூலம் பெரிய அடக்குமுறைச் சட்டத்தை, கறுப்புச் சட்டத்தை இங்கு ஏவுகிறீர்கள். 177 பேர்கள் இருக்கிறார்கள் என்பதால் இதைச் சட்டமாக்கிவிடலாம். ஆனால் நான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், ரௌலட் ஆக்டில் தொடங்கியதுதான் ஜாலியன்வாலாபாக் படுகொலை. பஞ்சாபில் மிகப் பயங்கரமான ரத்தத் தடாகத்தை அது சிருஷ்டித்தது. (சிரிப்பு). சிரிக்கிறார்கள். இப்படித்தான் டயர் சிரித்துக் கொண்டிருந்தான். இப்படித்தான் ஜார் மன்னர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். இப்படித்தான் ப்ரெஞ்ச் நாட்டு பூபதிகள் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சட்டத்தின் மூலம் மூன்று ஆண்டுகள் தண்டனை அல்லது அவர்கள் சொத்துக்களை பறிமுதல் செய்துவிடலாம். எந்த நியாய உணர்வு கொண்டவர்கள் மத்தியிலும் இது வருவதில்லை. துணிந்தவர்கள், தைரியமானவர்கள் மனித குலத்தில் இருப்பதால் சொல்கிறேன், இந்தச் சட்டம் சட்ட ஏட்டிலிருந்து தூக்கி எறியப்படும் என்று நான் சொல்ல மாட்டேன், இந்தச் சட்டத்தினால் உங்கள் அரசுக்கு பெரிய அபகீர்த்தி என்று சொல்லமாட்டேன், இது இந்த அரசுக்கு கல்லறையாக அமைய இருக்கிறது என்று தெளிவாகச் சொல்லிக்கொள்வேன். (சிரிப்பு.)

நீங்கள் சிரிக்கலாம். இன்னும் பலமாகச் சிரியுங்கள். இந்தச் சட்டத்தின் மூலம் காப்பாற்றலாம் என்று நினைக்கிறார்கள். மாநில உரிமைகள் பற்றியெல்லாம் பேசுகிறார்கள். இவர்களுக்கு நாங்கள் குறைந்தவர்கள் அல்ல. ஆனால் லஞ்சம் செய்கிறவர்கள், ஊழல் காரர்களை, முறைகேடானவர்களைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படுகிற இந்த முயற்சிகள் மூலம் நிச்சயமாகச் சொல்கிறேன், அவர்கள் தூக்கி எறியப்படுவார்கள் என்பது கூட அல்ல; இதே சட்டத்தை இதே மன்றம் மாற்றப்போகிறது. இதே சட்டத்தை மக்கள் பிரதிநிதிகள் மாற்றப் போகிறார்கள்.



இதன் மூலம் ஒரு முகமூடி போடலாம், ஒரு அபயாலயத்தை சிருஷ்டிக்கலாம் என்று கருதுவது, நாலரைக் கோடி மக்கள் அதற்குத் தயாராகயில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லி இந்த மசோதாவை வாபஸ் பெற வேண்டும்; இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் மூலம் ஏற்கெனவே இழந்துவிட்ட செல்வாக்கை இன்னும் மேலும் இழந்துவிடும் நிலைமைக்கு ஆளாகக் கூடாது என்று தெளிவாகத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : How long are we going to sit? So that, I can adjust myself.

MR. DEPUTY SPEAKER : Normally, the hon. Member, Thiru R. Ponnappa Nadar is very concise in his speech.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I oppose the Bill. Not only I oppose this Bill, but I would like to characterise this Bill as " black piece of legislation ". I feel that it should not find a place in the Statutes of Tamil Nadu, because it is a retrograde step and also a retrograde legislation. Why I call this legislation as retrograde legislation is this. I would like to give the points in seriatim. The first point is this. This legislation is something like a unwanted baby. In this legislation, sufficient safeguards have not been given for those who want to bring the offenders to book.

So far as this Bill is concerned, there is no necessity for this at all. I would say that it contravenes Article 254 of the Constitution. There are laws already made by the Indian Parliament as well as by the Central Government which govern all the States. There is inconsistency between the present law and the laws that are prevailing in the Centre.

So far as this legislation is concerned, it is inconsistent. It is because there is already the Penal Code and Criminal Law. There is also the Commission of Inquiry Act 1952.

[Thiru R. Ponnappa Nadar] *[1973 ஏப்ரல் 5*

All these laws give us enormous powers to deal with the cases of corruption. Now a question will arise as to whether it could be used against a Minister. That question we have to consider. Again I would say that it is contrary to Article 254 of the Constitution of India. In this connection, I may kindly be permitted to refer to Article 254 of the Constitution. Article 254 of the Constitution reads as follows :—

"If any provision of a law made by the Legislature of a State is repugnant to any provision of a law made by Parliament which Parliament is competent to enact, or to any provision of any existing law with respect to one of the matters enumerated in the Concurrent List, then, subject to the provisions of clause (2), the law made by Parliament, whether passed before or after the law made by the Legislature of such State, or, as the case may be, the existing law, shall prevail and the law made by the Legislature of the State shall, to the extent of the repugnancy, be void."

It may be contented that this Act would be referred to the President for his consent. Sir, I am also fully aware of it. It has been argued by the Hon. Minister for Law that similar legislation was brought forward by the Maharashtra and Rajasthan States.

The Bill is now a subject matter for discussion and it abundantly draws many of the provisions in the Bill for criticism and discussion. I contend that there is repugnancy and so much so it is void. This is the point which I want to make. Then I would like to refer to Section 29 of the Bill. This is the next point which I am canvassing before this House. Section 29 of the Bill is as follows :—

"29. Act to override other laws, etc.—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force or any custom usage or contract or decree or order of a court or other authority."



*1973 ஏப்ரல் 5]* [Thiru R. Ponnappa Nadar]

So, this is a special provision to override all general laws. The point before the House is whether it would override the general law and Article 254 of the Constitution. In my opinion, I would say that it will not override the general laws and Article 254 of the Constitution. So far as dealing with the corruption case is concerned, there is the Corruption Act of 1947. In that Act, corruption has been defined and publicmen can also be brought within the ambit of that enactment by bringing suitable amendment. The next point is this. The Central Government is fully competent to enquire into any Minister, be he the Chief Minister or any other Minister.

It was argued by my hon. friend Thiru K.T.K. Thanagmani, with reference to Supreme Court Judgment 122 of 1967, that such an enquiry cannot be embarked upon by the existing law. Sir, there has been some confusion raised in the House with regard to this judgment. In this case, a Commission was set up to enquire into the allegations made against the Chief Minister of Jammu and Kashmir State. It was held by the High Court that no such enquiry could be embarked upon and the matter was referred to the Supreme Court. With your permission, I may read the decisions of the Supreme Court :—

"A Commission of Inquiry under Section 3 of the J. and K. Commission of Inquiry Act can be set up at the instance of the Government to inquire into the acts of a Minister of J. and K. State."

"Thus such a Commission can be set up at the instance of the Government and it cannot be contended that such a Commission to inquire into acts of Minister can be set up only at the instance of the Legislature and not by an order of the Government."

It was contended that the Government has no power to enquire into the charges. It can only be done by a Resolution of the Legislature, because the Ministers are responsible to the Legislature. The Chief Minister is also responsible as any other Ministers to the Legislature. Here I would like to point out that our constitutional propisions are not akin to the provisions

[Thiru R. Ponnappa Nadar] *[1973 ஏப்ரல் 5*

of the Constitution of England. But the Ministerial responsibility is the same. The Parliamentary practice of England has been adopted here and according to that practice the Parliament is supreme. The Parliament has got powers to make laws. While referring to the powers of the Parliament, it has been stated that the Parliament has got powers to make 'man' a 'woman'. Such wide powers have been conferred on the Parliament. Thus, the Parliament is the highest Court of Justice.

Such a concept is not prevalent so far as the State Legislature is concerned. So far as our State Legislature is concerned, we are governed by the Constitution and the Constitution is supreme. It cannot be contended and it cannot be controverted that the Constitution is not supreme. Bearing these aspects in mind, I think the Central Government have clothed themselves with power and authority under the Commissions of Inquiry Act (Central Act) to enquire into the conduct of the Ministers whether it be a case of mal-administration or corruption or any other charge which may be levelled against them.

So, I would once again say that this is certainly a matter of public importance and the lapses on the part of Ministers should be exposed. It was contended that there should be a public agitation as in the case of Jammu and Kashmir case but here there is a public agitation. The Parties who gave memorandum are agreed that there should be a Commission of Inquiry. Every Opposition Party, nay, the whole of Tamil Nadu, are looking forward for the day when the Central Government may institute an inquiry against the State Government.

Now the State Government are being protected by the Central Government and that is the charge which I am making. The Central Government are in receipt of the memorandum that has been submitted by the Opposition Members who levelled charges and this Government were pleased to submit their replies and after that there has been a rejoinder and a reply has been made. That file is slumbering in the chamber of Mrs. Gandhi, mother of socialist society. Sir, does it speak well of the Central Government



*1973 ஏப்ரல் 5]* [Thiru R. Ponnappa Nadar]

and that is the charge I am levelling. Why they are hesitant? Because they are fully aware that they would have to institute enquiries against their own Ministers also.

In Haryana what has happened? There has been a charge levelled against the Chief Minister of Haryana not by one Member but by several Members of Parliament. More than 140 Members of Parliament levelled charges against him. What has happened? The Central Government are shy or chary to hold enquiry against him. They had only appointed a Sub-Committee consisting of the Central Ministers to go into the matters. What did they do? They scrutinised it and stated that there was no *prima facie* case. If that be the case so far as Haryana is concerned, what is wrong in saying we will also constitute a sub-committee to go into the charges and we will move only when there is a *prima facie* case in regard to the charges which have been levelled against the present Ministry. Such a procedure has not been followed by the Central Government and I am sure that they are playing Dr. Jekyl and Mr. Hyde and they are playing that trick.

The next point is with regard to our legislation. So far as the Rajasthan and Maharashtra legislations are concerned, in the matter of the appointment of Commissioner and the Additional Commissioner, the Leader of the Opposition or other Opposition Members would be consulted but why such a procedure has not been adopted here. That is a point which I want to bring to the notice of the Government. The Hon. Minister for Law may say that I could have suggested such an amendment if I had participated in the deliberations of the Select Committee. My point is that such a procedure could have been followed here if this Government are very serious about it. But I think that they are not serious and so I charge this Government of being partial so far as this legislation is concerned.

The next point which I want to elaborate is with regard to the definition of 'complaint'. In the Criminal Procedure Code, 'complaint' has been defined. So far as this legislation is concerned,

[Thiru R. Ponnappa Nadar] *[1973 ஏப்ரல் 5*

it has not been defined. In the Criminal Procedure Code, the term 'complaint' has been defined as follows:—

"Complaint" means the allegation made orally or in writing to a Magistrate, with a view to his taking action under this Code, that some person, whether known or unknown, has committed an offence, but it does not include the report of a police officer."

The report of the police officer has been excluded in the definition of 'complaint' so far as the Criminal Procedure Code is concerned. So far as the present legislation is concerned, that has not been clearly stated. That is the point which I want to bring to the notice of the Government. A complaint in a criminal case is what a plaint is in a civil case and this aspect of the matter has to be looked into.

As regards the definition of 'public man', it has been whittled down. Many important persons have been left out and they are given a go-by by the Select Committee.

Regarding false or frivolous or vexatious allegations mentioned in the Bill, the provision contained in section 250 of the Criminal Procedure Code should be adapted here. Also in this Bill imprisonment is made mandatory and a maximum punishment of three years has been prescribed in this Bill.

But in section 250 (2A) of the Criminal Procedure Code, if compensation is not paid, a person can be imprisoned for only 20 days. Such a provision should find a place in this Bill.

Next I want to refer to clause 19 of the Bill. This clause refers to the Criminal Law (Amendment) Act, 1952. It says—

'In section 5 of the Criminal Law (Amendment) Act, 1952 (Central Act 46 of 1952) in clause (*a*) of sub-section (1), the expression "or under section 15 of the Tamil Nadu Public Men (Criminal Misconduct) Act, 1973" shall be added at the end.'

Sir, is this reference necessary? That is the question I am posing. When there is a Central Act, there is no necessity for such a provision in this Bill.



*1973 ஏப்ரல் 5]* [Thiru R. Ponnappa Nadar]

Then, damages by way of compensation could not be made. So far as damages are concerned, it is a civil right and it cannot be given any such penalty.

Then, Sir, there are other provisions of the Constitution which this Bill offends. For instance, under Article 20 of the Constitution, two punishments could not be given. Here there is a civil liability as well as a criminal liability. We cannot have two punishments for the same offence.

So far as imprisonment is concerned, an imprisonment of seven years is not necessary. In sections 161, 162, 164 and 165 of the Indian Penal Code, only a maximum punishment of three years is contemplated. In section 163 of the Indian Penal Code it is only one year. Why should there be any departure from that accepted practice is the question.

Sir, another point which I want to refer is with regard to limitation. So far as crimes are concerned, there can be no question of limitation and if it is a personal action, it will die with the actual person. So I think there need not be any period of limitation because it is not possible to deduct cases of lapses within 12 months.

Another point which I want to stress is this. There may be cases of previous Ministers who might have been sent out on some corruption charges. They can also be enquired into so that public life can be made more clean. That is why I say there is no necessity to have a limitation. This limitation of 12 months should be taken away. This is a penal law. It is crime against society. So limitation will have to be taken away. Thiru Ganapathy was saying that Law Commission has recommended certain limitation period. At present as the law stands, in Anglo-American jurisprudence, which we are following, there is no question of limitation for criminal cases. We are also following the very same principles and so there should be no limitation on criminal things.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* தலைவரவர்களே, முன்னாள் அமைச்சர்களுக்கும் இதில் விதிகள் வைத்திருக்கிறோம். அமைச்சர் வெளியேறியதற்குப் பிறகு 6 மாதத்திற்குள் என்று வைத்திருக்கிறோம். அதை எக்ஸ்டெண்ட் பண்ணவேண்டுமென்றால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

கிரிமினல் அஃபென்ஸ்களுக்கு லிமிடேஷன்கள் வைக்கக் கூடாது என்று எந்தச் சட்டத்திலும் சொல்லவில்லை. 198-பி ஆக்டில், ஸ்பெஷல் அஃபென்சாக இருந்தால் லிமிடேஷன்கள் உண்டு. சென்டிரல் லோக்பால் பில்லில் மத்திய சர்க்கார் சிபாரிசின் படி லிமிடேஷன் இருக்கிறது. மகாராட்டிரா, இராஜஸ்தான் சட்டங்களிலும் இது இருக்கின்றது.

THIRU R. PONNAPPA NADAR : That is not binding so far as our legislature is concerned because we say we support Rajasthan or Maharashtra. Why should we beg from them? We can have our own traditions. We need not be guided by them. The learned Law Minister has been pointing out there are certain limitations. In Police standing orders, there is period of limitation. These are small things. So far as major crimes are concerned, I think there would be no point in imposing period of limitation. In the Central Parliament there has been heated discussions about Maintenance of Internal Security Act. The learned Members were remarking that the legislation was a ' black law '. You need not be bothered and frightened if the Opposition were to liken this as equivalent to Rowlatt Act and say that this is black piece of legislation. You may feel proud of this but people of Tamil Nadu will have to render judgment against you. I think judgment by the people against you will come very soon. That is the view I am just expressing.

This is a black law and it is a retrogade step. It will become an instrument of tyranny and oppression at the hands of the Ruling Party. It is worse than the law of detention. The next point which I am saying is that this Bill is redundant in view of the Central Act and this will be used by the Government to wreak vengeance on politicians. So I once again emphatically reiterate that this is a black piece of legislation. It has to be taken



away and even now, it is not too late and Government may withdraw it. Already legislation is there, the Central Act, and this Bill is redundant. I once again say that is an unwanted legislation. There are so many legal lacunae which are inconsistent with the Central Act. I once again appeal to the House and to all Members that this piece of legislation may be withdrawn. With these words I conclude.

*(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை அளிக்க எழுந்தார்.)*

THIRU R. PONNAPPA NADAR : Before the Hon. Chief Minister replies, I may be permitted to say that we are not prepared to participate in the other deliberations of this Bill. I once again say that this is a Black Bill, which would impair the name of this Government and if this Government is going to pass this Black Bill, with its brute majority it would be their and. We strongly protest and condemn this Bill. As mark of protest we stage a walk-out.

*(அமைப்புக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

THIRU K. A. MATHIALAGAN : I want to ask one thing of the Hon. Chief Minister. Is he going to withdraw it?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* என்னுடைய பதிலின் முடிவில் தெரியும், வாபஸ் வாங்குகிறோமா, நீடிக்கிறோமா என்பது.

*திரு. கே. ஏ. மதியழகன்:* வாபஸ் வாங்கவேண்டுமென்பது இங்கே எங்களால் தெளிவாகப் பேசப்பட்டிருக்கிறது. அவர்கள் வாபஸ் வாங்கிக்கொள்வதாலோ, நீடிப்பதாலோ எங்களுக்கு ஏதுமில்லை. இந்த மசோதா தவறானது, ஆட்சேபகரமானது என்று கூறி இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(அண்ணா தி.மு.க., இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, சுதந்திரா, ஆளுங் காங்கிரஸ் ஆகிய கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.)*

[1973 ஏப்ரல் 5

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவரவர்களே, இவர்கள் இந்தச் சட்டத்திற்கு மாத்திரம் பயப்படவில்லை. இவர்களுடைய பேச்சுக்கு என்னுடைய விளக்கங்களைக் கேட்பதற்குக்கூட பயந்து கொண்டு (கை தட்டல்) ஓட்டமாய் ஓடுகிறார்களே என்று பார்க்கிற போது நான் உள்ளபடியே வருந்துகிறேன். கவலைப்படுகிறேன்.

மாற்றுக் கருத்துக்களைச் சந்திக்க, எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் இவ்வளவு அஞ்சுபவர்களாக இருப்பார்கள் என்று நான் கொஞ்சமும் எண்ணவில்லை.

பொதுப்பணியாற்றுவோர் குற்ற நடத்தை சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று சொன்னார்கள். வாபஸ் பெற வேண்டுமென்று சொல்லிவிட்டு, அதிலே பிரிவு, பிரிவாக எடுத்து இங்கே வாதங்கள் எல்லாம் நடத்தினார்கள். கல்யாணமே வேண்டாமென்று சொன்னவன், பெண் எப்படி இருக்க வேண்டும், மூன்றடி உயரமா, நான்கடி உயரமா; மூக்கும் முழியுமாக எப்படி இருக்க வேண்டுமென்றெல்லாம் வர்ணித்துக் கொண்டிருந்ததைப்போல எதிர்க் கட்சியினுடைய தலைவர்கள் சிலபேர் இந்தச் சட்டமே தேவையில்லை, இந்தச் சட்டம் வந்தால் ஊருக்கு ஆபத்து, நாட்டுக்கு ஆபத்து, தங்களுக்கு முதலில் ஆபத்து என்கிற அந்தப் பயத்தின் காரணமாக இந்தச் சட்டத்தை வேண்டாம், வேண்டாம், திரும்பப் பெற வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததின் நோக்கம் இருக்கிற எந்தச் சட்டத்தையும் நீக்கி வைத்துவிட்டு, இந்தச் சட்டத்தை மாத்திரம்தான் அந்தச் சட்டங்களுக்கெல்லாம் பதிலாக நாம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல.

இப்போது இருக்கிற சட்டங்களும் இருக்கும், இந்தச் சட்டமும் புதிதாக வரும். இந்தச் சட்டத்தை யார் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறார்களோ, அப்படி விரும்புகிறவர்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தேவையில்லை என்று கருதுகிறவர்கள் விட்டுவிடலாம் என்ற அளவில்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிந்திட நாடினோம்.

இதற்கு ஏதோ பின்னணி இருக்கிறது, தமிழ் நாட்டில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது களேபரமாகக் குற்றஞ்



1973 ஏப்ரல் 5] [டாக்டர் மு. கருணாநிதி]

சாட்டி விட்டோம். அதைத் தாக்குப் பிடிக்க முடியாமல் இவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று திரு. தங்கமணியும், திரு. பொன்னப்ப நாடாரும், நண்பர் மதியழகனும், டாக்டர் ஹாண்டேயும், மற்றவர்களும் இங்கே பேசினார்கள். அது எனக்கு வியப்பாக இருந்தது.

இவர்கள் கொண்டுபோய் டெல்லியிலே கொடுத்த குற்றச்சாட்டுகளில் எந்த ஆதாரத்தைச் சொன்னார்கள்? இவர்கள் குற்றச்சாட்டுகளைப் பற்றி அழுத்தந்திருத்தமாகச் சொல்ல வகையில்லாமல், வழி இல்லாமல், வாக்கியத்திற்கு வாக்கியம், இப்படி நம்பப்படுகிறது, இப்படிச் சொல்லப்படுகிறது, இதுபோலத் தெரிகிறது, இப்படிப் பத்திரிகையிலே வந்தது, யாரோ ஒருவன் துண்டு நோட்டீஸ் போட்டிருக்கிறான் என்று இந்த வகையிலேதான் டெல்லியிலே கொண்டுபோய் தங்களுடைய குற்றச்சாட்டுக்களை இவர்கள் அளித்தார்கள். ஏதோ இந்த அரசாங்கத்திலே இருக்கிற அமைச்சர்களுடைய நிலை என்ன, தகுதி என்ன, லஞ்ச லாவண்யத்திலே ஈடுபட்டவர்கள் என்றெல்லாம் பேசினார்கள். அதிலும் நண்பர் மதியழகன் அவர்கள் லஞ்சம் பற்றி இங்கே பேசியது மிகவும் உருக்கமாக இருந்தது. (கரவொலி). அவர், லஞ்ச லாவண்யத்தினால் பல ஆட்சிகள் கவிழ்ந்து விட்டிருக்கின்றன என்று சொன்னார். ஆட்சிகள் கவிழ்ந்ததோ இல்லையோ, தனிப்பட்ட மனிதர்கள் சிலர் கவிழ்ந்து போயிருக்கிறார்கள் என்பதை இந்த நாடே அறியும். தெளிவாக உணரும். (பலத்த கைத்தட்டல்).

நீங்கள் குற்றவாளிகள் அல்லவா என்று எங்கள்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். எங்கள்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் அளித்திருக்கிற விளக்கங்கள் என்னென்ன? நாங்கள் குற்றவாளிகளா என்று மதிப்பிற்குரிய மாமன்றத்திலே இருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்களே, நீங்களே சொல்லுங்கள் என்பதற்கேற்ப, எந்த ஒரு மாநிலத்திலும் யாரும் இதுவரை கடைப்பிடிக்காத ஒரு முறையைக் கடைப்பிடித்து, சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அத்தனைக்கும் விளக்கமாகப் பதில் அளித்தது இந்த ஒரே ஒரு மாமன்றத்தில் தான் என்பதை நாடு நன்கு உணரும். அந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பகிரங்கமாகப் பதிலளித்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

நண்பர் மதியழகன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ காரியங்களை எல்லாம் பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று இங்கிலாந்து நாட்டின் பிரதமர் சொன்னதாகவும், மேலும் அவர் மறுநாள் பத்திரிகையிலே வருவதற்காக இன்றைக்குக் காரியங்களைச் சில ஆட்சியாளர்கள் செய்கிறார்கள் என்றும் கூறியிருப்பதாக இங்கே படித்துக் காட்டினார். இங்கிலாந்து நாட்டுப் பிரதமர் சொன்னதும், பத்திரிகையிலே வந்து, அது புத்தகத்திலே வந்துதான் அதை இங்கே படித்துக் காட்டினார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த ஆட்சி, கடந்த 40 நாட்களாக இந்த மாமன்றத்திலே நிறைவேற்றியிருக்கிற சட்டங்கள், ஏழை எளிய மக்களைத் தொடுவதற்காகச் செய்யப்பட்டிருக்கிற சாதனைகள் எத்தனை என்பதை நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

குற்றஞ்சாட்டுகிற நேரத்தில், ஒரு ஆட்சியின்மீது களங்கம் சுமத்துகிற நேரத்தில், அந்தக் குற்றச்சாட்டுப் பட்டியலை எடுத்து வைத்து விளக்கங்களைத் தொகுத்து, அதை இந்த மாமன்றத்திலே வைத்து விட்ட பிறகு, இதிலே இன்னின்ன தவறு என்று எடுத்துச் சொல்லி, அதிலே வெற்றி பெறுகின்ற அளவுக்கு ஆதாரத்தை எதிர்க்கட்சித் தலைவர்கள் யாராவது இங்கே புள்ளி விவரங்களோடு எடுத்து வைக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார்களா என்றால் இல்லை. டெல்லிக்கு இதைக் கொண்டுபோன கதாநாயகர் இருக்கிறாரே, அவர் இந்த அவையின் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை, அவ்வளவு வீராதி வீரர் அவர்! இங்கே வந்து, இன்னின்ன குற்றச்சாட்டுக்களைக் கொண்டுபோய் டெல்லியிலே கொடுத்திருக்கிறேன்; கருணாநிதியே, அதற்கு உன்னுடைய பதில் என்ன? நெடுஞ்செழியனே, உன்னுடைய பதில் என்ன? அமைச்சர்களே, உங்களுடைய பதில் என்ன என்று சுட்டிக்காட்டிக் கேட்டிருப்பாரானால்—அதற்கு நாம் தருகிற விளக்கங்களில் சமாதானம் இல்லை: இன்னின்ன காரணங்களால் சரியில்லை, ஆகவே நீ குற்றவாளி என்று சொல்லியிருந்தால் அவரை நாம் வீரர் என்று பாராட்டியிருக்கலாம். ஆனால் இந்த அவைக்கு வருவதையே தவிர்த்துக்கொண்டு, வந்தால் "இவர்கள்மீது நாம் வீண் அபவாதத்தைச் சுமத்தி குற்றஞ்சாட்டினோமே, அதற்கு மாறாக நம்மீது உள்ள உண்மையான குற்றச்



சாட்டுக்களை எல்லாம் எங்கே வெளிப்படுத்தி விடுவார்களோ" என்ற பயத்தில் அவர் இங்கே வருவதே இல்லை. நான் இப்போதும் சொல்கிறேன். உள்ளபடியே திறன் இருந்தால் நாம் சாட்டுகிற குற்றச்சாட்டுக்களைச் சந்திக்கிற நேர்மையான உள்ளம் இருந்தால் இந்த அவைக்கு வந்து நாம் அவர்மீது சாட்டுகிற குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் அளிக்க வேண்டும். "நீ குற்றஞ் செய்யவில்லையா" என்று கேட்டால், நாங்கள் குற்றவாளிகள் அல்ல; எங்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை, அதிலே எள்ளளவும் உண்மை கிடையாது என்று எழுத்துக்கு எழுத்து பதில் அளித்து விட்ட பின்னால்தான் இந்தக் கேள்விகளை நாங்கள் கேட்கிறோம். நீங்கள் செய்யவில்லையா? நாங்களும் செய்கிறோம் என்பதற்காக இதைச் சொல்லவில்லை.

பொது வாழ்க்கையில் இருப்பவர்கள்மீது கண்டபடி எதுவும் பேசிவிடக்கூடாது. இந்த அவையிலே ஒரு காலத்தில் அமைச்சராக இருந்த ஒருவர் சொன்னார். 'பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்காக எவ்வளவு கேவலமான முறையில் எங்களை நடத்துகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்; முதலமைச்சர் சொன்ன மாதிரி, இந்தமாதிரி சாடுகள், புரட்டல்கள் எல்லாம் பொது வாழ்வில் இருக்கிறார்கள் என்பதற்காக என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று கண்ணியக் குறைவான முறையில் சொல்லக் கூடாது' என்று பேசிய அந்த அமைச்சர் யார் தெரியுமா? இவ்வளவு நேரம் இங்கே ஆர்த்தெழுந்து, அர்ச்சனைகள் செய்தாரே—போர் முழக்கம் செய்தாரே, அதே நண்பர் மதியழகன்தான்! இதே மன்றத்தில் அவர்மீது திரு. கருத்திருமன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை எடுத்து வைத்தபோது, அவரேதான் இந்தப் பதிலை திரு. கருத்திருமன் அவர்களுக்கு அளித்திருக்கிறார் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

குற்றஞ்சாட்டுபவர்கள் ஒருமுறை தங்களைத் திரும்பிப் பார்த்துக்கொள்ள வேண்டும். நாங்கள் யார் என்பதை, எங்களுடைய கைகள் கறைபடாத கரங்கள் என்பதை நாங்கள் தந்திருக்கிற பதிலுரைமூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். அதே நேரத்

தில் குற்றஞ்சாட்டியவர்களின் தகுதி என்ன? அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதைக் காட்ட, குற்றச்சாட்டுப் பட்டியலி லிருந்தே ஒரு சுவையான அம்சத்தை இங்கே குறிப்பிடுகிறேன்.

உறுப்பினர்களுக்கு இது மிகமிகத் தேவையான அம்சம். தேவைப்படுகிற நேரத்தில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அம்சம். குற்றப் பட்டியலைக் கொண்டுபோய்க் கொடுத்தார்களே டெல்லியில்—எம்.ஜி.ஆரும், தங்கமணியும், கல்யாணசுந்தரமும் வேறு சிலரும் கையெழுத்திட்டுக் கொடுத்தார்களே, குடியரசுத் தலைவரிடம்—அந்தக் குற்றச்சாட்டுகளில் ஒன்று 'குனோப்' தியேட்டரைப்பற்றிய குற்றச்சாட்டு.

நாங்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1972-ம் ஆண்டு ஒரு சட்டத்திற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தோம். 1921-ம் ஆண்டு சென்னை மாநகர வாடகைக் குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டத்தின் 12-வது பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிய அளவினதா யிராத பாதுகாப்புக் காரணமாகக் குத்தகைக்காரர்களுக்கு ஏற் பட்ட சிரமங்களை அடிப்படையாகக்கொண்டு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தை அப்போது கொண்டு வரவேண்டுமென்று கடிதம் எழுதினார்கள். பழைய காங்கிரஸ் கட்சியில் அப்போது இருந்த திருமதி டி. என். அனந்தநாயகி அவர்களும், காங்கிரஸ் கட்சித் தலைவர்—இப்போது இங்கே ஆங்கியத்தில் அழகழகாக அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளை சுமத்திப் பேசினாரே, அந்த பொன்னப்ப நாடாரும், டென்னிஸ், ஜேம்ஸ், கோபால் ஆகியோரும் இன்னும் ஓ. என். சுந்தரம், சுதந்திராக் கட்சி உறுப்பினர் பொம்மன் ஆகியவர்களும் கையெழுத்துப்போட்டு, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டார்கள். அந்தத் திருத்தச் சட்டம் இந்த அவையில் விவாதிக்கப்பட்டபோது, அதை ஆதரித்துப் பேசியவர்கள் கே. டி. கே. தங்கமணி, ஹாண்டே, பொன்னப்ப நாடார், அனந்த நாயகி அம்மையார் ஆகியோராகும். அதற்குப் பிறகு அந்தத் திருத்தம் இங்கே கொண்டுவரப்பட்டது. அதற்குப் பிறகு அதே தங்கமணியும், எம். ஜி. இராமசந்திரனும் இந்தக் குற்றச்சாட்டை எழுதி அதைக் கொண்டுபோய் டெல்லி பட்டணத்திலே கொடுத்திருக்கிறார்கள். யாரோ சில பணக்காரர்களுக்





காக இந்தத் திருத்தச் சட்டம் சட்டமன்றத்தில் நிறைவேறியது என்று கொண்டுபோய் கொடுக்கிறார்கள்.

" This law is clearly passed only to enrich the party bosses and the benefit that has passed on to the Ministers is believed to be substantial and the extent of the same will be obvious on an enquiry ". என்று கொண்டு போய் கொடுத்திருக்கிறார்கள். யார் திருத்தத்தை இங்கே ஆதரித்துப் பேசினார்களோ, யார் இந்தத் திருத்தம் வரவேண்டுமென்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்களோ, அவர்களே திருத்தம் வந்தபிறகு, இப்படி ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுபோய் குடியரசுத் தலைவரிடத்தில் கொடுக்கிறார்கள், இதை வைத்து விசாரணை நடத்துங்கள் என்று கேட்கிறார்கள்.

இந்தத் திருத்தம் கொண்டு வந்த பிறகு, அதை எதிர்த்து அதனால் பாதிக்கப்பட்ட சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடுத்தார்கள். நீதிமன்றத்திலே நாம் கொண்டுவந்த திருத்தத் திற்கு விரோதமான ஒரு தீர்ப்பை, சரியில்லை என்ற தீர்ப்பை, அதிலே உள்ள சில இடர்பாடுகளைச் சுட்டிக்காட்டி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அது அதோடு முடிந்துவிடவில்லை.

இன்றைக்குக் காலையிலே அந்தத் திருத்தத்திற்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு, என்னென்ன வகை யிலே நாம் அந்தச் சட்டத்தை மீண்டும் சரி செய்ய வேண்டும் என்பதற்கான நிலைமைகளை எல்லாம் ஆராய்ந்து, அந்தத் திருத்தம் மீண்டும் நிறைவேறியிருக்கிறது. அந்தத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று மறுபடியும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்த உத்தம சிரேஷ்டர் யார் தெரியுமா? சங்குமுத்து தேவர், எம்.எல்.ஏ., அம்பாசமுத்திரம் தொகுதி. அவர் எழுதிக் கொடுத்திருக்கிறார்—

" தமிழக அரசு உழுபவருக்கே நிலத்தைச் சொந்தமாக்கிய அரசு. நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கட்டடம் கட்டி, நியாயமான வாடகை கொடுத்து, இருந்துவரும் ஏழைகளைக் காக்கும்பொருட்டு 'நகர குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தில் இருந்த குறைகளை நீக்கி 1972-ல் ஒரு திருத்தத்தைத் தமிழக அரசு கொண்டுவந்தது. பெருநிலச் சொந்தக்காரர்களிடமிருந்து ஏழைகளைப் பாதுகாக்கும் இந்தச் சட்டத் திருத்தத்தை

உள்ளன்போடு வரவேற்கும் இந்நேரத்தில் மேற்படி சட்டத் திருத்தம் இன்னும் எதிர்பார்த்த பாதுகாப்பினை அளிக்கக் கூடியதாக இல்லை. அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் ஆலோசித்து, அந்தக் குறைகளை நீக்கி ஏழை குத்தகைதாரர்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கும் திருத்தங்களைக் கொண்டு வந்து, சட்டத்தைக் குறையற்றதாக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். ஏழைகளுக்கு உதவும் இந்தச் சட்டத்தைத் தாமதிக்காமல் உடனே கொண்டுவர ஆவன செய்யக் கோருகிறேன்.” இதை எழுதி அனுப்பியவர் பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சங்குமுத்து தேவர். 29—3—73 அன்று இதை எழுதியிருக்கிறார்.

முதலிலே கடிதம் கொடுத்து, திருத்தம் கொண்டுவந்த பிறகு பணக்காரர்களுக்காகக் கொண்டு வந்த சட்டம் என்று எம்.ஜி.ஆரும் தங்கமணியும் கொண்டுபோய் அங்கே ஊழல் புகார் கொடுத்து விட்டு, பிறகு நீதிமன்றத்திலே அந்தத் திருத்தம் தோற்றுப் போன பிறகு, இப்போது அதே திருத்தத்தைக் கொண்டு வாருங்கள்; நீதிமன்றத்தீர்ப்பின்படி அடிப்படையில் மாற்றித் திருத்தத்தைக் கொண்டுவாருங்கள் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறார் பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சங்கமுத்துதேவர். இவரைப் பிற்போக்கு வாதி என்று சொல்வார்கள். ஆனால் இன்னொரு முற்போக்கு வாதியும் கொடுத்திருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் :

“ I would therefore request you to kindly imtiate and take such steps as are necessary to remove these defects and to plug the loop-holes in section 3, 9 and 12 of the Act retrospectively in order to further protect the interest of the tenants so that they may be really benefited by the Act ' அவர் யார் தெரியுமா? சாட்சாத் அதே தங்கமணி தான். 19—3—73-ல் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

“ அவர் கொஞ்சம்தான் முற்போக்கு. நாங்கள் அதைவிட முற்போக்கு, ஆளுகிற முற்போக்கு” என்று அதைப்போலவே வாசகங்கள் அமைந்த இன்னொரு கடிதத்தை திருமதி டி. என். அனந்தநாயகி, பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ, அவர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பிற்போக்கு வாதிகளாக இருந்தாலும், முற்போக்கு வாதிகளாக இருந்தாலும்



நாங்கள் நடுநிலைமையோடு நாணயமாக இருப்போம்; எல்லாவற்றிலும் இருப்போம் என்று சொல்கிற டாக்டர் ஹாண்டே இருக்கிறாரே அவருடைய கட்சியைச் சேர்ந்த திரு. பொம்மன், எம்.எல்.ஏ., கூடலூர் தொகுதி, அவரும் கையெழுத்துப் போட்டு ஒரு கடிதத்தை இங்கே கொடுத்திருக்கிறார். “நாங்கள் இவர்கள் எல்லோரையும் மதிப்பதில்லை. நாங்கள் அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றுகின்றவர்கள்; ஏன் என்றால் எங்களுடைய தலைவர்தான் குற்றச்சாட்டுப் பட்டியலைத் தரச் சென்றபோது அக்பர் ஹோட்டலில் தங்கிய ஏழைப் பங்காளன்” என்று வாதிப்பார்கள் அல்லவா? அந்தக் கட்சியைச் சேர்ந்த வேலப்பன், எம்.எல்.ஏ.-வும் இதிலே கையெழுத்துப் போட்டுக்கொடுத்திருக்கிறார்.

இதிலே வேடிக்கை என்னவென்றால், தமிழ் எல்லாம் ஒரே மாதிரியான வாசகம், ஒரே மாதிரியான பேப்பர்; ஆங்கிலம் எல்லாம் ஒரே மாதிரியான டைப், ஒரே மாதிரியான வாசகம், என்று இந்த விதத்திலே இருக்கின்றது.

இதைச் சொல்லுவதற்குக் காரணம், இது திருத்தப்பட வேண்டிய சட்டம் என்பதை நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம். இது ஏதோ பணக்காரர்களுக்காகத்தான் செய்யப்பட்டது என்று சொல்லிப் புகார் கொடுத்தார்களே, இன்றைக்கு அதையே ஏழை எளியவர்களுக்காகத் திருத்தப்பட வேண்டுமென்று சொல்லுகின்றார்களே—நான் கேட்கிறேன், குற்றஞ்சாட்டியவர்களே, உங்களுக்கு நாக்கு ஒன்றா, இரண்டா? என்று இந்த நாடு கேட்கும் அல்லவா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல, இதை எடுத்துக் காட்டாகத்தான் நான் கூறினேன். இதற்கு முன்பு பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு வேண்டிய அளவிற்கு விளக்கங்களை எல்லாம் இந்த மாமன்றத்திலே நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்வதற்காகத் தான் இதை மீண்டும் சொல்லுகிறேன்.

கருணாநிதி நாணயமற்றவன் என்று வெளியே போய்ப் பேசுகின்றார்கள். இந்த அமைச்சரவையிலே இருப்பவர்கள் நாணயமற்றவர்கள் என்று பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் எப்படியிருக்கின்றார்கள்?

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஏப்ரல் 5

உத்தரப்பிரதேசத்தில் உள்ள நிலைமைகளைக் கண்டறிந்துவா என்று கூறி, ஆயிரம் ரூபாயைக் கட்சிச் சார்பில் செலவிற்காகக் கொடுத்து அனுப்பி, அதற்கு இதுவரை கணக்குக் கொடுக்காத ஒரு பேர்வழி, இங்கேயும் பணத்தை வாங்கிக்கொண்டு, "நான் பார்லிமெண்டிற்கு வந்தேன்" என்று அங்கேயும் பணத்தை வாங்கி வாயிலே போட்டுக்கொண்ட ஒரு பேர்வழி இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பார்த்துக் குற்றஞ்சாட்டுகிறார். இது இன்றைக்கு உள்ள நிலைமை.

"நான் லட்சம் ரூபாய் தனுஷ்கோடி புயல் நிவாரணத்துக்காக நன்கொடை கொடுப்பேன்" என்று சொல்லுகிறார்; எடுத்துப் பார்த்தால் இதுவரை 50,000 ரூபாய்தான் வந்திருக்கிறது. "மீண்டும், இலங்கை செல்லுவேன், 25 லட்சத்திற்குக் கல்லூரி கட்டிக்கொடுப்பேன்" என்கிறார். இதுவரை இலங்கைக்கு இரண்டாவது முறையாகச் செல்லவும் இல்லை, கல்லூரி கட்டிக் கொடுக்கப்படவும் இல்லை. அடுத்து, தனக்கு மதுரையிலே கொடுக்கப்பட்ட தங்க வாளை மதுரையிலே பக்தவத்சலம் அவர்களிடம் கொடுக்கப்போகிறேன் என்று பத்திரிகையிலே செய்தி; பக்தவத்சலமும் ஒத்துக்கொண்டிருக்கிறார் என்றும் செய்தி வருகிறது 1965-ல். ஆனால் பக்தவச்சலமும் போகவில்லை, தங்க வாளும் கொடுக்கப்படவில்லை.

தலைவரவர்களே, 1960-ஆம் ஆண்டில் இந்த மன்றத்திலே தலைவராக இருந்த டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்களையும் கழகப் பொதுச் செயலாளர் நாவலர் அவர்களையும் அழைத்துக்கொண்டு போய் ஒரு பெரிய ஆஸ்பத்திரியைக் கோடம்பாக்கத்தில் திறந்து வைத்து, "எம்.ஜி.ஆர். ஃப்ரீ டிஸ்பென்ஸரி" என்று அதிலே போட்டு, திறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு, அது மூடப்பட்டு இப்போது 12 ஆண்டுக் காலமாகிறது. அது இன்னமும் மூடப் புட்டுக் கிடக்கிறது. மக்களுக்காக இப்படி விளம்பரத்துடன் திறக்கப்பட்ட அந்த ஆஸ்பத்திரி இன்றளவும் மூடப்பட்டுக் கிடக் கிறது.

ஆனால் இவர்கள் சொல்லுகிறார்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினுடைய நிர்வாகம் சரியில்லை: நாங்கள்தான் மக்களுக்காகப் பாடுபடுகின்றவர்கள்; நாங்கள்தான் கொடை





1973 ஏப்ரல் 5] [டாக்டர் மு. கருணாநிதி]

வள்ளல்கள், நாங்கள்தான் பாரிகள், நாங்கள்தான் குமணர்கள் என்று ஏதோ நாட்டில் ஏற்பட்டுவிட்ட விளம்பரத்தின் காரணமாகத் தாங்கள்தான் புத்தர், உத்தமர் என்று கருதிக்கொண்டு, தாங்கள் எதைச் சொன்னாலும் அதை நாட்டில் இருக்கிற மக்கள் நம்புவார்கள் என்ற அளவில் ஊழல், ஊழல் என்று பேசு கின்றார்கள்.

காமராசர் அழகாகச் சொன்னார். 'ஊழல் என்று யார் சொல்லுகிறார்களோ அவர்கள்தான் முதல்தரமான ஊழல் பேர் வழிகள்' என்று அவர் கூறியது புத்தகமாகவே அச்சடிக்கப் பட்டிருக்கிறது. தகுந்த நேரத்தில் நாம் பயன்படுத்த வேண்டிய அருமையான பொன் மொழி அது. "எவன் ஊழல், ஊழல் என்று சொல்லுகிறானோ, அவன்தான் கடைந்தெடுத்த ஊழல் பேர்வழி" என்று காமராசரே சொல்லியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஊழல் அரசு அல்ல; குற்றஞ்சாட்டுகிற சிலர்தான் கடைந்தெடுத்த ஊழல் பேர்வழி களாக இருக்கிறார்கள். இங்கே யாரும் வரி கட்டாதவர்கள், வரி ஏய்த்தவர்கள் கிடையாது. இங்கே யாரும் கறுப்புப் பணத்தைச் சேர்த்து, கள்ள வாணிபத்தில் ஈடுபட்டவர்கள் கிடையாது.

இன்றைக்குக் கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டம் இராஜஸ் தானிலே இல்லையா? மராட்டியத்திலே இல்லையா என்று கேட்கி றார்களே, இது பற்றி மத்திய சர்க்கார் விசாரணை வைக்கலாமா என்று கேட்கிறார்களே என்று எல்லாம் பேசினார்கள்.

"மத்திய சர்க்கார் ஒரு மாநில முதலமைச்சர் மீதோ மற்ற அமைச்சர்கள் மீதோ விசாரணை நடத்த உரிமை பெற்ற சர்க்கார் அல்ல" என்று எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அன்றைக்கே தெரிவித்திருக்கிறார். தெரிவித்தது மாத்திரமல்ல, அன்று உள்துறை அமைச்சராக இருந்த சவான் அவர்களுக்குக் கடிதமே எழுதியிருக்கிறார். "உங்களுக்கு உரிமை கிடையாது; அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள சுயாட்சி உரிமையை அது பாதிக்கும், ஆகவே, லோக்பால் என்ற அமைப்பை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்று அமைச்சரவை சார்பிலே நானும் நாவலரும், நண்பர் மதி அவர்களும் இருந்த அமைச்சரவை சார்பில் தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு மாநில அரசுமீது,

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஏப்ரல் 5

முதலமைச்சர் மீதோ, மற்ற அமைச்சர்கள் மீதோ சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகளை விசாரிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரங்கள் கிடையாது" என்று அண்ணா அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

அந்த அண்ணாவின் கொள்கையை இன்றைக்கும் அப்படியே பின்பற்றி வருகிற கழக அரசு அதைத்தான் சொல்லுகிறது. அதைச் சொல்லிவிட்ட பிறகு, ஏன் டில்லிக்கு விளக்கம் அளிக்கிறீர்கள் என்று கேட்டால், புரியாமல் இருப்பவர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும், யாரையும் குழப்பிவிடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். யாராவது ஒரு பத்துப்பேர் திரும்பத் திரும்ப ஒன்றையே சொல்லிக்கொண்டிருந்தால் ஒருகால் அவர்கள் சொல்லுவதில் உண்மையிருக்குமோ என்று மற்றவர்கள் சந்தேகப்பட்டு விடுவார்களானால், அதைத் தெளிய வைக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிலைமைகளை டில்லிக்கு விளக்கியிருக்கிறோம்.

இது போன்ற காரியங்களில், மாநில அரசுமீது மத்திய அரசு தலையிட உரிமையில்லை என்று அரசியல் சட்டம் சொல்லுகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம். அந்த அடிப்படையில் இன்று பொது வாழ்வில் இருப்பவர்கள்மீது களங்கம் சுமத்தப்பட்டால், அவர்கள் உள்ளபடியே மாசு உள்ளவர்களாக இருந்தால் அவர்களைத் தண்டிக்கவும், அதே நேரத்திலே, வேண்டுமென்றே, அவர்கள்மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்றே, அவதூறு சுமத்த வேண்டும் என்பதற்காகவே, பழி சொல்லுபவர்களைத் தடுத்து நிறுத்தவும், அந்த முறைக்கு ஒரு முடிவு கட்டவும்தான் இந்தச் சட்டம் இன்று வந்திருக்கின்றது. ஆகவே இந்தச் சட்டத்தை உறுப்பினர்கள் அனைவரும் ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."



1973 ஏப்ரல் 5]

தீர்மானம் பேரவையின் முடிவுற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்ட முன்வடிவிற்கு திருத்தத்தினைக் கொடுத்த திரு. என். கே. பழனிசாமி அவர்கள் இருக்கையில் இல்லை. எனவே திருத்தத் தீர்மானம் முன்மொழியப்படவில்லை.

பிரிவுகள் 2 முதல் 29 முடிய—அட்டவணைகள் 1, 2 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" எனக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது மணி 2-40 ஆகப் போகிறது. போய் உணவு அருந்தி உடனே வரவேண்டும். பத்திரிகை நிருபர்களும் சொன்னார்கள், தங்களுடைய சிரமங்களைப்பற்றி. ஆகவே, நாம் இன்று மாலை 4 மணிக்குப் பதிலாக 4-30 மணிக்குக் கூடலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நான் மாலை இரயிலுக்குச் செல்ல வேண்டியதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தாங்கள் பதிலுரைக்க வேண்டிய சட்ட முன்வடிவு முதலிலேயே வந்துவிடும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாலை நிகழ்ச்சி எப்போது ஆரம்பிப்பது என்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. எனது துறையைச் சார்ந்த சட்ட முன்வடிவிற்குப் பதில் சொல்லுவதற்கு ஏற்றவகையில் மாலை 6.30 மணிக்குள் அதை முடித்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிகின்றன. மாலை நான்கு மணி அளவிலே பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-40 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் கூடியது.

## (9) அரை மணி நேர விவாதம்.

### நியாய விலைக் கடைகள்மூலம் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான பொருள்கள் வழங்குவதுகுறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நியாய விலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான பொருள்கள் வழங்குவதுபற்றிய அரை மணி நேர விவாதம் இப்பொழுது நடைபெறும். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பேச வேண்டும் என்பது இல்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொருவர் பேசினால் போதும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி என்றால் கூட அரை மணி போதாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 நிமிடமாவது தமக்கு வேண்டும் என்கிறார். எல்லாக் கட்சிகளிலும் இருந்து சில குறிப்பிட்ட உறுப்பினர்கள் பேசினால் போதும். இப்போது திரு. என். கே. பழனிசாமி விவாதத்தைத் தொடங்குவார். 7 நிமிடத்திற்குள் முடிக்க வேண்டும்.



**திரு. என். கே. பழனிசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் அரிசி, பருப்பு மற்ற எண்ணெய்ப் பொருள்களின் விலை எல்லாம் விஷம்போல ஏறிவருகின்றன. இதுபற்றி இந்தச் சபையில் பலதடவை விவாதித்தாகிவிட்டது. இருந்தாலும் இன்றைக்கு உணவுதானிய வியாபாரத்தில் பதுக்கலும், கொள்ளை லாபமுமாக இருக்கிறது. உணவு வியாபாரத்தை எடுத்துக் கொள்ளப்போவதாக அமைச்சர் அவர்கள் திருச்சியில்போய் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். அரிசி நெல் போன்ற வியாபாரத்தை அக்டோபர், நவம்பர் மாதத்தில் இருந்து அரசே எடுத்துக் கொள்வது என்பது வரவேற்கக்கூடிய அம்சம். ஆனால் இது வரையிலும் மொத்த வியாபாரம் என்று சொல்லிச் சில பேர்களுக்கு லைசென்சு வழங்கியிருப்பது அகற்றப்படவேண்டும். இம் மாதிரியான முறையினால்தான் பதுக்கலும், கொள்ளை லாபம் அடிக்கிறபோக்கும் ஏற்படுகிறது. அரிசி, நெல் மட்டுமின்றி கம்பு, சோளம், ராகி போன்றவைகளையும் மொத்த வியாபாரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு லைசென்சு வழங்குவதோடு சூப்பர்மார்க்கெட் அதிகமாகத் திறப்பது ஒன்று. இவற்றைத் திறப்பதன் காரணமாக வெளியில் இருக்கக்கூடிய விலைகளைக் குறைப்பது என்பது முடியாது. மொத்த வியாபாரத்தைச் சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவும் கார்ப்பரேஷனிடம் விட்டுவிடலாம். கொள்முதலுக்கும், விநியோகத்திற்கும் தகுந்த முறையில் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்பொழுது நகரத்திலே இருக்கக்கூடிய பெரிய பெரிய மொத்த வியாபாரிகளது லைசன்சை ரத்துசெய்து, நகர்ப் புறத்திலே அதிகப்படியான நியாயவிலைக் கடைகளைத் திறந்து, ஓப்பன் மார்க்கட்டுகளை ஒழிக்கவேண்டும். கிராம மக்கள், விவசாயிகள், சுலபமாகப் பொருள்களை வாங்கக்கூடிய முறையில் நியாயவிலைக் கடைகள் திறக்கப்படவேண்டும். ரீடெய்ல் டீலர்ஸ் கிராமப்புறத்திலே கொள்முதல்செய்ய அனுமதிக்கப்படக் கூடாது. இதில் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் இந்தத் திட்டத்திற்குள் வருவார்களானால், அவர்களை வரவேற்று அவர்களுக்கு என்ன பங்கு கொடுக்கமுடியுமோ அந்த அளவுக்குப் பங்கு கொடுக்கவேண்டும்.

இந்தியா பூராவும் இருக்கிற மொத்த வியாபாரிகள் பூராவும் வேலை நிறுத்தம் செய்யப்போவதாகச் சொல்கிறார்கள். அக்டோபர் மாதத்தில் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளப் போவதால், யார் யாருக்கு லைசென்ஸ் தேவையோ அத்தனை பேருக்கும் லைசென்ஸ் வழங்கவேண்டும். கிராமப்புறத்திலே வினியோகம் செய்யக்கூடிய காலத்திலே, பொறுப்புடன் ஜனங்களுக்குத் தேவையான கெரசின், சர்க்கரை போன்றவைகளையும் வினியோகம் செய்யவேண்டும். அப்படி வினியோகம் செய்கிற பொருள் தரமானதாகவும், நல்லதாகவும் இருக்கவேண்டும். அத்தோடு, கொள்முதலும் வினியோகமும் சரியாக நடப்பதற்கு எல்லா மாவட்டங்களிலும் பொதுஜன கமிட்டிகளை நியமிக்க வேண்டும். சரியாகக் கொள்முதல் செய்யப்படுகிறதா ; சரியாக வினியோகம் செய்யப்படுகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். இன்னும் வரக்கூடிய சமயத்தில், சர்க்காரே ஒப்பந்தம் பேச வேண்டுமேதவிர, தனிப்பட்டவர்களுக்கு அதைக் கொடுக்கக் கூடாது என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இது சென்னை நகர மக்களுக்கு மிக அவசியமான பிரச்சினை, அவசரமான பிரச்சினை. இன்றைக்கு விலைவாசிகள் விஷம்போல் ஏறி, இங்கே இருக்கக்கூடிய குடும்பங்கள் எல்லாம் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். ரூ. 300-க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நியாயவிலைக் கடையிலே அரிசி வழங்க இன்றைக்கு வழி செய்து இருக்கிறார்கள். அந்த ரூ. 300 மிகக் குறைவு, குறைந்தது ரூ. 700 இருக்கக்கூடிய குடும்பங்களுக்கு எல்லாம் பாமிலி கார்டு கொடுக்கவேண்டும். ரூ. 700-ல் 1/4 பங்கு ரென்ட்டுக்குப் போய்விடுகிறது. கட்டை என்ன விலை விற்கிறது இப்பொழுது. காட்டுக் கட்டை குண்டு ரூ. 4½, சவுக்குக் கட்டை ரூ. 5½-க்கு விற்கிறது. லீக்கோ மூட்டை ரூ. 6 விற்றது, இப்பொழுது ரூ. 17-க்கு விற்கிறது. அதுவும் பிளாக் மார்க்கெட்டிலேதான் கிடைக்கிறது. புளியங் கட்டையும் அதேமாதிரிதான். காஸ் கிடைக்கவில்லை. கெரசின் கிடைக்கவில்லை.

சென்னையிலுள்ள பெண்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். அப்பொழுதைக்கப்பொழுது, பஞ்சம் வந்து விடுகிறது. முன்





பெல்லாம், அடுப்பை ஊதி, ஊதிக்கொண்டிருந்த நிலைக்குப் போக வேண்டியிருக்கிறது. இப்பொழுது அதற்கேற்ற மாதிரி நாங்கள் சமையல் முறையை மாற்ற வேண்டியிருக்கிறது. இப்பொழுது, திரும்பவும் பழைய சமையல் முறைக்குப்போக வேண்டியிருக்கிறது. காரணம் கெரசின் கிடைக்கவில்லை, காஸ் கிடைக்கவில்லை. இவற்றை கனம் அமைச்சர் அவர்கள் கருணையோடு பார்க்க வேண்டும்.

இன்றைக்கு நியாயவிலைக் கடையிலே ரூ. 300 சம்பளம் உள்ளவர்களுக்கு அரிசி கொடுக்கிறார்கள். அதுவும் எவ்வளவு, 4½ அவுன்ஸ். மற்றவற்றையெல்லாம் வெளி மார்க்கெட்டிலே வாங்கியாகவேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்கிறாரேயென்று, நேற்று நியாயவிலைக் கடையிலே துவரம் பருப்பு வாங்கி வரச் சொன்னேன். கொடுக்கமாட்டேன் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக வாங்கச் சொன்னேன். பருப்பெல்லாம் கொடுக்கமாட்டோம், அரிசிதான் கொடுப்போம் என்று சொன்னார்கள். ஃபேர் பிரைஸ் ஷாப், கூட்டுறவுத் துறையால் நடத்தப்படுவதில்லை, பச்சைப் பருப்பு கிலோ ரூ. 3.10. கடலைப் பருப்பு ரூ. 2.90. கிட்டத்தட்ட ஒரு படி ரூ. 4½-க்கு வருகிறது. புளி ஒரு கிலோ ரூ. 2½, ரூ. 2¾-க்கு விற்கிறது. இன்னும் 2 மாதம் போனால், ரூ. 5, ரூ. 6 ஆகிவிடும். இன்றைக்கு இந்நிலையில் எப்படிக் குடும்பம் நடத்துவது என்று சென்னையிலே இருக்கிற மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்பது, ரூ. 300 வருமானம் உள்ளவர்களுக்குத்தான் கார்டு என்பதை, ரூ. 700 ஆக உயர்த்துங்கள்.

அவர்களுடைய நபர் எண்ணிக்கையை பார்த்துக் கொடுங்கள். ஸ்டாட்டிஸ்டிக்ஸ் டிபார்ட்மெண்டிலே அதைச் செய்யலாம். ஒரு குடும்பத்திலே 5 நபர் இருந்தால், இவ்வளவு துவரம் பருப்பு, இவ்வளவு கடலைப் பருப்பு, இவ்வளவு புளி, இவ்வளவு மிளகாய் தேவைப்படும் என்று கணக்குப் பாருங்கள். அது ஓரளவுக்கு ஹோம் சையன்ஸ் கிராஜுவேட்சுக்குத் தெரியும். நாங்கள் எல்லாம் படிக்கும்போது 5 நபர் கொண்ட குடும்பத்திற்கு இவ்வளவு செலவாகும் என்று பட்ஜெட் போட்டிருக்கிறோம். 4 கிலோ

துவரம்பருப்பு, 4 கிலோ கடலைப் பருப்பு, இவ்வளவு மிளகாய் என்று ஒவ்வொரு பொருளையும் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியில் வாங்குகிற வசதியைச் செய்தால், நாங்கள் தாராளமாக வாங்கிக்கொள்ள முடியும். இன்னும் கொஞ்சம் அதிக மான அளவிலே கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டிஸ் திறந்து அங்கே இருப்பவர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கவேண்டும்.

சாதாரணக் கடையிலே கிடுகிடு என்று வேலை நடக்கிறது. கூட்டுறவுக் கடைகளிலே இருப்பவர்கள் மெதுவாக வேலை செய் கிறார்கள். கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைட்டியிலே இருப்பவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுக்கிறார்கள் அன்னிய நாடுகளிலே. உடனடியாகப் போனவுடன் சாமான்களைக் கொடுக்க வசதி செய்ய முடியுமா என்று இவர்கள் பார்ப்பது மிக மிக அவசியம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

நமக்குத் தேவைப்படுகிற எண்ணெய் என்ன விலை விற்கிறது? நல்லெண்ணெய் லிட்டர் ரூ. 7.90, ரூ. 8-க்கு விற்கிறது. கிட்டத் தட்ட ஒரு வீசை ரூ. 12 ஆகிறது. இந்த விலையில் ஒரு குடும்பம் நடத்த முடியுமா? இதற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும். இதே மாதிரிக் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய். கேட்டால், நாங்கள் எள் அதிகமாக உற்பத்தி செய்யப்போகிறோம். துவரை உற்பத்தி செய்யப்போகிறோம், செய்கிறோம் என்று சொல்கிறார்களேதவிர, சந்தை கடைக்கு வரவில்லை.

நம்முடைய மாநிலத்திலிருந்து வெளியே போகின்ற அவற்றை நிறுத்தினால் நமக்கு ஒருவேளை அனுகூலமாகக் கிடைக்குமா என்று யோசிக்கவேண்டும். முன்னால் அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள், வேர்க்கடலையை வெளியே விடாதீர்கள். அதைக் கொஞ்சம் தடைசெய்தால் எண்ணெய் விலை இறங்கும் என்று சொன்னார்கள். எந்த ஆயிலை எடுத்துக்கொண்டாலும், கிட்டத்தட்ட ரூ. 8 ஆகிறது. ஓ.கே. நல்லெண்ணெய் அந்த விலை. (குறுக்கீடு) சன் பிளவர் ஆயிலா, அது இன்னும் விலை அதிக மாகும். இப்பொழுதுதான் பயிர் செய்ய ஆரம்பித்திருக் கிறார்கள். எப்பொழுது எண்ணெய் கொடுப்பார்களோ தெரிய வில்லை.





இதே மாதிரி விலைவாசி போனால், பெண்கள் எல்லாம், நாங்கள் எல்லாம், கோட்டையை நோக்கி ஊர்வலம் வரவேண்டியதுதான். குடும்பம் நடத்தவே முடியாது. சென்னையில், பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற காரணத்தாலே, உடனடியாகக் கவனித்து, இதற்கு ஆவன செய்யவேண்டும். 531 கடைகள்தான் திறக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 500 கார்டுகள் கொடுத்ததாகச் சொன்னார்கள். ரூ. 700 வருமானம் வாங்குகிறவர்களுக்கு கார்டுகளைக் கொடுத்து, கடைகளை அதிகரித்து, ஒழுங்காக வினியோகிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவைகளைக் கண்காணிக்க பேட்டை எம்.எல்.ஏக்கள் கொண்ட, அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும், கமிட்டி போட்டு பொதுமக்களுக்குப் பொருள்கள் ஒழுங்கான முறையிலே சேர்க்கப்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும்.

சர்க்கரையை எடுத்துக் கொள்ளுங்கள். 1-ம் தேதி கடைக்குப் போனால், சனிக்கிழமை வாருங்கள் என்று சொல்கிறார்கள். சனிக் கிழமை கடைக்குப் போனால், திங்கட்கிழமை வாருங்கள் என்று சொல்கிறார்கள். அடிக்கடி கடைக்குப் போகவேண்டிய கட்டத் திலே நாங்கள் நின்றுகொண்டிருக்கிறோம்.

அடுத்து அரைவைக் கூலி. அமைச்சர் சொன்னார், மாவு மில் களுக்கு 25 சதவீதம்தான் கட் என்று. அவர்களுக்கு 75 சதவீதம் கட். ஒரு கிலோ சீயக்காய்க்குக் கூலி ரூ. 6. சில மிஷன்களிலே சீயக் காயை அரைக்க முடியாது என்று கூறிவிடுகிறார்கள். ஆகவே, அதை இடி இடி என்று இடித்துப் பொடியாக்குவதற்காகப் பெண்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். ஒரு கிலோ கோதுமைக்கு 40 பைசா வாங்குகிறார்கள். இங்கே கேட்டால், 25 சத வீதம் கட்தான், தாராளமாக அரைப்பார்கள் என்று சொல் கிறார்கள். அந்த அரைவை மில்லுக்கும் 75 சதவீதம் கட். ஒரு கார்டு கூட நான் வைத்திருக்கிறேன். பெண்கள் நலிந்திருக் கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினை முக்கியமானது என்று யோசித்து ஆவன செய்ய வேண்டும்.

அதே மாதிரி அரிசியை கோடம்பாக்கத்திலே பிரிட்ஜுக்கு கீழே விற்றுக்கொண்டிருந்தார்கள். அங்கே லைசென்ஸ் கட்ட வேண்டிய அவசியமில்லை. ரைஸ் ஓப்பன் மார்க்கெட்டிலே விற்

கப்படுகிறது. போலிஸ்காரர்கள் வந்து தூக்கிக்கொண்டார்கள். சட்டத்தை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். எல்லாக் கடைகளிலும் அரிசி விற்கப்படுகிறது. கோடம்பாக்கம் பிரிட்ஜ் அடியிலே விற்றவர்கள் என்ன பாவம் செய்தார்கள். ஏன் திடும் என்று போலீஸ் நடவடிக்கை எடுக்கிறது? இது மக்களுடைய அன்றாடப் பிரச்சினை, இது இல்லையென்றால் ஒரு நாள் ஓடாது. ஆகவே அரசாங்கம் இந்த உணவுப் பிரச்சினையிலே அதிகமாக அக்கறை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு வீசை எண்ணெய் விலை 6 ரூபாய் என்று விற்றுக் கொண்டிருந்த நேரத்திலே நீங்கள் எல்லாம் கலெக்டர் ஆபீசுக்கு முன்னாலே மறியல் செய்தீர்கள். இன்றைக்கு விலை என்ன? நாங்கள் எல்லாம் ஊர்வலம் தான் வரமுடியும். நாங்கள் எதிர்க் கட்சியாக இருக்கக்கூடியவர்கள் குறைவாகத்தான் இருக்கிறோம். ஒருவர் போனால் ஒருவர் கட்டாயமாக வந்து உட்கார வேண்டி யிருக்கிறது. இவ்வளவு பெரிய பிரச்னையைப்பற்றி . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இவ்வளவு பெரிய பிரச்சினையைப்பற்றி விவாதம் நடக்கும்பொழுது எதிர்க் கட்சியிலே யாரும் அதிகமாக வராதது வருத்தமாக இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எங்களுடைய பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. நீங்கள் 174 பேர்கள் இருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் கொஞ்சமாகத்தான் இருக்கிறோம். ஆகவே விலை வாசியைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே நடுத்தர மக்கள், லோயர் மிடில் கிளாஸ் பீபிள், குறைந்த வருமானத்திலே உள்ள வர்களுக்காக அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கையை எடுக்கவேடுமோ அதைக் காலாகாலத்திலே எடுக்கவேடும். கிரோசினிலிருந்து உப்பு, மிளகாய் வரைக்கும் விலை அதிகமாகி விட்டது.

பெண்கள் எல்லாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். காய்கறித் தோட்டம் என்று ராஜாஜி ஹாலிற்குப் பக்கத்திலே போட்டார்கள். அங்கே கடை என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அங்கே போய்ப் பார்த்தால் தெரியும், காய்கறி எல்லாம் வாடி வதங்கியிருக்கின்றன ஆகவே அங்கேயும் உற்பத்தியாகவில்லை. ஆகவே காய்கறிகள், அத்தியாவசிய





உணவுப் பொருட்கள் இவைகளின் விலைகளைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தால் தான் நடுத்தர மக்களும் குறைந்த வருமானமுள்ள மக்களும் பிழைப்பதற்கு வழி ஏற்படும். இது மிக முக்கியமான பிரச்சினை, அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்சினையை விவாதிக்கின்ற நேரத்திலே பெரு வாரியான அங்கத்தினர்கள் வரவில்லையே என்ற குறைபாடோடு இருந்துகொண்டிருக்கின்ற நிலைமையிலே நாம் இருக்கின்றோம்.

இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பது, விலைவாசி கிடுகிடுவென ஏறிக்கொண்டே இருக்கின்ற அவல நிலைமையைத் தான் தமிழக மக்கள் உற்றுக் கவனித்துக் கொண்டேயிருக் கிறார்கள். இதிலே என்ன என்ன வழிவகைகள் அரசாங்கத் தரப்பிலிருந்து செய்யப் போகிறார்கள்? இன்னும் நியாய விலைக் கடைகளை சிட்டியிலும் மற்றக் கிராமப் பகுதிகளிலேயும் திறக்கப் போகிறார்களா? அத்தியாவசியப் பண்டங்களின் விலையைப் பற்றி சட்டத்திலே ஏதாவது மாறுதல் செய்யப்போகிறார்களா என்பதை அறிவதற்கு நாங்கள் எல்லாம் மிக ஆவலாக இருக் கிறோம். அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைக் குறைப் பதற்காக மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டியது அவர்களுடைய கடமை என்றாலும்கூட இந்த மாநிலத்தின் ஆட்சியிலே உள்ளவர்கள் விலையேற்றத்தைத் தவிர்க்க என்ன என்ன செய்யவேண்டுமென்பதையும் பார்க்க வேண்டும்.

இன்று பிக்சட் இன்கம் குரூப்புக்கு பெருத்த கஷ்டமும் இன்னலும் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. பொதுவாக அரிசி போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் எப்படி அதிகமாகியிருக்கின்றன என்பதைப்பற்றி யெல்லாம் அம்மையார் அவர்கள் மிகவும் திறமையாகவும் உருக்க மாகவும் இந்த மன்றத்திலே நம்முடைய குடும்பங்கள் எவ்வளவு கஷ்டங்களோடு நடத்திச் செல்லப்படுகின்றன என்பதைப்பற்றி யெல்லாம் நல்லமுறையிலே கோடிட்டுச் சித்தரித்துக் காட்டியிருக்

கிறார்கள். நானும் அதை ஆதரிக்கின்ற வகையிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். புட்கிரயின்ஸ் டிரேடை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்ற முறையிலே வட இந்தியாவிலே 6 மாநிலங்களிலே உள்ள விட் முழுவதையும் கொள் முதல் செய்து விநியோகம் செய்வதற்கு மத்திய அரசாங்கம் நட வடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

தமிழகத்திலே உள்ள நாம் அதிகமாக உற்பத்தி செய்கிறோம்; தன்னிறைவைப் பெற்றிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு இருந்தாலுங்கூட—அதே நேரத்திலே இன்னும் அத்தியா வசியப் பண்டங்களின் விலைகள் குறையவில்லை; அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன என்பதைத்தான் பார்க்கிறோம். இன்னும் நம் கைகளுக்கு பருப்பு, எண்ணெய், விறகு போன்ற பொருட்கள் கிடைக்கவில்லை. அதற்கு என்ன என்ன வழிவகை களைச் செய்யவேண்டும்? கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொசை டிகள் ஏற்படுத்தவேண்டும் அல்லது சிறப்பு அங்காடிகள் ஏற்படுத்தவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அவைகளை ஏற்படுத்துவதன் மூலமாக முடியாது என்ற கருத்தைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அத்தியாவசியப் பண்டங்களை யெல்லாம் பூட்டி வைத்து, தேக்கி வைத்து, சேமித்து வைத்து இருப்பதைத் தடுப்பதற்கு உடனடியாகச் சட்டம் கொண்டுவர வேண்டும்.

மத்திய அரசாங்கத்திடம் அணுகி—யுத்த காலத்தில் எப்படிச் சட்டம் கொண்டுவரப்படுகிறதோ அந்த முறையிலே இப் பொழுதும் கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். முன்பு ஒரு படி அரிசித் திட்டம் என்று இந்த அரசாங்கம் கொண்டு வந்து, இப்பொழுது விட்டிருக்கிறது. அதுவும் குறிப்பிட்ட 300 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்குத்தான் நியாயவிலைக் கடைகள் என்ற முறையிலே பட்டணத்திலே இருக்கிறது, பட்டிக்காட்டிலே இல்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கு பார்த்தாலும் அமோக விளைச்சல் என்று ஒரு பக்கம் நாம் சொல்லுகிற நேரத்திலே அத்தியாவசியப் பண்டங்களின் விலை இன்றைக்கு ஏறிக்கொண்டே போகின்றது என்றால் பொரு





ளாதாரத் திட்டத்திலே ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன என்பதுதான். அதையெல்லாம் தடுக்கவேண்டும். விலைவாசி உயர்வுக்கு யார் காரணம் என்ற முறையிலே இந்த விவாதத் திற்குப் பதில் சொல்லாமல், மத்திய அரசுதான் காரணம் என்று சொல்லாமல், நாம் என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறோம் என்பதைச் சுட்டிக் காட்டவேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் பகுதியிலே ஒரு சிறப்பு அங்காடி இருக்கிறது. அதிலே பணியாற்றிய ஊழியர்கள் எல்லாம் ஸ்ட்ரைக் செய்தார்கள் என்ற காரணத்தினால் பல நாட்களாக அது மூடப் பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் அதனாலே உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மண்ணெண்ணெய் பல இடங்களிலே கிடைக்காத நிலைமைதான் இன்னும் இருக்கிறது. ஆனால் பத்திரிகையிலே பார்த்தால் தாராள மாகக் கிடைக்கிறது என்று கலெக்டர்கள் அறிக்கைகளை விட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

கடைகளிலே சென்று பார்த்தால் இல்லையென்று நான் தைரிய மாகச் சொல்வேன். எல்லாப் பொருட்களின் விலைகளும் கிடுகிடு வென ஏறிக்கொண்டே இருக்கின்றன. அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். நான் போராட்டத்தைப் பற்றியெல்லாம் சொல்லவில்லை.

1965-ஆம் ஆண்டிலே விலைவாசி இருந்ததைப்போன்று இன்று எத்தனை அதிகமாக விலைகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம்.

தமிழகத்திலே உள்ள மக்கள் எல்லாம் பொறுமையாக இருக் கின்ற காரணத்தினால் அரசியல் கட்சிகளுக்கு தைரியம் இல்லை என்று சொல்வார்கள், திறமை இல்லை என்று சொல்வார்கள், ஆற்றல் இல்லை என்று சொல்வார்கள். அவை மௌனமாக இருப் பதால் எந்தவிதக் கிளர்ச்சியும் இல்லையே என்று ஆளுங் கட்சியிலே இருக்கிற அமைச்சரவையிலே இருக்கிற அமைச்சர் பெருமக்கள் எல்லாம் நினைக்கக்கூடும். ஆனால் மக்கள் இந்த நிலைமையைப்பற்றி அதிருப்தி அடைந்திருக்கிறார்கள்.

பெருத்த அளவிலே விலைவாசிகள் உயர்வதற்கு விட்டால் நாட்டிலே பெரும் பொருளாதாரப் புரட்சி ஏற்பட்டுவிடும் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இந்தப் பிரச்னையிலே தீர்வு காணுவதற்கு, விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, விறகு போன்ற பொருட்கள் கிடைக்கச் செய்வதற்கு—தொழிலாளர் பெருமக்கள் எல்லாம் இன்றைக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். பட்டணத்திலே உள்ளவர்கள் வீட்டுவாடகை கொடுப் பதற்கே தங்கள் வருவாய் போதவில்லை என்ற நிலைமை இருப் பதால் அரிசி போன்ற அத்தியாவசியப் பண்டங்களை வாங்கு வதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்—எல்லா இடங்களிலும் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி விநியோகம் செய்வது நல்லது. இதிலே வியாபாரிகள் பார்த்துக்கொள்வார்கள் என்று விட்டுவிடுவது சரியல்ல, அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக எல்லைப் பகுதிகளிலே விலை அதிகமாக உயர்ந்திருக் கிறது. எங்கள் பகுதியிலே ஒரு பக்கா அரிசி ரூ. 2.60 விற்பதாக எங்கள் பட்டணத்தில் உள்ள எம்.எல்.ஏ. டாக்டர் மோஸஸ் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தவிதமாக நெருக்கடி நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. எல்லை யோரப் பகுதிகளிலே இருக்கின்றன என்பதால் மட்டுமல்ல, அந்தப் பகுதியிலே விளைச்சல் குறைவாக இருப்பதால் விலைவாசி உயர்ந்திருக்கிறது. இந்தப் பிரச்னைகளை மனிதாபிமானத்தோடு அணுகி இதற்கான சுமுகமானத் தீர்வினை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவையிலே இருக்கிற மக்கள் நல்வாழ்வை அதிகமாக கவனித்துக்கொண்டிருக்கிற உணவுத்துறை அமைச்சர் அவர்கள் வேண்டிய பரிகாரம் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, கொள்முதலைப் பொறுத்தவரைக்கும்—நியாயவிலைக் கடைகளைப் பொறுத்த வரையிலே இங்கேயே பலமுறைகள் பேசி யிருக்கிறேன். இருந்தாலும் இன்றைக்கு கொள்முதலைப் பற்றி மத்திய சர்க்கார் கோதுமையைப் பொறுத்தவரையிலும் அவர் களே கொள்முதலை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நெல், அரிசியைப் பொறுத்தவரையிலும் பிறகுதான் யோசிக்க வேண்டு





மென்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அகில இந்திய ரீதியிலே மறுபடியும் உணவு அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி மொத்தக் கொள்முதலை சர்க்கார் ஏற்றுக்கொள்வதுபற்றி ஒரு விதியை, ஒரு சட்டத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று—அந்த முடிவிற்குத் தமிழக அரசும் தன்னுடைய கொள்கையை நல்லமுறையிலே முன்னாலே சொல்லி, அதன்படி கோதுமையைப் பொறுத்தவரையிலே மத்திய சர்க்கார் இப் பொழுது முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆகவே, விரைவிலே நாம் கொள்முதலையெல்லாம் ஏற்றுக்கொள்கிற ஒரு நிலைமை வந்து விடும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமந்தோறும் கடைகளை வைக்க வேண்டு மென்று நண்பர் பழனிசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அத்தியாவசியமானப் பொருள்களையெல்லாம் கிராமங்கள் அளவிற்குக் கொண்டுபோகிற அளவிலே நமக்கு அதற்கான வசதி கள் இல்லை என்பதை நான் முன்பே சொல்லியிருக்கிறேன். குறிப்பாக துவரம் பருப்பையோ, மற்ற பருப்பு வகைகளையோ எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 4 லட்சம் டன் அளவிலே தேவைப்படுகிறது.

நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுவது கிட்டத் தட்ட 1 லட்சம் டன் தான். மற்ற 3 லட்சம் டன்னும் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது. திடீரென்று விலைவாசி ஏற்றம் ஏற்பட்டது எல்லோரும் அறிந்த ஒன்று. நம் மாநில சர்க்கார் அரிசியைப் பொறுத்த வரையிலே மாநிலம் பூராவும்—ஏதோ கன்னியாகுமரியில் ஒரு சில இடங்களில் வியாபாரிகள் அங்கு லெவியைக் கொண்டு வந்து விட்டதற்காக விலையேற்றி சர்க்காரைப் பயமுறுத்த வேண்டுமென்று விலையை உயர்த்தியிருக்கிறார்களே தவிர—கொள்முதல் செய்வதில் குறை பாடு நிலைமை நிச்சயமாக இருக்க முடியாது.

அரிசியைப் பொறுத்த வரையில் சொல்கிறேன், நமது மாநிலம் தனி மண்டலமாக ஆக்கப்பட்டு விட்ட பிறகு நிச்சயமாக நம் மாநிலத்தில் அரிசியைப் பொறுத்த வரையில் விலை அதிகமாக ஏறவில்லை கோவை, சென்னை போன்ற இடங்களில் 80 ஆயிரம்

[திரு. மன்னை. ப. நாராயணசாமி] **[1973 ஏப்ரல் 5**

டன் சர்க்காரால் கொள்முதல் செய்யப்பட்டு நியாய விலைக்குக் கொடுக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். நம்முடைய அம்மையார் 300 ரூபாய்க்கு போதாது, 700 ரூபாய்க்கு வேண்டும் என்று ஒருவேளை சம்பளம் உயர்ந்த காரணத்தினாலோ என்னவோ கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த அரிசி போன்றவை களையெல்லாம் விலை அதிகமாக உயர்த்த முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொதுவாகச் சொல்கிறேன், எந்த அளவிற்குச் சர்க்கார் சமாளிக்க முடியுமோ அந்த அளவிற்குச் சமாளித்துக் கொண்டு வருகிறோம். இந்த அரசு தனி மண்டலமாக ஆக்கப்பட்டு, அரிசியைப் பொறுத்த வரையில் சமாளித்து வருகிறோம். மைதாவைப் பொறுத்தவரை நம் கையில் இல்லை.

கோதுமையைப் பொறுத்தவரை அகில இந்திய ரீதியிலே சில மாநிலங்களைச் சேர்த்து தனி மண்டலமாக ஆக்கியிருக்கிறார்கள். இனி நிச்சயமாக கோதுமையைப் பொறுத்த வரையில் கஷ்டம் இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் உற்பத்தி செய்யப்படுகிற கோதுமை மாவுகள் எல்லாம் கேரளாவிற்கும், ஆந்திராவிற்கும் செல்லக் கூடிய நிலைமை, மேலும் நமக்கு அதிகத் தேவையற்ற நிலைமை இருந்து வருகிறது. மைதாவைப் பயன்படுத்துகிற மக்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால் அதிகம் இல்லை.

இருந்தாலும் எங்கு பார்த்தாலும் மைதா கிடைக்கவில்லை என்ற பெரிய கோஷம் எழுப்பப்படுகிறது. கேரளாவிற்கும் ஆந்திராவிற்கும் அனுப்பவேண்டியவர்கள் இந்தக் கோஷத்தை சொல்லிக்கொண்டு வந்தார்களே தவிர மக்களின் அன்றாடத் தேவைக்கு நிச்சயமாக இது கிடையாது.

பொதுவாகச் சொல்கிறேன். ஏழை மக்களுக்கு எந்த விதமான கஷ்டமும் உணவுப் பிரச்னையில் ஏற்படவில்லை என்று கூறிக்கொள்கிறேன். அம்மையார் சொன்னார்கள், நான் கடைக்குப் போய் கேட்டேன், பருப்பு கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நான் முன்னாலேயே சொன்னபடி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் வைத்திருக்கிற



1973 ஏப்ரல் 5]

கடைகளில் துவரம் பருப்பைத் தருகிறோம் ; 50 பைசா குறைத்துத் தருகிறோம் ; உள்ளபடியே ஒரு லட்சத்து 30 ஆயிரம் கார்டுகளுக்கு 14 கடைகளிலும் கொடுத்திருக்கிறோம்.

இந்த 14 கடைகளைப் பொறுத்தவரை, அரிசியைப் பொறுத்த வரை எடுத்தால் ஒரு மாதத்திற்கு 700 டன், கோதுமை 76 டன், மைதா 107 டன், ரவை 60 டன், கோதுமை தவிடு 130 டன், சர்க்கரை 487 டன், கடலைப் பருப்பு 1.19 டன், பயத்தம் பருப்பு 1.27 டன், உளுத்தம் பருப்பு 0.16 டன், துவரம் பருப்பு 23 டன், மண்ணெண்ணெய் 2,273 லிட்டர் என்று ஆகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நியாய விலைக் கடைகள் 537 இருக்கின்றன. இங்கே கொடுப்பது 14 கடைகளில் என்று மாத்திரம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தவறாகப் புரிந்துகொண்டு கேட்டார்கள் என்று கருதுகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் 14 கடைகளிலும் துவரம் பருப்பை வைத்து, 50 பைசா குறைவாக விற்கிறோம். மற்றவைகளை சப்ளை செய்வதற்கு வெளி மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்து கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், அங்கே திடீரென்று விலையேறி விட்ட காரணத்தினால் கொள்முதல் செய்து கொடுப்பது என்றால் விலை ஏறிவிடும் என்ற காரணத்தினால் செய்யவில்லை.

இந்த 14 கடைகளிலும் துவரம் பருப்பை வைத்து 50 பைசா குறைவாகக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இதை எதற்காகப் படிக்கிறேன் என்றால் உள்ளபடியே துவாம் பருப்பைப் பொறுத்த வரையில் 1 லட்சத்து 30 ஆயிரம் குடும்பங்களுக்கு கிட்டத்தட்ட 130 டன் மாதம் விற்கும் என்ற அளவிலே சேமித்து வைத்தோம் என்றாலும் கூட 28 டன்னுக்கு மேல் விற்க வில்லை. குவாலிடியைப் பொறுத்த வரைக்கும் குறை சொல்ல முடியாது. குவாலிட்டி நன்றாக இல்லை என்று சொல்ல முடியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 14 கடைகளிலும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் கொடுக்கப்படுகிறது என்பதற்குத் தகுந்த விளம்பரம் கிடையாது. எல்லோரும் நியாய விலைக் கடையில்

[1973 ஏப்ரல் 5

கேட்டு ஏமாந்து போகிறார்கள். எதையெதையோ பத்திரிகையில் விளம்பரம் செய்கிறீர்கள். இதைப் பற்றி தினத் தந்தியில் விளம்பரம் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். 14 கடைகள் எங்கெங்கே யிருக்கின்றன என்று விளம்பரம் செய்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நான் சொன்னது இந்த 14 கடைகளிலும் 130 ஆயிரம் பேர் அரிசி வாங்குகிறார்கள். ஜீனி வாங்குகிறார்கள், மண்ணெண்ணெய் வாங்குகிறார்கள். ஆனால் துவரம் பருப்பை வாங்க விரும்பவில்லை. துவரம் பருப்பு அதிகமாகத் தேவைப்படுவதில்லை என்று தெரிகிறது. ஒரு மனிதனுக்கு அன்றாடம் தேவைப்படுவது, 3 சதவீதம் தான் ஒரு குடும்பத்திற்குச் செலவாகிறது. 100 ரூபாய் ஒருவனுக்கு வருமானம் என்றால் 3 ரூபாய் தான் அவன் செலவு பண்ணுகிற காரணத்தினால் இதை அவ்வளவு அத்தியாவசியம் என்று கருத வில்லை என்று நான் கருதுகிறேன்,

இந்த புள்ளி விவரத்தை அதற்காகக் குறைத்துக் கொள்ள வில்லை. எந்த அளவிற்கு மக்களுக்குத் தேவைப்படுகிறதோ அந்த அளவிற்கு கொள்முதல் செய்வதற்கு சர்க்கார் தயாராகி விட்டது. கொள்முதலுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். வெளி மாநிலங்களில் சீசனில் கொள்முதல் செய்ய ஏற்பாடு தயாராகி விட்டது.

உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஜாக்கிரதையாகப் பேசினார்கள். மத்திய சர்க்காரைப் பழிக்க வேண்டாம் என்று சொன்னார்கள். அம்மை யார் அவர்கள் அதைத் தொடுவதே கிடையாது. எல்லாம் மாநில சர்க்கார் கைக்குள்ளே இருக்கிறது என்று—குற்றம் குறைகள் இங்கே இருக்கட்டும், பெருமைகள் அங்கே இருக்கட்டும் என்று—நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

இந்த எண்ணெய்யைப் பற்றிச் சொன்னார்கள். கடலை பூராவும் இங்கேயிருந்து போய்விடுகிறது. 6½ லட்சம் டன்னுக்கு மேல் உற்பத்தி செய்கிறோம். இதில் முக்கால்வாசிக்கு மேல் வெளிப் பகுதிக்குப் போகிறது. அதைத் தடுத்து நிறுத்துகிற செல் வாக்கு எங்களுக்குக் கிடையாது.



[1973 ஏப்ரல் 5

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த 14 கடைகளில் விற்கிற பருப்பின் குவாலிடி நன்றாக இல்லை என்றும் அதனால் வாங்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நீங்கள் இரண்டு பேர்கள் இருக்கிறீர்கள். நீங்கள் வாங்கி சமைத்துப் பார்த்துச் சொல்லுங்கள். இதெல்லாம் பேப்பரில் போடுகிற வியாபாரம் இல்லை. அவரவர்களுக்கு வேண்டிய அளவிற்கு வாங்கிக் கொள்ளலாம். நிறையப் பணம் இருப்பதால் அதைத் தேடிப் போகவில்லை என்று கருதுகிறேன். சப்செக்டை மாற்றவேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரை மணி நேரத் திற்குள் முடித்தாகவேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எனக்கு அரை மணி நேரம் கிடையாதா? மாநில சர்க்காருக்கு உள்ள அதிகாரப் படி அரிசி ஒரு மண்டலமாக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல் கோதுமை அகில இந்திய ரீதியில் ஒரு மண்டலமாக்கப்பட்டு—கோதுமையைப் பொறுத்தவரை பதில் சொல்ல முடியும். அம்மையார் அவர்கள் போராட்டம் துவக்குகிறேன் என்கிறார்கள், தயவு செய்து அகில இந்திய ரீதியில் போராட்டம் துவக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள நிலைமையைச் சொல்கிறேன்.

உங்களுடைய மத்திய உணவு அமைச்சர் 4, 5 நாட்களுக்கு முன்னால் பேசியிருக்கிறார். "நாங்கள் தோற்று விட்டோம், மத்திய சர்க்காரின் திட்டமே தோற்று விட்டது" என்று ஒப்புக் கொண்டார். எங்கள் மேல் கல்லை வேண்டுமானால் தூக்கிப் போடுங்கள், நியாயத்தை மறைத்துப் பேசாதீர்கள். இதனால் என்ன ஆகிறது என்று சொன்னால் ஏழை எளிய மக்கள் அன்னத் தில் சுண்ணம் கலக்கவேண்டாம் என்று பழமொழி, அதைச் செய்யாதீர்கள்.

இது சாப்பாட்டு விஷயம். ஏழைக்கு உண்மையாகவே நன்மை செய்ய வேண்டுமென்றால், இதற்கு என்ன காரணம், யார் தவறு செய்கிறார்கள், யாரால் விலை ஏறுகிறது என்று பார்த்து இந்த விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்பதில் எல்லா உறுப்பினர்களும் தயவு செய்து அக்கறை காட்ட வேண்டும்.

குற்றம் சுமத்துவது சுலபம். யார் வேண்டுமானாலும் குற்றம் சுமத்தலாம். மண்ணெண்ணெய் பிரச்னை பற்றிச் சொல்லி இருக்கிறீர்கள். எனக்கு ஒன்றும் குறை இல்லை. கூட்டுறவுத் துறை மூலமாக கொடுக்க ஏற்பாடு செய்து நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகிறது.

அப்படி மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஏதாகிலும் குறைபாடு இருக்குமானால் ஆளும் கட்சி உறுப்பினர்களானாலும், எதிர்க் கட்சி உறுப்பினர்களானாலும் என்னிடத்திலோ, அல்லது ஃபுட் கார்ப்பரேஷன் கமிஷனரிடத்திலோ கூறினால், செய்தி அனுப்பினால் 24 மணி நேரத்திற்குள்ளாக நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம் என்ற நிலைமையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது)

என்னையே அவசரப்படுத்தினால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஹவுஸ் பர்மிஷனை வாங்கிக் கொள்ளுங்கள்.

With the leave of the House, the time is extended.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மற்றப் பிரச்னைகளிலும் இதற்கு முன்பே நிறையப் பேசியிருக்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எந்த அளவுக்குத் துரிதமாகக் கொள்முதல் செய்து ஆங்காங்கு கடைகளைத் திறக்க வேண்டுமோ அந்த முயற்சியிலே ஈடுபட்டுத் தீவிரமாகச் செயலாற்றி வருகிறது.

தனியார் கொள்முதலை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அதற்கும் ஜாக்கிரதையாக ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். சில்லரைக் கடைகளையும் சர்க்கார் நடத்துவதற்கான முயற்சியினையும் செய்து வருகிறோம். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி முழுவதும் அரிசி விலை ஏறி இருக்கிறது என்று சொன்னார்கள். கன்னியாகுமரி பூராவும் லெவி போட்டு விட்டோம். கேரளாவுக்குப் போகிற அரிசியைத் தடை செய்ய மிகக் கவனம் செலுத்துகிறோம்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னபடி விளவங்கோடு பூராவும் ரேஷன் கார்டு கொடுக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. யார்





யாருக்கு நிலம் இருக்கிறது, குத்தகைதாரர்கள் யார் யார் என்று கணக்கெடுப்பதில் தாமதம். அதுவும் விரைவில் செய்யப்படும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னது போல் 1,400 கிராம் போடப்பட்டு வந்ததை 1,600 கிராமாகப் போட முடிவு செய்திருக்கிறோம்.

எப்போது பேசினாலும் அமைச்சர் வியாபார நோக்குடன் பேசுவதாகச் சொன்னார்கள். அந்தக் கடைகள் எங்கே இருக்கின்றன என்று கேட்டார்கள். அந்த இடங்களைப் படித்து விடுகிறேன். மூர் தெரு ஜி.டி.-இல்; மின்ட், தண்டையார்ப் பேட்டை, வியாசர் நகர், வெங்கடேசபுரம், ஆரிங்டன் தெரு, கோபாலபுரம், இந்திரா நகர், கோமளிஸ்வரன்பேட்டை, அண்ணா நகர், இ.டி. மில் காம்பவுண்டு, பெரம்பூர், சி.என்.கே. ரோடு திருவல்லிக்கேணி, அசோக நகர், நந்தனம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சென்னை நகரில் 14 கடைகள் போதுமா? ஒவ்வொருவரும் ஒரு ஊருக்குப் போய் சாமான் வாங்குவதுபோல் வாங்க வேண்டியிருக்கும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சென்னையில் இருப்பவர்களுக்கு இருக்கும் ஆசை இருக்கிறதே, எவ்வளவு செய்தாலும் போதவில்லை. கிராமத்தில் இருக்கும் மக்களையும் தயவு செய்து கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். மெட்ரூசிலேயே ஓட்டை வாங்கிக்கொண்டு மெட்ரூசுக்கு எவ்வளவு செய்தாலும் போதவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்களையும் கொஞ்சம் பாருங்கள்.

இந்தப் பிரச்சினையிலே முடிந்த வரையிலும் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க சர்க்கார் கவனம் செலுத்தி வருகிறது என்று கூறி இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** அமைச்சர் அவர்கள் நாம் சொன்ன பாயிண்டுகளுக்குப் பதில் சொல்லவில்லை. சமீபத்தில் மதுரையில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அக்டோபர் மாதத்தில் அரசு நெல் மொத்த வியாபாரத்தை எடுத்துக் கொள்ளப்போவதாக அறிவித்தார்கள். முடிவு செய்து தான் அறிவித்திருப்பார்கள். அந்த முடிவின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ஆரம்பத்திலேயே சொன்னேன். கோதுமையைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் கொள்முதலை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அரிசியைப் பொறுத்தவரை கரீஃப் சீசனில் உணவு அமைச்சர்கள் மாநாட்டில் முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வெகு சீக்கிரத்தில் முடிவு எடுக்கப்பட்டு விடும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரியில் விளவங்கோடு தாலுகாவில் கார்டு முறையில் அரிசி விநியோகம் செய்யப் போவதாகச் சொன்னார்கள். விளவங்கோடு தாலுகாவைப் போல் கல்குளம் தாலுகாவிலும் மோசமான நிலைமை இருக்கிறது. கடலோரப் பகுதிகளில் கார்டு விநியோகம் செய்ய இருப்பது போல் மலையோரப் பகுதியிலும் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மைனர் டீடைல்ஸ் எல்லாம் இதிலே எப்படிக் கேட்க முடியும்? தனியாக அமைச்சரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மலையோரப் பகுதிகளிலும் உற்பத்தி செய்ய முடியாத காரணத்தால் விளவங்கோடு தாலுகாவைப் போல் கல்குளம் தாலுகாவிலும் கார்டு முறையை அமல் செய்தால் நெருக்கடி தீரும். அதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கல்குளம் தாலுகாவில் நான்கு கிராமங்களில் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றப் பகுதிகளில் விவசாயம் நடைபெற்று அறுவடை நடக்க இருக்கும் காரணத்தால் கொண்டுவரப்படவில்லை.

வெளி மார்க்கட்டில் இருந்து அரிசி வாங்கிக் கொண்டுவர அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கலெக்டரிடம் சொல்லி வாங்கி வரும் அரிசியைப் படி அரிசி இவ்வளவு ரூபாய்க்குத் தான் விற்க வேண்டுமென்று கட்டாயமாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் சாதாரணமாக வெளியிலிருந்தும் வாங்கிக் கொண்டு வரலாம். இதிலே ஏதாவது குறை ஏற்பட்டால் பரிசீலிக்கலாம்.



**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஒரு படி அரிசி கூட வாங்கிக் கொண்டு வருவதற்கு அனுமதிப்பது இல்லை. அப்படி அனுமதிக்காத காரணத்தால்தான் கார்டு மூலம் விநியோகம் செய்தால் பிரச்சினை தீரும் என்று கூறுகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அனுமதிக்கச் சொல்லி கமிஷனர் உத்தரவு போட்டிருக்கிறார். அனுமதிக்கவில்லை என்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மத்திய அரசு ஊழியர்களுக்கு இப்போது அதிகமாகச் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது ஊழியர்களுக்கு அந்தமாதிரிச் சலுகை ஏற்படவில்லை. அவர்களுக்கு அதிகமாகக் கொடுத்திருப்பதன் காரணமாக விலை ஏறக் காரணமாக இருக்கும்.

ஆகவே, நமது ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நியாயமான, கட்டுப்படியான விலையில் பண்டங்கள் கிடைக்க என்ன வழிவகைகளை அரசாங்கம் செய்திருக்கிறது? அதற்கு திட்டம் இருந்தால் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதற்கான திட்டங்களை எல்லாம் இப்போது திடீரென்று சொல்ல முடியாது. மத்திய அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் உயர்ந்து விட்டது, மாநில அரசு ஊழியர்களுக்குக் குறைவாக இருக்கிறது என்ற பிரச்சினை எல்லாம் போய்விட்டது. மத்திய அரசில் வேலை செய்பவர்கள மாநில அரசில் கொடுக்கப்படுகின்ற அளவுக்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள்.

அந்தக் கணக்கை எல்லாம் பார்ப்பதைவிட எந்தெந்தத் துறைகளில் விலைவாசிகளைக் குறைக்க முடியும், உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதில் நம்முடைய மாநிலம் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான எல்லா உரிமைகளையும் மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கிறோம். அந்த உரிமைகள் எல்லாம் வந்து விட்டால் இந்தப் பண்டங்களின் விலைவாசிப் பிரச்சினை தீரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது.

(10) தனியார் அலுவல்கள்—( i ) சட்ட முன்வடிவு.

**தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/72)—(தொடர்ச்சி).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 12—2—1973-ம் நாளன்று திரு. மணலி சி. கந்தசாமி அவர்களால் முன்மொழியப்பட்ட "தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிலச் சீர் திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். அன்றையதினம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது அதைத் தொடர்ந்து அமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அன்றையதினம் நடைபெற்ற விவாதத்தில் நான் என்னுடைய உரையிலே பல கருத்துக்களை எடுத்துச் சொல்லிவந்தேன்.

நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தமட்டில் தமிழக அரசு எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியை உள்ளபடியே இந்த அவையில் இல்லாவிட்டாலும் வெளியிலே உட்கார்ந்து பேசும் போது நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள், மிகச் சிறந்த முறையில் சீர்திருத்தங்களை இந்த அரசு செய்து வருகிறது என்ற உண்மையை. நேற்றைய முன்தினம் இந்த அரசு நிறைவேற்றி இருக்கிற குத்தகைதாரருக்கு நிலத்தை உரிமையாக்கும் சட்டம் பொதுமக்களிடையே மாபெரும் புரட்சியை ஏற்படுத்த இருக்கும் சட்டம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இப்படி பல்வேறு சட்டங்களை, நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இந்த மன்றத்தில் நிறைவேற்றி பல சட்டங்கள் சட்டங்களாகவே போய் விட்டன என்று கருதாமல் சமுதாயத்தில் எந்த அளவுக்கு மாற்றம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் உணர்ந்து பார்க்க வேண்டும்.



உதாரணமாக குடியிருப்புச் சட்டம். அதன் மூலம் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 1,57,000 மக்கள் பலனடைந்திருக்கிறார்கள். நிலம் அற்ற ஏழைகளுக்கு, குடிசை மட்டும் போட்டு வாழ்ந்தவர் களுக்கு, அவர்கள் குடிசை போட்டிருந்த இடத்தை அவர் களுக்கே சொந்தமாக்கும் திருவிழா தஞ்சையில் இன்றொரு மூலையில் நடைபெற்றபோது, முதல் அமைச்சர் அவர்கள் என் தலைமையில் பட்டா வழங்கும்போது, இந்தத் நிர்மாணத்தைக் கொண்டு வந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மணலி கந்தசாமி அவர்கள் அன்று பேசும்போது மனம் திறந்து சொன்னார்கள். திரண்டிருந்த லட்சக்கணக்கான விவசாயிகள் எதிரில் பேசும்போது அவர்கள் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களே, உங்களால் இன்றையதினம் இடம் பெறுகிற இந்த லட்சக்கணக்கான மக்கள் இந்த இடங்களை சொந்தமாக்கிக் கொள்ள எவ்வளவோ போராட்டங்களை நடத்திப் பார்த்தார்கள்; எவ்வளவோ பேர்கள் செத்தார்கள் என்று செத்தவர்கள் பெயர்களை எல்லாம் இன்று உணவு அமைச்சராக இருக்கும் மன்னை நாராயணசாமி அவர்களும், மணலி கந்தசாமி அவர்களும் அவர்களின் பெயர்களைச் சொல்லி, இவ்வளவு பேர்கள் செத்தார் கள், அப்போதெல்லாம் நிறைவேற முடியாமல் போய் விட்டது, எப்போது இப்படிப்பட்டச் சட்டம்வரும் என்று எதிர்பார்த்தோம். இப்போது இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, லட்சக்கணக்கான ஏழைகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கிவிட்டீர்கள்; அவர்கள் இன்று வீட்டில் இரவில் படுக்கும்போது சொந்த வீட்டில் படுக் கிறோம் என்ற பெருமையோடு படுப்பது மட்டுமல்ல, கலைஞர் ஆட்சி வாழ்க என்று வாழ்த்துவார்கள் என்று பெரியவர் மணலி அவர்கள் வேதாரண்யம் கூட்டத்தில் அறிவித்தார்கள்.

அதை நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசிய மில்லை என்று கருதுகிறேன். அவ்வளவு சிறப்பான சட்டங்களை யெல்லாம் நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இன்று நாட்டில் தனித்தனியாக எவ்வளவோ விதிவிலக்குகள் தரப்பட்டிருக் கின்றன. அவற்றை ஒவ்வொன்றாக நீக்கி, பெரும்பாலானவற்றை அகற்றியிருக்கிறோம். சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு பயிரிடும் பூமியாக இருந்தால் அரசின் அனுமதி பெற்று எவ்வளவு வேண்டுமென்றாலும் வைத்துக்கொள்ளலாம் என்று விதி வைத்து,

ஒருவர் விலக்கு மூலம் அனுகூலம் பெறச் செய்து, ஏறக்குறைய ஏழாயிரம் ஏக்கர் விதிவிலக்கு மூலம் பயன் அடைந்திருந்தார்கள். ஒரே நாளில் சட்டத்தின் மூலம் அரசு எடுத்துக்கொள்ளும் என்று அறிவித்ததோடு மட்டுமல்ல; அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அடுத்து, ட்ரஸ்ட் லான்ட்ஸ், கிருஷ்ணன் படத்திற்காக அறுபது ஏக்கர், வேறு பள்ளிக்கூடங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள் என்று இவைகளின் பெயரால் நிலங்களை எழுதி வைத்துவிட்டு நாட்டில் ஏமாற்றி வந்த அந்த நிலப்பிரபுக்களின் ட்ரஸ்ட்கள் செல்லுபடியாகாத அளவில் செய்திருக்கிறோம். சட்டம் இயற்றியிருக்கிறோம். பொறுக்குக் குழுவில் அவர்களும் இருந்தார்கள். பொறுக்குக் குழுவில் அவர்கள் சொன்ன ஒரே கருத்து அறநிலையங்களுக்குச் சொந்தமான பூமிகளை எடுத்துவிட வேண்டும் என்ற கருத்தைத்தான் அவர்கள் வற்புறுத்தினார்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** மேய்ச்சல் நிலங்களுக்கான விதிவிலக்கை ரத்து செய்தார்கள். இரண்டாயிரம் ஏக்கர்கள் என்றால் 1,500 ஏக்கருக்கு வசதி இருக்கிறது, மீதி 500 ஏக்கர் மேய்ச்சல் நிலமாக இருக்கிறது. விதி விலக்கு ரத்து செய்யப்படும்போது 2,000-க்கும் ரத்து செய்யப்படுமா? அல்லது 500-க்குத்தான் செய்யப்பட்டிருக்கிறது என்றால் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இரண்டு வகையான சட்டங்களை ரத்து செய்திருக்கிறோம். மேய்ச்சல் காடு என்று சொல்லி யார் வேண்டுமானாலும் 50 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று ஒரு விதிவிலக்கு இருந்தது. வேறொன்று, கால்நடைகள், பால் பண்ணைகள் இவற்றிற்கான விதிவிலக்கு சில பெரியவர்களுக்கு—13 அல்லது 14 பேர்கள் இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்—கொடுக்கப்பட்டிருந்தது. ஐம்பது ஏக்கர் வரையில் யார் வேண்டுமானாலும் மேய்ச்சல் பூமியாக வைத்துக் கொள்ளலாம் என்ற சட்டத்தை ரத்து செய்தோம்.

அதேபோல் கால்நடைகள், பால் பண்ணைகள் இவற்றிற்காகக் கொடுக்கப்பட்ட அந்த விதிவிலக்கை ரத்து செய்வதன்மூலம் அவர்களின் நிலத்தையும் எடுத்துக்கொள்வோம் தவிர



நீர்பாயும் இடம் தவிர மற்றவற்றை விட்டுவிட்டோம் என்பதல்ல. ரத்து செய்யப்பட்டு எல்லாம் சர்ப்ளஸ் ஆக டிக்ளேர் செய்யப்படும்; அதாவது அவர்களுக்கு உரிய நிலம் போக மிச்சத்தை எடுத்துக்கொள்ள ஏற்பாடுகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. சிக்கிரத்தில் முடிவு அடையும். இன்டஸ்ட்ரியல் அன்ட் கமர்ஷியல் அண்டர் டேக்கிங்ஸ், தொழிற்சாலைகள் வைத்திருப்பவர்கள் ஏராளமான பூமிகளை வளைத்து, உள்ளே அவர்கள் இன்டஸ்ரியைப் பெருக்குகிறேன் என்று சொல்லி வேளாண்மை வைத்துக் கொண்டிருந்தார்கள். அதையும் ரத்து செய்து, வரம்புக்குள் கொண்டுவர வேண்டுமென்று செய்திருக்கிறோம்.

அடுத்து, தோப்புகள், பழத்தோட்டங்கள் எல்லாம் 1—7—1959 அன்று எவை தோப்புகளாக இருந்தனவோ அந்தத் தோப்புகளுக்கு மட்டும்தான் விதிவிலக்கே தவிர, அன்று தோட்டங்களாக இருந்திருக்குமானால் விதிவிலக்கே தவிர, பிறகு பழத்தோட்டங்கள் வைத்து விதிவிலக்கு கேட்க முடியாது என்று சொல்லி அந்தச் சட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறோம். ஹில் ஏரியாஸ், மலைகள் முழுவதற்கும் விதிவிலக்கு கொடுத்திருந்தார்கள்.

ப்ளான்டேஷனுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுப்பது நியாயம். அதுவும் பல்வேறு காரணங்களுக்காக. அதை விட்டுவிட்டு மலைச்சரிவில் இருக்கிற வயல்கள், பூமிகள், நெல் பயிரிடும் பூமி, உருளைக் கிழங்கு பயிரிடும் பூமி எல்லாவற்றையும் சேர்த்து விதிவிலக்கு கொடுத்திருந்ததை, அந்த ஹில் ஏரியா விதிவிலக்கை ரத்து செய்தோம்.

**திரு. என். கே. பழனிசாமி:** தனிப்பட்டவர்களுக்கு காட்டு நிலங்கள் இருக்கின்றன. அவைகளை அக்ரிகல்ச்சரல் டிப்பார்ட்மெண்ட் எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது இருக்கக் கூடிய காடுகளை நிலம் இல்லாத விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் காடுகள் எங்குமே கிடையாது. இரண்டு இடங்களில்தான் இருக்கின்றன. ஒன்று சேலம் சேர்வராயன் மலையின் மேல் இருக்கிற ஒரு ஜாகிர்.

அந்த ஜாகீர் இன்னும் அரசாங்க ஆட்சியின் கீழ் வரவில்லை. செட்டில்மெண்ட் தகராருக ஆகி நீதிமன்றத்தில் ஸ்டே இருப்பதால் அதை ஒன்றும் செய்யமுடியவில்லை.

இன்னொன்று 40,000, 45,000 ஏக்கர்கள் ஜன்மிச் சட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற காடுகள் அப்படியே காடுகளாக இருந்துகொண்டிருக்கின்றன. ஜன்மி ஒழிப்புச் சட்டம் இந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ஜன்மி ஒழிப்புச் சட்டம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று அவர்கள் செல்லாது, அங்குள்ள ப்ளான்டேஷன்சை வேண்டுமென்றால் நீங்கள் நிலச் சீர்திருத்தம் என்று சொல்லி யாருக்கு வேண்டுமானாலும் எடுத்துக் கொடுக்கலாம், அதற்குத்தான் 15,000 ஏக்கர் கொடுத்துவைத்திருக்கிறார்கள். ஆனால் காடுகளை எப்படி நிலச் சீர்திருத்தம் என்று சொல்கிறீர்கள், அவை நிலச் சீர்திருத்தத்தின்கீழ் வராது என்று சொல்லி அதை நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். இதற்கிடையில் அரசாங்கச் சார்பாக நான் டெல்லி சென்றிருந்தபோது டெல்லியில் உள்ள மத்திய உணவு அமைச்சர் அவர்களைச் சந்தித்து—வேளாண்மைத் துறையும் அவர்களிடம் இருக்கிறது—பேசும்போது சொன்னேன், அரசியல் சட்டப் பாதுகாப்பு தேவை. சுப்ரீம் கோர்ட் செல்லாது என்று சொல்லிவிட்டது. தமிழ்நாடு அரசாங்கம் நிறைவேற்றிய சட்டத்தைச் செல்லுபடியாக்கும் விதத்தில் அரசியல் சட்டத்தில் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவருவதாக அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். மீண்டும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

பெரிய காடுகள் என்று சொன்னால் 40,000, 45,000 ஏக்கர்கள் பயங்கரமான தேக்கு மரங்களைக் கொண்டுள்ள காடுகள். அது நிலம்பூர் கோயிலகத்திற்கு சொந்தம், இருநூறு குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்குச் சொந்தமானது அது. ஒரு ஏக்கருக்கு ரூ. 250 வரையில் காம்பன்சேஷன் கொடுத்துவிட்டு நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி 40,000 அல்லது 45,000 ஏக்கரையும் ஏக்கர்



ஒன்றுக்கு ரூ. 250 என்று பேசி குறைவாக எடுத்தாலும் கூட அதாவது தவருகச் சொல்லக்கூடியவர்கள் நாட்டில் நிறைய இருக்கிற காரணத்தால் அது வேண்டாம் என்று சொல்லிவிட்டோம்.

இன்னொன்று கூடத்தெரிவித்தார்கள். ஒரு ஏக்கருக்கு ஒரு மரம் வெட்டிக்கொள்கிறோம், அதற்கு அனுமதி கொடுங்கள், நிலத்தை இனமாகக் கொடுத்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். பொருள் என்னவென்றால் ஒரு தேக்கு மரத்தை வெட்டினால் அது 30,000 அல்லது ரூ. 40,000-க்குப் போகும், அவ்வளவு பெரிய தேக்கு மரங்கள் உள்ளன. காடுகளை அரசுடைமையாக்க வேண்டும், இதை எடுத்துக்கொள்ள அரசியல் சட்டப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று டெல்லி செல்லும் சமயத்தில் அங்குள்ள அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறோம்.

சமீபத்தில் கூட வருவாய்த்துறை வாரிய அதிகாரி ஒருவரை அனுப்பி நிலைமையை அறிந்துவரச் சொன்னோம். வெகு சீக்கிரம் அரசியல் சட்டம் திருத்தப்பட இருக்கிறது. அதில் இது சேர்க்கப்படுமென்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள்.

இன்னொன்று, ரென்ட் அரியேர்ஸ். அதையும் ரத்து செய்தோம். அதை ரத்து செய்வதால் இது சாதாரணச் சட்டம் என்று கருதிவிடத் தேவையில்லை. அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்படுகிற நிலைமையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவோம் என்று பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி**: அமைச்சர் அவர்கள் கூறும்போது பால் பண்ணைகளுக்குக் கொடுத்த விதிவிலக்கு, மேய்ச்சல் காடுகளுக்குக் கொடுத்த விதிவிலக்கு, இவை எல்லாம் ரத்து செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படி அவை ரத்து செய்யப்பட்டதன் மூலம் விதிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் பூராவும் அரசின் கைக்கு வந்துவிட்டதா? அல்லது இப்போது நாம் நிறைவேற்றியிருக்கிற உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அவைகளை அவர்களின் குடும்பத்தினருக்குள் பிரித்து வைத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: அவர்களுக்குரிய பதினைந்து ஸ்டான்டேர்ட் ஏக்கரா போக மிச்சம் இருப்பதை முழுதும் அரசாங்கம் எடுத்து நிலமற்றவர்களுக்குக் கொடுப்போம் என்று

உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் போட்டிருக்கிற சட்ட வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் எடுக்கமுடியும் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். இந்த ரென்ட் அரியர்ஸ் சட்டத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பயன் அடைந்து இருக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது.

மற்றொரு சட்டத்தையும் நாம் கொண்டுவந்தோம். ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவர் பெயரிலும் 5-5 ஸ்டான்டர்டு ஏக்கர் என்று எழுதிவைக்க ஆரம்பித்தார்கள். அதாவது கணவன் பெயரில், மகன் பெயரில், மனைவி பெயரில், பேரப்பிள்ளைகள் பெயரில் என்று போட்டு வைத்திருந்தார்கள். அதையும் நாம் மாற்றி விட்டோம். ஒரு குடும்பம் என்று சொன்னால், கணவன், மனைவி, மைனர் குழந்தைகள் தான் என்று தீர்மானம் போட்டோம். ஒரு குடும்பம் மொத்தத்திற்கும் சேர்த்து 5 ஸ்டான்டர்டு ஏக்கருக்கு மேல் பயிர் வைக்கக்கூடாது, குத்தகை எடுக்கக்கூடாது என்று சட்டம் போட்டு, மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்குச் சென்றுவர இருக்கிறது என்று கருதுகிறேன். அந்தச் சட்டத்தையும் நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

5-00 பி.ப. இன்னொரு சட்டத்தையும் நாம் நிறைவேற்றி, அந்தச் சட்டத்திற்கு ஜனாதிபதியின் அங்கீகாரத்தை எதிர்பார்த்து இருக்கிறோம். அது நாட்டிலுள்ள வலிவலங்களைப் பிடிப்பதற்கான சட்டமாகும். நாம் இயற்றியிருக்கும் சட்டம் மிகவும் மகத்தானது. இப்போது இருக்கும் சட்டப்படி ஆதரைசுடு ஆபீசர்கள், அதிகாரம் பெற்ற அதிகாரிகள், யாருக்காவது பினாமியாக குத்தகைக்கு விட்டிருந்தால், அந்த நிலத்தை எடுத்து வேறு ஒருவருக்குக் கொடுக்க முடியாது. அதனுடைய உடைமையாளர்கள் வேண்டுமானால் வேறு ஒருவருக்கு விடலாம் என்று இருந்தது.

நாம் போட்டு இருக்கும் புதிய சட்டத்தின் மூலம், அதைத் தடுத்து நிறுத்த போதிய அதிகாரம் எடுத்து இருக்கிறோம். எங்காவது பினாமியாக டெனன்ட் இருந்தால், அது எங்கே நடந்தாலும் சரி, அதை ஆதரைசுடு ஆபீசர்கள் ரத்து செய்து, அந்த நிலத்தை வேறு ஒருவருக்கு—அதாவது அவரிடத்தில் பதிவு செய்துகொண்டுள்ள வேறு ஒரு உழவனுக்கு அதைக் கொடுக்கலாம்.





ஆகவே, இந்த பினாமி டெனன்ட் ஒழிப்புச் சட்டத்தையும் நாம் கொண்டு வந்து நிறைவேற்றி, அதையும் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம். இப்படி பல்வேறு சட்டங்களை தமிழக அரசு வேகவேகமாக நிறைவேற்றி வருகிறது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் நாம் நிலச்சீர்திருத்தம் பற்றி விவாதிக்காமல் கூட்டங்கள் நடைபெற்றது இல்லை. புதிய சட்டங்கள் வராமல் நடப்பது இல்லை. இப்படி பல்வேறு சட்டங்களை நாம் நிறைவேற்றி உழவனுக்குப் பாதுகாப்பு அளித்து இருக்கிறோம். ஆனால் பெரியவர் மணலி அவர்கள் இந்தத் திருத்தங்களையெல்லாம் கொடுத்து இவைகளெல்லாம் கொண்டு வாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்றால் அதை 15 ஆகக் கொண்டு வாருங்கள் என்று சொல்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு மொத்தம் 30-க்கு மேல் இருக்கக்கூடாது என்று வைத்து இருக்கிறோம். முன்பு 40 என்று இருந்தது, அதையும் 30 ஆகக் குறைத்து விட்டோம். ஏற்கெனவே அதைத் திருத்தி விட்டோம். 15 ஸ்டான்டர்ட் ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு இருக்கலாம். அதிக பட்சமாக நபர்கள் அந்தக் குடும்பத்தில் இருக்குமானால்—முன்பு இருந்த ஆட்சியில் 60 என்று இருந்ததை நாம் வந்த பிறகு 40 என்று மாற்றினோம், அதையும் 30 என்று குறைத்துவிட்டோம்—30 ஸ்டான்டர்ட் ஏக்கர் இப்போது இருக்கலாம் என்று வைத்து இருக்கிறோம்.

ஸ்ரீதன நிலம் யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எக்சம்ஷன் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலம் பற்றி டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் கூட விவாதித்தோம். இருக்கிற சட்டம் எப்படியிருக்கிறது என்றால் 60-61 வருஷத்தில் ஸ்ரீதன நிலம் யாருக்காவது கொடுத்து இருந்தால் அதற்குத்தான் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். இப்போது யாராவது ஸ்ரீதன நிலம் கொடுத்தால் அதற்கு விதிவிலக்கு கிடையாது.

ஆகவே, முன்பு கொடுத்த நிலத்தை அவர்கள் யாருக்கு விற்றார்களோ, யார் கையில் கொடுத்தார்களோ அதற்கு இப்போது

[திரு. ப. உ. சண்முகம்] [1973 ஏப்ரல் 5

'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து—61 வரையில் யாருக்குக் கொடுத்திருந்தாலும் அது அவர்களோடு நின்றுவிடும், மேற் கொண்டு ஸ்ரீதன நிலம் கொடுக்க முடியாது—சட்டம் கொண்டு வந்தால், அது பல சட்டச் சிக்கலைக் கொண்டுவரும் என்பதால், அதை அப்படியே விட்டு வைத்து இருக்கிறோம்.

நேற்றைக்கு முன் தினம் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் இந்த நாட்டிலுள்ள கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், பெரிய பெரிய மடாலாயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இவைகளெல்லாம் எடுத்து, உழுபவர்கள் வாங்கிக் கொள்கிற உரிமையை நாம் தந்து இருக்கிறோம்.

இவ்வளவு மகத்தான சட்டங்களை நாம் நிறைவேற்றியிருக் கிறோம். மேலும் சீர்திருத்தங்கள் வேண்டுமென்று கருதுவதில் தவறு இல்லை. சீர்திருத்தம் வேண்டுமென்று நாம் சொல்கிற போது, நாம் 10 என்றால், அவர்கள் 5 என்றும், நாம் 5 என்றால் அவர்கள் 3 என்றும் அந்த முறையில் சீர்திருத்தம் கொள்ளாமல், நாட்டிலே இருக்கும் நிலைமைக்கேற்ப, இந்த ஆளுகின்ற அரசு தான் எடுத்துக்கொண்டிருக்கிற கொள்கைக்கேற்ப நிலச்சீர்திருத் தங்களைக் கொண்டு வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில் என்ன அறிவித்ததோ, என்ன செய்வோம் என்று சொன்னோமோ, அவைகளை நிறைவேற்றியிருக் கிறோம் என்று பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, தலைவரவர்களே, தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்வதெல்லாம் இந்தத் தனி நபர் தீர்மானம் தேவையில்லை, அரசே பல நல்ல காரியங்களைச் செய்து முடித்து இருக்கிறது— வேண்டுமானால் இந்த அவையிலே அவர்கள் பேசலாம், தனிப் பட்ட முறையில் மனதிற்குள்ளேயே அவர்கள் இந்த அரசை வாழ்த்துகிறார்கள்—என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் திருத்தச்சட்டத்தை அவர்கள் வலியுறுத்த மாட்டார்கள் என்று நம்பி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** பேரவை மாற்றுத் தலைவரவர்களே, கொடுத்து இருக்கக்கூடிய நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மீது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் உயர்திரு சண்முகம் ரொம்ப அழகாக படிப்படியாகப் பேசினார்கள். நிலச்சீர்திருத்தம்



1973 ஏப்ரல் 5] [திரு. மணலி சி. கந்தசாமி]

என்பது 5 என்று சொன்னால் 3 கேட்பது, 3 என்று சொன்னால் 2 கேட்பது என்ற அர்த்தத்தில் என்றைக்குமே நாங்கள் சொன்னது இல்லை. இந்த நாட்டின் வருங்கால வாழ்விற்கு, இந்த நாட்டின் உணவு உற்பத்தி அபிவிருத்திக்கு உபயோகமாக இருக்கக்கூடிய வகையில் ஒரு சமூக மாறுதலை ஏற்படுத்தக்கூடிய அடிப் படையில்தான் இந்த நிலச்சீர்திருத்தத்தை நாங்கள் பார்க்கிறோம். 10 ஏக்கர் என்றால் 7 ஏக்கர், 7 என்றால் 5 ஏக்கர் என்ற அடிப் படையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்றேன்.

இன்றைக்கு நாட்டிலே 100-க்கு 70 பேர் செய்யும் தொழில் விவசாயம்தான். இந்த நாட்டிலே வருவாய் வருவதற்குப் பொது வழியாக இருப்பது இந்த விவசாயம்தான். இந்த நாட்டின் பொருளாதாரமே இதன் அடிப்படையில்தான் இருக்கிறது. இன்று இருக்கும் அமைப்பு முறை மிகவும் மோசமாக இருக்கிறது.

இந்த நாட்டின் பொருளாதாரம் இன்றைக்குத் தனி நபர்கள் கையில் இருக்கிறது. மக்கள் கையில் இல்லை. பல்வேறு வகையில் இது சீரணித்து வருகிறது. இந்த நிலையில் நிலச் சீர்திருத்தம் என்ற ஒரு தேசிய நோக்கத்தின் மூலமாகத்தான் பொருளாதாரச் சீர்திருத்தங்களை, அரசியல் மாற்றத்திற்கான ஒரு பெரிய சேவையை நாம் செய்யமுடியும். அந்த அடிப் படையில்தான் நாங்கள் இந்த நிலச்சீர்திருத்தத்தைப் பார்க் கிறோம். அந்த அடிப்படையில்தான் என்னுடைய திருத்தங்கள் அமைந்து இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் துண்டு துக்காணியாகப் பலவற்றைச் செய்து இருக் கிறீர்கள். அவைகளை நான் அவ்வப்போது பாராட்டியிருக்கிறேன். ஒரு லட்சத்தி சொச்சம் குடியிருப்பு மனைகள் கொடுத்தீர்கள். அதைப் பாராட்டினேன். நேற்றையதினம் கொண்டு வந்திருக்கும் இந்தக் குடியானவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற சட்டத்தின் மூலம் 3 லட்சத்தி சொச்சம் பேருக்கும் நிலம் சொந்தமாக்குவது என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். அதிலே இருக்கும் குறைகளை எடுத்துக்காட்டி, இருப்பினும் நல்ல சட்டம் அதை ஒழுங்காக நிறைவேற்றுங்கள் என்று சொல்லி இருக்கிறேன்.

அதிலும் கூட வேகவேகமாக ஒருசொட்டு வைத்து விட்டார்கள். ஒரு 10 ஏக்கர் கோயில்கள் சொந்தப் பயிருக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். பார்த்தால் இது பரிதாபமாக இருக்கும். இந்த 10 ஏக்கர் பல்லாயிரக்கணக்கான குடியானவர்களைப் பாழ்படுத்த இருக்கிறது. இந்த 10 ஏக்கர் எந்த 10 ஏக்கர் என்று சொல்லவில்லை. 10 குடியானவர்கள் இருக்கிற இடமாக இருந்தால் சரி. அவர்கள் 100 குடியானவர்கள் இருக்கும் இடத்தில் போய் தங்கள் அதிகாரத்தைக் காட்டு வார்கள். சாமியா இந்த நிலங்களை உழப்போகிறது. அங்கே யிருக்கிற ஆசாமிகள்தான் அவர்கள் பிராணனை வாங்கப் போகிறார்கள்.

விதிவிலக்கை ரத்து செய்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். வடபாதிமங்கலம் கரும்பு நிலங்களுக்கு இருந்த விதி விலக்கை ரத்து செய்துவிட்டீர்கள், சரி. ஆனால் அது அங்கேயேதான் இருக்கிறது. அதை கம்பெனியாக மாற்றி அதற்கு தியாகராஜ முதலியார் தானே மேனேஜிங் டைரக்டராக இருக்கப்போகிறார்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கே ஒரு கார்ப்பரேஷன் அமைத்து இருக் கிறோம். அந்தக் கார்ப்பரேஷனுக்கு என்று தனி இலாகா அமைத்து இருக்கிறோம். அந்தக் கார்ப்பரேஷன் இன்டஸ் டிரீஸ் டிபார்ட்மெண்ட்டின் கீழ் வருகிறது. அமைச்சர் திரு. மாதவன் அவர்களின் கண்டிரோலில் வருகிறது. தனியாக அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** ஆனால் அந்தக் கரும்பு விவசாயம் செய்யும் குடியானவர்களை வைத்துக்கொண்டு கார்ப்பரேஷன் அமைத்தால் அதைவிட 2 மடங்கு உற்பத்தி அதிகமாக இருக்கும். இது உத்யோகபூர்வமான கார்ப்பரேஷன் என்று இருந்தாலும் அதிலே தியாகராஜ முதலியாருக்கு அதிகம் கை மேலோங்கி யிருக்கும். அவர்களுக்கு ஒரு பிடிப்பு இல்லாமல் இருக்காது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தெளிவாக, உறுதியாக நான் சொல்கிறேன். அரசாங்கம்தான் கார்ப்பரேஷன் நிறுவி இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்தான் 'நான் அபிசியல் மெம்பராக' இருக்கிறார். எல்லோரும் உத்யோகப்



பற்று உள்ளவர்கள்தான். தனிப்பட்டவர்கள் யாரும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வி.எஸ்.டி. கரும்பாலைச் சொந்தக்காரர்கள் கார்ப்பரேஷன் அமைத்துவிட்டால் இருக்க மாட்டார்கள். இன்னொன்றையும் சொன்னார்கள். உழுகின்ற வனுக்கு பங்கு இருக்கவேண்டாமா, லாபம் இருக்கவேண்டாமா? என்று. கொஞ்சம் பொறுங்கள். இப்போது பஸ் எடுத்த உடனே 24 சதவீதம் கொடுத்திருக்கிறோம். இதுகூடக் கொடுக் காமலா போய்விடுவார் கலைஞர்? எடுத்து முடிந்ததற்குப்பின் பாருங்கள்.

**திரு மணலி சி. கந்தசாமி:** ஆகவே, நிலத்திலே உழுகின்ற வனுக்குப் பலன் இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அப்போதுதான் அவனுக்கு நிலத்திலே பாடுபடுகின்ற ஒரு விருவிருப்பு ஏற்படும். இதற்காக எந்தச் சொத்தையும் பிடுங்க வேண்டுமென்பதல்ல. நிலச்சீர்திருத்தத்தைப் பற்றி என்னைப் பொறுத்தவரையில் சொல்லியிருக்கிறேன். ரெட்ராஸ்பெக் டிவ்வாக, அந்தத் தேதியிலிருந்தே அமுலுக்க வரவேண்டு மென்பது தான் முக்கியம்.

இன்றைக்குப் பெரிய அளவில் நிலங்களைப் பினாமியாக மாற்றி இருப்பது எல்லோருக்கும் தெரியும். மந்திரி என்பதை மறந்து விட்டுச் சொல்லுங்கள். இருக்கிறதா, இல்லையா என்று நிச்சய மாக ஒத்துக்கொள்வார்கள். பொறுப்பில் இருப்பதால், ஒத்துக் கொள்ளாமல் இருக்கலாம்.

இன்றைக்கு 15, 16 ஆயிரம் ஏக்கர் வைத்திருப்பவர்கள் எல்லாம், என்ன சொல்கிறார்கள் என்றால், எனக்கு ஒன்றுமே இல்லை, 15 ஏக்கர்தான் இருக்கிறது, என்கிறார்கள். எங்கே போச்சு இந்த நிலங்கள் எல்லாம்? நான் இந்தச் சட்டசபையில் உறுப்பினராக 1952-லிருந்து 1957 வரை இருந்தேன்.

எனக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு அவர்கள் எல்லாம் தங்களுடைய பெண்டாட்டி, பிள்ளை, பேருக்கு, ஏன், குதிரை, நாய்க்குட்டி பேருக்கெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். இதை கவனிக்கவேண்டும். இந்த நிலங்களையெல்லாம் மீட்கவேண்டும்.

அடுத்தது, 'குடும்பம்' என்று வரும்போது, 5 பேர்கள் கொண்டதுதான் குடும்பம் என்று சொல்கிறார்கள். எனக்கு

ஆட்சேபணை இல்லை. சி.எல்.ஆர்.எஸ்.சி. என்ன சொல்கிறார்கள் கடைசியாக போடப்பட்ட 9 பேர்கள் கமிட்டி என்ன கூறுகிறது? மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் கூட கலந்துகொண்டு வந்திருக்கிறார்கள். இந்தக் கமிட்டி என்ன முடிவு எடுத்தது? எனவே, இந்த நிலையில் என்ன சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள்? ஒன்றுமே இல்லை. கடைசியாகக் கணக்கு என்ன? நமது தமிழ் நாட்டில் 25 லட்சம் எக்டேர்—62 லட்சம் ஏக்கர் நீர்ப்பாசன வசதி உள்ள நிலம் இருக்கிறது. இந்த நிலத்திலே 60 ஆயிரம் ஏக்கர் தான் இன்றைக்கு டிஸ்டிரிபூட் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் என்ன நிலச்சீர்திருத்தம்? உள்ளபடியே, கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இதனால் தான் சொல்கிறேன். ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் தான் என்று சொல்லுங்கள். 30 ஏக்கர் என்று வைத்தால் கூட, ஆளுக்கு 15 ஏக்கர் . . .

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** உறுப்பினர் தவறாகச் சொல்கிறார். குடும்பம்—பேமிலி யூனிட் என்பது 5 பேர்கள் கொண்டதுதான். புருஷன், மனைவி, மைனர் குழந்தைகள்—மேஜர் சில்ட்ரனை இருந்தால் 5 ஏக்கர் தலா என்று எடுத்துக் கொண்டாலும் கூட, அதிகபட்சம் 30 ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். எனவே, ஆளுக்கு 15 ஏக்கர் என்று வைக்கவே இல்லை.

**திரு. மணலி சி. கந்தசாமி:** இருக்கலாம். ஆனால் அவர்கள் ஏற்கெனவே பிரிந்துக்கொண்டு விட்டார்கள். இது தான் யதார்த்தம்.

அடுத்தபடியாக, ஒரு குடும்பத்திற்கு என்று ஸ்டிரிக்டாக இம்பிளிமெண்ட் பண்ணிவிட்டால் பெரிய அளவுக்கு மிச்சம் ஏற்படும். அதை நம்பி இருக்கக்கூடியவர்கள் பலனடைவார்கள். ஒரு சேம்பிள் சர்வே என்று பார்த்தால், இன்றைக்குக் கூட குறைந்தபட்சம் என்று வைத்துக்கொண்டவர்களை கணக்கெடுத்தால், அதிகம். மேலே போகப் போகக் குறைவாக இருக்கும். 20 ஏக்கருக்கு மேலே வைத்திருப்பவர்கள் என்று பார்த்தால், 7, 8 சதவீதம் தான் இருக்கும். அதில், 30 சதவீதம் நிலம் அப்படிப் பட்டவர்களிடம் தான் இருக்கிறது.





குறைவாக வைத்திருக்கிறவர்களின் நிலம் என்று பார்த்தால், குறைவாகத்தான் இருக்கும். எனவே, இந்தக் கான்சண்ட்ரேஷன் ஆப் லேண்ட் இருக்கிறதே, அதைக் குறைக்க வேண்டும். இதுதான் விஞ்ஞான ரீதியிலான வழி. எந்த அரசும், இது வரை, எந்த நிலச்சீர்திருத்தத்தின் மூலமாகவும் இதைப் பண்ணவில்லை. நிலத்தைக் கலைத்து விட்டதுதான் மிச்சம். குழப்பம் ஏற்பட்டது தான் மிச்சம்.

Dr. Wolf Ladejinsky, a well-known authority on land reforms in Asia என்று சொல்லக் கூடிய நிபுணர் இந்தியாவில் மட்டுமல்ல, ஆசியா பூராவிலுமுள்ள நிலச் சீர்திருத்தம் பற்றி வெகு அழகாகக் கூறியிருக்கிறார்.

'Looking back, the entire ceiling episode was one of evasions by commission and omission. With deliberately poorly-drawn enactments holdings had been fictitiously divided up among close and distant relations so as to make them appear under the ceiling; many owners did not bother even with such pre-cautionary measures. Lacking a single punitive clause in the entire mass of legislation—with the exception of the ineffective one in Maharastra—there was no reason why they should have. It made no difference whether the ceiling applied on an individual or family basis; there was no concern about records that would have established the bona-fides of the owners subject to ceilings, or for that matter administrative arrangements worth mentioning. Enforcement was not a problem; there was little to enforce. In sum, while officially the States accepted, the ceilings programmes, they rejected them in practice—and with results one might have expected . . .

என்று கூறியிருக்கிறார். தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா பூராவும் யோக்கியதை இப்படித்தானிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நமது தமிழ் நாட்டிலே இருக்கிற நிலச்சீர்திருத்தம் பற்றிப் பலரும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். அண்மையிலே நான், முதலமைச்சருக்குப் பதிலாக, மத்திய அரசாங்கம் கூட்டிய செண்டிரல் லேண்ட் ரிபார்ம்ஸ்

கமிட்டிக் கூட்டத்திலே கலந்துகொண்டேன். அப்போது, பல மாநிலங்களிலுமுள்ள நிலச்சீர்திருத்தச் சட்டங்களைப் பற்றியெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டபோது, நானே ஆச்சரியப் பட்டுப்போனேன், 'இப்படியும் இருக்கிறதே' என்று. ஒரு மாநிலம்—அந்த மாநிலத்தின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—இன்னொரு மாநிலத்தைக் குறை சொல்வது இந்த அவைக்கு அழகல்ல—உதாரணத்திற்காகத் தான் சொல்கிறேன்—அங்கே, மெகனைஸ்ட் ஃபார்ம் இருக்குமானால், யந்திரங்கள் மூலமாகப் பண்ணை நடத்தினால், அதற்காக எத்தனை ஏக்கர் நிலம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், இந்த நிர்ணயம் பாதிக்காது, என்ற வகையிலே ஒரு சட்டம். இன்னொரு சட்டம், சொந்தமாகச் சாகுபடி செய்கிறவர், எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், உச்சவரம்பு அவரைப் பாதிக்காது, என்று. இப்படியெல்லாம் சட்டங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டுத்தானோ, என்னவோ, அவர் அப்படி எழுதியிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** பூராவும் பார்த்திருக்கிறார். உங்களை விட்டுவிட்டார் என்று நினைக்காதீர்கள். எல்லாவற்றையும் பார்த்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்.

அடுத்தபடியாக, விதிவிலக்கு ஏதுமே இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. கிராமப்புற விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுத்து அவர்களை வாழ வைக்கவேண்டுமானால், அவர்களுடைய பூரா உழைப்பையும் பயன்படுத்தி, உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால், உண்மையான நிலச்சீர்திருத்தம் செய்யப்பட வேண்டுமானால், இந்த விதிவிலக்குகள் இருக்கக் கூடாது. இந்தத் துண்டு துக்காணி நிலங்களினால் என்ன பயன்? வேண்டுமானால் ஒரு பந்தயம் கட்டுகிறேன். இந்த விதி விலக்குகளை எல்லாம் எடுத்துவிட்டு, நிலம் உண்மையிலேயே விவசாயிக்குச் சொந்தமாக்கப்படுமேயானால், இப்போது இருப்பதைப்போல 2 மடங்கு உற்பத்தி பெருகும், விவசாயிகளின் வாழ்வும் வளம் பெறும்.

விவசாயிகளுக்குப் புதிய வாழ்வு கொடுப்பதற்கு அது ஒரு அல்திவாரமாக இருக்க முடியும். இன்றையதினம் அந்த விவசாயி,



ஒன்றுமே இல்லாமல், அனாதையாக இருக்கிறான். இப்போது செய்திருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். இது போதாது. இன்னும் செய்யுங்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுத்தபோது எவ்வளவு பயங்கரமான போராட்டங்களைத் துவக்கினீர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அதெல்லாம் அவ்வப்போது இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்றவாறு முடிவு செய்யப்படுகிற விவகாரம்.

ஆகவேதான் உங்களுக்கு மறுபடியும் சொல்கிறேன். நீங்கள் எவ்வளவோ செய்துவிட்டோம் என்று திருப்திபட்டுவிட முடியாது. நீங்கள் செய்திருக்கிறீர்கள், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதிலே நீங்கள் திருபதி அடைந்துவிட முடியாது. இரண்டொரு நல்ல காரியங்களைச் செய்திருக்கிறீர்கள், அதனால் மக்கள் பலனடைந்திருக்கிறார்கள். அதுவும் பிள்ளையாரையே கிள்ளி வைத்து நைவேத்தியம் பண்ணிவிட்ட மாதிரி சில காரியங்களைச் செய்திருக்கிறீர்கள்.

இப்போது 10 ஏக்கர் என்று வைத்திருக்கிறீர்கள்; அந்த 10 ஏக்கர் என்ன செய்யப் போகிறது? என்ன அதிகாரம் செலுத்தப் போகிறது? எந்தக் கிராம மக்களுக்குப் பயன்படப் போகிறது? 10 ஏக்கர் கொடுத்துவிட்டால் அதை சாமியா வைத்து உழப் போகிறது! இல்லையே. அரசியல் வாழ்விலே ஈடுபட்ட சிலர் அதிலே தலையிட முற்படுகிறார்கள். உங்கள் கட்சியிலே உள்ள சிலர் அதிலே தலையிட முற்படுகிறார்கள். உங்கள் தோழமைக் கட்சிக்காரர்கள் தலையிடுகிறார்கள். நேற்றுக் கொண்டு வந்த மசோதாவே எப்படி நிறைவேறியது என்பது உங்களுக்குத் தெரியும். ஓட்டுக்கு வந்தபோது 75 பேர்கள்தான் இருப்பார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு அக்கறை இல்லை. அதற்கான காரணம் என்ன என்பது உங்களுக்கும் தெரியும்; எங்களுக்கும் தெரியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நேற்று அந்த மசோதாவுக்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் கட்சி ஓட்டுப் போட்டது; ஆளும்

காங்கிரஸ் கட்சியும் ஓட்டு போட்டது. நிரூட்டலராக இருந்தது ஸ்தாபன காங்கிரசும், முஸ்லீம் லீகும். அப்படி இருந்தும் நேற்று அந்த மசோதாவுக்குக் கிடைத்தது கிட்டத்தட்ட 80 ஓட்டுகள்தான்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அடுத்தபடியாக இதுவரை நீங்கள் கொண்டு வந்திருக்கிற நிலச் சீர்திருத்தங்களை எண்ணிப் பார்ப்போம். நீங்கள் செய்து இருக்கக்கூடிய நிலச் சீர்திருத்தங்கள் போதாது என்பதுதான் என்னுடைய கருத்து. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல ஏதோ ஒன்றிரண்டைச் செய்துவிட்டு நீங்கள் திருப்தியடைந்துவிட முடியாது. இன்று கிராமப் புறங்களிலே என்ன நடைபெறுகிறது? பணக்காரர்களின் சுரண்டல்தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. 'ஃப்யூடல் ஃபோர்ஸ்' முதலாளித்துவம் இன்னும் மாறவில்லை. ஆனால் 100 ஏக்கர், 200 ஏக்கர் நிலம் வைத்திருந்தார்கள் என்ற நிலை மாறியிருக்கிறது. உங்கள் சட்டங்களால் அந்த நிலங்களைப் பிரித்து வைத்து, பினாமி முறையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கிராமப் புறங்களில் கூட்டுறவு பாங்கியிலிருந்தும் சரி, சொசைட்டியிலிருந்தும் சரி, கிராம உற்பத்தியை வாங்குவதிலும் சரி, அதை விற்பதிலும் சரி, சிறு தொழில்களை நடத்துவதிலும் சரி—இப்படி எந்தப் பக்கத்திலே பார்த்தாலும் அவர்கள் கை ஓங்கிதான் இருக்கிறது. சாதாரண ஏழை எளிய மக்களை அவர்கள் முழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் செய்கின்ற ஒன்றிரண்டு நல்ல காரியங்களும் உழுபவர்களுக்குப் போய் சேரவில்லை; இடையிலே இருக்கின்ற இவர்கள் அதன் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். வந்திருக்கின்ற நிலச் சீர்திருத்தங்களால் அவர்களுக்குள் ஊடல் நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இன்றையதினம் நீங்கள் அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

பினாமி முறையிலே நிலங்களைப் பிரித்து வைத்துக் கொண்டு, நாங்கள் சாதாரணமானவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நெல்லை விலைக்கு வாங்குகிறார்கள். ரைஸ் மில் வைத்துக் கொள்கிறார்கள். கூட்டுறவு பாங்கு, சொசைட்டிகள் மூலம் கிடைக்கும் ஆதாயத்தையும் பயன்படுத்திக்





கொள்கிறார்கள். உழைக்கக்கூடிய மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற வழியில்லாமல் அவர்களைச் சுரண்டிக் கொண்டேதான் இருக்கிறார்கள் முன்னைப்போல.

அவர்களை எல்லாம் இப்படி விட்டு வைத்திருப்பதற்குக் காரணமும் எல்லோருக்கும் தெரியும். அவர்களைத் தடுப்பதற்குள்ள வலிவு யாருக்கும் இல்லை. தேர்தல் வந்தாலே போதும்; எல்லா அரசியல் கட்சிகளும் அப்படிப்பட்டவர்களை அண்டிப் பிழைக்கக் கூடிய நிலைமையைத்தான் இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த நிலைமையைப் போக்க வேண்டும். அதுதான் அவர்களின் சுரண்டலைத் தடுக்கும் முதல் வழி.

நான் என்னுடைய வாழ்நாள் பூராவும் இந்த நிலச் சீர்திருத்தங்களுக்காகப் போராடியிருக்கிறேன். கிராமப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று நான் பல கஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன். நிலைமை இப்படியே போய்க் கொண்டிருந்தால், கிராமமக்கள் கிளர்ந்தெழுவார்கள். போராட்டம் நடத்துவார்கள். புரட்சி ஏற்படும். அப்போது ரத்தக்களரி தான் ஏற்படும். சரியான நிலச் சீர்திருத்தம் வராவிட்டால் மறுபடியும் ஏற்கெனவே செய்தப் போராட்டங்களைத் தொடங்க வேண்டியது தான் வரும்; மீண்டும் பல்வேறு தியாகங்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும்.

ஆகவே கிராம மக்கள், உழுபவர்கள் சுபிட்சமான வாழ்வு வாழ வேண்டுமானால் யாருக்கும் சலுகை கூடாது; விதிவிலக்குகளை எல்லாம் ரத்து செய்துவிட வேண்டும். அந்த வகையிலே நான் கொடுத்திருக்கும் தீர்மானத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஏனென்றால் உங்கள் லட்சியமும் அதுதான். அதன் அடிப்படையை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள்.

அதற்காகச் சில துண்டு துக்காணி சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். கொண்டு வந்த சட்டங்களை ஒழுங்காக நிறைவேற்றவில்லை. விதிவிலக்குகளைக் கொடுத்ததினால் பினாமி முறைதான் வளர்ந்திருக்கிறது. இந்த முறைகளை எல்லாம் ஒழித்து, சாதாரண மக்களுக்கும் உழவர்களுக்கும் பயன்படுகின்ற வகையிலே நான் இந்த மகத்தான தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

கடந்த 15 வருஷங்களில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ஆயிரங்கோடி ரூபாய்க்குமேல் விவசாயக் காரியங்களுக்காகச் செலவுசெய்திருக்கிறார்கள். ஆனால் அதற்கேற்ற முறையில் உற்பத்தி பெருகவில்லை. இன்றைக்கு 72 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு விலைவாசி குறையவில்லை. இங்கே அரை மணி நேரம் விலைவாசிப் பிரச்சினைபற்றி உணவு இலாகாவின்மீது விவாதம் நடைபெற்றது. பருப்பு விலை ஏறிவிட்டது, அரிசி விலை ஏறிவிட்டது, உளுந்து விலை ஏறிவிட்டது, மிளகு விலை ஏறிவிட்டது, எண்ணெய் விலை ஏறிவிட்டது என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இவ்வளவு உற்பத்தி பெருகியும் விலைவாசி குறையவில்லையே. அதற்கு என்ன காரணம் என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** திட்டங்களை நிறைவேற்றும்போது பணத்தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதைச் சரிக்கட்ட நோட்டு அடிப்பதைத்தவிர வேறுவழியில்லை. அதனால் விலைவாசி ஏறுகிறது.

**திரு. மணலி சி. கந்தசாமி:** நோட்டு அடிப்பது எதற்காக? பட்ஜெட் டெஃபிசிட் வருவது எதற்காக? அத்தியாவசியப் பொருட்களின் வர்த்தகத்தைச் சர்க்காரே ஏற்று நடத்துவதாக இருந்தால் அந்த நிலை வராது. வரியை அதிகரித்திருக்கலாம்; வாங்கும் சக்தி அதிகரிக்கும்; நெருக்கடி இருக்காது. நோட்டு அடிப்பதற்குக் காரணம், திட்டங்களை ஒழுங்காக நிறைவேற்றவில்லை; நிலச் சீர்திருத்தத்தில் ஒழுங்கில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சமீபத்திலே மத்திய அரசு நோட்டுகளை அதிகமாக அச்சடித்துவிட்டது என்று பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. அதனால் விலை ஏறியிருக்கிறது. இது எல்லோருக்கும் தெரியும். நாட்டிலே உணவு உற்பத்திக் குறைவு இருக்கிறது என்றால், இயற்கை செய்த சதி என்று சொல்லலாம். உணவு உற்பத்தி பெருகி, விலைவாசியும் உயர்ந்திருக்கிறது என்றால், யாரோ கள்ளச் சந்தை நடத்துகிறார்கள் என்றுதான் அர்த்தம். அதைத் தடுக்க வேண்டியது அரசின் கடமை. அதற்காக நடவடிக்கை எடுக்கிறார்கள். அதையெல்லாம்





மீறி மத்திய அரசு நோட்டு அச்சடிக்கிறது. அதனால் விலையேற்றம் யாராலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இருக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

**திரு. மணலி சி. கந்தசாமி:** விலைவாசி ஏற்றத்திற்கு அதுவும் ஒரு காரணம். திட்டங்களை ஒழுங்காக நிறைவேற்ற முடியாத நேரத்தில் நோட்டடிக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? டெஃபிசிட் பினான்ஸ் ஏற்படக் காரணம் என்ன? அதை யாரும் யோசிக்கவில்லை. மத்திய அரசு நோட்டடிப்பதன் காரணமாகப் பல்வேறு விபரீதங்கள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல.

